T. 3142

காந்தி கதைகள்

*

கே. எஸ். ஜம்புநாதன்

அமுத நிலையம் லிமிடெட்
தேனும்பேட்டை :: சென்னை-18

முதற் பதிப்பு: டிசம்பர், 1952
இரண்டாம் பதிப்பு: ஆகஸ்ட், 1955
அமுதம்—59
உரிமை பதிவு

★

விலை ரூ. 5—0—0

★

நேஷனல் ஆர்ட் பிரஸ்
சென்னை - 18

முகவுரை

பெரியோர்கள் சரித்திரங்களில் ஆபிரகாம் லிங்கனைப்பற்றித் தான் அதிக எண்ணிக்கையுள்ள நூல்கள் வெளிவந்திருப்பதாகச் சொல்வதுண்டு. அவற்றில் பெரும்பான்மை, ஆபிரகாம் லிங்கனுக்குப் பின்பு வெளிவந்தவை ; உலக மொழிகளில் முக்கியமான சில மொழிகளில் உள்ளவை.

ஆனால், காந்திஜியின் சரித்திரமும், அவருடைய போதனைகளும், ஏறக்குறைய முப்பது மொழிகளில் வெளிவந்திருக்கின்றன. அவருடைய ஜீவிய காலத்தில் வெளிவந்த நூல்களின் எண்ணிக்கையே அதிகம் ; இன்னும் வந்துகொண்டிருக்கின்றன. அவற்றின் விற்பனைப் பிரதிகளையும், பரவியுள்ள நாடுகளையும் கணக்கிட்டால், உலகிலேயே அதிகம் விற்பனையுள்ள பைபிளுக்கு அடுத்தபடியாகக் காந்திஜியின் நூல்களே விற்பனையாகி இருப்பது தெரியவரும்.

காந்திஜி தொடர்ந்து நாற்பது வருஷகாலம், பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அவரைப்போல எழுதியவர்களும் அபூர்வம். அவரைப் பற்றிய கட்டுரைகளும், போட்டோக்களும் உலகிலுள்ள ஒவ்வொரு பத்திரிகையிலும் வெளி வந்திருக்கின்றன என்று நிச்சயமாகச் சொல்லமுடியும்.

காந்தீயத் தத்துவங்களையும், காந்திஜியின் குணகுணங்களையும் தெரிந்துகொள்ள **'காந்தி கதைகள்'** ஒரு துணை நூலாக இருக்க வேண்டும் என்றே தொகுத்தேன். அவருடைய வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் சம்பவங்கள் நடந்திருக்கக்கூடும். அவற்றைச் சொல்லக்கூடிய பல தலைவர்கள்-காந்திஜியுடன் நெருங்கிப் பழகியவர்கள்-இந்த நாட்டில் இருக்கிறார்கள். " காந்திஜியின் வாழ்க்கைச் சம்பவங்கள் நமக்குப் படிப்பினையாக இருக்க வேண்டும். அவரைப்பற்றிக் கட்டுக் கதைகள் தோன்று முன்பு நாம் அவரை நன்றாகத் தெரிந்துகொள்ளும் நிலைமையில் இருக்க வேண்டும் " என்று ஒரு சமயம் திரு. ராஜாஜி அவர்கள் கூறினார்கள்.

தலைவர்களைப் போலவே, பல்லாயிரக் கணக்கான தேச ஊழியர்களுடனும் காந்திஜி நெருங்கிப் பழகினர். அரசியல் பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததுபோல, ஆயிரக் கணக்கான ஊழியர்களின் பிரச்னைகளையும் சந்தேகங்களையும் முக்கியமாகக் கருதி, காலந்தாழ்த்தாமல் தாமே ஒவ்வொருவருக்கும் பதில் எழுதும் வழக்கம் காந்திஜிக்கு உண்டு. அந்தக் கடிதங்கள் தேச ஊழியர்களுக்கு அரிய பொக்கிஷமாகும். அப்படிப்பட்ட ஒரு பொக்கிஷத்தை இப்புத்தகத்தில் காணலாம்.

இந்தத் தொகுப்பில் வந்துள்ள சம்பவங்கள் ஆதாரபூர்வமானவை. காந்திஜி நடத்திய பத்திரிகைகளிலிருந்தும், அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் எழுதிய நூல்களிலிருந்தும் தொகுக்கப் பட்டவை.

பல வருஷங்களுக்கு முன்பு 'லெனின் கதைகள்' என்ற நூலைப் படித்தபோது, இதே போல நம் நாட்டுத் தலைவர்களைப் பற்றியும் நூல்கள் வரவேண்டும் என்று ஆசை கொண்டேன். ஒரு சமயம் இந்த ஆசையை என்னுடைய ஆசிரியப்பிரான் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களிடம் கூறியபோது 'காந்திக் கதைகளைத் திரட்டலாமே' என்று பணித்து ஊக்கம் அளித்தார்கள். அதன் பயனாக உருவானதுதான் இந்த நூல்.

இதைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிடும் அமுத நிலையத்தாருக்கும், இந்த நூலில் சேர்த்துள்ள புகைப்படங்களை வெளியிட அநுமதித்த சர்க்கார் பிரசார இலாகா அதிகாரி திரு. தங்கவேலு, திரு. நடராஜ ஐயர், ஆனந்த விகடன் ஆசிரியர் திரு. மகாதேவன், சக்தி ஆசிரியர் திரு. வை. கோவிந்தன் ஆகிய நண்பர்களுக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

சென்னை,
5—12—'52

கே. எஸ். ஜம்புநாதன்



தென் ஆபிரிக்கா சத்தியாக்கிரஹி



தென் ஆப்ரிக்காவில் : ராணுவ வைத்திய உதவிப் படையில் இந்திய கோஷ்டிக்குத் தலைமை வகித்துக் காந்திஜி சேவை செய்தார். (1899)



இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொள்ள
காந்திஜி சென்றபோது கப்பலில் எடுத்த படம் (1930)

இரண்டாவது வட்டமேஜை மகாநாடு (1931)



காந்திஜி வசித்த ஆசிரமம், சேவாக்கிராமம். (1936)

காந்திஜியும் தக்கர் பாபாவும் (1946)
—Courtesy : Sarvodaya Prachuralayam



ஸ்டாபோர்டு கிரிப்ஸும் காந்திஜியும்

سیوا گرام
وردھا ہو کر (سی - پی -)

20-11-40

Dear Nirmalananda

Your letter.

Since no one is bound to contribute to the war funds, there is no warrant of the law to dissuade people from such, resulting to exactions. Hence Jagannathan's action is quite proper.

Yours

Bapu

Sevagram
(via) Wardha
20-1-41

Dear Nirmalananda,

Your letter,

Since no one is bound to contribute to the war fund, there is no breach of the law to dissuade people from submitting to exactions. Hence Jambunathan's action is quite proper.

Yours
BAPU

சேவாகிராமம்
வர்தா (வழி)
20-1-41

யுத்தநிதிக்கு உதவித்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆகவே நிர்பந்த வசூலுக்கு அடிபணிய வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக்கொள்வது சட்டத்தை மீறுவதாகாது. ஜம்புநாதனுடைய நடவடிக்கை மிகவும் நேர்மையானதே.

அன்புள்ள

பாபு


கண்ணன்



க்ஷேத்ராடனம்



' ராம்தூன் '

தமிழ் நாட்டில் ஐயன் (1946)



ஸிம்லாவில் (1947)

Acc. 16249
T.3142.

காந்திஜியும் இந்தியா மந்திரியும் (1947)

அந்திம யாத்திரை (1948)



பிரயாகையில் அஸ்தி ஊர்வலம் (1948)

T. 3142

பொருள் அடக்கம்

	முகவுரை ...	iii
1	சத்தியவாதி ...	1
2	அசடு ...	4
3	வாக்குறுதி ...	4
4	பிரதிக்கினை காப்பாற்றிற்று ...	6
5	முதல் வழக்கு ...	7
6	அழையாத விருந்தாளி ...	9
7	நிறத் திமிர் ...	12
8	துளசி மாலை ...	14
9	உணவும் குழந்தையும் ...	15
10	கூலி பாரிஸ்டர் ...	17
11	வழக்கும் சத்தியமும் ...	19
12	சத்தியமே ஜயம் ...	22
13	நாவிதன் காந்தி ...	24
14	ஜாமீன் ...	26
15	நண்பரின் கூற்று ...	27
16	பச்சைக் கடுதாசி ...	29
17	வரவேற்பு ...	31
18	தீண்டாமை—ஒரு சோதனை ...	36
19	சமயம் வந்தால்... ...	37
20	படிப்பினை ...	39
21	காணிக்கைப் பொருள் ...	41
22	தோட்டி காந்தி ...	43
23	குமாஸ்தா காந்தி ...	45
24	யாருடைய டபேதார்? ...	47
25	கோச் வண்டி ...	48
26	பண்டாவின் கோபம் ...	49

27	சோதனை	...	52
28	நானே வருகிறேன்	...	54
29	யந்திரத்துக்கும் ஓய்வு	...	56
30	மாப்பிள்ளைத் தோழன்	...	58
31	பட்டாணியன் ஆத்திரம்	...	59
32	யாரிடம் நம்பிக்கை?	...	64
33	கஸ்தூரிபாவின் உறுதி	...	65
34	சபதம்	...	68
35	தீபாவளி	...	69
36	பாபமும் பரிகாரமும்	...	72
37	உள்ளுணர்ச்சி	...	74
38	பழக்கத்துக்கு அடிமை	...	74
39	ஆசிரியர்	...	76
40	வண்ணான் காந்தி	...	77
41	முதல் அநுபவம்	...	78
42	பாதரட்சைகள்	...	79
43	தர்மசங்கடம்	...	80
44	உடைமை மறுத்தல்	...	82
45	திடச் சித்தம்	...	83
46	விஷம்தானா?	...	85
47	என்ன பாக்கியம் செய்தோம்	...	86
48	மூன்றாம் வகுப்புப் பிரயாணம்	...	87
49	ஆண்டவன் அருள்	...	88
50	காவியும் சேவையும்	...	90
51	திலக் மகராஜ்கி ஜே!	...	91
52	இந்தப் பாவம் யாருக்கு?	...	93
53	உள்ளம் தொடும் கள்வன்	...	94

54	லஞ்சமா, ஊதியமா?	...	95
55	அவசியம் நேர்ந்தால்...	...	97
56	யாரிடம் பயம்?	...	98
57	ரகசியம் - 1	...	99
58	ரகசியம் - 2	...	100
59	அப்பாவி	...	101
60	தன் கையே தனக்கு உதவி	...	102
61	மிரட்டாதீர்கள்	...	103
62	டாம்பீகமா இது?	...	104
63	பாபுவைக் கேளுங்கள்	...	105
64	நெருப்பில் போடுங்கள்	...	106
65	அஹிம்ஸையும் துப்பாக்கியும்	...	108
66	பரிசும் மதிப்பும்	...	110
67	சக்கரவர்த்தி?	...	111
68	யார் பேரில் தவறு?	...	112
69	கண் விழிப்பு	...	113
70	ஐஸ் டாக்டர்	...	117
71	யார் திருடன்?	...	121
72	நவீன கிருஷ்ணன்	...	122
73	அதுவும் நல்லதுதான்	...	122
74	ஒப்பந்தம்	...	123
75	வணக்கமா-வருத்தமா?	...	124
76	போர்வை	...	126
77	அங்கு சாம்ராஜ்யம் இல்லை	...	126
78	கடவுள் செயல்	...	127
79	சர்க்காவும் சக்தியும்	...	128
80	கோடி கொடுத்தாலும் வேண்டாம்	...	130

81	படம் பிடிக்க முடியாதே !	...	132
82	சோதனை	...	133
83	அடிமை	...	134
84	அன்பே சிவம்	...	135
85	தெய்வ நிந்தனை செய்யாதீர்கள்	...	137
86	கலையும் வாழ்க்கையும்	...	138
87	புருஷோத்தமன்	...	141
88	உறுதியானவர்தாம்	...	143
89	கோசேவை	...	144
90	தேன் மதி	...	145
91	பணம் பெரிதில்லை	...	146
92	அதைவிடவா ஆச்சரியம் ?	...	147
93	தாயில்லாக் குழந்தை	...	148
94	எங்களுடைய கடவுள்	...	149
95	தொல்லை விட்டது	...	150
96	குழந்தையும் நூலும்	...	152
97	சூடு	...	153
98	மகாத்மா	...	153
99	தீனபந்து	...	154
100	சிப்பாயின் கடமை	...	156
101	ஆசியே போதும்	...	158
102	விளம்பரம் எதற்கு ?	...	159
103	என்ன செய்வேன் ?	...	159
104	தியாகத்தின் விலையா ?	...	160
105	தையற்காரன்	...	161
106	சாரத்தை எடுத்துக் கொண்டேன்	...	162
107	பலன்	...	162

108	காந்தி மாமா	...	164
109	எச்சரிக்கை	...	165
110	பொருளாதாரப் பிரச்னை	...	166
111	இந்தியாவின் ராஜா	...	167
112	இருதய சுத்தம்	...	167
113	இன்றே செய்க	...	168
114	சநாதனியின் கூற்று	...	170
115	கோட்டை விடாதீர்	...	170
116	உடைத்து எறியுங்கள்	...	171
117	கௌமுதியின் தியாகம்	...	173
118	பொறுப்பு	...	174
119	கரிசனம்	...	176
120	ரேகைப் பைத்தியம்	...	177
121	தானத்தின் பலன்	...	178
122	நாவிதப் பெண்	...	181
123	சுதந்தரம்	...	182
124	ஹரிஜன வைத்தியர்	...	183
125	ஜனங்களே போதும்	...	184
126	மருந்து வேண்டும்	...	185
127	பொன் வைக்கவேண்டிய இடத்தில்	...	186
128	காலணா	...	186
129	அந்நியர் போட்டி	...	188
130	மாவும் ரொட்டியும்	...	188
131	கட்டுப்பாடு	...	189
132	உடலுழைப்பு	...	191
133	வேப்பிலைச் சட்டினி	...	192
134	வைத்தியர்	...	193

135	தீண்டாமையும் தாடியும்	...	194
136	பசியா வரம்	...	199
137	கொடுக்கல் வாங்கல்	...	200
138	சகோதரத்துவம்	...	201
139	ஜனநாயகம்	...	204
140	தீனரக்ஷகன்	...	205
141	மந்திரி பதவி வேண்டுமா?	...	206
142	தமிழ்ப் பெருமை	...	207
143	ஆண்டவன் சித்தம்	...	208
144	மதமும் தர்மமும்	...	209
145	பண்டாவின் பரிவு	...	211
146	சமூக சேவை	...	213
147	கொடி பறக்குது!	...	216
148	ஞாபகம் இருக்கட்டும்	...	218
149	சத்தியாக்கிரக தர்மம்	...	219
150	கதை சொல்லும் தாத்தா	...	222
151	பிராயச் சித்தம்	...	223
152	பாம்பும் பயமும்	...	226
153	மௌனவிரதம்	...	227
154	வாக்கு மகிமை	...	229
155	ஆத்ம பலம்	...	230
156	குழந்தையின் சந்தேகம்	...	232
157	தத்துவ விளக்கம்	...	233
158	தர்மம்தானா?	...	235
159	அன்னையும் மகனும்	...	236
160	தத்துவ விசாரம்	...	239
161	இரு தளகர்த்தர்கள்	...	242

162	பரிசா-வில்லையா?	...	243
163	கொல்லாமை	...	244
164	ஒத்துழையாமை	...	245
165	மாணவி	...	246
166	நண்பர்கள்	...	248
167	எல்லாரும் வாழ...	...	251
168	என்ன வேண்டும்?	...	254
169	நீங்களே சொல்லுங்கள்	...	255
170	ஆசி தாருங்கள்	...	258
171	நான் சர்வாதிகாரியானால்...	...	259
172	சத்தியமும் அஹிம்ஸையும்	...	260
173	ராம நாம மகிமை	...	261
174	பழிவாங்கும் மனப்பான்மை	...	263
175	எல்லாரும் சமம்தான்	...	265
176	ஆயுள் எதற்கு?	...	266
177	புத்திமதி	...	267
178	பாசமும் கோபமும்	...	267
179	நீண்ட ஆயுள் வேண்டேன்	...	268
180	மதமும் சர்க்காரும்	...	270
181	அணுக்குண்டும் அஹிம்ஸையும்	...	271
182	உபவாச மகிமை	...	276
183	ஏழை பங்காளன்	...	277
184	என்ன பிரமாதம்?	...	279
185	அன்பின் சின்னம்	...	279
186	மூச்சுக் காற்று	...	281
187	தியானமும் வைத்தியமும்	...	282
188	முறைமை	...	284

189 வேரும் கனியும் ... 286
190 மரண தேவதை ... 286
191 ஜாதகத்தில் இருக்கிறது ... 287

அநுபந்தங்கள் :—

1 காந்திஜி—வாழ்க்கை i
2 கஸ்தூரிபா vii
3 சத்தியாக்கிரகம் x
4 காந்திஜி நடத்திய இயக்கங்கள் xi
5 காந்திஜியின் சிறைவாசங்கள் xiii
6 நீண்ட உபவாசங்கள் xiii
7 காந்திஜியைக் கொல்ல நடந்த முயற்சிகள் xiv
8 காந்திஜி நிறுவிய ஆசிரமங்கள் xv
9 ஆசிரம விதிகள் xvi
10 காந்திஜி நிறுவிய ஸ்தாபனங்கள் xvii
11 காந்திஜியின் பத்திரிகைகள் xix
12 நிர்மாணத் திட்டம் xx
13 இந்த நூலில் வரும் பெரியார்கள் xx
BIBLIOGRAPHY xxvi

காந்தி கதைகள்

சத்தியவாதி

(1869-1883)

இளமைப் பருவத்தைக் காந்திஜி ராஜ்கோட்டில் கழித்தார். பத்து வயதுச் சிறுவனாக இருக்கும்போது, தோழர்களுடன் சிற்றுண்டி அருந்திக் கொண்டு தோட்டங்களிலும் பூங்காக்களிலும் விடுமுறை நாட்களைக் கழிப்பதில் அவருக்கு ஆவல். சில சமயங் களில், சிற்றுண்டி வாங்கக் காசு இல்லாமல் போய்விட்டால், வீட்டி லிருந்து பெற்றோர்களுக்குத் தெரியாமல் அவர் காசு எடுத்துச் சென்றுவிடுவார். பிள்ளைப் பிராயமானதால், தாம் செய்வது தவறு என்பது அவருக்குத் தெரியவேயில்லை. ஒருசமயம் 'சிரவண பித்ரு நாடகம்' என்ற புத்தகம் தம் தகப்பனாருடைய மேஜை மீதிருப்பதைக் காந்தி பார்த்தார். பள்ளிக்கூடப் புத்தகத்தைத் தவிர, மற்றப் புத்தகங்களையே படிக்காத அவருக்கு அந்தப் புத்த கத்தைப் படிக்கவேண்டும் என்ற ஆவல் தோன்றிற்று. தோளில் காவடி கட்டிக்கொண்டு பெற்றோர்களைத் தூக்கிச் செல்லும் சிரவணனுடைய படம் அட்டையில் சித்திரிக்கப்பட்டிருந்ததே அவரைப் பெரிதும் வசீகரித்து விட்டது. உடனே அதை எடுத்துக் கொண்டு, ஒரே மூச்சில் படித்து முடித்தார். சிரவணனுடைய 'பித்ரு பக்தி'யும் அவனுடைய குணமும் அவருடைய மனத்தில் பதிந்துவிட்டன.

அதேசமயத்தில் அந்த ஊருக்கு நாடக கோஷ்டியொன்று விஜயம் செய்து 'அரிச்சந்திரா' நாடகமாடினார்கள். பெற்றோர் களுடைய அநுமதி பெற்றுக் காந்தி அந்த நாடகத்தைப் பார்த்தார். மகத்தான கஷ்டங்களை ஏற்றும் சத்திய விரதத்தை விடாத அரிச்சந்திரனுடைய கதை அவருடைய மனத்தில் வேரூன்றி விட்டது. தம்முடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவே அரிச்சந்

திரன் இருப்பது போலத் தோன்றிற்று. எக்காரணத்தை முன்னிட்டும் பொய் பேசக்கூடாது என்று அவர் நிச்சயித்துக் கொண்டார். ஆனால் சகவாச தோஷத்தினால் சிற்சில சமயம் அவர் பொய் பேசவும் நேர்ந்தது; காசு திருடவும் நேரிட்டது.

காந்திக்குப் பதின்மூன்றாவது பிராயம் நடக்கும்போது, ஏறக் குறைய 1882-ஆம் ஆண்டு வாக்கில், அவருடைய சகோதரரின் வகுப்பு மாணவர்களுடன் நெருங்கிப் பழகலானார். அவர்களில் ஒருவர் பிற மதத்தைச் சேர்ந்தவர். அரண்மனையில் பழகக்கூடிய சந்தர்ப்பமுள்ளவர். காந்தி எப்போதுமே 'பூஞ்சை'யான தேகம் உடையவர். உயரமும் ஆகிருதியுமுள்ள பலாட்டியர்களான பட்டாணியர்களையும், ஐரோப்பியர்களையும் பார்க்கும்போதெல் லாம் சிறுவன் காந்திக்குத் தானும் அந்த மாதிரி தேகக் கட்டுடன் விளக்கவேண்டும் என்ற ஆசை ஏற்படும். காந்தியின் சகாக்கள் இந்த ஆசையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலானார்கள். பட்டாணியர்களும் ஐரோப்பியர்களும் மாமிச ஆகாரம் சாப்பிடுவதனால்தான் தேகக்கட்டு வாய்ந்தவர் களாக இருக்கிறார்கள் என்று சொன்னதுடன், காந்தியும் புலால் உணவு சாப்பிட்டால் நல்லது என்று தூண்டலானார்கள். காந்தி குடும்பத்தார் சுத்த சைவர்கள். புலால் உணவு சாப்பிடவேண்டும் என்ற ஆசையைக் காந்தி எவ்வாறு தீர்த்துக்கொள்ள முடியும்? சிறுகச் சிறுக, நண்பர்களின் தூண்டுதலுக்கு இரையாகி, ரகசிய மாக அந்த உணவை ருசி பார்க்க ஆரம்பித்தார் அவர். அரண் மனைத் தோட்டத்திலும், ஆற்றங் கரையிலும் அவருடைய நண்பர்கள் ரகசியமாக உணவு தயாரிப்பார்கள்; எல்லோரும் உண்பார்கள். புலால் உணவைப் பார்க்கும்போதே காந்திக்கு வயிற்றைப் புரட்டும். ஆனாலும் பலசாலியாக வேண்டும் என்ற ஆசை உந்த, கஷ்டப்பட்டுக் கொண்டே சாப்பிட்டுவிடுவார்.

புலால் உணவு சாப்பிடுவதால் நேரிடும் செலவைக் காந்தியும் அவருடைய சகோதரரும் அடிக்கடி பகிர்ந்துகொள்ள வேண்டிய தாயிற்று. மிகவும் அதிகச் செலவுடன் அந்த உணவுகள் தயாரிக் கப்படுவதும் அவருக்குத் தெரியாது. அவருடைய சகோதரர், கடன்பட்டுச் செலவைச் சமாளித்து வந்தார். காந்திக்குப் பதினைந்து வயது நடக்கும்போது அவருடைய சகோதரர் மிகவும் நெருக்கடி யான சங்கடத்தில் சிக்கிக்கொண்டார். உல்லாசமாகப் பொழுது

போக்க அவர் கடன் வாங்கிச் செலவிடும் வழக்கம் அதிகமாகி விட்டது. கடன்காரன் பணத்துக்கு நெருக்கலானுன். பெற்ருேர் களிடமும் சொல்ல முடியாமல், கடனைத் தீர்க்கவும் முடியாமல் சகோதரர்கள் தவித்தார்கள். திடீரென காந்திக்கு ஒரு யோசனை தோன்றிற்று. சகோதரருடைய கைக் காப்பு ஒன்று வீட்டில் இருந்தது. அதில் ஒரு துண்டை வெட்டி எடுத்து விற்றுக் கடனைத் தீர்த்துவிட்டார். இந்தச் செய்தி பெற்ருேர்களுக்குத் தெரியாது என்ருலும், கடன் தொல்லையிலிருந்து விடுபட்ட பிறகு, காந்தியின் மனத்தில் பெரும் பாரமாகிவிட்டது. தாம் செய்ததைப் பெற்ருேர் களிடம் கூறி மன்னிப்புப் பெற்ருல்தான் மன நிம்மதி ஏற்படும் என்று அவருக்குத் தோன்றியது. ஆனுல் எப்படிச் சொல்வது? திருட்டுக் குற்றம் செய்து விட்டோமே என்ற கவலை, மனத்திலும் தைரியம் ஏற்படவில்லை. தகப்பனுரிடம் • சொன்னுல், தம்மைத் தண்டிப்பது ஒருபுறமிருக்க, அவர் வருத்தப்படுவாரே என்று எண்ணும்போது காந்தியின் மனம் பதறிவிட்டது. அவருடைய தகப்பனுர் கோபங்கொண்டு எந்தக் குழந்தையையும் அடித்ததே கிடையாது.

அந்தச் சமயம் காந்தியின் தகப்பனுர் நோய்வாய்ப் பட்டிருந் தார். அவரை நெருங்கிப் பேசவும் காந்தியின் மனம் கூசிற்று. கடைசியில் அவர் தைரியங்கொண்டு, நடந்ததை ஒரு கடிதத்தில் எழுதி, மன்னிப்பும் கோரியதுடன், இனி எந்தக் காலத்திலும் திருடுவதில்லை எனச் சத்தியம் செய்வதாகவும், செய்த தவற்றுக்குக் கொடுக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தயாரக இருப்ப தாகவும் கூறி, கடிதத்தைத் தகப்பனுரிடம் கொடுத்தார். கடிதத் தைப் படித்த தந்தை, மகனை ஏறிட்டும் பார்க்கவில்லை. அவரு டைய கண்களில் நீர் மல்கி வழிந்தது. கடிதத்தை மடித்து வைத்து விட்டு அவர் கண்களை மூடிக்கொண்டார். தந்தையின் துயரத் தைக் கண்டு தனயனும் மனங்கசிந்து அழுதுவிட்டார்.

இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடும்போது, காந்திஜி பின் வருமாறு எழுதியிருக்கிருர்: "தந்தையின் சிந்தாக்கிராந்தனுை உருவம் என் மனத்தில் பதிந்துவிட்டது. நான் மட்டும் ஓர் ஓவிய ஞகை இருந்தால் அந்தக் காட்சியை அப்படியே எழுதியிருப்பேன். அவருடைய கண்ணீர் என்னுடைய பாவத்தைக் கழுவிப் பரிசுத்த ஞக்கிவிட்டது."

அசடு
(1884)

ராஜ்கோட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் காந்தி சேர்ந்த போது அவருக்குப் பதினைந்து பிராயமிருக்கும். ஒருசமயம்-அதாவது பள்ளிக்கூடத்தில் சேர்ந்த சில மாதங்களுக்குள்-மிஸ்டர் கைல்ஸ் என்ற அதிகாரி பள்ளிக்கூடத்துக்கு விஜயம் செய்தார். வகுப்பு வகுப்பாகப் பார்வையிட்டுக் கொண்டே காந்தியின் வகுப்புக்கு வந்ததும், மாணவர்களின் திறமையை அறிவதற்காக அவர் சில வார்த்தைகளைச் சொல்லி எழுதச் சொன்னார். அவற்றில் ஒன்று 'கெட்டில்' என்ற ஆங்கிலச் சொல். மாணவன் காந்தி அதைச் சரியாக எழுதவில்லை. பிழையிருக்கிறது என்று வகுப்பாசிரியர் குறிப்புக் காட்டியதையும் கவனிக்கவில்லை. கடைசியில் ஆசிரியர் காந்தியிடம் நெருங்கி, காலால் தட்டிச் சமிக்ஞை செய்தார். அதன் பொருளையும் காந்தி அறிந்து கொள்ளவில்லை. மார்க்குப் போடும்போது, காந்தி ஒருவர்தாம் பிழையுடன் எழுதியிருப்பதாகத் தெரிந்தது.

கல்வி அதிகாரி சென்ற பிறகுதான் ஆசிரியர் செய்த சங்கேதத்தைக் காந்தி தெரிந்துகொண்டார். பக்கத்திலுள்ள மாணவனைப் பார்த்துச் சரியாக எழுது என்றுதான் ஆசிரியர் குறிப்புக் காட்டினார். ஆனால் 'காப்பியடித்து' எழுதும் திறமை காந்திக்கு இல்லை. மாணவர்கள் ஒழுங்காக எழுதுகிறார்களா என்று மேற்பார்வை செய்யவே ஆசிரியர் வகுப்பு அறையில் சுற்றி வந்ததாக அவர் எண்ணினார். ஆசிரியருடைய சங்கேதத்தைத் தெரிந்து கொண்டதால் மற்ற மாணவர்கள் பிழையைத் திருத்திக் கொண்டதுடன், கல்வி அதிகாரியினால் கெட்டிக்காரர்கள் என்று பாராட்டும் பெற்றார்கள். காந்திமட்டும் அசடு என்று பெயர் வாங்க நேர்ந்தது.

வாக்குறுதி
(1888)

பள்ளிப் படிப்பு முடிந்ததும் காந்தியைப் பாரிஸ்டர் படிப்புக்காக இங்கிலாந்துக்கு அனுப்பவேண்டும் என்று ஆசிரியர்களும், நண்பர்களும் வற்புறுத்தினார்கள். காந்தியின் தந்தை ராஜ்கோட்

டிலும் போர்பந்தரிலும் சமஸ்தான திவானாக வாழ்ந்தவர். அவருடைய சந்ததிகளும் உயர்தர உத்தியோகம் வகிக்கவேண்டும் என்று அன்பர்கள் ஆசைப்படுவது இயற்கைதானே! உயர்தரப் படிப்புப் படித்தால்தான் ஐரோப்பியர்களுக்கு இணையாக உத்தியோகம் பார்க்கமுடியும் என்று நிச்சயித்துக் காந்தியின் சகோதரர், அவரை இங்கிலாந்து அனுப்பச் சம்மதித்தார். ஆனால் அவருடைய அன்னையோ மனங் கலங்கினர். அந்தக் காலத்தில், கடல்கடந்து படிப்பது சகஜமல்ல. மேலும் வெளிநாடு சென்றவர்களில் பலர் ஆசாரத்தையிழந்து, வெள்ளை மாதர்களை மணம் புரிந்து தாய்நாடு திரும்பினர்கள். இவர்களைப்போலக் காந்தியும் சீலம் கெட்டுப்போய் விடுவாரோ என்ற பயமே தாயை வாட்டிற்று. காந்தியின் சமாதானப் பேச்சினால் அவருக்கு மன அமைதி ஏற்படவில்லை.

"மதுவோ, மாமிசமோ தொடாமல் நீ வாழமுடியும் என்று நான் நம்புகிறேன். நீயோ வயது வந்த வாலிபன். கண்காணாத தேசத்தில் ஒழுக்கம் கெடாமல் நீ வாழ்வாய் என்று எப்படி எண்ணுவது?" என்று மனங் கலங்கினர் அன்னை.

அவர்களுடைய வீட்டுக்குப் பேசார்ஜீஸ்வாமி என்று ஒரு ஜைன முனிவர் வருவதுண்டு. அவர் குடும்ப நண்பர்; காந்தியிடம் அன்பு கொண்டவர். அன்னையின் தியக்கத்தைக் கேள்விப்பட்டு அவர் வீட்டுக்கு வந்தார். "தாயே, நீங்கள் வீணாக வருந்தவேண்டாம். பையன் எதிர்காலத்தில் பிரகாசிக்கக் கூடியவன். அவன் சத்தியசந்தன். அவனிடம் நான் வாக்குறுதி பெற்று அனுப்புகிறேன். நீங்கள் கவலையற்று ஆசி கூறி அனுப்புங்கள்" என்று சமாதானம் கூறினர். உடனே காந்தியை அழைத்து, "எப்பேர்ப்பட்ட சோதனை ஏற்பட்டாலும் மது, மாமிசம், மாதர் இவைகளைத் தொடமாட்டேன் என்று சத்தியம் செய்" என்றார். காந்திஜி சபதம் எடுத்துக் கொண்டதும் அன்னை ஆசி கூறி வழியனுப்பினர். இந்த வாக்குறுதியே கவசம்போல் நின்று பிற்காலத்தில் பல இன்னல்களிலிருந்து காந்திஜியைக் காப்பாற்றிற்று. உடலுறுதி பெற மாமிச ஆகாரம் அவசியம் என்ற பிரமையும் அன்றே அவரை விட்டு விலகிற்று.

★

பிரதிக்கினை காப்பாற்றிற்று
(1890)

குளிர்தேசமான இங்கிலாந்தில் மக்களுடைய தினசரி ஆகாரத்தில் மதுவும் மாமிசமும் முக்கியமான உணவு. அந்த நாட்டில் சைவ உணவு சாப்பிட முயன்ற காந்தி பல இடைஞ்சல்களுக்கு உள்ளாக நேரிட்டது. அன்னைக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்பதுடன், வாய்க்கு ருசியாகவும், வயிறு நிரம்பவும் சாப்பிட அவர் லண்டனில் உள்ள சைவ விடுதிகளைத் தேடித் திரிய நேரிட்டது. அந்தக் காலத்தில் சைவ உணவின் மேன்மையைப் பற்றிப் பிரசாரம் செய்ய லண்டனில் உள்ள சில பிரமுகர்கள் ஒரு சங்கம் நடத்தினார்கள். சைவ விடுதிகளிலோ சாப்பாட்டுச் செலவும் அதிகமாக இருந்தது; எல்லா விடுதிகளிலும் சைவ உணவு பரிமாறுவதும் கிடையாது. ஆகவே, லண்டனில் உள்ள சைவ விடுதிகளைப்பற்றியும், சைவ உணவுப் பிரசாரத்தில் ஈடுபட்ட அறிஞர்களைப்பற்றியும் காந்தி தகவல் சேர்த்ததுடன் அவர்களுடன் தொடர்பும் ஏற்படுத்திக் கொண்டார். இதனால் அவருடைய செலவு அதிகரித்தது. செலவைச் சரிகட்ட, காந்தி தினந்தோறும் மைல்கணக்காக நடந்து செல்வார்; சமயம் கிடைக்கும்போது தாமே உணவு தயாரித்துச் சாப்பிடுவார்.

போர்ட்ஸ்மத்தில் 1890-ஆம் ஆண்டு சைவ உணவு ஆதரிப்போர் மகாநாடு ஒன்று நடந்தது. அதில் கலந்துகொள்ளக் காந்தியும் பிரதிநிதியாகச் சென்றார். பிரதிநிதிகள் தங்குவதற்காக மகாநாட்டினர் பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யவில்லை. உள்ளூரிலுள்ள நண்பர்களும் வரவேற்புக் கமிட்டியினரும் தம்தம் வீடுகளில், ஆளுக்குச் சில பிரதிநிதிகளை ஏற்று உபசரித்தார்கள். காந்திக்கும் மற்றும் ஓர் இந்திய நண்பருக்கும் ஒரு பெண்மணியின் வீட்டில் தங்க வசதிகளைச் செய்திருந்தார்கள். வரவேற்புக் கமிட்டியாருக்கு அவளைப் பற்றி ஏதும் தெரியாது. உற்சாகத்துடன் அவள் மகாநாட்டில் கலந்துகொண்டு உதவி செய்ய முன் வந்ததால் அதை ஏற்றுக் கொண்டார்கள். அவளுடைய வீடு ஒரு விபசார விடுதி.

இரவுச் சாப்பாடானதும் வீட்டிலுள்ளவர்கள் உல்லாசமாகப் பொழுதுபோக்க ஏற்பாடு செய்தார்கள். காந்தியும் மற்ற

வர்களும் சீட்டாட உட்கார்ந்தார்கள். இங்கிலாந்தில் நல்ல வீடுகளில்கூட (பெரிய மனிதர்கள் வீடுகளில்கூட) வீட்டு எசமானி விருந்தாளிகளுடன் சீட்டாட உட்காருவதுண்டு. ஆட்டத்தின் போது கேலியும் பரிகாசமும் இருப்பதும் சகஜம். ஆனால், இங்கே விகாரமான கேலிப் பேச்சுக்களும் காமமூட்டும் கோரணிகளும் ஆரம்பமாயின.

காந்தியுடன் தங்கிய இந்திய நண்பர் விட புருஷர். விபசார விடுதியில் வாழும் மக்களும், அங்கு நடக்கும் செயல்களும் அவருக்குப் புதியன அல்ல. காந்தியைப்பற்றி மதிப்பும் மரியாதையும் கொண்டுள்ள அவர், பேச்சு சுவாரஸ்யத்தில் மயங்கிக் காந்தியும் களியாட்டத்தில் ஈடுபட முயன்றபோது விழித்துக் கொண்டார். காந்தியின் உன்மத்த நிலைகண்டு வெகுண்டு, “எழுந்திரு, இங்கே நீ என்ன காரியத்தில் இறங்கிவிட்டாய்? ஓடு, ஓடு, உன்னுடைய குணத்துக்கும் குலத்துக்கும் இது அடுக்காது. இந்தப் படுகுழியில் நீ வீழ்வதைக் காண என்னால் முடியாது. ஓடு, ஓடு” என்று விரட்டினார்.

காந்திக்கு நெஞ்சு பகீரென்றது. அவமானத்தால் மனங் குன்றி உட்கார்ந்து விட்டார். தாய்க்குச் செய்து கொடுத்த வாக்குத் தத்தம் நினைப்பு வந்தது. உடனே வாரிச் சுருட்டிக் கொண்டு கிளம்பிவிட்டார். இழி செயலிலிருந்து தம்மைக் காப்பாற்றிய நண்பரை ஆண்டவன் அனுப்பிய தூதனாகவே எண்ணிக் கொண்டு தம்முடைய அறைக்கு வந்து சேர்ந்தார். அப்போதுங் கூடப் பயமும் அவமானமும் பிடிக்க அவருடைய உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. மறுநாளே அவர் லண்டனுக்குக் கிளம்பிவிட்டார்.

முதல் வழக்கு
(1892)

பாரிஸ்டர் பரீட்சை முடிந்ததும் காந்திஜி இந்தியாவுக்குத் திரும்பி, பம்பாயில் தொழில் ஆரம்பித்தார். சில மாதங்கள் வரையில் அவரிடம் கட்சிக்காரர்களே நெருங்கவில்லை. ஆனாலும் காந்திஜி தினந்தோறும் நீதி ஸ்தலத்துக்கு நடந்து சென்று, அங்கு நடக்கும் வழக்குகளையும், வக்கீல்கள் நடத்தும் வாதங்களையும் கவனித்துத் திரும்புவார். ஒருநாள் மாமிபாய் என்ற நண்பர் ஒருவருடைய

சிபாரிசினால் காந்திஜியிடம் ஒரு கட்சிக்காரர் வந்து சேர்ந்தார். அந்த நண்பர், காந்திஜியிடம் பிரதிப் பிரயோசனம் எதிர்பார்க்க வில்லை என்றாலும், கேஸ் பிடித்துவரும் தரகர்களுக்குக் கமிஷன் கொடுத்தால்தான் கட்சிக்காரர்களுடன் பழக்கமும் வருமானமும் கிடைக்குமென்று சொன்னார். காந்திஜி அந்த யோசனையை வர வேற்கவில்லை. கோபத்துடன், "எனக்கும் கட்சிக்காரர்களுக்கும் இடையில் தரகர் எதற்கு? கட்சிக்காரர்களுடைய பணத்தைப் பறித்துத் தரகர்களுக்கு விநியோகிப்பது அநியாயம். நான் அதற்கு உடன்பட மாட்டேன்" என்றார்.

"அப்படியானால் உங்களுக்கு ஒரு வழக்குக்கூடக் கிடைக் காது. பிரபல வக்கீல்கள் எல்லோரும் 'டௌட்டு'களுக்குக் கமிஷன் தருகிறார்கள். அவர்களும் ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதிக்கிறார்கள்" என்றார் நண்பர்.

"இருக்கலாம், என்னால் முடியாது. மிகவும் சாதாரண வருமானத்தைக் கொண்டு என் தகப்பனார் திருப்தியுடன் வாழ்க்கை நடத்தினார். அதைப்போலவே நானும் வாழ விரும்பு கிறேன்" என்றார் காந்திஜி.

"அந்தக் காலம் மலையேறிவிட்டது. பம்பாயில் செலவு அதிகம். நம்முடைய அந்தஸ்துக்கு ஏற்றபடி வாழவேண்டுமானால் கொஞ்சம் வியாபார ரீதியில்தான் மற்றவர்களுடன் பழக வேண்டும்" என்றார் நண்பர்.

காந்திஜி பிடிவாதமாக மறுத்துவிட்டார். நண்பர் சிபாரிசு செய்த கட்சிக்காரரிடம் முப்பது ரூபாய் 'பீஸ்' பேசிக்கொண்டு வழக்கை நடத்த ஒப்புக்கொண்டார். அது மிகவும் குறைந்த தொகை என்பது கட்சிக்காரருக்கும் தெரியும். தரகனுக்குக் கொடுக்கும் பணத்தைக் கட்சிக்காரனே லாபமடையட்டும் என்பது காந்திஜியின் கொள்கை.

* * *

அந்த வழக்கு சம்பந்தமாக 'ஸ்மால்காஸ் கோர்ட்'டில் காந்திஜி வாதாட நேரிட்டது. அவர் பிரதிவாதியின் வக்கீல். எதிர்க்கட்சி சாட்சிகளை விசாரிக்க எழுந்தபோது அவருக்குத் தலை சுற்றிற்று; உடல் நடுங்கிற்று. விவரிக்க முடியாததொரு பயமும் கூச்சமும் பிடித்துக்கொள்ள, கேட்கவேண்டிய கேள்வி களைக்கூட மறந்துபோய் அவர் உட்கார்ந்துவிட்டார். இந்த

வேடிக்கையை அங்குள்ள வக்கீல்களும் கட்சிக்காரர்களும் மற்ற வர்களும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்கள். காந்திஜி கட்சிக்காரனைக் கூப்பிட்டார். "என்னால் இந்த வழக்கை நடத்த முடியாதுபோல் தோன்றுகிறது. 'பீஸை' நான் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன். வக்கீல் படேலிடம் வக்காலத்துக் கொடுத்து வழக்கை நடத்துங்கள்" என்றார்.

வக்கீல் படேலுக்கு இந்தமாதிரி வழக்குகள் தண்ணீர் பட்ட பாடு. ஐம்பத்தொரு ரூபாய் பீஸ் பேசிக் கொண்டு அவர் நீதிஸ்தலத்தில் ஆஜரானார். அந்த வழக்கின் முடிவைப்பற்றிக் காந்திஜி தெரிந்து கொள்ளவேயில்லை; அதன் பிறகு அந்தக் 'கோர்ட்டில்' ஆஜராகவும் இல்லை. ஏன்? பம்பாயிலேயே அவர் எடுத்துக் கொண்ட முதல் வழக்கும் கடைசி வழக்குங்கூட அதுதான்.

அழையாத விருந்தாளி
(1893)

தென்னாப்பிரிகாவில் கால் வைத்த சில தினங்களுக்குள் காந்திஜியின் பெயர் டர்பானில் பிரபலமாகிவிட்டது. அவருடைய கட்சிக்காரரான அப்துல்லா சேட்டின் யோசனைக்கிணங்க, காந்திஜி தலைப்பாகையணிந்து கோர்ட்டுக்குச் சென்றார். நிறத் துவேஷம் மிகுந்த தென்னாப்பிரிகா நாட்டில், நீகிரோக்களைப்போல இந்தியர்களிடமும் துவேஷம் கொண்டாலும் வெள்ளையர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே பழகினார்கள். காந்திஜி ஐரோப் பிய முறையில் உடையணிந்து சென்றால், சட்டென்று அவரை இந்தியர் என அடையாளங் கண்டுபிடிக்க முடியாமல், யாராவது இழிவாகப் பேசிவிடுவார்களோ என்ற பயம் வேறு அப்துல்லா வுக்கு இருந்தது.

நீதி ஸ்தலத்தில் முஸ்லிம் அல்லாத இந்தியர்கள் தலைப்பாகை அணியக்கூடாது என்ற சம்பிரதாயம் இருந்தது. அதையொட்டி, உள்ளே நுழைந்ததுமே, காந்திஜியைத் தலைப்பாகையை எடுக்கும் படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார். காந்திஜி மறுத்துவிட்டு, நீதி ஸ்தலத்தை விட்டு வெளியேறினார். அவருடைய செய்கையை ஆதரித்தும், கண்டித்தும் பத்திரிகைகளில் விவாதம் நடந்தது. இந்தச் சம்பவம் 1893-ஆம் வருஷம் மே மீ" நடந்தது.

சில தினங்களுக்கெல்லாம், அப்துல்லா சேட்டின் வழக்கு களைக் கவனிக்கக் காந்திஜி பிரீடோரியாவுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. அந்த நாட்டில், இரவு நேரத்தில் தூங்குவதற் காக ரெயில் வண்டிகளில் பிரத்தியேக இடம் உண்டு. அதற்காகப் பிரயாணச் சீட்டுடன் சிறு தொகையைக் கட்டணமாக வசூலிப் பார்கள். சௌகரியமாகப் பிரயாணம் செய்யவேண்டுமென்று அப்துல்லா கம்பெனியார் காந்திஜிக்கு முதல் வகுப்புப் பிரயாணச் சீட்டு வாங்கினுர்கள். ஆனுல், தூங்குவதற்காகச் செலுத்தும் கட்டணம் கட்டவேண்டாம் என்று காந்திஜி சொல்லிவிட்டார். பிற நாடுகளைப்போல முதல் வகுப்பு வண்டியில் தூங்கமுடியும் என்றுதான் அவர் நினைத்தார். அந்த நாட்டிலுள்ள பழக்க வழக் கங்களை அப்துல்லா செட் கூறியும் காந்திஜி இணங்கவில்லை.

நேட்டாலின் ராஜதானியான மேரிட்ஸ்பர்க்குக்கு ரெயில் வண்டி இரவு ஒன்பது மணிக்குச் சென்றது. அங்கே தூங்குகிற வர்களுக்குப் படுக்கை கொடுப்பார்கள். ரெயில்வே சிப்பந்திகள் காந்திஜியிடம் படுக்கை வேண்டுமா என்று கேட்டபோது, "என் னிடம் இருக்கிறது" என்று கூறிவிட்டார். ஆச்சரியத்துடன் அவ ரைப் பார்த்துவிட்டுச் சிப்பந்திகள் அகன்றுர்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அங்கு ஓர் ஆங்கிலப் பிரயாணி வந்தான். காந்திஜியை உற்றுப் பார்த்துவிட்டு, உதாசீனத்துடன் காறி உமிழ்ந்தான். பிறகு சற்று அப்பால் சென்று இரண்டு ரெயில்வே சிப்பந்திகளுடன் திரும்பி வந்து, "எழுந்திரு, நீ வெளியே போ, வேறு வண்டி பார்த்துக்கொள்" என்று அதட்டினுன்.

காந்திஜி ஒன்றும் புரியாமல் விழித்தார். "எதற்காக நான் இறங்கவேண்டும்? என்னிடம் முதல் வகுப்புப் பிரயாணச் சீட்டு இருக்கிறதே?" என்றுர் திகைப்புடன்.

இதன் நடுவே வேறு ஓர் அதிகாரி அங்கு வந்து சேர்ந்தான். நிலைமையை ஊகித்த அவனும் காந்திஜியிடம், "இறங்கு கீழே. வேறு இடம் பார்த்துக்கொள்" என்றுன் வெறுப்புடன்.

ஏதோ சிக்கல் முளைக்கிறது என்று காந்திஜி ஊகித்துக் கொண்டார். "நான் டர்பானிலிருந்து இதே வண்டியில்தான் உட்கார்ந்து வருகிறேன். தொடர்ந்து பிரயாணம் செய்யப்போவ தால் இதிலிருந்து இறங்க முடியாது" என்றுர்.

"முடியாது. கீழே இறங்கித்தான் ஆக வேண்டும். இல்லா விட்டால் போலீஸைக் கூப்பிடவேண்டி வரும்!" என்று கத்தினன் அந்த அதிகாரி. தன்னுடைய உத்தரவை எதிர்த்துப் பேசும் ஒரு கறுப்பன் இருக்கிருனே என்ற ஆத்திரம் அவனுக்கு.

"மிகவும் நல்லது. அவனேயே கூப்பிடுங்கள். நாளுகை இறங்க முடியாது. போலீஸ்காரனே என்னே இழுத்துத் தள்ளட்டும்" என்ருர் காந்திஜி.

போலீஸ்காரன் வந்தான். காந்திஜியைப் பிடித்துக் கீழே இழுத்துத் தள்ளினன். அவருடைய பிடிவாதம் பலிக்கவில்லே. முரட்டுத்தனந்தான் வென்றது. இதற்குள் வண்டி கிளம்பிவிட்டது. ஓடும் ரெயிலிலிருந்து, காந்திஜியின் சாமான்கள் வெளியே எறியப்பட்டன. காந்திஜி, ஆத்திரமும் வருத்தமும் மேலோங்க, பிரயாணிகள் தங்குமிடத்தில் போய் உட்கார்ந்தார். அவருடைய சாமான்களே ரெயில்வே சிப்பந்திகள் எடுத்துச் சென்ருர்கள்.

அப்போது குளிர் காலம். காந்திஜியிடம் போர்வைகூடக் கிடையாது. சமான்களேக் கேட்டு, படுக்கையிலிருக்கும் போர் வையை எடுத்துக் கொள்ளலாம் என்ருலோ, மனசில் சஞ்சலம் மூண்டது. தைரியமற்றுச் சோர்ந்துவிட்டார். ரெயில்வே சிப்பந்தி களுடன் பேச்சுக் கொடுத்தாலே மீண்டும் ஏதாவது அவமானகர மான சம்பவம் நிகழ்ந்துவிடுமோ என்ற பயம் கவ்விக்கொண்டது. அவருடைய மனம் சிந்தையில் ஆழ்ந்தது: 'ஒன்று உரிமைக்காகப் போராடவேண்டும். அல்லது நாடு திரும்பிவிட வேண்டும். இல்லாவிட்டால் அவமதிப்பைப் பொறுத்துக் கொண்டு பிரீ டோரியா சென்று வழக்குகளே முடித்துக்கொண்டு ஊர் திரும்ப வேண்டும். அரைகுறையாக விட்டுச் செல்வது பயங்கொள்ளித் தனம். என் விஷயத்தில் நடக்கும் இந்த அவமதிப்பு வெறும் வெளிக்காயந்தான். உள்ளுக்குள்ளேயே பரவிய ஒரு பெரிய வியாதிதான் இந்த நிறத் துவேஷம். இதை அறவே ஒழிக்கவேண் டும். அதற்காக மகத்தான கஷ்டங்களும் துன்பங்களும் நேர்ந்தால் பொறுத்துக்கொண்டு போராடத்தான் வேண்டும்'—இப்படி ஒரு முடிவுக்கு வந்தபோது, குளிரின் கடுமை தெரியவில்லே. மனத் திலும் தெம்பு பிறந்தது.

மறுநாட் காலேயில் அப்துல்லா சேட்டுக்கும் ரெயில்வே ஜனரல் மானேஜருக்கும் நடந்த சம்பவத்தைப்பற்றித் தந்தி

கொடுத்தார். அப்துல்லா சேட் உடனே பதில் தந்தியடித்துவிட்டு, மேரிட்ஸ்பர்க்கிலிருக்கும் சில நண்பர்களுக்கும் தகவல் தெரிவித்தார். அவர்களில் சிலர் காந்திஜியைச் சந்தித்தார்கள்.

"இது ஒன்றும் புதிதல்ல. ஐரோப்பியர்கள் மேல் வகுப்பில் பிரயாணம் செய்யும் இந்தியர்களைத் துன்புறுத்துவது சகஜந்தான்" என்று அவர்கள் சொன்னார்கள். காந்திஜிக்கு மன அமைதி ஏற்படவில்லை. அன்று மாலை வண்டியில் காந்திஜி பிரயாணத்தைத் தொடங்கினர். ரெயில்வே சிப்பந்திகள் இதமாக நடந்து கொண்டார்கள். அநுபவம் ஏற்பட்டுவிட்டதால், காந்திஜியும், தூங்குவதற்காக இடம் 'ரிஸர்வ்' செய்து படுக்கையும் வாங்கிக் கொண்டார். ஏதை வேண்டாம் என்றுரோ அதை ஏற்றுக்கொள்ள நேர்ந்தது.

நிறத் திமிர்
(1893)

மேரிட்ஸ்பர்க்கிலிருந்து சார்லஸ் டவுன் வரையில் ரெயில் பிரயாணம் செய்து, அங்கிருந்து பிரீடோரியாவுக்கு இரட்டைக் குதிரை பூட்டிய கோச் மூலம் பிரயாணம் செய்யவேண்டும். ரெயில்வேக் கட்டணத்துடன் சேர்த்தே கோச் பிரயாணத்துக்கும் பணம் வசூலித்து விட்டதால் காந்திஜிக்குத் தனியாக 'டிக்கெட்' வாங்கவேண்டிய அவசியம் நேரிடவில்லை. மேலும் சார்லஸ் டவுனிலுள்ள தபால் வண்டி (கோச் வண்டி) ஏஜெண்டுக்குக் காந்திஜியின் பிரயாணத்தைப்பற்றி அப்துல்லா கம்பெனியார் தந்தியடித்திருந்தார்கள்.

காந்திஜியைப் பார்த்ததுமே, அந்த ஏஜெண்டுக்கு வெறுப்புத் தோன்றிவிட்டது. அவர் இந்தியர் என்ற துவேஷம் ஒருபுறமிருக்க, அவருடைய போக்கும் அவனுக்குப் பிடிக்கவில்லை. ஏதோ சால் ஜாப்புக்கூறி, அவருடைய பிரயாணச் சீட்டு ரத்தாகிவிட்டது என்றும், அவர் உடனே புறப்படும் தபால் வண்டியில் பிரயாணம் செய்யமுடியாது என்றும் கூறிவிட்டான். ஆகவே காந்திஜிக்கு மீண்டும் ஒரு தடவை, தம்முடைய உரிமையை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டது. அவர் வெகுநேரம் வாதாடிய பிறகு அவன் இணங்கினன். ஆனலும் மற்றப்

பிரயாணிகளுடன்—அவர்கள் எல்லோருமே வெள்ளையர்கள்—சரிசமானமாக அவருக்கு இடம் கொடுக்க அவன் விரும்பவில்லை. மேலும், அந்தப் பிரயாணிகள் ஏதாவது ஆக்ஷேபணை செய்யக் கூடுமோ என்ற பயமும் அவனுக்கு இருந்தது. ஆகவே வெளியே வண்டியோட்டிக்குப் பக்கத்திலுள்ள இடத்தில் அவருக்கு இடமளித்தான். காந்திஜிக்கு ஆத்திரம் வந்தாலும், நிலைமையை ஊகித்துக் கொண்டு மௌனமாக வண்டியில் ஏறி அமர்ந்தார்.

பர்டேகோ என்ற ஊருக்குச் சமீபமாக வண்டி செல்லும் போது, 'கண்டக்ட'ருக்குச் சுருட்டுப் பிடித்துக்கொண்டு உல்லாசமாகக் காற்று வாங்க வேண்டும் போலிருந்தது. வெளியே வந்து உட்கார விரும்பிய அவன், கால்வைத்து ஏறும் படிக்கட்டில் இறங்கி உட்காரும்படி காந்திஜிக்கு உத்தரவிட்டான். நிறத் துவேஷம் ஒருபுறமிருந்தாலும், அவருடைய ஐரோப்பிய உடைக்கு மரியாதை கொடுக்க விரும்பியவனைப்போல, ஒரு கந்தல் துணியைப் படிக்கட்டின்மீது வீசி எறிந்துவிட்டுக் கீழே இறங்கச் சொன்னான். வண்டியோட்டிக்குப் பக்கத்தில் உட்காரும்படி சொன்னவனும் அவன்தான். ஆகவே, இப்போது அவன் அதட்டி மிரட்டியதும், காந்திஜி ஆட்சேபித்தார். இடம் மாறி உட்காரவும் மறுத்தார். அவன் வசைமாரி பொழிந்தான்; அடித்துக் கீழே தள்ளுவேன் என்று மிரட்டினான். காந்திஜி மௌனமாகவே இருந்தார். அவருடைய பிடிவாதத்தைக் கண்டு அவன் வெகுண்டு, அவரை இழுத்துத் தள்ள முற்பட்டான். காந்திஜி கீழேவிழாமல் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டுவிட்டார். கண்டக்டரின் ஆத்திரமோ எல்லை கடந்துவிட்டது. மற்றப் பிரயாணிகளோ வேடிக்கை பார்த்துக் கொண்டே இருந்தனர். அவர்களும் கறுப்பு மனிதனை இழிவாகக் கருதுகிறவர்கள் தாமே! ஆத்திரம் கொண்ட கண்டக்டர் கையை ஓங்கிக் காந்திஜியை அடித்துவிட்டான். காந்திஜி எதிர்த்துத் தாக்காமல் சும்மாயிருக்கவே, உடனிருந்த பிரயாணிகளில் ஒருவன் மனமிரங்கி, "அவரை அடிக்காதே, இம்சிக்காதே" என்று கத்தியதுடன் அவனை அப்பால் பிடித்து இழுக்கவும் செய்தான். அதன்பிறகு தான் மற்றப் பிரயாணிகளும் காந்திஜியிடம் கவனம் செலுத்தினார்கள்.

"அவர் சொல்லுவது நியாயம். உனக்கு வெளியே உட்கார வேண்டும் போலிருந்தால் அவருக்கு வண்டிக்குள் இடம் கொடு.

அதற்காகப் படிக்கட்டில் உட்காரச் சொல்லாதே. அவர் மறுப்பதில் நியாயம் இருக்கிறது. எங்களுடன் அவர் உட்கார்ந்து பிரயாணம் செய்வதில் எவருக்கும் ஆக்ஷேபணை இல்லை" என்றான் அந்த வெள்ளையன். மற்றவர்களும் அரை மனத்துடன் தலையசைத்தார்கள். வேறுவழியின்றிக் கண்டக்டரும் அடங்கிவிட்டான். ஆனாலும் அவனுடைய கோபம் தணியவில்லை. "வா, அப்பா, ஸ்டான்டர்டன் போனதும் உன்னை என்னசெய்கிறேன் பார்" என்று உறுமினான்.

ஸ்டான்டர்டன் டவுனில் இரவு தங்கிவிட்டு மறுநாட் காலையில் புறப்படுவதாக ஏற்பாடு. வண்டியிலோ, பிரயாணிகள் தங்கும் விடுதியிலோ, இரவைக் கழிக்கக் காந்திஜி விரும்பவில்லை. அந்த ஊரிலிருந்த இந்தியர் ஒருவருடைய வீட்டில் போய்த் தங்கினார். தம்முடைய அநுபவத்தை அவர் அங்கிருந்தவாறே தபால் வண்டிக் கம்பெனிக்கு எழுதி வருத்தம் தெரிவித்தார். கம்பெனியிலிருந்து உடனே பின்வரும் பதில் கிடைத்தது: "ஸ்டான்டர்டனிலிருந்து பெரிய 'கோச்' வண்டி கிளம்பும். அதிலுள்ள கண்டக்டரும் இதர சிப்பந்திகளும் உங்களுடன் இங்கிதமாக நடந்துகொள்ளுவார்கள். உங்களுடன் தகராறு செய்த கண்டக்டர் அந்த வண்டியில் வரமாட்டான். மற்றப் பிரயாணிகளுடன், வண்டிக்குள்ளேயே உட்கார உங்களுக்கு இடமளிக்கப்படும்."

துளசி மாலை
(1893)

தென்னாப்பிரிகாவிலுள்ள பிரீடோரியாவில் தங்கியிருந்தபோது, பல வெள்ளையர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் காந்திஜிக்குக் கிடைத்தது. அவர்களில் ஒருவர் மிஸ்டர் கோட்ஸ். அந்தக் காலத்தில் காந்திஜி கழுத்தில் துளசி மணி மாலை அணிந்து கொண்டிருந்தார். ஒருநாள் கோட்ஸ், "மிஸ்டர் காந்தி, இந்த மாலையை எதற்காக அணிந்து கொண்டிருக்கிறீர்கள்? பக்தியின் சின்னமா இது? மூடப் பழக்கத்துக்கு உங்களைப் போன்றவர்கள் அடிமையாகலாமா?" என்று கேட்டார்.

"மூடப் பழக்கமா? " என்று கேட்டார் காந்திஜி திடுக்கிட்டு.

"ஆமாம், இதை அறுத்து எறியுங்கள். நான் உதவி செய்யட்டுமா?" என்றார் கோட்ஸ் ஆத்திரத்துடன்.

"முடியாது. இது என்னுடைய தாய் ஆசீர்வதித்து அன்புடன் கழுத்தில் போட்ட மாலை. இதை அணிந்து கொண்டால் நான் சுகமாக வாழ்வேன் என்று அவள் நம்பினாள்" என்றார் காந்திஜி.

கோட்ஸ் கடகடவென்று சிரித்தார். "இதை நீங்களும் நம்புகிறீர்களா?" என்று கேட்டார்.

"எப்படிச் சொல்லமுடியும்? இந்த மணிமாலையின் மந்திர சக்தியைப்பற்றி எனக்கு ஏதும் தெரியாது. இதை அணியாவிட்டால் ஏதாவது கெடுதல் நேர்ந்துவிடும் என்றும் நான் எண்ணவில்லை. ஆனாலும் அன்புடன் என்னுடைய தாய் அணிவித்த இதைக் காரணமில்லாமல் எடுத்தெறிய எனக்கு மனம் இல்லை. என்னுடைய க்ஷேமத்தில் கருத்துக் கொண்டு நம்பிக்கையுடன் அன்னை எனக்குக் கொடுத்தாள். கம்பி தேய்ந்து அறுந்துபோகும் வரையில் இதை நான் அணிந்து கொண்டிருப்பேன். பிறகு புதிதாக வேறு மாலை அணிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையோ சிரத்தையோ எனக்குக் கிடையாது. இதன் விஷயம் வேறு. இதை அறுத்து எறிய ஒருபோதும் நான் உடன்பட முடியாது" என்றார் காந்திஜி.

கிறிஸ்துவ சமயம்தான் உயர்ந்தது என்று தீவிரமாக நம்பும் கோட்ஸ் காந்திஜியை அஞ்ஞானி என்றார். அவருடைய அறியாமையையும் அசட்டு நம்பிக்கையையும் போக்கவே தாம் முயலுவதாக மீண்டும் மீண்டும் வாதாடினார். ஆனால் காந்திஜி இணங்கவேயில்லை.

உணவும் குழந்தையும்
(1893)

தென்னப்பிரிகாவுக்குச் சென்ற புதிதில், ஓய்வு கிடைக்கும் போது, ஐரோப்பிய நண்பர்களுடன் பழகி, கிறிஸ்துவ சமயத்தைப் பற்றித் தத்துவ விசாரம் செய்வது காந்திஜியின் வழக்கமாக இருந்தது. டர்பானிலிருக்கும்போது, ஒரு கிறிஸ்துவக் குடும்பத்தார் அவருடன் நெருங்கிப் பழகினார்கள். அவர்களுடன் ஞாயிற்றுக் கிழமைகளில் மாதாகோவிலுக்குச் சென்றும், விருந்துண்டும் காலங் கழிப்பது காந்திஜிக்கு வழக்கமாயிற்று.

ஒருநாள் மாத்யூ ஆர்னல்ட்ஸ் எழுதிய 'ஆசியாவின் ஜோதி' யைப்பற்றி எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள். கௌதம புத்தரின் வாழ்க்கையை (ஆங்கிலத்தில்) காவிய ரூபமாக்கியது தான் 'ஆசியாவின் ஜோதி.' பேச்சுவாக்கில் காந்திஜி சொன்னார்: "புத்தருடைய கருணைக்கு ஈடு இணை இல்லை. மனித சமூகத்திடம் மாத்திரம் அவர் அன்பு செலுத்தவில்லை. உயிர்ப் பிராணிகளிடமும் அவர் அதே ரீதியில் அன்பு காட்டியதுதான் அற்புதம். ஆட்டுக்குட்டியைத் தோளில் தாங்கிக்கொண்டு அவர் உபதேசம் செய்த காட்சியை மனக் கண்ணால் பார்க்கும்போது ரோமம் சிலிர்க்கிறது."

வேறு மதங்களைப்பற்றி ஏதுமே தெரியாத வீட்டு எசமானி இந்தப் பேச்சை ரசிக்கவில்லை. ஏசுநாதரின் வாழ்க்கையும் போதனையும் மட்டுமே தெரிந்த அவள், இந்தப் பேச்சை ஏசு நிந்தனை என்று நினைத்து வருந்தினாள். நல்ல வேளையாகப் பேச்சு மாறிற்று. எல்லோரும் சாப்பாட்டுக்கு எழுந்தார்கள். காந்திஜி சைவ உணவுக்காரராகையால் அவருக்குப் பாலும், சில ஆப்பிள் பழங்களும் வழங்கப்பட்டன. மற்றவர்களுக்கு ரொட்டியும் இறைச்சியும் பரிமாறப்பட்டது. சாப்பிடும்போது உயிர்ப் பிராணிகளிடம் அன்பு செலுத்துவது பற்றிப் பேச்சு எழுந்து விட்டது. அந்தக் குடும்பத்திலுள்ள ஐந்து வயதுச் சிறுவன் தட்டிலிருந்த இறைச்சியைக் கடித்துச் சுவைத்துக் கொண்டிருந்தான். காந்திஜி அவனிடம் சைவ உணவின் மேன்மையைப் பற்றி இரண்டு வார்த்தைகள் சொல்லிவிட்டு உயிர்ப் பலியினால் தானே இறைச்சி உணவு ஏற்படுகிறது என்று கேட்டார்.

இந்தச் சம்பாஷணையை வீட்டு எசமானி துளிக்கூட விரும்பவில்லை. ஏற்கனவே அவள் காந்திஜியின் பேச்சினால் மன அமைதி இழந்திருந்தாள். ஆனாலும் அவள் மனத்தை அடக்கிக்கொண்டு பொறுமையாகவே இருந்தாள். அவளுடைய மனக் கொதிப்பைக் காந்திஜி உணரவும் இல்லை. அடுத்த ஞாயிறன்று வழக்கம்போலக் காந்திஜி அவர்களுடைய வீட்டுக்குச் சென்றபோது, வீட்டு எசமானியைத்தான் முதலாவதாக அவர் சந்தித்தார்.

அவரை வரவேற்றுவிட்டு அந்த அம்மாள் சொன்னாள்: "மிஸ்டர் காந்தி, நீங்கள் இங்கு வருவதை நான் பெரிதும் விரும்புகிறேன். ஆனால் குழந்தைகளிடம் நீங்கள் தத்துவம் பேசி அவர்

களுடைய மனசைக் கலைப்பதை நான் விரும்பவில்லை. சைவ உணவு மேம்பட்டதாக இருக்கலாம். அது பழக்கத்தைப் பொறுத்தது. என்னுடைய பையனிடம் அன்று சைவ உணவைப்பற்றி ஏதேதோ கூறிவிட்டீர்கள். அன்றிருந்து அவன் இறைச்சியைக் கையாலும் தொடுவதில்லை. ஆப்பிள்தான் வேண்டும் என்று கேட்க ஆரம்பித்துவிட்டான். இறைச்சி சாப்பிடாததால் அவனுடைய தேகநலம் பாதித்துவிடுமே? பழக்கத்திலுள்ள ஆகாரத்தை—அதுவும் வலுவூட்டும் உணவு என்று நாங்கள் நம்புவதை—விட்டுவிட்டு ஆகாரப் பரீட்சை செய்வதை நான் விரும்பவில்லை. பெரியவர்களிடம் நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசலாம். தயவு செய்து குழந்தைகளிடம் கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பேசுங்கள்.''

காந்திஜி மனம் வருந்தினார். அவர் சொன்னார்: ''அம்மா, உன்னுடைய சஞ்சலத்தை நான் தெரிந்துகொண்டேன். நாம் சாப்பிடுவதைத்தான் நம்முடைய குழந்தைகளும் சாப்பிட விரும்பும். நான் அடிக்கடி இங்கு வருவதால் என்னைப் பார்த்து, அந்தப் பையன் சைவ உணவு வேண்டும் என்று முரட்டுத்தனம் செய்யவும் கூடும். இதற்கு ஒரே ஒரு பரிகாரம்தான் உண்டு. அது நான் இங்கு வராமல் இருப்பதுதான்.''

அன்று முதல் காந்திஜி, ஞாயிற்றுக்கிழமைகளில் அவர்களுடைய வீட்டுக்குச் சாப்பிடப்போகும் வழக்கத்தை விட்டுவிட்டார்.

கூலி பாரிஸ்டர்
(1893)

தென் ஆப்பிரிகாவிலுள்ள இந்தியர்களை வெள்ளையர்கள் கூலிகள் என்றே குறிப்பிடுவது வழக்கம். இந்தியர்களில் ஒருவர் பாரிஸ்டர் படிப்புப் படித்து, நீதிஸ்தலத்துக்கு வந்துவிட்டது அவர்களுக்கு ஆத்திர மூட்டியது. காந்திஜியை அவர்கள் கூலி பாரிஸ்டர் என்றே குறிப்பிட்டார்கள். ஒரு சமயம் காந்திஜி பிரசிடெண்ட் குரூகரின் மாளிகை இருக்கும் வீதி வழியாகச் சென்ற போது, மாளிகையின் வாசலிலிருந்த காவற்காரன் அவரை நடைபாதையிலிருந்து இறங்கி நடக்கும்படி சொல்லி, கன்னத்தில்

அடித்தும் விட்டான். கறுப்பு மனிதன் ஒருவன் மாளிகை யோரமாக நடந்து வருவதை அவன் விரும்பாததே இதற்குக் காரணம். காந்திஜியோ ஏதுமே நடக்காததுபோல மௌனமாகச் செல்லலானார். இந்தக் காட்சியைத் தற்செயலாகப் பார்க்க நேர்ந்த கோட்ஸ் என்ற வெள்ளையர் ஓடோடியும் வந்தார். அருகில் வந்ததும், அடி வாங்கியவர் காந்திஜி என்று தெரியவே அவருக்கு ஆத்திரமாக வந்தது. அவருக்குக் காந்திஜியைத் தெரியும். அரசாங்க மாளிகைக் காவற்காரனாயினும் அவன் செய்தது குற்றம் தானே? அவனைக் கடிந்து கொண்டார். காவற்காரனும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பிறகு கோட்ஸ் காந்திஜியிடம் சொன்னார்: "இது வருந்தத் தக்க செய்கை. நான் நடந்தது முழுவதும் கவனித்துக் கொண்டுதானிருந்தேன். இந்த அக்கிரமக்காரனைத் தண்டிக்கத்தான் வேண்டும். மிஸ்டர் காந்தி, இவன் மீது வழக்குத் தொடருங்கள். நான் உங்களுக்குச் சாட்சி கூறுகிறேன்!"

காந்திஜி பதில் சொல்லவில்லை. அவருடைய வாயிலிருந்து ஒரு வறண்ட சிரிப்புத்தான் கிளம்பிற்று. காந்திஜி பயப்படுகிறாரோ என்ற சம்சயம் அந்த வெள்ளையருக்குத் தோன்றிற்று. "மிஸ்டர் காந்தி, நீங்கள் ஒரு பாரிஸ்டர். நீங்களே தயங்கலாமா? பயப்படலாமா? பயப்படாமல் வழக்குத் தொடருங்கள். நான் ஆதரவு காட்டுகிறேன்" என்று அவர் உற்சாகமூட்டினார்.

காந்திஜி சொன்னார்: "அநேகமாக இவ்வூரிலுள்ள பெரும்பான்மையோருக்கு என்னைத் தெரியும். ஒருசிலர் என்னைக் 'கூலி பாரிஸ்டர்' என்றுகூடக் குறிப்பிடுவதுண்டு. நான் வழக்குத் தொடுத்தால் நியாயம் கிடைக்கக்கூடும். ஆனால் இவனுக்கு நான் எதிரியல்ல. என்னுடைய நிறத்தைக் கண்டல்லவா இவன் வெகுண்டான்? இப்போது கிடைத்த அடியும் எனக்கல்ல; என்னுடைய கறுப்புத் தேகத்துக்கும் தேசத்துக்குமாகும். என் நாட்டையும், நாட்டு மக்களையும் இந்த அவமானத்திலிருந்து காப்பாற்ற முடியாத போது என்னைமட்டும் காப்பாற்றிக்கொள்ள நான் விரும்பவில்லை."

அவருடைய உறுதியைக் கண்டு நண்பர் வருந்தினார். காந்திஜிக்கு நியாயம் வழங்க முடியவில்லையே என்ற ஏக்கம்தான் ஏற்பட்டதே தவிர, நிறத் துவேஷத்தைப்பற்றி அவர் சிந்திக்கவேயில்லை.

வழக்கும் சத்தியமும்

(1893)

உண்மைக்குப் புறம்பான வழக்குகளைக் காந்திஜி ஏற்றுக் கொள்வது கிடையாது. சட்டத்தின் பலத்தினால் ஜயித்துவிடலாம் என்ற பிரச்னைகளில்கூட தர்ம விரோதமான வாதமாக இருந் தால் அவர் வக்காலத்து வாங்குவதில்லை. டர்பானுக்குச் சென்ற சில மாதங்களுக்கெல்லாம் அவருடைய பிரதானக் கட்சிக்காரரான அப்துல்லா சேட்டின் விருப்பப்படி, வேறு ஒரு கட்சிக்காரரின் வழக்கை ஏற்றுக்கொள்ள நேரிட்டது. அந்தக் காலத்தில், வெள் ளைக்காரப் பாரிஸ்டரை அமர்த்திக்கொண்டால்தான் நீதிபதிகளின் அநுதாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஒரு சில இந்தியர் களுக்கு இருந்தது. காந்திஜியிடம் வந்த கட்சிக்காரரும் ஒரு வெள்ளைக்காரப் பாரிஸ்டரிடம் வக்காலத்துக் கொடுத்துவிட்டு, அவ ருக்கு உதவியாக இருக்கவே காந்திஜியைக் கோரினார். கணக்குச் சிக்கல்களும், கட்சிப் பிரதி கட்சி வாதமும், உப வழக்குகளும் நிறைந்த வழக்கு அது. கீழ்க்கோர்ட்டில் விசாரணை நடந்து வழக்கு அப்பீலுக்கு வந்தது. கணக்குச் சம்பந்தமான ஒரு பிரச்னையைக் கணக்குப் பரிசோதகர்களின் தீர்ப்புக்கு விட்டு, விசாரணையை ஒத்திப்போட்டார்கள். பரிசோதகர்களுடைய தீர்ப்புக் காந்திஜியின் கட்சிக்காரருக்குச் சாதகமாகவே இருந்தது. ஆனால் அதைக் காந்திஜி பார்த்தபோது ஒரு சிறு பிசகு நேர்ந்திருப்பதைக் கண்டு பிடித்தார். பற்று இனத்தில் எழுதவேண்டிய ஒரு தொகை வரவு இனத்தில் எழுதப்பட்டிருந்தது. இது ஆடிட்டர்களுடைய கண் களுக்குத் தப்பிவிட்டது. இதை எடுத்துக்காட்டித் தவற்றைச் சரி செய்யவேண்டும் என்று காந்திஜி விரும்பினார். அப்படிச் செய் தால் கட்சிக்காரருக்குப் பாதகமாக முடியக்கூடும். இதன் நடுவே, எதிர்க்கட்சிக்காரர்களோ வேறு சில காரணங்களைக் காட்டி, ஆடிட்டர்களுடைய தீர்ப்பை எதிர்த்தார்கள்.

காந்திஜி, தம்முடைய கட்சிக்காரரிடமும், ஸீனியர் வக்கீ லான வெள்ளைக்காரப் பாரிஸ்டரிடமும் தவற்றை எடுத்துக் காட்டி, அதைத் திருத்தவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினார். ஆனால் ஸீனியர் வக்கீல் அதை விரும்பவில்லை. "வழக்கு என்று வந்துவிட்டால் சட்டப்படி ஜயிப்பதைத்தான் நாம் பார்க்க

வேண்டும். தர்மாதர்மப் பிரச்னைக்கு இங்கு இடமில்லை" என்று கூறிவிட்டார்.

காந்திஜியோ அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

"சரி, இதை ஏற்றுக்கொண்டு புனர் விசாரணை செய்ய உத்தரவிட்டால் எற்படும் செலவையும் காலதாமதத்தையும் யோசித்துப் பாருங்கள். மேலும் அந்தத் தீர்ப்பு நமக்குச் சாதகமாக இருக்கும் என்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டார் ஸீனியர் வக்கீல்.

"தவற்றை எடுத்துக் காட்டுவதில் அவமானம் ஒன்றும் இல்லை. அதனால் பாதகமும் ஏற்படாது. அப்படி நேர்ந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நாம் கண்டுபிடித்ததைப் போல எதிர்க் கடசிக்காரரோ, கோர்ட்டாரோ கண்டு பிடித்து விட்டால் என்ன செய்வோம்? அப்படிச் செய்யமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டார் காந்திஜி.

ஸீனியர் வக்கீலுக்குக் கோபந்தான் வந்தது. காந்திஜியின் தர்க்க நியாயம் அவருக்குப் பிடிக்கவில்லை. "உங்களுடைய பேச்சுக்குக் கட்டுப்பட என்னால் முடியாது. வேண்டுமானால் நீங்களே ஆஜராகி வாதாடுங்கள்" என்றார்.

இந்தச் சம்பாஷணையை உடனிருந்து கேட்டுக்கொண்டிருந்த கட்சிக்காரர், "மிஸ்டர் காந்தி, உங்களுக்குத் தைரியம் இருந்தால் நீங்களே ஆஜராகி வாதாடுங்கள். சத்தியத்துக்கு எப்போதும் ஜயமுண்டு; பகவானுடைய அருளும் உண்டு" என்றார்.

காந்திஜிக்குச் சந்தோஷம் தாளவில்லை. ஆனால் நீதி ஸ்தலத்தில் ஆஜராகும்போது அவருடைய மனம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது. விஷயத்தை எடுத்துச் சொல்லும்போதே நீதிபதிகளில் ஒருவர், "மிஸ்டர் காந்தி, உங்களுடைய தொழில் தர்மத்துக்கு இது ஏற்றதுதானா என்று யோசித்தீர்களா?" என்று இடைமறித்தார்.

"இதில் தவறும் இல்லை; தொழில் நேர்மைக்கு விரோதமும் இல்லை" என்று கூறிவிட்டு, எதிர்க் கட்சிக்காரர்களின் வாதத்தையும் எதிர்த்து விவாதித்துப் பேசலானார். அவருடைய வாதம் முடிந்ததும், எதிர்க்கட்சி வக்கீல், அந்தக் கணக்குப் பிரச்னையையே எடுத்துக்கொண்டு வாதித்து, வழக்கைப் புனராலோசனைக்கு விடவேண்டும் என்று வாதிக்கலானார்.

அதை நீதிபதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. "கணக்குப் பிரச்னையைப்பற்றிக் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பு இருக்கிறதே! இப்போது காந்தி இந்தப் பிசகை எடுத்துக் காட்டாவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? அவர் எடுத்துக் காட்டிய பிறகுதானே நீங்கள் புதிதாக வாதம் செய்கிறீர்கள்?" என்று கேட்டார் நீதிபதிகளில் ஒருவர்.

"மிகவும் கெட்டிக்காரர்களான ஆடிட்டர்களைத்தான் நியமித்தோம். அவர்களுடைய கண்களுக்குத் தப்பின பிசகு மற்றவர்களுக்குத் தென்படுவது துர்லபந்தான். ஆனாலும் காந்திஜி கண்டுபிடித்துவிட்டார். எங்களுக்குச் சாதகமாக இருக்கும் இந்தப் பிரச்னையை எதிர்க்கட்சிக்காரரே ஒப்புக்கொள்ளும்போது நாங்கள் வாதாட வேண்டியதில்லை. கோர்ட்டார் எங்களுக்குச் சாதகமாக ......" என்று பேசிக்கொண்டே போனார் வக்கீல்.

இதற்குள் பிரதம நீதிபதி, "காந்தி எடுத்துக் காட்டிய பிசகை வைத்துக்கொண்டு வாதம் செய்வது இருக்கட்டும். உங்களுக்கு வேறு 'பாயிண்ட்டு'கள் இருக்கின்றனவா? இதையே வற்புறுத்தினால் வழக்கையே புனராலோசனை செய்யும்படித்தான் உத்தரவிட நேரிடும். இதனால் காலதாமதமும் பொருள் செலவுந்தான் ஏற்படும்" என்று கூறிவிட்டார்.

எதிர்க் கட்சி வக்கீல் தம்முடைய வாதத்தை நிறுத்திக் கொண்டார். இந்தச் சம்பவத்தைப்பற்றிக் காந்திஜி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "தவற்றைச் சரி செய்யும்படியோ, அல்லது ஒதுக்கியோ தீர்ப்புக் கூறப்பட்டது என்று நினைக்கிறேன். தீர்ப்பு எங்களுக்குச் சாதகமாக இருந்தது. என்னைப் போலவே, பிறகு ஸீனியர் வக்கீலும் கட்சிக்காரரும் சந்தோஷப்பட்டார்கள். சட்ட நுணுக்கத்தால் ஜாலவித்தை செய்து வழக்கை ஜயிப்பது ஒருபுறமிருக்க, சத்தியத்தையும் நேர்மையையும் கடைப்பிடித்துக் கண்ணியமாக வக்கீல் தொழில் நடத்த முடியும் என்ற நம்பிக்கை ஊர்ஜிதப்பட்டதில் நான் பெருமையடைகிறேன்."

★

சத்தியமே ஜயம்
(1894)

தென் ஆப்பிரிகாவிலுள்ள கட்சிக்காரர்களில் பார்ஸீ ரஸ்டோம்ஜி முக்கியமானவர். காந்திஜியுடன் பொதுவேலைகளில் ஈடுபட்டு அந்த நாட்டில் வாழும் இந்தியர்களுக்குப் பெரிதும் உழைத்தவர். காந்திஜியின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திர மான சிறந்த ஊழியராலும் அவரிடம் தொழில் முறையில் ஒரு குறைபாடு இருந்தது. அவருக்குப் பல கடைகள் உண்டு. கல்கத்தா விலிருந்தும் பம்பாயிலிருந்தும் அவருக்குச் சரக்குகள் வரும். சுங்க இலாகாவுக்குத் தெரியாமல் கள்ளத்தனமாகச் சரக்குகளை இறக்குமதி செய்யும் வியாபாரத்திலும் அவர் ஈடுபட்டார். ஒரு சமயம் சுங்க அதிகாரிகள் அவரைப் பிடித்துவிட்டார்கள். சரக்கு களை ஜப்தி செய்ததுடன் அவர் மீதும் வழக்குத் தொடர்ந்து தண்டித்துவிட முனைந்தார்கள்.

ரஸ்டோம்ஜி காந்திஜியிடம் ஓடோடியும் வந்தார். "பாயி,* சர்க்கார் என்னைப் பிடித்துவிட்டார்கள். நீங்கள் தாம் காப்பாற்ற வேண்டும். நான் வியாபாரம் செய்து கொண்டிருப்பதுதான் உங்களுக்குத் தெரியும். ஆனால் சுங்க இலாகாவை ஏமாற்றி, சாமான்களைக் கடத்தி வருகிறேன் என்பது எவருக்கும் தெரியாது. உங்களிடம் நான் சொன்னால், நீங்கள் அதை ஆமோதிக்க முடியாது என்பது தெரிந்த விஷயம். இப்போது நான் பெரிய ஆபத்தில் மாட்டிக்கொண்டு விட்டேன். தண்டனை கிடைத்தால் அவமானம். என்னுடைய கண்ணியத்துக்கு ஹானி வந்துவிடும். என் செய் கைக்குப் பச்சாத்தாபப் படுகிறேன். நீங்கள் தாம் உதவி செய்ய வேண்டும்" என்றார்.

காந்திஜி மனம் நெகிழ்ந்து போனார். "உங்களைக் காப்பாற்று வது ஆண்டவன் கையில் இருக்கிறது. ஆனாலும் நான் வக்கீல் என்ற முறையில் உங்களைக் காப்பாற்ற முடியாது. என்னுடைய வழியே வேறு. இணங்குவதாக இருந்தால் முயலுகிறேன் முதலாவதாக நீங்கள் உண்மையைச் சொல்லிக் குற்றத்தை ஒப்புக் கொள்ளவேண்டும்" என்றார்.

---

* தென் ஆப்பிரிகாவிலுள்ள கட்சிக்காரர்களில் பெரும்பான்மையோர் காந்திஜியை 'பாயி' (சகோதரர்) என்றே குறிப்பிட்டு அழைத்தார்கள்.

ரஸ்டோம்ஜி திடுக்கிட்டார். சுங்க இலாகா அதிகாரிகளிடம் உண்மையை ஒப்புக்கொண்டால், அவர்களுடைய வேலை சுலப மாகி விடுகிறது. குற்றம் சாட்டித் தண்டித்து விடுவார்கள். உண்மை பேசியதற்காகத் தர்மாதர்மம் அறிந்து கௌரவிப்பார்களா, அல்லது சட்டத்தை எண்ணித் தண்டிப்பார்களா?-- இப்படித்தான் அவர் எண்ணினார்.

மனச் சஞ்சலத்துடன், "பாயி, நீங்கள் என்னுடைய வக்கீல். உங்களிடம் குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டேன். என்னைக் காப்பாற்றும் பொறுப்பு உங்களிடம் இருக்கிறது" என்றார் ரஸ்டோம்ஜி.

காந்திஜி ஒப்புக்கொள்ளவில்லை. "நீங்கள் செய்த குற்றத்தினால் எனக்கு நஷ்டம் ஏற்படவில்லை. சர்க்காருக்குத்தான் நஷ்டம். ஆகவே நீங்கள் சர்க்காரிடம் தான் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். தண்டனை கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூறிவிட்டார்.

ரஸ்டோம்ஜி எவ்வளவோ கெஞ்சினார்; வாதாடினார். காந்திஜி இணங்கவில்லை. காந்திஜியிடம் நம்பிக்கை கொண்ட ரஸ்டோம்ஜி வேறு வழியின்றி ஒப்புக்கொண்டார்.

"நான் சுங்க இலாகாத் தலைவரைக் கண்டு பேசுகிறேன். அவர்தாம் உங்கள் மீது வழக்குத் தொடர வேண்டும். மேலும் அதற்கு அட்டர்னி ஜனரலின் உத்தரவு வேண்டும். அவரையும் நான் சந்தித்துப் பெசுகிறேன். குற்றம் நிரூபணமாகித் தண்டனை யடைந்தால்தான் அவமானம் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். திருட்டுத்தனமான செய்கையே அவமானமானது என்று நான் எண்ணுகிறேன். அதற்கு ஏற்ற பிராயச்சித்தம் சிறைவாசம்தான். ஆனாலும் இனிமேல் இந்த மாதிரித் தவறு செய்யக்கூடாது. அதற்குப் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்றார் காந்திஜி.

உபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதில் ரஸ்டோம்ஜி மனம் செலுத்தவில்லை. ஆபத்திலிருந்து மீளுவதில்தான் அவரு ருடைய புத்தி இருந்தது. தண்டனை பெற்றுவிட்டால் தம்முடைய பெயருக்கும் புகழுக்கும் நாணயத்துக்கும் ஆபத்து வந்துவிடுமே என்றுதான் அவர் பயந்தார். வேறு மார்க்கம் இல்லை என்றதும் அவர் காந்திஜியிடம் தஞ்சமடைந்து விட்டார்.

காந்திஜி சுங்க இலாகாத் தலைவரைச் சந்தித்துப் பேசினார். காந்திஜியின் நேர்மை அவரை வசீகரித்து விட்டது. இருந்தாலும் அவர் சொன்னார்: "எனக்கு ரஸ்டோம்ஜியைத் தெரியும். ஆனாலும் என்னுடைய கடமையை நான் செய்யவேண்டும். மேலும் அட்டர்னி ஜனரலுடைய ஆலோசனைப்படியே நான் நடக்க வேண்டியிருக்கிறது" என்றார்.

"அவரை நான் பேட்டி காண்கிறேன். நீங்கள் மட்டும் வழக்குத் தொடர வேண்டும் என்று வற்புறுத்தாமல் இருந்தால் போதும்" என்று கேட்டுக் கொண்டார் காந்திஜி.

சுங்க இலாகாத் தலைவர் ஒப்புக்கொண்டார். காந்திஜி அட்டர்னி ஜனரலைச் சந்தித்ததன் பயனாக வழக்குக் கைவிடப் பட்டது. திருட்டுத்தனமாகக் கடத்தப்பட்ட சாமான்களின் மதிப்பைப்போல இரண்டத்தனை தொகை அபராதம் செலுத்தவேண்டும் என்று சுங்க இலாகாத் தலைவர் கூறினார். ரஸ்டோம்ஜியின் சந்தோஷத்துக்கு எல்லையில்லை.

அட்டர்னி ஜனரலும் சுங்க இலாகாத் தலைவரும் காந்திஜியின் நேர்மையையும் சாகசத்தையும் பாராட்டினார்கள். ரஸ்டோம்ஜியோ காந்திஜியைக் கௌரவித்த விதமே வேறு. காந்திஜியின் சத்தியவாதத்தினால் தாம் காப்பாற்றப்பட்ட விதத்தை அச்சடித்துத் தம்முடைய ஒவ்வொரு கடையிலும் கண்ணாடிச் சட்டமிட்டு மாட்டி விட்டார். "என்னுடைய சகாக்களுக்கும் சந்ததிகளுக்கும் இது ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும் என்பதே என்னுடைய அவா" என்று அவர் அடிக்கடி சொல்வதுண்டு.

நாவிதன் காந்தி

(1894)

பிரீடோரியாவிலிருக்கும்போது காந்திஜி ஒரு வெள்ளையனுடைய க்ஷவரக் கடைக்குச் சென்றார். காந்திஜி இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றவர் என்பது அந்த நாவிதனுக்குத் தெரியும். ஆனாலும் அவர் 'கறுப்பர்' என்பதற்காக க்ஷவரம் செய்ய முடியாது என்று கூறி வெளியே அனுப்பிவிட்டான். காந்திஜிக்கு வருத்தம் தாளவில்லை. வாழ்க்கையின் ஒவ்வொரு

கட்டத்திலும் நிறத் துவேஷம் இருப்பதை எண்ண எண்ண அவருடைய நெஞ்சு குமுறிற்று. அவர் கடைக்குச் சென்று சீப்பும் கத்தரிக்கோலும் வாங்கிக்கொண்டு வீடு சென்றார். இரண்டு கண்ணாடிகளை வைத்துக்கொண்டு தாமே முடி வெட்டிக்கொண்டார். பழக்கமில்லாமையினாலும், பின்புறமுள்ள கண்ணாடியைப் பார்த்து வெட்டிக்கொள்வது கடினமாக இருந்ததாலும் சீராக வெட்டிக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் அவர் மனம் சோரவில்லை. நீளமும் குட்டையுமாக இருக்கும் முடியைப் பார்த்து வெட்கப்படவுமில்லை.

நீதிஸ்தலத்தில் அவரைச் சந்தித்த ஒரு வெள்ளைக்கார நண்பர், "மிஸ்டர் காந்தி, உங்களுடைய தலையை எலி கருவி விட்டதா? இது என்ன வேஷம்?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

காந்திஜி சொன்னார் : "என்னைப் பார்த்துச் சிரிக்காதீர்கள். வெள்ளைக்கார நாவிதனுக்கு என்னுடைய கறுப்பு மயிரைத் தொடப் பிடிக்கவில்லையாம். அவனைப் பார்த்துத்தான் நீங்கள் சிரிக்கவேண்டும். அசங்கியமாக இருந்தாலும் நானே வெட்டிக் கொள்ளலாம் என்று துணிந்துவிட்டேன்" என்றார்.

"உங்களிடம் அவனுக்குத் துவேஷம் இருக்காது. நீங்கள் பாரிஸ்டர். ஆனால் கறுப்பர்களுக்கு க்ஷவரம் செய்தால் வெள்ளைக்காரர்களுடைய வாடிக்கையை இழந்துவிட நேரிடுமே என்று அவன் பயந்திருக்கக்கூடும். அவனைப் பகிஷ்கரிக்கவும் நாங்கள் துணிந்துவிடுவோமே" என்றார் நண்பர், நடந்த சம்பவத்தைக் கேட்டறிந்துகொண்ட பிறகு.

காந்திஜி பதில் சொல்லவில்லை. இதைப் பற்றிக் குறிப்பிடும் போது காந்திஜி பின்வருமாறு எழுதியிருக்கிறார் : "நம்முடைய தேசத்தில் தாழ்த்தப்பட்டோரைத் தீண்டும் நாவிதனை உயர் சாதிக்காரர்கள் பகிஷ்கரித்துவிடுகிறார்கள். வெளிநாட்டில் உயர்சாதி ஹிந்துக்களையே தீண்டாதவர்களாக மற்றவர்கள் ஒதுக்கிவிடுகிறார்கள். நாம் செய்த வினைக்கு நாம்தானே பலன் அநுபவிக்க வேண்டும்?"

★

ஜாமீன்
(1894)

பிரீடோரியாவில் உமார் ஜாவேரி என்ருெரு வியாபாரி இருந்தார். நகர மத்தியில் அவருக்கு ஒரு காலி மனே இருந்தது. அதை இருபது வருஷக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு சுமார் 14,000 பவுன் செலவில் கட்டடம் கட்ட காலன்பாக் என்ற ஜெர்மானியர் திட்டமிட்டார். பேச்சு வார்த்தைகள் முடிந்ததும் காலன்பாக் கட்டட வேலையைத் துவங்கிவிட்டார். ஆனுல் சில மாதங்களுக்குப் பிறகுகூடக் குத்தகைப் பத்திரம் 'ரிஜிஸ்டர்' ஆகாமல் தவக்கம் ஏற்பட்டது. இதனுல் ஏதாவது சங்கடங்கள் விளையக்கூடும் என்றும் பத்திரம் ரிஜிஸ்டர் செய்வதை முதல் வேலையாக வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் காலன்பாக்கின் வக்கீல் பாபின் வற்புறுத்தினுர்.

உமார் ஜாவேரியை வற்புறுத்தி ஒப்பந்தப் பத்திரம் செய்து கொள்ளவோ, வேறு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவோ காலன்பாக் விரும்பவில்லை. காந்திஜியின் மூலமாக அவருக்கும் உமார் ஜாவேரிக்கும் பழக்கமேற்பட்டது. காந்திஜியுடன் சில மாதங்களாகவே காலன்பாக் பழகினுலும் அவர்கள் அந்தரங்க நண்பர்களாகிவிட்டார்கள். காந்திஜியின் கட்சிக்காரரான உமார் ஜாவேரியின்மீது நடவடிக்கை எடுப்பது காந்திஜியின்மீது நடவடிக்கை எடுப்பதற்குச் சமம் என்றே காலன்பாக் எண்ணினுர். ஆனுல் மிஸ்டர் பாபினுடைய எச்சரிக்கையையும் புறக்கணித்துவிட அவரால் முடியவில்லை. ஆகவே அவர் காந்திஜியிடமே ஆலோசனை கேட்டார்.

காந்திஜி அமைதியாகக் கேட்டார். காலன்பாக்கினுடைய நிலைமையை அவரால் ஊகித்துக்கொள்ள முடிந்தது. உடனே அவர் தமது மேஜை அறையைத் திறந்து 'செக்' புத்தகத்தை எடுத்தார். 15,000 பவுன்களுக்கு ஒரு 'செக்' எழுதி காலன்பாக்கிடம் நீட்டினுர். காலன்பாக் திகைத்துப் போனுர். எதற்காக இந்த 'செக்' என்று அவருக்குப் புரியவில்லை.

காந்திஜி சொன்னுர்: "என்னுடைய கட்சிக்காரர் நாணயஸ்தர். சொன்ன சொல் தவறமாட்டார். பத்திரம் ரிஜிஸ்டர் செய்யத் தாமதமாவதற்கு வேறு காரணங்கள் இருக்கக்கூடும்

இருந்தாலும் இந்தப் பணத்தை நீங்கள் ஜாமீனுக வைத்துக்கொள் ளுங்கள். பத்திரம் ரிஜிஸ்டர் செய்த பிறகு திரும்பக் கொடுக்கலாம். கட்டட வேலையைத் தொடர்ந்து நடத்துங்கள் " என்று.

உமார் ஜாவேரியிடம் காந்திஜிக்கு இருக்கும் நம்பிக்கையைத் தெரிந்து கொண்ட காலன்பாக் மனம் தெளிந்து, 'செக்'கை ஏற்றுக்கொள்ள மறுத்தார். காந்திஜி அவருக்குத் தக்க சமா தானம் சொல்லிச் 'செக்'கையும் கொடுத்தனுப்பினுர். சில தினங்களுக்குள் காந்திஜியின் முயற்சியினுல் ஒப்பந்தப் பத்திரம் ரிஜிஸ்டராயிற்று.

நண்பரின் கூற்று
(1894)

நேடாலில் வசிக்கும்போது காந்திஜி போஜன விடுதிகளில் தங்காமல் தனியாக ஜாகை எற்படுத்தினுர். அவருடைய காரி யாலயச் சிப்பந்திகளும் அவருடன் வசிக்கலானுர்கள். காந்திஜிக்குக் குடும்ப நிர்வாகத்தில் பழக்கமில்லாததால் அந்தப் பொறுப்பை ஒரு நண்பர் ஏற்றுக்கொண்டார். காந்திஜியின் அன்பைப் பெற் றவர்தாம் என்ருலும் அந்த நண்பர் சத்தியவாதியுமல்ல, நல்ல நடத்தையுள்ளவருமல்ல. அவருடைய நடத்தையைப் பற்றிக் காந்திஜிக்குத் தெரியாது. மற்றவர்களுக்குத் தெரியும் என்ருலும் காந்திஜியிடம் சொல்ல முடியாமல் தவித்தார்கள். அந்த நண்பரோ வாயாடி; கொஞ்சம் முரட்டுச் சுபாவமுள்ளவர். ஆகவே மற்றவர்கள் அவரிடம் சிறிது எச்சரிக்கையுடன் பழகி வந்தார்கள்.

ஒரு சமயம் சமையல்காரன் ரஜா எடுத்துக் கொள்ள நேரிட்டது. புதிதாக வந்த சமையல்காரன் வேலையில் கெட்டிக் காரன் என்ருலும் துடுக்குக்காரன். காந்திஜியின் நேர்மையும் சாந்த குணமும் அவனைப் பெரிதும் வசீகரித்தன. வீட்டுக்கு வந்த இரண்டொரு தினங்களுக்குள் அவன் வீட்டில் நடக்கும் அக்கிரமங்களைத் தெரிந்து கொண்டான். வீட்டை நிர்வாகம் செய்யும் நண்பருடைய நடத்தையை அவனுல் சகித்துக்கொண் டிருக்க முடியவில்லை. ஒருநாள் நடுப்பகலில் அவன் காந்திஜியின் காரியாலயத்துக்குச் சென்று, "பாபு, கொஞ்சம் வீட்டு மட்டும் வாருங்கள், மிகவும் அவசரம் "என்று காந்திஜியை அழைத்தான்.

“ இப்போது அவசரமான வேலை ஏது? மாலையில்தான் வந்து விடுவேனே?'' என்றார் காந்திஜி.

சமையல்காரன் விடுவதாக இல்லை. “ இப்போதே புறப்பட வேண்டும்; இல்லாவிட்டால் சந்தர்ப்பம் தப்பிவிடும். மிகவும் அவசரம்'' என்று அவன் பிடிவாதம் செய்தான்.

காரியாலயத்திலுள்ள ஒரு சிப்பந்தியையும் அழைத்துக் கொண்டு காந்திஜி வீட்டுக்கு வந்தார். உள்ளே நுழைந்ததும், “உங்களுடைய நண்பர் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்று பாருங்கள். உள்ளே இருக்கிறார். கதவைத் தட்டுங்கள்'' என்று சமையல்காரன் மாடிப்புறமாக அவர் இருக்குமிடத்தை நோக்கிச் சமிக்ஞை செய்தான். அவனுடைய குரலில் தெறித்த ஆத்திரத்தை யும் வெறுப்பையும் காந்திஜி கவனிக்காமல் இல்லை.

காந்திஜி கதவைத் தட்டினார். நண்பருடைய பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார். பதில் கிடைக்கவில்லை. ஓங்கித் தட்டினார். கதவு முறிந்து விழும்படித் தடதடவென்று தட்டினார். கடைசியில் கதவு திறக்கப்பட்டது. உள்ளே ஒரு ‘குச்சுக்காரி'யுடன் நண்பர் இருந்தார். நேருக்கு நேராகக் காந்திஜியைக் கண்டதும் நண்பருடைய முகம் அவமானத்தால் வெளுத்துப் போயிற்று. அந்த விபசாரி, தலையைக் குனிந்துகொண்டு வெளியே சென்றாள்.

“ உன் மீது நான் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு இதுதானா பலன்? என் வீட்டில் இருந்துகொண்டு, என்னுடைய கௌரவத் துக்குப் பங்கம் விளைவித்து விட்டாயே? போதும் உன்னுடைய நட்பு. இப்போதே இங்கிருந்து வெளியேறி விடு'' என்று கோபத்தை அடக்கிக்கொண்டு சொன்னார் காந்திஜி.

நண்பரோ இதற்குள் தன்னிலை அடைந்துவிட்டார். காந்தி ஜியின் அமரிக்கையான பேச்சுத் துணிச்சலைத் தூண்டிவிட்டது. சிப்பந்திகளின் முன்னிலையில் அவமானப்பட்டது அவருக்கு எரிச்சலூட்டியது. காந்திஜியை அவர்களுக்கு எதிரே இழிவாகப் பேசி மடக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றிவிட்டது. “ போதும், போதும். உன்னுடைய வண்டவாளங்களை அம்பலப் படுத்தும்படி வைத்துக்கொள்ளாதே. வயசுப் பிள்ளைகள் செய்யும் காரியத்தையே நானும் செய்தேன். இதற்கா இத்தனை அமளி?'' என்று ஆத்திரத்துடன் கத்தினார்.

காந்திஜிக்கு வருத்தமும் ஆத்திரமும்தான் வந்தன. "என்னுடைய வண்டவாளமா? நன்ருக அம்பலப்படுத்து. மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்? ஆனல் இனிமேல் இங்கு ஒரு கணம்கூட நீ தங்கக்கூடாது. கிளம்பு. இந்த நிமிஷமே நீ வெளியேறி விடவேண்டும்" என்ருர்.

நண்பர் வெளியேற மறுத்தார். காந்திஜியை ஏசினர்; ஆத்திரத்துடன் பேசினர். காந்திஜி பொறுமை இழந்துவிட்டார். உடனிருந்த குமாஸ்தாவிடம், "நீங்கள் போலீஸ் ஸ்டேஷன் வரையில் போய்வாருங்கள். 'இங்கு வசிக்கும் ஒருவர் அயோக்கியத்தனமாக நடந்துகொண்டுவிட்டார். அவர் இங்கு இருப்பதை நான் விரும்பவில்லை. அவரோ சண்டித்தனம் செய்கிருர். ஆகவே நான் போலீஸ் உதவியை நாடுகிறேன்' என்று சொல்லுங்கள்" என்ருர்.

போலீஸ் என்றதுமே நண்பர் பணிந்துவிட்டார். "வேண்டாம். போலீஸ் வரையில் போவதை நான் விரும்பவில்லை. என்னை மன்னித்து விடுங்கள். நான் போய்விடுகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டார்.

பச்சைக் கடுதாசி

(1896)

காந்திஜி, 1896-ஆம் ஆண்டில் 'பெங்கோலா' என்ற கப்பலில் இந்தியா திரும்பினர். அந்தக் கப்பல் கல்கத்தாவுக்குச் செல்ல வேண்டியிருந்ததால், கல்கத்தாவிலிருந்து ரெயில் மார்க்கமாக ராஜ்கோட்டுக்குப் பிரயாணம் செய்ய வேண்டியதாயிற்று. தென் ஆப்பிரிகாவில் வாழும் இந்தியர்களுடைய துயரங்களைப் பற்றி அவர் இந்தியப் பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் அனுப்பிக் கொண்டிருந்தார். இந்தியாவுக்கு வந்ததும் பல பத்திரிகை ஆசிரியர்களை நேரில் கண்டு, தென்னப்பிரிகா இந்தியப் பிரச்னையில் விசேஷக் கவனம் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். அவர் எதிர்பார்த்தபடி ஆதரவு கிடைக்கவில்லை என்ருலும் அலகாபாத்திலுள்ள 'பாயனீர்' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியரான செஸ்னி என்பவர் பெரிதும் உற்சாகம் காட்டினர்.

"மிஸ்டர் காந்தி, உங்களுடைய கோரிக்கைகளை முழுதும் நான் ஆதரிக்க முடியாது. பிரிட்டிஷ் மக்களிடமும் பிரிட்டிஷ்

காலனிகளில் வாழும் வெள்ளையர்களிடமும் எனக்குப் பற்றுதல் இருப்பதுதான் நியாயம். ஆனாலும் நீங்கள் அனுப்பும் செய்திகளைப் பரிசீலனை செய்து பிரசுரிக்கிறேன்" என்றார் செஸ்னி.

வெள்ளைக்காரர்களுக்குச் சொந்தமான ஒரு பத்திரிகை ஆசிரியர் இப்படிக் கூறியதும் காந்திஜிக்குத் 'தெம்பு' வந்தது. 'பாயனீ'ரில் அவர் கொடுத்த அறிக்கை பிரசுரமாயிற்று. அதன் பிறகு காந்திஜி, தென்னாப்பிரிகா இந்தியர்கள் படும் அவதிகளைப் பற்றி விரிவான அறிக்கை தயாரித்து ஒரு துண்டுப் பிரசுரமாக வெளியிட்டு இந்தியாவிலும் இங்கிலாந்திலுமுள்ள பிரமுகர்களுக்கு அனுப்பினார். அந்தப் பிரசுரத்துக்குப் பச்சை அட்டை போட்டிருந்ததால் பத்திரிகைகளில் குறிப்பிடும்போது 'பச்சை அறிக்கை' என்று எழுதிவிட்டார்கள். காந்தஜியின் பச்சை அறிக்கையைப் பற்றித் தென் ஆப்பிரிகாவிலுள்ள தினசரிப் பத்திரிகைகளும் விமர்சனமும் கண்டனமும் செய்தன.

பத்தாயிரம் பிரதிகள் அச்சடித்து விட்ட காந்திஜிக்கு, அவற்றைத் தபால் மூலம் அனுப்புவதற்குப் பணச் செலவுடன் தேக சிரமமும் எற்பட்டது. ஒவ்வொரு அறிக்கைக்கும் விலாசம் எழுதி, தபால் தலை ஒட்டுவது கடினமாக இருக்கவே, அவர் அக்கம் பக்கத்திலுள்ள சிறுவர்களைச் சிநேகம் பிடித்துக்கொண்டார். அவர்களுக்கு ஸ்டாம்பு சேகரிக்கும் பொழுது போக்கில் உற்சாகமூட்டினார். சிறுவர்கள் சந்தோஷமாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். காந்திஜியுடன் நெருங்கிப் பழகப் பழக அவரிடம் அன்பும் விசவாசமும் ஏற்பட்டன. தமக்கு வரும் தபால்களிலுள்ள, ஸ்டாம்புகளை அவர் மிகவும் ஜாக்கிரதையாகச் சேகரித்துச் சிறுவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பார். நாளாவட்டத்தில் உதவி செய்யவும் உபயோகப்பட்ட தபால் பில்லைக்களை வாங்கிச் செல்லவும் வரும் சிறுவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகிவிட்டது.

அப்போது அவர் காட்டிய உற்சாகத்தில் ஈடுபட்ட பல சிறுவர்கள் தொடர்ந்து ஸ்டாம்பு சேகரிக்கும் பொழுது போக்கைச் செய்து வந்தார்கள். காந்திஜியுடன் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொண்டு நட்பை நீடித்ததுடன், சுமார் இருபது வருஷங்களுக்குப் பிறகு ஆமதாபாத்தில் காந்திஜி ஏற்படுத்திய சத்தியாக்கிரஹ ஆசிரமத்தில் சேர்ந்து தொண்டு செய்யவும் முன்வந்தார்கள்.

வரவேற்பு

(1897)

மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு, 1896-ஆம் வருஷம் டிசம்பர் மாசம் காந்திஜி 'கூர்லாண்டு' என்ற கப்பலில் தென் ஆப்பிரிகாவுக்குப் பிரயாணமானார். அதற்கு முன்னேயே அவருடைய 'பச்சை அறிக்கை' அங்கு ஒரு பெரும் புயலைக் கிளப்பிவிட்டதால், அவர் வரும் செய்தியைக் கேட்ட சில வெள்ளையர்கள், தென் ஆப்பிரிகாவில் அவர் கால் வைக்காமல் திரும்பிவிட வேண்டும் என்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். அதற்கேற்றாற் போல, காந்திஜி பம்பாயிலிருந்து கிளம்பும்போது, அங்கு 'பிளேக்' நோய் இருந்ததால், பிரயாணிகளுக்குத் தொத்திக்கொண்டிருக்கக் கூடும் என்ற பயத்தால், சுகாதார அதிகாரிகள், மறு உத்தரவு போடும் வரையில் கப்பலிலிருந்து பிரயாணிகள் இறங்கக்கூடாது என்று சொல்லி விடவே, டர்பான் துறைமுகத்தை அடைந்தும் சில தினங்கள் வரையில் காந்திஜியும் மற்றவர்களும் கப்பலில் தங்கவேண்டியதாயிற்று. பிளேக் கிருமிகள் உடம்பில் தொத்திக்கொண்டு பூர்ண வளர்ச்சி யடைந்து நோயை வெளிப்படுத்த இருபத்துமூன்று நாட்களாகும். பம்பாயிலிருந்து டர்பானுக்குப் பதினெட்டு நாட் பிரயாணம். ஆகவே ஐந்து தினங்கள் வரையில் பிரயாணிகளைக் கப்பலில் வைத்திருக்க வேண்டும் என்று சுகாதார உத்தியோகஸ்தர்கள் தீர்மானித்தார்கள். இந்த முடிவு கிளர்ச்சிக்காரர்களுக்குச் சாதகமாயிற்று. பொது ஜன அபிப்பிராயத்தை ஒன்று திரட்ட அவர்கள், ஊர்வலங்களை எடுத்துச் சென்றார்கள். "காந்தியை இறங்கவிடாதே, கப்பலைத் திருப்பிவிடு" என்று துறைமுகத்தில் நுழைந்து கூக்குரலிட்டு, கப்பலில் இருப்பவர்களுக்குத் தங்களுடைய துவேஷத்தையும் ஆத்திரத்தையும் அறிவுறுத்த ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

கிறிஸ்துமஸ் நாளன்று கப்பித்தான் கப்பலிலுள்ள மேல் வகுப்புப் பிரயாணிகளுக்கு ஒரு விருந்து நடத்தினான். காந்திஜியும் அதில் கலந்துகொண்டார். சாப்பாட்டுக்குப் பிறகு எல்லோரும் சல்லாபித்துக்கொண்டிருக்கையில் காந்திஜியிடம் கப்பித்தான் பின் வருமாறு சொன்னான்: "மிஸ்டர் காந்தி, பிரயாணத்தின் போது உங்களுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது.

உங்களுடைய அஹிம்ஸா வாதம் சிறந்தது தான். ஆனால் அநுபவத்தில் அது முடியாத காரியம். இங்குள்ள வெள்ளையர்களைத் தூஷித்துப் பிரசாரம் செய்ததாகவும், இந்தியர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கக் கப்பல் நிரம்ப இந்தியர்களை அழைத்துக்கொண்டு நீங்கள் வந்திருப்பதாகவும் ஊருக்குள் இருப்பவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். உங்களையும் உடனிருக்கும் இந்தியர்களையும் கப்பலுடன் திருப்பிவிட வேண்டும் என்று கிளர்ச்சி நடக்கிறது. ஒரு வேளை உங்களுடைய உயிருக்கே ஆபத்து நேரலாம். நீங்கள் சிறிது எச்சரிக்கையாக இருப்பது நலம்.''

காந்திஜி சிரித்துக்கொண்டே சொன்னார்: "ஆண்டவன் அருளால் அஹிம்ஸையும் சத்தியமும் வெல்லும். அறியாமையினால் அவர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். இந்தக் கப்பலில் உள்ள இந்தியர்களில் என் குடும்பத்தாரையும், ஒன்றிரண்டு சுற்றத்தாரையும் தவிர வேறு எவரையுமே எனக்குத் தெரியாதே. நான் துவேஷப் பிரசாரம் செய்யவில்லை. துவேஷம் மறைய வேண்டும் என்றே அறிக்கை விட்டேன். எதிரிகளை மன்னிக்கும் ஆற்றலும் தைரியமும் ஆண்டவன் அருளுவான் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.''

மேலும் சில தினங்கள் சென்றன.

குவாரன்டைன் சட்டப்படி பம்பாயிலிருந்து கப்பலில் புறப்பட்டு இருபத்து மூன்று தினங்களாகும் வரையில் கப்பலிலிருந்து பிரயாணிகள் இறங்க முடியாது. இதன் நடுவே சர்க்கார் சட்ட மெம்பரான மிஸ்டர் எஸ்கோம்ப், ஆத்திரமடைந்த ஐரோப்பியர்களைக் கூப்பிட்டுச் சமாதானம் செய்தார். ''இந்தியர்களைத் தடுக்கும் முயற்சியில் இறங்காதீர்கள்; காந்தி செய்த கிளர்ச்சிக்காக அத்தனை பிரயாணிகளையும் திருப்பி அனுப்ப முடியாது. மேலும் பம்பாயில் கப்பலேறும்போது அவர்களுக்கு உங்களுடைய உள்ளக் கொதிப்பை அறியச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இங்கு குடியேற்ற வேண்டும் என்று அவர்களைக் காந்தி அழைத்து வரவும் இல்லை. இந்தியர்கள் இங்கு குடியேறுவதைக் கட்டுப்படுத்த அதிசீக்கிரம் சட்டம் இயற்ற முயற்சி எடுத்துக்கொள்ளுகிறேன். நீங்கள் அராஜகத்தில் மனம் செலுத்தக்கூடாது'' என்று அவர் சொன்னார். அவருக்கு டர்பானிலுள்ள ஐரோப்பி

பங்களிடம் மிகுந்த செல்வாக்கு இருந்ததாலும், சர்க்காரில் பெரிய பதவி வகித்ததாலும் மறுபேச்சின்றிக் கிளர்ச்சியைக் கைவிட்டார்கள். கடைசியில் பிரயாணிகளுக்கும் கரையில் இறங்க அநுமதி கிடைத்தது.

ஆத்திரமடைந்துள்ள ஐரோப்பியர்களால் ஏதாவது இடையூறு ஏற்படலாம் என்றும் ஆகவே சூரிய அஸ்தமனத்துக்குப் பிறகு கப்பலை விட்டு இறங்கி வீடு செல்ல வேண்டும் என்றும் மிஸ்டர் எஸ்கோம்ப் காந்திஜிக்குத் தகவல் அனுப்பினர். மிஸ்டர் எஸ்கோம்ப், சர்க்காரப் பதவி ஏற்பதற்கு முன்பு காந்திஜியின் கட்சிக்காரர்களான தாதா அப்துல்லா கம்பெனியின் ஸீனியர் வக்கீலாக இருந்தார். அவருடைய சிபாரிசினுல்தான் காந்திஜி நேட்டால் நீதிஸ்தலத்தில் தொழில் நடத்தப் பதிவு செய்து கொள்ளவும் முடிந்தது. எஸ்கோம்பின் எச்சரிக்கையைக் காந்திஜி ஏற்றுக்கொண்டார். மற்றப் பிரயாணிகளுடன் தம்முடைய சுற்றத்தாரையும் குடும்பத்தாரையும் ரஸ்டோம்ஜியின் வீட்டுக்கு அனுப்பிவிட்டுத் தாம் மட்டும் கப்பலில் தங்கிவிட்டார்.

மாலை நான்கு மணி சுமாருக்கு மிஸ்டர் லாட்டன் என்பவர் காந்திஜியைப் பார்க்க வந்தார். அவர் காந்திஜியின் நண்பர். அப்துல்லா கம்பெனியின் சட்ட ஆலோசகரும்கூட. காந்திஜி எஸ்கோம்பின் எச்சரிக்கையைப் பற்றி லாட்டனிடம் சொன்னபோது, அவர் கோபம் கொண்டார். "திருடனைப் போல இருட்டில் நீங்கள் போகவேண்டுமா? உங்களுக்குப் பயமில்லாமல் இருந்தால் நான் உங்களுடன் வருகிறேன். இப்போதே கிளம்புங்கள்" என்றுர் அவர். இருவரும் துறைமுகத்தைவிட்டு வெளியேறினுர்கள்.

வீதியில் வந்ததுமே சில சிறுவர்கள் காந்திஜியை அடையாளங் கண்டு, "காந்தி! காந்தி! பிடியுங்கள்! அடியுங்கள்" என்று கத்தினுர்கள். தெருவில் கூட்டம் சேர்ந்துவிட்டது. அப்போதுதான் லாட்டனுக்குத் தம்முடைய அசட்டுத் துணிச்சலைப் பற்றிய விபரீதம் விளங்கிற்று. காந்திஜியைக் கடத்திவிடவேண்டும் என்ற ஆசையில் அவர் ஒரு ரிக்ஷாவைக் கூப்பிட்டார். இதற்குள் கூட்டத்திலிருந்தவர்களில் ஒருவன் லாட்டனைச் செந்தூக்காகத் தூக்கி அப்புறப் படுத்தினுன். காந்திஜிமட்டும் நடுத்தெருவில் தனித்து நிற்க வேண்டியதாயிற்று. சூழ்ந்து நின்றவர்கள் அவரைக் கல்லும்

தடியுங்கொண்டு தாக்கினர். தலைப்பாகையையும் சட்டையையும் கிழித்தெறிந்தனர். இதன் நடுவே தற்செயலாக, அங்கு வந்த போலீஸ் சூபரின்டெண்டின் மனைவியார், காந்திஜியை அடையாளங் கண்டுகொண்டு அவரைக் காப்பாற்ற ஓடோடியும் வந்தார். காந்திஜியின் பக்கலில் அவர் வந்து நின்றதும் காலிகள் முணுமுணுத்துக்கொண்டு ஒதுங்கினார்கள். அந்த அம்மையாருக்கு அடி விழாமல் காந்திஜியை மட்டும் தாக்குவது முடியாமல் போயிற்று. பிறகு போலீஸ் உதவியுடன் காந்திஜி நேராகத் தமக்கு ஏற்படுத்திய ஜாகைக்குச் செல்லாமல் ரஸ்டோம்ஜியின் வீடுபோய்ச் சேர்ந்தார். அங்குதான் அவருடைய குடும்பத்தாரும் இருந்தார்கள்.

ஆனால் அதிசீக்கிரம் வீட்டைச் சூழ்ந்து ஒரு கூட்டம் சேர்ந்துவிட்டது. "காந்தியை வெளியேற்று" என்று கோஷமிட்டுக்கொண்டிருந்தார்கள். நிமிஷத்துக்கு நிமிஷம் கூட்டம் அதிகமாயிற்று; அவர்களுடைய கோபமும் பெருகிற்று. வீட்டைச் சுற்றிப் பாராப் போட்டாலும் கூட, ஆத்திரங்கொண்ட மக்கள் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்து விடுவார்களோ என்ற பயம் ஏற்பட்டு விட்டது. இதை அறிந்த அலெக்ஸாண்டர் என்ற போலீஸ் அதிகாரி காந்திஜிக்குப் பின்வருமாறு செய்தி அனுப்பினர்: "உங்களுடைய நண்பரின் உயிரையும் சொத்து சுதந்தரங்களையும் காப்பாற்ற வேண்டுமானல் நீங்கள் உடனே வெளியேற வேண்டும். மாறு வேடத்தில் வெளியேறினால்தான் நீங்கள் உயிர் தப்ப முடியும். ஜனங்களின் ஆத்திரம் கட்டுமீறியிருக்கிறது."

அலெக்ஸாண்டரின் எச்சரிக்கையைக் காந்திஜி ஏற்றுக்கொண்டார். ஒரு போலீஸ் ஜவானைப் போல வேஷந் தரித்துக்கொண்டு அவர் வெளியேறிவிட்டார். அவர் பத்திரமாகப் போலீஸ் ஸ்டேஷனை அடைந்துவிட்டார் என்ற செய்தி கிடைக்கும் வரையில் அலெக்ஸாண்டர் ஜனங்களை அடக்கி வைத்துக்கொண்டிருந்தார். அவர்களுடைய கவனத்தைத் திருப்ப அவர் ஏதேதோ பாட்டுப் பாடிக்கொண்டிருந்தார்.

> **தூக்கிலிடு அந்தக் காந்தியை—தலை**
> **தொங்கவிடு அந்த வீணனை.**
> **வேண்டாம் நமக்கிந்தக் கறுப்பன்**

வேண தொல்லே யளித்தான்
ஆப்பிள் கிளையில் சுருக்கிட்டு
ஆட்டி விடு அவன் சடலத்தை—

என்று அவர் பாடிஞர். ஜனங்கள் ஆரவாரித்தார்கள்; கைகொட்டிஞர்கள். காந்திஜி போலீஸ் ஸ்டேஷனே அடைந்து விட்டார் என்ற செய்தி கிடைத்ததும் அவர் சொன்னுர்: "உள்ளே காந்தி இல்லே போலிருக்கிறது. அவர் எப்படியோ தப்பிவிட்டார். நாம் கலேந்துபோகத்தான் வேண்டும்."

ஜனங்கள் நம்பவில்லே. பிடிவாதமாக நின்று கொண்டிருந்தார்கள்.

"சரி, என்னே நம்பாவிட்டால் உங்களில் யாராவது உள்ளே சென்று பாருங்கள். காந்தி இருந்தால் இழுத்து வாருங்கள். ஆனுல் வீட்டிலிருப்பவர்களே இம்சிக்கவோ அவமதிக்கவோ கூடாது" என்ருர் அவர்.

கூட்டத்திலிருந்து இருவர் உள்ளே சென்று தேடிஞர்கள். காந்தியைக் காணுமல் ஏமாற்றத்துடன் திரும்பிஞர்கள். அவ்வரைச் சபித்துக்கொண்டே கூட்டம் கலேந்தது. இந்தச் சம்பவம் 1897-ஆம் ஹு ஜனவரிமீ 13வ நடந்தது.

இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்ற காலனி மந்திரி ஸ்ரீ சேம்பர்லின், விசாரணே நடத்தி, காந்திஜியைத் தாக்கியவர்களேக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும் என்று நேட்டால் சர்க்காருக்குத் தந்தி யடித்தார். சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டதும் கிளர்ச்சிக்காரர்கள் அடங்கிவிட்டார்கள். ஆனுல் விசாரணேயில் கலந்து கொள்ளவோ, தம்மைத் தாக்கியவர்களே அடையாளங் கண்டு பிடித்துச் சர்க்காருக்கு உதவி செய்யவோ காந்திஜி விரும்பவில்லே.

"நான் ஒரு சிலரை அடையாளங் கண்டுபிடிக்க முடியும். ஆனுல் என் மீது வெறுப்புற்றுத் தாக்க வந்த அத்தனே பேரையும் எப்படிக் கண்டு பிடிப்பேன்? மேலும் இது என் சொந்த விஷயமல்ல. இது தேசீயப் பிரச்னே. இந்தியர்களுக்கும் வெள்ளேயர்களுக்கும் எழுந்த சண்டை. எவர் மீதும் வழக்குத் தொடர நான் விரும்பவில்லே" என்று அவர் மறுத்துவிட்டார்.

சர்க்கார் விசாரணேயைக் கைவிட வேண்டியதாயிற்று. சேம்பர்லினுக்கு நன்றி கூறி, தமது அபிப்பிராயத்தையும் நேட்டால் சர்க்கார் மூலம் காந்திஜி அனுப்பினர்.

தீண்டாமை - ஒரு சோதனை

(1898)

காந்திஜி 1898-ஆம் ஆண்டு டர்பானில் வக்கீல் தொழில் நடத்திக் கொண்டிருந்தார். காரியாலயச் சிப்பந்திகளும் அவருடன் வீட்டில் வசித்து வந்தார்கள். சாதி சமயப் பாகுபாடின்றிச் சுற்றத்தாரிடம் பழகுவது போலவே சிப்பந்திகளிடமும் காந்திஜி பழகி வந்தார். கஸ்தூரிபா அவர்களுக்கு அன்னமிட்டு உபசரித்தார்.

ஒரு சமயம் கிறிஸ்துவ குமாஸ்தா ஒருவர் அவர்களுடன் தங்க நேரிட்டது. அந்த நாட்டில் படுக்கை அறைகளில் மூத்திரச் சட்டிகள் இருப்பது வழக்கம். காலையில் தோட்டி அந்தச் சட்டிகளை எடுத்துச் சுத்தம் செய்வான். காந்திஜியின் வீட்டில் தோட்டி கிடையாது. தம் தம் அறையில் இருக்கும் சட்டியை ஒவ்வொருவரும் சுத்தம் செய்து கொள்ள வேண்டும் என்று அவர் கட்டளையிட்டார். புதிதாக வந்த குமாஸ்தாவுக்கு இந்த வழக்கம் தெரியாது. தோட்டி வரவில்லையே என்று அந்தக் குமாஸ்தா சொன்னபோது, அந்த வீட்டு வழக்கத்தைக் காந்திஜி சொன்னார். உடனே கஸ்தூரிபாவை அழைத்து அறையைச் சுத்தம் செய்து விடச் சொன்னார்.

கஸ்தூரிபாவுக்குத் துக்கம் தாளவில்லை. அசுத்தமான காரியம் என்று அவர் ஒதுங்கவில்லை. கிறிஸ்துவர்களைத் தீண்டாதவர்களுக்குச் சமமாக மதிக்கும் நாட்டில் பிறந்த பெண்மணி அவர். தீண்டாதவர் தொட்ட பாண்டத்தைத் தொட வேண்டுமே என்றுதான் தியங்கினார். அவருடைய கூச்சத்தைக் கண்டு காந்திஜி வெகுண்டார். தாம் இட்ட கட்டளையை மனைவி மறுப்பதா என்ற ஆத்திரம்தான் வந்தது. நீர்மல்க, வருத்தத்துடன் நிற்கும் மனைவியைப் பார்த்து, "என்ன நீலித்தனம்? இதை எல்லாம் இந்த வீட்டில் சகித்துக்கொண்டிருக்க என்னால் முடியாது" என்று கத்தினார்.

கஸ்தூரிபா பொறுமை யிழந்து விட்டார். "உங்களுடைய வீட்டில் நீங்களே இருங்கள். நான் போகிறேன்" என்றார் படபடப்புடன்.

காந்திஜியின் கோபம் கரை புரண்டுவிட்டது. கணவனை எதிர்த்துப் பேசுவது மனைவிக்கு அழகல்ல என்று அவர் எண்ணினார். கஸ்தூரிபாவின் கைகளைப் பிடித்து வாசற் புறமாக இழுத்துச் சென்றார். கதவைத் திறந்து விட்டு, ''போ வெளியே'' என்று அதட்டினார்.

கஸ்தூரிபாவின் கண்களிலிருந்து நீர் பெருகிற்று. "உங்களுக்கு வெட்கமாக இல்லையா? எனக்கு இந்த நாட்டில் போக்கிடமேது? உங்களை நம்பி ஆயிரக்கணக்கான மைல்கள் தாண்டி வந்து விட்டால் இப்படியா செய்யவேண்டும்? இங்கு எனக்குச் சுற்றத்தார் எவர் இருக்கிறார்கள்? அடித்தாலும் உதைத்தாலும் உங்களை விட்டால் எனக்கு வேறு யார் துணை? உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. வாசலில் நின்று நாம் சண்டையிட்டால் ஊர் சிரித்துப் போகும். தயவு செய்து கதவைச் சாத்துங்கள்'' என்றார் கெஞ்சும் குரலில்.

காந்திஜி தன்னிலையடைந்தார். தம்முடைய செய்கைக்கு வருந்தி மனைவியை அழைத்துக்கொண்டு உள்ளே வந்தார்.

சமயம் வந்தால்.......
(1899)

போயர் யுத்தத்தில் காயமடைந்த வீரர்களுக்குப் பிரதம சிகிச்சை செய்யக் காந்திஜி ஒரு தொண்டர் படை நிறுவினார். ஆனால் அவருடைய உதவியை ஏற்றுக்கொள்ள ராணுவத்தினர் தயங்கினார்கள். நெருக்கடி ஏற்பட்டபோது காந்திஜியை அழைத்தார்கள். யுத்த முனையில் காயம்பட்ட வீரர்களைப் பல மைல்களுக்கு அப்பாலுள்ள முகாம் ஆஸ்பத்திரிகளுக்குத் தூக்கிச் செல்லும் வேலை காந்திஜியின் கோஷ்டியினருக்குக் கிடைத்தது. ஒரே மூச்சில், சிலமணி நேரம் ஓட்டமும் நடையுமாகச் சென்று இருபது முப்பது மைல்களுக்கு அப்பாலுள்ள முகாம்களுக்கு 'டோலி'களில் காயமடைந்தவர்களை அவர்கள் தூக்கிச் செல்வார்கள். இந்தியர்களுடைய சாகஸத்தையும் தளராத ஊக்கத்தையும் வெளிப்படையாகப் பாராட்ட வெள்ளையருக்கு மனமில்லை. யுத்தம் முடிவதற்கு முன்னேயே இந்தியத் தொண்டர் படையைக் கலைத்துவிட்டார்கள்.

படை கலைக்கப்பட்ட புதிதில் காந்திஜி லேடிஸ்மித் என்ற ஊரில் சில தினங்கள் தங்க நேரிட்டது. அந்த ஊர் போயர்களின் இலக்குக்கு ஆளாகியிருந்ததால், வெள்ளையன், கறுப்பன் என்ற பேதமின்றி நகர வாசிகள் ஒவ்வொருவருக்கும் சில பணிகளைக் கொடுத்தார்கள் ராணுவ அதிகாரிகள். பிரபுசிங் என்ற கூலிக்குத் தான் மிகவும் அபாயகரமான வேலையை ஒதுக்கினார்கள். அவனும் அதை உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டான்.

லேடிஸ்மித் நகரின் அருகிலுள்ள மலைமீது பீரங்கியை நிறுத்தி, ஊரை நோக்கிக் குண்டுமாரி பொழிய ஆரம்பித்தார்கள் போயர்கள். குண்டு பட்டுப் பல கட்டடங்கள் சரிந்தன; உயிர்ச்சேதம் ஏற்பட்டது. குண்டு வெடித்த பிறகு, மீண்டும் மருந்து கெட்டித்துச் சுட இரண்டொரு நிமிஷங்கள் பிடிக்கும். மேலும் பீரங்கி வாயிலிருந்து கிளம்பும் குண்டு, லேடிஸ்மித்தை நெருங்க ஒன்றிரண்டு நிமிஷங்கள் பிடிக்கக்கூடிய தூரத்திலிருந்ததால், பீரங்கி வெடித்ததும் எச்சரிக்கை கிடைத்தால் உயிர்ச்சேதத்திலிருந்து ஒரு சிலரையாவது காப்பாற்ற முடியும் என்று ராணுவத்தினர்கள் எண்ணினார்கள். ஆகவே ஊர்க் கோடியிலுள்ள ஒரு மரத்தில் பிரபுசிங் உட்கார்ந்து, வெகு தொலைவிலுள்ள எதிரிகளின் நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டும் என்றும், பீரங்கி வெடிக்கும்போது கிளம்பும் வெளிச்சத்தையும் புகையையும் பார்த்ததும் கையிலிருக்கும் மணியை ஆட்ட வேண்டும் என்றும் திட்டமிட்டார்கள். மணியோசை கேட்டதும், நின்ற இடத்திலேயே ஒவ்வொருவரும் படுத்துவிட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்கள். இதனால் பலருடைய உயிர் காப்பாற்றப்பட்டது என்றாலும், பீரங்கியின் இலக்குக்கு எப்போதும் இரையாகக்கூடிய ஆபத்தான பிரதேசத்தில் பிரபுசிங் கண்கொட்டாமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டியிருந்தது.

பிரபுசிங் மிகவும் சாமர்த்தியத்துடனும் சாகஸத்துடனும் தன் கடமையைச் செய்தான். ஒரு குண்டைக்கூட விடாமல் அவன் மணி அடித்து மக்களுக்கு எச்சரிக்கை செய்தான். அவனுடைய தீரத்தையும் கடமையுணர்ச்சியையும் ராணுவ அதிகாரிகள் புகழ்ந்தார்கள். நேட்டாலிலுள்ள மக்களும் இந்திய சர்க்காரும் பாராட்டினார்கள். அந்தச் சமயம் இந்தியாவின் வைசிராயாக இருந்த கர்ஸான் பிரபு ஒரு காஷ்மீர்ச் சால்வையும் சந்நதும் அனுப்பிப்

பிரபுசிங்கைக் கௌரவித்தார். பரிசும் பாராட்டும், பல பேரறியச் செய்ய வேண்டும் என்று விரும்பிய அவர், ஒரு விழா நடத்திப் பிரபுசிங்குக்குப் பரிசு தர வேண்டும் என்று நேட்டால் சர்க்காரைக் கேட்டுக் கொண்டார். டர்பான் நகர மேயர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு விழா நடத்திப் பிரபுசிங்கைக் கௌரவித்தார்.

இந்தச் சம்பவத்தைப்பற்றிக் காந்திஜி குறிப்பிடும்போது பின் வருமாறு சொல்லியிருக்கிறார்: "இந்தச் சம்பவத்திலிருந்து இரு படிப்பினைகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். பிரபுசிங் ஒரு ஒப்பந்தக்கூலியாகத் தென் ஆப்பிரிகாவுக்கு வந்தவன். ஒரு மனிதனுடைய அந்தஸ்தையோ, கல்வி அறிவையோ பெரிதாகக் கொண்டு அவனை நாம் மதிப்பிடக்கூடாது; தாழ்ந்தவன், கல்வி கேள்வியற்ற முட்டாள், கூலிக்காரன் என்று துவேஷம் கொண்டு ஒதுக்கி விடவும் கூடாது. இரண்டாவது, சங்கோசமுள்ளவனாகவும் கோழையாகவும் இருந்தாலுங்கூடச் சந்தர்ப்பம் வாய்க்கும்போது மனிதன் தீரனாகவும் அற்புதச் செயலாற்றும் வீரனாகவும் மாறிவிடக்கூடும்."

படிப்பினை
(1899)

சைவ உணவுப் பிரசாரத்திலும் இயற்கை வைத்தியத்திலும் காந்திஜிக்கு அபார மோகம். ஜோகானஸ்பர்க்கில் பிரம்மஞான சபையைச் சேர்ந்த ஒரு மாது சைவ உணவுச் சிற்றுண்டிச் சாலையை ஏற்படுத்தியிருந்தார். அதைத் திறம்பட நடத்தவும் விஸ்தரிக்கவும் அவர் காந்திஜியின் உதவியை நாடினார். பிரம்ம ஞான சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பொதுவாகவே சைவ உணவு சாப்பிடுவார்கள். அவர்களுக்கு அழகிலும் சுத்தத்திலும் ஆர்வம் அதிகம். ஒவ்வொன்றிலும் கலை மெருகு காணத் துடிப்பவர்கள். அந்த அம்மையார் விசாலமானதொரு இடத்தை வாடகைக்குப் பிடித்துக்கொண்டு, மிகவும் அழகாக அலங்கரித்தார். உண்ணும் கலம் முதல் உட்காரும் ஆசனம் வரையில் ஒவ்வொன்றும் கவர்ச்சிகரமானதாக இருக்கும்படி அமைத்தார். அவருடைய பொருளாதார நிலைமையைப் பற்றியோ, வியாபார சாமர்த்தியத்

தைப் பற்றியோ காந்திஜிக்கு ஏதும் தெரியாது. அவர் ஒரு நல்ல காரியம் செய்ய முற்பட்டிருக்கிறார் என்று தெரிந்ததும் பத்ரி என்னும் கட்சிக்காரரிடமிருந்து ஆயிரம் பவுன்கள் கடன் வாங்கி அந்த அம்மையாருக்குக் கொடுத்து விட்டார். இன்னொருக்குக் கடன் கொடுக்கவே அந்தப் பணத்தை வாங்குவதாகக் காந்திஜி சொன்னதும், பத்ரி சொன்னார், "மிஸ்டர் காந்தி, யாருக்குக் கொடுத்தால் என்ன? நல்ல மனிதர்களுடைய சகவாசம் உள்ள வர்கள் நீங்கள். ஆகவே உங்களைத் தெரிந்திருப்பதே எனக்குப் போதுமானது" என்று.

இரண்டு மூன்று மாதங்களுக்குள் சைவ உணவுச் சாலை, நஷ்டமேற்பட்டு, மூடவேண்டிய நிலைக்கு வந்துவிட்டது. பத்ரியின் பணத்துக்கு மோசம் வந்துவிட்டதே என்று காந்திஜி மனங் கலங்கினார். பத்ரிக்கு நஷ்டமேற்படக் கூடாது என்று நிச்சயித்து, தாமே அந்தப் பணத்துக்கு ஈடு செய்தார்.

இதைப் பற்றி ஒரு நண்பரிடம் காந்திஜி கூறியபோது அந்த நண்பர் சொன்னார் : " மிஸ்டர் காந்தி, பிறர் கஷ்டமடைவதைக் காண உங்களுடைய மனம் சகியாது. உங்களுடைய இளகிய மனசைக் கண்டு பிறர் ஏமாற்றிவிடக்கூடும். ஆனால் நீங்கள் பாத்திர மறிந்து உதவி செய்ய வேண்டும். சீர்திருத்த ஆர்வத்தில் நீங்கள் பணத்தை அள்ளி இறைத்தால் அதி சீக்கிரத்தில் ஓட்டாண்டியாகி விடுவீர்கள். நீங்கள் பொதுஜன ஊழியர். ஆகவே உங்களுடைய உழைப்புக்கும் சொத்துக்கும் நீங்கள் ஒரு தர்மகர்த்தா என்று எண்ணி வாழ வேண்டும். உங்களுடைய நேரத்தையோ, பணத்தையோ சாதாரண மக்களைப் போல விரயம் செய்தல் கூடாது. அப்படிச் செய்தால் பொதுஜன சேவைதானே பாதிக்கும்? நீங்கள் கஷ்ட நஷ்டமடைந்து மனம் சோர்வுற்றாலும் பொதுஜன வேலை பாதிக்கப்படுமல்லவா?" என்று கேட்டார்.

நண்பருடைய வாதத்தைக் காந்திஜி ஏற்றுக் கொண்டார். அன்று முதல் அவர் கடன் கொடுக்கும் வழக்கத்தை ஒழித்து விட்டார்.

காணிக்கைப் பொருள்

(1899)

போயர் யுத்தம் முடிந்ததும் காந்திஜி இந்தியாவுக்குத் திரும்ப விரும்பினார். நேடாலிலுள்ள இந்தியர்கள் மிகவும் விரிவான முறையில் பிரிவு உபசாரம் நடத்தி ஏராளமாகப் பொன்னும் பொருளும் அன்புக் காணிக்கையாகக் கொடுத்தார்கள். மக்களுடைய அன்பைக் கண்டு மனம் நெகிழ்ந்துபோன காந்திஜி, அவர்கள் அளித்த பொருள்களைப் பொதுச் சொத்தாகவே எண்ணினார். பொது வேலைகளுக்குப் பணம் திரட்டும் சிரமத்தை ஏற்கனவே தெரிந்துகொண்டிருந்ததால், தென் ஆப்பிரிகாவில் வாழும் இந்தியர்களின் நலனுக்காக அந்தப் பணத்தைச் செலவிட நிச்சயித்து அதற்காக ஒரு தர்ம ஸ்தாபனம் ஏற்படுத்தவும் தீர்மானித்தார்.

அவருடைய தீர்மானத்தை ஆரம்பத்தில் ஒரு சில நண்பர்கள் ஆதரிக்கவில்லை. கஸ்தூரிபாவும் ஏற்றுக்கொள்ளவில்லை. நண்பர்கள் அளித்த பொருள்களில் கஸ்தூரிபாவுக்காகச் சில நகைகளும் இருந்தன. தமக்கெனக் கொடுக்கப்பட்ட பொருள்களைத் தாமே வைத்துக்கொள்ள கஸ்தூரிபா விரும்பினார். காந்திஜி கஸ்தூரிபாவுடன் வாதாடி அவருடைய பிடிவாதத்தை மாற்ற விரும்பினார். அந்த நகைகளில் ஐம்பது பவுன் பெறுமானமுள்ள ஒரு சங்கிலி கஸ்தூரிபாவுக்குப் பிடித்தமாக இருந்தது. "இந்தச் சங்கிலியை மட்டுமாவது வைத்துக்கொள்கிறேன் எனக்கு அளித்த பரிசு தானே?" என்றார் கஸ்தூரிபா.

காந்திஜியோ எதையுமே வைத்துக்கொள்ள விரும்பவில்லை. தமது பிள்ளைகளைக் கலந்து ஆலோசித்தார். "பிறருடைய உதவியை நாம் எதிர்பார்க்கவில்லை. தனிப்பட்ட முறையில் நான் தொழில் துறையில் மற்றவர்களுக்கு உதவியோ ஆலோசனையோ கொடுக்கும்போது தனியாக ஊதியம் கிடைத்துவிடுகிறது. இந்திய சமூகத்துக்கு நான் சேவை செய்வதைப் பாராட்டித்தான் இந்தப் பொன்னும் பொருளும் கொடுத்திருக்கிறார்கள். என் மீது அவர்களுக்குள்ள நம்பிக்கையைத்தான் இந்தச் செயல் எடுத்துக் காட்டுகிறது. சமூகத்திலிருந்து பெற்றதைச் சமூக நலனுக்காகச்

செலவிடுவதே நியாயம் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார் காந்திஜி.

காந்திஜியின் வாதத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். "உங்களுக்குக் கிடைத்த மரியாதை. இதை எப்படிச் செலவிட வேண்டும் என்று தீர்மானிப்பதும் உங்களுடைய பொறுப்பு. குடும்பத்தில் உள்ளவர்களுக்கு நகைகள் வேண்டுமானால் வாங்கிக் கொள்ளலாம்" என்றார்கள் அவர்கள்.

காந்திஜிக்குச் சந்தோஷம் தாளவில்லை. "நீங்களே கஸ்தூரிபாவுடன் பேசி அவளைச் சமாதானம் செய்யுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். பிள்ளைகளுடைய வாதத்தை ஏற்றுக்கொள்ளவும் கஸ்தூரிபா விரும்பவில்லை. அவர் ஆத்திரத்துடன் காந்திஜியிடம் ஓடிவந்தார். "போதும், போதும், உங்களுடைய யோசனையும் சிபாரிசும். வீட்டில்கூட நல்ல நகைகள் கிடையா. எப்படியோ நான் காலத்தைத் தள்ளிவிட்டேன். நாளைக்கு வீட்டில் மருமகள் என்று ஒரு பெண் வந்தால் எடுத்துப் பூண ஒரு பொன் திருகாணி கூட வேண்டாமா ? நீங்கள் எதைச் சொன்னாலும் குழந்தைகள் தலையாட்டுவார்கள். அவர்களுக்கு உலக அநுபவம் ஏது? இது எனக்காகக் கொடுத்தது. ஆகவே என்னுடைய உடைமை. இதைக் கொடுத்துவிடுமாறு கேட்க உங்களுக்கு அதிகாரம் இல்லை" என்றார் கோபத்துடன்.

காந்திஜியும் பொறுமையிழந்துவிட்டார். "உனக்காகக் கொடுத்தார்களா? உன்னுடைய சேவையைப் பாராட்டிக் கொடுத்தார்களா அல்லது என்னுடைய உழைப்புக்காகத் தந்தார்களா?" என்று கேட்டார்.

"சேவை, சேவை என்கிறீர்களே! நீங்கள் பொதுஜன சேவை செய்கிறீர்கள், உண்மைதான். உங்களுடைய மனம் கோணாமலும், ஆரோக்கியம் கெடாமலும் பார்த்துக்கொண்டு நான் சதா உழைக்கிறேனே, அது பொதுஜன சேவையில்லையா? நீங்கள் வெளியார்களையும் அழைத்து வந்து உபசரிக்கச் சொல்லி என்னை வற்புறுத்தும்போது உங்களுடைய மனம் புண்படக் கூடாது என்று உழைக்கவில்லையா ? என் மனத்தில் எழும் குமுறல்களை அடக்கிக் கொண்டு, தேகக் கஷ்டத்தையும் பாராமல் நான் உழைப்பது சமூக சேவை இல்லையா ?" என்று கேட்டார்.

அவருடைய வாதத்தில் நியாயம் இருக்கிறது என்று காந்திஜி ஏற்றுக்கொண்டார். ஆனாலும் கஸ்தூரிபாவுக்கு இணங்கி, அவரிடம் சங்கிலியைக் கொடுத்துவிடவில்லை. பார்ஸி ரஸ்டோம்ஜியைத் தலைவராகக் கொண்ட ஒரு தர்ம ஸ்தாபனத்தை ஏற்படுத்தி நகைகளையும் பொருளையும் ஒப்பித்தார். பிற்காலத்தில் பொது வேலைகளுக்குப் பணம் வேண்டும்போது காந்திஜி அந்த நிதியிலிருந்து பலமுறை பணம் வாங்கிக் கொண்டிருக்கிறார்.

பல வருஷங்களுக்குப் பிறகு கஸ்தூரிபாவும் நேரடியாகப் பொதுச் சேவையில் ஈடுபட்ட பிறகு காந்திஜி செய்தது சரி என்று அவர் ஏற்றுக்கொண்டார். இந்தச் சம்பவம் பற்றிக் காந்திஜி கூறியுள்ள வார்த்தைகளை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்: "இந்தச் சம்பவத்தினால் எனக்கு ஒரு படிப்பினை கிடைத்தது. பொதுஜன ஊழியம் செய்கிறவர்கள் விலை உயர்ந்த பொருள்களைப் பரிசுகளாக ஏற்றுக்கொள்ளவே கூடாது. அந்த மாதிரிப் பொருள்களைக் கொடுப்பதே தவறு என்றுகூடச் சொல்வேன். அன்புக் காணிக்கை பாராட்டு என்றாலும், அவை ஊழியர்களின் மனத்தில் சலனத்தையும் சபலத்தையும் உண்டாக்கிச் சில சமயங்களில் லட்சியத்திலிருந்து வழுவிவிடக் கூடக் காரணமாகி விடுகின்றன."

தோட்டி காந்தி
(1901)

கல்கத்தாவில் 1901-ஆம் வருஷம் ஸ்ரீ தின்ஷா வாச்சாவின் தலைமையில் காங்கிரஸ் மகாசபை கூடியது. நாட்டிலுள்ள பிரபல தலைவர்களிடமும் காங்கிரஸ் மகாசபையிலும் தென் ஆப்பிரிகாவில் வாழும் இந்தியர்களுடைய துயரங்களை எடுத்துச்சொல்லக் காந்திஜி முயன்றார். கல்கத்தாவுக்கு, பம்பாயிலிருந்து 'ஸ்பெஷல் சலூ'னில் சர் பிரோஸ் ஷா மேத்தா பிரயாணமானார். அந்த வண்டியில் காந்திஜியும் வந்தால், பிரயாண காலத்தில் மேத்தாவுடனும் மற்றவர்களுடனும் சாவகாசமாகப் பேச முடியும் என்று காந்திஜிக்கு அறிவிக்கப்பட்டது. காந்திஜி குறிப்பிட்ட காலத்தில் அவர்களைச் சந்தித்தார். ஆனால் தென் ஆப்பிரிகா இந்தியர்களைப் பற்றிய தீர்மானத்தைக் காங்கிரஸ் மகாசபையில் கொண்டு வருவதை எவருமே ஆதரிக்கவில்லை.

தலைவர்களுடன் பழகும் சந்தர்ப்பமேற்பட்ட காந்திஜிக்கு, கல்கத்தாவில் தொண்டர்களுடன் பழகவும் வாய்ப்புக் கிடைத்தது. காங்கிரஸ் மகாசபைக்கு வந்திருந்த பிரதிநிதிகளை ரிப்பன் கல்லூரியில் இறக்கியிருந்தார்கள். அந்தக் காலத்தில் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் திருவிழாவாகத்தான் இருந்தது. வருஷத்தில் மூன்று நான்கு தினங்கள்கூடி, வாசாமகோசரமாகப் பேசிவிட்டு, வருஷம் முழுவதும் தூங்குவார்கள். தலைவர்களுடைய பேச்சுப் பிரமாதமாக இருக்கும். அவர்களுக்கு ராஜோபசாரம் நடக்கும். ஆனால் பிரதிநிதிகள் இருக்குமிடமோ சத்திரம் போலக் காணப்படும். தொண்டர்களுக்குப் போதிய பயிற்சியில்லாததால் அவர்களுக்குள் கட்டுப்பாடோ, ஐக்கிய பாவமோ காண்பது அரிது. காந்திஜி சில தொண்டர்களுடன் சிநேகம் பிடித்துக் கொண்டார். அவர்களுக்குச் சேவை ஆர்வமும், விசுவாசமும் இருந்தாலும் தொண்டர்களுடன் நெருங்கிப் பழகும் தலைவர்கள் இல்லாததால் சோபிக்கவில்லை.

பிரதிநிதிகளுடைய உணவு விடுதிகளும் தனித் தனியாக இருந்தன. மகாராஷ்டிரர்களுக்கு ஒன்று, தென்னிந்தியர்களுக்குப் பிராம்மண விடுதி என்றும் பொதுப் போஜனசாலை என்றும் இரண்டு, வங்காளிகளுக்குத் தனிப் போஜனசாலை – என்று இருந்தன. சமையலறைகளும் சுற்றுப் புறமும் அசுத்தமாகக் காணப்பட்டன. கண்ட கண்ட இடங்களில் குப்பையும் கூளமும் கிடந்தன. கக்கூஸோ விவரிக்க முடியாத அளவுக்கு ஆபாஸமாக இருந்தது. தொடர்ந்து சில தினங்கள் அங்கு மக்கள் தங்கினால் காலராப் பரவி உயிர்ச் சேதம் ஏற்படக்கூடிய நிலைமையே இருந்தது. இவற்றைக் காணக் காந்திஜிக்கு மனம் சகிக்கவில்லை. தொண்டர்களிடம் சுகாதாரத்தைப் பற்றிப் பேசினார். நாம் வசிக்கும் இடத்தை நாமே சுத்தம் செய்து கொள்வதில் அகௌரவம் இல்லை என்று சொன்னார். அவருடைய வாதமே தொண்டர்களுக்குப் புதிதாகவும் ஆச்சரியமூட்டுவதாகவும் இருந்தது. வரவேற்புக் கமிட்டியினரிடமும் காந்திஜி இது விஷயமாகப் பேசினார். அவர்கள் காது கொடுத்துக்கூடக் கேட்கவில்லை. சுகாதார வசதிகளைக் கவனிக்க அதிகாரிகளிடம் சொல்லி யிருப்பதால் அவர்கள்தாம் செய்யவேண்டும் என்று ஒரு சிலர் எண்ணினார்கள்.

காந்திஜியோ மௌனமாகப் பார்த்துக் கொண்டிராமல், கௌரவம், அந்தஸ்து என்ற கோட்டைத் தாண்டிக் கீழே வந்தார். ஒரு துடைப்பத்தைக் கையிலெடுத்துக் கொண்டு குப்பை கூளங்களைச் சேகரித்து அப்புறப்படுத்தலானார். தொண்டர்களுக்கு இந்தச் செய்கை வேடிக்கையாகத்தான் இருந்தது. காந்திஜி, சமயம் கிடைக்கும்போது, கக்கூஸையும் சுத்தம் செய்வதில் கவனம் செலுத்தினார். சுகாதாரச் சிப்பந்திகள் கண் விழிப்படைந்து, கடமையைச் செய்ய முன்வந்தார்கள்.

அந்தக் காங்கிரஸில் விசேஷ மாறுதல் ஏற்படவில்லை என்றாலும், காந்தி காட்டிய வழியில் நிர்வாகிகளுடைய மனம் ஈடுபட்டது. பிற்காலத்தில் ஒவ்வொரு காங்கிரஸிலும், அவ்வசதிகளைக் கவனிக்கத் தொண்டர் படை ஏற்பட அது வித்தாக அமைந்துவிட்டது.

குமாஸ்தா காந்தி
(1901)

கல்கத்தாவில் காங்கிரஸ் மகாசபை துவங்குவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னேயே காந்திஜி அங்கு போய்ச் சேர்ந்துவிட்டார். அவருக்கு ஓய்வு இருந்ததால், வரவேற்புக் கமிட்டிக் காரியதரிசியான ஸ்ரீ கோஷால்பாபுவிடம் சென்று, தமக்கு ஏதாவது வேலை கொடுக்கும்படிக் கேட்டார். காந்திஜியின் புகழ் இந்தியாவில் பரவாத காலம் அது. அவரைப் பற்றித் தலைவர்களில் பலருக்கே தெரியாது. காந்திஜியை அலட்சியத்துடன் பார்த்த கோஷால்பாபு, "குமாஸ்தாவாக நீங்கள் வேலை செய்வதானால் ஏதாவது வேலை தருகிறேன்" என்றார்.

"நீங்கள் எந்த வேலை கொடுத்தாலும் செய்கிறேன்" என்றார் காந்திஜி இன்முகத்துடன்.

"சரி, இந்தக் கடிதங்களைப் படித்து ஒழுங்கு படுத்துங்கள். இவற்றைப் படிக்க எனக்கு நேரம் இல்லை. பேட்டிகாண வருகிறவர்களுடன் பேசவே நேரம் போதவில்லையே! இவற்றில் பெரும்பான்மையான கடிதங்களுக்குப் பதில் எழுதும் அவசியம் கூட இராது. நீங்களே படித்து அவசியமிருந்தால், 'கடிதம் கிடைத்தது. விஷயம் கவனிக்கப்படும்' என்று பதில் எழுதுங்கள். முக்கியமாக ஏதாவது இருந்தால் என்னிடம் காட்டினால் போதும்" என்றார்.

காந்திஜி, அதிசீக்கிரத்தில் கடிதங்களைப் படித்து ஒழுங்கு செய்து, பதில் எழுத வேண்டியவைகளுக்கும் எழுதிவிட்டார். கோஷால் பாபுவுக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. இதன் நடுவே அவர் காந்திஜியைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டார். அவருக்கு வருத்தம் தாளவில்லை.

"மிஸ்டர் காந்தி, உங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் இந்த வேலையைக் கொடுத்துவிட்டேனே" என்று வருந்தினர்.

"நான் என்ன பிரமாதமாகச் செய்துவிட்டேன்? காங்கிரஸ் சேவையில் நீங்கள் 'பழமும் தின்று கொட்டையும் போட்டவர்கள்'. உழைத்து உழைத்து உங்களுக்குத் தலை நரைத்துவிட்டது. நான் விவகார ஞானமில்லாத வாலிபன். என்னிடம் இந்த மாதிரி வேலையை ஒப்பித்ததற்கு நான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன்" என்று அடக்கமாகக் காந்திஜி பதில் சொன்னர்.

கோஷால் பாபுவுக்குச் சந்தோஷம் தாளவில்லை. "உங்களைப் பாராட்டுகிறேன். இன்றைய வாலிபர்களுக்குப் பொறுப்புணர்ச்சியோ பொது வேலை செய்யவேண்டும் என்ற ஆர்வமோ இருப்பதில்லை. காங்கிரஸ் ஸ்தாபனம் தோன்றிய நாளிலிருந்து நானும் பார்க்கிறேன். மிஸ்டர் ஹ்யூம் போன்றவர்களுடைய ஆர்வத்தினல்தான் இது உருவாயிற்று. உங்களைப் போன்ற வாலிபர்கள் இதை வளர்க்கவேண்டும்" என்ருர் கோஷால் பாபு.

பிறகு காந்திஜியை, கோஷால் பாபு தம்முடைய ஜாகைக்கே அழைத்துக் கொண்டுவிட்டார். கோஷால் பாபு ஜமீன்தார். அவருடைய சொந்த சௌகரியங்களைக் கவனிக்கவும் குற்றேவல் செய்யவும் பல வேலைக்காரர்கள் காத்து நின்ருர்கள்.

கோஷால் பாபுவுக்கு அங்கியை எடுத்துக் கொடுக்கவும் அணிந்துவிடவும் வேலைக்காரர்களுடைய உதவி அவசியமாக இருந்தது. ஒரு சமயம் காந்திஜியே கோஷால் பாபுவுக்குச் சட்டையை எடுத்துக் கொடுக்க நேரிட்டது. அவரே பொத்தான் களையும் அணிவித்தார். கோஷால் பாபு சிரித்துக் கொண்டே, "மிஸ்டர் காந்தி, நீங்கள் உதவிசெய்ய ஆரம்பித்த பிறகு காங்கிரஸ் மகாசபைக் காரியதரிசிக்குப் பொத்தானை மாட்டிக் கொள்ளக் கூட அவகாசம் கிடைக்கவில்லையே! அவருக்குச் சதா வேலை இருந்து கொண்டிருக்கிறதே" என்ருர் தமாஷாக. காந்திஜி அதைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்.

யாருடைய டபேதார்?

(1901)

காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்குப் பிறகு சுமார் ஒரு மாத காலம் காந்திஜி கல்கத்தாவில் தங்க நேரிட்டது. 'இந்தியா கிளப்' என்ற இடத்தில் அவர் தங்கினார். அது பெரிய மனிதர்கள் உல்லாசமாகப் பொழுது போக்கும் போஜன விடுதி. அங்கு ஜமீன்தார்களும் பிரபுக்களும் சிற்றரசர்களும் வந்து தங்குவதுண்டு. விடுதியில் இருக்கும்போது அவர்கள் வேஷ்டியும் சட்டையும் அணிந்து கொண்டிருப்பார்கள். வெளியே செல்லும்போது மணிக்கணக்காக அலங்காரம் செய்துகொண்டு கிளம்புவார்கள். அவர்களுடைய அலங்காரமே விசித்திரமாக இருக்கும்.

அந்தச் சமயத்தில் வைசிராயாக இருந்த கர்ஸான் பிரபு ஒரு தர்பார் நடத்தினார். அதில் கலந்து கொள்ள வந்த பல சிற்றரசர்கள் இந்தியா கிளப்பில் அங்கத்தினர்கள் ஆதலால், அங்கு வந்து தங்கினார்கள். தர்பாரில் கலந்து கொள்ள அவர்கள் காலுடன் காலாக ஒட்டிய சல்லடமும், நீளக்கோட்டும், தலைப் பாகையும் அணிந்து கொண்டு முத்து மாலைகளும் ரத்தின மாலைகளும் தரித்துக் கொண்டு கிளம்பினார்கள். அவர்களைப் பார்க்கும் போதே, பெரிய காரியாலயங்களில் உள்ள டபேதார்களைப் போல் இருந்தது. காந்திஜிக்கு வருத்தம் தாளவில்லை. தம்முடன் நெருங்கிப் பழகிய ஒரு சிற்றரசரிடம், "நீங்கள் எதற்காக இந்த மாதிரி உடையணிந்து கொள்கிறீர்கள்? நீங்கள் அணிந்திருக்கும் ஒட்டுச் சல்லடமும், தலைப்பாகையும், பளபளப்பான பூட்ஸுகளும் எனக்குச் சர்க்கார் காரியாலயத்தில் உள்ள டவாலிச் சேவகர்களைத்தான் நினைப்பூட்டுகின்றன" என்று சொன்னார்.

" அந்த டபேதார்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் இருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா? நாங்கள் முத்தும் மணியும் அணிந்து கொள்கிறோமே! அவர்கள் எங்களுடைய ஊழியர்கள்; நாங்கள் வைசிராயின் டபேதார்கள். இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் நாங்கள் வைசிராய் பிரபுவை சமூகம் காணவிட்டால் எவ்விதமான ஆபத்து நேரும் தெரியுமா? நாங்கள் குறிப்பிட்ட மாதிரி ஆடை அணிந்து செல்லாவிட்டால், பெரிய அபசாரமாயிற்றே? வைசிராயைப் பேட்டி கண்டு பேசக்கூட எங்க

ளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காது. ஆனல் சந்தர்ப்பத்துக் கேற்ற படி சம்பிரதாயமான உடை யணியாவிட்டால் அரசியல் இலாகா வின் கோபத்துக்கு ஆளாகவேண்டியதுதான். அதைவிட கடவு ளுடைய கோபத்தையாவது சமாளித்து விடலாமே......"

காந்திஜிக்கு வருத்தம் தாளவில்லை. சம்ஸ்தானதிபதி களுடைய நிலைமையை ஊகித்துக் கொள்ள அவரால் முடிந்தது.

அந்தச் சிற்றரசர் சொன்னர்: "எங்களுடைய பணத்தையும் பாக்கியத்தையும் கண்டு பிறர் பொருமைப்படக்கூடும். ஆனல் அநுபவிப்பவர்களுக்குத்தான் எங்களுடைய துர்ப்பாக்கிய நிலைமை தெரியும். எவ்விதமான அவமானத்தை நாங்கள் ஏற்று வாழ் கிரேம் என்பது சொல்லி மாளாது."

இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடும்போது காந்திஜி பின்வரு மாறு எழுதுகிருர். "இவர்களுடைய ஆடையும் அணியும் பேடித் தனமாக இருக்கின்றன. எசமானர்களைத் திருப்தி செய்து வாழ எண்ணும் இவர்களுடைய நிலை பரிதபிக்கத்தக்கது.

"பணம், பதவி அதிகாரம் இவை மனிதனிடம் எவ்விதமான ஆட்சி செலுத்தி, பாபத்தையும் கொடுமையையும் தூண்டு கின்றன! அவற்றிற்குப் பணயமாக உள்ள அவர்களுடைய வாழ்க்கை எவ்வளவு பயங்கரமானது! .. "

கோச் வண்டி
(1901)

கோபால கிருஷ்ண கோகலே எப்போதுமே கோச் வண்டி யில்தான் சவாரி செய்வது வழக்கம். அந்தக் காலத்தில் மோட் டார் பிரபல மடையவில்லை. ஆடம்பரத்தை உத்தேசித்துத்தான் கோகலே கோச்வண்டியில் போகிருர் என்று காந்திஜி எண்ணினர். கல்கத்தாவில் கோகலேயுடன் தங்கியிருக்க நேர்ந்த போது அவரிடமே, "நீங்கள் டிராமில் ஏன் போகக்கூடாது? கோச் வண்டியினல் செலவும் அதிகம், ஆடம்பரமும்தானே?" என்று கேட்டுவிட்டார்.

இந்தக் கேள்வி கோகலேயை வருத்திவிட்டது. "நீங்களும் என்னுடைய நிலைமையை உணரவில்லையா? நீங்கள் சுதந்தரமாக நினைத்த இடங்களுக்குப் போவதையும், டிராம் வண்டிகளில்

சவாரி செய்தும் நடந்தும் செல்வதையும் பார்க்கும்போது எனக்குப் பொறுமையாகத்தான் இருக்கிறது. பெயரும் புகழும் ஏற்பட்டு விட்டால், பொதுஜனங்கள் நம்மைச் சூழ்ந்துகொண்டே யிருப்பார்கள். என்னைப்போல நீங்களும் பிரபலம் அடைந்துவிட்டால் டிராம் வண்டிகளில் பிரயாணம் செய்யவே முடியாது. சொந்த வசதிகளைக் கவனிக்கக்கூடத் தனிமை கிடைக்காது போய்விடும். ஆடம்பரத்தை உத்தேசித்து நான் கோச்சில் செல்லவில்லை. தனிமையாகச் செல்லவேண்டும் என்பதுதான் காரணம்'' என்றார் கோகலே.

''வாஸ்தவம், ஆனால் நீங்கள் உலாவக்கூடச் செல்வதில்லை. அடிக்கடி நோய்வாய்ப்படுகிறீர்கள். பொதுஜன சேவை செய்தால் தேகப் பயிற்சிக்குக்கூட அவகாசம் இருக்காதா?'' என்று கேட்டார் காந்திஜி.

''நீங்கள்தாம் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே? எனக்கு அவகாசம் எங்கிருக்கிறது?'' என்று கேட்டார் கோகலே.

அவருடைய பதில் காந்திஜிக்குத் திருப்தியளிக்கவில்லை என்றாலும், தொடர்ந்து விவாதிக்காமல் இருந்துவிட்டார். பொதுஜன வேலை செய்கிறவர்களுக்குத் திடசரீரம் இருக்கவேண்டியது அவசியம் என்றே காந்திஜி சொல்வதுண்டு. நோய்வாய்ப்பட்டு, நேரத்தை வீணடிப்பது மக்களுக்குத் துரோகம் செய்வது போலாகும் என்றும் அவர் சொல்வார். பிற்காலத்தில் அவர் ஜனங்களுடைய ஆரவாரத்திலிருந்து தப்பிக்க மோட்டார்க் காரை உபயோகிக்க நேரிட்டாலும், காலையிலும் மாலையிலும் உலாவச் செல்லும் பழக்கம் நிரந்தரமாகிவிட்டது. அந்தச் சமயத்திலும் அவர் ஊழியர்களுடன் கலந்தாலோசித்து, அவர்களுக்கு யோசனை கூறுவதுண்டு.

பண்டாவின் கோபம்

(1901)

கல்கத்தாவிலிருந்து ராஜ்கோட்டுக்குத் திரும்பும்போது, அன்னிபெஸண்ட் அம்மையார் நோய்வாய்ப் பட்டிருப்பதாகக் கேள்வியுற்ற காந்திஜி, அவரைப் பார்க்கக் காசியில் இறங்கினார். காசி புனித க்ஷேத்திரமாகையால் கங்கையில் நீராடி, விசுவநாத

ரையும் தரிசிக்கக் காந்திஜி விரும்பினார். ஸ்டேஷனில் இறங்கும் போதே பல பண்டாக்கள் அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். அவர்களில் ஒருவருடன் காந்திஜி சென்றார்.

பண்டாக்களைப் பற்றிக் காந்திஜிக்கு விசேஷமாக ஏதும் தெரியாது. இருந்தாலும் வைதிகக் காரியங்களுக்காக அவர்கள் பெரிய செலவு வைத்துவிடக் கூடாதே என்று முன் எச்சரிக்கையாக இருந்தார். அவர் பண்டாவைக் கூப்பிட்டு, "நீங்கள் அழைத்தீர்களே என்று இங்கு வந்தேன். வைதிகக் காரியங்களில் எனக்குச் சிரத்தையிருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி அக்கறையில்லை. நான் கங்கையில் நீராடி விசுவநாதரைத் தரிசனம் செய்யவே வந்திருக்கிறேன். பிறகுதான் மற்றக் காரியங்களைக் கவனிக்க வேண்டும். எனக்கு உதவி செய்வதற்காக ஒன்றேகால் ரூபாய் தான் தக்ஷிணை கொடுக்க முடியும். அதற்குமேல் தரமுடியாது. சம்மதமிருந்தால் சொல்லும். இல்லாவிட்டால் நானே கங்கையில் சென்று ஸ்நானம் செய்கிறேன்" என்றார்.

பண்டா சிரித்துக் கொண்டே சொன்னான்: "இங்கு வரும் யாத்திரீகர்கள் ஏழையா பணக்காரர்களா என்று நாங்கள் கவனித்துக்கொண்டிருப்பதில்லை. பாப விமோசனத்துக்காகவே அவர்கள் இங்கு வருகிறார்கள். இச்சாபூர்வமாக அவர்கள் கொடுப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம். உங்களுடைய சக்திக் கேற்றவாறு நீங்கள் கொடுத்தால் போதும்."

அவனுடைய பேச்சை உண்மையென்றே காந்திஜி நம்பினார். கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு, அவர் கோவிலுக்குச் சென்றார். காசி நகரில் ஜன நெருக்கடியும் அசுத்தமும் அதிகம். கோவிலில் கூட அங்கங்கே குப்பையும் கூளமுமாக இருந்தது. கர்ப்பக் கிருஹத்தில் நிர்மால்யம் அழுகிக் கும்பி நாற்றம் எடுத்தது. பிராகாரத்தைச் சுற்றி வரும்போது, பண்டா ஓரிடத்தைச் சுட்டிக் காட்டி, "இதுதான் 'ஞானவாவி (அறிவு தரும் கிணறு) இங்கே பிராமணனுக்குத் தானம் செய்வது விசேஷம், அவசியம்கூட" என்றான்.

அங்கு இருந்த அசுத்தத்தைக் கண்டு காந்திஜி மூக்கைப் பிடித்துக் கொண்டார். அங்கு அறிவு எப்படி இருக்க முடியும் என்ற கேள்விதான் அவருடைய மனத்தில் எழுந்தது. இருந்தாலும் பண்டாவின் வேண்டுகோளை மறுக்காது காலணாவை எடுத்து நீட்டினார்.

பண்டாவுக்குக் கோபம் தாளவில்லை. அஞ்ஞானிகளையும், பாபம் தொலைத்துப் புண்ணிய மூட்டை கட்டிச் செல்லக் காசிக்கு வருகிறவர்களையும் அங்கு அழைத்துவந்து ஐந்தும் பத்தும் தக்ஷிணை வாங்கும் அவனுக்குக் காந்திஜியின் கஞ்சத்தனம் பிடிக்கவில்லை. "புண்ணிய ஸ்தலத்தில் ஒரு பிராமணனை அவமானப்படுத்தும் துணிச்சல் உமக்கு எப்படி ஐயா ஏற்பட்டது? நீர் ரௌரவாதி நரகத்துக்குத்தான் போவீர். இங்கு ஏற்பட்ட தக்ஷிணை எதுவோ அதைமட்டுமாவது நீர் கொடுத்துத்தான் ஆகவேண்டும்" என்று அவன் கூச்சலிட்டான்.

காந்திஜிக்கு அவனுடைய படபடப்பைக் காணச் சிரிப்புத் தான் வந்தது. மிகவும் அமைதியாக அவர் சொன்னார்: "மகராஜ்,* என்னுடைய தலையில் எழுதியிருப்பதை நான் அநுபவித்துத் தானே தீரவேண்டும்? ஆனால் உங்களைப் போன்ற அறிவாளிகள் இப்படிப் பேசலாமா? சக்தியாநுசாரம் 'தக்ஷிணை தருவேன் என்று நான் சொன்னதை நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள்' என்னுடைய சக்தி இவ்வளவுதான். இஷ்டமிருந்தால் ஏற்றுக் கொள்ளும். இல்லாவிட்டால் இதுவும் நஷ்டந்தான்."

பண்டா பிணங்கினான். காந்திஜி காசைப் பையில் போட்டுக் கொண்டு செல்லலானார். பாபம் புண்ணியம் என்று மிரட்டினால் அதிகமாகக் காசு வாங்கலாம் என்றே அந்தப் பண்டா எண்ணினான். காந்திஜி இடத்தைவிட்டு நகரவே, அந்தக் காலணாவையும் விட்டுவிட அவனுக்கு மனமில்லை. "தொலைந்து போகட்டும், பொன் வைக்க வேண்டிய இடத்தில் பூ வைத்தாவது தானம் செய்யவேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள், காலணா ஒரு பெரிய தர்மமில்லை. மேலும் இங்கு தானம்தான் பிரதானமே தவிர அதன் மதிப்புப் பெரிதல்ல. இங்கு தானம் செய்யாவிட்டால் விசுவநாதரைத் தரிசித்த புண்ணியம் சித்திக்காது. புண்ணிய லோபம் ஏற்படக்கூடாது. பாபத்தைத் தொலைக்க வந்து, புண்ணிய பலனை இழக்கலாமா? கொண்டு வாரும், அந்தக் காசை; ஏற்றுக் கொள்கிறேன்" என்றான் பண்டா.

மௌனமாக அவர் காலணாவை எடுத்து அவனிடம் நீட்டினார். இந்து சமுதாயத்தின் நிலைமையையும் சாத்திரத்தின் பேரால்

* வட இந்தியாவில் புரோகிதர்களை மகராஜ் என்றுதான் அழைப்பது வழக்கம்.

நடக்கும் சம்பிரதாயங்களையும் எண்ணும்போது காந்திஜிக்கு நீண்ட பெருமூச்சுத்தான் வந்தது.

சோதனை
(1902)

ராஜ்கோட்டிலுள்ள நண்பர்கள் காந்திஜியை இந்தியாவில் தங்கும்படிக் கேட்டதுடன், பம்பாயில் காரியாலயம் வைத்துக் கொண்டால், வழக்குகளை அனுப்பி உதவி செய்வதாகவும் கூறினார்கள். பம்பாயிலிருந்து பாரிஸ்டரை வரவழைத்து விட்டால், உள்ளூரிலிருக்கும் நீதிபதிகளும் பிரமித்துவிடுவார்கள்; எதிர்க்கட்சிக்காரர்களும் வக்கீல்களுங்கூடப் பயப்படுவார்கள் என்பது அந்த நண்பர்களுக்குத் தெரியும். ஆகவே, தங்களுடைய நண்பராயினும் காந்திஜிக்கு, 'பம்பாயிலிருந்து வரும் பாரிஸ்டர்' என்ற கௌரவத்தைச் சூட்ட அவர்கள் விரும்பினார்கள். பம்பாயிலுள்ள உயர்தர நீதி மன்றத்தில் நடக்கும் வழக்குகளைக் கவனிக்கவும் அவர்களுக்கு நம்பிக்கையான வக்கீலின் உதவி தேவையாக இருந்தது.

காந்திஜி, 1902-ஆம் வருஷம் மார்ச்சு மாத வாக்கில் குடும்பத்துடன் பம்பாயில் குடியேறினார். அங்கு சென்ற சில தினங்களுக்கெல்லாம், அவருடைய இரண்டாவது மகன் மணிலாலுக்குக் கபவாத ஜுரம் கண்டது. வைத்திய சிகிச்சை செய்து வந்த ஒரு பார்ஸி டாக்டர் நோயாளிக்குக் கோழி முட்டையும், கோழிக் குஞ்சு ஸூப்பும் ஆகாரமாகக் கொடுக்க வேண்டும் என்று விரும்பினார். காந்திஜிக்கோ சைவ உணவைத் தவிர வேறு எதையும் தொடச் சம்மதம் இல்லை.

"குழந்தைக்கு மிகவும் ஆபத்தாக இருக்கிறது. பாலும் நீரும் கலந்து ஆகாரம் புகட்டலாம். ஆனால் அது போதாது. ஆபத்துக் காலத்தில் நாம் சம்பிரதாயங்களைப் பார்ப்பது பயன் படாது. என்னுடைய ஆலோசனைப்படி வைதிகக் குடும்பங்களைச் சேர்ந்த நோயாளிகள்கூடக் கோழி முட்டை சாப்பிடுகிறார்கள்" என்றார் டாக்டர்.

"நீங்கள் சொல்வது உண்மை. நானோ சுத்த சைவன். இந்த விஷயத்தில் நான் எவ்விதமான முடிவுக்கும் வர முடிய வில்லை. பெரியவர்களாக இருந்தாலும் நோயாளியின் அபிப்

பிராயத்தைக் கேட்டுக்கொள்ளலாம். சிறுவனுக்கு என்ன தெரியும்? என்னுடைய கொள்கைக்குச் சோதனை வந்திருக்கிறது போலும். உடல் வளர்ச்சிக்கு முட்டையும் மாமிசமும் அவசியமில்லை என்றே நான் எண்ணுகிறேன். நீங்கள் வற்புறுத்தினால் நான் வேறு வைத்தியரின் உதவியைத்தான் நாட வேண்டும்'' என்றார் காந்திஜி.

காந்திஜியின் வாதத்தை ஏற்றுக்கொண்டாலும் ஆகாரத்தை வற்புறுத்தவே டாக்டர் விரும்பினார். அப்போது காந்திஜி சொன்னார்: ''எனக்கு ஜல வைத்தியத்தில் நம்பிக்கை இருக்கிறது; சிறிது அநுபவமும் உண்டு. குழந்தைக்கு நானே வைத்தியம் செய்கிறேன். ஆனால் எனக்கு நாடி பார்க்கவோ, வேறு விதமாகப் பரீட்சிக்கவோ தெரியாது. ஆகவே நீங்கள் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். அவ்வப்போது குழந்தையைப் பரீட்சித்து வியாதியின் போக்கைத் தெரிவிக்க வேண்டும்.''

டாக்டரும் சம்மதித்தார். சிறுவனிடம் காந்திஜி தமது அபிப்பிராயத்தைச் சொன்னபோது, ''நீங்களே வைத்தியம் செய்யுங்கள், அப்பா. நான் முட்டையோ, மாமிசமோ சாப்பிட விரும்பவில்லை'' என்று கூறினான்.

காந்திஜிக்குச் சந்தோஷம் தாளவில்லை. மூன்று நாட்கள் வரையில் ஆரஞ்சுப் பழரசத்தையே ஆகாரமாகக் கொடுத்தார். ஜுரம் படிமானத்துக்கு வரவில்லை. காந்திஜிக்குக் கவலை வந்துவிட்டது. 'எதற்காக இந்த முரட்டு வைத்தியம் செய்கிறோம்? ஏதாவது விபரீதம் விளைந்துவிட்டால் சுற்றத்தார்கள் என்ன சொல்வார்கள்? அண்ணா என்ன நினைப்பார்? ஆயுர்வேத வைத்தியரிடம் காட்டலாமா? கொள்கைக்காகக் குழந்தையின் ஜீவனுடன் போராடுவது நியாயந்தானா?' இப்படி எல்லாம் அவர் எண்ணித் தவித்தார். ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டுச் சிகிச்சையைத் தொடர்ந்து நடத்தினார். சதா தெய்வ நாம ஸ்மரணையில் மனம் லயித்தது.

மூன்றாம் நாள் இரவு ஜுரதாபம் அதிகமாயிற்று. உடம்பில் எரிச்சல் கண்டுவிட்டது. காந்திஜி போர்வையை நனைத்து, முகத்தை விட்டுவிட்டு உடம்பு மறையப் போர்த்தினார். அதற்குமேல் இரண்டு கம்பளங்களைப் போட்டு மூடினார். தலைக்கும் ஈரத் துணியை வைத்துக் கட்டினார். சாதாரணமாக இந்த முறையில்

ஜுரம் சில நிமிஷங்களில் இறங்கிவிடுவதைக் காந்திஜி அநுபவ சாத்தியமாகக் கண்டிருக்கிருர். மணிலாலுக்கோ ஜுரம் இறங்கவேயில்லை. காந்திஜி அமைதி இழந்துவிட்டார். மனைவி யிடம் குழந்தையைக் கவனித்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டு, அவர் வெளியே சென்ருர். கடற் காற்று முகத்தில் பட்டால் மன அமைதி ஏற்படும் என்ற எண்ணத்தில் கடற் கரையை நோக்கிச் சென்ருர். மனம் மட்டும் பிரார்த்தனையில் லயித்துக் கிடந்தது.

சில நிமிஷங்களுக்கெல்லாம் அவர் வீடு திரும்பியபோது, மணிலால், "அப்பா! வந்துவிட்டீர்களா?" என்ருன் ஆவலுடன்.

காந்திஜி அவனை நெருங்கினர். முகத்தில் முத்து முத்தாக வியர்வை அரும்பி யிருப்பதைக் கண்டார்.

"போர்வையை எடுத்துவிடுங்கள். உடம்பு தாளவில்லை. வியர்வை கொட்டுகிறது" என்ருன் பையன்.

"வியர்க்கிறதா?"

"தொப்பலாக நனைந்துவிட்டேன், அப்பா."

காந்திஜி போர்வையை அகற்றினர். ஜுரம் இறங்கி யிருந்தது. ஆண்டவனுக்கு நன்றி கூறினர் அவர். பிறகு சிறுவன் நன்ருகத் தூங்கினன். காந்திஜியும் கவலை நீங்கிக் களிப் புற்ருர். அவர் தொடர்ந்து வைத்தியம் செய்து வந்தார். ஜலங் கலந்த பாலும், ஆரஞ்சு ரசமும் ஆகாரமாகக் கொடுத்தார். சிறுவன் துரும்பாக இளைத்துப் போனலும், அதிசீக்கிரம் நோய் குணமாயிற்று. இந்தச் சம்பவத்தைப்பற்றி இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு எழுதிய தமது சுயசரிதையில் காந்திஜி பின்வருமாறு எழுதியிருக்கிருர்: "என் குழந்தைகளில் மணிலால் தான் இன்று வரையில் ஆரோக்கியமாக இருக்கிருன். ஆண்டவன் அருளாலோ, ஜல வைத்தியத்தினலோ ஆகார நியதியினலோ அல்லது பணிவிடையினலோ, எந்த முறையில் தேறினன் என்று நான் கூற முடியாது. ஆண்டவன் அருளால்தான் அவன் பிழைத்தான் என்பதே என்னுடைய நம்பிக்கை."

நானே வருகிறேன்

(1903)

காந்திஜி 1903-ஆம் வருட மத்தியில் ஜோகானஸ்பர்க்கில் காரியாலயம் அமைத்துக்கொண்டு வக்கீல் தொழில் நடத்த

ஆரம்பித்தார். இந்தியர்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தச் சர்க்கார் நிச்சயித்துச் சட்டம் இயற்றியதால் அதை எதிர்த்துப் போராடுவதிலும், இந்தியர்களுடைய நலன்களைக் காப்பதிலும் தான் அவருடைய கவனம் இருந்தது. ஒவ்வொரு இந்தியனைச் சந்திக்கவும் இந்தியர்களுடைய கஷ்ட நஷ்டங்களைத் தெரிந்து கொள்ளவும் அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது.

ஒரு நாள் முஸ்லிம் சமையல்காரன் ஒருவன் காந்திஜியிடம் வந்தான். "பாபு, எனக்கு மட்டும் ஆங்கிலம் நன்றாகப் பேசத் தெரிந்தால், நான் நிரம்பச் சம்பாதிப்பேன். இப்போது குடும்பம் நடத்துவதே சிரமமாக இருக்கிறது" என்றான்.

"எப்படிச் சம்பாதிப்பாய்?" என்று கேட்டார் காந்திஜி.

"வெள்ளைக்காரர் வீட்டில குசினிக்காரனாக வேலை செய் வேன்."

"வெள்ளைக்காரர்கள் தாம் நம்மைத் தீண்டாதவர்களாகக் கருதுகிறார்களே! மேலும் இப்போது இந்தியர்களை ஒடுக்கச் சர்க்காரே துணிந்துவிட்டார்களே?"

"அது வேறு விஷயம் பாயி.* வயிற்றுப் பிரச்னை வரும் போது நிறத் துவேஷம் தலை தூக்காது. கறுப்பன் கையிலிருக்கும் ருசியான உணவை வெள்ளையன் விரும்பிச் சாப்பிடுவான்."

காந்திஜி சிறிது நேரம் யோசித்தார். பிறகு, "என்னிடம் வா, நான் தினசரி வகுப்பு நடத்தி ஆங்கிலம் போதிக்கிறேன்" என்றார்.

அவன் சந்தோஷப்பட்டான். ஆனாலும் அவனுடைய வாயி லிருந்து 'சரி' என்ற வார்த்தை வரவில்லை. சிறிது தயக்கத்துடன் அவன் சொன்னான்: "பாயி, நான் இப்போது வேலை செய்யும் இடத்தில் நாள் முழுவதும் வேலை செய்கிறேன். அதன் பிறகு இங்கு வந்து செல்வது முடியாதே என்று தான் ஏங்குகிறேன்."

"கவலைப்படாதே. நானே உன்னுடைய வீட்டுக்கு வருகி றேன்" என்றார் காந்திஜி.

அன்று முதல் தினந்தோறும் நான்கு மைல்களுக்கு அப்பா லுள்ள அந்த முஸ்லீமின் வீட்டுக்கு நடந்து சென்று பாடம் சொல்லிக்கொடுத்துத் திரும்பினார்.

யந்திரத்துக்கும் ஓய்வு

(1904)

டர்பானில் மன்சுக்லால் நஜார் என்பவர் இந்தியர்களுடைய நலனுக்காக ஒரு பத்திரிகை நடத்தி நஷ்டமடைந்தவர். டிரான்ஸ்வால் சர்க்கார் இந்தியர்கள் குடியேற்றத்தைத் தடை செய்யச் சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டபோது, இந்தியர்களை ஒன்று திரட்டவும், இந்தியர் படும் துயரை வெளியாருக்கு எடுத்துக் காட்டவும் ஒரு பத்திரிகை நடத்தக் காந்திஜி நிச்சயித்தார். 1904-ஆம் ஆண்டில் ஸ்ரீ நஜாரையே ஆசிரியராகக்கொண்டு 'இந்தியன் ஒபினியன்' என்ற வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார். ஆங்கிலம், தமிழ், ஹிந்தி, குஜராத்தி ஆக நான்கு பாஷைகளில் பத்திரிகை வெளி வந்து கொண்டிருந்தது. இந்தியர்களுடைய நலனைக் கவனிக்கக் காந்திஜி ஜோகானஸ்பர்க்கில் இருக்கவேண்டி யிருந்ததால், பத்திரிகைக்குக் கட்டுரைகள் மட்டும் அனுப்பிக்கொண்டிருந்ததுடன், அவசியமானபோது டர்பானுக்கு வந்து சென்றுகொண்டிருந்தார்.

ஒருசமயம் அவர் ரஸ்கின் எழுதிய (Unto this Last) நூலைப் படிக்க நேர்ந்தது. அதைப் பெரிதும் ரசித்த காந்திஜி 'சர்வோதயம்' என்ற பெயரில் குஜராத்தியில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அதன் பிறகு எளிய வாழ்க்கையிலும் உடலுழைப்பிலும் அவருக்கு இருந்த நம்பிக்கை அதிகரித்தது. தம்முடைய கனவுகளை நனவாக்க விரும்பிய காந்திஜி டர்பானுக்குச் சமீபத்திலுள்ள போனிக்ஸ் என்னுமிடத்தில் நூறு ஏகரா விஸ்தீரணமுள்ள பண்ணை ஒன்றை வாங்கி, அங்கு அச்சு யந்திரங்களை மாற்றிவிட்டார். உடலுழைப்பில் நம்பிக்கை கொண்டவர்கள் அங்கு ஒரே குடும்பமாக வாழ வேண்டும் என்பதே அவருடைய திட்டம்.

பண்ணையிலிருந்து 'இந்தியன் ஒபினியன்' வெளியாக வேண்டிய தினத்துக்கு முன்பு அச்சு யந்திரத்தை ஓட்டும் எஞ்ஜின் பழுதாகிவிட்டது. டர்பானிலிருந்து ஒரு எஞ்ஜினீயரை வரவழைத்துப் பழுது பார்த்தார்கள். இரவு வெகு நேரம் வரையில் எஞ்ஜின் ஓடவில்லை. காந்திஜிக்கோ காலந்தவறாமல் பத்திரிகையை வெளியிட்டுவிடவேண்டும் என்ற ஆவல். ஆகவே அச்சு யந்திரத்தைக் கையால் சுழற்றிப் பத்திரிகையை அடிக்கலாம் என்று அவர்

நிச்சயித்தார். கையினுல் சுற்றுவதற்கும் நான்கு பேர்களுடைய உதவி அவசியம். அந்த இரவில் ஆட்களுக்கு எங்கு செல்வது? வீடு கட்ட வந்த தச்சர்களும் கொல்லத்துக்காரர்களும் அலுப்பு மேலிட்டு ஒரு பக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர் களை எழுப்பி உதவி கோர எவருக்கும் விருப்பமில்லை. ஆனல் காந்திஜி பிடிவாதத்துடன் அவர்களை எழுப்பினர். தம்முடைய ஆவலை வெளியிட்டு உதவி கோரினர். அயர்வு இருந்தாலும், அவர் கள் சந்தோஷத்துடன், "சமயம், சந்தர்ப்பம் என்றல் விட்டுக் கொடுக்கலாமா? நாங்கள் தயார்" என்று கூறி எழுந்துவிட்டார் கள். நான்கு நான்கு பேராக முறை வைத்துக்கொண்டு யந்தி ரத்தைச் சுழற்றினர்கள். விடிய விடிய வேலை செய்தார்கள்.

எஞ்ஜினை ஓட்ட முடியாமல் மனம் சலித்த எஞ்ஜினியர் உறங்கச் சென்ருர். அவருக்கு மன நிம்மதியில்லை. பழுது எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிக்கவில்லையே என்ற துக்கம் மனசில் உறுத்திக்கொண்டே யிருந்தது.

மறுநாள் விடிவதற்குள் பத்திரிகை அச்சிட்டு முடிந்துவிட்டது. உரிய காலத்தில் தபாலில் சேர்த்துவிட அவகாசமும் இருந்தது. காந்திஜி மகிழ்ச்சி யடைந்தார். காலையில் எஞ்ஜினியர் யந்தி ரத்தைப் பழுது பார்க்கச் சென்ருர். பழுது இருக்கும் இடம் தெரியவில்லை. எஞ்ஜினை ஓட்டிப் பார்க்கலாமே என்று துணிச்ச லுடன் முடுக்கிவிட்டார். என்ன ஆச்சரியம்! எஞ்ஜின் சுழல ஆரம்பித்துவிட்டது. எல்லோரும் மகிழ்ச்சியுடன் ஆரவாரித் தார்கள்.

காந்திஜிக்கு ஆச்சரியம் ஒருபுறம், சந்தோஷம் ஒருபுறம். "பழுதுபட்ட எஞ்ஜின் எப்படி ஓடிற்று?" என்ற கேள்வியே மனத்தில் சுழன்று கொண்டிருந்தது.

"மனிதனைப் போல யந்திரங்களுக்கும் ஓய்வு அவசியம் போலிருக்கிறது. அதனுல்தான் இப்படி 'மக்கார்' செய்திருக்கிறது" என்ருர் எஞ்ஜினியர்.

காந்திஜி இதை ஏற்றுக்கொள்ளவில்லை. "இது ஒரு சோதனை என்றே நான் எண்ணுகிறேன். எப்பேர்ப்பட்ட இன்னல்களும் இடையூறுகளும் நேர்ந்தாலும் எடுத்த காரியத்தை, குறித்த நேரத்தில் முடிக்க வேண்டும் என்ற உறுதியும், தொழிலில் விசுவாசமும் தன்னம்பிக்கையும் மனிதனுக்கு அவசியம். இதை

வலியுறுத்தவே ஆண்டவன் இந்தச் சோதனையை அளித்தான். நம்முடைய உறுதியும் விசுவாசமும் நம்மைக் காப்பாற்றின" என்றார் அவர்.

மாப்பிள்ளைத் தோழன்

(1906)

காந்திஜியுடன் நெருங்கிப் பழகிய ஐரோப்பிய நண்பர்களில் போலக்கும் ஒருவர். அவர்தாம் ரஸ்கின் எழுதிய 'சர்வோதயம்' என்ற புத்தகத்தைக் காந்திஜிக்குக் கொடுத்தவர். எளிமையும் தூய்மையும் நிறைந்த போலக் 'கிரிடிக்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருந்தார். காந்திஜியுடன் பழக்கம் ஏற்பட்ட பிறகு அவர் அதை விட்டு விட்டுக் காந்திஜியுடன் வசித்து வரலானார். சில காலம் காந்திஜிக்குத் தொழில் முறையில் உதவி செய்து, சட்டப் பரீட்சைக்கும் படித்தார். பிறகு டால்ஸ்டாய் பண்ணையில் குடியேறி 'இந்தியன் ஒபினியன்' பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

போலக் எளிய வாழ்க்கையில் நம்பிக்கையுள்ளவர் என்றாலும் குடும்ப வாழ்க்கை நடத்தத் தயக்கம் கொண்டார். உழைத்துப் பணம் சேமித்த பிறகு குடும்பம் நடத்தத் துவங்கினால் சுகமாக வாழமுடியும் என்று அவர் எண்ணினார். அவரைக் காதலித்த பெண்ணும் போலக்கின் உத்தேசத்துக்கு இணங்கிக் காத்திருந்தாள். காந்திஜி ஒரு நாள், "குடும்பம் நடத்தப் பணம் மட்டும் போதாது. மன ஒற்றுமை ஏற்பட்டுவிட்டால் சுகம் துக்கம் இரண்டையும் புருஷனும் மனைவியும் பகிர்ந்து சந்தோஷமாக வாழலாம். உங்களுக்குள் காதலும் அன்பும் இருப்பதால் இனிக் காலதாமதம் செய்யக்கூடாது. கல்யாணம் செய்து கொண்டு இருவரும் வாழ்க்கையை அநுபவிக்கத்தான் வேண்டும்" என்றார்.

அவருடைய வாதத்தைப் போலக் ஏற்றுக்கொண்டு, லண்டனிலிருக்கும் தமது காதலியைப் புறப்பட்டு வருமாறு கடிதமெழுதினார். ஜோகானஸ்பர்க்கில் கல்யாணம் நடத்த நிச்சயித்தார்கள். மிகவும் எளிய முறையில் கல்யாணம் செய்ய நிச்சயித்ததால் ஆடை அலங்காரங்களுக்காகக்கூடப் பணச் செலவு ஏற்படவில்லை. போலக் ஒரு யூதர், அவருடைய காதலி கிறிஸ்துவப் பெண். ஆகவே அவர்களை ஒன்றுபடுத்த மதச் சடங்குகள்

நடத்தும் அவசியமும் ஏற்படவில்லை. தம் தம் மதக் கோட்பாடுகளை அவர்கள் அநுசரித்தார்கள். சட்ட பூர்வமாகப் பதிவு செய்து கொண்டு விவாகத்தை நிறைவேற்ற வேண்டியதுதான். ஜோகானஸ்பர்க்கில் ஐரோப்பியர்களுடைய கல்யாணங்களைப் பதிவு செய்யவும், மற்ற தேசத்தவர்களுடைய கல்யாணங்களைப் பதிவு செய்யவும் தனித்தனி உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். காந்திஜி மாப்பிள்ளைத் தோழனாக இருந்து கல்யாணத்தை நடத்த முன் வந்ததும், ஐரோப்பிய உத்தியோகஸ்தருக்கு, தம்பதிகள் ஐரோப்பியர்கள்தாமா என்ற சம்சயம் வந்துவிட்டது. விசாரணை செய்த பிறகு தான் பதிவு செய்ய முடியும் என்று அவர் கூறிவிட்டார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. அதற்கடுத்த நாள் புது வருடப் பிறப்பு. ஆகவே அன்றும் விடுமுறை நாள். நிச்சயிக்கப்பட்ட தேதியில் கல்யாணம் நடத்த முடியாமல் போகவே போலக் தம்பதிகள் வருந்தினார்கள். புனிதமான சடங்குகளுக்குத் தடை ஏற்பட்டால், அது எதிர்காலத்தில் நேரக்கூடிய கெடுதல்களின் சூசகம் என்று சிலர் நம்புவதுண்டு. காந்திஜியோ மற்றவர்களோ அப்படி எண்ணவில்லை; என்றாலும் குறிப்பிட்டபடி கல்யாணம் பதிவு செய்துவிட அவர் தீர்மானித்தார். கல்யாணப் பதிவு இலாகாவின் தலைவரான பிரதான மாஜிஸ்டிரேட்டிடம் போலக் தம்பதிகளை அழைத்துச் சென்று நிலைமையைக் கூறினார். மாஜிஸ்டிரேட் சிரித்துக்கொண்டே பதிவு அதிகாரிக்குக் கடிதம் கொடுத்தனுப்பினார். பதிவு அதிகாரியும் ஆக்ஷேபணையின்றிக் கல்யாணத்தைப் பதிவு செய்தார். போலக் தம்பதிகளும் காந்திஜியும் சந்தோஷத்துடன் வீடு திரும்பினார்கள்.

பட்டாணியன் ஆத்திரம்

(1908)

டிரான்ஸ்வால் சர்க்கார் இந்தியர் குடியேற்றத்தைத் தடை செய்ய இந்தியர் பதிவுச் சட்டம், ஆசியாக்காரர் குடியேற்றத் தடைச் சட்டம் என்று சட்டங்கள் இயற்றி இம்சிக்கத் துவங்கினார்கள். 1903-ஆம் ஆண்டு முதல் ஐந்து வருட காலமாகக் காந்திஜி சர்க்காருடன் போராடிக் கொண்டிருந்தார். இங்கிலாந்துக்குத் தூது சென்றார். அப்போது காலனி மந்திரியாக இருந்த எல்ஜின்

இந்தியர்களிடம் அநுதாபம் காட்டுவதுபோலப் பாசாங்கு செய்தார். உண்மையில் அவர் ஐரோப்பியர்களுக்குச் சாதகமாகவே இருந்தார். 1907-ஆம் ஆண்டு டிரான்ஸ்வாலுக்கும் மற்ற மாகாணங்களுக்கும் பொறுப்பாட்சி வழங்கப்பட்டதால் உள்நாட்டு நிர்வாகத்தில் லண்டன் சர்க்கார் தலையிட முடியாமல் போயிற்று. டிரான்ஸ்வால் சர்க்கார் இந்தியர்களை ஒடுக்கப் புதுச் சட்டம் இயற்றினார்கள். அதன்படி ஒவ்வொரு இந்தியரும் கை ரேகை அடையாளம் கொடுத்துப் பதிவு செய்து கொள்ளவேண்டும். 1907-ஆம் வருஷம் ஜூலை மாதம் பதிவு இலாகா வேலை செய்ய ஆரம்பித்தது. ஆனால் ஓர் இந்தியர் கூடப் பதிவு செய்துகொள்ளப் போகவில்லை. காந்திஜி சட்டத்தை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்ய நிச்சயித்தார்.

பதிவு செய்துகொள்ள மறுத்ததால் காந்திஜிக்கும் வேறு சில தலைவர்களுக்கும் 1907-ஆம் வருஷம் கிறிஸ்துமஸ் வாரத்தில் சர்க்கார்நோட்டீஸ் கொடுத்துப் பதிவுசெய்துகொள்ளத் தவணையும் கொடுத்தது. தவணைக்குள் எவருமே பதிவு செய்து கொள்ளாமல் போகவே அவர்களை விசாரித்துத் தண்டித்துவிட்டது. காந்திஜிக்கு இரண்டு மாதம் வெறுங்காவல் தண்டனை கிடைத்தது. இந்தியர்கள் வெகுண்டு எழுந்தார்கள்; இயக்கம் வலுத்தது. சிறைகளில் சத்தியாக்கிரகிகள் நிரம்பினார்கள். சர்க்கார் அதிகாரிகள் திகைத்துப் போனார்கள்.

'டிரான்ஸ்வால் லீடர்' என்ற தினசரிப் பத்திரிகையின் ஆசிரியரான ஆல்பர்ட் கார்ட்ரைட்டின் முயற்சியால் சர்க்காருக்கும் சத்தியாக்கிரகிகளுக்கும் சமரசம் ஏற்பட்டது. காந்திஜி ஜனரல் ஸ்மட்ஸைச் சந்தித்துப் பேசினார். இந்தியர்கள் இச்சா பூர்வமாகப் பதிவு செய்துகொண்டால், மற்றக் கட்டுத் திட்டங்களைத் தளர்த்தி, சட்டத்தையே கூட ரத்து செய்து விடுவதாக ஜனரல் ஸ்மட்ஸ் சொன்னார். காந்திஜி ஏற்றுக்கொண்டார். காந்திஜியும் மற்றச் சத்தியாக்கிரகிகளும் விடுதலை அடைந்தார்கள்.

காந்திஜி ஜோகானஸ்பர்க்கிலுள்ள இந்தியர்களிடம் நிலைமையைச் சொன்னார். எதிரியின் வார்த்தையை நம்பி நடப்பதுதான் சத்தியாக்கிரக தர்மம் என்று எடுத்துக் கூறினார். பொதுவாக எல்லாருமே திகைத்து விட்டாலும் பட்டாணியர்கள் ஆத்திரம் அடைந்தார்கள். ஜனரல் ஸ்மட்ஸிடம் கைக்கூலி பெற்றுக்

கொண்டு காந்திஜி இந்தியர்களைக் காட்டிக்கொடுத்துவிட்டார் என்று கூச்சலிட்டார்கள். காந்திஜியின் சமாதானப் பேச்சு அவர்களுடைய காதுகளில் ஏறவில்லை.

'சட்டத்தை ரத்துச் செய்துவிட்டு, இச்சா பூர்வமாகப் பதிவு செய்துகொள்ளும்படிக் கேட்டாலும் பரவாயில்லை. நாம் பதிவு செய்துகொண்ட பிறகு ஜனரல் ஸ்மட்ஸ் வாக்குத் தவறிச் சட்டத்தை ரத்துச் செய்யாமலிருந்துவிட்டால் என்ன செய்வது?' என்ற சந்தேகம் எல்லோருக்குமே இருந்தது. அதைக் காந்திஜியிடம் சொல்லியும் விட்டார்கள்.

"சமரசம் என்பதே இரண்டு கட்சிக்காரர்களும் விட்டுக் கொடுப்பதுதான். உங்களுடைய சந்தேகமும் நியாயமானதே. ஆனால் என்னுடைய வாதமே வேறு. சத்தியாக்கிரகிக்குப் பயமே கூடாது; அவன் எதிரியின் வார்த்தையை நம்ப வேண்டும். இரண்டாவது நாம் இச்சாபூர்வமாகத்தான் சட்டத்துக்கு இணங்கிப் பதிவு செய்துகொள்ளப்போகிறோம். தண்டனைக்கு நாம் பயப்படவில்லை. சர்க்காரின் மிரட்டலுக்கு அடிபணியவும் இல்லை. நாம் தான் இந்த நிலைமையை உண்டாக்குகிறோம். ஆகவே இதை மாற்றவும் நம்மால் முடியும். நம்முடைய பெருந்தன்மையையும் அடக்கத்தையும் கட்டுப்பாட்டையும் எதிரிகள் உணர்ந்துவிட்டால் அவர்கள் நம்மிடம் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் பழகுவார்கள் என்று நான் எண்ணுகிறேன்" என்றார் காந்திஜி.

"கை ரேகை அடையாளம் கொடுக்கத்தானே வேண்டும்?" என்று ஒரு பட்டாணியன் கேட்டான்.

"ஆமாம், சட்டப்படிப் பத்து விரல்களையும் பதியத்தான் வேண்டும். நானும் அதற்கு இணங்கிவிட்டேன்."

"நீங்கள்தானே அப்படிச் செய்யக்கூடாது என்று ஆரம்பத்தில் கிளர்ச்சி செய்தீர்கள்? இப்போது நீங்களே சம்மதித்துவிட்டீர்களே!"

"உண்மைதான். நிலைமை மாறிவிட்டது என்று நான் எண்ணுகிறேன்..."

"இல்லை, இல்லை. எங்களைக் காட்டிக்கொடுத்துவிட்டீர்கள்... அல்லாவின் மீது ஆணையாக நாங்கள் இதற்கு இணங்க மாட்டோம்."

காந்திஜி மீண்டும் நிலைமையை விளக்கிச் சொல்லிவிட்டுக் கூட்டத்தைக் கலைத்துவிட்டார். பெரும்பான்மையோர் அவருடைய யோசனைக்கு இணங்கினார்கள்.

இச்சாபூர்வமாகப் பதிவு செய்துகொள்ளத் தாமே வழிகாட்டியாக நிற்கக் காந்திஜி முற்பட்டார். 10—2—1908 அன்று ஒரு சில நண்பர்களை அழைத்துக்கொண்டு பதிவுக் காரியாலயத்துக்குக் கிளம்பினார். வழியில் அவர் மீர் ஆலம் என்ற பட்டாணியனைச் சந்தித்தார். மீர் ஆலம் காந்திஜியின் கட்சிக்காரன்.

"எங்கே போகிறீர்கள் ?" என்று கேட்டான் மீர் ஆலம்.

"ரிஜிஸ்டிரார் ஆபீசுக்குச் செல்கிறேன். விருப்பமிருந்தால் நீயும் வரலாம். ரேகை அடையாளம் கொடுத்துப் பதிவு செய்துகொள்ளத் தீர்மானித்துவிட்டேன்......"

அவருடைய வார்த்தைகள் முடிவதற்குள் தலையில் ஓங்கி அடி விழுந்தது. "ஹே, ராமா" என்று முணு முணுத்துக்கொண்டே அவர் கீழே சாய்ந்துவிட்டார். கீழே விழுந்த பிறகும் மீர் ஆலமும் அவனுடைய சகாக்களும் காந்திஜியைத் தாக்கினார்கள். அவர்களை விலக்கச்சென்ற நண்பர்களுக்கும் நல்ல அடி. காந்திஜி மூர்ச்சித்துவிட்டார். வழியில் சென்ற சில ஐரோப்பியர்கள் போலீஸாரை அழைத்து வந்தபோது மீர் ஆலமும் அவனுடைய சகாக்களும் ஓடினார்கள். அருகிலுள்ள ஓர் ஐரோப்பியரின் வீட்டுக்குக் காந்திஜியை எடுத்துச் சென்று சிகிச்சை செய்தார்கள். கண்விழித்ததும் காந்திஜி, "மீர் ஆலம் எங்கே?" என்றுதான் கேட்டார்.

அவனைக் கைது செய்துவிட்டார்கள் என்று நண்பர்கள் கூறவே, "முடியாது, விடுதலை செய்துவிடச் சொல்லுங்கள்" என்றார் காந்திஜி.

"காந்திஜியின் உதடு கிழிந்துவிட்டது. பற்கள் உதிர்ந்துவிட்டன. தாடையில் நல்ல அடி. டோக் என்னும் ஐரோப்பிய நண்பர், காந்திஜியைத் தம்முடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கேயே வைத்திய சிகிச்சைக்கு ஏற்பாடுகளைச் செய்தார். இதன் நடுவே, பதிவு அதிகாரியான சாம்னி என்பவர், செய்தி கேட்டுக் காந்திஜியைப் பார்க்க வந்தார். அவரைப் பார்த்ததும் காந்திஜி, "நான் உங்களுடைய காரியாலயத்துக்குத்தான் வந்துகொண்டிருந்தேன். முதல் பதிவு சர்டிபிகேட்டை நான் பெற்றுவிட நிச்சயித்

தேன். ஆண்டவன் வேறு விதமாக எண்ணிவிட்டான். இப்போது கூடச் சம்பந்தப்பட்ட காகிதங்களை இங்கே கொண்டுவாருங்கள். விரல் அடையாளம் கொடுத்து நான் பதிவு செய்துகொள்கிறேன்" என்றார்.

"இப்போது என்ன அவசரம்? உங்களுடைய மனம் புரிந்து விட்டது. உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள். மற்றவர்கள் பதிவு செய்துகொள்ளட்டும். உங்களுடைய பெயர் முதலாவதாக இருக்கவேண்டும் என்று நீங்கள் விரும்பினால் இடம் காலியாக விட்டுவைக்கிறேன்" என்றார் சாம்னி.

"கூடாது. நான் முதலாவதாகப் பதிவு செய்துகொள்வேன் என்று பல பேர் அறியச் சபதம் எடுத்துக்கொண்டிருக்கிறேன். ஆகவே நீங்கள் தயவு செய்து, இங்கே வந்து என் விரல் அடையாளம் எடுத்துச் செல்லுங்கள்" என்று வற்புறுத்தினார் காந்திஜி.

சாம்னி காரியாலயத்துக்குச் சென்றபோது டாக்டர் துவைட்ஸ் என்பவர் காந்திஜியின் கிழிந்த உதட்டைத் தைத்துவிட்டுக் கன்னத்திலும், மற்ற இடங்களிலும் பட்ட காயங்களுக்குச் சிகிச்சை செய்தார். எழுந்து நடமாட முடிந்ததும் காந்திஜி, மீர் ஆலம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று கோரி அட்டர்னி ஜனரலுக்கு ஒரு தந்தி கொடுத்தார். இதை அறிந்த சில ஐரோப்பிய நண்பர்கள், "காந்திஜியின் வாதத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது. பொது ஜன ரஸ்தாவில் நடந்த சம்பவம் இது. குற்றவாளியைச் சும்மா விடுவது சட்ட விரோதம். காந்திக்கும் மீர் ஆலத்துக்கும் இருக்கும் உறவைப்பற்றியோ, அரசியல் காரணங்களையோ ஆராயாமல், குற்றம் செய்தவன் என்ற முறையில் தண்டிக்க வேண்டியது அவசியம்" என்று அட்டர்னி ஜனரலிடம் வற்புறுத்தினார்கள். ஆகவே மீர்ஆலம் மீண்டும் கைது செய்யப்பட்டு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றான்.

பூர்ண ஆரோக்கியம் பெற்றதும் காந்திஜி இந்தியர்களுக்குப் பின்வரும் அறிக்கை விட்டார்: "சத்தியாக்கிரக தத்துவத்தை நன்றாகப் புரிந்துகொண்டவர்கள் எவருக்குமே பயப்படமாட்டார்கள். ஆண்டவன் ஒருவனுக்குத்தான் அவர்கள் பயப்பட முடியும். சத்தியத்தை வாழ்க்கை விரதமாக ஏற்றுக்கொண்டவர்களிடம் ரகசியம் என்பதே இருக்கமுடியாது. மனிதப் பிரயத்தனத்தினால் ஏற்படும் இன்னல்களையும், பலாத்காரச் செயல்களையும் கண்டு சத்தியாக்

கிரகி பயப்படமாட்டான். சொன்ன சொல்லை நிறைவேற்றுவதில் சத்தியாக்கிரகி கருத்தாக இருக்கவேண்டும். எதிரியின் தந்திரங்களையும் வாக்குப் பிசகையும் பொருட்படுத்தாமல் தன்னுடைய சொல்லை நிறைவேற்ற வேண்டும். பலாத்காரம் நிறைந்த இந்த உலகில், சத்தியவாழ்வை ஏற்றுக்கொண்ட சத்தியாக்கிரகி தீனனாக இருக்கலாம். தீனர்களுக்குத் தெய்வ பலம் எப்போதும் உண்டு. ஆகையால் அவர்களுடைய முயற்சி வெற்றி பெறுவதும் நிச்சயம்.''

யாரிடம் நம்பிக்கை?

(1908)

டிரான்ஸ்வால் சட்டத்தை எதிர்த்துத்தான் இந்தியர்கள் போராடினார்கள் என்றாலும் தென் ஆப்பிரிகாவிலுள்ள இந்தியர்களின் உரிமைகளைக் காக்கவே அவர்கள் இயக்கம் நடத்தினார்கள். காந்திஜியின் சமரசப் பேச்சு டர்பானிலுள்ள இந்தியர்களுக்குச் சந்தேகம் மூட்டிவிட்டதால் அவர் அங்கு சென்று நிலைமையை விளக்கவேண்டியதாயிற்று. டர்பானில் அவர் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். அங்கும் சில பட்டாணியர்கள் வந்து காந்திஜியைத் தூஷித்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கூட்டத்தைக் கலைக்க முயன்றார்கள். இதன் நடுவே பார்ஸி ரஸ்டோம்ஜி போலீஸுக்குத் தகவல் அனுப்பி நிலைமையைச் சமாளித்து விட்டார். கூட்டம் முடிந்து போனிக்ஸ் காலனிக்குச் செல்லக் காந்திஜி விரும்பினார். நண்பர்கள் அவரைத் தனியாக அனுப்ப இசையாமல், உடன் சென்றார்கள். காந்திஜியின் அஹிம்ஸா வாதத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பலாத்காரத்தினால் வெற்றிபெற முடியாது என்றாலும் இடையூறுகள் நேரிடும் என்றே அவர்கள் விவாதித்தார்கள்.

காந்திஜி ஜோகானஸ்பர்க் திரும்பிய பிறகு, அவருடன் நெருங்கிப் பழகும் காலன்பாக் என்ற ஜர்மானியர் மெய்காப்பாளனாக இருந்து வந்தார். காலன்பாக் வாட்ட சாட்டமானவர்; குஸ்தியிலும் குத்துச் சண்டையிலும் நிபுணர். காந்திஜியின் கொள்கைகள் அவரை வசீகரித்து விட்டன. சமரச ஒப்பந்தப்படி இந்தியர்கள் நடந்துகொண்டாலும் சர்க்கார் தவறி விட்டது. ஆகவே மீண்டும் சத்தியாக்கிரகம் துவங்க வேண்டும்

என்ற நிலைமைதான் ஏற்பட்டது. காந்திஜியின் துணிச்சலைக் கண்டு சில ஐரோப்பியர்களும் வெகுண்டு எழுந்தார்கள்.

ஒரு சமயம் காந்திஜி பொதுக்கூட்டத்தில் பேசப் புறப்பட்டார். அன்று பட்டாணியர்களாலோ வெள்ளைக்காரர்களாலோ காந்திஜிக்கு ஏதாவது ஆபத்து நேரக்கூடும் என்ற தகவல் காலன்பாக்குக்குக் கிடைத்தது. அவர் காந்திஜியைப் போகவேண்டாம் என்று தடுக்கவில்லை. கைத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு காந்திஜியுடன் கிளம்பினார்.

காந்திஜி ஆச்சரியத்துடன், "எதற்காக இது?" என்று கேட்டார். காலன்பாக் நிலைமையைச் சொன்னதும், சிரித்துக் கொண்டே காந்திஜி கூறினார்: "கடவுளிடம் நம்பிக்கையுள்ள நமக்கு இவை எல்லாம் எதற்கு? துப்பாக்கியிருந்தாலும் அவன் விரும்பினால் வேறு முடிவு ஏற்படாதா? நான் சேவை செய்ய வேண்டும் என்று இருந்தால் என்னைக் காக்கும் பொறுப்பும் ஆண்டவனுடையதுதான். நம்முடைய கொள்கையில் நமக்கே நம்பிக்கையில்லாவிட்டால் மற்றவர்களை வற்புறுத்த முடியுமா?"

காலன்பாக் துப்பாக்கியை வைத்துவிட்டுக் கிளம்பினார். அன்று நடந்த கூட்டத்தில் எவ்விதமான அசம்பாவிதமும் ஏற்படவில்லை.

கஸ்தூரிபாவின் உறுதி

(1908)

சத்தியாக்கிரக இயக்கத்தில் காந்திஜி தீவிரக் கவனம் செலுத்திக் கொண்டிருந்தபோது கஸ்தூரிபா நோய்வாய்ப் பட்டார். அப்போது காந்திஜியின் குடும்பத்தார் டர்பானிலிருந்தார்கள். நோயின் கடுமை அதிகமாகிவிடவே, டாக்டரே ஜோகானஸ்பர்க்கிலிருந்த காந்திஜிக்குத் தந்திமூலம் செய்தி அறிவித்தார். காந்திஜி வந்த பிறகு, டர்பானில் கஸ்தூரிபாவுக்குச் சத்திர சிகிச்சை நடந்தது. சிறிது குணமடைந்ததும், டாக்டரின் பாதுகாப்பில் கஸ்தூரிபாவை விட்டு விட்டுக் காந்திஜி ஜோகானஸ்பர்க்கிற்குக் கிளம்பினார். சில நாட்களுக்கெல்லாம், டர்பானிலிருந்து டாக்டர் காந்திஜியை டெலிபோன் மூலம் கூப்பிட்டு, "கஸ்தூரிபா மிகவும் பலவீனமாக இருக்கிறார். உடம்பு தேறு

வதற்கு மாமிசச் சத்துக் கலந்த ஆகாரம் கொடுக்க விரும்புகிறேன். உங்களுடைய அபிப்பிராயம் என்ன ?" என்று கேட்டார்.

" அது நோயாளியின் அபிப்பிராயத்தைப் பொறுத்தது" என்றார் காந்திஜி.

" நோயாளியைக் கலந்து ஆலோசிக்க நான் விரும்பவில்லை. என்னுடைய விருப்பப்படி நடக்க முடியாவிட்டால் உயிருக்கே ஆபத்து நேரக்கூடும். எதற்கும் நீங்கள் வந்தால் நல்லது" என்றார் டாக்டர்.

காந்திஜி, உடனே டர்பானுக்குக் கிளம்பினார். அவர் வந்து சேருவதற்குள் டாக்டர் மாமிசச் சத்துக் கலந்த ஆகாரத்தைக் கஸ்தூரிபாவுக்குக் கொடுத்துவிட்டார். அதை அறிந்த காந்திஜி வெகுண்டார். " டாக்டர், இது மோசடியான செய்கை" என்று கூறினார்.

" ஒரு நோயாளியின் உயிரைக் காப்பதில் டாக்டருக்குப் பூர்ண சுதந்தரமுண்டு. ஆகாரமோ மருந்தோ கொடுப்பதில் டாக்டர் பிறருடைய ஆலோசனையைக் கேட்பதில்லை. உயிரைக் காப்பதற்காக, நோயாளியையும் மற்றவர்களையும் ஏமாற்றுவதோ பொய் பேசுவதோ குற்றமாகாது" என்றார் டாக்டர்.

காந்திஜி மன வருத்தமடைந்தார். டாக்டரோ நெருங்கிய நண்பர். வீட்டிலேயே கஸ்தூரிபாவை வைத்துக்கொண்டு சிகிச்சையும் சிசுருஷையும் செய்து வருகிறார். அவருடைய மனமும் புண்படக் கூடாது; கஸ்தூரிபாவுக்கும் மாமிசச் சத்துக் கலந்த உணவு அநுமதிக்கக் கூடாது. இப்படி எண்ணும்போது காந்திஜி, " டாக்டர், இனிச் செய்ய வேண்டியதை நீங்களே சொல்லுங்கள். மேலும் மாமிச உணவு கொடுப்பதை நான் விரும்பவில்லை. அவளுடைய உயிர் போனாலும் சரியே. ஆனால் அவளே விரும்பிச் சாப்பிட்டால் நான் தடை செய்யமாட்டேன்" என்றார்.

டாக்டர் மிகவும் நிதானமாகப் பின்வருமாறு சொன்னார்: " உங்களுடைய கொள்கையை நான் வரவேற்கிறேன். ஆனால் நான் வைத்தியம் செய்யும்போது, என்னுடைய விருப்பப்படியே ஆகாரமோ, மருந்தோ கொடுக்க வேண்டும். என்னுடைய வீட்டில் அவர் பலவீனமடைந்து செத்துப் போவதைக் காண நான் சகிக்கமாட்டேன். இதற்கு நீங்கள் இணங்காவிட்டால் அவரை வேறு எங்காவது அழைத்துச் செல்லுங்கள்."

"நான் அழைத்துச் செல்ல வேண்டும் என்றுதானே சொல்கிறீர்கள் ?"

"அப்படியல்ல, என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லி விட்டேன். நிலைமையை உணர்ந்து எங்களுடைய பொறுப்பில் நோயாளியை விட்டுச் செல்ல வேண்டும் என்றுதான் இவ்வாறு கூறுகிறேன்" என்றார் டாக்டர்.

காந்திஜி கஸ்தூரிபாவைக் கலந்து ஆலோசித்தார். "பிராணன் போனால் போகட்டும். நான் மாமிசம் கலந்த உணவு சாப்பிட மாட்டேன்" என்று கஸ்தூரிபா கூறினார்.

காந்திஜிக்கு மகிழ்ச்சிதான் ஏற்பட்டது. கஸ்தூரிபாவின் முடிவை டாக்டரிடம் தெரிவித்ததுடன், உடனேயே கஸ்தூரிபாவைப் போனிக்ஸ் ஆசிரமத்துக்கு அழைத்துச் செல்வதாகவும் கூறினார்.

டாக்டருக்குக் கோபந் தாளவில்லை. "நோயாளி இருக்கும் நிலைமையை நீங்கள் உணர்ந்தால் இப்படிப் பேச மாட்டீர்கள். வழியிலேயே அவர் பிராணனை விட்டுவிடக்கூடும். என் விருப்பப் படி நீங்கள் நடக்கத் தயாராக இல்லாவிட்டால் இப்போதே அழைத்துச் செல்லுங்கள்" என்றார்.

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. அவ்வப்போது தூறலும் இருந்தது. டாக்டருடைய வீட்டிலிருந்து ரெயில்வே ஸ்டேஷனுக்குச் செல்ல வேண்டும். அங்கிருந்து போனிக்ஸுக்கு ரெயில் பிரயாணம் செய்ய வேண்டும். போனிக்ஸுக்கும் ஆசிரமத்துக்கும் இரண்டரை மைல் தூரமிருக்கும். நோயாளியை எப்படி அழைத்துச் செல்வது என்று காந்திஜி திகைக்கவும் இல்லை; பிரயாண சிரமத்தைத் தாங்க முடியுமா என்று சிந்திக்கவும் இல்லை. ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு விட்டு, ரிக்ஷா வண்டியில் கஸ்தூரிபாவை ஏற்றிக்கொண்டு கிளம்பினார்.

ஸ்டேஷனுக்குள் ரிக்ஷா போக முடியாது. எலும்பும் தோலுமாக இருக்கும் கஸ்தூரிபா, ரெயிலில் ஏறப் பிளாட்பாரத் தைக் கடந்து செல்ல வேண்டுமே! அவரால் நடக்க முடியவில்லை காந்திஜி மனந் தளரவில்லை. அணைத்துத் தூக்கிக்கொண்டு அவர் ரெயிலை நோக்கிச் சென்றார். போனிக்ஸுக்குச் சென்றதும் தூளியைக் கட்டி, கஸ்தூரிபாவை ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்றார். அன்று முதல் கஸ்தூரிபாவுக்கு ஜல சிகிச்சை ஆரம்ப

மாயிற்று. சில தினங்களுக்குள் கஸ்தூரிபாவினால் எழுந்து நடமாட முடிந்தது.

காந்திஜியின் பிடிவாதத்தைக் கேள்வியுற்ற ஒரு சாது, போனிக்ஸ் ஆசிரமத்துக்கு வந்தார். "ஆபத்துக் காலத்தில் வைத்தியர்கள் தரும் ஆகாரத்தையும் மருந்தையும் உட்கொள்ள லாம் என்றும், மாமிச ஆகாரம் செய்வதை மனுஸ்மிருதி போன்ற சாத்திர நூல்களே ஆதரிக்கின்றன என்றும் காந்திஜியிடம் கூறினார். காந்திஜி அவருடன் வாதித்துக் கொண்டிருக்கவில்லை. ஆகவே சாது கஸ்தூரிபாவிடம் சென்று தம்முடைய அபிப் பிராயத்தைக் கூறினார்.

அதற்குக் கஸ்தூரிபா சொன்னார்: "ஸ்வாமி, சாத்திரமும் தர்க்கமும் எனக்குத் தெரியா. அதைப் பற்றி நீங்கள் என் கணவரிடம் பேசிக்கொள்ளுங்கள். ஊனைத் தின்று ஊன் வளர்க்க நான் விரும்பவில்லை.''

சபதம்
(1908)

காந்திஜியின் ஜல வைத்திய முறையினால் நோய் குணப் பட்டதே தவிரக் கஸ்தூரிபாவுக்குப் பூர்ண ஆரோக்கியம் ஏற்பட வில்லை. ஆகார நியதியுடன் இருந்தால் ஆரோக்கியம் பெற்றுவிட முடியும் என்றே காந்திஜி எண்ணினார். உப்பும் பருப்பும் இல்லாமல் சிறிது காலம் உணவு உட்கொண்டால் நல்லது என்று நிச்சயித்து, கஸ்தூரிபாவுக்கு யோசனை கூறினார்; வற்புறுத்தினார். கஸ்தூரிபாவோ இணங்கவில்லை. ருசியற்ற உணவை எப்படிச் சாப்பிடுவது? ருசி என்பது பழக்கத்தினால் ஏற்பட்டது என்று அவரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

ஒரு நாள் காந்திஜி பத்திய உணவைப் பற்றிப் பேசலானார். கஸ்தூரிபாவுக்கு ஆத்திரம் தாளவில்லை. "தினந் தினம் இதே பேச்சுத்தானா? உங்களால்கூட இப்படிச் சாப்பிட முடியாது. எதுவும் சொல்வது எளிது; செய்யும்போதுதான் சிரமம்.'' என்றார் கஸ்தூரிபா.

காந்திஜிக்குக் கோபம் வரவில்லை. மிகவும் அமைதியாக அவர் சொன்னார்: "நான் நோய்வாய்ப்பட்டால் டாக்டர் சொல் வதைப்போலப் பத்திய உணவு சாப்பிடுவேன். இதோ பார், டாக்

டருடைய யோசனையே வேண்டாம். இன்று முதல் ஒரு வருட காலம் நான் உப்பும் பருப்பும் இல்லாமல் சாப்பிடுகிறேன். என்னுடைய மனப்பான்மையை நீ இன்னும் உணரவில்லையே என்றுதான் வருந்துகிறேன். நான் கூறுவதுபோலப் பத்திய ஆகாரம் சாப்பிட நீ இசைந்தாலும் இசையாவிட்டாலும் என் உறுதி மாறாது."

கஸ்தூரிபா திடுக்கிட்டுப் போனார். காந்திஜியோ சொல் தவறமாட்டார். அழுதுகொண்டே கஸ்தூரிபா சொன்னார்: "என்னை மன்னித்து விடுங்கள். உங்களுடைய குணம் தெரிந்தும் நான் பிடிவாதம் செய்தது தவறுதான். நான் பத்தியமாக இருக்கிறேன். தயவு செய்து நீங்கள் அப்படிச் செய்யவேண்டாம். உங்களுடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளுங்கள். இது என்னால் தாளமுடியாத தண்டனை" என்று கெஞ்சினார்.

காந்திஜியோ இணங்கவில்லை. "உன்னுடைய மனம் மாறியது சந்தோஷமளிக்கிறது. நாவடக்கம் மனிதனுக்கு மிகவும் அவசியம். ஆகாரத்தில் மாறுதல் ஏற்பட்டால் கெடுதல் ஏற்பட்டு விடாது. இந்த உணவினால் என்னுடைய உடல் நலம் கெடாது. மேலும், இது ஒரு சோதனை என்றே நான் எண்ணுகிறேன். சொன்ன சொல் தவற என்னால் முடியாது. என்னுடைய பிடிவாதமே, உனக்கும் உறுதியளித்து, விரதபங்கம் ஏற்படும்படி சபல சித்தம் ஏற்படாமல் தடுக்கக்கூடும்" என்றார் அவர்.

"நீங்கள் பிடிவாதக்காரர். ஆண்டவனே வந்து சொன்னாலும் கேட்கமாட்டீர்களே" என்று வருந்தினார் கஸ்தூரிபா.

அதிசீக்கிரம் கஸ்தூரிபா ஆரோக்கியம் அடைந்துவிட்டார். பத்திய உணவுதான் காரணமோ அவருடைய மன உறுதிதான் காரணமோ, சொல்வதற்கில்லை. ஆனால் காந்திஜிக்கு உப்பும் பருப்புமில்லாமல் ஆகாரம் சாப்பிட்டுப் பழக்கம் ஏற்பட்டுவிட்டதால், விரதகாலம் முடிந்த பிறகும் அவர் ஆகாரத்தை மாற்றவில்லை.

தீபாவளி
(1909)

நாற்பத்தைந்து வருஷங்களுக்கு முன்பு இந்தியாவில் சுதேசி இயக்கம் ஏற்பட்டபோது அதன் எதிரொலி லண்டனிலும் கேட்டது. உயர்தரப் படிப்புக்காக லண்டன் சென்ற பல இந்திய

வாலிபர்கள், இந்திய விடுதலை இயக்கத்தில் சிரத்தை காட்டித் தீவிர மாகச் செயலாற்றலானார்கள். காலஞ்சென்ற மகரிஷி வ. வே. சு. ஐயரும் சாவர்க்காரும் இந்திய வாலிபர்களுக்குத் தலைமை வகித் தார்கள். புரட்சி மனப்பான்மையுள்ள இந்தியர்கள் ஒன்றுகூடி வசிக்க இந்திய விடுதி யொன்றை ஆரம்பித்தார்கள். வைத்தியத் தொழிலில் உயர்தரக் கல்வியும் பட்டமும் பெற லண்டன் சென்ற டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனும் அந்த விடுதியில்தான் வசித்து வந்தார். 1909-ஆம் ஆண்டில், அந்த விடுதியிலிருந்த மாணவர்கள் தீபாவளிப் பண்டிகை கொண்டாட நிச்சயித்தார்கள். பண்டிகைச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்வது, பிரபல இந்தியத் தலைவர் ஒருவரைப் பண்டிகைக்குத் தலைமை வகிக்க அழைப்பது, என்று எல்லாம் திட்டமிட்டார்கள். ஆனால் அவர்களுடைய அழைப்பை ஏற்றுக் கொள்ள எந்தத் தலைவருமே விரும்பவில்லை. புரட்சிக்காரர்களுடன் உறவு கொண்டு ஏகாதிபத்தியச் சர்க்காரின் அதிருப்தியை ஏற்றுக் கொள்ள எவருமே தயாராக இல்லை.

அந்தச் சமயத்தில் காந்திஜி லண்டனில் இருந்தார். தென் ஆப்பிரிகாவிலுள்ள பல மாகாணங்கள் ஒன்று சேர்ந்து யூனியன் சர்க்கார் ஏற்படவேண்டும் என்ற முயற்சி ஒன்று அப்போது நடந்துகொண்டிருந்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள் இருந்தா லும், சுதந்தர நாடாக இருக்கவேண்டும் என்று போயர்கள் விரும்பினார்கள். பிரிட்டனின் ஆதிக்கத்தை உதறிவிட ஐரோப் பியர்கள் விரும்பவில்லை. இதைப்பற்றிப் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஆலோசித்துச் சமரசமான முடிவுகாணப் போயர்களும் ஐரோப் பியர்க்ளும் லண்டனுக்கு வந்தார்கள். டிரான்ஸ்வாலிலும், ஓரளவு நேட்டாலிலும்தான் இந்தியர்களை ஒடுக்கச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தது. கேப்டவுன் மாகாணத்தில் இனத் துவேஷம் அதிதீவிரமாக இல்லை. மாகாணங்கள் ஒன்று சேர்ந்து யூனியன் சர்க்கார் ஏற்பட்டுவிட்டால், இனத் துவேஷம் வளர்ந்து, எல்லா மாகாணங்களிலுமே இந்தியர்களுடைய நிலைமை மோசமாகி விடுமோ என்று காந்திஜி போன்றவர்கள் பயந்தார்கள். ஆகவே இந்தியர்களுடைய கட்சியை எடுத்துக்கூறக் காந்திஜியின் தலைமை யில் ஒரு தூதுகோஷ்டி லண்டனுக்குக் கிளம்பிற்று. லண்டனில் சில வாரங்கள் தங்கநேரிட்டபோதுதான் வ. வே. சு. ஐயர் காந்தி

ஜியை இந்திய விடுதிக்கு அழைத்தார். தீபாவளிப் பண்டிகைக்குத் தலைமை வகிக்க ஒரே ஒரு நிபந்தனையின் பேரில் காந்திஜி சம்மதித்தார். சுத்த சைவ உணவுப் போஜனம் இருக்கவேண்டும் என்பது தான் நிபந்தனை. ஐயர் அதை ஏற்றுக் கொண்டார். சைவ உணவுப் போஜனம் என்று நிச்சயமானதும் மாணவர்களே சமையல் செய்ய நிச்சயித்தார்கள். இந்திய உணவு தயாரிக்க ஆங்கிலேய போஜன விடுதிக்காரர்களுக்குத் தெரியாது. சமையலுக்காகவும், விருந்து நடத்தவும் தனி இடம் ஒன்றை ஏற்பாடு செய்தார்கள். டாக்டர் ராஜனும் வேறு சில வாலிபர்களும் சமையல் வேலையை ஏற்றுக் கொண்டார்கள். காலையிலிருந்தே, சாமான்கள் சேகரிப்பதிலும், காய்கறிகளை நறுக்குவதிலும் பட்சணங்கள் செய்வதிலும் அவர்கள் மூழ்ந்து விட்டார்கள்.

மாலை ஆறுமணிக்குத்தான் விருந்து. பிற்பகல் இரண்டு மணிக்குச் சமையலறைப் பக்கமாக ஒரு மெலிந்த மனிதர் வந்து சேர்ந்தார். அவருடைய ஆடையும் நடையும் அவரை அப்பாவி என்றே காட்டின. அவரை எவரும் வரவேற்கவில்லை, யார் என்று கேட்கவுமில்லை. அந்த மனிதரோ உபசாரத்துக்காகக் காத்து நிற்கவில்லை. மற்றவர்களுடன் கலந்துகொண்டு வேலை செய்யலானார். அவரைப் பார்த்த சில மாணவர்கள் வேலை ஏவவும் துணிந்துவிட்டார்கள். கரிப் பாத்திரங்களையும் தட்டுக்களையும் அலம்புவது, மேஜை விரிப்புப் போட்டு, தட்டுக்களை வைப்பது என்று பல வேலைகளை அந்த மனிதர் செய்தார். சமையலறையில் பிரதான ஸ்தானம் வகித்த டாக்டர் ராஜனும் மற்ற வாலிபர்களும் அவரை அதட்டி வேலை வாங்கினார்கள்.

மாலையில் ஐயர் விடுதிக்குள் நுழைந்தார். அந்த மெலிந்த மனிதர் ஓடியாடி வேலை செய்து கொண்டிருப்பதைக் காணத் திடுக்கிட்டார். நேராக அவரிடம் சென்றார். மற்ற வாலிபர்களையும் அழைத்தார். அந்த மெலிந்த மனிதர்தாம் அன்றைய விருந்துக்குத் தலைமை வகிக்கப் போகும் காந்திஜி என்று அறிமுகம் செய்து வைத்தார். அடையாளந் தெரிந்து கொள்ளாமல் மாணவர்கள் வேலை வாங்கியதற்காகக் காந்திஜியிடம் மன்னிப்புக் கோரினார். மற்றவர்களும் வருந்தினார்கள். காந்திஜியோ சிரித்துக் கொண்டே, "நம்முடைய வீட்டு வேலையை நாம்

செய்வதற்கு உபசாரம் எதற்கு? மன்னிப்பு எதற்கு?'' என்று கூறினார்.

விழாவுக்குத் தலைமை வகித்தபோது காந்திஜி சொன்னார்: "சைவ உணவு வேண்டும் என்று நான் நிபந்தனை போட்டேன். ஹிந்துப் பண்டிகையைக் கொண்டாடுகிறோம் என்ற நினைப்பு நம் ஒவ்வொருவருடைய மனத்திலும் இருக்கவேண்டும் என்பது என்னுடைய ஆசை. இங்கு வந்து, உங்களுடன் கலந்து கொண்டதற்காக நான் பெருமையடைகிறேன். குலப்பெருமையை மறந்து, எல்லோரும் ஒன்றுகூடி, சமையல் செய்து விருந்து சாப்பிடுவது நம்முடைய ஐக்கியத்தை மட்டும் காட்டவில்லை; உழைத்துச் சாப்பிடுவதில் இழிவில்லை என்ற உறுதியும், எங்கிருந்தாலும் நாம் இந்தியர்கள்தாம் என்ற எண்ணமும் ஏற்படுகின்றன. உங்களுடன் கலந்துகொள்ள எனக்குச் சந்தர்ப்பமளித்ததற்கு நான் நன்றி கூறுகிறேன்.''

பாபமும் பரிகாரமும்
(1910)

டிரான்ஸ்வாலில் சத்தியாக்கிரகப் போர் வலுத்தபோது, சத்தியாக்கிரகிகளின் குடும்பங்களைப் பாதுகாக்கவேண்டியதாயிற்று. ஆரம்பத்தில் குடும்பத் தேவைக்குத் தக்கவாறு ஒவ்வொரு குடும்பத்துக்கும் பண உதவி செய்தார்கள். சத்தியாக்கிரகிகளுடைய குடும்பங்கள் எல்லாம் ஒரே இடத்தில் வசித்தால் சோர்வு நீங்கி உற்சாகத்துடனிருக்க முடியும் என்பதுடன் ஐக்கிய பாவமும் கட்டுப்பாடும் ஏற்படும் என்று காந்திஜி எண்ணினார். ஜோகானஸ்பர்க்கிலிருந்து முன்னூறு மைல்களுக்கு அப்பாலிருக்கும் போனிக்ஸ் ஆசிரமத்துக்கு அவர்களை அனுப்புவது இயலாத காரியமாக இருந்தது. 1910-ஆம் ஆண்டு மே மாதம் காலன்பாக் ஜோகானஸ்பர்க்கிலிருந்து இருபது மைல் தூரத்திலிருந்த, சுமார் ஆயிரம் ஏகரா பரப்புள்ள தம்முடைய பண்ணையை வாடகையின்றிக் கொடுக்கச் சம்மதிக்கவே, சத்தியாக்கிரகிகளுடைய குடும்பங்களுடன் அங்கு குடியேறக் காந்திஜி நிச்சயித்தார். அந்தக் குடியேற்றத்துக்கு டால்ஸ்டாய் பண்ணை என்று பெயரிடப்பட்டது.

குடியிருக்கும் வீடுகளைத் தாங்களே கட்டிக் கொண்டார்கள். உடலுழைத்துச் சாப்பிடுவதில் எவருமே வெட்கப்படாமல் ஒவ்வொருவரும் வேலை செய்தார்கள். புகையிலை, காபி முதலிய பொருள்கள் தவிர்க்கப்பட்டன. வாலிபர்களும் பெண்களும் விகல்பமின்றிச் சகஜமாகப் பழகினார்கள். அவர்களுடைய நடத்தை தவறக்கூடிய சந்தர்ப்பங்களும் சோதனைகளும் ஏற்பட்டன. உறுதியுடன் எல்லோரும், காந்திஜியின் கட்டளையை ஏற்றுக் கண்ணியமாகவும் கட்டுப்பாட்டுடனும் வாழ்ந்தார்கள்.

ஒரு சமயம் வாலிபர்களில் ஒருவன் இரண்டு பெண்களைக் கேலி செய்தான். அந்தப் பெண்களும் அதை ரசித்தார்கள். அதிசீக்கிரம் தங்களுடைய தவற்றை உணர்ந்த பெண்கள் காந்திஜியிடம் முறையிட்டு மன்னிப்புக் கோரினார்கள். காந்திஜி திகைத்துப்போனார். விசாரணை நடத்தியபோது வாலிபன் செய்தது உண்மையென்று தெரிந்தது. காந்திஜி அவனைக் கடிந்துகொண்டார். ஆனாலும் அவருடைய மனம் அமைதியடையவில்லை. பெண்களுக்கும் அந்தச் சம்பவத்தைப்பற்றி ஏதாவது ஒரு தண்டனை கொடுக்க வேண்டும் என்றே அவர் எண்ணினார். அவர்களுடைய அழகும் சிரிப்பும்தானே அந்த வாலிபனை விகாரமாகப் பேசும்படித் தூண்டின! இரவு முழுவதும் அவர் சிந்தனையில் கழித்தார். மறுநாள் விடிந்ததும் அவர் அந்தப் பெண்களைக் கூப்பிட்டார். "உங்களுடைய அழகுதான் அந்த வாலிபனை வசீகரித்துவிட்டது. அதைக் குலைத்துவிட்டால், இது எல்லோருக்குமே ஒரு படிப்பினையாக இருக்கும். உங்களுடைய கூந்தலைக் கத்தரித்துவிட விரும்புகிறேன்" என்றார். தம்முடைய அபிப்பிராயத்தை ஆசிரமத்திலுள்ள பெரியவர்களுக்கும் எடுத்துச் சொல்லி அவர்களுடைய சம்மதத்தையும் பெற்றார்.

அந்தப் பெண்கள் உயர் குடிப் பிறந்தவர்கள். அறிவும் அழகும் நிறைந்தவர்கள். தங்களுக்குக் கிடைக்கும் தண்டனை மிகவும் கடுமையானது என்று அவர்கள் உணர்ந்தார்கள். ஆனாலும் என்ன செய்வது? காந்திஜியின் ஆணையை ஏற்றுக்கொண்டார்கள். தண்டனை அடைந்தவர்கள் பெண்களே என்றாலும், உண்மையில் அதன் வேகத்தை உணர்ந்தவர்கள் வாலிபர்கள் தாம். அவர்களுடைய மனம் உறுதி அடைந்தது. அதன் பிறகு ஒழுக்கக் கேடான சம்பவம் எதுவுமே ஆசிரமத்தில் நடக்கவில்லை.

உள்ளுணர்ச்சி
(1910)

டால்ஸ்டாய் பண்ணைக்கு அடிக்கடி சத்தியாக்கிரகிகள் வருவதுண்டு. ஒரு சமயம் ஜாமீனில் விடுபட்ட இரு சத்தியாக்கிரகிகள் காந்திஜியைப் பார்க்க வந்தார்கள். நேரம் கழிந்ததே தெரியாமல் அவர்கள் பேசிக்கொண்டு இருந்துவிட்டார்கள். அன்றைக் கடைசி ரெயிலைப் பிடித்தால்தான் மறுநாள் விசாரணைக்காக நீதிஸ்தலத்தில் ஆஜராக முடியும். ரெயிலைப் பிடிப்பதற்குச் சிறிது நேரம்தானிருந்தது. சில மைல்களுக்கு அப்பாலிருந்த ரெயில் நிலையத்தை நோக்கி அவர்கள் ஓட்டமாக ஓடினார்கள். ரெயில் நிலையத்தை அவர்கள் நெருங்கும்போது வண்டி கிளம்பிவிட்டது. அவர்களோ கூவிக்கொண்டே ஓடினார்கள். ஸ்டேஷன் மாஸ்டர் ஓடிவரும் வாலிபர்களைப் பார்த்து ரெயிலை நிறுத்திவிட்டார். இதற்குள் அவர்களை வழியனுப்ப வந்த காந்திஜியும் அங்கு வந்து சேர்ந்துவிட்டார். சத்தியாக்கிரகிகள் சந்தோஷத்துடன் விடை பெற்றுக்கொண்டு ரெயிலேறினார்கள்.

இந்தச் சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது காந்திஜி பின் வருமாறு கூறுகிறார்: "அந்தச் சத்தியாக்கிரகிகளுடைய ஆர்வத்தையும் உத்தியோகஸ்தர்களுடைய சௌஜன்ய பாவத்தையும் நான் பாராட்டுகிறேன். அவர்களைச் சொந்த ஜாமீன் பேரில் அதிகாரிகள் விடுதலை செய்திருந்தார்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தில் மைல் கணக்காக ஓடி அவர்கள் ரெயிலைப் பிடித்தார்கள். ரெயிலைத் தவறவிட்டிருந்தால் உரிய காலத்தில் நீதிஸ்தலத்தில் ஆஜராக அவர்களால் முடியாது. சத்திய சாதனை செய்யவேண்டும் என்ற ஆர்வம் மனிதனுக்குத் தன் மதிப்பும், நம்பிக்கையும் வலிமையும் தருகிறது. எதிராளிகளும் மதித்து நடக்கும்படி கௌரவம் அளிக்கிறது."

பழக்கத்துக்கு அடிமை
(1910)

காந்திஜியின் ஜல வைத்தியத்தில் நம்பிக்கை கொண்ட லுடாவன் என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அப்போது காந்திஜி டால்ஸ்டாய் பண்ணையில் வசித்து வந்தார். வைத்தியர்களிடமும்

டாக்டர்களிடமும் சிகிச்சை பெற்று அலுத்துப்போன லூடாவன், காந்திஜி போட்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டார். வருஷக் கணக்காக அவர் ஆஸ்துமாவினால் கஷ்டப்பட்டவர். புகையிலைப் பழக்கத்துக்கு அவர் அடிமையானவர்.

புகையிலையை அடியோடு விட்டுவிட வேண்டும் என்பதே காந்திஜியின் முதல் நிபந்தனை. காந்திஜி சிகிச்சை செய்யத் தொடங்கினார். சிகிச்சை ஆரம்பித்த சில தினங்களுக்குப் பிறகும் குணத்துக்கான அறிகுறிகள் தென்படாததைக் கண்டு காந்திஜி திகைத்துப் போனார். மேலும் இரவு நேரத்தில்தான் இழுப்பும் இருமலும் வந்து லூடாவன் அவதிப்பட்டார். நோயாளி ரகசிய மாகப் புகை பிடிக்கிறாரோ என்ற சம்சயம் காந்திஜிக்கு ஏற்பட்டது. நேரில் கேட்டபோது இல்லை என்ற பதில்தான் கிடைத்தது. காந்திஜிக்கோ, தம்முடைய சிகிச்சை முறையில் அபார நம்பிக்கை உண்டு. ஆகவே லூடாவனுடைய நடவடிக்கைகளை வேவு பார்க்கலானார்.

காந்திஜி படுத்திருக்கும் வீட்டில், உட்புறமாக ஓர் இடத்தில் லூடாவன் படுப்பது வழக்கம். ஒரு நாள் காந்திஜி சீக்கிரமே உறங்கச் சென்றுவிட்டார். கண்ணை மூடிக்கொண்டு அவர் படுத்திருந்தாரே தவிர உறங்கவில்லை. நிசி வேளையில் லூடாவன் லேசாக இருமினார். உடனே எழுந்து உட்கார்ந்துகொண்டு ஒரு சுருட்டைப் பற்ற வைத்துக்கொண்டார். காந்திஜி மெள்ள எழுந்து அவரிடம் சென்றார். கையிலிருந்த 'டார்ச்' விளக்கினால் லூடாவனுடைய முகத்தில் வெளிச்சம் காட்டினார். லூடாவன் பயத்தினால் நடுநடுங்கிப் போனார். எதிரே காந்திஜி நிற்பதைக் கண்டதும் அவமானம் தாளாமல் தலைகுனிந்தார். சமாளித்துக்கொண்டே, "உங்களை ஏமாற்றிவிட்டேன், என்னை மன்னித்துவிடுங்கள். இன்று முதல் சுருட்டுப் பிடிப்பதை நிறுத்திவிடுகிறேன்" என்றார். அவருக்கு அழுகை அழுகையாக வந்தது.

காந்திஜி அவரைச் சமாதானப் படுத்தினார். "உங்களுடைய நன்மைக்காகத்தான் புகையிலையை ஒதுக்கும்படிச் சொன்னேன். பழக்கத்துக்கு நீங்கள் அடிமையானது ஆச்சரியமல்ல" என்று சமாதானம் கூறினார். அதன் பிறகு லூடாவன் சுருட்டைக் கையால் தொடவேயில்லை. சில தினங்களுக்கெல்லாம் அவர் பூரணமாகக் குணமடைந்துவிட்டார்.

ஆசிரியர்
(1911)

டால்ஸ்டாய் பண்ணையிலுள்ள குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்பைக் காந்திஜி ஏற்றுக் கொள்ளவேண்டிய தாயிற்று. தமிழர், தெலுங்கர், குஜராத்தியர், ஹிந்துஸ்தானியர் என்று பல சாதிக் குழந்தைகள் அங்கு இருந்தார்கள். தாய்ப் பாஷையைத் தவிர ஏறக்குறைய எல்லோருக்கும் புரியக்கூடிய அளவுக்கு ஆங்கிலம் தெரியும். அந்த நாட்டிலுள்ள தமிழர்களுடன் நெருங்கிப் பழகியதால் காந்திஜிக்குத் தமிழ்ப் பாஷையில் ஓரளவு பாண்டித்தியம் ஏற்பட்டது.

கல்வி யறிவைப்போல, தெய்வ பக்தியும் ஒழுக்கமும் குழந்தை களுக்கு மிகவும் அவசியம் என்று காந்திஜி கருதினர். பக்திப் பாடல்களையும், வீரர்களின் கதைகளையும் அவர் போதித்தார். ஆனலும் அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை.

"பொய் பேசும் ஆசிரியர் குழந்தைகளைச் சத்தியம் பேசும் படிப் பழக்க முடியாது. கோழை மனசுள்ள வாத்தியார், வீரர்களு டைய கதைகளைப் பன்னிப் பன்னிச் சொன்னலும், குழந்தைகளின் மனத்தில் தன்னம்பிக்கையும், வீரமும், துணிச்சலும் ஊட்டிச் சிறந்தவர்களாக்கிவிடமுடியாது. ஒழுக்கத்தைப் பற்றிப் பேசுவதில் பலனில்லை. சீலமுள்ள ஆசிரியரைப் பார்த்துப் பழகிக் குழந்தை களுக்கு நல்லகுணம் படியவேண்டும்'' என்று காந்திஜி விரும்பினர். ஆகவே அவர் மிகவும் எச்சரிக்கையுடன் குழந்தைகளிடம் பழகினர்.

ஒரு சமயம், பொய்சொல்லும் குணமும் முரட்டுத்தனமுமுள்ள ஒரு சிறுவன் வகுப்பில் அத்துமீறி நடந்துவிட்டான். காந்திஜி யும் வெகுண்டு, அவனை ரூல் தடியினல் அடித்துவிட்டார். வகுப்பி லுள்ள மாணவர்கள் திடுக்கிட்டுப் போனர்கள். அந்த மாண வனே வாய் விட்டு அழலானன். அடி வாங்கியதால் எற்பட்ட அவமானம் அவனுடைய மனசை உறுத்தவில்லை; அவன் வாட்ட சாட்டமான பதினேழு பிராயமுள்ள பையன். காந்திஜியை எதிர்த்துப் பேசியதுபோல, அவருடைய தண்டனையையும் எதிர்த்து நிற்க அவனல் முடியும். தன்மேல் காந்திஜியின் கை பட்டதும், அவன் திடுக்கிட்டுப் போனன். காந்திஜியின் மனம்

நோக நடந்து கொண்டோமே என்று வருந்தலானான். அதன் பிறகு அவன் நல்லபிள்ளையாக மாறிவிட்டான்.

ஆனால் காந்திஜியோ மனம் புழுங்கலானார். சிறுவனை அடித்தது நியாயம்தானா என்ற கேள்வி அவருடைய மனத்தில் உறுத்திக் கொண்டேதான் இருந்தது. பல வருஷங்கள் வரையில் அவர் இதைப் பற்றிச் சிந்தித்திருக்கிறார்; பலாத்காரத்தில் மனம் செலுத்தியதை எண்ணிப் பச்சாத்தாபப் பட்டிருக்கிறார். 'நான், அடித்ததால் அந்தப் பையன் நல்வழிப்பட்டிருக்கலாம். அச் சம்பவத்தை அவன் மறந்திருக்கக்கூடும். ஆனால் என்னால் மறக்க முடியவில்லை. ஆசிரியரின் கடமையை உணர இச் சந்தர்ப்பம் உதவியது. மாணவர்களைத் தண்டிக்கும் உரிமை ஆசிரியருக்கு உண்டு என்ற எண்ணத்தாலும், கோபத்தாலுமே என்னுடைய மனம் பலாத்காரத்தில் சென்றது. ஆகவே என்னை நான் திருத்திக் கொள்ளவேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது" என்பதே காந்திஜியின் முடிவு.

வண்ணான் காந்தி
(1912)

இந்தியர்களுடைய துயரங்களைப்பற்றியும் சத்தியாக்கிரக இயக்கத்தைப்பற்றியும் நேரில் தெரிந்து கொள்ள 1912-ஆம் வருஷம் அக்டோபர் மாதத்தில் கோபாலகிருஷ்ண கோகலே கேப்டவுனுக்கு வந்தார். தென்னாப்பிரிகாவில் அவர் சில வாரங்கள் தங்கிச் சுற்றுப்பிரயாணம் செய்ய நிச்சயித்தார். ஜோகானஸ்பர்க்கில் அவர் காந்திஜியுடன் டால்ஸ்டாய் பண்ணையில் தங்கியிருந்த போது, அவருடைய பட்டு அங்கவஸ்திரத்தைச் சலவை செய்ய விரும்பினார். டால்ஸ்டாய் பண்ணையில் வண்ணான் கிடையாது. ஆகையால் காந்திஜியே அதைச் சலவை செய்து தர முன் வந்தார். தென்ஆப்பிரிகாவுக்கு வந்ததுமே அங்கு தாண்டவமாடிய நிறத் துவேஷத்தையும், வசதியின்மையையும் காந்திஜி அநுபவித்து விட்டதால் தம்முடைய துணிமணிகளைத் தாமே சலவை செய்து கொள்ளும் வழக்கம் ஏற்பட்டு விட்டது.

காந்திஜிக்குச் சலவை செய்யத் தெரியுமா என்று கோகலே சந்தேகப்பட்டார். மேலும், அந்த அங்கவஸ்திரம் மகாதேவ கோவிந்த ரானடேயால் கோகலேக்குப் பரிசாக அளிக்கப்பட்டது.

புனிதமான அடையாளமாக அதைக் கோகலே காப்பாற்றி வந்தார். "நீங்கள் சிறந்த வக்கீல் என்பதை நான் ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் சலவைத் தொழிலில் உங்களுடைய சாமர்த்தியத்தைப்பற்றித் தெரியாதே? என்னுடைய அங்கவஸ்திரத்தில் சிறு கிழிசல் ஏற்பட்டால்கூட என் பிராணனே போய்விடும். விலை மதிப்பிட முடியாத பொக்கிஷம் அது" என்றார் கோகலே.

"நான் மிகவும் நாசூக்கான வண்ணான். ஒருமுறை என் திறமையைப் பரீட்சியுங்கள்" என்று சொல்லிக் காந்திஜி அங்கவஸ்திரத்தை எடுத்துச் சலவை செய்யச் சென்றார்.

சலவை செய்து, பெட்டிபோட்டு மடித்துக் கொடுத்தபோது கோகலே ஆனந்தமும் வியப்பும் அடைந்தார்.

முதல் அநுபவம்
(1913)

கிறிஸ்துவ மதச் சடங்குப்படி நடந்த கல்யாணங்களும் சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட கல்யாணங்களும்தாம் செல்லத்தக்கவை என்றும், மற்றக் கல்யாணங்களுக்கோ அவற்றின் மூலம் ஏற்பட்ட வாரிசுகளுக்கோ சட்டபூர்வமான பாத்தியதை கிடையாது என்றும் கேப்டவுன் ஸுப்ரீம் கோர்ட் நீதிபதி ஸேர்ள் ஒரு வழக்கில் தீர்ப்பு அளித்தார். இதைக் கண்டு இந்திய சமூகமே திடுக்கிட்டது. ஹிந்துக்களும், முஸல்மான்களும், பார்ஸிகளும் கல்யாணப் பதிவு செய்து கொள்வதில்லை. மதச் சடங்குகளை அவர்கள் புனிதமாக எண்ணுகிறவர்கள். நீதிபதி ஸேர்ளின் தீர்ப்பினால் இந்தியர்களுடைய அந்தஸ்துப் பாதிக்கப்பட்டது. பெண்களுடைய உரிமைக்கு ஆபத்து நேர்ந்தது.

காந்திஜி சர்க்காருக்குக் கடிதம் எழுதினார். ஸேர்ளின் தீர்ப்பைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டால், இந்தியர்களுடைய உரிமைகளைக் காக்க, உசிதமானபடி சட்டங்களைத் திருத்தவேண்டும் என்று கோரினார். சர்க்காரோ அதை ஏற்கவில்லை. ஆகவே பெண்களை ஒன்று திரட்டிப் போராட்டம் நடத்த அவர் முற்பட்டார். போனிக்ஸ் ஆசிரமத்திலுள்ள பெண்களிடம் புதிதாக ஏற்பட்ட சிக்கல்களைக் கூறினார். போராட்டத்துக்கு அவர்கள் கிளம்பவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். காந்திஜியின் கோரிக்கையைக் கஸ்தூரிபாவும் கேட்டுக் கொண்டுதானிருந்தார்

தம்மையும் போரில் ஈடுபடுமாறு கணவர் சொல்லவில்லையே என்ற வருத்தம் அவருக்கு.

"என்னை நீங்கள் ஒரு வார்த்தை கேட்கவில்லையே என்று தான் வருந்துகிறேன். சிறை செல்ல எனக்குத் தகுதியில்லையா? மற்றவர்களுக்குத் திட்டம் வகுக்கும்போது என்னை மட்டும் ஏன் ஒதுக்கிவிட்டீர்கள்?" என்று காந்திஜியைக் கேட்டார் அவர்.

"உன்னிடம் நம்பிக்கையில்லை என்றோ உனக்குத் தகுதியில்லை என்றோ நான் ஒதுக்கிவிடவில்லை. இந்த மாதிரிக் காரியங்களில் ஒவ்வொருவரும் தாமே சிந்திக்கவேண்டும். உன்னுடைய பலம் உனக்குத்தான் தெரியும். என்னுடைய கட்டளைக்காக நீ சத்தியாக்கிரகம் செய்வதை நான் விரும்பவில்லை. நீதிஸ்தலத்தில் உறுதி தளர்ந்து நீ மனம் சோர்ந்தாலும், சிறைவாசக் கஷ்டங்களைத் தாங்காமல் நீ வருந்தினாலும் நான் என்ன செய்ய முடியும்?" என்றார் காந்திஜி.

"நீங்களும் குழந்தைகளும் உறுதியுடன் போராடும்போது நான் மட்டும் சளைத்துவிடுவேனா? எவ்விதமான கஷ்டங்களையும் நான் ஏற்கத் தயார்" என்றார் கஸ்தூரிபா.

"நன்றாக யோசித்துச் சொல், பிறகு வருந்தாதே."

"யோசிக்கவேண்டிய அவசியமே இல்லை. சத்தியாக்கிரகம் செய்ய உறுதி கொண்டுவிட்டேன்."

முதலாவதாகச் சென்ற ஸ்திரீ சத்தியாக்கிரக கோஷ்டியுடன் கஸ்தூரிபாவும் சென்று மூன்று மாதம் சிறைத் தண்டனை ஏற்றார்.

பாதரட்சைகள்
(1913)

டால்ஸ்டாய் பண்ணையில் வசிக்கும்போது காலன்பாக்கும் காந்திஜியும் செருப்புத் தைக்கக் கற்றுக் கொண்டார்கள். சிறைவாசத்தில் பொழுது போக்கவும், கடுங்காவல் தண்டனையை நிறைவேற்றவும் காந்திஜி செருப்புத் தைக்கலானார். ஜனரல் ஸ்மட்ஸுக்குக் காந்திஜியிடம் அரசியல் விவகாரங்களில் விரோதமிருந்தாலும், தனிப்பட்ட முறையில் பிரியமுண்டு. அவருடைய அஹிம்ஸா மார்க்கம் ஸ்மட்ஸைப் பெரிதும் வசீகரித்துவிட்டது. காந்திஜி சிறையிலிருக்கும்போது வாரா வாரம், ஜனரல் ஸ்மட்ஸ புத்தகங்கள் அனுப்புவது வழக்கம்.

விடுதலை பெற்றதும் காந்திஜி ஜனரல் ஸ்மட்ஸைப் பேட்டி கண்டார். சிறையில் தாம் தைத்த ஒரு ஜோடி செருப்புக்களை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். சாகு மட்டும் அதைப் பெரிய பொக்கிஷமாகப் போற்றி வந்தார் ஜனரல் ஸ்மட்ஸ். ஒரு சமயம் நண்பர் ஒருவரிடம் ஜனரல் ஸ்மட்ஸ் பின்வருமாறு கூறினர்: "நான் சிறையில் தள்ளிய அந்த மனிதனின் (காந்தியின்) போராட்டத்தைப்பற்றியும் அவருடைய பெருந்தன்மையையும் தூய்மையையும் பற்றியும் முதலில் தெரிந்து கொண்டவன் நான் தான். என்னுடைய உபயோகத்துக்காகவே அளிக்கப்பட்டன என்றாலும் இந்தப் பாதரட்சைகளின் மீது காலை வைக்க மனம் கூசுகிறது. சத்தியத்தில் நம்பிக்கையும் எதிரியிடம் அன்பும் கொண்ட வீரனல் உருவாக்கப்பட்ட இவற்றை ஞாபகச் சின்னமாகவே போற்றி வருகிறேன்."

தர்ம சங்கடம்
(1913)

இந்தியப் பிரச்னைகளை ஆராய்ந்து ஓர் அறிக்கை தயாரிக்கத் தென் ஆப்பிரிக சர்க்கார் ஒரு கமிஷனை நியமித்தது. சிறையிலிருந்த சத்தியாக்கிரகிகளில் பெரும்பாலோரையும் விடுதலை செய்தது. கோகலேயின் வேண்டுகோளுக்கு இணங்க, இந்தியர்களுக்கும் சர்க்காருக்கும் சமரசம் செய்து வைக்கத் தீனபந்து ஆண்ட்ரூஸும், பியர்ஸனும் டர்பானுக்கு வந்தார்கள்.

சிறையிலிருந்து வெளியே வந்ததும், கமிஷனில் இந்தியர்களுடைய பிரதிநிதி ஒருவர் இருக்க வேண்டும் என்று காந்திஜி கோரினர். மேலும், கமிஷனிலுள்ள இரண்டு ஐரோப்பியர்கள் இந்தியர்களிடம் துவேஷம் கொண்டவர்கள். ஆகையால், எவ்வளவு நேர்மையாக நடந்துகொண்டாலும் தங்களை அறியாமலே அவர்கள் இந்தியர்களுக்குத் தீங்கிழைக்கும் வண்ணம் நடந்து கொள்ளக்கூடும் என்று சர்க்காருக்கு எடுத்துக் காட்டினர். சர்க்கார் காந்திஜியின் கோரிக்கையை நிராகரித்துவிடவே, கமிஷனைப் பகிஷ்காரம் செய்யவேண்டும், மீண்டும் சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்று காந்திஜி ஏற்பாடு செய்யலானர்.

இதன் நடுவே அவர் தீனபந்து ஆண்ட்ரூஸுடன் பிரிடோரியாவுக்குச் செல்ல நேர்ந்தது. அங்குள்ள இந்தியர்கள் மீண்டும்

போர் துவக்கச் சித்தமாக இருந்தார்கள். அதே சமயத்தில், ரெயில்வே ஊழியர்கள் நிர்வாகத்தை எதிர்த்து வேலே நிறுத்தம் செய்தார்கள். ரெயில்வே ஊழியர்கள் அனைவரும் ஐரோப்பியர்கள். அவர்களுடைய கோரிக்கைகளும் வேறு. ஆனாலும், இந்தியர்களும் போராட்டத்தைத் துவக்கிவிட்டால் சர்க்கார் திணறிப் போய் வழிக்கு வந்துவிடும் என்றுகூறி அவர்கள் இந்தியர்களுடைய உதவியை நாடினார்கள். காந்திஜி மறுத்துவிட்டார்.

"சர்க்காருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்தச் சமயத்தில் நாங்களும் போர் முரசு கொட்ட விரும்பவில்லே. நாங்கள் சத்தியாக்கிரகத்தை மீண்டும் துவக்க வேண்டும் என்றால் ரெயில்வே வேலே நிறுத்தம் முடிந்த பிறகுதான் ஆரம்பிக்கவேண்டும்" என்று கூறிவிட்டார். இந்த முடிவைக் கண்டு எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள். இங்கிலாந்திலும், இந்தியாவிலுமுள்ள நண்பர்கள் காந்திஜியின் பெருந்தன்மையைப் பாராட்டினார்கள்.

ஜனரல் ஸ்மட்ஸின் காரியதரிசிகளில் ஒருவர் காந்திஜியைச் சந்திக்க நேர்ந்தபோது பின் வருமாறு சொன்னார்: "எனக்கு இந்தியர்களைக் கண்டாலே பிடிக்கவில்லே. அவர்களுக்குச் சிறு உதவியும் செய்ய நான் விரும்பவில்லே. ஆனால் நாங்கள் உதவி கோரும் போது நீங்கள் உதவி செய்ய முன் வந்து விடுகிறீர்கள். நாங்கள் தொல்லேகளில் சிக்கித் தவிக்கும்போது, நீங்கள் எங்களை வற்புறுத்தாமல் ஒதுங்கி விடுகிறீர்கள். எதிரிகளிடம் அன்பு காட்டும் உங்கள்மீது நாங்கள் கைவைக்க முடியுமா? ஐரோப்பிய வேலே நிறுத்தக்காரர்களுடன் நீங்களும் கலந்துகொண்டு பலாத்காரச் செயலில் இறங்கமாட்டீர்களா என்று நான் ஏங்குவதுண்டு. அப்படிச் செய்தால் உங்களை ஒழித்துக் கட்டிவிடுவது மிகவும் சுலபமாகிவிடும். ஆத்மத் தியாகம் செய்யத் துணிந்த உங்களுடன் பழகுவதே கஷ்டமாகத்தான் இருக்கிறது. சத்தியத்துக்கும் நியாய வரம்புக்கும் உட்பட்டுக் கஷ்டங்களை இன்முகத்துடன் ஏற்கும் உங்களிடம் ராஜதந்திர சாகசங்களைக் காட்ட நேரிடும்போது நாங்கள் சிறுமைப்பட்டுத் தவிக்கிறோம்."

★

உடைமை மறுத்தல்
(1914)

லண்டனிலிருந்த கோகலேயைச் சந்திக்க 1914-ஆம் வருஷம் ஜூலை மாதம் காந்திஜி தென் ஆப்பிரிகாவிலிருந்து புறப்பட்டார். அங்கிருந்து இருவரும் தாய்நாடு திரும்புவதாக ஏற்பாடு. காந்திஜியுடன் காலன்பாக்கும் பிரயாணமானுர். காந்தீயத் தத்துவங்களை வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டவர் காலன்பாக். சத்தியாக்கிரகிகள் தன்னலமற்றிருப்பதுபோல, தன் உடைமையும் மறுக்க வேண்டும்; தனக்கு என்று எவ்விதமான பொருளையும் வைத்துக் கொள்ளக்கூடாது என்றே காந்திஜி வற்புறுத்திஞர்.

புறப்படும் சமயத்தில் நண்பர்கள் காலன்பாக்கிற்கு ஒரு தூரதரிசினியை* அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். கப்பற் பிரயாண காலத்தில், தூரக் காட்சியைக் கண்டு மகிழ்தல் ஒரு பொழுதுபோக்கு. காலன்பாக்கிடம் ஏற்கனவே ஒரு விலை உயர்ந்த தூரதரிசினி இருந்தது. வைர வியாபாரம் செய்து நஷ்டமடைந்துபோன தம்முடைய தூரபந்து ஒருவரிடமிருந்து காலன்பாக் அந்தத் தூரதரிசினியை வாங்கியிருந்தார். கஷ்டப்படுகிறவருக்குப் பண உதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்துடனேயே அதிக விலை கொடுத்து அதை வாங்கிஞர். பிரயாணத்தின்போது இரண்டு தூரதரிசினிகளையும் அவர் எடுத்துச் சென்ருர். அவரிடம் இரண்டு தூரதரிசினிகள் இருப்பதை அறிந்த ஒருவர் விலை கொடுத்து ஒன்றை வாங்க முன் வந்தார். நண்பர்கள் அன்பளிப்பாகத் தந்ததைத் தமக்கென வைத்துக்கொண்டு மற்றதை விலை கூறிஞர் காலன்பாக். இது சம்பந்தமாக அவர் காந்திஜியை ஆலோசனை கேட்டபோது காந்திஜிக்கு ஆத்திரமும் கோபமுந் தான் வந்தன. "உன்னுடையது என்று சொல்லிக்கொள்ளும் பொருள்களும் வைத்திருக்கிருயா?" என்று கேட்டார் அவர்.

காலன்பாக் நிலைமையை விளக்கிஞர். ஒன்று அன்பளிப்பு; மற்றதோ, சுற்றத்தாருக்கு உதவி செய்து பெற்றது. தன்மதிப்புள்ள அந்த உறவினர் காலன்பாக்கிடமிருந்து உதவி பெற விரும்பாமல் தூரதரிசினியை விற்ருர். காந்திஜியோ காலன்பாக்கின் சமாதானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

---

* Binocular

"இதற்காக நாம் விவாதித்துக் கொண்டிருப்பதைவிட, கடலில் தூக்கி எறிந்து விட்டுச் சும்மா இருக்கலாம். பிரச்னையும் தீர்ந்து விடும்" என்றார் காந்திஜி அலுப்புடன்.

"செய்யுங்கள். உங்களுடைய கையினாலேயே வீசி எறியுங்கள். எனக்குச் சம்மதமே" என்றார் காலன்பாக்.

"நிச்சயமாகவா?"

"ஆமாம்."

காந்திஜி சட்டென, அந்தத் தூரதரிசினியை வீசி எறிந்தார். சுமார் ஏழு பவுன் கிரயமுள்ள அதை இழந்துவிட்டோமே என்ற ஏக்கமே காலன்பாக்கிற்கு ஏற்படவில்லை. நீண்ட பெரு மூச்சு விட்டதுடன் சம்பவத்தை மறந்துவிட்டார். அதன் பிறகும் நஷ்ட மடைந்து விட்டோமே என்று அவர் வருந்தவே இல்லை.

திடச் சித்தம்*

(1914)

காந்திஜி லண்டனுக்குச் சென்றபோது முதல் மகா யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. யுத்தத்தில் சேர்ந்து தொண்டு செய்ய அவருடைய மனம் விழைந்தது. இதன் நடுவே அவர் தென் ஆப்பிரிகாவில் ஏற்பட்ட சமரசத்தைப் பற்றியும் எதிர்கால வேலை களைப் பற்றியும் பல ஆங்கில நண்பர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியிருந்தது. யுத்த சேவைக்காகத் தொண்டர் படை அமைப் பதற்காகவும் அவர் பலரைச் சந்தித்தார்.

ஒரு நாள் காந்திஜி தங்கி இருந்த போஜன விடுதிக்கு டாக்டர் ஜோசய்யா ஓயிட்பீல்ட் வந்தார். அன்று ஏதோ கமிட்டிக் கூட்டம் நடக்க இருந்தது. காந்திஜியின் தாடை வீங்கியிருப்பதையும் வாய் திறந்து சரளமாகப் பேச முடியாமல் அவர் தவிப்பதையும் டாக்டர் கவனித்தார். உடனே அவரைப் பரீட்சித்தார். உள் வாயில் ரணமேற்பட்டு, பல் வலி கொடுத்துக் கொண்டிருந்தது.

"பல் வலியினால்தான் இந்த வீக்கம் என்று எண்ணுகிறேன். சில நாட்களாகவே இந்தப் பல் தொந்தரவு கொடுத்துக்கொண்

*இந்தச் சம்பவம் 1909-இல் நடந்ததா 1914-ஆம் வருடத்தில் நடந்ததா என்று தெரியவில்லை. 1914-இல் காந்திஜி டாக்டர் ஜோஸய்யா ஓயிட்பீல்டுடன் நெருங்கிப் பழகியதால் சம்பவம் அப்போது நடந்திருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது.

டிருக்கிறது. பிடுங்கி எடுத்துவிட்டாலும் பரவாயில்லை'' என்றார் காந்திஜி.

"பல்லை எடுக்க வேண்டும் என்றால் நீங்கள் பல் வைத்திய ரிடந்தான் போக வேண்டும். எனக்கு அவகாசமில்லை'' என்றார் டாக்டர்.

காந்திஜியோ அவரை விடுவதாக இல்லை. தொழில் துறையில் தேர்ச்சி பெற்ற டாக்டருக்கும் தம்மால் முடியாது என்று சொல்லக் கூச்சமாகத்தான் இருந்தது.

"டாக்டர், நீங்கள் தட்டிக் கழிப்பதை நான் விரும்பவில்லை. நீங்களே அதை எடுத்துவிடுங்கள். பல் வலியினால் சிந்தனை பாதிக் கப்படுகிறது. வேறு வேலையும் செய்ய முடியவில்லை'' என்றார் காந்திஜி.

டாக்டரால் மறுக்க முடியவில்லை. வெளியே சென்று அருகி லுள்ள ஒரு டாக்டரிடமிருந்து பல் பிடுங்கும் ஆயுதத்தை வாங்கி வந்தார். அதற்குள் காந்திஜி கமிட்டிக் கூட்டத்துக்குக் கிளம்பி விட்டார். வராந்தாவிலேயே, அவரை நிறுத்திக்கொண்டு டாக்டர் பல்லைப் பிடுங்கிவிட்டார். அவர் எதிர்பார்த்தது போலச் சுலபமாக எடுக்கமுடியவில்லை. வலி கொடுக்கும் பல் அவ்வளவு உறுதியாக இருப்பதை அவர் அநுபவத்தில் கண்டதில்லை. காந்திஜியோ வலி யைப் பொறுத்துக் கொண்டார். டாக்டர் மருந்து தடவிய பஞ்சை வாயில் அடக்கிக்கொள்ளச் சொன்னதும், காந்திஜி விடை பெற் றுக்கொண்டு கூட்டத்தில் கலந்துகொண்டார்.

கூட்டம் முடிந்ததும் டாக்டரைக் காந்திஜி சந்திக்க நேரிட்டது. "இப்போது வலி எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார் டாக்டர்.

"என்னுடைய கவனம் வேறு துறையில் திரும்பிவிட்டது, டாக்டர். மேலும் உபாதை கொடுத்துக் கொண்டிருந்த பல்லைப் பற்றியே நான் சிந்தித்துக்கொண்டிருந்ததால் முன்பு வேறு வேலை களில் கவனம் செலுத்த முடியவில்லை. ஆனால் இப்போதைய நிலைமை வேறு.''

"வலி இருக்கிறதல்லவா?''

"நான் பொருட்படுத்தவில்லை'' என்றார் காந்திஜி சிரிப்புடன்.

விஷம்தானு ?

(1915)

காந்திஜி தாய்நாடு திரும்ப நிச்சயித்தபோது போனிக்ஸ் ஆசிரமவாசிகளில் பலரும் அவருடன் திரும்ப விரும்பினுர்கள். காந்திஜி லண்டன் செல்ல வேண்டியிருந்ததால், ஆசிரமவாசிகளை இந்தியாவுக்கு அனுப்பினுர். அவர்கள் சிறிது காலம் தாகூரின் விருப்பத்திற்கிணங்கச் சாந்திநிகேதனத்தில் தங்கினுர்கள். காந்திஜி இந்தியாவுக்கு வந்ததும், தாகூரைச் சந்திக்கச் சென்ருர்.

ஒருநாள் காந்திஜியும் தாகூரும் ஆகாரச் சத்துக்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் காந்திஜி பழங்களையும் கடலை, வாதாமி போன்ற பருப்புக்களையுமே ஆகாரமாகக் கொண்டிருந்தார். தாகூருக்கு உயர்ந்த ,ஆகார வகைகளில் பிரியம் அதிகம். இனிப்புப் பண்டங்களையும் பூரியையும் அவர் விரும்பிச் சாப்பிடுவதுண்டு. பேச்சுவாக்கில் காந்திஜி, "ரொட்டி சாப்பிடுவது அவசியம்தான். அதில் நெய்யைத் தடவி வாட்டும்போது நெய்யின் குணம் மாறிவிடுகிறது. காய்ச்சிய நெய்யில் பூரியைச் செய்யும்போது நெய்யின் சத்து மாறிவிடுகிறது. பூரி அவசியமான ஆகாரந்தானு என்று நான் யோசிப்பதுண்டு. கண்ணுக்கு இனிமையும் வாய்க்கு ருசியும் வேண்டி நாம் சத்துள்ள ஆகாரத்தைக் கெடுத்துவிடுகிருேம். நல்ல தானியத்தை, நெய்யில் பொரித்து விஷமாக்கிவிடுகிருேம். விஷத்தைத்தான் ருசியின் பேரால் சாப்பிடுகிருேம்" என்ருர்.

தாகூர் சிரித்துக்கொண்டே, "நீங்கள் சொல்வதில் உண்மை இருக்கலாம். ஆனுல் அவை கொடிய விஷமாக இருக்க முடியாது நான் ஆயுள் முழுவதும் பூரிதான் சாப்பிட்டு வருகிறென். இதுவரையில் எவ்விதமான கெடுதலும் நேரவில்லை. ஒருவேளை இந்த விஷத்தை முறிக்கும் விஷம் என்னுடைய தேகத்தில் இருக்கிறதோ என்னவோ!" என்ருர்.

காந்திஜி என்ன பதில் சொல்வார்? மோஹனச் சிரிப்புத்தான் பதிலாக வெளி வந்தது. இந்தச் சம்பவத்தை உடனிருந்து ரசித்த சந்தோஷ்பாபு மற்றவர்களுக்குச் சொல்லி மகிழ்ந்தார்.

என்ன பாக்கியம் செய்தோம்!....

(1915)

போனிக்ஸ் ஆசிரம வாசிகள் சாந்திநிகேதனத்தில் தங்கும் போதும் தங்களுடைய தினசரிப் பழக்கங்களை அநுஷ்டித்து வந்தார்கள். தினந்தோறும் காலையில் ஒரு மணிநேரம் அவர்கள் உடலுழைத்து வேலை செய்வது வழக்கம். சாந்திநிகேதனத்தில் ஆசிரியர்கள் வசிக்கும் இடத்திற்குச் சமீபத்திலிருந்த குட்டையைத் தூர்த்துவிட்டால், மேலும் சில வீடுகள் கட்டலாம் என்று நிச்சயித்தார்கள். ஆசிரமவாசிகளுடைய வசதிகளைக் கவனிக்க நியமிக்கப் பட்டிருந்த காகா காலேல்கரும் அவர்களுடன் கலந்து பழகி உடலுழைத்து வேலை செய்யலானார். குட்டைக்கு அருகே ஒரு மண் மேடு இருந்ததால், அதை வெட்டிப் பள்ளத்தில் போட்டார்கள்.

ஒரு நாள் காலையில் காலேல்கரும் மற்றவர்களும் வேலையி லிருந்து திரும்பிய போது, விடுதியில், தட்டுக்களில் உணவு வட்டிக்கப்பட்டுத் தயாராக இருந்தது. அதைக் கண்டு ஊழியர்கள் ஆச்சரியத்துடன் விசாரித்தார்கள். முதல் நாள் இரவு காந்திஜி சாந்திநிகேதனுக்கு வந்து சேர்ந்தார். ஊழியர்களை அவர் சந்திக்க முடியவில்லை என்றாலும் அவர்களைப்பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டார். மறுநாள் காலையில் சாப்பாட்டு நேரத்தில் அவர் களைச் சந்திக்க விரும்பினார். களைப்பாகத் திரும்பும் ஊழியர் களுக்கு உணவு பரிமாறித் தயாராக வைத்துவிட்டால், அவர்கள் உடனே சாப்பிட முடியுமே என்று சமையலறைக்குள் நுழைந்து விட்டார்.

காந்திஜியுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, "நீங்கள் எதற்காக இந்தச் சிரமத்தை ஏற்றுக்கொண்டீர்கள்?" என்று கேட்டார் காலேல்கர்.

"என்ன சிரமம்? நீங்கள் மண்வெட்டி வேலை செய்கிறீர் களே, அதைவிடக் கடினமா! களைப்புடன் நீங்கள் திரும்பும் போது, உபசரிப்பது என்னுடைய கடமை அல்லவா?" என்றார் காந்திஜி.

"உங்களுடைய சேவையை ஏற்றுக்கொள்ள எங்களுக்கு அருகதை வேண்டாமா? இந்தப் பாக்கியம் எங்களுக்கு..."

"அருகதை இல்லையா? ஒரு மணி நேரம் கடுமையாக உழைத்துவிட்டு வந்திருக்கிறீர்கள். உணவு அருந்தியதும் மீண்டும் வேலை செய்ய வேண்டும். எனக்கு ஓய்வு இருந்தது, இந்த வேலையைச் செய்தேன். என்னுடைய சேவைக்கு மதிப்புப் போட்டால், அது உங்களைச் சேரவேண்டிய கூலிதான்" என்று இடைமறித்தார் காந்திஜி.

மூன்றும் வகுப்புப் பிரயாணம்

(1915)

காந்திஜி சாந்திநிகேதனத்தில் இருக்கும்போது கோகலே காலஞ் சென்றுவிட்டதாகச் செய்தி கிடைக்கவே புனவுக்குப் புறப்பட்டார். பர்த்துவானில் வந்து பம்பாய் மெயிலில் ஏறுவதாக ஏற்பாடு. அவர் எப்போதுமே மூன்றும் வகுப்பில்தான் பிரயாணம் செய்வார். ஆகையால் டிக்கெட் வாங்குவதற்காகக் காத்திருந்தார். வண்டி வருவதற்குச் சில நிமிஷங்களுக்கு முன்பு தான் டிக்கெட் கொடுக்கும் பலகணி திறக்கப்பட்டது. ஒருவரோடு ஒருவர் நெரித்துக் கொண்டு டிக்கெட் வாங்க முயன்றார்கள். காந்திஜியும் சமாளித்துக்கொண்டு டிக்கெட் வாங்கினர்.

வண்டியிலும் ஜனநெருக்கடி இருந்தது. காந்திஜி, 'கார்டி'டம் சென்று வண்டியில் ஏற உதவி செய்யுமாறு கோரினர். "எப்படி யாவது தொத்திக்கொள்ளுங்கள், அல்லது அடுத்த வண்டியில் வாருங்கள்" என்றார் ரெயில்வே கார்டு, அலட்சியமாக.

மூன்றாவது வகுப்புக்குள் நுழைவதற்கே இடம் கிடைக்க வில்லை. ஆகவே காந்திஜி 'இண்டர்' வகுப்புப் பெட்டியில் ஏறி விட்டார். அவருடன் வந்திருந்த மகன்லால் காந்தியும, கஸ்தூரி பாவும் அதே பெட்டியில் ஏறிக்கொண்டார்கள். இதைக் கவனித்துக்கொண்டிருந்த ரெயில்வே கார்டு, வண்டி அஸன்ஸால் ஸ்டேஷனைச் சேர்ந்ததும் காந்திஜியிடம் வந்தார். 'இண்டர்' வகுப்பில் பிரயாணம் செய்ததற்காக அதிகக் கட்டணம் கேட்டார்.

"எனக்கு இடம் தேடிக் கொடுப்பது உங்களுடைய கடமை. இப்போதுகூட மூன்றும் வகுப்பில் இருக்க இடம் கொடுத்தால் நாங்கள் போய்விடுகிறோம்" என்றார் காந்திஜி.

" என்னுடன் நீங்கள் வாதாடிக் கொண்டிருப்பதில் பயனில்லை. ஒவ்வொரு மூன்றும் வகுப்புப் பிரயாணிக்கும் வசதி தேடிக் கொடுத்துக்கொண்டிருப்பது முடியாத காரியம். அதிகக் கட்டணம் கொடுங்கள், இல்லாவிட்டால் கீழே இறங்குங்கள்" என்றார் ரெயில்வே கார்டு.

காந்திஜிக்கோ ரெயிலை விட்டுக் கீழே இறங்கிவிட மனமில்லை. தொடர்ந்து பிரயாணம் செய்து புனவுக்குப் போய்விடவேண்டும் என்று அவர் துடித்துக் கொண்டிருந்தார். ஆகவே, புனா வரைக்குமே, கணக்குப் போட்டு அதிகக் கட்டணம் செலுத்திவிட்டார். ஆனாலும் கார்டின் நடத்தையைக் கண்டு அவர் உள்ளங் கொதித்தார்.

மொகல்சராய் ஸ்டேஷனை அடைந்ததும் மூன்றும் வகுப்பில் இடம் கண்டிபிடித்து, மூவரும் இடம் மாறி உட்கார்ந்தார்கள். அந்த ஸ்டேஷனில் இருந்த டிக்கெட் பரிசோதகரிடம் காந்திஜி நடந்த சம்பவத்தைக் கூறி, மூன்றும் வகுப்பில் மாறி உட்கார்ந்து விட்டதற்குச் சாட்சியாக ஒரு அத்தாட்சி கொடுக்கக் கோரினர். டிக்கெட் பரிசோதகர் மறுத்துவிட்டார். காந்திஜி ஸ்டேஷன் மாஸ்டரை அணுகியும் பயனில்லை. புனா சேர்ந்ததும் காந்திஜி ரெயில்வே ஏஜண்டுக்கு நடந்த சம்பவத்தை எழுதி அதிகக் கட்டணம் வசூலித்ததைத் திருப்பித் தரக் கோரினர்.

" அதிகக் கட்டணம் வசூலித்தால் திருப்பிக் கொடுக்கும் வழக்கம் கிடையாது. இருந்தாலும் உங்களுடைய கோரிக்கையை விதிவிலக்காக எடுத்துக்கொண்டு பணத்தைக் கொடுக்கிறோம். பர்த்துவானிலிருந்து மொகல்சராய் வரையில் நீங்கள் இண்டர் வகுப்பிலேயே பிரயாணம் செய்ததால் அந்தப் பகுதிக்கு வசூலித்த தொகை மட்டும் திருப்பித் தரமுடியாது" என்று ரெயில்வே ஏஜண்டு பதில் எழுதிவிட்டார்.

ஆண்டவன் அருள்
(1916)

காந்திஜி ஆமதாபாத்தில் சத்தியாக்கிரக ஆசிரமம் ஏற்படுத்த நிச்சயித்தார். ஆரம்பத்தில், ஜீவன்லால் தேசாய் என்ற பாரிஸ்டருக்குச் சொந்தமான 'கோச்ராப்' பங்களாவை வாடகைக்கு எடுத்துக்கொண்டு சக ஊழியர்களுடன் குடி-

யேறினர். ஆசிரமம் ஆரம்பித்துச் சில மாதங்களுக்குள் தக்கர் பாபா, காந்திஜியிடம் ஒரு ஹரிஜனக் குடும்பத்தை அனுப்ப விரும்புவதாகவும் அவர்களை ஆசிரம ஊழியர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டிருந்தார். காந்திஜி சம்ம திக்கவே, துதாபாயும் அவருடைய குடும்பத்தாரும் ஆசிரமத்துக்கு வந்தார்கள். துதாபாய் பம்பாயில் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தார். அவருடைய ஒரே மகளான லக்ஷ்மியைத்தான் பிற் காலத்தில் காந்திஜியும் கஸ்தூரிபாவும் அபிமான புத்திரியாக ஏற்றுக்கொண்டார்கள்.

ஆசிரமத்தில் தாழ்த்தப்பட்டோருக்கும் சம உரிமை இருக் கிறது என்ற செய்தி ஆமதாபாத்திலேயே ஒரு கொந்தளிப்பைக் கிளப்பிவிட்டது. உதவி செய்துகொண்டிருந்த நண்பர்கள் ஒதுங்கி னர்கள். வேறு சிலரோ சமூக பகிஷ்காரம் செய்து விடுவோம் என்று பயமுறுத்தினர்கள். ஆண்டவன்பேரில் பாரத்தைப் போட்டு விட்டுக் காந்திஜி மௌனமாக இருந்தார்.

இதன் நடுவே, ஆசிரம நிர்வாகியான மகன்லால் காந்தி, "அடுத்தமாதச் செலவுக்குப் பணமில்லையே" என்று வருந்தினர். காந்திஜியோ பணக் கவலைப்படவில்லை. துதாபாயின் மனைவி யான தனி பென்னுடன் ஆசிரம வாசிகள் கலந்து பழகவில்லையே என்ற துக்கமே அவரை வாட்டிற்று. வெளிப் பார்வைக்கு எல் லாரும் சகஜமாகப் பழகுவது போலிருந்தாலும், துதாபாய் தம் பதிகளைப் பெண்கள் எவருமே விரும்பவில்லை என்று காந்திஜி அதிசீக்கிரம் உணர்ந்துவிட்டார். தனி பென் அடக்கமும் சாந்த மும் நிறைந்த பெண்மணி. கஷ்டங்களையும் அவமானத்தையும் ஏற்றுக்கொள்ளும் நிலைமைக்கு மனப்பக்குவம் அடைந்து விட்டவர். காந்திஜி தினந்தோறும் தீண்டாமையைப் பற்றிப் பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுவார். ஆண்டவனுடைய குழந்தைகளில் உயர்வு தாழ்வு கிடையாது என்று வற்புறுத்துவார். நாளாவட்டத்தில் எல்லோரும் மனம் தேறி ஒரே குடும்பமாக வாழ ஆரம்பித் தார்கள்.

ஒரு நாள் சேட்ஜி ஒருவர் ஆசிரம வாசலில் காரை நிறுத்திக் கொண்டு காந்திஜியைப் பார்க்கவேண்டும் என்ருர். காரை விட்டு அவர் கீழே இறங்கவில்லை. விளையாடிக் கொண்டிருந்த குழந்தை கள் காந்திஜியிடம் போய்ச் சொல்லவே அவர் வெளியே வந்தார்.

"நான் ஆசிரமத்துக்குப் பண உதவி செய்ய விரும்புகிறேன். ஏற்றுக் கொள்வீர்களோ?" என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டார் சேட்ஜி.

"சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறேன். உண்மையைச் சொன்னால் இப்போது எங்களுக்குப் பண உதவி மிகவும் அவசியம்" என்றார் பாபு.

"சரி, நாளை இதே நேரத்துக்கு இங்கு வருகிறேன்" என்று விடை பெற்றுக்கொண்டார் சேட்ஜி.

அவர் யார் என்பது காந்திஜிக்குத் தெரியாது. வந்தவரும் தம்மைப்பற்றிச் சொல்லிக் கொள்ளவில்லை. மறு நாள் குறிப்பிட்ட நேரத்தில் சேட்ஜி வாசலில் நின்றவாறே மோட்டார்க் குழலூதிக் காந்திஜியை அழைத்தார். காந்திஜி வெளியே வந்ததும் 13,000 ரூபாய்களை, நோட்டுக்களாகக் கட்டிக் காந்திஜியிடம் கொடுத்து விட்டு விடைபெற்றுக்கொண்டார். அன்றும் தம்மைப் பற்றி அவர் ஏதுமே கூறவில்லை.

ஆண்டவன் அருள் என்று தான் காந்திஜி இந்தச் சம்பவத்தைப்பற்றிக் கூறியுள்ளார்.

காவியும் சேவையும்
(1916)

ஆசிரமம் நிறுவிய சில மாதங்களுக் கெல்லாம் காகா காலேல்கரின் நண்பரான ஸ்வாமி ஸத்யதேவ் காந்திஜியிடம் வந்து சேர்ந்தார். ஆசிரமப்பணி அவரைப் பெரிதும் வசீகரிக்கவே காந்திஜியுடனிருந்து பொதுஜன சேவை செய்ய விரும்பினார். தம்முடைய ஆசையை அவர் காந்திஜியிடம் கூறியபோது மகாத்மா சொன்னார்: "நல்ல யோசனைதான். உங்களைப் போன்றவர்கள் இங்கிருந்து சேவை செய்ய விரும்புவதை வரவேற்கிறேன். ஆனால் நீங்கள் காவி வஸ்திரத்தை விடுத்துச் சாதாரண உடை அணிய வேண்டும்."

ஸத்யதேவ் திடுக்கிட்டார். "அது எப்படிச் சாத்தியம்? நான் சந்நியாச தர்மத்தை ஏற்றுக் கொண்டவனாயிற்றே!" என்று கேட்டார் கவலையுடன்.

"உங்களுடைய தர்மத்தை நான் விடச் சொல்லவில்லை. உடையைத்தான் மாற்றிக்கொள்ளச் சொல்கிறேன்" என்றார் பாபு.

ஸத்யதேவ் மௌனமாக இருந்தார். அப்போது காந்திஜீ சொன்னார்: "நம்முடைய நாட்டில் சந்நியாசிகளை மக்கள் வணங்கு கிறார்கள். காஷாயம் தரித்தவர்களைக் கண்டால் மரியாதையுடன் பழகுகிறார்கள். தீனர்களுக்குச் சேவை செய்யவே விரதம் பூண்டு நாம் இங்கு வசிக்கிறோம். நாம் தான் பிறருக்குச் சேவை செய்ய வேண்டுமே தவிரப் பிறர் நமக்குச் சேவை செய்யவேண்டும் என்ற விருப்பம் கூடாது. பிறர் நமக்குச் சேவை செய்ய அநுமதிக்கவும் கூடாது. சந்நியாச தர்மத்துக்கு நியதி, லட்சியம் எல்லாம் உண்டு. வெளிப்படையான ஆடையினால் மட்டும் சந்நியாசதர்மம் லாப நஷ்டத்துக்கு உள்ளாவதில்லை. மனப்பக்குவந்தான் பிரதானம். ஆசிரம ஊழியர்கள், சுகாதார சேவை செய்யத் துடைப்பத்தை எடுத்துக் கொண்டு கிராமங்களுக்குச் செல்லும் போது நீங்களும் போவதாக வைத்துக் கொள்வோம். காஷாயம் தரித்துள்ள நீங்கள் துடைப்பத்தை எடுத்துக் கொண்டு தெருப் பெருக்குவதை மக்கள் பார்த்துக் கொண்டிருப்பார்களா? அல்லது அவர்களை நெருங்கிப் பழகத்தான் இடம் கொடுப்பார்களா? நம்முடைய தோற்றத்திலும் எளிமை இருந்தால் தான் பிறரை வசீகரிக்க முடியும்; சேவை செய்ய முடியும்."

காந்திஜியின் வாதத்தை ஸத்யதேவ் ஏற்றுக்கொண்டார். ஆனால் காஷாயத்தை மாற்றிக்கொள்ள அவருடைய மனம் ஒப்ப வில்லை. "ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் இந்த ஆடையை அணிந்து கொண்டிருக்கிறேன். இதை மாற்ற முடியாது" என்று கூறி விடை பெற்றுக்கொண்டார்.

திலக் மகராஜ்கி ஜே!
(1916)

ஆமதாபாத்தில் 1916-ஆம் வருஷம் பம்பாய் மாகாணக் காங்கிரஸ் மகாநாடு ஜின்னா சாகேபின் தலைமையில் கூடுவதாக இருந்தது. மகாநாட்டுக்கு விஜயம் செய்யவேண்டும் என்று சம் பிரதாயமாக எல்லாருக்கும் அழைப்பு அனுப்புவதுபோல லோக மான்ய திலகருக்கும் நிர்வாகிகள் அழைப்புக் கடிதம் அனுப்பினார் கள். அந்தக்காலத்தில், காங்கிரஸ் மகாசபை மிதவாதிகளின் ஆதிக்கத்தில் இருந்தது. திலகருடைய தீவிரவாதத்தைக் கண்டு அஞ்சி, பலர் ஒதுங்கினார்கள்.

மகாநாட்டுக்குத் திலகர் வருவதாகத் தகவல் கிடைத்தது. ஒரு சில தீவிரவாதிகள்—அவர்கள் நிர்வாகக் குழுவைச் சேர்ந்தவர்களே—மகாநாட்டுத் தலைவருடன் திலகரையும் ஊர்வலமாக அழைத்துவர வேண்டும் என்று கோரினார்கள். திலகருக்கு வரவேற்பு உபசாரம் செய்யவேண்டும் என்று விரும்பினார்கள். தீவிரவாதிகளின் யோசனையை மற்றவர்கள் நிராகரித்துவிட்டார்கள். வற்புறுத்தினால் தலைவர் ஊர்வலத்தையே ரத்துச் செய்து விட நேரிடும் என்று பயமுறுத்தினார்கள். இந்தச் செய்தி காந்திஜிக்கு எட்டிற்று. மகாநாட்டில் அவர் நேரடியாகக் கலந்து கொள்ளவில்லை. கோகலேயுடன் மிகவும் நெருங்கிப் பழகியதால் காந்திஜியும் ஒரு மிதவாதி என்றும், கோகலேக்கும் திலகருக்கும் எப்போதுமே அரசியலில் அபிப்பிராயபேதம் இருந்ததால், காந்திஜியும் திலகருக்கு வரவேற்பு உபசாரம் செய்யவேண்டும் என்ற கோரிக்கையை ஆதரிக்க மாட்டார் என்றுமே பலர் எண்ணினார்கள்.

மகாநாட்டை நடத்தும் மிதவாதிகளுடைய போக்கைக் கண்டு காந்திஜி வருந்தினார். உடனே அவர் பின்வருமாறு நோட்டீஸ் அச்சடித்து, ஆயிரக்கணக்கான பிரதிகளை நகரமெங்கும் விநியோகித்தார்.

"மாபெரும் தலைவரான லோகமான்யர் நம்முடைய நகரத்துக்கு விஜயம் செய்வதைக் கண்டு நாம் பெருமையடைகிறோம். அவருடைய வரவால் நாம் கௌரவம் அடைகிறோம். அன்னாரை வரவேற்க நான் ரெயிலடிக்குச் செல்கிறேன். தேசபக்தியுள்ள ஒவ்வொருவரும் அன்னாரை ரெயிலடியில் சந்தித்து உபசரிப்பது கடமையாகும்.

இப்படிக்கு
மோகன்தாஸ் காந்தி."

ஆயிரக்கணக்கான மக்கள் ரெயிலடியில் கூடி, 'திலக் மகாராஜ்கி ஜே!' என்ற கோஷத்துடன் லோகமான்யரை வரவேற்றார்கள். ஊர்வலமாக அழைத்துச் சென்று மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். மகாநாட்டு நிர்வாகிகள் அதிகார பூர்வமாக ஏற்பாடு செய்திருந்தால்கூட, இவ்வளவு ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் இருக்குமா என்று சந்தேகந்தான். காந்திஜியின் துண்டுப் பிரசுரம் இந்த அற்புதத்தைச் செய்துவிட்டது.

இந்தப் பாவம் யாருக்கு?

(1917)

காந்திஜி ஆமதாபாத்தில் குடியேறிய பிறகு, தாய்மொழியைப் பற்றியும் பாஷாவாரி மாகாணங்களைப்பற்றியும் அடிக்கடி நண்பர்களிடம் பேசுவதுண்டு. அந்தக் காலத்தில் குஜராத் மாகாணக் காங்கிரஸ் என்று தனியாகக் கிடையாது. பம்பாய் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியில் குஜராத்தி, மராட்டி, கன்னடம், சிந்தி என்று பல பாஷை பேசும் ஊழியர்கள் கலந்து பழக நேரிட்டதால், எல்லோருமே ஆங்கிலத்தில் பேசிப் பழகினார்கள். மேலும் தாய் மொழியில் பேசுவதைக் கௌரவக் குறைவு என்று ஆங்கிலம் படித்தவர்கள் எண்ணினார்கள்.

பம்பாய்க் காங்கிரஸ் கமிட்டியின் அநுமதியில்லாமல் பாஷா வாரியாகப் பிரிந்து வேலை செய்வதோ, மகாநாடுகளை நடத்துவதோ காங்கிரஸ் மகாசபையின் அமைப்பு விதிகளுக்கே முரணாகும். ஆகவே குஜராத்திலுள்ள சில தேசபக்தர்கள் குஜராத் அரசியல் மகாநாடு என்ற பெயரில் 'கோத்ரா' என்ற ஊரில் ஒரு மகா நாடு நடத்த ஏற்பாடு செய்தார்கள். அதற்குத் தலைமை வகிக்கும் படிக் காந்திஜியையே கேட்டுக்கொண்டார்கள். மகாநாட்டுக்கு விஜயம் செய்யும்படி திலகருக்கு அழைப்பு அனுப்பினார்கள். குஜராத்திலுள்ள பிரபலமான ஊழியர்களும் தலைவர்களும் மகா நாட்டில் கலந்துகொண்டார்கள்.

காந்திஜி குஜராத்தியில் தமது தலைமை உரையை நிகழ்த்தினார். மகாநாடு துவங்கிச் சிறிது நேரம் சென்ற பிறகு திலகர் மேடைக்கு வந்தார். பொதுவாகவே அவர் குறிப்பிட்ட நேரத்தில் பிரசங்க மேடைக்கு வருவதில்லை என்பது பிரசித்தமான விஷயம். எந்தக் காரியத்தையும் உரிய காலத்தில் செய்யவேண்டும் என்ற விருப்ப முள்ள காந்திஜி மிகவும் பணிவாகத் திலகரை வரவேற்று ஆசனம் கொடுத்தார். திலகரைத் தம்முடைய குருஸ்தானத்தில் வைத்து வணங்கினாலும், திலகரின் காலதாமதத்தைக் கண்டிக்காமல் இருக்கக் காந்திஜிக்கு மனம் இல்லை. அவர் சொன்னார்: "நாம் சுதந் தரம் கோரி இங்கு கூடியிருக்கிறோம். 'சுயராஜ்யமே என்னுடைய பிறப்புரிமை' என்ற தாரக மந்திரத்தை உபதேசித்த மகானுடைய முன்னிலையில் நாம் இருக்கிறோம். கூட்டம் துவங்கி அரைமணி

நேரத்துக்குப் பிறகுதான் லோகமான்யர் இங்கு வந்திருக்கிறார். நம்முடைய கோரிக்கைக்குப் பலன் ஏற்பட்டுச் சுயராஜ்யம் கிடைப்பதில் அரைமணி நேரம் தவக்கப் பட்டால், இந்தப் பாவம் அவருடைய தலையில் தான் விடியும்.''

சபையிலிருந்தவர்கள் கர கோஷம் செய்தார்கள்.

உள்ளம் தொடுங் கள்வன்
(1917)

குஜராத் அரசியல் மகாநாடு நடந்த போது, அத்துடன் தீண்டாமை விலக்கு மகாநாடும் நடத்தத் தக்கர்பாபா ஏற்பாடு செய்திருந்தார். 'மகாநாட்டுப் பந்தலில் தீண்டாதவர்கள் பயமின்றி உள்ளே நுழைய முடியுமா?' என்று காந்திஜி கேட்கவே, சேரியை அடுத்த ஒரு மைதானத்தில் மகாநாடு நடத்தத் தக்கர்பாபா நிச்சயித்தார். மகாநாடு சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க ஊழியர்கள் அடிக்கடி செல்ல நேரிட்டதால், சேரியும் சுற்றுப்புறமும் சுத்தமாக்கப்பட்டன. சாதி ஹிந்துக்களின் மனமாற்றத்தைத் தெரிந்து கொள்ளத் தாழ்த்தப்பட்டோருக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

காந்திஜிதான் இந்த மகாநாட்டுக்கும் தலைமை வகித்தார். மேடையோ, மேசையோ, அலங்காரமோ இன்றி, தலைவர் அமருவதற்காக மட்டும் ஒரு நாற்காலி போடப்பட்டிருந்தது. தலைமை உரை நிகழ்த்த எழுந்த போது காந்திஜி அருகில் நின்று கொண்டிருந்த வித்தல் பாயின் தோளில் கையை வைத்துக் கொண்டு நாற்காலி மீது ஏறிக்கொண்டார். உயரமான இடத்தில் நின்று பேசினால் தான் எல்லாரும் கவனிக்க முடியும் என்பது அவருடைய துணிபு. சிரித்துக்கொண்டிருந்த வித்தல் பாயைப் பார்த்துக் காந்திஜி சொன்னார்: ''நட்பு முறையில் உங்களுடைய தோளைப் பிடித்துக் கொள்ள நீங்கள் அநுமதித்துவிட்டீர்கள். நான் வெளி வேஷத்தில் மயங்குகிறவன் அல்ல. உங்களுடைய உள்ளத்தையும் தொட்டுப் பார்க்கும் சக்தியும் உரிமையும் எனக்கு உண்டு.''

அதையும் சிரிப்புடன் ஏற்றுக் கொண்டார் வித்தல்பாய். இவர் சர்தார் படேலின் மூத்த சகோதரர். பிற்காலத்தில் காந்திஜியின் ஆணையை ஏற்றுக்கொண்டு, தேச சேவை செய்தார். டில்லி சட்டசபையில் சபாநாயகராக அமர்ந்து நிர்த்தாட்சிண்ணிய

மாகவும் நேர்மையுடனும் பணியாற்றி ஆங்கிலேயர்களுடைய பாராட்டையும் தேச மக்களின் நன்மதிப்பையும் பெற்றார். ஊதியமாகக் கிடைத்த பணத்தில் சிறு பகுதியைச் சொந்தச் செலவுக்கு வைத்துக்கொண்டு, மிகுதியைக் காந்திஜியிடம் அனுப்பி உசிதப்படி தேச நலனுக்காக அதைச் செலவிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மிகவும் சுதந்தரமாகவாழ்ந்த வித்தல்பாயின் உள்ளத்தைத் தொட்டு அடிமையாக்கிவிட்டார் பாபு.

லஞ்சமா, ஊதியமா?
(1917)

ஒப்பந்தக் கூலி முறையை ஒழிக்கவேண்டும் என்று அரசாங்க சபையில்(இம்பீரியல் லெஜிஸ்லேடிவ் கௌன்சில்)ஒரு மசோதாவை மாளவியாஜி கொண்டு வந்தார். காந்தி - ஸ்மட்ஸ் ஒப்பந்தம் ஏற்பட்டுச் சில வருஷங்களாகியும், தென் ஆப்பிரிகாவுக்கு ஒப்பந்தக் கூலிகள் சென்று கொண்டுதானிருந்தார்கள். அப்போது வைசிராயாக இருந்த செம்ஸ்போர்டு பிரபு மசோதாவை அநுமதிக்க மறுத்துவிட்டார். ஆகவே பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்ட நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்யக் காந்திஜி திட்டமிட்டார். ஒரு சமயம் அவர் கராச்சியிலிருந்து கல்கத்தாவுக்குச் செல்ல நேரிட்டது. கராச்சியிலிருந்து லாகூருக்கு வந்து அங்கிருந்து ரெயில் பிரயாணம் செய்யவேண்டும்.

லாகூரில் ஜன நெருக்கடி அதிகமாக இருந்தது. மூன்றாம் வகுப்புப் பெட்டியில் ஒருவரை யொருவர் நெருக்கியடித்துக் கொண்டு பிரயாணிகளிருந்தார்கள். வண்டி புறப்படும் வரையில் காந்திஜி இக்கோடிக்கு அக்கோடி பிளாட்பாரத்தில் அலைந்து இடம் தேட முயன்றார். அந்த வண்டியைத் தவற விட்டு விட்டால் உரிய சமயத்தில் கல்கத்தாவுக்குச் செல்ல முடியாது. காலந்தாழ்த்து வேலை செய்வது காந்திஜிக்குப் பிடிக்காத செய்கை.

அவருடைய தவிப்பை ஒரு போர்ட்டர் கவனித்தான். "பன்னிரண்டு அணாக் கொடுங்கள். உங்களுக்கு இடம் பிடித்துக் கொடுக்கிறேன்'' என்றான்.

காந்திஜி சிறிது யோசித்தார். மனத்தில் சபலம். இது லஞ்சம் கொடுப்பதா அல்லது அவனுடைய சேவைக்குக் கொடுக்கும் ஊதியமா என்று தர்ம விசாரம் செய்து கொண்டிருக்கவோ நேர

மில்லை. புறப்படுவதற்கு அறிகுறியாக எஞ்ஜின் ஊதிற்று. காந்திஜி போர்ட்டரின் கோரிக்கைக்கு இணங்கவே, அவருடைய சாமான்களை அவன் தூக்கிக் கொண்டான். இருவரும் இங்குமங்கும் ஓடினார்கள். ஒரு பெட்டியில் ஜன்னலோரமாகச் சிறிது இடைவெளி இருந்தது. போர்ட்டர் அந்த இடத்தின் வழியாகச் சாமான்களைத் திணித்தான். கதவு அடைத்திருந்ததால், காந்திஜியினால் உள்ளே போக முடியவில்லை.

கோபங் கொண்ட பிரயாணி ஒருவர், "இடம் இல்லையே, அப்பா. உன்னுடைய வேகத்தைப் பார்த்தால் அவரையும் ஜன்னல் வழியாக உள்ளே திணித்து விடுவாய் போலிருக்கிறதே" என்றார்.

போர்ட்டரோ, "பாபு, உள்ளே நுழையுங்கள். நிற்க இடம் இருக்கிறது. போகப் போகச் சரியாகிவிடும்" என்றான்.

பிரயாணிகள் சண்டைக்குக் கிளம்பி விட்டார்கள். போர்ட்டரின் உதவியினால், காந்திஜி ஜன்னல் வழியாகவே தாவி உள்ளே குதித்தார். போர்ட்டரும் ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு சென்றான்.

வண்டி புறப்பட்டது. காந்திஜி நின்று கொண்டே பிரயாணம் செய்தார். "ஏன் ஐயா, நின்று கொண்டிருக்கிறீர்கள்? எங்காவது இடம் பார்த்துக் கொண்டு உட்காருவதுதானே!" என்று பிரயாணிகளில் சிலர் கேட்டார்கள். காலை நீட்டிக் கொண்டு படுத்திருந்தவர்கள் கூட இப்படிக் கேட்டார்களே தவிர, காலை மடக்கிக் கொண்டு இடங் கொடுக்க வில்லை. சில மணி நேரத்திற்குப் பிறகு குசலப் பிரச்னம் நடந்தது. அப்போதும் காந்திஜி நின்று கொண்டு தானிருந்தார். காந்திஜியின் பெயரைக் கேட்டதும் சிலர் திடுக்கிட்டு எழுந்தார்கள். மனம் வருந்தினார்கள். வசதியாக உட்கார்ந்து கொள்ள இடம் கொடுத்தார்கள். இனிமேல் நிற்க முடியாது என்று அலுப்பு மேலிட்டபோதுதான் மற்றவர்கள் குசலம் விசாரித்து இடங்கொடுத்தார்கள். ஆகவே இதுவும் ஆண்டவன் அருள்தான் என்று காந்திஜி எண்ணிக்கொண்டார்.

★

அவசியம் நேர்ந்தால்...............

(1917)

மோதிஹாரி என்ற ஊரில் சில தினங்கள் தங்கிக் குடியான வர்களுடைய வாக்குமூலம் சேகரிக்க வேண்டும் என்று தோன்றிய போது, காந்திஜி தனி ஜாகையில் இருக்க விரும்பினர். தம்மைத் தேடிக்கொண்டு வரும் ஊழியர்களாலும் குடியானவர்களாலும் நண்பர்களுக்கு நேரிடும் சிரமம் ஒருபுறமிருக்க, போலீஸாரின் தொந்தரவும் ஏற்படக்கூடும் என்பதை ஊகித்துக் கொண்ட காந்திஜி, நண்பர்களிடமிருந்து விலகியிருக்க நிச்சயித்தார். அவரு டைய விருப்பப்படி ராஜன்பாபு அருகே இருந்த ஒரு வீட்டை ஏற்பாடு செய்து ஜாகை மாற்ற நாளும் குறிப்பிட்டுவிட்டார்.

குறிப்பிட்ட தினத்தில் வேலை மிகுதியால் ஊழியர்கள், புதுக் குடித்தனம் போவதைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அந்த வீட்டைச் சுத்தம் செய்யவும் இல்லை; வேறு ஏற்பாடுகளும் செய்யவில்லை. மறுநாள் போகலாம் என்று இருந்து விட்டார்கள். இரவு ஒன்பது மணிக்குக் காந்திஜி வீடு திரும்பினர். போட்ட திட்டப்படி புது வீட்டில் குடியேற முடியவில்லை என்று தெரிந்ததும் அவர் ஊழியர் களைக் கடிந்து கொண்டார். மறுநாள் வேறு வேலைகளைக் கவனிக்க வேண்டியிருந்ததால் அந்த இரவிலேயே, சாமான்களைப் புது வீட்டில் சேர்த்துவிடத் தீர்மானம் செய்தார். அந்த நேரத்தில் சாமான்களைத் தூக்கிச் செல்ல வண்டிகளும் கிடைக்கா,. வேலைக் காரர்களும் இல்லை. ராஜன் பாபுவும் மற்றவர்களும் குனிந்து நிமிர்ந்து வேலை செய்து அறியாதவர்கள். மற்ற ஊழியர்களும், தேச சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் காந்திஜியுடன் வேலை செய்ய முன் வந்தவர்கள்.

மற்றவர்கள் திகைத்து நிற்கும்போது, தம்முடைய பெட்டி படுக்கைகளைக் காந்திஜி கட்டி வைத்தார். மற்றச் சாமான்களை யும் எடுத்துச் செல்வதற்கு ஏற்றபடி கட்டினர். இதற்குள் சிலர் திகைப்பு நீங்கிக் காந்திஜிக்கு உதவ முன்வந்தார்கள். காந்திஜியோ, மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு தெருவில் நடக்கலானர். பல வேலைக்காரர்களும், போகபாக்கியங்களும், ஆயிரக்கணக்காகச் சம்பாத்தியமும் உள்ள வக்கீல்களும், பேராசிரியர்களும் அன் றிரவு காந்திஜியுடன் மூட்டை தூக்கிகளானர்கள்.

புதிதாக அமர்த்தப்பட்ட வீடு அருகே இருந்ததால், அதி சீக்கிரத்தில் சாமான்களை அப்புறப்படுத்திவிட்டார்கள். காந்திஜி துடைப்பத்தை எடுத்துக்கொண்டு வீட்டைச் சுத்தம் செய்யலானார்.

இதன் நடுவே வேலைக்காரர்களும் வேறு சில ஊழியர்களும் வந்து சேர்ந்தார்கள். வீட்டைச் சுத்தம் செய்து சாமான்களை ஒழுங்காக எடுத்து வைத்தார்கள். அவசியம் நேர்ந்தால் எந்த விதமான வேலை செய்யவும் சத்தியாக்கிரகி-தேச சேவகன் துணிந்து விடவேண்டும் என்ற முதற் பாடத்தைப் பீஹாரிகள் அன்று கற்றுக்கொண்டார்கள்.

யாரிடம் பயம்?
(1917)

சம்பரானில் குடியானவர்களிடமிருந்து வாக்குமூலம் சேக ரிக்கும்போது, போலீஸ் அதிகாரிகளும் பிரசன்னமாயிருந்ததால், குடியானவர்கள் மனம் விட்டுப் பேச முடியாமல் பயந்தார்கள். ஊழியர்களை வேவு பார்ப்பதில் வேறு சில போலீஸார் ஈடுபட் டார்கள். ஒருநாள் ஊழியர் ஒருவர் குடியானவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும்போது ஒரு சப் இன்ஸ்பெக்டர் வந்து கலந்து கொண்டார். அவருடன் வாதாட விரும்பாமல், ஊழியர் குடி யானவர்களை அழைத்துக்கொண்டு வேறிடம் சென்றார். அங்கும் அந்தச் சப் இன்ஸ்பெக்டர் வந்து விடவே, ஊழியருக்குக் கோபம் வந்துவிட்டது. எழுந்து சென்று விடுமாறு சப் இன்ஸ்பெக்டரைக் கேட்டுக் கொண்டார்.

சப் இன்ஸ்பெக்டர் தந்திரசாலி. தம்மை அந்த ஊழியர் அவ மானப்படுத்திவிட்டதாகக் காந்திஜியிடம் புகார் செய்துவிட்டார். ஊழியர் காந்திஜியிடம் சண்டை போட்டுக்கொண்டு இடத்தை விட்டே போய் விடுவார் என்பது சப் இன்ஸ்பெக்டரின் நினைப்பு. காந்திஜி அந்த ஊழியரைக் கூப்பிட்டு விசாரித்தார். தாம் நினைத்தது போலவே, காந்திஜி ஊழியரைக் கூப்பிட்டு விட்டதால் சப் இன்ஸ்பெக்டருக்குச் சந்தோஷம் தாளவில்லை.

சப் இன்ஸ்பெக்டரைத் தாம் கடிந்து கொண்டது உண்மை தான் என்று ஊழியர் அமைதியாகச் சொன்னார். காந்திஜி சிரித்துக் கொண்டே பின்வருமாறு சொன்னார்: "நம்மிடம் ரகசியத்துக்கு

இடமே கிடையாது. பல பேர் அறியத் தானே குடியானவர்களிட மிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்கிறோம் ? ஆளோடு ஆளாக ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரும் நிற்பதில் நமக்கு என்ன நஷ்டம்? அவர்களுடைய உடுப்பு நம் கண்களை உறுத்துகிறது என்றால் நிலைமை மாறத்தான் வேண்டும். தோட்ட முதலாளிகளிடமும், அதிகாரிகளிடமும் நமக்குள்ள பயம் நீங்கினால்தான் பரிகாரம் தேடமுடியும்.''

''ஆளோடு ஆளாக இருக்கட்டும், அலட்சியம் செய்துவிட்டு உன் வேலையைப் பார்'' என்று குறிப்பால் உணர்த்தினார் காந்திஜி. ஊழியர் அந்தச் சமிக்ஞையைப் புரிந்துகொண்டாரோ என்னவோ, சப் இன்ஸ்பெக்டர் தெரிந்து கொண்டார். அவருடைய முகம் அவமானமும் ஆத்திரமும் மேலிட மாறிற்று. தம்முடைய அதிகாரத் துக்கு மரியாதையும் பெருமையும் கோரியே அவர் காந்திஜியின் முகாமில் நடமாடினார். இனிமேல் ஊழியர்கள் தம்மை மதிக்க மாட்டார்கள் என்று தெரிந்ததுமே ஒதுங்கிவிட்டார். அதன் பிறகு அதிகாரிகளின் நடமாட்டமும் குறைந்தது.

ரகசியம்-1

(1917)

மோதிஹாரி நகரிலிருந்தபோது காந்திஜியையும் அவருடன் உழைத்த ஒவ்வொருவரையும் போலீஸார் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். காந்திஜியுடன் நெருங்கிப் பழகும் ஒரு வக்கீலைப்பற்றி உள்ளூர் மாஜிஸ்டிரேட் சர்க்காருக்கு ரகசியக் குறிப்பு அனுப்பினார். காந்திஜியின் சத்தியவாதத்தைப்பற்றி மாஜிஸ்டிரேட் கேள்விப்பட்டிருந்ததால் சம்பந்தப்பட்ட தகவலைப் பற்றிக் காந்திஜியும் தெரிந்துகொள்வது நலம் என்று அவர் எண்ணினார் போலும். 'மிகவும் ரகசியம்' என்று தலைப்பிட்டு, 'உங்களுடைய தனிப் பார்வைக்கு அனுப்பியிருக்கிறேன். உடனிருக் கும் ஊழியர்களுக்குத் தெரியாமலிருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டு, சர்க்காருக்கு அனுப்பிய குறிப்பின் நகலையும் அனுப்பினார்.

காந்திஜியோ, சம்பந்தப்பட்ட ஊழியரிடமே கடிதத்தைக் காட்டிவிட்டார். இதன் நடுவே மாஜிஸ்டிரேட்டும், ''நான் அனுப்பிய கடிதம் கிடைத்திருக்கும் என்று எண்ணுகிறேன். சம்பந்தப்பட்ட

ஊழியரும் என்னுடைய குறிப்பைப் பற்றித் தெரிந்துகொள்வது நலம் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். தயவு செய்து அவரிடமும் காட்டுங்கள்'' என்று கடிதம் எழுதினர்.

அதற்குக் காந்திஜி பின்வருமாறு கடிதம் எழுதினர்: ''என்னிடம் ரகசியமே கிடையாது. சத்தியாக்கிரக தத்துவத்தில் ரகசியம், மறைவு என்ற வார்த்தைகளுக்கே இடம் இல்லே. கடிதப் போக்குவரத்தில் எனக்கு உதவி செய்யும் நண்பர்கள் எல்லாருமே 'சொந்தக் குறிப்பு' என்று வரும் கடிதங்களேக்கூடப் படிக்க நேரிடும். அவர்களுக்குக்கூடத் தெரியக்கூடாது என்று நீங்கள் விரும்பினல் தயவு செய்து எனக்குக் கடிதமே எழுதாமல் இருங்கள். அந்த மாதிரிக் கடிதங்களேப் பார்க்கவே நான் விரும்பவில்லே.''

இதனல் மாஜிஸ்டிரேட்டின் மனத்தாங்கல் ஏற்படுமோ என்று சக ஊழியர்கள் எண்ணினர்கள். ஆனல் மாஜிஸ்டிரேட் காந்திஜியின் குணமறிந்து, அவருடன் நெருங்கிப் பழகலானர்.

ரகசியம்-2
(1917)

இதுவும் சம்பரானில் நடந்ததுதான். மிகவும் ரகசியமானதும் முக்கியமானதுமான ஒரு தகவலே நண்பர் ஒருவர் காந்திஜியிடம் காட்டினர். அதற்காகக் காந்திஜி தம்மைப் பாராட்டக்கூடும் என்றும் எண்ணினர். தகவலேக் காந்திஜி பயன்படுத்திக்கொள்ள விரும்பினர். ஆனல் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தரிடம் அநுமதி கோரிவிட்டு, அதை உபயோகிக்க விரும்பினர். மிகவும் முக்கிய மான தஸ்தாவேஜு அது. காரியாலயத்திலிருந்து, திருட்டுத்தன மாக அந்த நண்பர் எடுத்து வந்தார். இயக்கத்துக்கு உதவ வேண்டும், காந்திஜியின் பாராட்டைப் பெறவேண்டும் என்ற ஆசையால் செய்த காரியம் அது. காந்திஜியின் அபிப்பிராயம் தெரிந்ததும் அவர் நடுநடுங்கிப் போனர். தமக்கும் சம்பந்தப்பட்ட மற்றச் சிப்பந்திகளுக்கும் நேரப் போகும் தண்டனையை எண்ணும் போதே அவருடைய மனம் பதறிற்று. கிடைத்த விதத்தைக் குறிப்பிடாமல், அதை உபயோகப்படுத்திக்கொள்ளும்படி அவர் காந்திஜியைக் கேட்டுக் கொண்டார்.

காந்திஜியோ, "நம்முடைய இயக்கமே சத்தியத்தின் ஆதரவில் தான் நடக்கிறது. நேர்மையும் பகிரங்கமான செயலும்தான் நம் முடைய பலம். எவ்வளவு முக்கியமான தகவலாக இருந்தாலும், மறைமுகமாகக் கிடைத்து எதிரியைத் தாக்க நான் தயாராக இல்லை. இங்கு ராஜதந்திர சாகஸங்களுக்கு இடம் இல்லை. கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும் வெற்றி நிச்சயம் என்ற உறுதியுடன் போராடுகிற வர்கள் நாம்'' என்று கூறிவிட்டார்.

அந்தத் தகவலை அவர் பயன்படுத்திக்கொள்ளவேயில்லை.

அப்பாவி
(1917)

குடியானவர்களிடமிருந்து வாக்குமூலம் சேகரிப்பதும் அவர் களுடைய துன்பங்களுக்குப் பரிகாரம் தேட முயல்வதும் வெள்ளைக் கார அவுரித் தோட்ட முதலாளிகளுக்குப் பிடிக்கவில்லை. அவர் களுக்கு உடந்தையாகப் போலீஸாரும் ஆரம்பகாலத்தில் காந்திஜி கோஷ்டியினருக்கு இடையூறு செய்வதில் முற்பட்டார்கள். ஒரு சமயம் போலீஸ் கமிஷனர் காந்திஜியிடம் வந்தார். "உங்களிடம் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் உங்களுடைய ஊழியர்களைப்பற்றி எங்களுக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது. உதாரணமாக, ஆசார்ய கிருபளானி இருக்கிறாரே, அவர் ஒரு புரட்சிக்காரர். அவரைப்பற்றி ஏராளமான தகவல்களைச் சேகரித்து வைத் திருக்கிறோம். அவருடைய நடவடிக்கைகளையும் கவனித்து வரு கிறோம். இந்த மாதிரி சகாக்களினால் உங்களுடைய முயற்சியே வீணாகிவிடும். தயவு செய்து நாங்கள் குறிப்பிடும் பேர்வழிகளை நீங்கள் ஒதுக்கிவிட்டால் நல்லது'' என்றார்.

காந்திஜி சிரித்துக் கொண்டே, "கிருபளானியா? அந்த அப்பாவி மனிதன் சதா சமையலறையில் அல்லவா உழைத்துக் கொண்டிருக்கிறான்? என்னுடைய மனைவிக்கு உதவியாக இருப் பதிலேயே அவனுடைய பொழுது கழிந்து வருகிறதே! அந்த மனித னால் என்ன ஆபத்து நேரப் போகிறது?'' என்று கேட்டார்.

போலீஸ் கமிஷனர் ஆச்சரியத்துடன் காந்திஜியைப் பார்த்துக் கொண்டிருந்தார். "வாருங்கள், உள்ளே சென்று பார்க்கலாம்'' என்று காந்திஜி எழுந்தார். சமையலறையில், பாத்திரங்களைக் கழுவி அடுக்கிக் கொண்டிருந்த பேராசிரியரைக்

கண்டதும் போலீஸ் கமிஷனரின் ஆச்சரியம் பன்மடங்காகி விட்டது. எழுநூறு ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு சர்க்கார்க் கல்லூரியில் பேராசிரியர் பதவி வகித்தவர் குற்றேவல் செய்து கொண்டிருப்பதைக் கண்ட பிறகு அவர் என்ன சொல்ல முடியும்!

அப்போது காந்திஜி சொன்னார்: "இவர்தாம் என்னுடைய நம்பிக்கையான தூதர். இவரிடம் தான் நான் முக்கியமான தபால்களையும் கடிதங்களையும் கொடுத்துச் சர்க்காருக்கு அனுப்புகிறேன்" என்றார்.

"அடேடே, பரிசாரகன் என்று தான் எண்ணினேன். டவாலிச் சேவகனாகவும் இவர் மாறி விட்டாரா?" என்று கேட்டார் போலீஸ் கமிஷனர். அதன் பிறகு அவர் எந்த ஊழியரைப்பற்றியும் காந்திஜியிடம் பேசுவதே இல்லை.

தன் கையே தனக்கு உதவி
(1917)

கல்கத்தாவிலும் வெளிநாடுகளிலும் சென்று படித்தவர்களும் கூட அந்தக் காலத்தில் சமபந்தி போஜனம் செய்யத் தயங்கினார்கள். மோதிஹாரியில் தனி விடுதி ஏற்பட்டதும் பிராமண சமையல்காரனை ஏற்பாடு செய்தார்கள். ஒவ்வொருவருடைய வசதிகளைக் கவனிக்கத் தனித்தனியாக வேலைக்காரர்களை நியமித்தார்கள். காந்திஜியோ இதை விரும்பவில்லை. பொது வேலையில் ஈடுபடுகிறவர்கள், சிக்கனமும் எளிமையும் நிறைந்த வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதே அவருடைய கோட்பாடு. ஒரே லட்சியத்துக்காகவே எல்லாரும் பாடுபடுவதால், சாதிசமயப் பாகுபாடுகளை மறந்து ஒரே குடும்பமாகவே எல்லாரும் வாழவேண்டும் என்பதே அவருடைய விருப்பம். மாதக் கணக்கில் மோதிஹாரியில் தங்க நேரிடும்போல் தோன்றவே, காந்திஜி கஸ்தூரிபாவை வரவழைத்தார். அவர் வந்ததுமே சமையல் வேலையை ஏற்றுக்கொண்டார்.

சமையல்காரனை அனுப்பிவிடக் காந்திஜி விரும்பியபோது, ராஜன் பாபு, "நம் அனைவருக்கும் உணவு தயாரிப்பது கடினமான வேலை. உதவிக்குச் சமையல்காரனும் இருக்கட்டும்" என்றார்.

"கஸ்தூரிபாவினால் முடியவில்லை என்றால் நாம் உதவி செய்யலாம். எனக்குச் சிக்கனமாக இருப்பதில்தான் விருப்பம்" என்றார் பாபு.

அன்றிருந்து முறை போட்டுக்கொண்டு எல்லாரும் வேலை செய்ய ஆரம்பித்தார்கள். கூச்சம் தெளிந்து விடவே, மற்ற வேலைகளையும் கவனிக்கலானார்கள். நாளாவட்டத்தில் வேலைக் காரர்களும் விலக்கப்பட்டார்கள். ஒருநாள் காலையில் உணவு எடுத்துச் செல்லும் பித்தளைப் பலகாரக்கூடையைக் கிணற்றடியில் ராஜன் பாபு தேய்த்துக்கொண்டிருந்தார். பளிச்சென்று தேய்ப் பதற்காக மண்ணும் சாம்பலும் கலந்து எடுத்துக் கொண்டார். கை எரிச்சல் கண்டது. நெற்றியில் வியர்வை அரும்பப் பாத்திரம் தேய்ப்பதை அங்கு வந்த காந்திஜி பார்த்துவிட்டார். "பலே, பலே, ஹைகோர்ட் வக்கீல்களைக்கூடப் பாத்திரம் தேய்க்கும் குற்றேவல் காரர்களாக்கிவிட்டேனே! இது எனக்குப் பெருமைதானே!" என்று கேட்டார்.

பாவம், ராஜன் பாபு என்ன பதில் சொல்வார்? இதற்குள் காந்திஜி சொன்னார்: "தன் கையே தனக்கு உதவி என்ற வாசகத்தில் நமக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். நீங்கள் உள்ளூர்ப்பிரமுகர்கள். உங்களுடைய தயவைச் சம்பாதிக்க எத்தனையோ பேர் காத்திருப் பார்கள். நீங்கள் வேலை செய்வதைக் கண்டு அவர்களும் வேலையில் ஈடுபடுவார்கள். ஆனாலும் அவர்களுடைய வேலையை நாம் ஏற்றுக் கொள்வது விரும்பத் தக்கதல்ல. கிராமவாசிகளுடைய பயத்தை நீக்கி, அவர்களுக்கு உதவி செய்யவே நாம் வந்திருக் கிறோம். அவர்களிடமிருந்து வேலை வாங்க அல்ல."

அன்று முதல் ஒவ்வொருவரும் வேலைக்காரர்களுடைய உதவியின்றித் தம் தம் சௌகரியங்களைத் தாமே கவனித்துக் கொள்ளலானார்கள்.

மிரட்டாதீர்கள்
(1917)

சம்பந்தமில்லாதவர்கள் தாம் செய்யும் வேலையில் தலையிடு வதைக் காந்திஜி அனுமதிப்பதில்லை. கிராமம் கிராமமாகச் சுற்றி வரும் ஊழியர்களை அடிக்கடிக் கூப்பிட்டு அங்கங்கே நடக்கும் செய்திகளைத் தெரிந்து கொள்வது காந்திஜியின் வழக்கம். சிக் கலான பிரச்னைகள் எழுந்தாலும் சக ஊழியர்களிடம் அவர் யோசனை கேட்பதுண்டு. மோதிஹாரியில், ஒருநாள் ஊழியர் கூட்டம் நடந்துகொண்டிருந்தபோது பிரபலத் தலைவர் ஒருவர்

காந்திஜியைச் சந்திக்க வந்தார். காங்கிரஸ் வேலையில் அவர் ஈடுபட்டாலும், சம்பரான் போராட்டத்தில் சிரத்தையுள்ளவரல்ல. ஆகவே கூட்டம் முடியுமட்டும் காத்திருக்க வேண்டும் என்று காந்திஜி தகவல் அனுப்பினர்.

அந்தத் தலைவருக்குக் கோபம் வந்து விட்டது. சம்பரான் சம்பந்தமாகத் தாம் வேலை செய்யாவிட்டாலும், காந்திஜி தம்மை ஒதுக்கியது தவறு என்றும், அவமானப்படுத்திவிட்டார் என்றும் கூச்சலிட்டார். கூட்டம் முடிந்ததும் காந்திஜி வெளியே வந்தார். தலைவருடன் பேசிக்கொண்டிருந்தார். அவரைக் காக்க வைத்ததற்காக மன்னிப்புக் கோரவுமில்லை; சம்பரான் போராட்டத்தைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவுமில்லை.

ஏமாற்றமும் ஆத்திரமும் பொங்க அந்தத் தலைவர் விடைபெற்றுக்கொண்டார். காந்திஜியோ அவருடைய கோபத்தைப் பாராட்டவேயில்லை. காந்திஜியின் போக்கைத் தெரிந்துகொண்ட உத்தியோகஸ்தர்கள்கூட, அவரைப்பற்றிச் சர்க்காருக்குத் தகவல் அனுப்பும்போது முன்னதாகவே தெரிவிக்கலானுர்கள்.

"உங்களுடைய கடமையைச் செய்யுங்கள், மனத்துக்குச் சரியென்று தோன்றியதைச் செய்யுங்கள். பிறருடைய தலையீட்டை லட்சியம் செய்யாதீர்கள்" என்றே காந்திஜி கூறுவதுண்டு. அதனுல் எதிரிகள் கூட அவரிடம் சௌஜன்யமாகப் பழக முடிந்தது.

டாம்பீகமா இது?

(1917)

காந்திஜி சம்பரானில் ஏறக்குறைய எட்டு மாதங்கள் தங்க நேரிட்டது. கிராமவாசிகளுடைய வாழ்க்கை நிலையைத் தெரிந்துகொண்டதால் அங்கு தங்கிச் சமூக சேவை செய்யவே காந்திஜி திட்டமிட்டார். முதலாவதாக, கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் நிறுவ வேண்டும் என்று ஆசை கொண்டு, அவர் இச்சாபூர்வமாக வேலை செய்ய ஆர்வங்கொண்ட படித்த இளைஞர்கள் வேண்டும் என்று பத்திரிகைகள் மூலமாக அறிக்கை விட்டார். தமக்குத் தெரிந்த ஊழியர்களை எல்லாம் பீஹாருக்கு வரச் செய்தார்.

ஒரு சமயம் ராஜன் பாபுவும் காந்திஜியும், கிராமங்களைச் சுற்றிப் பார்வையிட்டு வரும் போது, "இந்த மாகாணத்தில் பொது

ஜன சேவையில் ஆர்வமுள்ள படித்தவர்களும் குறைவு; முழு நேர ஊழியர்களின் எண்ணிக்கையும் குறைவு; நிதி கொடுப்பவர்களும் இங்கு மிகக் குறைவு" என்று வருந்தினர்.

"இருக்கலாம். இங்குதான் நம்முடைய வேலை இருக்கிறது. வெள்ளையுள்ளம் படைத்த கிராமவாசிகளிடம் பழகுவதே பேரானந்தமாக இருக்கிறது. இங்கு நல்ல வேலை செய்ய முடியும். எனக்குப் பிடித்த இடம்தான்" என்றார் பாபு.

"அப்படியா?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டார் ராஜன் பாபு.

"ஆமாம், பீஹாரிகளும் என்னைப் போல மிளகாய் சாப்பிடுவதில்லை. மசாலைப் பொருள்களும் விரும்பிச் சாப்பிடுவதில்லை" என்றார் காந்திஜி, குறும்புச் சிரிப்புடன்.

"இது என்ன புதிர்?" என்று திகைத்தார் ராஜன் பாபு. அவருடைய திகைப்பைக் கண்டு காந்திஜி, "மசாலையும் மிளகாயும் டாம்பீகப் பொருள்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது. அவை இல்லாமல் மக்கள் உயிருடன் வாழ முடியும் என்பதை......" என்று சொல்லிக்கொண்டே போனர்.

ராஜன் பாபு சட்டெனக் கேட்டார்: "டாம்பீகப் பொருள்களா? மசாலைப் பொருள்களை வாங்கக்கூட அவர்களிடம் காசு இருப்பதில்லையே!"

"அதைத்தான் நானும் சொல்கிறேன். என்றாவது ஒருநாள் தான் நாமும் விருந்துச் சாப்பாடு சாப்பிடுகிறோம். அதே போல மசாலையும் மிளகாயும் கிடைக்கும்போது இந்த ஏழைகள் விருந்துச் சாப்பாடாகக் கருதிக் களிக்கிறார்கள். ஏழைமையும் அறியாமையும் நிறைந்த இடத்தில்தானே நாம் வேலை செய்யவேண்டும்? இந்த இடமும் மக்களும் எனக்குப் பிடித்ததில் ஆச்சரியம் இல்லையே" என்றார் ஐயன் காந்தி.

பாபுவைக் கேளுங்கள்
(1917)

சம்பரானில் நிர்மாண வேலை செய்யக் காந்திஜி திட்ட மிட்ட போது, பிதிஹர்வா என்ற கிராமத்தில் பள்ளிக்கூட மேற்பார்வையைக் கஸ்தூரிபா ஏற்றுக் கொண்டார். ஒரு சமயம் காந்திஜி அங்கு சென்ற போது, கஸ்தூரிபாவுடன் சுற்றுப்

புறக் கிராமங்களுக்குச் சென்று பார்வையிட்டார். ஆங்காங்கு மக்களிடம் ஆரோக்கிய வாழ்வு பற்றியும், கல்வியறிவு பற்றியும் காந்திஜி சொல்வதுண்டு.

அழுக்கேறிய துணியும், பரட்டைத்தலையுமாகக் கிராமப் பெண்கள் எதிரே நிற்பதைக் கண்டு காந்திஜி மனங் கசிந்து விட்டார். குளித்துத் துவைத்துச் சுத்தமாக இருக்கவேண்டும் என்று ஒரு சிறு பிரசங்கம் செய்துவிட்டார்.

பேச்சு முடிந்ததும், கூட்டத்திலிருந்த பெண், கஸ்தூரிபாவை நெருங்கினாள். "பாபு சொல்வது மிகவும் சரி, நாங்களும் ஆரோக்கியமாக வாழவே விரும்புகிறோம். தயவு செய்து எங்களுடைய வீட்டுக்குள் வந்து பாருங்கள்" என்று அழைத்தாள்.

காந்திஜியும் கஸ்தூரிபாவும் அவளுடைய குடிசைக்குள் நுழைந்தார்கள். சிறியவீடாக இருந்தாலும் துப்புரவாக இருந்தது.

அந்தப் பெண் சொன்னாள்: "அம்மா, நீங்களே பாருங்கள். என்னிடம் பெட்டி பேழை இல்லை. மாற்றுத் துணியாக ஒரு புடைவைகூட இல்லை. சுத்தமாக இரு என்று எனக்குப் போதனை செய்தால் நான் என்ன செய்வது? வயிறு நிறைந்த பிறகு தானே மற்றவை? காலை முதல் மாலை வரையில் உழைத்தாலும் வயிறு நிரம்ப உணவு கிடைப்பது அரிதாக இருக்கிறது. பாபுவிடம் சொல்லி எனக்கு மாற்றுப்புடைவை ஒன்று வாங்கித் தாருங்கள். பிறகு தினந்தோறும் துவைத்துக் குளித்துச் சுத்தமாக இருக்கிறேனா இல்லையா என்று பாருங்கள்" என்றாள்.

காந்திஜி என்ன பதில் சொல்ல முடியும்? அந்தப் பெண் மட்டுமா மாற்றுப் புடைவை இல்லாமல் இருக்கிறாள்? அந்த மாகாணத்திலுள்ள ஆயிரக்கணக்கான பெண்களுக்கு மாற்றுப் புடைவை கிடையாதே? இந்தியாவிலுள்ள பல்லாயிரக் கணக்கான கிராமப் பெண்கள், முழ நீளப் புடைவை கட்ட முடியாமல் இருக்கிறார்களே!

நெருப்பில் போடுங்கள்

(1917)

தம்முடைய அரசியல் குருவான கோகலேயின் பிரசங்கங்களையும், கட்டுரைகளையும் குஜராத்தியில் மொழிபெயர்க்கக் காந்திஜி

விரும்பினுர். கல்வி சம்பந்தமான சில கட்டுரைகளையும் பிரசங்கங்களையும் தனியாகத் தொகுத்து வெளியிட்டால் மாணவர்களுக்கு உபயோகமாக இருக்கும் என்று எண்ணி ஒரு பேராசிரியரிடம் அந்த வேலையை ஒப்பித்தார். அவரும் கோகலேயுடன் நெருங்கிப் பழகினவர். கட்டுரைகளை மொழி பெயர்த்து அச்சிட்டுக் காந்திஜிக்கு அவர் அனுப்பி, முகவுரை எழுதி அனுப்பும்படிக் கேட்டிருந்தார். மொழி பெயர்ப்பைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் முகவுரை எழுதவோ, புத்தகத்தைப் பிரசுரிக்கவோ காந்திஜி விரும்பவில்லை. ஆகவே, அசலுடன் அதை ஒப்பிட்டுப் பார்க்கும்படி மகாதேவ தேசாயிடம் கேட்டுக் கொண்டார். மொழிபெயர்ப்புத் திருப்திகரமாக இல்லை என்று மகாதேவ் கூறிவிட்டார்.

காந்திஜி நரஹரி பரேக் என்பவரிடம் அதை அனுப்பி அபிப்பிராயம் கோரினுர். அசலுக்கும் நகலுக்கும் வித்தியாசம் இருப்பதுடன், சிற்சில இடங்களில் அசல் கட்டுரையிலுள்ள வேகமும் நடையும் அர்த்தமும் தொனிக்கவில்லை என்று நரஹரி பரேக் அபிப்பிராயம் சொன்னுர்.

மகாதேவும் நரஹரியும் குஜராத்திகள். ஆங்கிலத்திலும் தாய் மொழியிலும் வல்லுநர்கள். ஆயினும் காந்திஜி திருப்தியடையாமல் மூன்ருவது நண்பரிடம் அபிப்பிராயம் கேட்க விரும்பினுர். அந்தப் பொறுப்பு, காகா காலேல்கருக்குக் கிடைத்தது. அவருக்கும் குஜராத்தி மொழியில் நல்ல பாண்டித்தியம் உண்டு. மற்றவர்களைப் போலவே அவரும் அபிப்பிராயப்பட்டார். அதன் பிறகு காந்திஜி என்ன செய்தார் தெரியுமா? "இந்த மாதிரி அபத்தமான நூலைக் குஜராத்திகளிடம் சமர்ப்பிக்க நான் விரும்பவில்லை. ஒரு புத்தகம் கூட இல்லாமல் அச்சடித்த அத்தனையையும் நெருப்பிலிட்டு விடுங்கள்'' என்று கட்டளையிட்டார். பழைய காகித வியாபாரம் செய்கிறவர்களிடம் விற்கக்கூட அவர் அநுமதிக்கவில்லை. ஆயிரக்கணக்காக ரூபாய் நஷ்டமடைந்து விட்டதே என்றும் அவர் கவலைப்படவில்லை. இந்த மாதிரியான ஒரு நூலைக் குஜராத்தியில் காணுமல் தடுத்ததே பெரிய லாபமாக அவர் கருதினுர்.

★

அஹிம்ஸையும் துப்பாக்கியும்

(1917)

சாபர்மதி நதிக்கரையில் நவ வடாஜ் என்ற கிராமத்துக்கு அருகில் நிலம்வாங்கிக்கொண்டு சத்தியாக்கிரஹ ஆசிரமத்தைஅங்கு மாற்றினர் காந்திஜி. குடியிருப்பு வசதிகளைச் செய்து கொண்டு அங்கு செல்வதற்கு அவகாசமில்லை. கோச்ராப் மாளிகையிலும் சுற்றுப் புறத்திலும் கடுமையாகக் காலராநோய் பரவி இருந்ததால் அந்த வட்டாரத்தை விட்டு வெளியேற வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஆகவே திறந்த வெளியில் கூடாரங்களைப் போட்டுக் கொண்டு எல்லோரும் வசிக்கலானார்கள். பிறகுதான் குடிசைகள் நிர்மாணமாயின. ஜனசந்தடியற்ற இடமாக இருந்ததால் அடிக்கடி திருட்டுப்பயம் ஏற்பட்டது. இரவு நேரத்தில் ஆசிரமத்தைச் சுற்றி ரோந்து வந்து காவல் காக்க ஊழியர்கள் முறைபோட்டுக் கொண்டார்கள். அந்தச் சமயம் காந்திஜி வேறு அலுவலாகச் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். ஆசிரமத்துக்குத் திரும்பிய அன்று மாலையில் பிரார்த்தனைக்குப் பிறகு அவர் திருடர்களைச் சமாளிக்க என்ன செய்யலாம் என்று ஊழியர்களுடன் ஆலோசித்தார்.

அஹிம்ஸையில் தீவிரப்பற்றுள்ள மகன்லால் காந்தியே, "சந்தர்ப்பத்தை யொட்டி, யோசிக்கும் போது தற்காப்புக்காகத் துப்பாக்கி இருப்பது நல்லது" என்றார். மற்றவர்களுக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. அஹிம்ஸையில் பற்றுள்ளவர்களே ஆயுதபலத்தை நாடினால் ஊராரின் சிரிப்புக்கு ஆளாக நேரிடும் என்று கூறிவிட்டார்கள்.

அப்போது காந்திஜி சொன்னார்: "ஆயுதம் அவசியம் என்று மகன்லால் கருதினால் நான் துப்பாக்கியும் வாங்கித் தருகிறேன். அதை வைத்துக் கொள்ளச் சர்க்காரிடமிருந்து 'லைசென்'ஸும் வாங்கித் தருகிறேன். மற்றவர்கள் நம்மைப்பற்றி அவதூறு சொல்வார்களே என்று பயப்படவேண்டாம். நாம் சத்திய சாதகர்கள். மற்றவர்களுக்குப் பதில் சொல்லும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்."

மீண்டும் விவாதம் வளர்ந்தது. காந்திஜியின் யோசனையை ஏற்பதிலும் தயக்கமும் எதிர்ப்பும் இருந்தன.

"பயத்தினால் நடுங்கிக் கொண்டு இரவுத் தூக்கம் கெட்டு எத்தனை நாட்கள் தவிக்கப் போகிறீர்கள்? ஆண்களும் பெண்களும் உயிரும் உடைமையும் போய்விடுமோ என்ற கிலியுடன் இருப்பதைவிட, திருடர்கள் வந்தால் எதிர்த்து நிற்கத் துப்பாக்கி இருக்கிறது என்ற தைரியத்துடன் வாழ்வது மேல் அல்லவா? பயத்தினால் நடுங்குகிறவன் அஹிம்ஸை மார்க்கத்தைக் கடைப்பிடித்து வாழமுடியாது. தீரர்கள்தாம் அஹிம்ஸை வழியில் வாழ முடியும். பயத்தினால் செத்துச் செத்துப் பிழைப்பதைவிட ஆயுதத்தை வைத்துக் கொண்டு நிம்மதியுடன் இருப்பது தான் நல்லது. அபவாதத்துக்குப் பயந்து கொண்டு மனச் சஞ்சலப்படுவதும் விரும்பக் கூடியதல்ல. நம்முடைய தீர்மானத்தை மற்றவர்கள் தெரிந்து கொண்டால் வம்புப்பேச்சின் வேகமும் குறைந்து விடும்" என்றார் காந்திஜி.

மீண்டும் யோசனைதான்! அப்போது காலேல்கர் சொன்னார்: "நமக்குத் துப்பாக்கி வேண்டாம். கொள்கையைக் கடைப்பிடிக்க முயலுவோம். கஷ்டங்களை எதிர்த்து நின்று போராடுவோம்" என்று.

"அடேயப்பா, பாபுவை விட ஒரு படி மேலே போய் விட்டாரே இவர்" என்றே மற்றவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

"நான் அஹிம்ஸா வாதத்துக்காகத் துப்பாக்கி வேண்டாம் என்று சொல்லவில்லை. என்னுடைய காரணமே வேறு. இன்று பாபுவுக்குச் சர்க்காரிடம் மிகுந்த செல்வாக்கு இருக்கிறது. மிகவும் சுலபமாக அவர் ஒரு துப்பாக்கியைப் பெற்று விட முடியும். ஆனால் இங்கு நாம் யாருக்காக வாழ்கிறோம்? கிராமவாசிகளுடைய நலனுக்காகத்தானே? கிராமங்களில் திருடர்கள் புகுந்து கொள்ளையிட்டால், அவர்களை விரட்டக் கிராமவாசிகளிடம் துப்பாக்கிகள் இல்லையே! அவர்கள் துப்பாக்கி வைத்துக் கொள்வதையும் சர்க்கார் அநுமதிக்க வில்லையே? நாமும் கிராமவாசிகளைப் போல வாழ்வோம். கிராமவாசிகள் கையாளும் தற்காப்பு முறைகளைக் கையாளுவோம். நமக்கு மட்டும் துப்பாக்கி எதற்கு?" என்றார் காலேல்கர்.

அவருடைய வாதத்தைக் காந்திஜி ஏற்றுக் கொண்டார். துப்பாக்கி வேண்டும் என்ற யோசனையே கைவிடப்பட்டது.

பரிசும் மதிப்பும்

(1917)

இந்தியா திரும்பிய புதிதில் காந்திஜியிடம் சர்க்கார் கண்ணியமாக நடந்து கொண்டார்கள் அவருடைய கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்தார்கள். மனித சமூகத்திற்கு அவர் செய்துவரும் சேவையைப் பாராட்டி 1915-ஆம் ஆண்டில் 'கெய்ஸர் - இ - இந்த்' பதக்கத்தைக் கொடுத்தார்கள். மிகவும் கௌரவம் வாய்ந்த பாராட்டுதலுக்குத்தான் அந்தப் பதக்கம் அளிப்பது வழக்கம். தங்கத்தாலான அந்தப் பதக்கத்தைப் பார்த்ததும் காகா காலேல்கர், "தங்களுடைய வலையில் சர்க்கார் உங்களையும் இழுத்து விட்டார்கள்" என்றார்.

அதற்குக் காந்திஜி சொன்னார்: "இந்தப் பதக்கத்தை அரசாங்க விசுவாசத்துக்காகக் கொடுப்பதில்லை. சமூக சேவை செய்கிறவர்களைப் பாராட்டும் சின்னம் இது."

"இதை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? காணிக்கையாகக் கிடைக்கும் பொருள்களை நீங்கள் ஏலம் கூறி விடுவது வழக்க மாயிற்றே?" என்று கேட்டார் காலேல்கர்.

"இல்லை, இல்லை. இதை ஏலம் போட முடியாது. என்னிடமே இருக்கட்டும்" என்றார் காந்திஜி.

காந்திஜியின் பதிலைக் கேட்டு காலேல்கரும் மற்றவர்களும் ஆச்சரியமடைந்தார்கள். காந்திஜி சம்பாரானுக்குச் சென்றபோது, பீஹார் சர்க்கார், மாகாணத்தை விட்டே அவர் போய் விட வேண்டும் என்று உத்தரவிட்டது. அதைக் காந்திஜி எதிர்த்து நின்றார். "என்னுடைய நாட்டு மக்களுக்குச் சேவை செய்யவே இங்கு வந்திருக்கிறேன். எடுத்த காரியத்தை முடிக்காமல் இங்கிருந்து வெளியேற மாட்டேன்" என்று பதிலிறுத்து விட்டார் காந்திஜி. அதே சமயத்தில் ஆமதாபாத்திலுள்ள ஆசிரம நிர்வாகிக்கும் பின் வருமாறு கடிதம் எழுதினார்:

"சமூக சேவைக்காக என்னைப் பாராட்டிச் சர்க்கார் அளித்த பதக்கம் ஆசிரமத்தில் இருக்கிறது. அதை உடனே வைசிராய்க்குத் திருப்பி அனுப்பிவிடுக. என்னுடைய சேவையைச் சர்க்கார் பாராட்ட முடியாத போது, அதை நான் வைத்துக் கொண்டிருப்பது அர்த்தமற்ற செய்கையாகும்."

சக்கரவர்த்தி ?

(1917)

சாபர்மதிக்கரையில் ஆசிரமத்தை மாற்றிய புதிதில் ஒருநாள் மாலைப் பிரார்த்தனைக்குப் பிறகு காந்திஜி ராவ்ஜி படேல் என்பவருடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது சில்லென்று பனிக் காற்று வீசிக் கொண்டிருந்ததால் காந்திஜி ஒரு கம்பளிப் போர்வையை மடித்துக் கழுத்தில் போட்டுக் கொண்டிருந்தார். பேசிக் கொண்டிருக்கும்போதே, காந்திஜியின் தோளின்மீது ஏதோ அசைவதைப் படேல் கவனித்தார். அவருடைய கம்பளியில் கோடு போல ஏதோ இருப்பதை அவர் முதலில் பார்த்தார். அந்தக் கோடு நெளிவது போலத் தோன்றவே உன்னிப்பாகப் பார்த்தார்.

அவருடைய கவனம் மாறியதைக் காந்திஜி கவனித்து, "என்ன பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார்.

படேல் மகா துணிச்சல்காரர். கூக்குரலிட்டால் அந்தப் பாம்பு மிரண்டு காந்திஜியின் கழுத்தைக் கடித்துவிடுமோ என்ற பயமும் அவருக்கு ஏற்பட்டது. மிகவும் அமைதியாக அவர் சொன்னார்: "ஒன்றுமில்லை, பாபு, உங்களுடைய தோளில் ஒரு பாம்பு விளையாடுகிறது. அசையாமல் இருங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

காந்திஜியும் திடுக்கிடவில்லை. "சரி, என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார் நிதானமாக,

ராவ்ஜி படேல் மெதுவாக எழுந்தார். அந்தக் கம்பளிப் போர்வையின் நாலு மூலைகளையும் பிடித்துக்கொண்டு சுருட்டினார். அசைவைக் கண்டதும் பாம்பு போர்வை மடிப்புக்குள் தலையை இழுத்துக்கொண்டது. படேல் தூர எடுத்துச் சென்று போர்வையை உதறினார். பாம்பு ஓடிவிட்டது.

மறுநாள் காலையில் பத்திரிகைகளில் இந்தச் செய்தி வெளியாயிற்று. நிருபர்களுடைய மனோதர்மத்துக்கு ஏற்றபடி செய்தியும் மாறுபட்டது: "தலைக்கு மேல் பாம்பு படமெடுத்தாடினால் தரணியாளக் கூடும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். காந்திஜியின் தலைக்கு மேல் பாம்பு படம் விரித்து நின்றது. யாரையுமே இம்சிக்காமல் கீழே இறங்கி ஓடிற்று" என்று எல்லாம் செய்திகள் வந்தன.

பல நாட்களுக்குப் பிறகு இதைப் பற்றிப் பேச நேர்ந்தபோது காலேல்கர், "பாம்பு என்றதும் உங்களுக்கு எப்படி இருந்தது?" என்று கேட்டார்.

பாபு சொன்னார்: "பாம்பு என்றதும் கணநேரம் நான் நடுங்கினேன். உடனே தைரியம் வந்துவிட்டது. என்னை அந்தப் பாம்பு கடித்திருந்தாலும் அதைக் கொல்ல வேண்டாம் என்றே கூறியிருப்பேன். பாம்பைக் கண்டதும் நாம் பயப்படுவது இயல்புதான். அதுவும் பயந்து போய்த் தன்னைக் காத்துக் கொள்ளவே எதிரியைக் கடிக்கிறது. பாம்பு நம்முடைய விரோதியல்ல; பயம்தான் நம்முடைய விரோதி."

யார் பேரில் தவறு?

(1918)

நரஹரிபரேக்கும் மகாதேவதேசாயும் அத்தியந்த நண்பர்கள். மனம் விட்டுப் பழகுவதைப் போலவே, ஹாஸ்யமும் கிண்டலுமாகக் கடிதம் எழுதிக் கொள்ளுவார்கள். ஒரு சமயம் காந்திஜி மகாதேவுக்குச் சில பொறுப்புக்களை அளித்து நிறைவேற்றச் சொன்னார். இதைப் பற்றி நண்பருக்குக் கடிதம் எழுதும்போது, "என்னை மடக்கிப் போட்டுவிடக் காந்திஜி விரும்புகிறார்" என்று மகாதேவ் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு மிகவும் தமாஷாக நரஹரியும் பதில் எழுதினார். "கிழவர் ஒரு சிலந்தியைப்போல, அப்பா. அவருடைய வலையில் விழுந்தவர்கள் தப்புவது ஏது?" என்று குறிப்பிட்டிருந்தார்.

தற்செயலாக, இந்தப் பதிலைக் காந்திஜி பார்த்து விட்டார். முன் நடந்த கடிதத்தைப்பற்றி ஏதும் தெரியாததால் அவருக்கு இந்தக் கடிதம் வருத்தத்தைக் கொடுத்தது. பொதுவாக அவர் பிறருக்கு வந்த கடிதங்களைப் படிப்பதே கிடையாது. உடனே அவர் பின்வருமாறு நரஹரிக்குக் கடிதம் எழுதினார்: "உங்களை எல்லாம் நான் கஷ்டத்துக்குள்ளாக்கி என்ன லாபம் அடையப் போகிறேன்? எனக்கோ வயசாகிவிட்டது. தற்செயலாக உன் கடிதத்தைப் பார்க்க நேரிட்டபோது வருத்தந்தான் எஞ்சிற்று."

நரஹரி திடுக்கிட்டுப் போனார். காந்திஜியின் மனம் புண்பட வேண்டும் என்பது அவருடைய விருப்பம் அல்லவே? அவருக்கு எப்படிப் பதில் எழுதுவது என்று தெரியாமல் தவித்தார். நடந்

ததை நேரில் கூறி மன்னிப்புக் கோரலாமா என்று நினைத்தார். ஆனால் எதற்காக மன்னிப்புக் கோருவது? கடைசியில் அவர் காலேல்கரிடம் சென்று ஆலோசனை கேட்டார்.

காலேல்கர் சொன்னார்: "அட பைத்தியமே, அவரிடம் போய் மன்னிப்புக் கேட்டாயோ, நீ தொலைந்தாய். பிறருக்கு வந்த கடிதத்தைப் படித்த அவர் அல்லவா தவறுக்கு வருந்தி மன்னிப்புக் கோர வேண்டும்?"

நரஹரிக்கு அவருடைய வாதம் புரிய வில்லை. அதற்குள் காலேல்கர் சொன்னார்: "நான் சொல்வதைப் போலக் கடிதம் எழுதி விடு. எல்லாம் சரியாகி விடும்."

அவர் கூறியபடி நரஹரி கடிதம் எழுதினார். க்டிதத்தின் சுருக்கம் இதுதான்:

"அன்புள்ள பாபு, பிறருக்கு வந்த கடிதங்களை நீங்கள் ஏன் படிக்கிறீர்கள்? நாங்கள் வாலிபர்கள், எங்களுடைய வாழ்க்கையே வேறு. கடுமையான உழைப்பின் நடுவே இந்த மாதிரி ஹாஸ்யமும் கேலியும் இருப்பதால் தான் நாங்கள் உற்சாகமாக வாழ முடிகிறது. அதனால் தான் உங்களிடமும் விசுவாசமாக இருக்க முடிகிறது."

அவர் எதிர்பார்த்த பலன் கிடைத்து விட்டது.

கண் விழிப்பு

(1918)

ஒரு சமயம் காந்திஜிக்கு ஆலைத் தொழிலாளர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. சம்பள உயர்வும் வேறு சில வசதிகளும் கோரி அவர்கள் வெகு காலமாகவே கிளர்ச்சி செய்து கொண்டிருந்தார்கள். தொழிலாளர் இயக்கம் தோன்றாத காலம் அது. பிரபல ஆலை முதலாளியான அம்பாலால் சாராபாயின் சகோதரியான அநுசூயாபென் தொழிலாளர்களுடைய கட்சியை ஆதரித்துத் தலைமை வகித்தார். காந்திஜியின் நிலைமை தர்மசங்கடமாக இருந்தது. அண்ணனும் தங்கையும் அவருடன் நெருங்கிப் பழகும் நண்பர்கள். எவருடைய கட்சியை ஆதரிப்பது,

எவருடைய கட்சியை நிராகரிப்பது? தொழிலாளர்களுடைய கோரிக்கை நியாயமானதாகத் தோன்றவே, அவர்களை ஆதரித்தார் காந்திஜி.

சாபர்மதி ஆற்றங்கரையில் உள்ள ஓர் ஆலமரத்தடியில் தொழிலாளர்கள் ஒரு பொதுக் கூட்டம் போட்டார்கள். காந்திஜியும் கூட்டத்தில் கலந்து கொண்டார். அஹிம்ஸை வழியில் பற்றுக் கொண்டு, மகத்தான கஷ்டங்கள் நேர்ந்தாலும், உறுதி தளராமல் போரிடச் சித்தமாக இருந்தால் தாமே தலைமை வகித்து நடத்துவதாகக் காந்திஜி சொன்னார். தொழிலாளர்கள் சந்தோஷத்துடன் ஆரவாரித்தார்கள்.

"அஹிம்ஸை வழியில் நின்று உறுதியுடன் போராடுவோம். மகத்தான தியாகத்துக்கும் நாங்கள் தயார்" என்று ஒவ்வொருவரும் பிரதிக்ஞை செய்தார்கள்.

பிரமிக்கத் தக்க முறையில் அவர்கள் கட்டுப்பாடாக நின்று போராடினார்கள். சுமார் இரண்டு வாரகாலம் வரையில் அவர்களுடைய உறுதி தளரவில்லை. அதைக் கண்டு முதலாளிகள் ஆச்சரியப்பட்டார்களே தவிர, தொழிலாளர்களுடைய கோரிக்கைகளுக்கு இணங்கவில்லை.

இயக்கம் தீவிரமாக நடக்கவும், தொழிலாளர்களின் குடும்பங்கள் பட்டினியினால் தவிக்காமலிருக்கவும் வேண்டி அநுசூயா பென் ஏறக்குறையப் பதினாயிரம் ரூபாய்களைச் செலவிட்டார். சில தினங்களுக்குப் பிறகு, இந்தச் செய்தியை அறிந்த காந்திஜி அநுசூயாபென்னைக் கூப்பிட்டார். "நீ செய்வது சத்தியாக்கிரக தர்மத்துக்கே விரோதமாகும். எதற்காக நீ சொந்தப் பணத்தைச் செலவிடுகிறாய்? ஆனால் முதலாளிகள் சுலபமாகச் சமரஸத்துக்கு வந்துவிடுவார்கள் என்று தோன்றவில்லை. அதுவும், உன்னுடைய பண பலத்தினால் தான் இயக்கம் நடக்கிறது என்று வெளியே தெரிந்து விட்டால் சமரஸப் பேச்சுக்கே இடமில்லாமல் போய்விடும். மாதக் கணக்காகப் போராட்டம் நடந்தால் நீ என்ன செய்வாய்? உன்னுடைய கை சளைக்கும் வரையில் அவர்கள் சும்மாத்தான் இருப்பார்கள். தொழிலாளர்களும் ஆதரவற்றுப் போய்விடுவதால், திக்பிரமை கொண்டு, மனம் சோர்ந்து சரணாகதியடைந்து விடுவார்கள். இதனால் தோல்விதான் மிஞ்சும். தொழிலாளர்களுக்கும் தங்களுடைய நிலைமை தெரியவேண்டும்.

பிறருடைய தயவில் அவர்கள் வாழ முடியாது. பசி, பட்டினி, சாவு என்று மகத்தான கஷ்டங்களை ஏற்றுக்கொண்டு போராடி னால்தான் வெற்றி காணமுடியும். அப்போதுதான் தியாகத்தின் மதிப்பை அவர்கள் உணரமுடியும்" என்றார் காந்திஜி.

சத்தியாக்கிரகமே அந்தக் காலத்துக்குப் புதிது. வயிறு காயும் போது, உள்ளத்தில் உறுதி கொள்ளும் கலையைத் தொழிலாளர் களும், மற்றவர்களும் புரிந்துகொள்ளாத காலம். சில தினங் களுக்குள் ஒரு சிலர் மனஞ் சோர்ந்து வேலைக்குத் திரும்பத் தயாராக இருந்தார்கள்.

தொழிலாளர்களுடைய நிலைமையைக் கண்டு காந்திஜி மனம் வருந்தினார். "பட்டினிக் கொடுமை தாளாமல் அவர்கள் மனஞ் சோர்ந்து விட்டார்கள். அவர்களை உற்சாகப்படுத்த நானும் பட்டினி கிடக்க வேண்டும்" என்றே அவர் எண்ணினார். அன்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் காந்திஜி பின்வருமாறு சொன் னார்: "நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பிரதிக்கினையை நினைவு கூருங்கள். உங்களுடைய தோல்வியைக் காண நான் மனஞ் சகியேன். என்னைச் சாட்சியாக வைத்துக்கொண்டு நீங்கள் பிரதிக்கினை செய்தீர்கள்; கஷ்ட நஷ்டங்களைச் சகித்துக் கொண்டு போராட உறுதி கொண்டீர்கள். பட்டினி தாளாமல் உங்களில் பலர் இப்போது மனந்தளர்ந்து விட்டதாகத் தெரிகிறது. பசியின் கொடுமையை நானும் பகிர்ந்து கொண்டு உங்களுக்குள் கட்டுப் பாடும் திடசித்தமும் ஏற்பட நானே உண்ணாவிரதம் ஏற்றுக் கொள்கிறேன்."

தொழிலாளர்கள் திகைத்தார்கள். வருத்தம் தாளாமல் அநுசூயாபென் அழுதுவிட்டார். தொழிலாளர் தலைவர்களில் சிலரோ, "பாபு, எங்களை மன்னித்து விடுங்கள். நாங்கள் மனஞ் சலித்துப் போனது உண்மைதான். அது தவறுதான். இதற்காக நீங்கள் உண்ணாவிரதம் ஏற்க வேண்டாம். நாங்களே பட்டினியைச் சகிக்கிறோம். கஷ்டங்களை ஏற்க நாங்கள் உறுதி கொள்கிறோம்" என்று கெஞ்சினார்கள்.

"என்னுடைய சபதத்துக்கு மாற்று வெற்றிதான். போராட் டம் நடத்த நம்மிடம் போதுமான பணம் இல்லை. நன்கொடை வசூலித்து உங்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றுவதையும் நான் விரும்பவில்லை. உறுதியுள்ளவர்கள் தீவிரமாகப் போராட்

டத்தில் இறங்குங்கள்; மற்றவர்கள் தாற்காலிகமாக வேறு வேலை தேடிச் செல்லுங்கள்'' என்றார் பாபு.

மறுநாளே தொழிலாளர்களில் சிலருக்கு வேறு வேலைகள் கிடைத்தன. அப்போது ஆமதாபாத் நகர சபைத் தலைவராக இருந்த வல்லபபாய் படேல் சிலருக்கு வேலை கொடுத்தார். சாபர்மதி ஆசிரமத்தில் நெசவுக் கொட்டடி போடுவதற்காகச் சிலர் அமர்த்தப்பட்டார்கள். காந்திஜியின் உறுதி அநுசூயா பென்னின் மனத்தில் நன்றாகப் பதிந்து விட்டது. தாம் ஒரு கோடீசுவரன் வீட்டுப் பெண் என்பதையும் மறந்து, கூலிகளுடன் கூலியாக நின்று மண் கூடையைத் தலையில் சுமந்து வேலை செய்தார்.

உபவாசம் இருதரத்தார்களுடைய மனசையும் மாற்றிவிட்டது என்றே சொல்லலாம். மூன்றாவது தினத்திலேயே சமரஸம் ஏற்பட்டுவிட்டது. தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலனை செய்ய ஒரு மத்தியஸ்தர் நியமிக்கப்பட்டார். இருபத்தொரு தினங்கள் போராடிய பிறகுதான் சமரஸம் ஏற்பட்டது. சமரஸத்தைப் பேசவும் வேலைக்குத் திரும்புவது பற்றி ஆலோசிக்கவும் சபதம் எடுத்துக்கொண்ட சாபர்மதிக்கரையிலுள்ள ஆல்மரத்தடியில் தொழிலாளர்கள் கூடினார்கள். ஆலை முதலாளிகளும், கலெக்டரும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். "காந்திஜி தான் உங்களுக்கு உற்ற தோழன். அவர் சொற்படி நீங்கள் என்றென்றும் நடக்கவேண்டும்'' என்றார் கலெக்டர்.

சமரஸம் ஏற்பட்டதில் சந்தோஷமடைந்த ஆலை முதலாளிகள், தொழிலாளர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்கி விழாக் கொண்டாட நிச்சயித்திருந்தார்கள். கூட்டம் முடிந்து தின்பண்டங்களை விநியோகிக்கும்போது, குழப்பமும் கூச்சலும்தான் மிஞ்சின. கூட்டத்திலுள்ளவர்களை அடக்கி அமைதியாக விநியோகிக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை.

தொழிலாளர்களுடைய மனப் போக்கைக் கண்டு காந்திஜி மனம் சோர்ந்துவிட்டார். அவருடைய முகவாட்டத்தைக் கண்டு, தொழிலாளர் தலைவர்கள் திடுக்கிட்டார்கள். மீண்டும் ஏதாவது கடுமையான விரதம் ஏற்றுக்கொண்டு விடுவாரோ என்ற பயமே அவர்களை வாட்டிற்று. சமாளிக்க முடியாமல் குழப்பம் ஏற்படவே, மறுநாள் அம்பாலால் சாராபாயின் 'மிர்ஜாபூர் பங்களா'வில்

தொழிலாளர்களுக்குத் தின்பண்டம் விநியோகிக்க நிச்சயித்துக் கூட்டத்தைக் கலைத்துவிட்டார்கள்.

மறுநாள்தான் உண்மை வெளியாயிற்று. கூட்டம் முடியும் போது தின்பண்டம் விநியோகிக்கப்படும் என்ற செய்தி ஊரிலிருப்பவர்களுக்கு எப்படியோ முன்னதாகவே தெரிந்து விட்டது. ஏழைகளும் பிச்சைக்காரர்களும் தொழிலாளர்களுடன் வந்து அமர்ந்து விட்டார்கள். அவர்களுடைய பேராசையும் கட்டுப் பாடற்ற தன்மையுமே குழப்பத்தை உண்டாக்கியதுடன் தொழி லாளர்களுக்குக் கெட்ட பெயரும் காந்திஜிக்கு மனவருத்தமும் கொடுத்து விட்டன. ஆனால் இந்தச் செய்தியும் காந்திஜிக்கு வருத்தமூட்டியது. "நம் நாட்டிலுள்ள மக்களின் பசிக்கொடுமை யைத் தெரிந்து கொள்ள இந்தச் சம்பவம் உதவிற்று. ஏழை களின் கஷ்டங்களை நீக்க நாம் கடுமையான விரதம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆண்டவன் அறிவுறுத்துகிறான்" என்றார் காந்திஜி.

ஐஸ் டாக்டர்
(1918)

முதல் மகா யுத்தம் முடியும் தருணத்தில் காந்திஜி பிரிட்டிஷ் சர்க்காருக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் ராணுவத்துக்கு ஆள் சேர்க்கக் குஜராத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தார். இக்கட்டான நிலைமையில் சர்க்காருக்கு உதவி செய்தால், நெருக்கடி தீர்ந்ததும் சுயராஜ்யக் கோரிக்கையை வற்புறுத்தலாம் என்றும் அவர் எண்ணினார். நிர்க்கதியாக எதிரி நிற்கும்போது, தாக்கி வெற்றி காணுவது சத்தியாக்கிரக தர்மம் அல்ல என்று அவர் கூறுவதுண்டு. காந்திஜியின் சேவையைப் பாராட்டி வைசிராயும் கடிதம் எழுதினார்.

ஒரு சமயம் அவர் நாடியட் என்ற ஊருக்குச் செல்ல நேரிட்டது. அலைச்சலினால் சிறிது அஜீரணமும் வயிற்றுக் கடுப்பும் இருக்கவே அன்று உபவாசமிருக்க வேண்டும் என்று காந்திஜி விரும்பினார். அன்று ஏதோ பண்டிகை நாள். மேலும் பட்டினி யுடன் பிரயாணம் செய்தால் களைப்பு மேலிடும் என்று கஸ்தூரிபா கூறினார். காந்திஜி பால், வெண்ணெய் ஏதும் சாப்பிட மாட்டார்

ஆகையால் சிறிது எண்ணெய் சேர்த்து மிகவும் பக்குவமாக ரவா கேசரி செய்திருந்தார். அத்துடன் பயத்தம் பருப்பு வேகவைத்து, வேறு சில பணியாரங்களும் செய்திருந்தார். சாப்பிட உட்கார்ந் ததும், காந்திஜியின் பட்டினித் தீர்மானம் பறந்து விட்டதுடன் 'மேலும் கொஞ்சம் போடு' என்று கேட்டுச் சாப்பிட்டு விட்டார். அன்று வயிற்றுவலி அதிகமாயிற்று.

உடல் நலிவைப் பொருட்படுத்தாமல் காந்திஜி நாடியட்டுக்குக் கிளம்பிவிட்டார். வழியில் வயிற்று நோவு அதிகரித்ததுடன் வயிற்றுப் போக்கும் கண்டுவிட்டது. இரவு பத்து மணிக்கு அவர் நாடியட் ரெயில்வே நிலையத்தையடையும்போது அடி யெடுத்துக் கூட வைக்கமுடியாமல் அலுப்பு மேலிட்டு விட்டது. அங்கிருந்து சுமார் ஒன்றரை மைலுக்கு அப்பாலுள்ள ஹிந்து அநாதாசிரமத் துக்கு அவர் செல்ல வேண்டும். உடனிருந்த வல்லபபாய் படேலின் உதவியினால், மெல்லமெல்ல நடந்து சென்றார். இரவு முழுவதும் அவர் உறங்கவில்லை. வயிற்றுப் போக்கும் அதிகமாகி விட்டது. நண்பர்கள் டாக்டருக்குச் சொல்லி அனுப்பினார்கள்.

டாக்டர் கனுகா இஞ்சக்ஷன் செய்வதற்கு ஆயத்தமானார். அந்தக் காலத்தில் ஊசி மூலம் மருந்து ஏற்றுதல் பிரபலமடைய வில்லை. கன்றுக் குட்டியின் சீம்பாலிலிருந்து தயாரிக்கப்படும் அம்மை மருந்தைப் போலவே இந்த இஞ்சக்ஷன் மருந்தும் தயாரிக்கப்பட்டிருக்கக்கூடும் என்று காந்திஜி ஊகித்துக்கொண்டு இஞ்சக்ஷன் செய்து கொள்ள மறுத்து விட்டார். இஞ்சக்ஷன் மருந்தைப் பற்றி டாக்டர் விவரமாக எடுத்துக் கூறுவதற்குள் நிலைமை மோசமாகிவிட்டது. இதன் நடுவே காந்திஜியின் சுக வீனத்தைப் பற்றிக் கேள்வியுற்ற அம்பாலால் நாடியட்டுக்கு ஓடோடியும் வந்தார். தம்முடைய காரிலேயே அவரை அழைத்துக் கொண்டு ஆமதாபாத்துக்குத் திரும்பினார். பிரபல டாக்டர்கள் காந்திஜியைப் பரிசோதித்து வைத்தியம் செய்தார்கள். சிறிது நடமாட முடிந்ததும் காந்திஜி ஆசிரமத்துக்குச் செல்ல விரும்பினார். ஆரோக்கிய மடையும் வரையில் தம்முடைய பங்களாவில் இருக்கும்படி அம்பாலால் மன்றாடியும் பயனில்லை.

ஆசிரமத்துக்குத் திரும்பியதுமே காந்திஜி தினசரி அலுவல் களைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டார். ஆள்திரட்டும் வேலையில் முழுக் கவனம் செலுத்த முடியாதபடிச் சுகவீனம் ஏற்பட்

விட்டதே என்ற கவலை அவருக்கு இருந்துகொண்டே இருந்தது. காந்திஜி ஜல வைத்தியம் செய்துகொள்ள ஆரம்பித்தார். வியாதியின் வேகம் குறைந்தாலும் உடல் தளர்ச்சி ஏற்பட்டு ஒருநாள் மயங்கி விழுந்து விட்டார். மயக்கம் தெளிந்ததும் அவருடைய மனத்திலே பீதி கண்டுவிட்டது. இறந்து விடுவோமோ என்றே அவர் எண்ணலானார். உடனே அநுசூயாபென்னுக்கும், மற்ற நண்பர்களுக்கும் தகவல் கொடுக்குமாறு சொன்னார். அநுசூயா பென் மனம் பதறி ஒரு டாக்டரை அழைத்துக்கொண்டு வந்தார். டாக்டர், காந்திஜியைப் பரிசோதித்து விட்டு, பலவீனமும் அதிர்ச்சியும் காரணமாகவே காந்திஜி மூர்ச்சையுற்றார் என்றும் பிராண பயமில்லை என்றும் தேறுதல் கூறினார். அந்த நிலையிலுங் கூடக் காந்திஜி தம்முடைய கொள்கைக்கு விரோதமான உணவுகளையோ மருந்துகளையோ சாப்பிடச் சம்மதிக்கவில்லை. இரவு முழுவதும் காந்திஜி உறங்கவில்லை. மற்றவர்களும் கவலையுடன் அவரைச் சூழ்ந்திருந்தார்கள்.

மறுநாள் காலையில் அவரைப் பார்க்கச் சென்னையிலிருந்து தேவதாஸ் வருவதாக இருந்தது. அவரைச் சந்திக்கு முன் உயிர் போய்விடுமோ என்ற பயமே காந்திஜியின் மனசில் தலை தூக்கியிருந்தது. நண்பர்களைக் கூப்பிட்டுக் கீதாபாராயணம் செய்யச் சொன்னார். சிறிது நேரம் சென்ற பிறகு மனம் அமைதியுற்றது. காந்திஜியின் மனத்திலோ, பின்வரும் இரண்டு கீதாஸ்லோகங்களும் சுழன்று கொண்டேயிருந்தன: 'சகல விருப்பங்களையும் விடுத்துப் பற்றில்லாதவனாய் அகங்கார மமதையின்றி எவன் வாழ்கின்றானோ அவனே அமைதி பெறுவோன் ஆகின்றான்.' 'பிறந்தோர் இறத்தல் திண்ணம்; இறந்தோர் பிறத்தலும் திண்ணம். ஆதலின் விலக் கொணாததைக் குறித்து நீ வருந்துவது தகாது.'

மறுநாள் விடிந்ததும் காந்திஜி ஆசிரம ஊழியர்கள் அனைவரையும் தம்மிடம் கூப்பிட்டு இரவில் தாம் பட்ட அவஸ்தையையும் மன ஓட்டத்தையும் கூறினார். "தேவதாஸைப் பார்க்காமல் நான் இறந்துவிடுவேனோ என்ற பயம் என்னை வாட்டிற்று. அவன் இங்கு வந்து என்னை உயிருடன் பார்க்காவிட்டால் சித்தம் கலங்கி விடுவானே என்று ஏங்கினேன். ஆசை என்னைப் பிடித்து ஆட்டிற்று. கீதா பாராயணம்தான் என்னைத் தன்னிலையடையச்

செய்தது. அதுவும், 'சகல விருப்பங்களையும் விடுத்துப் பற்றில்லாதவனாய் எவன் வாழ்கின்றானோ அவனுக்கே சாந்தி கிடைக்கிறது' என்ற சுலோகமே எனக்கு வழிகாட்டிற்று." இப்படிச் சொல்லிவிட்டு அவர் சிறிதுநேரம் மௌனமாக இருந்தார். பிறகு, "நோயின் வேகம் தாளாமல் நான் ஒரு வேளை இறந்துவிடக்கூடும். அப்படி நேர்ந்து விட்டால் உங்கள் மூலமாகவே இந்திய மக்களுக்குச் செய்தி தர விரும்புகிறேன்: 'அஹிம்சை வழியில்தான் இந்தியா விடுதலையடையும். அஹிம்ஸா மார்க்கத்தை உலக மக்களுக்கு எடுத்துக் கூறி, உலகத்தையே காப்பாற்றும் சக்தி இந்தியாவுக்குத்தான் உண்டு.' இதுவே என்னுடைய கடைசிச் செய்தி." அதன் பிறகு அவர் பேசவில்லை. மீண்டும் கீதாபாராயணத்தில் மனம் செலுத்தலானார். ஊழியர்களோ ஆவலும் கவலையும் ததும்ப அவரைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆசிரம சம்பந்தமாக ஊழியர்களுக்கும் ஏதாவது கட்டளையிடுவாரோ என்று காத்துக் கிடந்தார்கள். காந்திஜி கண்ணை மூடிக்கொண்டு வெகுநேரம் தியானத்தில் ஆழ்ந்துவிட்டார்.

இந்தச் சமயத்தில் கேல்கார் என்பவர் ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்தார். வைத்தியக் கல்லூரியில் பயின்றுகொண்டிருக்கும் போதே அவருக்கு இயற்கை வைத்தியத்தில் மனம் செல்லவே படிப்பை முடிக்காமலே கல்லூரியிலிருந்து வெளியேறிவிட்டார். சகல வியாதிகளுக்கும் 'ஐஸ்' நிவாரணம் அளிக்கும் சஞ்சீவி என்றே அவர் எண்ணினார். அதனால் அவரை 'ஐஸ் டாக்டர்' என்றே நண்பர்கள் கூப்பிட ஆரம்பித்தார்கள். காந்திஜிக்கு ஐஸ் சிகிச்சையில் பூர்ண நம்பிக்கை ஏற்படாவிட்டாலும், கேல்காரிடம் சிகிச்சை செய்துகொள்ள இணங்கினார். சில தினங்களுக்குள் நல்ல பசி ஏற்பட்டது. எழுந்து நடமாடவும் முடிந்தது. அந்தச் சமயத்தில் கேல்கார் கோழி முட்டை சாப்பிடும்படி காந்திஜிக்கு யோசனை கூறினார். "கோழி முட்டையைத் தாவர உணவாகவே டாக்டர்கள் கருதுகிறார்கள்" என்று கூறி வற்புறுத்தினார்.

காந்திஜி அதை ஏற்றுக்கொள்ளவில்லை. கேல்கார் பிடிவாதம் செய்யவே, காந்திஜி அவருடைய சிகிச்சைக்கே முற்றுப் புள்ளி வைத்துவிட்டார்.

★

யார் திருடன்?

(1918)

சத்தியத்திலும் அஹிம்ஸையிலும் நம்பிக்கையுள்ளவர்கள் பற்றற்ற வாழ்க்கை நடத்தவேண்டும் என்றே காந்திஜி வற்புறுத்தினார். ஒரு சமயம், தமது பேரக் குழந்தை ஒன்றிற்கு நகை செய்ய வேண்டும் என்ற ஆசையில் கஸ்தூரிபா ரகசியமாகச் சிறிது பணம் சேர்த்து வைத்தார். அந்தப் பணம் ஒருநாள் திருட்டுப் போயிற்று. கஸ்தூரிபாவுக்கு வருத்தம் தாளவில்லை. காந்திஜியிடம் சொல்லவும் பயம்; பறிகொடுத்து விட்டோமே என்ற ஆதங்கம். கடைசியில், மிகுந்த தியக்கத்துடன் அவர் காந்திஜியிடம் நடந்ததைக் கூறினார். காந்திஜியோ சிரித்துக் கொண்டே, "நான் இதைக் கண்டு பிடித்து விடுகிறேன்" என்று ஆறுதல்கூறி அன்னையை அனுப்பிவிட்டார்.

அன்று மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் பிறகு காந்திஜி ஆசிரமத்தில் நடந்த திருட்டைப் பற்றிச் சொன்னார். திருடனைக் கண்டு பிடிக்கவேண்டும் என்று தான் பாபு சொல்கிறார் போலிருக்கிறது என்று மற்றவர்கள் நினைத்தார்கள். காந்திஜியோ, "இந்தத் திருட்டைவிடப் பெரிய திருட்டு ஒன்று நடந்திருக்கிறது. அதைச் செய்த திருடனைக் கண்டு பிடித்துவிட்டேன்" என்றார் மோஹனச் சிரிப்புடன். ஊழியர்களோ திடுக்கிட்டார்கள். அப்போது காந்திஜி, "இதோ, இவர்தாம் அந்தத் திருடன்" என்று பக்கத்திலிருந்த கஸ்தூரிபாவை முன்னே பிடித்துத் தள்ளினார்.

கஸ்தூரிபாவும் மற்றவர்களும் திகைத்துப் போனார்கள். காந்திஜி போடும் புதிர் அவர்களுக்கு விளங்கவில்லை.

காந்திஜி விளக்கமாகக் கூறினார்: "கஸ்தூரிபாவின் பணம் திருட்டுப் போய்விட்டதைப்பற்றி நான் வருந்தவில்லை. அந்தப் பணம் அவளுடையதல்ல. தன்னுடையது என்று எண்ணியதால் தான் திருட்டுப் போனதும் மனம் வருந்திற்று. ஆசிரம விதிகளைக் கொஞ்சம் நினைவு கூருங்கள். அத்தியாவசியமான தேவைகளுக்கு மேல் சத்திய சாதனை செய்யும் எவரும் பொருளைச் சேமித்துக் கொள்ளக்கூடாது என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு. அப்படிச் சேர்த்து வைத்துக் கொள்கிறவர்தான் (சமூகத்தின் சொத்தைத் திருடும்) திருடன்."

நவீன கிருஷ்ணன்

(1918)

காந்திஜி எப்போதுமே குழந்தைகளிடம் பிரியமாக இருப்பார். கடுமையாக வேலை செய்யும் போது குழந்தைகளைக் கண்டால் புன்சிரிப்புக் காட்டிச் சல்லாபிப்பார். சாபர்மதி ஆசிரமத்திலுள்ள குழந்தைகளுக்குத் தினந்தோறும் கதை சொல்லுவது ஒரு சமயம் அவருடைய வழக்கமாக இருந்தது. அந்தக்காலத்தில் வாரத்தில் ஒரு நாள் குழந்தைகளைக் கேள்விகள் கேட்கச் சொல்லிப் பதில் சொல்வார். கேள்வி நேரத்தைக் குழந்தைகள் குதூகலத்துடன் எதிர்பார்ப்பார்கள். எந்தவிதமான கேள்வி கேட்டாலும் பாபு சொல்வார்.

ஒரு நாள் காலேல்கரின் மகன் பின்வரும் கேள்வியைக் கேட்டான்: "பாபுஜி, நீங்கள் அடிக்கடி கண்ணனுடைய கதையைச் சொல்கிறீர்கள். அந்தக் கதையில் வரும் அர்ச்சுனன் கண்ணனை ஒரே ஒரு கேள்விதான் கேட்டான். அதற்கு ஒரு புத்தகம் நிறையும் படிக் கண்ணன் பதில் சொல்லிவிட்டானே! ஆனால் நாங்கள் எவ்வளவு பெரிய கேள்வி கேட்டாலும் நீங்கள் இரண்டே வார்த்தையில் பதில் சொல்லிவிடுகிறீர்களே, இது ஏன்?"

சிறுவன் கேள்வி காந்திஜியை வசீகரித்து விட்டது. அவர் சிரித்துக் கொண்டே, "அந்தக் கதையில் ஒரே ஒரு அர்ச்சுனன் ஒரே ஒரு கேள்வியைத்தான் கேட்டான். கண்ணன் 'பெரிய' பதிலைச் சொன்னான். இங்கே நீங்கள் எத்தனையோ அர்ச்சுனர்கள் இருக்கிறீர்களே! ஒவ்வொருவரும் எத்தனை எத்தனை கேள்வி கேட்கிறீர்களே, எல்லோருக்கும் பதில் சொல்லவேண்டாமா? அதனால் தான் சுருக்கமாகப் பதில் சொல்கிறேன்" என்றார்.

அதுவும் நல்லதுதான்

(1918)

காந்திஜியின் ஒன்றுவிட்ட சகோதரியான கோகிபென் என்பவர் நிராதரவாகி விட்டபோது காந்திஜியிடம் உதவி கோரினர். தென் ஆப்பிரிகாவிலிருந்து திரும்பியபோதே, குடும்பச் சொத்துக்களை மற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுத்து விடுதலை பெற்று விட்டார் காந்திஜி. இந்தியாவில் அவர் முழுநேரமும் தேசசேவையில்

ஈடுபட்டதால் வக்கீலாகத் தொழில் நடத்திச் சம்பாதிக்கவுமில்லை. ஆகவே அவரிடம் சொந்தப் பணம் ஏதுமே கிடையாது. ஆனாலும் சகோதரியின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, ரங்கூனிலிருந்த தம்முடைய ஆப்த நண்பரான டாக்டர் மேத்தாவை, மாதாமாதம் கோகிபென்னுக்குப் பத்து ரூபாய்கள் அனுப்பும்படிக் கேட்டுக் கொண்டார்.

சில மாதங்களுக்கெல்லாம் கோகிபென்னுடைய மகள் கணவனை இழந்து தாய் வீடு வந்து சேர்ந்தாள். டாக்டர் மேத்தா அனுப்பும் பணத்தில் இருவரும் ஜீவனம் செய்வது கஷ்டமாக இருக்கவே, கோகிபென் மீண்டும் காந்திஜியின் உதவியை நாடினார். "இப்போதுள்ள வருமானத்தில் இருவரும் காலட்சேபம் செய்ய முடியவில்லை. சிற்சில சமயங்களில் என்னுடைய மகள் அக்கம் பக்கத்தில் மாவு அரைத்துக் கொடுத்துச் சிறு ஊதியம் பெற நேரிடுகிறது" என்று காந்திஜிக்குக் கடிதம் எழுதினார்.

அதற்குக் காந்திஜி பின்வருமாறு பதில் எழுதினார்: "மாவு அரைத்துச் சம்பாதிப்பது சிறந்தது என்றே நான் எண்ணுகிறேன். அதனால் இழிவு இல்லை. மேலும் ஆரோக்கியம் வளரும். ஆசிரமத்தில்கூட நாங்களே தான் மாவு அரைத்துக் கொள்கிறோம். நீங்கள் இருவரும் இங்கு வந்து எங்களுடன் தங்கிப் பொதுஜன சேவை செய்யலாம். எங்களுடன் கலந்து கொண்டு எங்களைப் போலவே வாழ்க்கை நடத்தலாம். என்னுடைய நண்பர்களிடமிருந்து பண உதவி பெற்று உங்களுக்கு அனுப்ப நான் தயாராக இல்லை."

பழங்காலச் சம்பிரதாயத்தில் ஊறிய கோகிபென், தீண்டாதவர்களுடன் கலந்து பழகி ஆசிரம வாழ்க்கையை மேற்கொள்ள விரும்பவில்லை.

ஒப்பந்தம்
(1919)

நவஜீவனம் பத்திரிகை ஆரம்பித்த புதிதில் அச்சகத்தையும் பத்திரிகையையும் மேற்பார்வை செய்துகொள்ளும் பொறுப்பை ஸ்வாமி ஆனந்த் என்ற ஊழியரிடம் ஒப்பித்தார். ஆறு மாத காலம் வரையில் நிர்வாகப் பொறுப்பு ஏற்றுக் கொள்வதாகவும் அதன் பிறகு பரஸ்பரம் திருப்தி ஏற்பட்டால் தொடர்ந்து வேலை

செய்வதாகவும் ஸ்வாமி ஆனந்த் கூறினர்; காந்திஜியும் ஏற்றுக் கொண்டார்.

அதிவிரைவில் தேசத்தில் பல சம்பவங்கள் ஏற்பட்டுவிட்டன. நிர்வாகப் பொறுப்பு முழுவதும் ஆனந்தின் தலையிலேயே விழுந்து விட்டது. காந்திஜி அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்ய நேரிட்டதால், சாப்பிடக்கூட நேரமின்றி ஆனந்த் இரவும் பகலும் வேலை செய்ய வேண்டியதாயிற்று. பாலோ, பழமோ சாப்பிடும்போது கூட அவருடைய கையில் 'புரூப்' தாள்கள் இருக்கும்.

ஒருநாள் வட இந்தியாவில் எங்கோ ஓரிடத்திலிருந்து காந்திஜி எழுதிய கடிதம் ஆனந்துக்குக் கிடைத்தது. மிகவும் சுருக்கமாக இருந்த அந்தக் கடிதத்தை ஸ்வாமி ஆனந்த் திரும்பத் திரும்பப் படித்தார்: "நீங்கள் நவஜீவன் பத்திரிகை, அச்சகம் இரண்டையும் திறம்பட நிர்வகித்து வருவதால் நான் கவலையற்றிருக்கிறேன். சிரமமில்லாமல் தொடர்ந்து வேலை செய்து வருவீர்கள் என்று நம்புகிறேன் - பாபு" என்பதே கடிதத்தின் வாசகம்.

நீண்ட நேரம் யோசித்த பிறகுதான் கடிதத்தின் குறிப்பு விளங்கிற்று. ஸ்வாமி ஆனந்த் போட்டிருந்த ஆறு மாதத் தவணை முடிந்ததும் காந்திஜி அந்தக் கடிதத்தை எழுதியிருந்தார். பொறுப் பேற்றுக்கொண்டு ஆறு மாதங்களாகி விட்டன என்ற ஞாபகமே ஸ்வாமி ஆனந்துக்கு இல்லை. 'உன்னுடைய ஒப்பந்தக் காலம் முடிந்து விட்டது. உன்னுடைய வேலை எனக்குத் திருப்தியளிப்பதால் தொடர்ந்து வேலை செய்க' என்று குறிப்பிடாமல் பொறுப்பைக் கொடுத்து விலக முடியாமல் செய்து விட்டார் காந்திஜி.

வணக்கமா - வருத்தமா ?
(1920)

லோகமான்ய திலகர் மரணப் படுக்கையிலிருக்கும்போது, "அவர் வந்துவிட்டாரா?" என்று அடிக்கடி கேட்டுக் கொண்டே இருந்தார். உடனிருந்தவர்கள் யார் என்று கேட்கும்போது திலகர் முகஞ் சுளித்துக் கொள்வார். சிறிது நேரம் பொறுத்து மீண்டும் அதே கேள்வியைக் கேட்பார். திலகர் யாரைப் பார்க்க விரும்புகிறார் என்பதே மற்றவர்களுக்கு விளங்கவில்லை. தேசத்

திலுள்ள பிரபலத் தலைவர்கள் எல்லாரும் பம்பாய்க்கு ஓடிவந்து திலகரைத் தரிசித்துவிட்டார்கள். கடைசியில்தான் காந்திஜி வந்தார். அவரைப் பார்த்ததும் திலகர் ஆனந்தக்கண்ணீர்விட்டார். "உங்களிடம் விடுதலைப் போராட்டத்தை ஒப்பித்துச் செல்கிறேன். நீங்கள் வெற்றி காணுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் நான் செல் கிறேன்" என்று கூறி உயிர்நீத்தார் திலகர்.

காந்திஜியோ துக்கம் தாளாமல் இரவு முழுவதும் தூக்கமின் றிக் கிடந்தார். தகன ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டதையும் பம்பாய் நகரமே ஒளியிழந்து கிடந்த தையும் பார்த்தபோது காந்திஜிக்குத் திலகரிடமிருந்த அன்பும் பக்தியும் பன்மடங்காகப் பெருகின.

மயானத்திலிருந்து திரும்பும்போதுதான் காந்திஜி நாற்புறமும் சுற்றிப் பார்த்தார். அங்கங்கு ஜனங்கள் சிறு சிறு கூட்டமாகப் பிரிந்து நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். வீதியில் சோடா முதலிய பானங்களை விற்றுக்கொண்டிருந்தார்கள். பலகாரக் கடைகளில் ஜனக் கூட்டம் அதிகமிருந்தது. இவை எல்லாம் பார்க்கும்போது திருவிழாக் கூட்டம்போலவே இருந்தது. துயரத் திலாழ்ந்த மக்களா இவர்கள் என்று எண்ணி ஆச்சரியப்பட்டார் காந்திஜி. ஆமதாபாத் செல்லும் வரையில் இந்தக் கேள்வியே மனசை உறுத்திக் கொண்டிருந்தது.

அன்று மாலைப் பிரார்த்தனையின் போது காந்திஜியின் மனம் தெளிந்து விட்டது. வழக்கம் போலப் பிரார்த்தனைக்குப் பிறகு, ஊழியர்களிடம் பேசும் போது, பம்பாயில் தாம் கண்ட காட்சியை வருணித்து விட்டுக் காந்திஜி சொன்னார்: "என்னைப் போலவே துயரடைந்து அத்தனை பேரும் கூடியிருப்பதாக முதலில் எண்ணி னேன். அவர்களுக்கு வருத்தமிருக்கலாம். ஆனால் மரியாதைக் குரிய தலைவனுக்குக் கடைசி வணக்கம் செலுத்தவே அவர்கள் கூடி யிருக்கிறார்கள் என்று ஊகித்துக் கொண்டேன். அவர்களுடைய மனம் வருத்தத்திலாழ்ந்திருந்தால் பேச்சிலும், தின்பண்டங் களிலும் கவனம் செலுத்தியிருக்க முடியாது. மேலும் அவர்கள் அத்தனை பேரும் வருத்தப்பட வேண்டும் என்று எதற்காக - எப்படி - எதிர்பார்ப்பது?"

★

போர்வை
(1920)

சாபர்மதி ஆசிரமத்தில் ஒரு சமயம் திருட்டுப் பயம் அதிகமாக இருந்தது. ஆகவே ஊழியர்கள் முறை போட்டுக் கொண்டு காவல் காத்து வந்தார்கள். ஓர் ஊழியருக்கு மாட்டுக்கொட்டிலைக் காக்கும் பொறுப்புக் கிடைத்தது. அந்த வருஷம் குளிர் மிகவும் கடுமையாக இருந்தது. சாதாரணப் போர்வையோ குளிர் தாங்கவில்லை. விலை உயர்ந்த கம்பளப் போர்வை வாங்குவதற்குக் காந்திஜியின் அநுமதி கிடைக்காது. அந்த ஊழியர் கஷ்டத்தைப் பொறுத்துக் கொண்டே காவல் காத்து வரலானார். ஒருநாள் காந்திஜி அவருடைய கஷ்டத்தைத் தெரிந்துகொண்டார். உடனே அவர் போர்வை தயாரிப்பதில் முனைந்துவிட்டார். கஸ்தூரிபாவிடமிருந்து இரண்டு கிழிசல் புடைவைகளை வாங்கிக்கொண்டார். நடுவில் 'நியூஸ் பேப்ப'ரை வைத்து மேலும் கீழும் புடைவைகளை வைத்து, தலைப்பு மூட்டித் தாமே தைத்தார். ஆசிரம ஊழியர்களோ, 'இது என்ன ஆச்சரியம்' என்று பாபுவையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அப்போது காந்திஜி, "காகிதத்துக்குக் குளிரைத் தாங்கும் சக்தியுண்டு. கம்பளிப் போர்வையை விட இது கதகதப்பாக இருக்கும்" என்றார்.

அடுக்காகத் துணிகளை வைத்து, இடைஇடையே காகிதத்தை மடித்துக்கொடுத்து, தடிமனை 'ரஸாய்' போன்ற போர்வையை அவர் தயாரித்து விட்டார். காந்திஜி கூறியது போல அது கதகதப்பாக இருந்தது. அதன் பிறகு காந்திஜி அதேபோலத் தமக்கும் வேறு ஒரு ஹரிஜன ஊழியருக்கும் போர்வைகள் தயாரித்தார். அவருடைய விஞ்ஞான ஞானத்தைப் பற்றி என்ன சொல்வது?

அங்கு சாம்ராஜ்யம் இல்லை
(1920)

காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றித் தீர்மானிக்கக் கல்கத்தாவில் 1920-இல் விசேஷக் காங்கிரஸ் மகாசபை கூடிற்று. காங்கிரஸ் முடிந்ததும் ஜவாஹருடன் காந்திஜி நோய் வாய்ப்பட்டிருந்த அமிருதபஜார் பத்திரிகையின் அதிபரான

மோதிலால் கோஷைப் பார்க்கச் சென்றார். மோதிலால் கோஷ் தீவிரமான தேசிய வாதி. சர்க்காரின் கெடுபிடியையும் கொடுமை களையும் எதிர்த்து நின்று போராடியவர்.

காந்திஜி சென்ற போது மோதிலால் கோஷ் படுத்த படுக்கை யாகக் கிடந்தார். காந்திஜியைப் பார்த்ததுமே ஆனந்தம் பொங்க, கண்ணீர் மல்க, மோதிலால் கோஷ் சொன்னார்: "உங்களுடைய இயக்கம் வெற்றி பெறவேண்டும் என்று ஆண்டவனைப் பிரார்த்திக் கிறேன். அவனுடைய அருள் உங்களுக்குப் பூர்ணமாகக் கிடைக் கட்டும். உங்களால்தான் தேசம் விடுதலை பெறவேண்டும். விடுதலை யடையப் போகிறது." மேலே பேசமுடியாமல் நாத் தழுதழுத்தது. சிறிது நேரத்துக்குப் பிறகு, "என்னாலியன்ற அளவுக்கு அந்நியர் ஆட்சியை எதிர்த்துப் போராடினேன். தேசம் விடுதலையடைய வில்லை. இப்போது என் மனத்தில் திருப்தி ஏற்பட்டுவிட்டது. நான் இறந்து விடுவேன். மறு உலகத்துக்குச் செல்கிறேன். அங்கு அந் நியர் ஆட்சி இல்லை; பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இல்லை; வெள்ளைய ருடைய நீலித்தனமும் இல்லை. நான் விடுதலை பெற்றுவிடுவேன் என்ற திருப்தி தான் எனக்கு" என்றார் மோதிலால் கோஷ்.

கடவுள் செயல்

(1920)

ஒரு சமயம் காந்திஜி சில மாணவர்களுடன் பேசிக்கொண் டிருந்தபோது ஆண்டவன் அருளைப்பற்றியும் சத்திய சாதனையைப் பற்றியும் குறிப்பிட்டார். அப்போது கூட்டத்திலிருந்த ஒரு மேனாட்டு யுவதி, "நீங்கள் பேச்சுக்குப் பேச்சு அந்த அப்பாவி ஆண்டவனை ஏன் இழுக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ஆண்டவன் அருளும் உபவாசத்தினால் கோரிய பலனை அடைவதும் என்னுடைய ரத்தத்தில் ஊறிய நம்பிக்கை. என்னு டைய தாய்க்கு உபவாசத்தில் அளவற்ற நம்பிக்கை உண்டு. குழந்தைப் பிராயத்தில் அவளுடைய மடியிலமர்ந்து துருவன், பிரஹ்லாதன், சாவித்திரி, அரிச்சந்திரன் போன்ற பக்தர்களின் கதைகளைக் கேட்டுக்கேட்டு என்னுடைய மனத்தில் பக்திப் பெருக்கும், சத்தியத்தில் ஆர்வமும் ஏற்பட்டு விட்டன. வீட்டில் யாராவது நோய்வாய்ப்பட்டால் என்னுடைய அன்னை ஆண்ட வனைத் துதித்து உபவாசம் இருப்பார். நோய் குணப்பட்டுவிடும்.

இது எப்படி நடக்கிறது என்று சிந்திக்க முடியாத வயதிலேயே மனத்தில் நம்பிக்கை வேரூன்றிவிட்டது. அன்னையின் அருளும் உபதேசமும் என்னை ஆண்டவனுக்கு அடிமையாக்கி விட்டன". என்றார் காந்திஜி.

சர்க்காவும் சக்தியும்
(1920)

காந்திஜி கதர் உற்பத்தியைப் பற்றிப் பல வருஷங்களாகச் சிந்தித்து வந்தாலும், கங்காபென் என்ற அம்மையாரின் உதவியினால் 1918-ஆம் ஆண்டில்தான் ராட்டையைப் பார்த்தார். அதன் பிறகு ஆசிரம ஊழியர்களுக்கு நூற்றல் பயிற்சி அளித்தார். சத்தியாக்கிரக ஆசிரமத்தில் சுயதேவைப் பூர்த்திக்காக மில் நூலை வாங்கி நெசவு செய்து கொண்டிருந்தார்கள். சர்க்கா வந்த பிறகு நூற்ற நூலைக் கொண்டு நெய்ய முயன்றார்கள். அப்போது கூட ஆலையிலிருந்து தான் பட்டைப் பஞ்சு வாங்கிக் கொண்டார்கள். 1920-ஆம் வருஷத்துக்குப் பின்பு தான், ஆசிரமத்தில் பட்டை தயாரித்து நூற்க ஆரம்பித்தார்கள்.

பிரபல ஆலை முதலாளியும் காந்திஜியின் நெருங்கிய நண்பர்களில் ஒருவருமான உமார் சோபானி ஒரு சமயம் சில நண்பர்களுடன் காந்திஜியைப் பார்க்க வந்தார். சம்பாஷணையின் போது நண்பர் கேட்டார்: "பல வருஷங்களுக்கு முன்பு சுதேசி இயக்கம் நடந்ததே, அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களே?"

"ஆமாம்."

"அப்போது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு இந்தியாவிலுள்ள ஆலை முதலாளிகள் கொள்ளை லாபம் அடித்தார்கள். கிராக்கி ஏற்பட்ட போது விலையை உயர்த்தினார்கள். வெளி நாட்டு ஜவுளியைக் கூடச் சுதேசி என்று விற்கத் துணிந்தார்கள். இவை எல்லாம் உங்களுக்குத் தெரியுமோ?"

"பராபரியாகச் சில செய்திகள் காதில் விழுந்ததுண்டு."

"பாபு, நாங்கள் தர்மஸ்தாபனம் நடத்தவில்லை. வியாபாரம் செய்கிறோம். அரசியல்வாதிகளுக்குக் கிளர்ச்சி செய்யத்தான் தெரியும். ஜனங்களைத் தூண்டிவிட முடியும். ஆனால் வியாபார ரீதியில்......"

"சுதேசி இயக்கம் வங்காளத்தில்தான் மும்முரமாக இருந்தது. ஆலை முதலாளிகளும் தேசப்பற்றுடன் சேவை செய்வார்கள் என்று தான் வங்காளிகள் நம்பினார்கள். வெளிநாட்டுத் துணியைக் கூடச் சுதேசி என்று ஏமாற்றுவீர்கள் என்று அவர்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்?" என்று இடைமறித்தார் காந்திஜி.

"எனக்கு அரசியல்வாதிகளைத் தெரியும். இப்போது நீங்கள் தலைமை வகித்து மீண்டும் சுதேசி இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறீர்கள். எதிரிகளையே நம்பும் நீங்கள் எங்களை நம்பாமலிருக்க முடியுமா? மீண்டும் முன்பு நடந்த மாதிரி தவறும் பித்தலாட்டமும் நடக்காமல் எச்சரிக்கவே நாங்கள் வந்திருக்கிறோம்." இப்படிச் சொல்லிக்கொண்டே அவர் பக்கத்திலிருந்த காரியதரிசியைக் கூப்பிட்டார். அவரிடமிருந்த சில மாதிரித் துணிகளைக் காந்திஜியிடம் காண்பித்துவிட்டு அவர் சொன்னார்: "இதைப் பாருங்கள். சமீபத்தில் உற்பத்தி செய்யப்பட்ட புதுரகத் துணி.* வெளியில் இதற்கு நல்ல கிராக்கி இருக்கிறது. கைத்தறி நெசவு, கதர் என்று இவைகளைச் சுலபமாக விற்றுவிட முடியும். கழிவுப் பஞ்சிலிருந்தும் நூலிலிருந்தும் இந்த ரகம் தயாரிக்கப்படுவதால் மிகவும் மலிவாக விற்க முடியும். கிராக்கியிருக்கும்போது இதை நல்ல விலைக்கு விற்று விடலாம். மில் ஐவுளிக்கு ஆபத்து ஏற்படுவதுபோல உங்களுடைய பிரசாரமும் உற்பத்தியும் வளர்ந்து விட்டாலும், இந்த ரகத் துணியின் விலையைக் குறைத்துப் போட்டி போட்டுக் கொண்டு உங்களுடைய இயக்கத்தை நசுக்கிவிடமுடியும். சர்க்காருடைய ஆட்சி புகாத இமயமலைப் பிரதேசங்களிலிருந்து குமரி முனைவரையில் எங்களுக்கு விற்பனை ஏஜண்டுகள் இருக்கிறார்கள். மேலும் இந்தியாவின் தேவைகளைச் சமாளிக்கக்கூடிய அளவுக்கு ஆலைகள் உற்பத்தி செய்யவில்லை. சுதேசி இயக்கத்தைத் தீவிரமாக்கினால் கிராக்கிதான் அதிகமாகுமே தவிர, உற்பத்தி பெருகாது. கிராக்கி ஏற்படும்போது பேராசையுடன் ஒரு சிலர் தீய மார்க்கத்தைக் கைக்கொண்டு பணம் திரட்ட முயலுவது இயற்கை. ஆகவே நீங்கள் உற்பத்திப் பெருக்கத்தில் கவனம் செலுத்துங்கள்; உங்களுடைய செல்வாக்கினால் புது ஆலைகளை நிர்மாணிக்க முயலுங்கள். கிளர்ச்சி செய்து ஜனங்களை உற்சாகப்படுத்துவது பிறகுதான் வேண்டும்."

* கதர் உற்பத்தி

காந்திஜி சந்தோஷத்துடன் சொன்னார்: "நானும் உற்பத்தியைப் பெருக்கவே முயலுகிறேன் என்றால் நீங்கள் சந்தோஷத்துடன் ஆசி கூறுவீர்கள் என்றே நம்புகிறேன்."

"புது ஆலைகளை நிர்மாணிக்க ஏதாவது திட்டம் போட்டிருக்கிறீர்களா? அப்படியானால் உற்சாகப்படுத்த வேண்டியதுதான்."

"இல்லை, நாட்டிலுள்ள கைத்தறிகளுக்குப் போதுமான நூலை உற்பத்தி செய்ய ராட்டையைக் கண்டுபிடித்துவிட்டேன்."

நண்பருக்கு விளங்கவில்லை. காந்திஜி ராட்டையைப்பற்றியும் ஒவ்வொருவரும் தினசரி நூல் நூற்றால் உற்பத்தியாகும் மொத்த நூலைக்கொண்டு எவ்வளவு துணி உற்பத்தி செய்ய முடியும் என்றும் விளக்கிக் கூறினார். "கைத்தறி நெசவு செய்வதால் நூலுக்காக நாங்கள் ஆலைகளை நம்பிக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. ஆலைகளின் ஏஜண்டுகளைப் போலவே நாங்கள் பிரசாரம் செய்வதையும் விரும்பவில்லை. பசியினாலும் பட்டினியாலும் வாடும் பல்லாயிரக் கணக்கான ஏழை மக்களுக்குச் சர்க்காவினால் பிழைப்புக் கொடுக்க முடியும். உணவும் உடையும் கொடுக்கும் கதர் இயக்கத்தைத் தீவிரமாக்கத் துணிந்துவிட்டேன். மேலும் இந்த இயக்கத்தினால் தீமை ஏற்பட வழியில்லை. பித்தலாட்டம் செய்து (ஜனங்களை ஏமாற்றிப்) பிழைக்கவும் இடம் இல்லை" என்றார் பாபு.

"உங்களுடைய சித்தாந்தம் வெற்றிபெற வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம். விஞ்ஞானமும் யந்திரமும் உள்ள இந்தக் காலத்தில் கைராட்டையினால் புரட்சிகரமான வேலை செய்ய முடியுமா என்று சந்தேகப்படுகிறேன். இயக்கமும் உற்பத்தியும் பரஸ்பரம் உதவியாக இருந்தால் உங்களுடைய முயற்சி வெற்றியடைய ஆண்டவன் அருள் செய்யட்டும்."

கோடி கொடுத்தாலும் வேண்டாம்
(1921)

குஜராத் வித்யாபீடம் ஸ்தாபித்தபோது அத்துடன் பல பள்ளிக்கூடங்களை இணைத்துக் கொண்டார்கள். சாதி, சமயப் பாகுபாடுகள் பார்க்கக்கூடாது என்பது அமைப்பு விதிகளில் ஒன்று. 1921-ஆம் ஆண்டில், ஒரு நிர்வாகக் குழு (செனட்)

கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தீனபந்து ஆண்ட்ரூஸை அழைத்திருந்தார்கள். கூட்டத்தின் போது ஆண்ட்ரூஸ், "உங்களுடைய கலாசாலையில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்த்துக்கொள்வீர்களா ?" என்று கேட்டார்.

காந்திஜியின் ஆசியும் மேற்பார்வையும் இருந்தாலும் வேறு பலரும் அந்த ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டிருந்ததாலேயே அவருக்கு இந்தச் சந்தேகம் எழுந்தது. "சேர்த்துக் கொள்வோம்" என்றார் காலேல்கர். அவர்தாம் கல்லூரியின் தலைவர். ஆனால் அதைச் சில செனட் அங்கத்தினர்கள் வரவேற்கவில்லை. வித்யா பீடத்துடன் இணைந்துள்ள ஒரு பள்ளிக்கூட நிர்வாகியே அதை ஆக்ஷேபித்தார். வாதப் பிரதிவாதங்கள் எழுந்து காந்திஜியின் முடிவுக்கு விட்டுவிடத் தீர்மானித்தார்கள். காந்திஜியின் பதில் எப்படி இருக்கும் என்பது காலேல்கருக்கும் மற்ற ஊழியர்களுக்கும் தெரியும். ஆகவே அவர்கள் மௌனமாக இருந்தார்கள். கல்வி சம்பந்தமான பொதுக் காரியங்களில் தம்முடைய தீவிரக் கொள்கைகளைக் காந்திஜி வற்புறுத்த மாட்டார் என்றே மற்றவர்கள் எண்ணினார்கள்.

இந்தச் செய்தியைப் பத்திரிகைகளில் படித்தவர்கள் ஆக்ஷேப சமாதானம் கிளப்பவே, கிளர்ச்சி வலுத்துவிட்டது. காந்திஜியோ 'சாதி சமய வேறுபாடுகள் ஒழிந்துவிட வேண்டும். குஜராத் வித்யா பீடத்தில் எல்லா மாணவர்களுக்கும் சம உரிமை உண்டு' என்று தீர்ப்புக் கூறிவிட்டார். அதன் பிறகு குஜராத் முழுவதும் அங்கங்கு பல பள்ளிகள் தோன்றின. தேசீய நோக்கத்துடன் துவங்கப்பட்டவை பல; மதப் பற்றுடன் சம்பிரதாயங்களைக் காத்து நின்றவை சில. இந்தச் சமயத்தில் பம்பாயிலிருந்து சில வியாபாரிகள் காந்திஜியிடம் வந்தார்கள். அவர்களுக்கு மதப்பற்றும் சாதி அபிமானமும் அதிகம் என்றாலும் காந்திஜியின் தேச சேவையில் ஆர்வமுள்ளவர்கள்.

"பாபு, தேசீயக் கல்வி அவசியமே. அது மிகவும் புனிதமான கைங்கரியம் என்றுகூட நாங்கள் கருதுகிறோம். எங்களால் இயன்ற உதவியைச் செய்யவும் காத்திருக்கிறோம். ஆனால் தீண்டாதார்களுக்கும் சம உரிமை கொடுத்துக் கல்வி கற்பிப்பது விரும்பத் தக்கதல்ல. அதை மட்டும் நீங்கள் வற்புறுத்த வேண்டாம்" என்றார் அவர்களில் ஒருவர்.

அவர்களில் பலர் ரொக்கமாகப் பணத்தை எடுத்துக்கொண்டு வந்திருந்தார்கள். அவர்களுடைய நிபந்தனைக்குக் காந்திஜி இணங்கி விட்டால், அப்போதே லக்ஷரூபாய் கொடுத்துச் செல்லவும், மேலும் இரண்டு மூன்று லக்ஷம் வசூலிக்கவும் அவர்கள் தயாராக இருந்தார்கள். ஆனால் காந்திஜியோ பிடிவாதமாக இருந்தார்.

"வித்யாபீடத்துக்கு நிதி திரட்டும் பொறுப்பு என்னைச் சேர்ந்தது. கோடி ரூபாய் கிடைப்பதானாலும் என்னால் இந்த அநீதியைச் சகித்துக் கொள்ள முடியாது. தயவு செய்து தீண் டாமைப் பிரச்னையைக் கிளப்பாதீர்கள். 'தீண்டாதார்கள் ஒதுங்கி வாழட்டும்; உங்களுக்குச் சுயராஜ்யம் கொடுத்து விடுகிறோம்' என்றால்கூட எனக்குச் சுயராஜ்யம் வேண்டாம் என்றே சொல் வேன். தீண்டாமை ஒழிந்து, எல்லாரும் சம உரிமையுடன் வாழ வழி செய்வதே என்னுடைய முதல் வேலை" என்றார் காந்திஜி.

வைஷ்ணவ வியாபாரிகள் வருத்தத்துடன் பம்பாய்க்குத் திரும்பினார்கள். பண பலத்தினால் ஒரு பிரச்னையை ஒதுக்கி விடலாம் என்ற நம்பிக்கையுடன்தான் அவர்கள் காந்திஜியிடம் வந்தார்கள். ஆனால் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

படம் பிடிக்க முடியாதே

(1921)

காந்திஜி போட்டோ பிடிப்பதற்குத் தயாராகக் காமிராவின் எதிரே நிற்பதில்லை. ஆனாலும் எத்தனையோ பேர்கள் அவரைப் படம் பிடித்திருக்கிறார்கள். படத்துக்குப் படம் அவருடைய முக பாவத்தில் மாறுதல் இருக்கும். ஒத்துழையாமை இயக்கம் ஆரம்ப மாவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு அநுசூயாபென் காந்திஜி யிடம் ஓர் ஆங்கிலேய நண்பரை அழைத்து வந்தார். அந்த ஆங்கி லேயர் காந்திஜியைப்போல ஓர் வண்ணச் சித்திரம் வரைய விரும் பினார். காந்திஜி அதற்கு இசையவில்லை. "என்னால் மணிக்கணக் காக உங்களுடைய எதிரில் ('போஸ்' கொடுத்து) உட்கார முடி யாது" என்று கூறிவிட்டார். அந்த ஆங்கிலேயர் விடுவதாக இல்லை. அநுசூயாவின் சகோதரர்களுடைய குழந்தைகளுக்கு அவர் கல்வி போதகராக இருந்ததால் அடிக்கடி ஆசிரமத்துக்கு வந்துசென்றார். காந்திஜியையும் ஆசிரமக் காட்சிகளையும் படம் பிடிக்கக் காந்திஜியிடம் அநுமதி பெற்றார் அந்த ஆங்கிலேயர். அதற்குக்

காந்திஜி சொன்னார்: "நான் படம் பிடிப்பதற்காக உங்களுக்கு எதிரில் நிற்கமுடியாது. என்னுடைய வேலைகளுக்கு இடையூறின்றி நீங்கள் படம் பிடிப்பதில் ஆக்ஷேபணை இல்லை."

உடனிருந்து கேட்டுக் கொண்டிருந்த ஒரு பத்திரிகைக்காரர் உடனே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார். அவர் சில தினங்கள் ஆசிரமத்தில் தங்க அநுமதி பெற்றிருந்ததால் காந்திஜியைப் பல முறை போட்டோ பிடித்துக் கொண்டார். ஒரு நாள் காந்திஜி சொன்னார்: "ஏன் இந்தச் சிரமம் உங்களுக்கு? எத்தனை தரம் படம் பிடித்தாலும், படத்துக்குப் படம் என்னுடைய முகபாவம் மாறியிருக்கும். என்னுடைய படங்கள் ஒரே மாதிரி இரா. நான் சதா சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். மனோவேகத்துக்கு ஏற்றாற்போல உடலும் (முகமும்) மாறுதலடைந்துகொண்டேதானிருக்கும். ஒரே நாளில் பிடித்த படங்களில்கூட வித்தியாசம் இருக்கும்."

காந்திஜி கூறியது உண்மைதான் என்று மற்றவர்கள் ஒப்புக் கொண்டார்கள். அசப்பில் அவரைப் படம் பிடிக்க நேரிடுவதால் (நிமிஷத்துக்கு நிமிஷம்) மாறும் முகபாவத்தைப் படமாக்கி விட்டார்கள். நுணுக்கமாகக் கவனித்தால் மாறுதல் இருப்பதும் தெரிந்தது.

சோதனை

(1921)

சாபர்மதி ஆசிரமத்தில் கோசாலை இருந்தது. ஒரு சமயம் கன்றுக்குட்டி யொன்று நோய்வாய்ப்பட்டது. மிருக வைத்தியர்களோ அது பிழைக்காது என்று கூறிவிட்டார்கள். அடிக்கடி வலிப்பு வந்து அந்தக் கன்றுக்குட்டி துடித்தது. அதன் வேதனையைக்கண்டு பாபு மனங் கசிந்துவிட்டார். "இந்தப் பாவத்தைச் சகித்துக் கொண்டிருப்பதைவிட, சுட்டுக் கொன்று விட்டால் விடுதலை பெற்றுவிடுமே" என்றார் பாபு. ஆசிரம ஊழியர்களோ இதை ஏற்றுக் கொள்ளவில்லை.

அந்தச் சமயம் அங்கு வந்த வல்லபபாய், "பசுவதையை ஹிந்துக்கள் சகிக்கமாட்டார்கள். கன்றுக்குட்டியைப் பார்த்தால் இரண்டு மூன்று தினங்களில் இறந்துவிடும் என்றே தோன்றுகிறது. நாம் ஏன் அதைக் கொன்று பொதுஜன விரோதத்துக்கு

ஆளாகவேண்டும் ?" என்ருர். பொதுவாக அவர் ஆசிரம நிர்வாகத்தில் தலையிடுவதில்லை. காந்திஜி மௌனமாக இருந்தார்.

"நாம் இப்போது நிதி திரட்டப் பம்பாய்க்குச் செல்கிறோம் என்பதை ஞாபகமூட்டுகிறேன். பாபு, இந்தச் செய்தியை அங்குள்ள வியாபாரிகள் கேட்டால் சல்லிக்காசுகூடத் தரமாட்டார்கள். நம்முடைய வேலைக்குக் குந்தகம் ஏற்படுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?" என்று கேட்டார் வல்லபபாய்.

காந்திஜிக்கோ கன்றுக்குட்டியின் துடிதுடிப்பில்தான் கவனம் இருந்தது. எதிர்ப்பு நேரிட்டாலும் ஆண்டவன் அருளால் சமாளித்துவிடலாம் என்ற உறுதியுடன் ஒரு வேட்டைக்காரனுக்குச் சொல்லியனுப்பினர். அவன் துப்பாக்கியுடன் வந்தான். ஆனால் அவன் கன்றுக்குட்டியைச் சுடவில்லை. "இந்தச் சின்னஞ்சிறு பிராணியைச் சுட்டுக் கொல்லவேண்டாம், பாபு. ஊரில் ஒரு பார்ஸி டாக்டர் இருக்கிருர். ஊசி மூலம் விஷம் ஏற்றிக் கொன்றுவிடுவார்" என்று யோசனை கூறி டாக்டரின் முகவரியும் கொடுத்தான்.

டாக்டர் வந்தார். மருந்து ஊட்டி அதற்குச் சாந்தியளித்தார். இதனால் வாதப் பிரதி வாதங்கள் எழுந்தன. ஆனால் காந்திஜியின் வாதத்தை - அஹிம்ஸையின் வியாக்கியானத்தை - சிறிது திகைப்புடன்தான் மக்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

அடிமை
(1922)

ஒத்துழையாமை இயக்கத்தின் பயனாக 1922-ஆம் ஆண்டில் சிறைத் தண்டனை பெற்று, காந்திஜி எரவாடா சிறையிலிருந்தார். இந்துக்களும், முஸ்லிம்களும் காந்திஜியிடம் அன்பு காட்டியதால், அவருடன் நெருங்கிப் பழகும் சிறைச் சிப்பந்திகள் மனம் மாறி அராஜகத்தில் இறங்கி விடுவார்களோ என்று சிறை அதிகாரி பயந்தார். சிப்பந்திகள் எவரும் காந்திஜியுடன் நெருங்கிப் பழகக் கூடாது என்று உத்தரவு போட்டதுடன், காந்திஜிக்குக் குற்றேவல் செய்ய எங்கிருந்தோ ஒரு நீகிரோவைத் தேடிப் பிடித்துக்கொண்டு வந்தார். அவனுக்கு ஆங்கிலமும் தெரியாது ; இந்தியப் பாஷைகளிலும் பரிசயம் கிடையாது. அதனால் அவன் காந்திஜியிடம் ஊமை போலப் பழகுவானே தவிர, அவருடைய போதனைக்கு

அடிமைப்பட்டுவிடமாட்டான் என்றே சிறை அதிகாரி எண்ணினர். காந்திஜியும் சமிக்ஞைமூலம் அவனிடம் பேசிச் சமாளித்துக் கொண்டார்.

ஒருநாள் அந்த நீகிரோவின் கையில் தேள் கொட்டிவிட்டது. அவன் துடியாய்த் துடித்துப் போனான். கூகூவென்று கத்திக் கொண்டு காந்திஜியிடம் ஓடினன். நல்ல வேளையாக, தேள் அடித்துக் கொல்லப்பட்டது. அதைப் பார்த்த பிறகுதான் அவனுடைய கூச்சலின் பொருளைக் காந்திஜியும் மற்றவர்களும் தெரிந்து கொண்டார்கள். காந்திஜியிடம் வைத்திய வசதியில்லை. ஆனாலும் அவர் சும்மா இருக்கவில்லை. அருள் நிறைந்த பார்வையுடன் அவனை நெருங்கினர். தேள் கொட்டிய இடத்தைக் குளிர்ந்த நீரால் கழுவினர். ஊசியினால் குத்தி இரத்தம் பெருகச் செய்தார். வலியின் வேகம் குறையவே நீகிரோவும் அமைதியடைந்தான். பிறகு காந்திஜி அவனை டாக்ட்ரிடம் அனுப்பினர்.

அன்று முதல் அந்த நீகிரோவின் போக்கே மாறிவிட்டது. தன்னிடம் அன்பு காட்டும் வேறு நாட்டினரை அவன் சந்தித்ததே இல்லை. காந்திஜியின் கருணை அவனை அடிமையாக்கிவிட்டது அவரைத் தெய்வமாகவே எண்ணி வணங்கினன். அவருடைய குறிப்புணர்ந்து வேலை செய்யக் காத்துக் கிடந்தான். தக்ளியில் நூல் நூற்கக் கற்றுக்கொண்டு, காந்திஜியின் ஆசி பெற்றான்.

காந்திஜியுடன் பேசிப் பழகினல் அவருக்கு அடிமையாகி விடுவார்கள் என்று சிறை அதிகாரி பயந்தார். அன்புக்குப் பாஷை ஏது? கருணை வெள்ளத்தில் மூழ்கி எழுந்த இந்த அடிமையின் போக்கைக் கண்டு சிறை அதிகாரி ஏமாற்றமடைந்தார்.

அன்பே சிவம்
(1922)

ஏரவாடா சிறையில் குவின் என்று ஒரு சிறை உத்தியோகஸ்தர் இருந்தார். அவர் தாம் காந்திஜி இருந்த பகுதிக்குப் பொறுப்பான நிர்வாக அதிகாரி. குவின் அயர்லாந்தைச் சேர்ந்தவர். அயர்லாந்துக்காரர்களுக்கு எப்போதுமே இந்திய சுதந்தரப் போரில் அநுதாபம் உண்டு. காந்திஜியிடம் குஜராத்தி பாடம் கற்றுக்கொள்ளக் குவின் விரும்பினர். காந்திஜியும் சம்மதித்துத் தினந்தோறும் அவருக்குப் பாடங் கற்றுத் தரலானர்.

ஒருநாள் குவின், "குஜராத்தி மொழியில் சில வார்த்தைகளை நிறுத்தி எழுதிக் கொடுங்கள். படித்து மொழி பெயர்க்கிறேன். மேலும் கையெழுத்தைப் படித்துப் பழகவும் அது உபயோகப் படும்" என்று காந்திஜியிடம் கேட்டார்.

காந்திஜி பின்வருமாறு ஒரு கடிதத்தில் எழுதிக் கொடுத்தார்: "கைதிகளிடம் அன்புடன் பழகுங்கள். கோபம் வந்தாலும் அதை வெல்ல மனசை அடக்குங்கள்."

இது பாடமா, உபதேசமா? இரண்டுந்தான் என்று குவின் எடுத்துக்கொண்டர். அந்தக் கடிதத்தை எப்போதும் சட்டைப் பையிலிருக்கும் நாட்குறிப்புப் புத்தகத்தில் வைத்துக் கொண்டார். சில மாதங்களுக்கெல்லாம் உத்தியோக உயர்வு பெற்றுக் குவின் விஸாபூர்ச் சிறை அதிகாரியாகப் பதவி ஏற்றூர். ஒரு சமயம் சிறையிலுள்ள அரசியல் கைதிகள் ரகளை செய்தார்கள். துப்பாக்கிப் பிரயோகம் செய்தால் தவிர அவர்களை அடக்க முடியாது என்ற அளவுக்குக் கலகம் முற்றிற்று. காந்திஜியின் உபதேசத்தில் பற்றுக்கொண்ட குவின் காரியாலய அறையை விட்டு வெளியேற வில்லை. உள்ளங் கொதித்துக் கொண்டிருந்தது. சட்டைப் பையிலிருந்த காந்திஜியின் பொன் மொழிகளை எடுத்துப் பாராயணம் செய்யலானுர். சில நிமிஷங்களுக்குள் மன அமைதி ஏற்பட்டது. வெளியே வந்து, கைதிகளுடன் சமாதானமாகப் பேசி அவர்களை அடக்கிவிட்டார். தம்முடைய அநுபவத்தைக் காந்திஜிக்கு அவர் எழுதினர்.

இதே போல வேறு ஒரு சம்பவம்: முன் கோபக்காரரான ஓர் ஆங்கிலோ இந்தியர் சிறையில் காந்திஜியுடன் பழக நேரிட்டது. ஒருநாள் அவர் அன்புக் காணிக்கையாக வைத்துக் கொள்ளக் காந்திஜியிடம் கையெழுத்துக் கோரினர். காந்திஜியோ, "அன்பே சிவம்" என்று பொருள்படும்படி ஆங்கிலத்தில் எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்தார். பிற்காலத்தில் ஒரு சமயம் இந்த ஆங்கிலோ இந்தியர் பாபுவைச் சந்திக்க நேர்ந்தபோது, காந்திஜியின் பொன் மொழிகள், பல ஆபத்துக்களிலிருந்து, தம்மைக் காத்திருப்பதாகக் கூறினர்.

★

தெய்வ நிந்தனை செய்யாதீர்கள்

(1924)

காந்திஜி 1924 - ஆம் வருஷக் கடைசியில் ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்காக உண்ணாவிரதமிருந்தார். அப்போது அவர் டில்லியில் மௌலானா மக்ம்மது அலியின் ‘டில்குஷ்’ என்ற பங்களாவில் தங்கியிருந்தார். அந்தச் சமயம் பல மைல்களுக்கு அப்பாலிருந்த கிராமத்திலிருந்து கால் நடையாக ஒரு தம்பதிகள் வந்து காந்திஜியைத் தரிசிக்க விரும்பினார்கள். முழங்கால் மறையப் புழுதியும் அழுக்கு நிறைந்த ஆடைகளும் உள்ள அவர்களை வாசலில் தடுத்து நிறுத்தி விட்டார்கள். அநுமதியின்றி எவருமே காந்திஜியை அணுகக்கூடாது என்று மகம்மது அலி உத்தரவிட்டிருந்தார். காந்திஜியைத் தரிசிக்காமல் அங்கிருந்து செல்லமுடியாது என்று அவர்களும் பிடிவாதமாக இருந்தார்கள்.

அவர்களுடைய ஒரே குழந்தை சாகக் கிடந்தது. மகாத்மாவின் பாதங்களைக் கழுவிய நீரைக் கொடுத்தால் அந்தக் குழந்தை பிழைத்துவிடும் என்று சொல்லவே அவர்கள் ஓடோடியும் வந்தார்கள். அவர்களுடைய சத்தியாக்கிரகத்தைக் கேள்வியுற்று, காந்திஜி அழைத்தார். மகாத்மாவின் தரிசனம் கிடைத்ததும் தங்களுடைய கோரிக்கையும் நிறைவேறிவிடும் என்றே அவர்கள் எண்ணினார்கள்.

அவர்களை அருகில் அழைத்து, மகாத்மா மெல்லிய குரலில் பின்வருமாறு சொன்னார்: “என்னை எதற்காக மகாத்மா என்று எண்ணுகிறீர்கள்? கடவுளிடம் உங்களுக்குப் பக்தியிருந்தால் கேவலம் ஒரு நரனிடம் பக்தி செலுத்துவது தெய்வ நிந்தனையாகாதா? என்னுடைய பாதங்களைக் கழுவும் நீர் மருந்தாகி விடுமா? அசுத்தமான நீரைப் புனிதமாக எண்ணுவதே பாவமாகும். சாதாரண சுகாதார விதியைக்கூட நீங்கள் ஏன் மறந்து விட்டீர்கள்? ஆண்டவனைப் பிரார்த்தியுங்கள். உங்களுடைய கோரிக்கை நிறைவேறும்.”

காந்திஜியின் அன்பு நிறைந்த மொழிகளால் அவர்கள் மனச்சாந்தி பெற்று, வணங்கி விடைப் பெற்றுச் சென்றார்கள்.

★

கலையும் வாழ்க்கையும்

(1924)

காந்திஜி 'தில்குஷ்' பங்களாவில் தங்கியிருந்தபோது தீனபந்து ஆண்ட்ரூஸ், ஜி. ராமசந்திரனை* அறிமுகம் செய்து வைத்தார். அப்போது ராமசந்திரன் சாந்திநிகேதனத்தில் கல்வி பயின்று கொண்டிருந்தார். ஒரு நாள் ராமசந்திரன் பாபுவுடன் பேசிக் கொண்டிருந்த போது, "கலைவளர்ச்சியிலும், புனருத்தாரணத்திலும் நீங்கள் சிரத்தை காட்டுவதில்லை என்று உங்களுடன் நெருங்கிப் பழகும் நண்பர்களே சொல்கிறார்களே?" என்று கேட்டார்.

"எனக்குக் கலை உணர்ச்சியில்லை என்று சொல்வது கேட்டு வருத்தப்படுகிறேன். என்னைத் தப்பர்த்தம் செய்துகொண்டால் நான் என்ன செய்வது? அகம், புறம் என்று கலையைப் பிரித்து விட்டால் பிறகு தெளிவாகிவிடும். நீங்கள் அழகுணர்ச்சிக்குப் பிராதான்யம் கொடுக்கிறீர்கள்; நான் ஆத்மாவுக்கும் உற்சாக மூட்டும் அழகையே கலையாகக் கருதுகிறேன். புற அழகு, குறிப்பாகக் கலா சிருஷ்டி, மனிதனுடைய கற்பனையை விஸ்தரிப்பதுடன் நின்று விடுகிறது. அவனுடைய ஆத்ம வளர்ச்சிக்கு இடம் இல்லை."

"ஆனால் இருதய உணர்ச்சியும் ஆத்ம எழுச்சியுந்தான் செயலில் கலையாகப் பரிணமிக்கின்றன. சொல் (கவிதை), செயல் (வர்ணம், சித்திரம், சிற்பம்) இவை எல்லாம் கலைஞனுடைய இருதயத் துடிப்பின் உருவங்கள் என்று அறிஞர்கள் கூறியிருக்கிறார்களே?" என்று இடைமறித்தார் ராமசந்திரன்.

"ஆமாம், அந்தமாதிரிச் சிருஷ்டிகளை நானும் விரும்புகிறேன். கற்பனையும் கவர்ச்சியும் இருந்தாலும் அவற்றில் ஆத்மீக உயர்வுக்கான சின்னங்களைக் காணமுடியவில்லையே?"

"எனக்கு விளங்கவில்லை. உதாரணத்துடன் சொல்லுங்கள்."

"ஆஸ்கார் வொயில்டை எடுத்துக்கொள். நான் இங்கிலாந்திலிருக்கும்போது அவரைப் பற்றி விஸ்தாரமான சர்ச்சை நடந்து கொண்டிருந்தது."

"இந்த நூற்றாண்டிலுள்ள பெரிய இலக்கிய மேதைகளில் அவர் ஒருவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்."

---

* **இப்போது சர்வசேவா சங்கத்தின் காரியதரிசி.**

"இருக்கலாம். புற அழகைத்தான் வொயில்ட் ரசித்து, அநுபவித்து வெற்றி பெற்றார். அவர் கலைஞன்தான் என்றாலும் நான் கூறும் ரகத்தைச் சேர்ந்தவரல்ல. அகஅழகும் காண வேண்டும்; ஆன்மீக உயர்வுக்கு ஏற்றமுறையிலும் கலைச் சிருஷ்டி இருக்கவேண்டும். நான் ஒரு சிறந்த கலைஞன் என்றே என்னைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். புற அழகு இல்லாமல், ஆத்ம உயர்வுக்கான கற்பனையில் ஈடுபட என்னால் முடியும். ஆனால் என்னுடைய கற்பனை செயலாக உருவெடுக்கும் போது, அதில் புற அழகின் மெருகு காணமுடியாது. ஆகவே என்னைக் கலைஞன் என்று சிலர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். என்னுடைய அறை கவர்ச்சியற்றிருக்கலாம். மேலே கூரையின்றி, இருக்கும் இடத்தி லமர்ந்து பரந்த நீல வானையும், சுடர் விட்டுத் தெறிக்கும் நட்சத் திரங்களையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பேன். இதனால் எனக்குக் கலாரசனை இல்லை என்றோ கலைத் திறனை நான் மறுக்கிறேன் என்றோ எடுத்துக் கொள்ளக்கூடாது. சிருஷ்டியின் அழகையும் ஆனந்தத்தையும் ரசிக்கும் பக்குவம் ஏற்பட்டுவிட்டால் கைத்திறனில் உருவாகும் கற்பனை பெரிதாகத் தோன்றாது. ஆத் மீக வளர்ச்சிக்கு உதவியாகவே கலையும் காவியமும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவற்றின் மதிப்புப் புறஅழகுடன் நின்றுவிடும்."

"புற அழகினால் சத்தியத்துக்கு மெருகு கொடுத்துக் கவர்ச்சி யுறச் செய்யும்போது கலை என்கிறோம் என்று கலைஞர்கள் கூறு கிறார்களே, சத்திய சாதனைக்குக் கலை உதவுகிறதா?"

"சத்தியத்தினால்தான் அழகு பரிணமிக்கிறது என்றே நான் கூறுவேன். உண்மையே அழகுணர்ச்சிதான். கவிதை, சித்திரம், சிற்பம் எல்லாமே கலைஞனின் சிருஷ்டிதான். ஆனால் சாதாரண மக்களுக்குச் சத்தியத்தில் மிளிரும் அழகை ரசிக்க முடியாது. சத்தியமும் அழகும் ஒன்றாக இருப்பதே அவர்களுடைய கண் களுக்குத் தெரியாது. அகமும் புறமும் அழகான சத்தியத்தைக் காணும் போதுதான் கலை தோன்றுகிறது."

"கலையும் சத்தியமும் பிரிக்க முடியாதவையா? அழகும் சத்தியமும் வேறுபடுத்திப் பார்க்க முடியாதவையா?"

"அழகு என்று எதைச் சொல்லுகிறோம்? கண்ணுக்குக் கவர்ச்சியாக இருப்பன எல்லாம் அழகு என்று சொல்லி

விடலாமா? உள்ளக் கிளர்ச்சி யூட்டுபவை எல்லாம் அழகு நிறைந் தவைகளாக இருக்கமுடியுமா? கவர்ச்சியூட்டும் அங்கங்களை யுடைய பெண் ஒருத்தி அழகாக இருக்கமுடியுமா?''

''கவர்ச்சி என்றபோதே அழகு என்றுதானே பொருள் படுகிறது ?''

''அவளுடைய நடத்தை கெட்டிருந்தாலும், அழகை ரசிக்க முடியுமா?''

ராமசந்திரன் சிறிது யோசித்தார். ''அகத்தின் அழகு முகத்தில் தெரியும். சிறந்த கலைஞனால் அவளுடைய உணர்ச்சியை யும் பாவத்தையும் படம் பிடித்துவிட முடியும்'' என்றார்.

''நான் சொல்வதை ஏற்றுக் கொண்டு விட்டாயே! புற அழகி னால் - அங்கக் கவர்ச்சியினால் - கலையழகு வந்துவிடாது. இருதய பாவத்தையும் ஒரு கலைஞன் சிருஷ்டித்துவிட முடியும். சத்தியத் தின் பிரதிபலிப்பை, அழகை - அவன் சித்திரத்திலோ, சிற்பத் திலோ வடித்துவிடக்கூடும். சில சமயங்களில் புற அழகில்லா மலும். சத்தியம் பிரகாசிக்கும்; கவர்ச்சியூட்டுவதாக அமைந்து விடும். அந்தக் காலத்தில் கிரீஸ் நாட்டில் சோக்ரதர் சத்திய சந்த ஞக வாழ்ந்தார். ஆனால் அவரைப் போன்ற குரூபி இல்லை என்றும் சரித்திரம் சொல்கிறது. அவர் அழகு நிறைந்தவர் என்றே நான் எண்ணுகிறேன். ஆயுள் முழுவதும் சத்திய சாதனை செய்து, பிறரை வசீகரித்து விட்டாரே! பிடியாஸ் அவருடைய புற அழகைக் கண்டு ரசிக்கவில்லை. அவருடைய உணர்ச்சியும் வாழ்க்கையுமே அவனை இழுத்தன.''

''அற்புதமான கலா சிருஷ்டிகர்த்தர்களின் வாழ்க்கை அழகற் றிருந்தது; அவர்கள் துன்பமும் துயரமும் அநுபவித்தார்கள் என்பதும் உண்மைதானே?''

''அதனால் என்ன தெரிகிறது? சத்தியமும் அசத்தியமும் கலந்ததே வாழ்க்கை என்றுதானே! நல்லதும் கெட்டதும் எப் போதும் ஒன்றாகக் காணப்படுகின்றன. மனத் தெளிவும் சீரிய சிந்தனையும் இருக்கும்போதுதான் நல்ல கற்பனை உருவாகிறது. அப்போது சிருஷ்டிக்கப்படும் பொருள்கள் அழகு ததும்ப அமைந்துவிடும். வாழ்க்கையில் நல்ல சிந்தனைக்குச் சந்தர்ப்ப மில்லாவிட்டால், சிருஷ்டியின் வேகமும் கலைத் திறனும் குறைந்துவிடும்.''

"சத்தியத்திலும், நல்ல பொருள்களிலும்தான் அழகுணர்ச்சி இருக்கிறது என்றால், தார்மீகப் பண்பு இல்லாதவை அழகற்றவை தாமே? தர்மம், அதர்மம் என்று பிரிக்க முடியாமலிருக்கும் சூரிய உதயத்திலும், பிறைச் சந்திரனிலும், மின்னும் நக்ஷத்திரங்களிலும் அழகு இருக்கிறதே? அவற்றை நாம் ரசிக்கவில்லையா? உள்ளக் கிளர்ச்சி ஏற்படவில்லையா?"

"உண்மைதான். இயற்கைக் காட்சியில் சத்தியத்தைத் தான் காண்கிறோம். சூரியாஸ்தமனத்தையும், பிறைச் சந்திரனையும் பார்க்கும்போது மனம் மகிழ்ச்சி அடைகிறது, வியப்படைகிறது, இறைவனை எண்ணி வணங்குகிறது. அந்தக் காட்சியிலே அவனுடைய அருளைக் காண, உருவத்தைக் காண மனம் விழைகிறது. ஆண்டவனை நினைந்துருக, வழிபட, சூரியோதயம் போன்ற இயற்கைக் காட்சிகள் உதவாமல், இடையூறாக இருக்குமானால் அவை சத்தியத் தன்மையை இழந்து விடுகின்றன; அழகற்று விடுகின்றன. ஆத்மீக வளர்ச்சிக்கு இடைஞ்சலாக நிற்கும் எல்லாம் மாயைதான். தேகத்தின்மீது பாசம் வைப்பது முக்தி மார்க்கத்துக்கு இடையூறு. ஆகவே, கலைக்கும் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. வாழ்க்கையில் உன்னதமடைய, ஆத்மீக வளர்ச்சிபெற உதவுவதுதான் கலை."

மனந்தெளிந்து ராமசந்திரன் விடைபெற்றுக் கொண்டார்.

புருஷோத்தமன்
(1924)

பரீத்பூரில் 1924-ஆம் வருஷ மத்தியில் வங்க மாகாணக் காங்கிரஸ் மகாநாடு நடந்தது. மகாநாட்டுடன் ஒரு பொருட்காட்சியும் நடத்த ஏற்பாடு செய்த நிர்வாகிகள், விவசாயப் பொருட்காட்சிப் பகுதியில் உதவி செய்ய விவசாய இலாகா அதிகாரியான ஸ்ரீ தேவேந்திரநாத் மித்ராவை நாடினார்கள்.

பொருட்காட்சியைத் திறந்துவைக்கக் காந்திஜியை அழைத்தார்கள். தாம் ஒரு சர்க்கார் ஊழியன் என்பதைக்கூட மறந்து மித்ரா உற்சாகத்துடன் உழைத்தார். விவசாயப் பகுதியைச் சுற்றிப் பார்த்து, காந்திஜி மித்ராவைப் பாராட்டினார். மித்ராவுக்குப் பெருமையும் சந்தோஷமும் தாளவில்லை. தாம் மேற்பார்வை செய்யும் விவசாயப் பண்ணைக்கு வரவேண்டும் என்று காந்திஜி

விடலாமா? உள்ளக் கிளர்ச்சி யூட்டுபவை எல்லாம் அழகு நிறைந்தவைகளாக இருக்கமுடியுமா? கவர்ச்சியூட்டும் அங்கங்களையுடைய பெண் ஒருத்தி அழகாக இருக்கமுடியுமா?''

''கவர்ச்சி என்றபோதே அழகு என்றுதானே பொருள் படுகிறது?''

''அவளுடைய நடத்தை கெட்டிருந்தாலும், அழகை ரசிக்க முடியுமா?''

ராமசந்திரன் சிறிது யோசித்தார். ''அகத்தின் அழகு முகத்தில் தெரியும். சிறந்த கலைஞனுல் அவளுடைய உணர்ச்சியையும் பாவத்தையும் படம் பிடித்துவிட முடியும்'' என்ருர்.

''நான் சொல்வதை ஏற்றுக் கொண்டு விட்டாயே! புற அழகினுல் - அங்கக் கவர்ச்சியினுல் - கலையழகு வந்துவிடாது. இருதய பாவத்தையும் ஒரு கலைஞன் சிருஷ்டித்துவிட முடியும். சத்தியத்தின் பிரதிபலிப்பை, அழகை - அவன் சித்திரத்திலோ, சிற்பத்திலோ வடித்துவிடக்கூடும். சில சமயங்களில் புற அழகில்லாமலும். சத்தியம் பிரகாசிக்கும்; கவர்ச்சியூட்டுவதாக அமைந்துவிடும். அந்தக் காலத்தில் கிரீஸ் நாட்டில் சோக்ரதர் சத்திய சந்தகை வாழ்ந்தார். ஆனுல் அவரைப் போன்ற குரூபி இல்லை என்றும் சரித்திரம் சொல்கிறது. அவர் அழகு நிறைந்தவர் என்றே நான் எண்ணுகிறேன். ஆயுள் முழுவதும் சத்திய சாதனை செய்து, பிறரை வசீரிகத்து விட்டாரே! பீடியாஸ் அவருடைய புற அழகைக் கண்டு ரசிக்கவில்லை. அவருடைய உணர்ச்சியும் வாழ்க்கையுமே அவனை இழுத்தன.''

''அற்புதமான கலா சிருஷ்டிகர்த்தர்களின் வாழ்க்கை அழகற்றிருந்தது; அவர்கள் துன்பமும் துயரமும் அநுபவித்தார்கள் என்பதும் உண்மைதானே?''

''அதனுல் என்ன தெரிகிறது? சத்தியமும் அசத்தியமும் கலந்ததே வாழ்க்கை என்றுதானே! நல்லதும் கெட்டதும் எப்போதும் ஒன்ருகக் காணப்படுகின்றன. மனத் தெளிவும் சீரிய சிந்தனையும் இருக்கும்போதுதான் நல்ல கற்பனை உருவாகிறது. அப்போது சிருஷ்டிக்கப்படும் பொருள்கள் அழகு ததும்ப அமைந்துவிடும். வாழ்க்கையில் நல்ல சிந்தனைக்குச் சந்தர்ப்பமில்லாவிட்டால், சிருஷ்டியின் வேகமும் கலைத் திறனும் குறைந்துவிடும்.''

"சத்தியத்திலும், நல்ல பொருள்களிலும்தான் அழகுணர்ச்சி இருக்கிறது என்றால், தார்மீகப் பண்பு இல்லாதவை அழகற்றவை தாமே? தர்மம், அதர்மம் என்று பிரிக்க முடியாமலிருக்கும் சூரிய உதயத்திலும், பிறைச் சந்திரனிலும், மின்னும் நக்ஷத்திரங்களிலும் அழகு இருக்கிறதே? அவற்றை நாம் ரசிக்கவில்லையா? உள்ளக் கிளர்ச்சி ஏற்படவில்லையா?"

"உண்மைதான். இயற்கைக் காட்சியில் சத்தியத்தைத்தான் காண்கிறோம். சூரியாஸ்தமனத்தையும், பிறைச் சந்திரனையும் பார்க்கும்போது மனம் மகிழ்ச்சி அடைகிறது, வியப்படைகிறது, இறைவனை எண்ணி வணங்குகிறது. அந்தக் காட்சியிலே அவனுடைய அருளைக் காண, உருவத்தைக் காண மனம் விழைகிறது. ஆண்டவனை நினைந்துருக, வழிபட, சூரியோதயம் போன்ற இயற்கைக் காட்சிகள் உதவாமல், இடையூறாக இருக்குமானால் அவை சத்தியத் தன்மையை இழந்து விடுகின்றன; அழகற்று விடுகின்றன. ஆத்மீக வளர்ச்சிக்கு இடைஞ்சலாக நிற்கும் எல்லாம் மாயைதான். தேகத்தின்மீது பாசம் வைப்பது முக்தி மார்க்கத்துக்கு இடையூறு. ஆகவே, கலைக்கும் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. வாழ்க்கையில் உன்னதமடைய, ஆத்மீக வளர்ச்சிபெற உதவுவதுதான் கலை."

மனந்தெளிந்து ராமசந்திரன் விடைபெற்றுக் கொண்டார்.

புருஷோத்தமன்
(1924)

பரீத்பூரில் 1924-ஆம் வருஷ மத்தியில் வங்க மாகாணக் காங்கிரஸ் மகாநாடு நடந்தது. மகாநாட்டுடன் ஒரு பொருட்காட்சியும் நடத்த ஏற்பாடு செய்த நிர்வாகிகள், விவசாயப் பொருட்காட்சிப் பகுதியில் உதவி செய்ய விவசாய இலாகா அதிகாரியான ஸ்ரீ தேவேந்திரநாத் மித்ராவை நாடினார்கள்.

பொருட்காட்சியைத் திறந்துவைக்கக் காந்திஜியை அழைத்தார்கள். தாம் ஒரு சர்க்கார் ஊழியன் என்பதைக்கூட மறந்து மித்ரா உற்சாகத்துடன் உழைத்தார். விவசாயப் பகுதியைச் சுற்றிப் பார்த்து, காந்திஜி மித்ராவைப் பாராட்டினார். மித்ராவுக்குப் பெருமையும் சந்தோஷமும் தாளவில்லை. தாம் மேற்பார்வை செய்யும் விவசாயப் பண்ணைக்கு வரவேண்டும் என்று காந்திஜி

கோசேவை

(1924)

தேசீயப் பிரச்னைகளுக்கு நடுவே, நெருங்கிப் பழகும் ஊழியர்களின் குடும்பத்தாரின் சுகதுக்கங்களிலும் குடும்பப் பிரச்னைகளிலும் காந்திஜி சிரத்தை காட்டிக்கொண்டிருப்பது அவருடைய இயல்பு. ஊழியர் ஒருவருடைய பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாயிற்று. பிள்ளை வீட்டாரும் காந்திஜியின் அன்புக்குப் பாத்திரமானவர்களே. நிச்சயதார்த்தம் நடந்த பிறகு கல்யாணம் வேண்டாம் என்று பையன் முறைத்துக் கொண்டான். பெண் வீட்டார் திகைத்துப் போய்க் காந்திஜியிடம் வந்தார்கள்.

காந்திஜி பையனை அழைத்து விசாரித்தார். இரண்டு மூன்று தினங்கள் வரையில் பெண் வீட்டாரும், பையனும் ஆசிரமத்தில் தங்கியிருந்தார்கள். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் பாபு பையனுடன் பேசினார்; விவாதித்தார்; உபதேசம் செய்தார். கடைசியில் பையன் இணங்கிவிட்டான்; பெண் வீட்டாரும் கவலை நீங்கிச் சந்தோஷமடைந்தார்கள். ஆனால் பாபுவோ மகிழ்ச்சியடையவில்லை. வெகு நேரம் சிந்தனையிலாழ்ந்து கிடந்தார். மனத் தெளிவு ஏற்பட்டதும் பெண்ணின் தகப்பனாரையும் மற்றவர்களையும் கூப்பிட்டு, "என்னுடைய வார்த்தைக்குப் பையன் கட்டுப்பட்டு விட்டான். அவனுடன் நான் போராடிக்கொண்டிருந்ததைச் சென்ற இரண்டு மூன்று தினங்களாக நீங்கள் கவனித்துக்கொண்டிருந்ததில் அவனுடைய குணகுணங்களைத் தெரிந்து கொண்டிருப்பீர்கள். இந்தக் கல்யாணம் உசிதம் என்று தோன்றுகிறதா?" என்று கேட்டார்.

எவருமே பதில் சொல்லவில்லை. பெண்ணின் தந்தைக்கோ அழமாட்டாத துக்கம். சிறிது நேரத்துக்குள் ஒருவர், "பாபுஜி, நீங்கள் சொல்வது தான் சரி. இப்போது எங்களுக்குப் பையன் மீது மோகம் இல்லை" என்றார் நாத் தழுதழுக்க.

"பையன் சாமர்த்தியசாலியுமல்ல! சபல சித்தமுள்ள இவனுடன் உங்களுடைய பெண் சந்தோஷமாக வாழமுடியும் என்று தோன்ற வில்லை" என்றார் பாபு.

உடனே பையனைக் கூப்பிட்டு, "நான் உன்னைக் கட்டாயப் படுத்த விரும்பவில்லை. இவர்களுடன் கலந்து பேசினேன். விவா கத்திலிருந்து உனக்கு விடுதலை கிடைத்துவிட்டது" என்றார்.

பையனோ திகைத்து நின்றான். வியப்பும் வருத்தமும் மாறி மாறி வாட்ட அவன் காந்திஜியிடம் ஏதோ கேட்க விரும்பினான். அவரோ, எல்லோருக்கும் விடை கொடுத்து அனுப்பிவிட்டார்.

அன்று மாலைப் பிரார்த்தனைக்குப் பிறகு, "ஏன் கல்யாணத்தை நிறுத்திவிட்டீர்கள்?" என்று காலேல்கர் காந்திஜியிடம் கேட்டார்.

காந்திஜி சிரித்துக்கொண்டே, "இன்று நான் கோரக்ஷை செய்தேன். பசுவைப் பற்றிச் சொல்லும்போது, நாம் நாற்கால் ஜீவனைப் பற்றித்தானே நினைக்கிறோம்? இன்று நான் செய்த சேவை மகத்தானது. நமது சமூகத்தில் பெண்களைப் பசுக்களைப் போலவே எண்ணுகிறார்கள். அவர்களுக்குச் சம உரிமை இல் லாததால், வியாபாரப் பொருளாகக்கூட எண்ணுகிறார்கள். ஓர் எளிய பெண்ணை-வாயிருந்தும் ஊமையாக வாழவேண்டிய சாதுப் பெண்ணை - பொறுப்பற்ற வாலிபனிடம் ஒப்பித்து, வாழ்நாள் முழு வதும் அவள் நரக வேதனைப்படாமல் நான் காப்பாற்றிவிட்டேன். இதுவும் 'கோசேவை' என்றே நான் எண்ணுகிறேன்" என்றார்.

தேன்மதி
(1924)

காந்திஜியின் இரண்டாவது மகனான மணிலால்* காந்திக் கும் அகோலாவிலுள்ள நானாபாய் மஷ்ரூவாலாவின் பெண் சுசீலாவுக்கும் கல்யாணம் நிச்சயமாயிற்று. கல்யாண ஏற்பாடு களை ஜம்னாலால் பஜாஜ் செய்தார்.

அகோலாவில் கல்யாணம் நடந்தது. மாப்பிள்ளை வீட்டார் பெண்ணையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். கல்யாண கோஷ்டிக்காகப் பஜாஜ் தனிப்பெட்டி ஒன்றை ரெயிலில் ஏற்பாடு செய்திருந்தார். எல்லாரும் வண்டியில் ஏறியதும் காந்திஜி நாற்புற மும் சுற்றிப் பார்த்தார். உடனே மணிலாலை அழைத்து, "நீ கீழே இறங்கு. சுசீலாவை அழைத்துக்கொண்டு வேறு எங்காவது

* இப்போது தென் ஆப்பிரிகாவில் வசித்து வருகிறார். அங்குள்ள இந்தியர் களுடைய நலனுக்காகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்.

இடம் தேடி உட்கார்ந்து கொள். எங்களுடன் பிரயாணம் செய்வதற்கு இது தருணம் அல்ல. கூச்சமும் ஆசையும் மோதிக் கொண்டு நீ தவிக்கக்கூடாது. தனியாகப் பிரயாணம் செய்தால், உங்களுக்கு ஆனந்தமாகவும் இருக்கும்; ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பமும் கிடைக்கும்'' என்றார்.

சுசீலாவை அழைத்துக்கொண்டு மணிலால் வேறு இடம் தேடிக் கொண்டு சென்றார்.

பணம் பெரிதில்லை
(1925)

சிக்கனத்துக்குப் பெயர் போனவர் மகாத்மா. தமக்கு வரும் கடிதங்களில் எழுதாத பகுதிகளிலும், லகோடாக்களின் நாக்கிலுங்கூட, பதில் எழுதித் தபாலில் போட்டு விடுவார். தேசபந்து சித்தரஞ்சனதாஸர் உடல் நலிவுற்று டார்ஜீலிங்கில் இருந்தார். அப்போது வங்காளத்தில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்த காந்திஜி தேசபந்துவைச் சந்திக்க டார்ஜீலிங் சென்றார். அங்கிருந்து டாக்கா ஜில்லாவிலுள்ள நவாப்கஞ்சுக்குப் போவதாகப் பிரயாணத்திட்டம். டார்ஜீலிங்கிலிருந்து புறப்பட்டு, இரண்டு மூன்று ரெயில்வே சந்திப்புக்களில் வண்டி மாற வேண்டும். மழைக்காலமாக இருந்ததால், வழியில் மண் சரிவு ஏற்பட்டுக் காந்திஜி கோஷ்டியார் ஏறிச் சென்ற டார்ஜீலிங்-கல்கத்தா மெயில் சில மணி நேரம் தாமதித்து ஜல்பைகுரிக்கு வந்து சேர்ந்தது. அங்கிருந்து போராடா சந்திப்புக்குச் சென்று டாக்கா மெயிலில் ஏறவேண்டும். ஜல்பைகுரியிலிருந்து போராடாவுக்குச் செல்லும் வண்டியில் எறினாலும் அன்றைய டாக்கா மெயிலைப் பிடிக்க முடியாது என்று காந்திஜிக்கு அறிவிக்கப்பட்டது. காந்திஜி வருந்தினார். மறுநாள் வரையில் அவர் காத்திருந்து டாக்கா மெயிலில் பிரயாணம் செய்வதைப்பற்றி யோசிக்கவில்லை; நவாப் கஞ்சிலுள்ள மக்கள், தம்முடைய வரவை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து விடுவார்களே என்றுதான் ஏங்கினார். போட்ட திட்டப்படி எப்படியாவது குறித்த காலத்தில் நவாப்கஞ்ச் போய்ச் சேர்ந்து விடவேண்டும் என்று காந்திஜி தீர்மானித்தார். ஸ்பெஷல் ரெயிலில் போனால்தான் சாத்தியம் என்று உடனிருந்த சதீஷ்பாபு கூறவே, காந்திஜி உடனே ஏற்பாடு செய்யச் சொல்லிவிட்டார்.

அதற்கான செலவைப்பற்றி அவர் சிந்திக்கவில்லை. சதீஷ் பாபு ரெயில்வே நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து, பார்வதிபுரத்திலிருந்து கோல்ண்டோ என்னும் ஊர் வரையில் ஸ்பெஷல் ரெயிலில் போக ஏற்பாடு செய்தார். அங்கிருந்து அவர்கள் டாக்கா மெயிலில் பிரயாணம் செய்வதாக ஏற்பாடு. திட்டப்படி காந்திஜி நவாப்கஞ்சை அடைந்தார். இதற்காக ரூ. 1140/- செலவு நேரிட்டதை அவசியமான செலவு என்றே காந்திஜி குறிப்பிட்டார்.

அதைவிடவா ஆச்சரியம்?

(1927)

கதர்ப் பிரசாரத்துக்காகத் தென் இந்தியாவில் காந்திஜி சுற்றுப் பிரயாணம் செய்தபோது மைசூர் சம்ஸ்தானத்திலுள்ள ஷிமோகாவுக்குப் போயிருந்தார். அந்த ஊருக்கு அருகில்தான் பிரசித்தி பெற்ற கெர்ஸப்பா நீர்வீழ்ச்சி இருப்பதால், அங்கு சென்று வர அவகாசமிருக்கும்படிப் பிரயாணத் திட்டம் வகுத்திருந்தார்கள். ஆனல் காந்திஜியோ நீர்வீழ்ச்சியைக் காணச் செல்லவில்லை. அன்று நவஜீவன், யங் இந்தியா ஆகிய பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் அனுப்ப வேண்டிய நாளாகையால் மகாதேவ தேசாயைத் தவிர மற்ற ஊழியர்களுக்குக் கெர்ஸப்பா சென்று வர அநுமதி அளித்தார்.

மகாதேவ தேசாயையும், பாபுவையும் விட்டுச் செல்லக் காலேல்கருக்கு மனமில்லை. காந்திஜியின் குணமறிந்தாலும் தியக்கத்துடன் அவர் வந்து, "பாபு, நீங்கள் கெர்ஸப்பா நீர்வீழ்ச்சியை அவசியம் பார்க்கவேண்டும். நாம் இதற்காக இந்தப் பக்கம் மீண்டும் வரப்போகிருேமா? வைசிராயாகப் பதவி ஏற்றதும் கர்ஸான் பிரபு உலகப் பிரசித்தி பெற்ற இந்த நீர்வீழ்ச்சியைப் பார்க்க வேண்டும் என்று முதல் சுற்றுப் பிரயாணத் திட்டம் போட்டாராம்" என்ருர்.

"அப்படியா? நானே ஏழை ஊழியன். மேலும் ஊர் சுற்றிப் பார்க்க எனக்கு நேரம் எது?" என்று கேட்டார் பாபு.

காலேல்கரும் விடுவதாக இல்லை. "நீங்கள் அவகாசம் ஏற்படுத்திக்கொள்ளத்தான் வேண்டும். கெர்ஸப்பா கம்பீரமும் கவர்ச்சியும் நிறைந்தது. நயகராவைவிட ஆறு மடங்கு உயரம். 960 அடி

உயரத்திலிருந்து தண்ணீர் விழும் காட்சி அதி அற்புதமாக இருக்கும்........''

''ஆயிரக்கணக்கான அடிகளுக்கு மேலே, ஆகாயத்திலிருந்து மழை கொட்டுகிறதே, அதைவிடவா அற்புதமான காட்சி?'' என்று இடைமறித்தார் காந்திஜி.

காலேல்கருக்கு வாதம் செய்ய விருப்பமில்லை. ''சரி, நாங்களும் போகவில்லை, பாபு'' என்றார் வருத்தத்துடன்.

''முடியாது, நீங்கள் எல்லோரும் போகத்தான் வேண்டும். நீங்கள் பேராசிரியர். இயற்கையின் அழகை ரசிப்பது ஒருபுறம் இருக்கட்டும். அங்கே போய் வந்தால் பூமி சாஸ்திரம் கற்றுக் கொடுக்க உங்களுக்கு விஷயம் அகப்படும். மகாதேவுக்கு ஓய்வு அவசியம் என்று தோன்றும்போது இயற்கைக் காட்சிகளை அநுபவிக்க நான் ஏற்பாடு செய்வேன்'' என்றார் பாபு.

அன்று மகாதேவ தேசாயும், காந்திஜியும் கட்டுரைகளை எழுதுவதில் நேரங் கழித்தார்கள். கெர்ஸப்பாவின் அற்புத நீர்வீழ்ச்சியை மகாதேவ் பார்க்க முடியாது போயிற்றே என்ற வருத்தம் பாபுவுக்கு இருந்து கொண்டுதான் இருந்தது. பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு மகாதேவ் மைசூரில் சில தினங்கள் தங்க நேரிட்டபோது, அவருக்குக் காந்திஜி பின்வருமாறு கடிதம் எழுதினார்: ''மகாதேவ், மைசூரில் உனக்குக் கொஞ்சம் ஓய்வு கிடைக்கும். அப்போது நீ கெர்ஸப்பா நீர்வீழ்ச்சியைப் பார்த்து வர வசதிகளைச் செய்து தரும்படி திவான் ஸர். இஸ்மாயிலுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்.''

தாயில்லாக் குழந்தை

(1927)

காந்திஜி 1927-ஆம் வருஷ மத்தியில் இலங்கையில் சுற்றுப் பிரயாணம் செய்தார். சில இடங்களில் மக்கள், காந்திஜியின் கோஷ்டியைப்பற்றி விவரந் தெரிந்து கொள்ளாமல், காந்திஜியின் கோஷ்டியைச் சேர்ந்த அனைவருமே அவருடைய குடும்பமும் சுற்றமும் என்று கற்பனை செய்து கொண்டார்கள். மத்திய இலங்கையில் ஓர் ஐரோப்பிய மாது காந்திஜியிடம் கஸ்தூரிபாவைச் சுட்டிக்காட்டி, ''இந்த மாது உங்களுடைய தாயா?'' என்று கேட்டு விட்டாள். காந்திஜி சிரித்துக்கொண்டே, ''ஆம்'' என்று

கூறினர். மறுநாள் பத்திரிகைகளில் இந்தச் செய்தி வெளியாகி விட்டது. செய்தி வெளியான தினத்தன்று காலை காந்திஜி ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டபோது, மேடைமீது கஸ்தூரிபா இல்லாமலிருக்கவே ஒருசிலர், "உங்களுடைய அன்னை ஏன் வரவில்லை?" என்று கேட்டார்கள். காந்திஜி உடனே பதில் கூறவில்லை. கூட்டத்தில் பேசும்போது அவர் பின் வருமாறு சொன்னர்: "நேற்றிரவு கஸ்தூரிபாவை என்னுடைய தாயா என்று ஒருவர் கேட்டார். இன்றும் அதே கேள்விதான் கிடைத்தது. இந்தத் தவற்றை நான் ரசிக்கிறேன். பரஸ்பர சம்மதத்தின் பேரில், பலவருஷங்களுக்கு முன்னேயே கஸ்தூரிபா மனைவி ஸ்தானத்தை விட்டுவிட்டாள். நான் தாயில்லாத 'குழந்தை'யாகி நாற்பது வருஷங்களாகின்றன. சென்ற முப்பது வருஷங்களாகக் கஸ்தூரிபா எனக்கு அன்னையைப் போல அன்பும் பணிவிடையும் செய்து வருகிருள். தாய், தோழி, சமையல்காரி, தாதி, துணி துவைத்துப் போடும் ஊழியக்காரி என்று பல பலவிதமாக எனக்கு அவள் சேவை செய்து வருகிருள். எனக்குக் கிடைக்கும் வரவேற்பு வைபவங்களில் கலந்து கொள்ள அதிகாலையிலேயே அவளும் கிளம்பி விட்டால், எனக்கு உணவு தயாரிக்கவோ, என்னுடைய உடைகளைச் சுத்தம் செய்யவோ வேறு ஆள் தேட நேரிடும். பிரயாண காலத்தில், ஒவ்வோர் ஊரிலும் புது ஆள் தேடுவது முடியாத காரியம். என்னுடைய உணவு தயாரிப்பதும் தனிக் கலையாகும். ஆகவே எங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண் டிருக்கிறேம். அதாவது, உழைப்பு அவளுக்கு, கௌரவம் எனக்கு என்று. நான் பனியா. என்னுடைய வியாபாரத்தில் நஷ்டமே கிடையாது. நீங்கள் கஸ்தூரிபாவைப்பற்றி அன்புடன் விசாரித் தீர்கள் என்பதை மட்டும் என் சகாக்கள் அவளிடம் தெரிவித்து விடுவார்கள் என்பதை உங்களுக்குக் கூற விரும்புகிறேன்."

ஜனங்கள் கைகொட்டி ஆரவாரித்தார்கள்.

எங்களுடைய கடவுள்
(1927)

இலங்கையிலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் காந்திஜியை வரவேற்க மாபெரும் ஏற்பாடு செய்திருந்தார்கள். கூட்டம் துவங்குவதற்குச் சிறிது முன்னதாக வந்து சேர்ந்த மகாதேவ

தேசாய் பக்கத்திலிருந்த ஒரு சிலரிடம், "நீங்கள் இங்கே எதற்காக வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். இதை அவர்களில் சிலர் ரசிக்கவில்லை.

ஒரு பெண்மணி, "நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள்?" என்று திருப்பிக் கேட்டாள். அவளுக்கு மகாதேவைப்பற்றித் தெரியாது.

வேறு ஒருவன், "உங்களுக்குத் தெரியாதா? எங்களுடைய மனித தெய்வத்தைத் தரிசிக்க வந்திருக்கிறோம்" என்றான்.

மற்றவனோ, "பேசுந் தெய்வமான அடிகளைத் தெரியவில்லையே இவருக்கு! கதர்மட்டும் கட்டிக் கொண்டிருக்கிறாரே?" என்றான்.

இந்தக் கேள்விகளை உடனிருந்த தமிழன்பர் ஒருவர் மகா தேவுக்கு மொழி பெயர்த்துக் கூறினார். மகாதேவ தேசாயோ ஆச்சரியமும் சந்தோஷமும் ததும்ப அந்தத் தமிழன்பரின் உதவி கொண்டு அவர்களுடன் பேசலானார்.

"பேசுந் தெய்வமா? அவர் யார்?" என்று கேட்டார் தேசாய்.

"உங்களுக்குத் தெரியாதா? அவர்தாம் மகாத்மா" என்றாள் அந்தப் பெண்மணி.

"கடவுளைப் பார்க்கக் காணிக்கை கொண்டு வந்திருக் கிறீர்களா ?"

"ஆஹா, ஏற்கனவே செலுத்திவிட்டேன். என்னுடைய ஒரு நாள் கூலிப்பணமான நாற்பத்தைந்து சதத்தையும் கொடுத்து விட்டேன்" என்றாள் பெண்மணி.

"நீங்கள் கொடுக்கும் பணத்தை அவர் எப்படிச் செலவிடுவார் என்று தெரியுமா ?"

"தெரியாது, தெரிந்து கொள்ளவும் விருப்பமில்லை. அவர் நல்ல காரியத்துக்குத்தான் செலவிடுவார்."

தொல்லை விட்டது?

(1927)

கதர்ப் பிரசாரச் சுற்றுப் பிரயாணத்தின்போது காரைக் குடியில் காந்திஜியை வரவேற்க ஆடம்பரமாக ஏற்பாடுகள் செய் திருந்தார்கள். விஸ்தாரமான மண்டபத்தின் நடுவே உயரமான மேடை நிர்மாணித்துத் தீபாலங்காரம் செய்திருந்தார்கள். காந்திஜி

வருவதற்குப் பல மணி நேரத்துக்கு முன்பே ஆயிரக்கணக்கான மக்கள் கூடிவிட்டார்கள். காந்திஜி வந்த போது, மேடைக்குச் செல்லக்கூட முடியாமல் வழியையும் அடைத்துக்கொண்டு மக்கள் உட்கார்ந்திருந்தார்கள். காந்திஜியைக் கண்டதும், அவர்கள் ஆரவாரித்து எழுந்தார்களே தவிர, தொண்டர்களின் வேண்டு கோளுக்கிணங்கி, அடிகளுக்கு வழிவிட்டு ஒதுங்கவில்லை. ஆகவே, தாம் ஏறிவந்த காரிலேயே எழுந்து நின்று காந்திஜி பேசத் தீர்மானித்தார்.

காந்திஜியின் உபதேசத்தைக் கேட்கவும் அவரைத் தரிசிக்கவுமே மக்கள் கூடியிருந்ததால் சம்பிரதாயமான முறையில் கூட்டம் நடத்துவது சாத்தியமில்லாமல் போயிற்று. அன்று பல சங்கங்களின் சார்பாக வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப் பட்டன. வரவேற்புரைகளை வேலைப்பாடமைந்த பெட்டிகளிலும், பேழைகளிலும் அடைத்துக் கொடுத்தார்கள். வரவேற்பு முடிந்து காந்திஜி பேச எழுந்ததும், மக்களின் ஆரவாரம் அதிகமாயிற்று. காந்திஜியை அருகில் சென்று காண விழைந்தவர்கள் நெருக்கி யடித்துக் கொண்டு முன்னேறினார்கள். அடிகளுக்குக் காணிக்கை செலுத்த விரும்பியவர்களோ, மற்றவர்களைக் கடிந்துகொண்டே முண்டியடித்துக் கொண்டு முன்சென்றார்கள். காந்திஜி இருந்த மோட்டாரை நெருங்கியும் அவரிடம் காணிக்கையைச் சமர்ப்பிக்க முடியாதவர்கள் நின்ற இடத்திலிருந்தவாறே காணிக்கைப் பொருள்களைக் காருக்குள் வீசினார்கள். அவர்களுடைய அன்பினால் விளைந்த செயல் காந்திஜியின் உடலுக்கு ஊறு செய்யுமோ என்று கூட உடனிருந்தவர்கள் பயந்தார்கள். காரில் அமர்ந்திருந்த மகாதேவ தேசாயும், டாக்டர் ராஜனும் உள்ளே வந்து விழும் பொருள் களைச் சேகரித்துப் பட்டியல் தயாரித்துக் கொண்டார்கள். குழப் பமும், கூச்சலும் அடங்குவதற்குள் காந்திஜி பிரசங்கத்தை முடித் துக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

விடுதிக்குச் சென்றதும், மகாதேவும் மற்றவர்களும், காணிக் கைப் பொருள்களை 'சடுதி' பார்த்தார்கள். குறிப்புப்படி எல்லாம் சரியாக இருக்க, ஒரு சிறு தங்கச்சிமிழ் மட்டும் காணப்படவில்லை. எங்கெங்கோ தேடியும் அது அகப்படவே இல்லை. காந்திஜிக்குத் தெரிந்தால் அவர் கடிந்து கொள்வாரே என்று டாக்டர் ராஜனும் மற்றவர்களும் கவலைப்பட்டார்கள். காந்திஜியிடம் தெரிவிக்கவும்

பயம்; தெரிவிக்காமலிருக்கவும் மனச்சாட்சி இடமளிக்கவில்லை. இரவு வெகுநேரத்துக்குப் பிறகு டாக்டர் ராஜனே காந்திஜியை அணுகினர். செய்தியைக் கேட்டதும் காந்திஜி கலகலவென்று சிரித்துக்கொண்டே, "இதுவும் நல்லதுதான். வாழ்க்கையில் கட்டுப்பாடு வேண்டும்; அடக்கமும் வேண்டும். இன்றையக் கூட்டத்தைப் பார்த்தபோது ஜனங்களுடைய உற்சாகத்தைப் பாராட்டும் நிலையில் நான் இல்லை. கட்டுப்பாடு இல்லாததால் அவர்களுடைய உற்சாகமும் விரயமாகி விடுகிறது. பொன்னும் மணியும், பேழைகளும், உபசாரப் பத்திரங்களும் எனக்குக் கொடுப்பதில் என்ன லாபம்? இந்தப் பணத்தைத் தீனர்களுக்கு உதவ சேவை மனப்பான்மைவேண்டும். நானும் சமயம் கிடைக்கும்போது அவற்றை ஏலங் கூறுகிறேன். சில சமயம் எனக்குக் கிடைக்கும் சாமான்களைப் பத்திரப்படுத்த நல்ல பெட்டி யொன்று வேண்டும் என்று மகாதேவ தேசாய் அடிக்கடி கேட்பதுண்டு. சுமையைத் தூக்கிக் கொண்டு ஊர்ஊராய்ச் சுற்றுவது சாத்தியமா? இந்த மாதிரி சாமான் தொலைந்தது நல்லதாயிற்று. ஜனங்களுக்கும் ஒரு படிப்பினை கிடைக்கும். மகாதேவும் பெட்டி வேண்டும் என்று கேட்கமாட்டார்" என்றார்.

குழந்தையும் நூலும்
(1927)

சேலத்தில் ஆதிநாராயணன் செட்டியார் மகாத்மாவைத் தம்முடைய வீட்டில் வரவேற்று உபசரித்தார். தமக்கு மணமாகி இருபது வருஷங்களுக்குப் பிறகு பிறந்த அருமைக் குழந்தையை மகாத்மாவிடம் கொடுத்து ஆசீர்வதிக்கச் சொன்னர். காந்திஜி குழந்தையைக் கைகளில் எடுத்துக்கொண்டு, எடை போடுவது போல மேலும் கீழும் ஆட்டினர். குழந்தை பொக்கை வாயைத் திறந்து சிரித்தது. காந்திஜியும் பெற்றோர்களும் அதைக் கண்டு ஆனந்தித்தார்கள். உடனே, "எனக்கு இந்தக் குழந்தையின் எடைக்குச் சரியாக நூல் கொடுத்தால் எப்படிச் சந்தோஷப் படுவேன், தெரியுமா?" என்று கேட்டார் மகாத்மா.

செட்டியார் திகைத்துப் போனர். குழந்தையைத் துலாபாரமிட்டுப் பொன் கொடுக்கச் சொன்னாலும் தயாராக இருக்கும் அவருக்கு நூல் கொடுப்பது பெரிதல்ல.

அதற்குள் காந்திஜி சொன்னார்: "பல வருஷங்களுக்குப் பிறகு உங்களுடைய வீட்டில் குழந்தை பிறந்திருக்கிறது. குழந்தை அருமை உங்களுக்குத் தெரியும். நானும் பல வருஷங்களுக்குப் பிறகு ஒரு குழந்தையைப் பெற்றிருக்கிறேன். சர்க்கா நம்முடைய நாட்டுக்குப் புதிதல்ல. ஆனால் என்னுடைய அருமைக் குழந்தை கதர். குழந்தை அருமை தெரிந்த நீங்கள், உங்களுடைய குழந்தையின் எடைக்குச் சரியாகக் கதர் நூலைக் கொடுத்தால் எத்தனை குடும்பங்களின் வயிறு நிரம்பும்?"

சூடு
(1927)

மைசூரில் நடந்த உலக மாணவர் சம்மேளனத்துக்குத் தலைமை வகித்த அமெரிக்கப் பேராசிரியர் மாட் காந்திஜியைத் தரிசிக்க ஆமதாபாத்துக்குச் சென்றார். காந்திஜியிடம் இன்ன இன்ன கேட்கவேண்டும் என்று மாட் குறிப்பு எழுதி வைத்துக் கொண்டிருந்தார். கேள்விகளில் சில வருமாறு: "உங்களுடைய வாழ்க்கையில் மேடும் பள்ளமும், நம்பிக்கையும் ஏமாற்றமும், போரும் துயரும்தானே நிரம்பி யிருக்கும்? இவற்றை நீங்கள் எப்படித் தாங்குகிறீர்கள்? மனந் தளராமலிருக்க உங்களுக்கு ஊக்கமூட்டும் சக்தி யாது?"

"கடுமையாகச் சீண்டினாலும் அஹிம்ஸையிலிருந்து மக்கள் வழுவாமல் இருக்கிறார்கள் - இருப்பார்கள் என்ற எண்ணம்தான் ஆறுதலும் உற்சாகமும் தருகிறது" என்றார் பாபு.

"உங்களுடைய மனத்தை வாட்டும் மிகப் பெரிய பிரச்னை எது? அதைப்பற்றி யோசிக்கும்போது மன அமைதி இழந்து இரவும் பகலுமாகத் தவித்ததுண்டோ?"

காந்திஜி உடனே, "படித்தவர்களுடைய கல்நெஞ்சம்" என்றார்.

மகாத்மா
(1928)

காந்திஜி 'யங் இந்தியா'வில் தம்முடைய சுய சரிதத்தைத் தொடர்ச்சியாக எழுதி வந்தபோது காலேல்கர் ஒருநாள், "பாபு, நீங்கள் வாழ்க்கையில் நடந்த எல்லாச் சம்பவங்களையும் ஏன் எழுதுவதில்லை?" என்று கேட்டார்.

"அவசியம் என்று தோன்றுவதை எல்லாம் எழுதி யிருக்கிறேன்" என்ருர் காந்திஜி.

"வேண்டுமென்றே நீங்கள் சில சம்பவங்களையும் பெயர்களையும் ஒதுக்கி யிருக்கிறீர்கள் அல்லவா? உதாரணமாக, சிறுவயதில் உங்களுக்கு மாமிச உணவு சாப்பிட உற்சாகமூட்டிய அதே நண்பன்தான் தென் ஆப்பிரிகாவில் நீங்கள் வசித்தபோது, உங்களுடன் தங்கியிருந்து விலைமாதர்களை வீட்டுக்கு அழைத்து வந்தான் அல்லவா?" என்று கேட்டார் காலேல்கர்.

"உண்மைதான். வேண்டுமென்றே அந்தச் சம்பவங்களுக்குள்ள தொடர்பையும் பெயரையும் நான் விலக்கினேன். சத்திய சோதனை செய்து என் சரிதத்தை எழுதுகிறேன். சம்பவக் குறிப்பு மட்டும் போதும். அவற்றுக்குள்ள தொடர்பு அவசியமில்லை. மேலும் அந்த நண்பன் இப்போதும் உயிருடன் இந்தியாவில் வசித்து வருகிருன். பழைய கதைகளை நான் எடுத்துக் கூறுவதால் அதைப் படிக்கும் நண்பர்களுக்கு அவன்பால் வெறுப்பு ஏற்படக் கூடும்; அதனல் அவனுக்கு ஏதாவது இடையூறுகளும் நேரிடக் கூடும் என்று பயந்தே நான் எழுதாமல் ஒதுக்கிவிட்டேன்" என்ருர் காந்திஜி.

தீனபந்து
(1929)

டில்லிக்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் ஜி. டி. பிர்லாவின் தூரபந்துவான ஒரு பெண்மணி நோய்வாய்ப்பட்டிருந்தாள். அவள் பிழைக்க மாட்டாள் என்று டாக்டர்கள் சொல்லி விடவே, கடைசி விருப்பமாகக் காந்திஜியைப் பார்க்கவேண்டும் என்று அந்த மாது பிர்லாவிடம் கூறினுள். அவளைக் காந்திஜியிடம் அழைத்துப் போக முடியாத நிலையில் உடல் நிலை இருந்தது. காந்திஜியை டில்லிக்கு அழைப்பதும் சுலபமான காரியம் அல்ல. ஆனுலும் பிர்லா அவளுக்கு ஆறுதலாகக் காந்திஜியை அழைத்து வருவதாகச் சொன்னுர். அந்தப் பெண்மணி ராமநாமத்தில் மனம் செலுத்திக் கொண்டே சாவை வரவேற்கத் துணிந்து விட்டாள்.

சில தினங்களில் காந்திஜி கான்பூருக்கு வந்து அங்கிருந்து டில்லி மார்க்கமாக ஆமதாபாத் செல்வதாகப் பிர்லாவுக்குத் தகவல்

கிடைத்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, காலனுடன் போராடிக் கொண்டிருக்கும் பெண்மணியின் ஆசையைப் பூர்த்தி செய்யப் பிர்லா விரும்பினர்.

காந்திஜி வரும் வண்டி டில்லிக்கு விடியற்காலையில் நான்கு மணிக்கு வந்து சேரும். ஒரு மணி நேரத்துக்கெல்லாம், டில்லியிலிருந்து ஆமதாபாத்துக்குச் செல்லும் வண்டி புறப்படும். இந்த இடைவேளைக்குள் காந்திஜியை அழைத்துச் சென்று திரும்ப முடியுமா என்று பிர்லா யோசிக்கலானர். அப்போது குளிர்காலம். பனி கொட்டிக் கொண்டிருந்தது. டில்லியில் காந்திஜி ஒருநாள் தங்குவதாக இருந்தால் தம்முடைய ஆசையைத் தெரிவிக்கலாமே தவிர, இந்தக் கடுங் குளிரில் அவரை அழைத்துச் செல்லக்கூடாது என்ற முடிவே பிர்லாவின் மனத்தில் மேலோங்கிற்று. ரெயில் நிலையத்தில் காந்திஜியைச் சந்தித்தபோது, அவர் அந்தப் பெண்ணைப் பற்றிக் குறிப்பிட நேர்ந்தது.

பாபுவோ தயக்கமில்லாமல், "கிளம்பு போகலாம்" என்று சொன்னர்.

"இந்தக் குளிரில் உங்களை எப்படி அழைத்துச் செல்வேன்?" என்றார் பிர்லா தியக்கத்துடன்.

"அதைப்பற்றி யோசிக்கும் தருணமல்ல இது" என்று கூறிவிட்டார் பாபு.

பனிக்காற்று ஜிவ்வென்று வீசிக் கொண்டிருக்கும்போதே காந்திஜி நோயாளியின் வீட்டுக்குச் சென்றார். கண்ணை மூடிக் கொண்டு கிடந்த நோயாளியை நெருங்கிக் காந்திஜி வந்திருப்பதாகப் பிர்லா சொன்னதும் அவள் பிரமித்துப்போய் எழ முயன்றாள். உடம்பு வலிவற்றுச் சோர்ந்து விழுந்தது. ஆவல் ததும்பும் கண்களை நாற்புறமும் சுழற்றிப் பாபு நிற்குமிடத்தைத் தேடினள் அவள். காந்திஜி அன்புடன் அவளை நெருங்கி ஆசிகூறி விடை பெற்றுக் கொண்டார். அவளால் பேச முடியவில்லை. கண்களில் நீர் திரையிட்டது. திருப்தியினல் முகம் பிரகாசமடைந்தது.

டில்லி ஜங்க்ஷனுக்குச் சென்று வண்டியிலேற அவகாசமில்லாது போய்விடவே, காந்திஜி, மோட்டாரிலேயே அதிவேகமாகச் சென்று, அடுத்துள்ள ஸ்டேஷனை அடைந்து ரெயிலில் ஏற வேண்டியதாயிற்று.

★

சிப்பாயின் கடமை

(1929)

காந்திஜி 1929-ஆம் ஆண்டு மத்தியில் ஆக்ராவுக்குச் சென்ருர். கதர் அபிவிருத்திக்காக அவர் நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்ததால் நிர்மாண ஊழியர்களேயும் காங்கிரஸ் தலைவர்களேயும் அழைத்துப் பேசும்போது, "கதர்ப் பிரசாரத்துக்குப் போதுமான ஊழியர்கள் இல்லாததால் உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்த முடியவில்லை" என்று சில பிரமுகர்கள் சொன்னுர்கள்.

"கதர் இயக்கம் துவங்கிப் பத்து வருடங்களுக்கு மேலாகியும் ஊழியர்களுக்குப் பஞ்சம் என்று சொல்வது வெட்கக் கேடாகும்" என்ருர் காந்திஜி.

எல்லோரும் மௌனமாக இருந்தார்கள்.

காந்திஜி சொன்னுர்: "உங்களுடைய மாகாணம் (உத்தரப் பிரதேசம்) எவ்வளவு பரந்தது? எவ்வளவு வளம் நிறைந்தது? இங்கு தேசபக்தியுடன் வேலை செய்ய ஊழியர்கள் கிடைக்கவில்லை என்பது மன்னிக்க முடியாத குற்றம். உங்களில் சிலர் கதருக்காக வாழ்க்கையை அர்ப்பணம் செய்ய முடியாதா? சிந்து மாகாணத்திலிருந்து இங்கு வந்துள்ள *ஆசார்ய கிருபளானியும் அவருடைய சகாக்களும் இங்கு தங்கி உங்களுக்கு எவ்வளவு காலம் ஊழியம் புரிய முடியும் என்று நினைக்கிறீர்கள்?

"உங்களுக்குக் கதர் இயக்கத்தில் நம்பிக்கை இல்லை; திடசித்தமுமில்லை. மேலும் அந்தத் துறையில் விளம்பரம் கிடைக்க வழியில்லை. கங்கைப் பிரதேசமானுலும் இந்த மாகாணத்தில் கிராமங்களில் எங்கு பார்த்தாலும் தரித்திரம் தாண்டவமாடுகிறது. உங்களுக்குப் பயிற்சி யளிக்க என்னுடைய சகாக்களில் சிலரை இங்கு நிறுத்தி வைக்கிறேன். அதனுல் எனக்குச் சிறிதுகாலம் அசௌகரியம் நேர்ந்தாலும் பரவாயில்லை."

"உற்சாகமுள்ள ஊழியர்கள்தாம் கதர் உற்பத்தியிலும் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. அவர்களைக் கிராமங்

---

* ஆசார்ய கிருபளானி, மீரத்தில் காந்தி ஆசிரமம் நிறுவிக் கதர் உற்பத்தி செய்து கொண்டிருந்தார்.

களுக்கு அனுப்பிவிட்டால் அரசியல் வேலை பாதிக்குமே என்று தான் சிந்திக்கிறோம். கதர் அபிவிருத்தி வேலையும் சரியாக நடக்காது, காங்கிரஸ் வேலையும் நடக்காது'' என்றார் ஒரு நண்பர்.

“இதிலிருந்து உங்களுக்கு ராணுவக் கட்டுப்பாட்டின் ஆரம்பப் பாடங் கூடத் தெரியாது என்றுதான் புலப்படுகிறது. நாம் இப்போது சுதந்தரப் போரில் இறங்கியிருக்கிறோம். எதிரிகளை முறியடிக்கக் கூடிய ஆயுதங்களில் மிகச் சிறந்தது கதர். நாம் அனைவரும் போர் வீரர்கள். முதலாவதாக, நான் - உங்களுடைய தளகர்த்தன் - சொல்வதற்கு ஆக்ஷேப சமாதானம் சொல்லும் உரிமை உங்களுக்குக் கிடையாது. இரண்டாவதாக, கையில் கொடுத்துள்ள ஆயுதத்தை நன்றாகப் பிரயோகிக்கத் தெரிந்துகொள்வதில்தான் சிப்பாயின் கவனம் இருக்கவேண்டுமே தவிர யுத்த தந்திரங்களில் மனம் செல்லக் கூடாது. எதிர்காலத்தைப் பற்றி ராணுவ வீரன் சிந்திக்கமாட்டான். தன்னுடைய சேவையின் விளைவைப் பற்றியும் அவன் அநுமானித்துக்கொண்டிருக்க முடியாது. தளகர்த்தனுடைய கட்டளையை நிறைவேற்றுவதில் தான் அவனுடைய கவனம் இருக்கும். தேசத்தின் கூக்குரல் கேட்டதும் கரிபால்டி விளை நிலங்களையும் கன்று காலிகளையும் விட்டுவிட்டுப் புறப்பட்டான். தேசத்துக்கு ஆபத்து வந்து விட்டது என்று தெரிந்ததும், நல்ல வருவாயுள்ள வக்கீல் தொழிலை உதறி விட்டு ஸ்மட்ஸ் ராணுவத்தில் சேர்ந்து ஜனரல் பதவி ஏற்றார். நாற்பதாயிரம் ஆடுகள் நிறைந்த மந்தையை ஓட்டிவிட்டு, ஜனரல் போதா போரில் இறங்கினார். தங்களுடைய சொத்து சுதந்தரம் குடும்பம் இவை பற்றி இந்த மாபெரும் வீரர்கள் சிந்திக்கவில்லை. நாமும் போர்வீரர்கள் என்பதை மீண்டும் ஒருமுறை நினைப்பூட்டுகிறேன். பொதுஜன உற்சாகத்தை உருவாக்கப் பிரசாரம் அவசியம்தான். ஆனால் கையிலிருக்கும் ஆயுதத்தைக் கொண்டு எதிரியைத் தாக்கப் பயிற்சிபெற வேண்டியதுதான் முதல் வேலை. ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் தாரதம்மியம் கற்பித்துக் கொண்டு இருப்பது கூடாது. கஷ்டமில்லாமல் பிரபலமடைவதில் மனம் செலுத்துவதும் பலன் அளிக்காது'' என்றார் காந்திஜி.

★

ஆசியே போதும்
(1929)

அல்மோராவிலுள்ள ஓர் ஆஸ்பத்திரியில் பிரபல காங்கிரஸ் ஊழியரான பதாம் சிங் மரணப் படுக்கையில் கிடந்தார். காந்திஜி அவரைப் பார்க்கச் சென்றார்.

“பாபு, நான் இங்கிருந்து வீடு திரும்பமாட்டேன் என்றே தோன்றுகிறது. ஒருவேளை நான் இறந்துவிட்டால் என்னுடைய மகனுக்கு உங்களுடைய ஆசியும் ஆதரவும் இருக்கவேண்டும். இதுதான் என்னுடைய வேண்டுகோள்” என்றார் பதாம் சிங்.

காந்திஜி மனம் நெகிழ்ந்து போனார். “நீங்கள் விரும்பினால் அவனை ஆசிரமத்துக்கு அழைத்துச் செல்கிறேன். எதிர்காலத்துக்கு வேண்டிய பயிற்சியும் வசதியும் அளித்துக் காக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுவிட்டேன்'' என்றார் அவர்.

“வேண்டாம், வேண்டாம். அவனை நீங்கள் வாயார வாழ்த்துங்கள் போதும். உலகமே எதிர்த்து நின்றாலும் போராடி ஜயிக்கும் வலிமை அவனுக்கு ஏற்பட்டுவிடும். உங்களுக்குச் சுமையாக அவனை அனுப்பவிரும்பமாட்டேன்'' என்றார் பதாம்சிங்.

“என்னுடைய ஆசிக்கு அவ்வளவு மதிப்பு உண்டு என்று எண்ணுகிறீர்களானால், நிரம்பக் கூறுகிறேன். அவனுக்கு உதவி செய்யவும் தயாராக இருக்கிறேன்'' என்றார் காந்திஜி.

மறுதினமே பதாம் சிங் காலமாகிவிட்டார். அவருடைய குடும்பத்தாருக்கு உதவியளிக்க ஒரு நிதி திரட்டவேண்டும் என்று மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரான கோவிந்த வல்லப பந்த் திட்டம் போட்டபோது பதாம்சிங்கின் குடும்பத்தார் பின்வருமாறு கூறித் தடுத்து விட்டார்கள்: “பாபுவின் ஆசி ஒன்றே போதும். பொதுமக்களிடமிருந்து சல்லிக்காசு கூட உதவி பெற நாங்கள் தயாராக இல்லை.”

நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதும்போது காந்திஜி பின்வருமாறு குறிப்பிட்டார்: “சில மாதங்களுக்கு முன்பு என்னுடைய பேரன் ரசிக் இறந்தபோதுகூட நான் இவ்வளவு வருந்தவில்லை; பதாம் சிங்கின் மறைவு என்னை உலுக்கிவிட்டது.”

★

*விளம்பரம் எதற்கு?
(1930)

உப்பு சத்தியாக்கிரகம் துவங்குவதைப்பற்றி ஆலோசிக்கச் சாபர்மதி ஆசிரமத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கூட்டம் நடந்தது. சத்தியாக்கிரகம் துவங்கியதுமே காந்திஜி கைதாகிவிட்டால், பொதுமக்கள் என்னசெய்யவேண்டும், எப்படி இயக்கத்தை நடத்தவேண்டும் என்பன பற்றி விரிவான அறிக்கை தயாரிப்பதுடன் காந்திஜியின் கட்டளையைக் கிராமபோன் ரிகார்டின் மூலம் தேசமெங்கும் பரப்பவேண்டும் என்று ஒரு சிலர் அபிப்பிராயப் பட்டார்கள். கிராமபோன் ரிகார்டுதான் என்றாலும், காந்திஜியின் குரலைக் கேட்டதுமே ஜனங்கள் உணர்ச்சி மேலிட்டு வேலை செய்வார்கள் என்பதுடன் ரிகார்டு விற்பனை மூலம் இயக்கம் நடத்தவும் பணம் திரட்டலாம் என்பது அவர்களுடைய நம்பிக்கை. இதைக் காந்திஜியிடம் எடுத்துச் சொல்ல ராஜன் பாபுவின் தலைமையில் ஒரு தூதுகோஷ்டி கிளம்பிற்று.

தூதுகோஷ்டியின் கோரிக்கையைக் கேட்டதும் சிரித்துக் கொண்டே காந்திஜி சொன்னார்: "நான் சத்தியத்தில் திடமான நம்பிக்கையுள்ளவன். என்னுடைய வாக்கில் சத்தியமும் உணர்ச்சியும் இருக்குமானால் விளம்பரமில்லாமலே ஒவ்வொரு இருதயத்தையும் தொட்டுவிடும். சத்திய பலமில்லாமல் ஆயிரக்கணக்கான ரிகார்டுகள் மூலமோ, வேறு வழிகளிலோ பிரசாரம் செய்தாலும் நாம் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது. சத்தியப் போருக்குப் பிரசாரம் அவசியமில்லை. தனக்குத்தானே வலிமை பெற்று, அது மக்களின் இருதயத்தை ஆகர்ஷிக்கும்."

என்ன செய்வேன்?
(1931)

காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டதும் காந்திஜி ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார். அன்று காந்திஜிக்குத் தேங்காய் நாரினால் பின்னிய சிறு மோதிரம் ஒன்றை யாரோ ஒருவர் காணிக்கையாகக் கொடுத்தார். காந்திஜி அதைப் பெற்றுக்கொண்டு பேச

* 31.12.50-இல் வர்தாவில் காந்தி ஞானமந்திருக்கு அஸ்திவாரக்கல் நாட்டும்போது ராஜன்பாபு இந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டார்.

எழுந்தபோது, வேறு ஒருவர் ஆர்வத்துடன் தங்கமோதிரம் ஒன்றைக் கையுறையாக அளித்தார். காந்திஜி சற்று நேரம் அந்த மோதிரத்தைப் புரட்டிக் புரட்டிப் பார்த்துவிட்டு, "நான் இந்தத் தங்க மோதிரத்தை எப்படிப் போட்டுக்கொள்வது? போட்டுக் கொண்டால் இன்னும் ஒரு தடவை கல்யாணம் செய்துகொள்ளும் ஆசை வந்துவிடும் போலிருக்கிறதே? அவ்வாறு கல்யாணம் செய்து கொண்டால் எரவாடா சிறையிலிருக்கிறுளே ஒரு கிழவி, கஸ்தூரிபா-அவளுக்கு நான் என்ன பதில் சொல்வேன்?" என்ருர்.

சபையில் கொல்லென்று சிரிப்புக் கிளம்பியது.

உடனே காந்திஜி, "மாப்பிள்ளைகள் அணியும் மோதிரம்! ஏலம் விடப்போகிறேன். அதிருஷ்டசாலி கேளுங்கள்" என்று ஏலங்கூற ஆரம்பித்துவிட்டார், வழக்கம்போல. சபையோரும் உற்சாக மிகுந்து போட்டி போட்டுக்கொண்டு விலை கேட்க ஆரம்பித்தார்கள்.

தியாகத்தின் விலையா?

(1931)

காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் நோக்கத்துடன் காந்திஜி பர்டோலி தாலூகாவில் நான்கு தினம் சுற்றுப் பிரயாணம் செய்தார். ஒவ்வொரு கிராமத்திலும் ஆயிரக் கணக்காக மக்கள் கூடி வரவேற்பு அளித்தார்கள்.

பர்டோலியை அடுத்த ஒரு கிராமத்தில் இரவு ஒன்பது மணிக்குக் கூட்டம் துவங்கிற்று. காந்திஜிக்கு வரவேற்புக் கூறி உபசாரப் பத்திரம் படித்தான் ஒரு கிராமவாசி. வரவேற்பில் கிராமவாசிகள் பட்ட துயரங்கள் வருணிக்கப்பட்டிருந்தன. உபசாரப் பத்திரத்தில் ஒரு பகுதி வருமாறு: "அதிகாரிகள் செய்த கொடுமை சொல்லத் தரமன்று. சர்க்கார் கணக்குப்படி இந்தக் கிராமத்தார் செலுத்த வேண்டியது சுமார் எழுபதாயிரம் ரூபாய்கள் தாம். ஆனல் அதிகாரிகளுடைய எதேச்சாதிகாரத்தினல் நாங்கள் மூன்று லட்சத்துக்கும் அதிகம் பெறுமானமுள்ள சொத்துக்களை இழந்துவிட்டோம்......" இந்தப் பகுதியைப் படிக்கும்போதே, காந்திஜி, 'போதும்' என்று கையமர்த்தி நிறுத்தினர்.

உடனே பின்வருமாறு பேசலானார்: "உங்களுடைய தியாகத்துக்கு மதிப்புப் போட்டதைக் காண நான் மனம் வருந்துகிறேன். இந்த ஒரு வார்த்தையினாலேயே நீங்கள் செய்த மகத்தான தியாகத்தின் கௌரவம் தொலைந்துவிட்டது. வரி கொடுக்க மறுத்தோம் என்பதற்காகத்தான் சர்க்கார் சொத்துக்களை ஜப்தி செய்தது. இதற்காக வரியையும், இழந்த சொத்தின் மதிப்பையும் ஒப்பிட்டுப் பார்ப்பது மதியீனம். ஒரு ரூபாய் பாக்கி என்று இருந்தாலுங்கூட, நீங்கள் இவ்வளவு சொத்துக்களையும் இழக்க நேரிடும் படிச் சந்தர்ப்பம் வந்தால், 'மகத்தான தியாகம் செய்து உரிமைக்காகப் போராடுங்கள்' என்றுதான் நான் யோசனை கூறுவேன். நமக்கு லட்சியம் தான் பெரிது. நம்முடைய செயலைப் பொறுத்துத் தான் பலனும் இருக்கும். வரி கொடாமை என்று எண்ணும் போது, வரியின் மதிப்புப் பெரிதல்ல; அதன் வேகமும் அதனால் ஏற்படும் பலனும்தான் எண்ணிப் பார்க்க வேண்டியவை."

தையற்காரன்
(1931)

மோதிலாலின் மறைவின்போது காந்திஜி அலகாபாத்தில் சில தினங்கள் தங்கியிருந்தார். முதல் வட்டமேஜை மகாநாட்டுக்குப் பிரதிநிதியாகச் சென்று திரும்பிய மிதவாதத் தலைவர் சிந்தாமணி, மகாநாட்டு விவரங்களைக் காந்திஜியிடம் நேரில் சொல்ல விரும்பினார். காந்திஜியும் சம்மதித்தார். முதலாவது மகாநாடு பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்ல என்று காங்கிரஸ் நிராகரித்துவிட்டது. இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் (இர்வின்-காந்திஜி ஒப்பந்தப்படி) காங்கிரஸ் கலந்து கொள்வதாக இருந்தது.

மிகவும் அழகாகவும் சுருக்கமாகவும் சிந்தாமணி மகாநாட்டு நடவடிக்கைகளை எடுத்து உரைத்தார். அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்த காந்திஜி, "சிந்தாமணி, அரசியல் விவகாரங்களை அழகாக எடுத்துக் காட்டுவதில் உங்களை ஒரு தையல்காரருடன் கோகலே ஒப்பிடுவதுண்டு. சாதாரணத் துணியை இங்குமங்கும் வெட்டி ஒட்டி, அழகான சொக்காய் தைக்கும் தையல்காரனைப் போல நீங்கள் கோவைப்படுத்தி விஷயங்களைச் சொல்வதை இன்று நான் ரசித்தேன்" என்றார்.

பாவம், சிந்தாமணியினால் பதில் சொல்ல முடியவில்லை.

சாரத்தை எடுத்துக் கொண்டேன்

(1931)

வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொள்ளக் காந்திஜி பிரயாணம் செய்த கப்பலில் சாதித் திமிர்கொண்ட ஐரோப்பியன் ஒருவன் இருந்தான். அவன் சதா போதையில் இருந்ததுடன் காந்திஜியைச் சந்திக்கும்போதெல்லாம் ஏதாவது ஏளனமாகப் பேசுவதும் வழக்கம். ஒருநாள் அவன் காந்திஜியைப்பற்றி ஒரு கிண்டல் கவிதை எழுதி, அவரிடமே கொடுத்து, "மிஸ்டர் காந்தி, இப்போதே படியும், நன்ருக இருக்கிறதா கூறும்" என்ருன், திமிருடன்.

காந்திஜி அதை வாங்கிக்கொண்டு கண்ணோட்டம் விட்டார். இரண்டு மூன்று தாட்கள் நீண்ட அந்தக் கவிதையைப் புரட்டிப் பார்த்துவிட்டு, தாட்களைச் சேரக் குத்தியிருந்த குண்டூசியை எடுத்துக்கொண்டு தாட்களை அவனிடம் நீட்டினுர்.

அவன் ஆவலுடன், "படித்தீரா, இதில் ஒன்றும் சாரம் இல்லையா?" என்று கேட்டான்.

இதற்குள் கையிலிருந்த குண்டூசியை டப்பியில் போட்ட பாபு, "இருந்ததே, அதை டப்பியில் வைத்துக் கொண்டேனே" என்ருர் நிதானமாக.

உடனிருந்தவர்கள் கொல்லென்று சிரித்துவிட்டார்கள். அந்த வெள்ளையனே வெட்கித் தலைகுனிந்தான். அதன் பிறகு அவன் காந்திஜியைப்பற்றியோ, மற்றவர்களைப்பற்றியோ உதாசீன மாகப் பேசுவதே கிடையாது.

பலன்

(1931)

கிழக்கு லண்டனில் ஏழைகள் வசிக்கும் பகுதியிலுள்ள கிங்ஸ்லி ஹால் என்ற சமூக சேவா கழகத்தில் காந்திஜி தங்கி யிருந்தார். மிஸ் முரியல் லெஸ்டரும், ஸ்ரீ பிளேட்டன் என்பவரும் அந்த ஸ்தாபனத்தை நிர்வகித்து வந்தார்கள். ஒரு நாள் பிளேட்டன் காந்திஜியிடம் ஒரு புத்தகத்தை நீட்டி அதில் கைழுெத் திட்டுத் தருமாறு கேட்டார். பொதுவாக அன்புக் குறிப்பாகக் கையெழுத்துக் கேட்டால், ஐந்து ரூபாய்களாவது வசூலித்து

விடுவது காந்திஜியின் வழக்கம். பிளேட்டன் போன்ற சமூக ஊழியர்களிடம் பணம் ஏது?

காந்திஜி புத்தகத்தை வாங்கிக் கொண்டதும் பிளேட்டன் சொன்னார்: "இந்தப் புத்தகம் விமரிசனத்துக்கு ஏற்றதல்ல என்று ஒரு பத்திரிகைக் காரியாலயத்தில் ஒதுக்கிவிட்டார்கள். ஆனால் இந்தப் பொக்கிஷத்தைப் படித்ததனால் உங்களுடைய பரிசயமும் பழக்கமும் கிடைத்துவிட்டன."

காந்திஜி ஆச்சரியத்துடன் அவரை நிமிர்ந்து பார்த்துவிட்டுப் புத்தகத்தைப் புரட்டலானார். பிளேட்டன் தொடர்ந்து பேசினார்: "இந்தப் புத்தகம் 'டெய்லி ஹெரால்டு' பத்திரிகைக்கு விமரிசனத் துக்காக வந்தது. அப்போது நான் அந்தப் பத்திரிகையில் ஊழியம் செய்து கொண்டிருந்தேன். விமரிசனத்துக்கு லாயக்கில்லாத புத்த கங்களை அவர்கள் ஏலம் போட்டு விடுவது வழக்கம். இந்தப் புத்தக மும் ஏலக் கிடங்குக்கு வந்தது. நான் ஒரு ஷில்லிங் கொடுத்து வாங்கிக்கொண்டு வீட்டுக்குச் சென்றேன். படிக்க ஆரம்பித்ததும் கீழேவைக்க மனம் வரவில்லை. பிறகு என் வாழ்க்கையிலே புரட்சி கரமான மாறுதல்கள் ஏற்பட்டன. இந்தப் புத்தகத்தை ஆதார மாகக்கொண்டு கிங்ஸ்லி ஹாலில் பல பிரசங்கங்கள் செய்தேன்..."

காந்திஜி புத்தகத்தில் கையெழுத்திட்டு அவரிடம் கொடுத்தார். "அப்படியானால், லெஸ்டருக்கு நீங்கள் தாம் என்னைப்பற்றிக் கூறினீர்களோ?" என்று கேட்டார்.

"இருக்கலாம். ஆனால் இங்குள்ள ஏழை மக்களுக்கு நான் பிரசங்கம் செய்ததன் பலனாக உங்கள்பால் அன்பும் உங்களைச் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வமும் ஏற்பட்டன. எங்களுடைய ஆசையும் கனவும் நிறைவேறின."

"உங்களுடைய காசு நல்ல காசு. கொஞ்சச் செலவில் நல்ல புத்தகத்தைக் கொள்முதல் செய்துவிட்டீர்கள்" என்றார் பாபு, சிரித்துக்கொண்டே.

"சந்தேகம் என்ன? என்னைவிட வேறு யாரும் அந்தப் புத்தகத்தை நன்றாகப் பயன்படுத்தியிருக்க முடியாது. என் னுடைய சிரமத்துக்கு உங்களுடைய கையெழுத்துத்தான் சிறந்த பரிசு என்று எண்ணினேன்; அதுவும் கிடைத்துவிட்டது, இப்போது."

அந்தப் புத்தகந்தான் காந்திஜி எழுதிய 'சத்திய சோதனை.'

காந்தி மாமா

(1931)

கிங்ஸ்லி ஹாலில் வசிக்கும் ஏழைக் குழந்தைகளுடன் சிறிது நேரமாவது தினசரி சல்லாபிப்பதைக் காந்திஜி வழக்கமாக வைத்துக்கொண்டார். ஒருநாள் சின்னஞ் சிறுவன் ஒருவனுக்குக் காந்திஜி ஏன் காலில் பூட்ஸ் போட்டுக் கொள்வதில்லை என்ற சந்தேகம் வந்தது. உடனே அவன் தாயிடம் ஓடிச் சென்று, "அம்மா, காந்தி ஏன் பூட்ஸ் போட்டுக் கொள்ளவில்லை, சட்டை போட்டுக் கொள்ளவில்லை?" என்று கேட்டான்.

"இதோ பார், பெரியவர்களை மரியாதையாகக் கூப்பிட வேண்டும். காந்தி என்று சொல்லக்கூடாது; மிஸ்டர் காந்தி என்று கூப்பிட வேண்டும்" என்று கடிந்து கொண்டாள் தாய்.

சிறுவனுக்கு அழுகைதான் வந்தது. தன்னுடைய கேள்விக்குப் பதிலும் கிடைக்கவில்லை, தாயும் கோபித்துக் கொண்டு விட்டாளே என்ற வருத்தம் அவனுக்கு. கண்களில் நீர்மல்க, "தப்பு அம்மா, இனிமேல் அப்படிச் சொல்லமாட்டேன். காந்தி மாமா என்று அவரை அழைக்கட்டுமா?" என்று கேட்டான்.

தாய் சம்மதம் தெரிவித்துத் தலையாட்டினாள்.

அன்று மாலை காந்திஜி விடுதிக்கு வந்ததும் சிறுவன், "காந்தி மாமா" என்று கூப்பிட்டுக்கொண்டே அவருடைய காலைக் கட்டிக்கொண்டான். காந்திஜி ஆனந்தத்துடன் அவனை அணைத்துக்கொண்டார். மெள்ள மெள்ளச் சிறுவன் தன்னுடைய சந்தேகத்தைக் கேட்டான். "எனக்கு மாமாவாக இருக்கச் சம்மதம்தானே?" என்று கொஞ்சினான். இதன் நடுவே காலையில் நடந்த சம்பவத்தை அந்தச் சிறுவனின் தாய் கூறினாள்.

"உனக்கு மட்டும் என்ன, எல்லாக் குழந்தைகளுக்கும் நான் மாமாதான். எங்களுடைய ஊரில் ஏழைகள் சட்டை போட்டுக் கொள்வதில்லை. பூட்ஸ் போட்டுக் கொள்வதில்லை. அதனால் தான் நானும் போட்டுக் கொள்ளவில்லை. உங்களுக்குக் கிடைக்காத பொருளை நான் மட்டும் வைத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டார் அவர்.

அந்தச் சிறுவனுக்கு விளங்கிற்றோ என்னவோ, அன்றுமுதல் அவன் காந்திஜியுடன் நெருங்கிப் பழகினான். காந்திஜி லண்டனில்

இருக்கும்போது அவருடைய பிறந்த நாள் வந்தது. இங்ஸ்லி ஹாலில் வசிக்கும் சிறுவர்கள் காந்தி ஜயந்தியைக் கொண்டாடச் சிறப்பாக ஏற்பாடுகள் செய்தார்கள். அன்று ஒரு நாய் பொம்மையும், தின்பண்டங்களும் காந்தி மாமாவுக்குப் பரிசு கொடுத்தார்கள். "இன்று முழுவதும் எங்களுடன் தான் நீங்கள் விளையாடவேண்டும். எங்களுக்குக் கதைகள் சொல்லவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

காந்திஜி சந்தோஷமாக அதை ஏற்றுக் கொண்டார்.

எச்சரிக்கை
(1931)

காந்திஜி தினந்தோறும் உணவுடன் சிறிதளவு தேனும் அருந்துவது வழக்கம். கப்பலில் அவரைச் சந்தித்த சில எகிப்தியத் தலைவர்கள் ஒரு ஜாடி நிரம்பத் தேன் அளித்து உபசரித்தார்கள். கப்பல் பிரயாண காலத்திலும் லண்டன் சென்ற பிறகும் அந்தத் தேனையே காந்திஜி உபயோகித்து வந்தார். ஒருநாள் காந்திஜிக்கு விடுதிக்கு வந்து உணவு கொள்ள அவகாசம் இல்லாமல் இருந்தது. சூரியாஸ்தமனத்துக்குப் பிறகு காந்திஜி உணவு அருந்துவதில்லை. ஆகையால், மீராபென், அவர் இருந்த இடத்துக்குச் சாப்பாடு எடுத்துச் சென்றார்.

காந்திஜி இருந்த ஜாகைக்குப் போனதும், உணவுடன் தேன் இல்லை என்பது தெரிந்தது. உடனே பக்கத்திலிருந்த கடையிலிருந்து சிறு சீசா தேன் வாங்கிவந்தார்கள். சாப்பிடும் போது, காந்திஜி அந்தச் சீசாவைப் பார்த்தார். "இது ஏது?" என்று கேட்டார். தேன் எடுத்துவர மறந்து விட்டதால் வாங்க நேர்ந்தது என்று, மீரா பென் கூறியதும் காந்திஜி கோபங்கொண்டார்.

மறதியைச் சுட்டிக் காட்டாமல் அவர் கேட்டார்: "ஏன் இப்படிக் காசை வீணாக்குகிறீர்கள்? ஜனங்கள் கொடுக்கும் பொருளை நாம் கருத்துடன் செலவிட வேண்டும். ஒரு வேளை தேன் இல்லாவிட்டால் நான் பட்டினி கிடந்து விடுவேனா? நம்மிடம் தேன் இருக்கும்போது மேலும் புதிதாக வாங்குவது பணத்தை வீணாக்குவதற்குச் சமம்தான்."

★

பொருளாதாரப் பிரச்னை

(1931)

பிரபல ஹாஸ்ய நடிகரான சார்லி சாப்ளின் காந்திஜியைச் சந்தித்த போது கேட்ட கள்வி, "நீங்கள் யந்திரங்களை வெறுக்கிறீர்களாமே?" என்பதுதான். இங்கிலாந்தில் காந்திஜியைப் பலர் இதே கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். "அஹிம்ஸாவாதியான நீங்கள் எங்கள் நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைப் பட்டினிபோட்டு லங்காஷையரிலுள்ள ஆலைகளை மூடிவிட ஓர் இயக்கம் நடத்துகிறீர்களே, இது நியாயந்தானா?" என்று சிலர் கேட்டார்கள்.

காந்திஜி சொன்னார்: "எங்களுடைய நாட்டில் விவசாயத்தையே பிரதான ஜீவனமாகக் கொண்ட மக்களே அதிகம். அவர்களுக்கு வருஷத்தில் ஆறுமாதம் வேலை கிடைப்பதில்லை. அதற்காக ஓர் உபதொழில் இருப்பது அவசியம். மனிதனுடைய தேவைகளில் ஆடை முக்கியமானது. இந்த இரண்டு பிரச்னைகளையும் சர்க்கா சமாளித்து விடுகிறது."

"ஜவுளி உற்பத்தியில் மட்டும் தானா நீங்கள் விசேஷ கவனம் செலுத்துகிறீர்கள்?" என்று கேட்டார் சார்லி சாப்ளின்.

"உணவு, உடை இரண்டிலும் ஒவ்வொரு நாடும் சுய தேவைப் பூர்த்தியுள்ளதாக இருக்க வேண்டும் என்பதே என் ஆசை. ஒரு காலத்தில் இந்தியா ஜவுளி ஏற்றுமதி செய்து கொண்டிருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியில் நிலைமை மாறிவிட்டதுடன் கிராம மக்கள் பட்டினி கிடக்க நேரிட்டது. யந்திர சாதன அபிவிருத்தியினால்தான் பிரிட்டன் ஜவுளி உற்பத்தியில் உலக மார்க்கட்டைப் பிடித்துக் கொள்ள மற்ற நாடுகளுடன் போட்டியிடுகிறது. இந்தியாவும் யந்திர சாதனங்களை ஏற்றுக்கொண்டு போட்டியில் இறங்கினால் மனித சமூகத்தின் நிலைமை என்ன? போட்டியும் வெறியும் மக்களை நாசத்தின் எல்லை நோக்கி இழுத்துச் செல்லுமே?"

"இந்தியாவின் பொருளாதார நிலைமையை உத்தேசித்துச் சொல்வது சரி. ருஷ்யாவைப்போல, உங்களுடைய நாட்டிலும் சர்வ ஜன சுதந்தரமும், எல்லோருக்கும் வேலையும் கூலியும் கிடைத்து, ஏழைமை மாற வழி ஏற்பட்டால் நீங்கள் யந்திரங்களை வெறுப்பீர்களோ?" என்று கேட்டார் சார்லி.

"இயந்திரங்கள் மனிதர்களைப் பட்டினி போடுவதாகவே நான் எண்ணுகிறேன். மனிதனுக்கு உதவி செய்து, அவனுடைய சுக வாழ்வுக்கு அடிகோலும் யந்திரங்களை நான் வெறுக்கவில்லை. உதாரணமாகத் தையல்மிஷினும் சைகிளும் மனிதனுக்கு அவசியந் தான். ஆனால் அவனைச் சுரண்டும் ராட்சஸ ஆலைகள் அவசியமா என்று யோசித்துப் பாருங்கள்!" என்று கேட்டார் காந்திஜி.

இந்தியாவின் ராஜா
(1931)

லண்டனிலிருந்து திரும்பும் போது காந்திஜி ரோமன் ரோலந் தைப் பார்க்க ஸ்விட்ஜர்லந்துக்குச் சென்றார். ரோமன் ரோலந்த், சிறந்த எழுத்தாளர்; வேதாந்தி. காந்திஜியைப்பற்றி அவர் அழகான ஒரு புத்தகம் எழுதியுள்ளார். காந்திஜியின் விஜயத் தைப்பற்றி ரோலந்த் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்: "டெலி போனில் கூப்பிட்டுப் பலர் காந்திஜியைப்பற்றித் தகவல் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். ஓய்வின்றி டெலிபோன் மணி கணகண என்று ஒலித்துக் கொண்டேயிருந்தது. காந்திஜி போட்டோவுக்கு நிற்பதில்லை என்பதைக் கேட்ட சிலர், எங்களுடைய தோட்டத்தி லுள்ள புதர்களிலும், மரங்களிலும் மறைந்திருந்து போட்டோ எடுத்துக் கொண்டேயிருந்தார்கள்!"

"இந்தியாவின் ராஜா வந்திருக்கிறாராமே! அவர் தங்கியிருக் கும் வரையில் அவருக்குச் சாப்பாடு அளிக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்" என்று உள்ளூர்ப் பால்காரர்கள் சங்கத்தின் தலைவர் கடிதம் எழுதினார்.

"எங்களுடைய நாட்டு நலனுக்காக நடைபெறும் லாட்டரியில் பத்து அதிருஷ்ட எண்களை எழுதுங்கள். உங்களுடைய தெய்விக சக்தியினால் நாங்களும் நலனடைகிறோம்" என்று சில இதாலி யர்கள் ரோலந்து மேற் பார்வையிட்டுக் காந்திஜிக்குக் கொடுக்கு மாறு கடிதம் எழுதினார்கள்.

இருதய சுத்தம்
(1932)

வங்காளத் தலைவர் தாஸ்குப்தாவின் குமாரர் அருணசந்திரர் 1932-ஆம் வருட இறுதியில் உடல் நலிவுற்றிருந்தார். வைத்திய

சிகிச்சை பெற்றும் விசேஷ முன்னேற்றம் இல்லாததால் மன அமைதியிழந்து, தம்முடைய உடல்நிலைபற்றி எரவாடா சிறையிலிருந்த காந்திஜிக்கு அவர் கடிதம் எழுதினார்.

அவருக்குப் பாபு எழுதிய பதில் வருமாறு:

" அன்பார்ந்த அருண,

"வெகுநாட்களுக்குப் பிறகு உன்னுடைய கடிதம் கிடைத்திருக்கிறது. நீ நம்பிக்கை இழந்துவிடக் கூடாது. தீராத வியாதிகளும் தீரும். சரியாகச் சுவாசம் விடுதல், பத்தியமான உணவு, சுத்தமான காற்று, குணமடைந்து விடுவோம் என்ற நம்பிக்கை இவைதாம் உடலைத் தேற்றுபவை. ஆண்டவனிடம் பூர்ண நம்பிக்கை வைப்பாயாக. உன்னுடைய உடலுக்கு இவ்வுலகில் உபயோகம் இருக்கும் வரையில் அதை ஆண்டவன் காப்பாற்றியே தீருவார் என்பதில் ஐயம் இல்லை.

"உடல் ஒன்றினால்தான் சேவைசெய்ய முடியும் என்று நீ கூறுவது தவறு. உலக சேவைக்குச் சிறந்த கருவி அறிவேயாகும். சுத்தமான இருதயமுள்ளவர்கள் சிறப்பாக ஊழியம் செய்ய முடியும். தீய உள்ளம் உள்ளவர்கள் செய்யமுடியாத காரியங்களை, தூய எண்ணம் உள்ளவர்கள் சுலபமாகச் செய்துவிடமுடியும். மனங்கலங்காதே. எல்லோரிடமும் அன்புடன் பழகுவாயாக.

அன்புள்ள,

பாபு."

இன்றே செய்க

(1933)

காந்திஜி எரவாடா சிறையில் இருந்த போது தட்டோபா என்று ஒருவன் சமையற்காரனாகவும் குற்றேவல்காரனாகவும் ஊழியம் செய்தான். அவனுக்கு அடிக்கடி கால்ப்பிடிப்பு வந்துவிடும்; வலி தாங்காமல் துடிப்பான்; நொண்டிக்கொண்டே வேலை செய்வான். சிறை அதிகாரியான மேஜர் மார்டின் அவனுக்குச் சிகிச்சை செய்தார். பூர்ண குணமடையவில்லை. சுமார் ஒருமாத காலம் அவன் தொடர்ந்து கஷ்டப்பட்டபோது ஒருநாள், மேஜர் மார்டினிடம் காந்திஜி கேட்டார்: "தட்டோபாவுக்கு நான் சிகிச்சை செய்ய விரும்புகிறேன். உங்களுக்கு ஏதாவது ஆக்ஷேபனை உண்டா?"

"பேஷாகச் செய்யுங்கள்" என்றார் மார்டின்.

"அவனுடைய ஆகாரத்தில் கோளாறு இருப்பதாக நான் எண்ணுகிறேன். நான் கேட்பதைக் கொடுப்பீர்களா?" என்று கேட்டார் காந்திஜி.

அதற்கும் மார்டின் சம்மதிக்கவே, காந்திஜி சிகிச்சை செய்ய ஆரம்பித்தார். உபவாசம், எனிமாமூலம் குடற்சுத்தம், பச்சைக் காய்கறி உணவு என்று அவனுடைய உடற் கூறுக்கு ஏற்றபடி மாற்றி மாற்றிச் சிகிச்சை செய்ததில், சில தினங்களிலேயே வலி மாறி, அவன் காலூன்றி நன்றாக நடக்கலானான்.

"பல வருஷங்களாகக் கஷ்டப்பட்டேன், பாபு. இப்போது மற்றவர்களைப் போலக் கால்வீசி நடக்கும் போது என்னுடைய மனம் பூரிக்கிறது. உங்களைத் தெய்வமாகக் கொண்டாடத் தோன்றுகிறது" என்றான் தட்டோபா.

தொடர்ந்து சிகிச்சைபெற்று அவன் பூர்ணமாகக் குண மடைந்தான். காந்திஜி விடுதலையடைந்தபிறகு அவனும் பம்பாயில் குடியேறி டீக் கடை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் செய்து வந்தான். பிறகு அவனுக்கு அந்த வியாதியே வரவில்லை.

சில வருஷங்களுக்குப் பிறகு, 1933-இல் காந்திஜி பம்பாய்க்கு வந்திருந்த போது அவரைப் பார்க்கத் தட்டோபா வந்தான். காந்திஜி வேலையில் ஆழ்ந்திருந்ததால் அவனுடன் பேசவில்லை. கண்ணில் நீர் வழிய, நெடுஞ்சாண்கிடையாக விழுந்து அவன் வணங்கினான். "நான் அவசர சோலியில் ஈடுபட்டிருக்கிறேன். நாளை இவனை வரச் சொல்லுங்கள், பேசுகிறேன்" என்று உடனிருந்தவர்களிடம் சொன்னார் காந்திஜி.

தட்டோபா விடை பெற்றுக்கொண்டான். ஆனால் மறுநாள் அவன் வரவில்லை. அடிகளைத் தரிசித்ததுடன் அவன் மனத் திருப்தி யடைந்தான் போலும். அவனைக் காணாமல் காந்திஜி மனம் வருந்தினார்: முகவரி தெரியாததால் அவனைக் கண்டு பிடிக்கவும் முடியவில்லை. "அவனுடைய நிலைமையைத் தெரிந்து கொண்டு கொஞ்சம் பண உதவி செய்ய விரும்பினேன். நாளைக்கு என்று தள்ளி வைத்திருக்கக் கூடாது. அவனுக்குப் பிராப்தி இல்லை. அன்றாடம் காய்ச்சிகளுக்குத் தொழிலை விட்டு வெளியே வருவதற்கு நேரம் ஏது?" என்று உடனிருந்தவர் களிடம் கூறிக் காந்திஜி வருந்தினார்.

சநாதனியின் கூற்று
(1933)

ஹரிஜன நிதி திரட்டக் காந்திஜி விதர்ப்ப தேசத்தில் (மத்திய மாகாணம்) சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்த போது ஒரு சநாதனி பின் வருமாறு கடிதம் எழுதினார்: "இன்று நான் விசித்திரமான ஒரு கனவு கண்டேன். கண்ணன் காட்சியளித்து, 'காந்திஜியின் முடிவு சமீபித்து விட்டது. ஆகவே அவர் மற்ற வேலைகளை விட்டு விட்டு என்னுடைய நாமஸ்மரணை செய்யட்டும்' என்று கூறினான். இதை நீங்கள் அவசியம் கவனிக்க வேண்டும். இது என்னுடைய வேண்டுகோள் மட்டுமல்ல."

இந்தக் கடிதத்துக்குப் பின்வருமாறு காந்திஜி பதில் எழுதினார்: "சகோதர, நான் சதா ஈசுவரத் தியானம் செய்துகொண்டிருக்கிறேனே! தீனர்களுக்குச் சேவை செய்வதே ஈசுவரோபாசனை என்று எண்ணுகிறவன் நான். மேலும் எனக்குக் காலம் நெருங்கி விட்டது என்பதற்காகவா பகவத் தியானம் செய்ய வேண்டும்? நாம் பிறந்ததுமே சாவு நிச்சயம் என்று ஏற்பட்டுவிட்டதே! இதற்காக முதுமைப் பருவம் வரையிலோ, சாவு நெருங்கிவிட்டது என்று தெரியும் வரையிலோ காத்திருக்க வேண்டுமா?"

கோட்டை விடாதீர்கள்!
(1933)

ஹரிஜன யாத்திரையின் போது மத்திய மாகாணத்திலுள்ள அமராவதி என்ற ஊருக்குக் காந்திஜி சென்றார். வழக்கம் போலப் பொதுக் கூட்டத்தில் அன்று தமக்குக் கிடைத்த கையுறைகளை ஏலங் கூற ஆரம்பித்தார். அந்தக் கூட்டத்தில் சில ஐரோப்பியர்களும் இருந்தார்கள். பெர்ஷ்டன் என்ற ஐரோப்பியர் காந்திஜி கைபட்ட பொருள்களில் ஒன்றை வாங்கிவிட வேண்டும் என்று போட்டி போட்டுக் கொண்டு ஏலங் கேட்டார். ஜனங்களுக்கு உற்சாகம் மூண்டு விட்டது. அவர்களும் போட்டியிட்டார்கள்.

காந்திஜி முதலில் ஒரு வெள்ளிச் சிமிழை ஏலம் கூறினார். ஐந்து, ஆறு என்று ஆரம்பித்த ஏலம் பெர்ஷ்டன் கலந்து கொண்டதும், இருபது, இருபத்தைந்து என்று ஏறிற்று. பெர்ஷ்

டனும் பிடிவாதமாக விலை உயர்த்திக்கொண்டே போனார். நாற்பத்தைந்து என்று அவர் கூறியதும், ஓர் இந்தியப் பிரமுகர் ஐம்பத்தைந்து என்று கத்தினார். பெர்ஷ்டன் மேலே கேட்க மனம் இல்லாமல் ஓய்ந்து போனார்.

அதன் பிறகு பல பொருள்களைக் காந்திஜி ஏலம் கூறினார். ஒவ்வொன்றையும் பெர்ஷ்டன் விலை கூறி உயர்த்திக் கொண்டே போனார். கடைசியில் வேறு யாராவது போட்டியாகக் கிளம்பி ஏலத்தை முடித்து விடுவார்கள். காந்திஜியோ, சிரித்துச் சிரித்து உற்சாகப்படுத்தினார். "அரிய சந்தர்ப்பம், விட்டுவிடாதீர்கள்" என்று சொல்வார். விலை கேட்பதில் சிறிது தயக்கம் ஏற்பட்டால் சாமானை வருணிக்க ஆரம்பித்து விடுவார். ஜனங்களுக்கு ஆவேசம் கிளம்பிவிடும். பெர்ஷ்டன் ஒன்றுமே வாங்க முடியவில்லை. ஏமாற்றமடைந்து முகம் வாடிய பெர்ஷ்டனைக் காந்திஜி கவனித்தார். இதன் நடுவே பக்கத்திலிருந்த பத்திரிகை நிருபர் ஒருவரிடம், "தயவு செய்து காந்திஜியின் கையெழுத்தாவது எனக்கு வாங்கித் தாருங்கள்" என்றார் பெர்ஷ்டன், அழமாட்டாக் குறையாக. நிருபர் காந்திஜியிடம் பெர்ஷ்டனின் வேண்டுகோளைச் சொன்னார். ஒரு துண்டுக் காகிதத்தில், "அன்பு, காந்தி" என்று காந்திஜி எழுதிக் கொடுத்தார். சந்தோஷத்துடன் அதை ஏற்றுக் கொண்டு பெர்ஷ்டன் இருபத்தைந்து ரூபாய்களைக் காணிக்கை செலுத்தினார்.

உடைத்து எறியுங்கள்

(1933)

அன்புக் காணிக்கையாக எதைக் கொடுத்தாலும் காந்திஜி ஏற்றுக்கொள்வார் என்று சிலர் எண்ணினார்கள். மேலும், கொடுத்ததுமே அதை ஏலம் கூறி விற்று விடுகிறாரே, அதனால் கலையழகோ, கவர்ச்சியோ நிறைந்த பொருளாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும் சிலர் கருதினார்கள். மலையாளக் கிராமம் ஒன்றில் களிமண்ணால் செய்த காந்தி பொம்மை ஒன்றைக் காந்திஜிக்குக் கொடுத்தார்கள். "இதை இங்கேயே ஏலம் கூறுங்கள். உங்களுடைய விஜயத்தின் நினைவாக இங்கு வைத்துக் கொள்ள விரும்புகிறோம்" என்றார்கள் கிராமவாசிகள்.

அந்தப் பொம்மைக்கும் காந்திஜியின் உருவத்துக்கும் சம்பந்தமே இல்லை. அது மண்டியிட்டு உட்கார்ந்திருக்கும் மனித உருவம். அதை வாங்கிக்கொண்டு காந்திஜி, "இந்த மாதிரிச் சாமான்களை என்னிடம் எதற்காகக் கொடுக்கிறீர்கள்?" என்று வருத்தம் தோய்ந்த குரலில் கேட்டார்.

மற்றவர்கள் திகைத்துப் போய் நின்றார்கள். காந்திஜி சொன்னார்: "இதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு ஒரு மதிப்பு ஏற்படுத்தவே ஏலம்கூற விரும்புகிறீர்கள். அப்படிச் செய்தேன் ஆனால் இது ஒரு ஞாபகச் சின்னமாகி விடும். இதற்கு நிரந்தரமான மரியாதை கொடுக்கவே நீங்கள் விரும்புகிறீர்கள். ஆனால் இது கலைக்குச் செய்யும் துரோகமாகும். இந்தப் பொம்மையில் கலை உணர்ச்சியும் இல்லை; கைத்திறனும் இல்லை" என்று கூறிப் பொம்மையைத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

ஏலம் கூறிவிட்டாலும் ஏற்றுக் கொண்டாலும் போதும் என்று அந்தப் பொம்மையைச் செய்தவர் மன்றாடினார். காந்திஜி சொன்ன பதில் இதுதான்: "தயவு செய்து இதை உடைத்து எறியுங்கள்."

எர்ணாகுளத்தில் காந்திஜியிடம் ஒரு படத்தைக் கொடுத்தார்கள். லண்டனில் வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்ற போது கந்திஜியும் ஜார்ஜ் மன்னரும் சந்தித்ததைக் கற்பனை செய்து வரைந்த படம். நடுவில் ஜார்ஜ் மன்னரும் காந்திஜியும் அமர்ந்திருக்கிறார்கள். மன்னருக்கு வலப்புறத்தில் சரோஜினி தேவியும், காந்திஜியின் இடப்புறத்தில் பண்டித மாளவியாவும் இருக்கிறார்கள். தலைப்பில், "மதமும் சாதியும் ஹரிஜனங்களுடைய கொடிய விரோதிகள்" என்று எழுதப்பட்டிருந்தது.

காந்திஜி அந்தப் படத்தை நிராகரித்து விட்டார். அந்தக் காட்சி அமைப்பைப்பற்றியோ, கலையழகுபற்றியோ, அவர் கூறவில்லை. படத்தில் கலையம்சம் குறைவுதான். ஆனால் அதில் எழுதி யிருந்த வாசகம் அடிகளின் மனத்தைப் புண்படுத்தி விட்டது.

"நான் ஹரிஜன நிதிக்குப் பணம் திரட்டுகிறேன் என்பதற்காக எதைக் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஹரிஜனங்களுடைய விரோதி மதம் அல்ல; மதத்துக்கு விரோதமாக நடக்கும் மேல் மக்கள்தாம் தாழ்த்தப்பட்டோரை வாட்டு

கிறார்கள். தீண்டாமைக்கும் மதத்துக்கும் சம்பந்தமே கிடையாது. அது கொடுமையான சம்பிரதாயம். இந்தப் படத்தை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நண்பர் விரும்பினால், முதலில் இதிலுள்ள வாசகத்தை அழித்துவிட வேண்டும்'' என்றார் காந்திஜி.

கௌமுதியின் தியாகம்
(1934)

காந்திஜி வடகரா என்ற ஊரில் ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டபோது, கௌமுதி என்ற பதினான்கு வயதுச் சிறுமி அடிகளிடம் கையெழுத்துக் கோரினாள். அதற்கு ஈடாகக் கையிலிருந்து ஒரு வளையலைக் கழற்றினாள். காந்திஜி புன்முறுவலுடன் அவளைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவள் மற்றொரு கையிலிருந்த வளையலையும் கழற்றினாள். "ஒரு வளையலே போதும், நான் கையெழுத்துத் தருகிறேன்'' என்றார் அடிகள்.

கௌமுதி மறுமொழி கூறவில்லை. ஆனால் கழுத்திலிருந்த சங்கிலியையும், காதிலிருந்த தோடுகளையும் கழற்றி அடிகளின் முன்னே வைத்து வணங்கினாள். காந்திஜி விளையாட்டாக, ''பெண்ணே, இவற்றைத் தருகிறாயே, உன்னுடைய தந்தை அநுமதித்தாரா?'' என்று கேட்டார்.

அதற்கும் கௌமுதி பதில் கூறாமல் நாணத்தால் தலைகுனிந்து நின்றாள். மேடையிலிருந்த ஒருவர் கௌமுதியின் தந்தை அருகில் இருப்பதாகவும், வரவேற்புப் பத்திரங்களை ஏலம் போட்டபோது, அவரும் கலந்துகொண்டு ஏலம் கேட்டதாகவும் கூறினார்.

காந்திஜி உடனே, "தந்தையின் சம்மதம் பெற்றுவிட்டது பெரிது இல்லை; இப்பொழுது நீ கொடுப்பதும் பெரிது இல்லை; உன்னுடைய தியாகத்தையே நான் விரும்புகிறேன். இனிமேல் நகைகளை அணிவதில்லை என்று நீ விரதம் பூணவேண்டும். அப்படிச் செய்வாயா?'' என்று கேட்டார்.

கௌமுதி சம்மதம் தெரிவித்துச் சபதம் செய்தாள். "உன்னுடைய தியாகமே, நீ கொடுத்த ஆபரணங்களைவிடச் சிறந்த ஆபரணம்'' என்று எழுதிக் கையெழுத்திட்டுக் காந்திஜி அவளிடம் கொடுத்தார்.

பொறுப்பு

(1934)

திருவனந்தபுரத்தில் காந்திஜியைப் பேட்டிகாணப் பதினேழு பிராயமுள்ள மீனு என்ற பெயருள்ள ஒரு பெண் வந்தாள். உடம்பு நிறைய அவள் நகைகள் அணிந்துகொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும், காந்திஜி மலர்ந்தமுகத்துடன், "வா, அம்மா" என்று சொல்லிச் சிரித்தார். உடனேயே, "எதற்காக இவ்வளவு நகைகளைச் சுமந்துகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

"நான் பெண்தானே, நகைகளைப் போட்டுக்கொண்டிருக்கிறேன்" என்றாள் அந்தப் பெண்.

"பெண்கள்தாம் தியாகம் செய்யவேண்டும். உன்னைவிடச் சின்னவளான கௌமுதி நகைகளை ஹரிஜன இயக்கத்துக்குக் கொடுத்தாள். இனிமேல் நகைகளை அணிவதில்லை என்றும் உறுதி கூறினாள்..."

"நானும் தருகிறேன்" என்று கைவளையல்களைக் கழற்றலானாள் அந்தப் பெண்.

"உன்னுடைய பெற்றோர்கள் சம்மதிப்பார்களோ?"

"சம்மதம் பெற்றுவிடுகிறேன்."

"மலையாளத்துப் பெண்கள் சுதந்தரமுள்ளவர்கள் என்று அல்லவா கேள்விப்பட்டேன்?"

"ஆமாம். நானே கொடுத்துவிடுகிறேன்" என்று மீண்டும் நகைகளைக் கழற்ற முயன்றாள்.

"இரு! நன்றாக யோசித்து முடிவு செய். நான் சரியான பாத்திரந்தானா, என்னுடைய கோரிக்கை நியாயந்தானா என்று சிந்தித்துப் பார். நான் ஏழை, ஹரிஜன் என்றே என்னைக் கருதிக் கொள்கிறேன். எனக்கு உதவி அவசியம். பெண்களுக்கு நகை அவசியமில்லை என்றே நான் கருதுகிறேன். நகைகளை அணிந்து கொள்வதால் ஒரு சில பெண்களுக்கு அழகு அதிகமாகும் என்பது உண்மைதான். ஆனால் அகத்தழகு பிரகாசிக்க வேண்டும். நகையினால்தான் அழகு கட்டுகிறது என்ற எண்ணத்தை விடவேண்டும். நகை ஆசையைப் பெண்களால் சுலபமாக விட்டு விட முடியாது."

"பாபு, நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். நானே இவைகளை உங்களுக்குத் தருகிறேன்."

"சந்தோஷம், எதற்கும் ஒரு நாள் பொறுத்திரு. பிறகு நீ எனக்குக் கொடுக்கலாம். நன்ருகச் சிந்தித்துப் பார்."

மறுநாள் மீரு காந்திஜியின் முகாமுக்கு வந்தாள். உடம்பில் ஒரு சிறு நகைகூட இல்லை. அவளைச் சந்தித்த மகாதேவுக்கு அவளை அடையாளமே கண்டுபிடிக்க முடியவில்லை. அவள்தான் மீரு என்று தெரிந்ததும் மகாதேவ் கேட்ட கேள்வி இதுதான்: "நகைகள் எங்கே? பாபுவிடம் கொடுத்துவிட்டாயா?"

மீருவின் கண்கள் கலங்கின. "இல்லை. தகப்பஞர் கடன் பட்டிருக்கிருர். நகைகளை நான் கொடுத்து விட்டால் வேறு நகைகளைச் செய்ய முடியாது. இப்போது குடும்பம் இருக்கும் நிலைமையில் இவைகளை இழக்கவும் முடியாது. ஆஞல் நான் நகைகளை அணிவதில்லை என்று மட்டும் தீர்மானித்துவிட்டேன்" என்ருள் மீரு.

"உன்னுடைய தீர்மானத்தைப் பெற்ருேர்கள் ஏற்றுக் கொண்டார்களா?" என்று கேட்டார் மகாதேவ்.

"அப்பா சம்மதித்துவிட்டார். என்னுடைய வாதத்தை அம்மா ஏற்றுக்கொள்ளவில்லை. நகை நட்டு இல்லாத பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள எந்த வாலிபனும் முன்வரமாட்டான் என்று அவள் பயப்படுகிருள்" என்ருள் மீரு.

அன்று பிற்பகலில் பெற்ருேர்களை அழைத்துக்கொண்டு வந்தாள் மீரு. காந்திஜியிடம் ஹரிஜன நிதிக்காக ஒரு தங்க வளையலைக் கொடுத்தாள். இதன் நடுவே மகாதேவ் அவர்களுடைய குடும்ப நிலைமையைப்பற்றிக் காந்திஜியிடம் கூறியிருந்ததால் அவர் சொன்ஞர்: "நீங்கள் எதுவும் கொடுக்க வேண்டாம். இந்த வளையலையும் மற்ற நகைகளையும் விற்று, முதலாவதாகக் கடனை அடைத்து விடுங்கள். மீரு மறுபடியும் நகைகளை விரும்ப மாட்டாள்."

மீருவின் கண்களில் நீர் பொங்கிற்று. அவள் உணர்ச்சி வசப்பட்டு அடிகளை வணங்கிஞள். அந்தச் சமயம் மீருவின் தாயிடம், "உன்னுடைய பெண் புனிதமான விரதம் எடுத்துக் கொண்டிருக்கிருளே, அவளை நீ ஆசீர்வதிக்கவில்லையே?" என்று கேட்டார் பாபு.

"எனக்கு மனம் வரவில்லை. நகைநட்டு இல்லாமல் அவளை எந்த வாலிபன் சீந்துவான்? கொள்கை உயர்வாக இருக்கலாம். செயலில் இருக்கும் சிரமத்தை யோசித்துப் பார்க்கவேண்டாமா?" என்றாள் அவள்.

"இதைப் பற்றிக் கவலைப் படாதே அம்மா. மீரா கல்யாணம் செய்துகொள்ள விரும்பும்போது அவளுக்கு மாப்பிள்ளை தேடும் பொறுப்பை நான் எடுத்துக்கொள்கிறேன். ஒன்றுக்குப் பத்து வாலிபர்களைச் சிபாரிசு செய்கிறேன். அவளுக்குப் பிடித்த வாலிபனை வரிக்கட்டும்" என்றார் பாபு.

அன்னை மனம் குளிர்ந்தாள். மீராவை ஆசீர்வதித்தாள். அன்றுமுதல் அந்தக் குடும்பமும் காந்திஜியின் அன்புக்கும் பாது காப்புக்கும் ஆளாகிவிட்ட நூற்றுக்கணக்கான குடும்பங்களில் ஒன்றாகிவிட்டது.

கரிசனம்
(1934)

தூத்துக்குடியில் விஸ்தாரமான மேடையும், மேடையைச் சுற்றித் தீபாலங்காரமும் அமைக்கப்பட்டிருந்தன. கூட்டத்துக்கு வந்ததுமே காந்திஜி மேடையையும் அலங்காரத்தையுந்தான் கவனித்தார். உடனே டாக்டர் ராஜனைக் கூப்பிட்டு, "ஹரிஜன நிதிக்காக வசூலான பணத்திலிருந்துதானே, இந்த அலங்காரங் களுக்குச் செலவு செய்யப்பட்டிருக்கும்?" என்று கேட்டார்.

தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கத்தின் தலைவரும் காந்திஜி யின் சுற்றுப் பிரயாண ஏற்பாடுகளுக்குப் பொறுப்பானவருமான டாக்டர் ராஜன் உள்ளூர்ப் பிரமுகர்களைக் கூப்பிட்டு விசாரித்தார். பொதுப் பணத்திலிருந்து ஒரு பைசாக்கூடச் செலவாகவில்லை என்றும் உற்சாகமுள்ள ஒருவரால் மேடையும் அலங்காரமும் அமைக்கப்பட்டன என்றும் தெரிந்தது. காந்திஜி திருப்தியடை யாமல், "அந்த மனிதர் இங்கே இருந்தால் கூப்பிடுங்கள்" என்றார்.

நல்ல வேளையாக, மேடையிலேயே அந்த மனிதர் இருந்தார். தம்முடைய சொந்தச் செலவில்தான் மேடை நிர்மாணம் செய்ததாக அவர் நேரில் ஒப்புக்கொண்டார். அதன் பிறகுதான் கூட்டத்தில் பேசக் காந்திஜி எழுந்தார்.

ரேகைப் பைத்தியம்

(1934)

அமராவதிபுதூரில் ராய. சொக்கலிங்கத்தின் இல்லத்தில் காந்திஜி தங்கியிருந்தபோது, ஒரு மலையாள ஜோசியர் காந்திஜியைக் காண வேண்டும் என்று உள்ளே வந்துவிட்டார். அப்போது மாலை நேரம். காந்திஜி ஆகாரம் செய்யப்போகுந் தருணம். காந்திஜி இருக்குமிடத்தில் காவலாக நின்று கொண்டிருந்த டாக்டர் ராஜன் அந்த ஜோசியரைத் தடுத்து நிறுத்திவிட்டார்.

"நான் ரேகை சாஸ்திரி. காந்திஜியின் கைகளைப் பார்க்க வேண்டும். சாப்பிடும் நேரத்தில்தான் அவருடன் சாவகாசமாகப் பேசமுடியும் என்று கேள்வியுற்று ஓடிவந்தேன்" என்றார் ஜோசியர். ராஜாக்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் அவர் ஜோசியங் கூறியதற்காகப் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்களை அவர் டாக்டரிடம் காட்டலானார்.

"இங்கேயே இருங்கள். காந்தியடிகளிடம் அநுமதி கேட்டு வருகிறேன். பிறகு உள்ளே செல்லலாம்" என்று கூறி டாக்டர் உள்ளே சென்றார்.

காந்திஜி சிரித்துக்கொண்டே, "நான் ஹரிஜன நிதி திரட்டச் சுற்றுகிறேன். இதற்காக ஆயிரம் ரூபாய்கள் தருவதானால் என்னுடைய கையைப் பார்க்கலாம்" என்றார்.

டாக்டர் ராஜன் வெளியே வந்து செய்தியைக் கூறினார்.

"நானோ பிச்சைக்காரன். ஏழை. என்னிடம் ஆயிரம் ரூபாய்கள் ஏது? எப்படியும் மகாத்மாவின் கையைப் பார்த்தேயாகவேண்டும் என்ற பித்துப் பிடித்துவிட்டது எனக்கு. கையைப் பார்க்காமல் இங்கிருந்து நகரமாட்டேன்" என்று பிடிவாதம் பிடித்தார் ஜோசியர்.

டாக்டர் ராஜன் நயம்படப் பேசி அவரை வெளியேற்ற முயன்றார். ஜோசியர் கெஞ்சினார். சண்டித்தனம் செய்தார். கடைசியில் டாக்டர் மறுபடியும் காந்திஜியிடம் செல்ல வேண்டியதாயிற்று.

"நானும் பிச்சைக்காரன்தான். ஆயிரம் ரூபாய்களைப் பெற வேண்டும் என்ற தீவிரமான பித்து என்னைப் பிடித்து ஆட்டுகிறது என்று அவரிடம் சொல்லுங்கள்" என்றார் மகாத்மா.

ஜோசியர் சத்தியாக்கிரகம் செய்வதாகப் பயமுறுத்தினர். கடைசியில் தம்முடைய பிடிவாதம் பலிக்காது என்று தெரியவே வெளியே சென்றார்.

தானத்தின் பலன்
(1934)

திருவெண்ணெய்நல்லூரிலிருக்கும் கிருபா ஆசிரமத்துக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிச்சயித்த நிர்வாகிகள், அதற்குக் காந்திஜியே அஸ்திவாரம் போடவேண்டும் என்று விரும்பினார்கள். காந்திஜி ஒப்புக்கொள்ளவே நிர்வாகிகள் ஊருக்கு வெளியே ஓர் இடத்தை விலை பேசி முடிவு செய்தார்கள். ஆனால் பத்திரம் பதிவு செய்து கிரயத்தைப் பூர்த்தி செய்ய அவகாசம் இல்லை. நிலத்தை விற்பனை செய்ய முன் வந்தவருடைய பெயர் சடையக் கவுண்டர். தம்முடைய சொந்த உழைப்பினால் பத்துக் காணி பூஸ்திதியுடையவர். அவர் எழுத்தறிவில்லாத விவசாயி. அவருக்குக் காந்திஜியைப்பற்றியோ, ஹரிஜன இயக்கத்தைப்பற்றியோ தெரியாது. உள்ளூரிலுள்ள குர்ஜாலி ஹரிஜனங்களுக்காகப் பள்ளிக்கூடம் நடத்தத் துவங்கியதும், சாதி இந்துக்கள் அதை எதிர்த்ததுந் தான் அவருக்குத் தெரியும். காந்திஜியின் விஜயத்துக்குப் பிறகு பத்திரப் பதிவு செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்து, தக்க சாட்சிகளை வைத்துக்கொண்டு ஒரு சிறு தொகையை அச்சாரமாகக் கொடுத்து விற்பனையை ஊர்ஜிதம் செய்து கொண்டார்கள்.

காந்திஜி அந்தக் கிராமத்துக்கு விஜயம் செய்யப் போகிறார் என்பது ஜனங்களுக்குத் தெரியுமே தவிர, சடையக் கவுண்டரின் நிலத்தில் வித்தியாலயத்துக்காக அஸ்திவாரவிழா நடக்கப்போகிறது என்ற செய்தி பலருக்குத் தெரியாது. காந்திஜி விஜயம் செய்யும் தினத்தன்று சடையக் கவுண்டரின் தூரபந்துவும் தேசபக்தருமான அரசூர்ப்படையாச்சி என்பவர் திருவெண்ணெய்நல்லூருக்கு வந்தார். தம்முடைய தூரபந்து ஒருவருடைய நிலத்தில் காந்திஜி அடியெடுத்து வைத்துப் புனிதமாக்கப் போகிறார் என்ற செய்தி அவரை ஆனந்தத்திலாழ்த்திற்று. அவர் கவுண்டரிடம் ஓடோடிச் சென்றார். "உன்னுடைய பாக்கியமே பாக்கியம்" என்று கூறி அவரைத் தழுவிக் கொண்டார்.

கவுண்டர் திகைத்துப் போனார். காந்திஜியைப்பற்றி மிகவும் சுருக்கமாகப் படையாச்சி எடுத்துச் சொல்லிவிட்டு, "நம்முடைய கிராமத்துக்கு அடிகள் விஜயம் செய்வதே பெரும் பாக்கியம். அந்தக் காலத்தில் கம்பனுக்கு உதவி, சடையன் பெருமைப்பட்டு விட்டான். இன்று நீ நிலத்தை விற்று விட்டாலும், அடிகள் கால் பட்டுப் புனிதமான நிலத்தினால் உன்னுடைய பெயரும் பிரசித்த மாகிவிடும்" என்றார்.

சடையக் கவுண்டர் சிறிது நேரம் சிந்தித்தார். "என்னை அடிகளுக்கு அறிமுகம் செய்து வையுங்கள். கிரயத்தை மாற்றி, அந்த நிலத்தை அடிகளுக்குத் தானமாகக் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

"நீ மகா பாக்கியசாலி. அடிகளுடைய பாததூளி படுவதால் பெருமையென்றதைக் கேட்டு நீ அவசரமான முடிவுக்கு வந்து விடாதே. ஆனால் உன்னுடைய முடிவு போற்றத்தக்கது" என்றார் நண்பர்.

சடையக் கவுண்டர் சொல் தவறாதவர். "நான் தானம் செய்ய முடிவு செய்துவிட்டேன்" என்றார் உறுதி வாய்ந்த குரலில்.

படையாச்சி வித்தியாலய நிர்வாகிகளிடம் ஓடிவந்து செய்தியைச் சொன்னார். இது எப்படிச் சாத்தியம்? சடையக் கவுண்டர் பேரம் பேசுவதில் நிபுணர் என்பதும், காசில் கரிசனம் உள்ளவர் என்பதும், நிலத்தை விலை பேசும்போது அவர்கள் அநுபவித்தறிந்த உண்மையாயிற்றே! படையாச்சியின் செய்தியையும் ஒதுக்கிவிட முடியாது. சிந்தித்துக் கொண்டிருக்கவோ நேரம் இல்லை. எல்லாரும் விழா நடக்கவேண்டிய இடத்தில் கூடினார்கள். அங்கு சடையக் கவுண்டரும், அவருடைய குமாரர்களும் இருந்தார்கள். குர்ஜாலி கவுண்டரைச் சந்தித்ததும், "ஸ்வாமி, நான் கிரயத்தை மாற்றி விட்டேன். மகாத்மாவுக்குத் தானமாக இந்த நிலத்தைக் கொடுக்க நிச்சயித்து விட்டேன். இது என்னுடைய சொந்தச் சம்பாத்தியம். ஆனாலும், நான் செய்த முடிவை, என்னுடைய குமாரர்களும் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்" என்றார் சடையக் கவுண்டர், மலர்ந்த முகத்துடன்.

டாக்டர் ராஜனும், ராஜாஜியும், மற்ற ஊழியர்களும் சூழ்ந்து நிற்கக் காந்திஜி சடையக் கவுண்டரைச் சந்தித்தார். விழா துவங்குவதற்கு முன்பு மிகவும் சுருக்கமாகக் கவுண்டரின் மனமாறுதலைப்

பற்றிக் குர்ஜாலி காந்திஜியிடம் கூறினர். காந்திஜி கவுண்டரை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "நல்லது, எது எப்படி நடக்க வேண்டுமோ, அப்படியே நடக்கிறது. உத்தமமான தானம்தான்" என்றார். காந்திஜியின் கையில் மாவிலைக் கொத்தை வைத்து, நீர் வார்த்துத் தானம் செய்தார் கவுண்டர். அவருடைய குமாரர்கள் சாட்சியாக நின்றார்கள். காந்திஜி ஏற்றுக் கொண்டதும் மூவரும் அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்கினர்கள்.

விழா முடிந்ததும், காந்திஜி வித்தியாலயத்துக்குச் சென்று ஓய்வு எடுத்துக் கொண்டார். திடீரென அவர் குர்ஜாலியைக் கூப்பிட்டு, "நான் கவுண்டரைப் பார்க்க வேண்டும்" என்றார்.

கவுண்டரை அழைத்து வந்தார்கள். வந்ததும் காந்திஜியை வணங்கிவிட்டு ஒதுங்கி நின்றார் கவுண்டர். "இப்படி உட்காருங்கள்" என்று பக்கத்தில் இடம் காட்டிவிட்டு, காந்திஜி கேட்டார்: "கவுண்டரே, காலையில் எனக்குத் தானம் கொடுத்தீர்களே, அந்த நிலத்தை என்ன செய்வது? நான் இங்கு தங்குவது முடியாத காரியம். உள்ளூரில் இருப்பவர்களிடம் கொடுத்தால் உங்களுடைய ஆசை நிறைவேறுமா என்று சந்தேகிக்கிறேன். ஹரிஜன சேவை செய்வதால் இந்த ஊரில் குர்ஜாலியும் மற்ற ஊழியர்களும் சாதி ஹிந்துக்களுடைய கோபத்துக்கு ஆளாகிவிட்டார்கள். காங்கிரஸ் ஊழியர்களுக்கு அநுதாபம் காட்டினல் உங்களுக்கும் போலீஸ் தொந்தரவு ஏற்படும்."

"நீங்கள் மகாத்மா. இதை எப்படிச் செய்ய வேண்டுமோ அதன்படிச் செய்யுங்கள். நான் இந்த இடத்தை விற்கவே விரும்பினேன். திடீரென என் மனத்தில் மாறுதல் ஏற்பட்டது. உங்களுடைய ஆசி பெற்று இந்த இடத்தில் வித்தியாலயம் நடக்கும் என்ற நம்பிக்கை தோன்றவே என்னுடைய பங்குக்கு நிலத்தைத் தானம் செய்துவிட்டேன். இது சம்பந்தமாக எவ்விதத் துன்பம் வந்தாலும் ஏற்கத் தயார்" என்றார் கவுண்டர்.

"இந்த நிலத்தைக் குர்ஜாலியிடம் ஒப்படைத்து விடுவதில் உங்களுக்கு ஆக்ஷேபணையுண்டா? நான் சர்க்காருக்கு விரோதி. குர்ஜாலியும் சர்க்காருக்கு விரோதிதான். எங்களால் உங்களுக்குத் தொந்தரவு நேரக்கூடும். நன்றாக யோசித்துக் கூறுங்கள். நான் இருக்கும்போதே உங்களிடம் நிலத்தைத் திருப்பிக் கொடுத்து விடலாம் என்று எண்ணுகிறேன்" என்றார் மகாத்மா.

சடையக் கவுண்டர் கண்களில் நீர்மல்க எழுந்து மகாத்மா வின் பாதங்களைப் பிடித்துக்கொண்டார். "என்ன அபசாரம், ஸ்வாமி. என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள்? நீங்கள் மகாத்மா. நல்லதும் கெட்டதும் உங்களுக்கு ஒன்றுதான். கொடுத்ததை நீங்கள் மறுக்கலாமா? நீங்கள் சொன்ன வார்த்தைகளை மாற்றும் வரையில் உங்களுடைய பாதங்களை விடமாட்டேன். பலபேர் அறிய நான் நீர் வார்த்துத் தானம் செய்தேன். அதை எப்படித் திரும்பப் பெறுவேன்?" என்றார்.

காந்திஜி மனம் நெகிழ்ந்துவிட்டார். இருகைகளாலும், கவுண்டரைத் தூக்கி நிறுத்தினார். "என்னுடைய ஆயுளில் நடந்த நற்சம்பவங்களில் இதுவும் ஒன்று. சட்டமும் தஸ்தாவேஜும் குறுக்கிடாத மகத்தான சம்பவம் இது" என்றார்.

காந்திஜிக்குத் தானம் கொடுத்தநிலத்தைக் குர்ஜாலி நிர்வகித்து வரவேண்டும் என்று தான சாசனம் எழுதிப் பத்திரப் பதிவு செய்தார் சடையக் கவுண்டர். அதன் பிறகு பதினைந்து வருஷம் வாழ்ந்து தம்முடைய எண்பத்தைந்தாவது வயதில் அவர் கால மானார். இந்தப் பதினைந்து வருஷங்களிலும் அவருக்குக் காந்திஜி தான் பேசுந் தெய்வமாக விளங்கினார்.

நாவிதப் பெண்

(1934)

இந்துப்பூரில் நடந்த சம்பவம்: "நான் க்ஷவரம் செய்து கொள்ளத் தயாராக இருக்கிறேன்" என்று காந்திஜி சொன்னதும் அடப்பமும் கையுமாக ஒரு கிராமியப்பெண் எதிரே வந்து நின்றாள். காந்திஜி கணநேரம் திகைத்துப்போய் நின்றார். உடனே, "நீயா எனக்கு க்ஷவரம் செய்யப் போகிறாய்?" என்று கேட்டார் சிரிப்புடன்.

அந்தப் பெண் புன்சிரிப்புடன் தலையசைத்தாள். கீழே அடப் பத்தை வைத்து, கத்தியை எடுத்துத் தீட்டலானாள். காந்திஜி அவளை ஏற இறங்கப் பார்த்தார். அவள் பரம ஏழை என்பது தோற்றத்திலேயே தெரிந்தது. ஆனாலும் அவள் மூலாம் பூசிய காப்பு, மூக்குத்தி, சில வெள்ளி நகைகள் இவைகளை அணிந்து கொண்டிருந்தாள்.

"இந்த ஆபாச அலங்காரம் எதற்கு? உண்மையில் இந்த நகைகள் உன்னுடைய அழகை அதிகப்படுத்தவில்லை" என்றார் காந்திஜி.

அந்த ஏழைப் பெண்ணுக்கு விளங்கவில்லை. உடனிருந்த நண்பர் மொழி பெயர்த்தபோது அவளுடைய முகம் வருத்தத்தால் சாம்பிற்று. தயக்கத்துடன் அவள் சொன்னாள்: "எனக்கு அணிகளே கிடையாது. நீங்களோ பெரியவர்கள் என்று சொன்னார்கள். நகைகள் இல்லாமல் உங்களுக்கு எதிரே வரக் கூச்சமாக இருந்தது. இரவல் நகைகளை அணிந்து கொண்டு வந்திருக்கிறேன்."

"இரவலா இவை? நகைகள்தாம் பெண்களுக்கு அழகு தரும் என்றில்லை. அவை ஆடம்பரப் பொருள்கள் என்றே நான் கருது கிறேன். இரவல் நகை வாங்காதே. நகை அணியவேண்டும் என்ற ஆசையையே விட்டுவிடு" என்றார் பாபு.

அவள் பொறுமையுடன் கேட்டாள். இனிமை ததும்பச் சிரித்தாள். ஆனால் அதில் இருதயபூர்வமான சம்மதம் இல்லை. அதைப்பார்த்ததும், "மனமார ஒப்புக் கொள்ளாதவள். பழைய நினைவுகளுடன்தான் வாழ்கிறாள்" என்றார் காந்திஜி.

அந்தப் பெண்ணுக்கு மனமாற்றம் ஏற்பட்டதோ என்னவோ, கோஷ்டியிலிருந்த வேறு இருவருக்கு க்ஷவரம் செய்தாள். தனக்கு ஊதியமாகக் கிடைத்த பணத்தைக் காந்திஜியின் முன் வைத்து விட்டு வணங்கி விடைபெற்றுக் கொண்டாள்.

சுதந்தரம்

(1934)

மைசூரிலுள்ள சோமனஹள்ளிக்குக் காந்திஜி விஜயம் செய்தபோது பதின்மூன்று வயதுள்ள தம்மப்பா என்ற சிறுவன் கையெழுத்துக் கோரி நின்றான். வழக்கம்போலக் காந்திஜி, "பணம் எங்கே?" என்று கையை நீட்டிக் கேட்டார். பையன் ஒரு ரூபாயை எடுத்துக் கொடுத்தான்.

"அஞ்சு ரூபாய் வேண்டும்" என்று கேட்டார் காந்திஜி. தம்மப்பா சிறிது தயங்கினான். காந்திஜி அவனுடைய காதிலிருந்த கடுக்கனைத் தொட்டு, "இது எதற்கு?" என்று கேட்டார்.

உடனே அவன், "இதைக் கழற்றிக் கொள்ளுங்கள். கையெழுத்துத் தருவீர்களா?" என்று கேட்டான்.

"உன் தகப்பனர் கோபிக்கமாட்டாரா? அவருடைய அநுமதி பெற்ருயா?" என்று கேட்டார் பாபு.

"உங்களுக்குத் தருவதை அவர் ஆக்ஷேபிக்கமாட்டார். எடுத்துக்கொள்ளுங்கள்."

"நீ செய்வதை அவர் அங்கீகரிப்பாரா? உனக்கு அவ்வளவு சுதந்தரம் இருக்கிறதா?"

தம்மப்பா காது அணிகளைக் கழற்றுவதில் முனைந்தான்.

"இதைக் கழற்றுவதில் பலன் இல்லை. இனிமேல் புது நகை போட்டுக் கொள்ளக்கூடாது. தெரியுமா?" என்று கேட்டார் காந்திஜி.

தம்மப்பா சம்மதம் தெரிவித்துவிட்டுக் கடுக்கன்களை அவரிடம் கொடுத்தான்.

"உனக்கு என்ன வயது?" என்று கேட்டார் பாபு.

"பதின்மூன்று."

"பார்த்தாயா, உனக்கு இந்த வயதிலேயே சுதந்தரம் கிடைத்துவிட்டது. எனக்கு இவ்வளவு வயதாகிவிட்டது, இன்னும் சுதந்தரம் கிடைக்கவில்லையே?" என்ருர் ஏக்கமும் ஹாஸ்யமும் கலந்த குரலில்.

ஹரிஜன வைத்தியர்
(1934)

நிடுப்ரோலு என்ற ஊரில் வழக்கம்போல, பொதுக்கூட்டம், வரவேற்புப் பத்திரம் அளித்தல், ஏலம் எல்லாம் நடந்தன. காணிக்கைப் பொருள்களில் தங்கத்தாலான ஒரு தக்ளியும் ஒரு வெள்ளிக் கோப்பையும் இருந்தன. தக்ளியை ஏலம் கூறக் காந்திஜி ஆரம்பித்ததும், "ஆறு ரூபாய்" என்று ஒரு குரல் கேட்டது.

காந்திஜி குரல் வந்த திசையில் திரும்பினர், ஏலம் கேட்டவர் யார் என்று பார்க்க. பக்கத்திலிருந்த ஒருவர், "அவர் ஒரு நாட்டு வைத்தியர். சாதியில் ஹரிஜன்" என்ருர்.

காந்திஜி மோகனச் சிரிப்புடன், "பேஷ், நான் உடல் நலமற்றிருந்தால் உம்மிடந்தான் வருவேன்" என்ருர்.

இதற்குள், அவரைப்பற்றிச் சொன்னவர், "இந்த ஊரில் கைராசியுள்ள வேறு சில ஹரிஜன வைத்தியர்களும் இருக்கிறார்கள்" என்றார்.

"நான்கூட ஒரு வைத்தியன்தான். சவர்ணர் (சாதி ஹிந்துக்) களுடைய தீண்டாமை நோயை விரட்ட வைத்தியம் செய்கிறேன். ஆனால் இந்தச் சமயம் நான் ஏலக் கடைக்காரன். கேளுங்கள், ஒருதரம், ஆறு ரூபாய்" என்றார் பாபு.

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். ஏலம் முடிந்த பிறகு காந்திஜி சொன்னார்: "சாதி ஹிந்துக்களுடைய நிலைமை சரியாக இல்லை. சமூக அந்தஸ்து என்ற ஒரு போலி வரம்பில் உட்கார்ந்துகொண்டு கண்ணை மூடிக்கொண்டிருக்கிறார்கள். ஹரிஜனங்கள் அவர்களுக்குக் கைகொடுத்து உதவும் நாள் அதிசீக்கிரத்தில் வரப்போகிறது."

ஜனங்களே போதும்
(1934)

கோதாவரி நதியில், நீராவிப் படகில் காந்திஜி பிரயாணம் செய்து கொண்டிருந்தார். ஒரு வாலிபன் அவரை அணுகித் தெலுங்கில் கையெழுத்துப் போட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அவருக்குப் பல பாஷைகள் தெரியும் என்றே அவன் நினைத்தான். காந்திஜி பக்கத்திலிருந்த புலுசு சாம்பமூர்த்தியைப் பார்த்துச் சிரித்தார்.

புலுசு ஒரு சிறு துண்டுக் கடிதத்தில் 'காந்தி' என்று தெலுங்கில் நிறுத்தி எழுதிக் காந்திஜியிடம் கொடுத்தார். காந்திஜியும் அதைப் பார்த்து அப்படியே எழுதிவிட்டார். அந்த வாலிபனுக்கோ பெருமை பிடிபடவில்லை. தெலுங்கு பாஷையில் காந்திஜியிடமிருந்து கையெழுத்து வாங்கிவிட்டான் அல்லவா? காணிக்கையாக அவன் ஒரு சதுரங்கக் காய்ப் பெட்டியைக் கொடுத்தான்.

"காந்திஜிக்கு அளிக்க விரும்புகிறாயா?" என்று கேட்டார் புலுசு.

"இதை வைத்துக்கொண்டு என்ன செய்வது? விளையாட நேரமில்லை; விளையாடவும் தெரியாதே?" என்றார் காந்திஜி.

"எனக்குத் தெரியும்" என்றார் புலுசு.

"அப்படியானால் உங்களிடம் எச்சரிக்கையுடன் பழக வேண்டும்" என்றார் காந்திஜி.

வாலிபன் விடைபெற்றுக் கொண்டான். பெட்டியிலிருந்த காய்களைக் கொட்டிப் பார்த்துக்கொண்டே, "இது தான் ராஜா, இதுதான் ராணி என்று ஒவ்வொரு காயாகப் பொறுக்கி எடுத்தார் புலுசு. "இவைதாம் சைனியம்" என்று சொல்லும் போது, கைதவறிக் காய்கள் சிதறின.

"என்ன ஐயா, உங்களுடைய சிப்பாய்கள் ஓடுகிறார்களே!" என்றார் காந்திஜி.

புலுசு குனிந்து காய்களைப் பொறுக்கினார்.

"ராஜா ராணி காலம் மாறிவிட்டது. நான் எப்போதும் மக்கள் கட்சிதானே? நான் சைனியத்தை வைத்துக் கொள்கிறேன். நீங்கள் ராஜாவையும் ராணியையும் வைத்துக் கொள்ளுங்கள், விளையாடிப் பார்க்கலாம்" என்றார் காந்திஜி.

புலுசு என்ன செய்வார்? காந்திஜியின் யோசனைப்படி காய்களைப் பிரித்து வைத்துக்கொண்டு சதுரங்கம் ஆட முடியாதே!

மற்றச் சாமான்களுடன் சதுரங்கக் காய்களும் (ஏலம் போட) சேர்க்கப்பட்டன.

மருந்து வேண்டும்

(1934)

ஏல்லூரில் பாபிநீடுவின் தலைமையில் சில வாலிபர்கள் ஹரிஜன சேவை செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் வேலை செய்து கொண்டிருந்த சேரியில் வைத்தியசாலையும் நடத்தி வந்தார்கள். காந்திஜி அங்கு விஜயம் செய்தபோது, வைத்தியசாலையைக் கண்டு திருப்தி தெரிவித்தார். "மருந்துகளை இங்கேயே தயாரித்துக் கொள்கிறீர்களோ, வெளியிலிருந்து வரவழைக்கிறீர்களோ?" என்று கேட்டார் காந்திஜி.

"சில மருந்துகளை இங்கேயே தயாரித்துக் கொள்கிறோம். கொஞ்சம் வெளியிலிருந்தும் வாங்குகிறோம்" என்றார் வைத்தியசாலை நிர்வாகி.

"தீண்டாமை நோயைத் தீர்க்க உங்களிடம் ஏதாவது மருந்து இருக்கிறதா?" என்று கேட்டார் காந்திஜி.

அந்த ஊழியர் பதில் சொல்லவில்லை.

"என்னிடம் இருக்கிறது. வாங்கிக் கொள்கிறீர்களா? நானும் ஒரு வைத்தியன்தான்" என்றார் காந்திஜி.

சூழ்ந்து நின்றவர்கள் ஆரவாரித்தார்கள்.

பொன் வைக்கவேண்டிய இடத்தில்....

(1934)

தாடேபள்ளிக்கூடத்தில் ரெயில் நின்றதும் காந்திஜியைக் காண மக்கள் சூழ்ந்து கொண்டார்கள். ஒரு வாலிபர் காந்திஜியிடம் சில ரோஜாப் புஷ்பங்களைக் கொடுத்தார்.

"இந்தப் புஷ்பங்களை நான் என்ன செய்வது? ஹரிஜன சேவைக்குப் பொன் அல்லவா வேண்டும்? பொன் வைக்கும் இடத்தில் பூவை வைத்துத் திருப்தி செய்யமுடியாது. நான் ஏமாற மாட்டேன்" என்றார் பாபு.

அந்தச் சமயம் யாரோ ஓர் அன்பர் நெருக்கியடித்து முன்னே வந்து ஒரு மாதுளம்பழத்தைக் காந்திஜியிடம் நீட்டினார். "பேஷ், பூவைவிடப் பழம் நல்லதுதான். இதைக்கொண்டும் ஹரிஜன சேவை செய்ய முடியாது. பசியாறப் பழம் தின்னலாம்" என்றார் பாபு.

எல்லாரும் சந்தோஷத்தால் சிரித்தார்கள். அப்போது காந்திஜி கோஷ்டியிலிருந்த ஒருவர் அங்க வஸ்திரத்தை இரண்டு கைகளிலும் பிரித்துப் பிடித்துக்கொண்டு, "அடுத்த காணிக்கையும் செலுத்துங்கள்" என்றார்.

செம்பும் வெள்ளியுமாக நாணயங்கள் வந்து விழுந்தன.

காலணா

(1935)

ஹரிஜன சுற்றுப் பிரயாணத்தின்போது காந்திஜி டில்லிக்குச் சென்றார். நகரசபையில் அவரை வரவேற்று உபசாரம் செய்தார்கள். அதற்காக ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்பட்டன என்று கேள்விப்பட்டதும், காந்திஜி, "இந்த வீண்

செலவுகளுக்கும் பொதுமக்கள் தாமே வரி செலுத்துகிருர்கள்?" என்று கேட்டுவிட்டார்.

டில்லியில் அவர் பல ஸ்தாபனங்களுக்குச் செல்ல நேர்ந்தது. தமக்குக் கிடைத்த உபசாரப் பத்திரங்கள், வரவேற்புரைகளை அடக்கம் செய்த பேழைகள், காணிக்கையாகக் கிடைத்த சாமான்கள் எல்லாவற்றையும் மேடைமீது பரப்பிக் கொண்டு, பொதுக் கூட்டத்தில் ஏலம் கூறலானுர். பொதுக் கூட்டத்தில் அவற்றை ஏலம் விடப்போவதாக முன்னதாகவே அவர் தெரிவித்திருந்ததால், அவற்றை வாங்கும் நோக்கத்துடன் பல அன்பர்கள், வரவேற்புக் கமிட்டியினரின் உதவியினுல் மேடைக்கருகில் சென்று அமர்ந்திருந்தார்கள்.

முதல் முதலாவதாக, ஹரிஜனங்கள் வாசித்தளித்த உபசாரப் பத்திரத்தைக் காந்திஜி எடுத்துக் கொண்டார்: யாரோ ஒருவர் 'காலணு' என்று இரைந்து, ஏலத்தைத் துவங்கினுர்.

காந்திஜி சிரித்துக் கொண்டே, "அச்சா, இது ஏழைகள் அளித்த உபசாரப் பத்திரம். விலையும் காலணுவிலிருந்து ஆரம்பமாகிறது. நல்ல பெறுமானமுள்ள சரக்கு" என்ருர்.

உடனே ஒருவர், "அஞ்சு ரூபாய்" என்ருர்.

"பேஷ், ஏழைகளும் பணக்காரர்களும் இங்கு இருப்பதற்கு இதுவே சாட்சி. இதைக் கொள்முதல் செய்கிறவர் அதிருஷ்டசாலி—யாருக்குக் கிடைக்கப் போகிறதோ—கேளுங்கள்—அஞ்சு ரூபாய், ஒரு தரம்" என்ருர் காந்திஜி.

'பத்து, பன்னிரண்டு' என்று விலை உயர்ந்து கொண்டே போயிற்று. "ஒரு தரம், ஏழைகள் வாங்கும் பொருள் அல்ல இது. ஆனுல் இதன் விலை ஏழைகளுக்குச் சேரவேண்டிய பொருள். ஒரு தரம்—இரண்டு தரம்—அதிருஷ்டசாலி யாரோ கேளுங்கள். இரண்டு தரம் – பதினைந்து ரூபாய்" என்ருர் பாபு.

இருபத்தைந்து ரூபாய் வரையில் ஏறிற்று. அதற்குமேல் எவரும் கேட்கவில்லை. "மூன்று தரம் இருபத்தைந்து" என்று காந்திஜி சொல்லும்போது ஜனங்கள் கைதட்டி ஆரவாரித்தார்கள். "காலணு, கால்நூறு ரூபாயாகி விட்டது, பரவாயில்லை. நான் நல்ல பனியா (வியாபாரி)தான்" என்ருர் பாபு.

★

அந்நியர் போட்டி

(1935)

அடுத்தபடியாக டில்லி நகரசபை அளித்த வரவேற்புப் பத்திரத்தைக் காந்திஜி விலை கூற ஆரம்பித்தார். எடுத்த எடுப்பிலேயே யாரோ ஒருவர் பத்து ரூாய் என்று கேட்டார். ஜப்பானிய ஸ்தானீகர் காரியாலயத்தைச் சேர்ந்த ஒரு ஜப்பானியர் 'இருபது' என்றார். உடனே விறுவிறுப்பு ஏறிவிட்டது. முப்பது, நாற்பது என்று உயர்ந்து எண்பதில் வந்து நின்றது. மேலே எவரும் கேட்காமல் போகவே, காந்திஜி அந்த ஜப்பானியரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, "மேலே கேளுங்கள்" என்றார்.

"உங்களுடைய நகரசபையார் அளித்த பத்திரம் இது, வெளியாரான இவர் அடித்துக் கொண்டு போகப் பார்க்கிறார்" என்று ஜப்பானியரைச் சுட்டிக் காட்டினார் காந்திஜி.

மேடைமீதிருந்த அஜித் பிரசாத் சட்டென, "நூற்றுப் பதினொன்று" என்று கத்தினார். அவர் கத்திய வேகமும், முகத்தில் தெறித்த உறுதியும் பார்த்தபோது, எவ்வளவு விலை உயர்ந்தாலும் போட்டியிட்டு ஏலம் கேட்டு விடுவார் என்றே தோன்றிற்று. காந்திஜியோ 'மூன்று தரம்' என்று கூறி ஏலத்தை முடித்து விட்டார்.

மாவும் ரொட்டியும்

(1935)

'காந்திஜியின் சொந்த உபயோகத்துக்கு' என்று சீட்டு எழுதி யாரோ ஐந்து ராத்தல் கோதுமை மாவை அனுப்பி யிருந்தார்கள். அதையும் காந்திஜி டில்லிப் பொதுக் கூட்டத்தில் ஏலங்கூற ஆரம்பித்தார்.

"என்னால்கூடத் தூக்க முடியவில்லை. நல்ல சரக்கு, தின்னக் கூடிய சரக்கு" என்று அவர் ஆரம்பித்ததும் எல்லோருமே சிரித்து விட்டார்கள்.

'பத்து, பன்னிரண்டு' என்று விலை ஏறிக் கொண்டே போயிற்று.

மேடையிலிருந்த ஒருவர், "பைத்தியக்கார ஜனங்கள், இந்த மாவுக்குக்கூட இத்தனை விலை கொடுக்கத் துணிந்து விட்டார்களே" என்றார்.

அப்போது காந்திஜி அவரையே கூப்பிட்டு, "நீங்களே கேளுங்கள். நல்ல சரக்குக்கு ஏற்ற விலை இல்லையே இது" என்றார். அந்த நண்பரும் 'பதினைந்து' என்றார். மறுபடியும் உற்சாகம் கிளம்பிவிட்டது. விலை உயர்ந்து இருபதில் போய் நின்றது.

"இவ்வளவுதானா? வேறு யாரும் கேட்கவில்லையா? என்னுடைய மதிப்பில் பாதி விலைதான் இது. இந்த விலைக்கு விற்றால் எனக்கு நஷ்டந்தான், ஐயா, கேளுங்கள்—மேலே" என்றார் காந்திஜி.

ஸ்ரீமதி பிரிஜ்லால் நேரு உடனே, "நாற்பது ரூபாய்" என்றார். காந்திஜி ஏலத்தை முடித்ததும் ஸ்ரீமதி நேரு, "இந்த மாவை என்ன செய்யட்டும்?" என்று காந்திஜியைக் கேட்டாள்.

பக்கத்திலிருந்த பிர்லா, "ரொட்டி செய்து பாபுவுக்கு அனுப்புங்கள். அவருக்காக அனுப்பிய மாவுதானே?" என்றார்.

"முடியாது. காந்திஜி ரொட்டியைச் சாப்பிட்டால், மாவு அனுப்பியவரும் சந்தோஷப்படுவார். நானும் திருப்திப்படுவேன். ஆனால் இவர் அசல் பனியா ஆச்சே! ரொட்டிகளை ஏலம் கூற ஆரம்பித்து விடுவார். ஒரே சாமானுக்கு இரட்டைப் படித்தனம் கிடைத்துவிடும்" என்றார் ஸ்ரீமதி நேரு.

மேடையிலிருந்த அனைவரும் சிரித்தார்கள்.

கட்டுப்பாடு

(1935)

பீஹாரில் பூகம்பத்தால் சேதமடைந்த பகுதியில் ராஜேந்திர பாபுவின் தலைமையில் காங்கிரஸ் கஷ்ட நிவாரண வேலை செய்து கொண்டிருந்தது. நிவாரணக் கமிட்டியின் பொக்கிஷதாராக ஜே. ஸி. குமரப்பா இருந்தார். காந்திஜி பூகம்பத்தில் சேதமடைந்த பிரதேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது ஏற்படும் செலவை நிவாரணக் கமிட்டி ஏற்றுக்கொள்வதாக இருந்தது. காந்திஜியின் கோஷ்டியின் ஆகார வசதிகள், வாகன வசதிகள் இவற்றைப் பார்த்ததுமே குமரப்பா திகைத்துப் போனார். மிகவும்

கண்டிப்புடனும் சிக்கனமாகவும் குமரப்பா பணச் செலவு செய்து வந்தார். தொண்டர்களுக்கு மிகவும் எளிய உணவே அநுமதித்தார். அத்தியாவசியமாக இருந்தால்தான் மோட்டாரில் பிரயாணம் செய்ய வேண்டும் என்று கூறினார். இன்ன காரியத்துக்காக இத்தனை மைல்கள் ஓடின, இவ்வளவு காலன் பெட்ரோல் செலவாயிற்று என்று நுணுக்கமாகவும் விவரமாகவும் அவர் கணக்குகளை எழுதி வைத்தார்.

காந்திஜி கோஷ்டியினரின் முதல் நாள் செலவினத்தைப் பார்த்ததுமே, குமரப்பா பிரயாண காலத்துக்கு ஆகும் 'பட்ஜெட்டை'ப் போட்டுத் தருமாறு மகாதேவ தேசாயிடம் கேட்டார். பட்டியலில் காந்திஜியின் கோஷ்டியிலுள்ளவர்களுக்குப் பால், பழம் என்று விசேஷ ஆகாரங்கள் இருப்பதைக் கண்டதும், இந்த மாதிரிச் செலவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நிராகரித்து விட்டார்.

விஷயம் காந்திஜியின் காதுகளுக்கு எட்டியபோது அவர் குமரப்பாவைக் கூப்பிட்டு விசாரித்தார். "நான் உங்களுக்கு உதவி செய்யவே இங்கு சுற்றுப் பிரயாணம் செய்கிறேன். என்னுடைய செலவுகளை நிவாரணக் கமிட்டி ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. இப்போது மறுத்தால் என்ன செய்வது?" என்று கேட்டார்.

குமரப்பா சிறிது தயங்கினார். பிறகு அவர் சொன்னார்: "உங்களுடைய செலவைக் கொடுக்க நான் மறுக்கவில்லை. இங்கு ஆயிரக்கணக்கான தொண்டர்களை வைத்துக்கொண்டு வேலை வாங்குகிறேன். அவர்களுக்கு அத்தியாவசியமான வசதிகளை மட்டுமே தருகிறேன். மிகவும் கண்டிப்பாகவும், கடுமையாகவும் அவர்களிடம் வேலை வாங்குகிறேன். இப்போது, என்னுடைய கட்டுப்பாட்டை மீறி உங்களுடைய கோஷ்டியாருக்கு மட்டும் விசேஷ வசதி யளித்தால் ஒரு சில தொண்டர்களுடைய மனம் பேதலிக்கக்கூடும். சலனம் ஏற்பட்ட பிறகு சமாளிக்க முயலுவது புத்திசாலித்தனமல்ல. மேலும், இந்தச் சமயத்தில் நீங்களுங்கூட மிகவும் சிக்கனமான முறையில் பிரயாணம் செய்யவேண்டும் என்றே நான் விரும்புகிறேன். உங்களுடைய கோஷ்டியினர் கொடுத்த பட்டியலிலுள்ள செலவினங்கள் அத்தியாவசியமானவை என்று நான் கருதவில்லை. தர்மசங்கடமான நிலைமை

யைச் சிருஷ்டித்துக் கொண்டு தவிப்பதைவிட ஒரேயடியாக நிராகரிப்பது மேல் என்று தோன்றிற்று.''

காந்திஜி அதை ஏற்றுக்கொண்டார். மகாதேவ தேசாயைக் கூப்பிட்டு, பிரயாணச் செலவை நிவாரணக் கமிட்டியிடம் கோர வேண்டாம் என்று கூறிவிட்டார்.

உடலுழைப்பு
(1935)

அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் சங்கம் ஆரம்பமான புதிதில் காந்திஜி மகன்வாடியில் தங்கியிருந்தார். சங்கத்தின் தலைவர் காந்திஜி, குமரப்பா காரியதரிசி. சங்க அங்கத்தினர் ஒவ்வொருவரும் உடலுழைப்பில் நம்பிக்கையுள்ளவர்களாகவும் கிராமங்களில் உற்பத்தியாகும் பொருள்களையே உபயோகிப்பவர்களாகவும் இருக்கவேண்டும் என்பது சங்க அமைப்பு விதிகளில் ஒன்று. மகன்வாடியிலிருந்த ஒவ்வொருவரும் தினசரிவேலைகளைப் பங்கிட்டுக்கொண்டு, முறை வைத்து வேலை செய்து வந்தார்கள். ஒருநாள் பாத்திரங்களைத் தேய்க்கும் வேலை முறை காந்திஜிக்கும் குமரப்பாவுக்கும் கிடைத்தது. குமரப்பா பலவருஷங்கள் அமெரிக்காவில் வாழ்ந்த 'நாசூக்' மனிதர். முரட்டு வேலையைச் செய்தறியாதவர். இருந்தாலும் காந்திஜியுடன் அவரும் தேங்காய் நாரைச் சுருட்டி வைத்துக்கொண்டு பாத்திரங்களைத் தேய்க்கலானார். கையிலும் காலிலும் கரி பட்டதுதான் மிச்சமே தவிரப் பாத்திரங்களிலிருந்த கரி சுலபமாக விலகவில்லை. அந்தச் சமயம் கஸ்தூரிபா அங்கு வந்து சேர்ந்தார். வியர்வை கொட்ட, கரி பூசிக்கொண்டு நிற்கும் காந்திஜியையும் குமரப்பாவையும் பார்க்கும்போது அவருக்குச் சிரிப்பும் ஆத்திரமுந்தான் வந்தன.

'' இது என்ன வேலை? உங்களுக்குச் செய்யத் தெரியுமா ? முறை போட்டீர்களே என்று நானும் சும்மா இருந்தேன்'' என்று கடிந்துகொண்டு காந்திஜியின் கையில் இருந்த சுருணையைத் தட்டிவிட்டார்.

காந்திஜி சிரித்துக்கொண்டே, ''குமரப்பா, பார்த்தீர்களா, இவளுடைய அதிகாரத்தை? நீங்கள்தான் பாக்கியசாலி. இந்த மாதிரி அமல் நடத்த உங்களுக்கு ஒரு மனைவியில்லை. ஆனாலும்

இதில் ஒரு லாபமும் இருக்கிறது. என்னுடைய பகுதி வேலையைச் செய்ய ஓர் ஆள் கிடைத்துவிட்டது. நீங்கள் என்ன செய்வீர்கள்? பெண்களுடைய அதிகார எல்லையில் நம்முடைய வேலை அட்ட வணைத் திட்டம் பலிக்காது. முரண்டிக்கொண்டால் அமைதி யின்மைதான் ஏற்படும்'' என்றார். உடனே கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டார்.

அன்று முதல் வேலை அட்டவணையே மாற்றியமைக்கப் பட்டது. குமரப்பா போன்றவர்களுக்குச் சமையலறையிலிருந்து விடுதலை கிடைத்தது

வேப்பிலைச் சட்டினி

(1935)

இயற்கை வைத்தியத்தில் நம்பிக்கை இருப்பதுபோல, காந்தி ஜிக்கு ஆகார வகைகளில் பச்சை உணவிலும் நம்பிக்கை அதிகம். பல வருஷங்களாக அவர் பச்சைக் காய்கறிஉணவு, உப்பில்லாமல் வேகவைத்த காய்கறிகள், கீரை வகைகள் என்று பல பலவித மான ஆகாரங்களைச் சாப்பிட்டுப் பரீட்சித்து வந்தார். அகில இந்தி யக் கிராமக் கைத்தொழில் சங்கம் ஆரம்பமான காலத்தில் அவர் மகன்வாடியில் தங்கியிருந்தார். அங்கு வேப்ப மரங்கள் ஏராள மாக இருந்தன. காந்திஜியின் ஆராய்ச்சி மோகம் வேப்பங் கொழுந்தின் மீது சென்றது. வேப்பங் கொழுந்தைப் பச்சை யாகவும், வேக வைத்தும், சட்டினிசெய்தும் சாப்பிடலானார். எல்லா வற்றிலும் வேப்பிலைச் சட்டினி சுவையுள்ளதாகத் தோன்றியதால், தினசரி உணவில் அது இடம் பெற்று, எல்லாரும் சுவைக்க வேண்டியதாயிற்று. எல்லாரும் கண்களை மூடிக்கொண்டு சட்டினியை விழுங்கினார்கள்.

ஒரு சமயம் சர்தார் படேல் ஆசிரமத்தில் சாப்பிட நேர்ந்தது. காந்திஜியின் இருபுறங்களிலும் படேலும் குமரப்பாவும் உட்கார்ந் தார்கள். சாப்பிட உட்கார்ந்ததுமே குமரப்பா, சட்டினியை எடுத்து விழுங்கிவிட்டார். அதைக் கவனித்த பாபு, "இந்தாருங் கள், இன்னும் கொஞ்சம்'' என்று இலையில் சட்டினியைப் போட்டார். பாவம், குமரப்பா என்ன செய்வார்? இலையிலிருப் பதைச் சாப்பிடவேண்டுமே என்று முதலில் எடுத்து விழுங்கினார்.

அதனால் இரட்டைப் படித்தனம் கிடைத்துவிட்டது. குமரப்பாவின் முகமாறுதலைக் கவனித்த படேல், "குமரப்பா, இத்தனை காலம் பாபுஜி ஆட்டுப்பாலைத்தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது ஆட்டின் ஆகாரத்தையே சாப்பிட ஆரம்பித்து விட்டார்களே!" என்றார்.

காந்திஜியுள்பட எல்லோருமே சிரித்தார்கள்.

வைத்தியர்
(1936)

ஒரு சமயம் குமரப்பா இரத்தக் கொதிப்பினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். டாக்டர்கள் ஓய்வுதான் அவசியம் என்றார் கள். இரண்டு மூன்று டாக்டர்களைக் கலந்து ஆலோசித்த பிறகு, குமரப்பா ஓய்வு எடுத்துக்கொள்ள நிச்சயித்தார். ஒரு நாள் காந்திஜி, "குமரப்பா, நீங்கள் எப்படி ஓய்வு எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள்! சுதந்தரம் கிடைக்கும் மட்டும் உங்களுக்கு எங்கிருந் தாலும் ஓய்வு கிடைக்கப் போவதில்லை. நான் ஒரு டாக்டர். உங்களுடைய வியாதிக்கு நானே வைத்தியம் செய்கிறேன்" என்றார்.

குமரப்பாவும் இசைந்தார். அன்று மிகவும் சிக்கலான ஒரு கிராமப் பொருளாதாரப் பிரச்னையைப் பற்றிக் காந்திஜி யுடன் கலந்தாலோசிக்க ஒரு நண்பர் வந்திருந்தார். காந்திஜி அவரைக் குமரப்பாவிடம் அனுப்பி வைத்தார். அவர்கள் பேசு வதற்கு முன்பும், பேசிய பிறகும் குமரப்பாவின் உடல் நிலையைப் பரிசோதிக்கும்படி டாக்டர் சுசீலா நையாருக்குக் கட்டளையிட்டார். நண்பருடன் பேசிய பிறகு, குமரப்பாவுக்கு இரத்தக் கொதிப்பு அதிகமாயிற்று.

மறுநாள் காந்திஜி, ஒரு கரும்பலகையில் வெள்ளைக்கோடு கிழித்து, அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும்படி குமரப்பாவிடம் சொன்னார். சில நிமிஷங்களுக்குப் பிறகு குமரப்பாவின் தேக நிலைமையைப் பரிசோதித்தபோது அவருக்கு இரத்தக் கொதிப்பு அதிகரித்திருந்தது.

மூன்றாம் நாள், ஆசிரமத்திலுள்ள ஒரு வாலிபருடன் குமரப்பாவைச் சில கஜ தூரம் ஓடும்படி காந்திஜி சொன்னார்.

ஓட்டத்துக்குப் பிறகு அவருடைய தேக நிலையைப் பரீட்சித்த போது விசேஷ மாறுதல் ஏதும் தெரியவில்லை.

இவற்றிலிருந்து, குமரப்பாவின் இரத்தக் கொதிப்புக்கு மன அலுப்பும் தீவிர சிந்தனையும் தான் காரணமே தவிர, பலஹீனம் காரணமல்ல என்ற முடிவுக்கு வந்தார் காந்திஜி. அவர் சொன்னார்: "குமரப்பா, நீங்கள் சதா சிந்தனை செய்யக்கூடாது. இப்போது மூளைக்கு ஓய்வு அவசியம். காலையிலும் மாலையிலும் ஒரு மணி நேரமாவது உடலுழைத்து வேலை செய்யுங்கள். பத்தியமான உணவு உட்கொள்ளுங்கள். உடம்பு தேறிவிடும்."

குமரப்பா அந்தச் சிகிச்சை முறையை ஏற்றுக் கொண்டார். அதிசீக்கிரம் குணமடைந்தார்.

தீண்டாமையும் தாடியும்

(1936)

சேவாக்கிராமத்தில் குடியேறிய புதிதில் ஆசிரமத்தைச் சேர்ந்த வைத்தியசாலையில் காந்திஜி தினசரி ஒரு மணி நேரம் வேலை செய்து வந்தார். அவரே நோயாளிகளைப் பரிசோதித்து மருந்து கொடுப்பது வழக்கம். ஒரு நாள் காலை நடுத்தர வயதுள்ள ஒரு மாதும் அவளுடைய பெண்ணும் வைத்தியசாலைக்கு வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் காந்திஜி சிரித்துக்கொண்டே, "என்ன நோய்?" என்று கேட்டார். மருந்து கொடுத்த பிறகு, "ஏன் அம்மா, நான் இப்படியே தாடி வளர்த்துக் கொள்ளட்டுமா? நீயே சொல்" என்று கேட்டார்.

அந்த மாது உள்ளூர் நாவிதனுடைய மனைவி. சேவாக் கிராமத்துக்குக் காந்திஜி வந்த புதிதில் அந்த நாவிதன் தினந்தோறும் ஆசிரமத்துக்கு வந்து காந்திஜிக்கு ஒரு கும்பிடு போடுவான். காந்திஜிக்கும் மற்றவர்களுக்கும் அவன் க்ஷவரம் செய்வதுண்டு. சில தினங்களில் கோவிந்தன் என்ற ஹரிஜன வாலிபன் ஆசிரமத்திற்கு வந்தான். அவனுக்கும் நாவிதன் க்ஷவரம் செய்து கொண்டுதானிருந்தான். ஒருநாள் கோவிந்தனுடைய சாதியை அந்த நாவிதன் தெரிந்துகொள்ள நேரிட்டது. அதன் பிறகு அவன் ஆசிரமத்துக்கு வருவதில்லை. பக்கத்திலுள்ள கிராமத்திலும் சிறிது பரபரப்பு ஏற்பட்டுவிட்டது. நாவிதனுக்கு ஆள் அனுப்பியும்

அவன் வரவில்லை. ஒருநாள் கிராம மணியகாரர் காந்திஜியிடம் வந்தார். கிராமக் கட்டுப்பாட்டை உத்தேசித்து அந்த நாவிதன் ஆசிரமத்துக்கு வரவில்லை என்றும், விரும்பினால் காந்திஜிக்கு மட்டும் அவன் சேவை செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

"கோவிந்தனும் நானும் ஆண்டவனுடைய குழந்தைகள்தாம். ஆசிரமத்தில் அவனுடன் எல்லாரும் சமமாகப் பழகுகிறார்கள். எங்களில் ஒருவர் தாடியும் மீசையும் வைத்துக்கொண்டு காட்டுமிராண்டியாக இருக்கும்போது மற்றவர்கள் முக க்ஷவரம் செய்து கொண்டு 'டீக்'காக இருக்க முடியுமா?" என்று கேட்டார் பாபு.

மணியகாரர் பதில் பேசாமலே எழுந்து சென்றார். அதன் பிறகு இன்றுதான் நாவிதனுடைய குடும்பத்தாரைக் காந்திஜி சந்தித்தார்.

அந்த மாது சொன்னாள்; "பாபுஜி உத்தரவு கொடுத்தால் இன்றுகூட என்னுடைய புருஷன் இங்கு வந்து சேவை செய்யத் தயார்தான்" என்று.

"அவன் கோவிந்தனுக்கும் சேவை செய்யத் தயார்தானா?" என்று கேட்டார் பாபு.

அந்த மாது புன்சிரிப்புச் சிரித்தாள். பதில் சொல்லாமலே விடை பெற்றுக் கொண்டாள்.

மேலும் சில தினங்கள் சென்றன. காந்திஜியும் தாடி வளர்க்கலானார். இதன் நடுவே, கிராம நாவிதனைச் சமூக பகிஷ்காரம் செய்ய வேண்டும் என்று மணியகாரர் ஆரவாரித்துக் கொண்டிருந்தார். என்றாவது ஒருநாள், கிராம நாவிதன் மனம் மாறி ஆசிரமத்திலுள்ளவர்களுக்கு ஊழியம் செய்யச் சென்று விடுவான் என்ற பயம் அவருக்கு இருந்து கொண்டிருந்தது. நாவிதனோ கிராமத்தாருக்கு அடிபணிந்து போகவும் முடியவில்லை; எதிர்த்து நிற்கவும் முடியவில்லை. காந்திஜியிடம் வந்து நிலைமையை எடுத்துச் சொல்லும் தைரியமும் அவனுக்குக் கிடையாது. பராபரியாக இந்தச் செய்தி காந்திஜியின் காதில் விழுந்தது. ஆனாலும் அவர் கிராமவாசிகளைக் கூப்பிட்டு விசாரிக்கவில்லை.

ஒருநாள் மணியகாரர் காந்திஜியிடம் வந்தார். கிராமத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியைப் பற்றிக் காந்திஜியின் அபிப்பிராயம் தெரிந்துகொள்ளவே அவர் வந்தார். அவரைப் பார்த்ததுமே

பாபு, "படேல்ஜி,* நான் தாடி வளர்க்க வேண்டியதுதானு?" என்ருர்.

"அவன் இங்கு வருவதற்குத் தயாராகவே இருக்கிருன். நீங்கள் விரும்பினுல் அனுப்புகிறேன்" என்ருர் மணியகாரர்.

"நீங்கள் அனுப்புவீர்கள் என்று தெரியும். ஆனுல் அவன் கோவிந்தனுக்கு க்ஷவரம் செய்வானு? உங்களை ஒரு வீட்டில் விருந்துக்கு அழைப்பதாக வைத்துக் கொள்வோம். அங்கு உங்களுடைய மகன் வரக்கூடாது என்று தடை செய்துவிட்டால் நீங்கள் மட்டும் போக மனம் வருமா?" என்று கேட்டார் பாபு.

மணியகாரர் பதில் சொல்லவில்லை.

அப்போது உடனிருந்த சேத் ஜம்னுலால் பஜாஜ் சொன்னுர்: "இவரை எனக்குப் பல வருஷங்களாகத் தெரியும் பாபு. இவருடன் பேசிப் பலனில்லை. ஹரிஜனங்களுடன் சமமாகப் பழகினுலும் இவர் நேரடியாகச் சொர்க்கத்துக்குப் போய்விடலாம் என்று யாராவது உறுதி கூறினுல் கோவிந்தனைக் கூடத் தொடுவார். இவர் செய்யும் வேறு பாபங்களைப்பற்றியோ, அவற்றுக்கான பலனைப்பற்றியோ இவருக்குக் கவலையில்லை. பரம்பரையாக வந்த தீண்டாமையை மீறி நரகம் புக இவர் தயாராக இல்லை. மேலும் சொர்க்கப் பிராப்தியைப்பற்றி நீங்களும் நானும் உறுதி கூறினுலும் இவர் நம்பமாட்டார். மதத்தை நம்பி வாழும் வேறு மனிதர்கள்தாம் உறுதி கூற வேண்டும்."

உடனிருந்தவர்கள் கொல்லென்று சிரித்தார்கள்.

மணியகாரரோ, "உங்களைப் போன்ற மகாத்மாக்கள் எதையும் செய்யலாம், சாத்திரமும் அநுமதிக்கும். ஆனுல் எங்களைப் போன்ற பாமரர்கள் என்ன செய்ய முடியும்?" என்று கூறி விடை பெற்றுக் கொண்டார்.

சில தினங்களுக்குப் பிறகு மணியகாரர் ஆசிரமத்துக்கு மீண்டும் வந்தார். காந்திஜி தாடியைத் தடவிக்கொண்டே, "உங்களுடைய நாவிதனுக்கு மாதம் ஒரு ரூபாய் நஷ்டம், எனக்குத் தாடி லாபம்" என்று சிரித்துக்கொண்டே வரவேற்ருர்.

"நான் என்ன செய்வது, மகாத்மாஜி? கோவிந்தனை உங்களுடைய பிள்ளையைப்போல வளர்க்கிறீர்கள் என்பதை நான்

---

* வட இந்தியாவில் கிராம அதிகாரிகளைப் படேல் என்று குறிப்பிடுவது வழக்கம்.

தெரிந்து கொண்டேன். இங்கே அசுத்தத்துக்கு இடம் இல்லை. அவனுக்கு க்ஷவரம் செய்த கத்தியினால் நானும் க்ஷவரம் செய்து கொள்ளத் தயார். ஆனால்......" என்று இழுத்தார்.

"என்ன ஆனால் என்று இழுக்கிறீர்கள்? உங்களுக்குப் பயந்து கொண்டுதானே அவன் இந்தப் பக்கமே தலைகாட்டவில்லை?" என்று கேட்டார் பாபு.

"இந்த அபவாதத்துக்கு நான் என்ன செய்வது? பாபுஜி, ஊரில் கிளர்ச்சி நடந்தது உண்மைதான். சமூக பகிஷ்காரம் செய்து விடுவோமோ என்று அவன் பயந்தான். ஆசிரமத்துக்கு வராமல் அவன் ஒதுங்கிவிட்டால் அவனுக்கு எவ்விதத் தீங்கும் செய்வதில்லை என்று கிராம மக்களின் முன்னிலையில் சொல்லி விட்டேன். அவனுக்கு ஆசிரம வருமானத்தை இழந்துவிடவும் சம்மதம் இல்லை; எங்களிடமிருக்கும் பயமும் தெளியவில்லை. நான் வாக்குறுதி கொடுத்ததும், அவனுடைய பயம் தெளிந்து 'கொண்டிக் கட்சி' பேச ஆரம்பித்து விட்டான். என்னுடைய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவே இப்போது அவன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் போலத் தோன்றுகிறது."

"இது என்ன புதுவிஷயம்?" என்று கேட்டார் பாபு ஆச்சரியத்துடன்.

"நான் அவனுடைய வீட்டில் விருந்துக்கு வருவதாக இருந்தால் அவனுக்குத் தைரியம் வந்து விடுமாம். ஆசிரமத்துக்கு வந்து சேவை செய்வானாம். பாபுஜி, எனக்குக் கிட்டத்தட்ட எண்பது வயதாகிறது. பிறர் கையினால் ஒரு தம்ளர் தேயிலைப் பானங்கூட நான் வாங்கிச் சாப்பிட்டதில்லை. அவனுக்கு நான் எவ்வளவோ தைரியமான வார்த்தைகளைச் சொல்லி விட்டேன்."

"உங்களை எதற்காக விருந்துக்கு அழைக்கிறான்?"

"என்னிடம் அவனுக்குப் பயம் இல்லையாம். இனத்தார்கள் அவனைச் சாதிப் பிரஷ்டம் செய்து விடுவார்களோ என்ற பயந்தானாம். சமபந்திப் போசனம்செய்து நானே சாதி இழந்துவிட்டால் ஊரில் தீண்டாமைப் பேச்சு எழாமலே அடிபட்டுப் போய் விடும். என்னைச் சமூக பகிஷ்காரம் செய்து விடுவதாகச் சொல்லும் தைரியம் இந்தக் கிராமத்தில் எவருக்கும் கிடையாது. பாபு, உங்களுடைய ஹரிஜன சேவையில் சமபந்திப் போசனத்தைக்கூட வற்புறுத்துகிறீர்களா?"

"கிடையவே கிடையாது. சாதித் துவேஷத்தை ஒழிக்க வேண்டும் என்பதே என்னுடைய நோக்கம். எனக்கு எல்லாருமே சமம்தான். எங்களுடைய கோவிந்தன் சமையல் செய்கிறான். ஆனால் ஹரிஜன சேவைக்கும் சமபந்திப் போசனத்துக்கும் சம்பந்தம் இல்லை'' என்றார் பாபு.

மணியகாரருடைய பயம் தெளிந்துவிட்டது. அவர் அடிக்கடி ஆசிரமத்துக்கு வரலானார். கோவிந்தனுடைய சுசிருசியான பழக்க வழக்கங்கள் அவருக்குப் பிடித்தன. ஆனால் கிராம நாவிதனோ ஆசிரமத்தின் பக்கமே வருவதில்லை.

மேலும் சில தினங்கள் சென்றன. ஒருநாள் தாமே க்ஷவரம் செய்துகொள்ளும் நோக்கத்துடன் காந்திஜி, கண்ணாடி, கத்தரி, கத்தி, சீப்பு முதலிய சாமான்களை எடுத்துக்கொண்டு வராந்தாவில் உட்கார்ந்தார். அந்தச் சமயத்தில் காந்திஜியிடம் ஓர் ஊழியர் வந்து நின்றார். அவருக்குப் பின்னால் அடக்கமாக ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

"பாபு, அந்த ஆயுதங்களை இப்படித் தள்ளுங்கள். என்னுடன் வந்திருக்கும் பீமன் உங்களுக்கு முடி வெட்டிவிடுவான்'' என்றார் ஊழியர்.

காந்திஜி நிமிர்ந்து பார்த்தபோது பீமன் ஒரு கும்பிடு போட்டான். "இவனுக்கு க்ஷவரத்தொழில் தெரியுமா?'' என்றார் காந்திஜி.

"சாதியில் அவன் நாவிதன்தான்'' என்றார் ஊழியர்.

பீமன், கத்தி, கத்தரி முதலியவற்றைச் சுத்தம் செய்துகொண்டு காந்திஜிக்கு முடிவெட்டலானான். பாதி வெட்டிக் கொண்டிருக்கும் போதே, "பீமா, உனக்கு ஹரிஜனங்களைத் தொடுவதில் ஆக்ஷேபணை கிடையாதே?'' என்று கேட்டார் பாபு.

பீமன் சட்டெனப் பதில் கூறவில்லை. தயங்கிக்கொண்டே, "ஹரிஜனங்களிடம் எனக்கு வெறுப்புக் கிடையாது'' என்றான்.

"அது சரி, அவர்களுக்கும் க்ஷவரம் செய்வாயா என்று தான் கேட்கிறேன்'' என்றார் பாபு.

அவன் பதில் சொல்லவில்லை.

"நீங்கள் தீர விசாரித்து இவனை அழைத்து வந்திருக்கிறீர்கள் என்றல்லவா நினைத்தேன்?'' என்றார் காந்திஜி வருத்தத்துடன்.

அந்த ஊழியரும் மனம் வருந்தினார். "பாபு, மன்னிக்க வேண்டும். நான் சிறிது பிசகிவிட்டேன். தாடியும் மீசையுமான

உங்களுடைய கோலம்தான் என் கண்களை உறுத்திற்று. பீமன் கதர் அணியும் வழக்கமுள்ளவன். அதனால் அவனிடம் தீண்டாமையைப் பற்றிப் பேசாமல் அவனை அழைத்து வந்தேன்'' என்றார் அந்த ஊழியர்.

“இப்போது பீமனுடைய சம்மதத்தைப் பெறவேண்டும், அல்லது இப்படியே அரைகுறையாக விட்டுவிட்டு எழுந்துபோய் விடும்படிச் சொல்லவேண்டும். மனசில் உறுத்தும்போது, வெளியில் அழகு எதற்கு?'' என்றார் பாபு.

பீமன் கத்தியைக் கீழே வைத்தான். எழுந்து நின்று இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, “பாபு, நான் சகஜமாக ஹரிஜனங்களுக்குச் சேவிக்கிறதில்லை. இருந்தாலும் இன்று முதல் எல்லாருமே எனக்குச் சமம் என்று சத்தியம் செய்கிறேன்'' என்றான்.

காந்திஜி அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார். பீமன் கத்தியை எடுத்துக்கொண்டு வேலையில் ஈடுபட்டான். க்ஷவரம் முடிந்ததும் அவன் சொன்னான் : “பாபு, நான் கொடிப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றேன். என்னுடைய கடுங்காவல் தண்டனையை க்ஷவரம் செய்தே கழித்தேன். சிறையில் சாதி வித்தியாசமில்லாமல் எல்லோருடனும் பழகினேன். என்னுடைய மனத்தில் பேதமில்லாவிட்டாலும், ஊராருக்குப் பயப்பட வேண்டியிருக்கிறதே! சமூக பகிஷ்காரம் என்று மிரட்டினால் சாதி போய் விடுமே என்ற பயமில்லை; வயிறு காயுமே என்றல்லவா பயப்பட வேண்டியிருக்கிறது?''

பசியா வரம்

(1936)

ஓய்வுக்காகக் காந்திஜி நந்திமலையில் தங்கியிருந்தார். ஒரு நாள் ஸர். ஸி. வி. ராமன் காந்திஜியிடம் வந்தபோது தம்முடைய நண்பரான பேராசிரியர் ரஹ்மை அறிமுகம் செய்து வைத்தார். “சுவிட்ஜர்லாந்தைச் சேர்ந்த ரஹ்ம் பிராணி நூல் சாஸ்திரி. உணவும் நீரும் இன்றிப் பன்னிரண்டு வருஷகாலம் ஜீவித்திருக்கக்கூடிய ஒரு பூச்சியைப் பற்றி இப்போது ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறார்'' என்றார் ஸர். ராமன்.

"அது எவ்வளவுகாலம் ஜீவித்திருக்கிறது?" என்று கேட்டார் காந்திஜி.

"அதைத்தான் தொடர்ந்து ஆராய்ந்துகொண்டிருக்கிறேன்" என்றார் ரஹ்ம்.

"அச்சா, அந்த ரகசியத்தைக் கண்டு பிடித்ததும் என்னிடம் சொல்லுங்கள். எங்களுடைய நாட்டுக்கு மிகவும் அவசியமான ஆராய்ச்சி இது" என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டே சொன்னார் காந்திஜி.

ஆசிரியர் ரஹ்ம் பதில் சொல்லாமலிருந்தார்.

"எங்களுடைய நாட்டின் பொருளாதாரத்துக்கு—கிராம வாழ்க்கைக்கு—மிகவும் அவசியந்தான் இது" என்றார் காந்திஜி.

பிறகுதான் இந்த நாட்டிலுள்ள வறுமை நிலையைப்பற்றி ஆசிரியர் ரஹ்ம் ஸர். ராமனிடம் கேட்டுத் தெரிந்துகொண்டார்.

கொடுக்கல் வாங்கல்

(1936)

ஒரு நாள் காந்திஜியிடம் ஆசிகோரிப் புதுத் தம்பதிகள் வந்தார்கள். அப்போது காந்திஜி பங்களூரில் தங்கியிருந்தார். மாப்பிள்ளையும் பெண்ணும் காந்திஜியை வணங்கினார்கள். "புது வாழ்வு பெறப் போகும் நீங்கள் இந்தக் கிழவனுக்கு என்ன கொண்டுவந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார் பாபு.

"காணிக்கையாகக் கொஞ்சம் புஷ்பம் கொண்டு வந்திருக்கிறோம்" என்றார் மாப்பிள்ளை.

"புஷ்பத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது? வாழ்க்கையைச் சுவைக்கப் போகும் நீங்கள் புஷ்பத்தைமட்டும் கொடுத்து என்னை ஏமாற்றப் பார்க்கலாமா?" என்றார் பாபு.

"கொஞ்சம் திராக்ஷைப் பழங்களும் இருக்கின்றன" என்றார் மாப்பிள்ளை.

"திராக்ஷையா? அது புளிக்குமே! வாழ்வின் இனிப்பை அநுபவிக்கப் போகும் உங்களுக்குத்தான் புளிப்பும் வேண்டும். அப்போதுதான் இனிப்பை நன்றாக அநுபவிக்க முடியும்" என்றார் பாபு.

சூழ இருந்தவர்கள் கொல்லென்று சிரித்துவிட்டார்கள். காந்திஜி சொன்னார்: "எனக்குப் பூவும் வேண்டாம், பழமும் வேண்டாம். ஹரிஜன நிதிக்கு ஏதாவது கொடுங்கள். புருஷனும் மனைவியும் கலந்து ஆலோசித்து முடிவு செய்யுங்கள்."

உடனிருந்த பிரம்மசாரி ராமசந்திரா, "பாபு, அவர்களே ஹரிஜனங்களாயிற்றே" என்று குறுக்கிட்டார்.

"ஓ அப்படியா! ஆனால் எனக்கு நீங்கள் ஏதும் தரவேண்டாம். நான்தான் உங்களுக்குத் தரவேண்டும்" என்றார் காந்திஜி.

"உங்களுடைய ஆசிதான் வேண்டும்" என்றார் மாப்பிள்ளை.

"அச்சா, அது இருக்கட்டும், ஹிந்துக்களுடன் கலந்து வாழ்வதில் சந்தோஷமாக இருக்கிறீர்களா?"

"நாங்கள் சந்தோஷமாகவே வாழ்கிறோம். ஹிந்து தர்மத்தில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது."

காந்திஜி புன்முறுவல் பூத்தார். "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"உங்களுடைய பாதத்தைத் தொட்டு வணங்க வேண்டும்' உங்களுடைய ஆசிதான் வேண்டும்."

இருவரும் காந்திஜியை மீண்டும் வணங்கினார்கள். காந்திஜி இருவர் முதுகிலும் தட்டிக் கொடுத்து, "நீண்ட காலம் சுகமாக வாழுங்கள்" என்று ஆசி கூறினார்.

அந்தத் தம்பதிகள் காலஞ்சென்ற ஹரிஜனப் பிரமுகர் ஸ்ரீநிவாசனுடைய பேரனும் அவருடைய மனைவியுந்தான்.

சகோதரத்துவம்
(1936)

காந்திஜியைக் காண வந்திருந்தபோது, டாக்டர் ரஹ்ம், "உலகிலே மதச் சண்டையும், சாதிச் சண்டையும் எங்கு பார்த்தாலும் இருக்கின்றனவே, அரசியல் பேதங்களாலும் நாட்டுக்கு நாடு பகை மூளுகிறதே, இவற்றைத் தவிர்க்க வழியில்லையா?" என்று கேட்டார்.

"முடியும். கிறிஸ்துவர்கள் மனம் வைத்தால் உலக சமாதானம் சாத்தியமாகும்" என்றார் பாபு.

"அது எப்படி?" என்று கேட்டார் டாக்டர் ரஹீம்.

"உலகிலேயே உயர்ந்தது கிறிஸ்துவ சமயம் என்று கிறிஸ்துவர்கள் எண்ணுகிறார்கள். பிற மதத்தவர்களுடன் கலந்து பழகும் மனப்பான்மையோ, பிற சமயங்களை மதித்து நடப்பதோ அவர்களிடம் காண்பது அரிது. உலகம் முழுவதிலும் கிறிஸ்துவ மதம் பரவி, மற்றச் சமயங்கள் அழிந்துவிட வேண்டும் என்றே அவர்கள் ஆசைப்படுகிறார்கள். சென்ற முப்பதாண்டுகளாக என்னுடன் பழகும் ஒரு கிறிஸ்துவ நண்பர், ஹிந்து சமயத்தை இழித்துக் கூறியும், கிறிஸ்துவத் தத்துவங்களை எடுத்துக் கூறியும் என்னைக் கிறிஸ்துவனாக்க முயன்றுகொண்டிருக்கிறார். இப்போது, மதப் பிரசாரம் செய்யும் கிறிஸ்துவர்களோ, கிறிஸ்து மதத்தைச் சேர்ந்த மேனாட்டாரோ, ஏசுநாதருடைய போதனையைப் புறக்கணித்து விட்டார்கள். அவருடைய போதனையைத் திரித்துக் கூறுகிறார்கள் என்றே நான் சொல்லுவேன். ஏசுவின் அன்பு மார்க்கத்தில் ஏகாதிபத்திய வெறிக்கும், ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கும் இடம் ஏது? சில தினங்களுக்கு முன்பு பம்பாயில் சர்வமத சம்மேளனம் நடந்ததே, அதில் எல்லாச் சமயங்களும் சமமானவை என்றுதானே கருதிக் கூடினார்கள்? மற்றச் சமயங்களை மதித்துக் கிறிஸ்துவர்களும் அதில் பங்கெடுத்துக் கொண்டார்களா? ஹிந்து சமயத்தில் பல கடவுள்கள் இருப்பதாகவும், சிலை வழிபாடு அநாகரிகமெனவும் இழித்துக்கூறும் அவர்கள், ஹிந்து சமயவாதிகளுடன் சமானமாகப் பழக முடிந்ததா? பல கடவுள்களை அவர்களும் வழிபடுகிறார்களே? அவர்களுக்குள்ளும், பிரிவுகளும் சண்டைகளும் காணப்படுகின்றனவே ?"

இவற்றுக்கு டாக்டர் ரஹீம் நேரடியாகப் பதில் கூறவில்லை. ஆனால் அவர் பின்வருமாறு கேட்டார்: "நாம் ஒற்றுமைப்பட முடியாது என்றாலும் வளர்ந்துவரும் நாஸ்திகத்தைத் தடுக்கவாவது நடவடிக்கை எடுக்க முடியாதா?"

அப்போது ஸர். ஸி. வி. ராமன் சொன்னார் : "நான் உங்களுக்குப் பதில் சொல்கிறேன். ஆண்டவன் இருப்பது உண்மையானால் அவனை நாம் இந்தப் பிரபஞ்சத்தில்தான் காணவேண்டும். இல்லாவிட்டால் தேடிப் பயனில்லை. நான் ஒரு நாஸ்திகன் என்று பலர் எண்ணுகிறார்கள். ஆனால் நான் நாஸ்திகன் அல்ல. விஞ்ஞானத்திலும் வான சாஸ்திரத்திலும் நாளுக்கு நாள்

வளர்ந்து கொண்டிருக்கும் ஆராய்ச்சிகளைப் பார்க்கும்போது, ஆண்டவனுடைய சக்தியும் வெளிப்படுகிறது; அவன்பால் பக்தியும் ஏற்படுகிறது. மகாத்மாஜி, மதங்களுக்குள் ஒற்றுமை ஏற்படக்கூடும் என்று நான் கருதவில்லை. ஆனால் விஞ்ஞானத்தினால், மனிதனுடைய அறிவு விசாலமாகிறதுடன், பரஸ்பரம் சகோதர பாவத்துடன் பழகவும் முடியும். பொதுவாகவே விஞ்ஞானிகள் துவேஷமற்றுச் சகோதரர்களைப் போலவே பழகுகிறார்கள்."

"இந்த ஜகத்திலுள்ள மற்றவர்களைப் பற்றி என்ன சொல்வது? விஞ்ஞானிகள் அல்லாதவர்கள் சகோதர பாவத்துடன் பழக முடியாதோ?'' என்று கேட்டார் காந்திஜி.

ஸர். ராமன் சிரித்துக்கொண்டே, ''எல்லோருமே விஞ்ஞானிகளாகி விடலாமே'' என்றார்.

"அப்படியானால் கொரானில் இருப்பது போல விஞ்ஞானத் துறையிலும் எல்லாரும் அநுஷ்டிக்கும்படியான கல்மா (நியதிகள்) - வை நீங்கள்தாம் தயாரிக்கவேண்டும்'' என்றார் பாபு.

"விஞ்ஞானமே சத்திய சோதனை என்றுதான் நான் எண்ணுகிறேன். லோகாயத ரீதியிலோ விஞ்ஞான பரிபாஷையிலோ மட்டுமின்றி, இயற்கையின் ரகசியங்களை-தத்துவங்களை-உண்மையை-சோதிக்கும் சாதனையால் அது சத்திய சோதனையாகிறது. அசத்தியத்தையும் போலியையும் விலக்கிச் சத்தியத்தை ஏற்கும் பண்பும் மனப்பாங்கும் விஞ்ஞானிக்கு உண்டு. அசத்தியத்தில் நற்குணச் சேர்க்கை இராது என்பது விஞ்ஞானியின் துணிவு. புழு, பூச்சி, ஊர்வன போன்ற தாழ்ந்த சிருஷ்டிகளுக்கும் மனிதனுக்கும் பாரம்பரிய ரீதியில் பார்த்தால் அடிப்படையில் விசேஷ வித்தியாசமில்லை என்றும், ஆண், பெண் சேர்க்கையினால் தான் வம்சவிருத்தியும், குலஸ்தாபனமும் பூர்ணத்துவமடைகின்றன என்றும், சமூகவளர்ச்சிக்காக, தனி ஜந்து தியாகம் செய்வது இயற்கை நியதி என்றும், சமீபகாலப் பிராணிநூல் ஆராய்ச்சியின் மூலம் தெரிகின்றன'' என்றார் ஸர். ராமன்.

"இதைத்தானே கீதையும் சொல்கிறது? தியாகத்தினால் பகவான் சிருஷ்டியை ஆரம்பித்தான்; சமூகவளர்ச்சிக்குத் தியாகமே சிறந்த மார்க்கம் என்று மனிதனுக்குப் போதித்தான்'' என்றார் காந்திஜி.

★

ஜன நாயகம்

(1936)

ஒத்துழையாமை காலத்திலிருந்து காந்திஜியுடன் நெருங்கிப் பழகிய பர்சூரே சாஸ்திரி என்பவர் ஹரித்துவாரத்தில் வசித்துக் கொண்டிருந்தார். துரதிருஷ்டவசமாக அவருக்குத் தொழு நோய் பிடிக்கவே அவர் மன அமைதியற்று, காந்திஜியின் உதவியை நாடினார். காந்திஜியின் அருகில் இருந்தால், நோயை மறந்து தேசசேவையில் ஈடுபடலாம் என்று எண்ணி, ஆசிரமத்தில் வசிக்க, காந்திஜியிடம் அநுமதி கோரினார்.

வேலை மிகுதியினால் காந்திஜி உடனே பதில் எழுத முடிய வில்லை. பர்சூரே சாஸ்திரிக்கோ, ஹரித்துவாரில் வசிக்கவும் முடியவில்லை.

பல தினங்கள் வரையில் காந்திஜியிடமிருந்து பதில் கிடைக் காமலிருக்கவே, ஒரு நாள் பர்சூரே சாஸ்திரி சேவாக்கிராமத்துக்கு வந்து சேர்ந்தார். காந்திஜியின் அநுமதி பெற்ற பிறகுதான் ஆசிரமத்துக்குள் செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன், வெளியே இருந்த மரத்தடியில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்.

மாலைப் பிரார்த்தனை முடிந்து காந்திஜி உலாவக் கிளம்பினார். ஆசிரம வாசலில் சாஸ்திரியைக் கண்டதும் காந்திஜி பிரமித்து நின்றார். காந்திஜியை வணங்கி விட்டுச் சாஸ்திரி சொன்னார்: "உங் களுடைய பதிலை எதிர்பார்த்தேன். காத்திருக்க மனமில்லை. உங்களைத் தரிசித்து விட்டுத் திரும்பிவிடும் நோக்கத்துடன் புறப் பட்டு விட்டேன்."

காந்திஜியோ சிந்தனை வசப்பட்டார்.

"என்னுடைய ஆசை நிறைவேறிவிட்டது. என் கையினால் நூற்ற நூல் இந்த மூட்டையில் இருக்கிறது. ஏற்றுக் கொள்ள வேண்டும். இரவை இங்கேயே கழித்து விட்டு, காலை ரெயிலில் நான் ஹரித்துவாரத்துக்குத் திரும்பி விடுகிறேன்" என்றார் சாஸ்திரி.

சாஸ்திரிக்கு ஆகாரமும் இதர வசதிகளும் செய்து கொடுக் கும்படி ஆசிரம நிர்வாகியிடம் கூறிவிட்டுக் காந்திஜி உலாவச் சென்றார். அன்றிரவு வெகுநேரம்வரையில் அவர் உறங்கவில்லை. சாஸ்திரியோ மகாரோகி, அவருக்கு உதவி செய்ய வேண்டியதும்

கடமை; அவரை ஆசிரமத்தில் வசிக்க அநுமதிப்பதால் மற்றவர்களுக்கு மனச் சஞ்சலம் ஏற்படக் கூடும். அந்த நோய் ஒட்டுவாரொட்டியோ என்று ஊழியர்கள் பயப்படக் கூடும். அருவருப்புக் கொள்ளல் கூடும்.

காலைப் பிரார்த்தனையின்போது காந்திஜி தம்முடைய மனச் சஞ்சலத்தை எடுத்துக் கூறினார். "இது ஆண்டவனுடைய சோதனை என்றே எண்ணுகிறேன். அகதி என்று வந்துள்ள நோயாளியை விலக்குவதும் பாவம்; அவரை ஏற்றுக் கொள்வதால் உங்களுக்கு நேரும் இடையூறுகளையும் கவனிக்கவேண்டும். உங்களுடைய ஆரோக்கியத்திலும் நான் கருத்தாக இருக்க வேண்டும். சாஸ்திரியோ, இங்கு தங்க விருப்பமில்லை என்று கூறி விட்டார். நான் அநுமதி கொடுத்தால் இங்கு தங்கலாம் என்ற எண்ணத்துடன் தான் அவர் வந்திருக்கிறார் என்பதை நாம் மறக்கக் கூடாது."

சாஸ்திரியை ஆசிரமத்தில் ஏற்றுக்கொள்ளலாம் என்றே ஊழியர்கள் தீர்மானித்தார்கள். காந்திஜியின் மனப்பாரம் குறைந்தது. அவரே சாஸ்திரிக்குத் தைலங்களையும், லேபனங்களையும் தடவி, சிகிச்சை செய்யலானார். பர்சூரே சாஸ்திரியினால் காந்திஜி தொழுநோயைப்பற்றித் தீர விசாரிக்கலானார். நம்முடைய நாட்டில் பெரும்பாலான மக்கள் இந்த வியாதியினால் வருந்துகிறார்கள் என்று தெரியவே குஷ்டரோக நிவாரணமும் நிர்மாணத்திட்டத்தில் ஓர் அம்சமாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டது.

தீன ரக்ஷகன்

(1936)

பாரிச வாயுவினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த வாலிபன் ஒருவன் காந்திஜியிடம் வைத்திய உதவி நாடி வந்தான். அவனுக்கு ஒரு கால் ஸ்வாதீன மில்லாததுடன் கைகளும் நடுக்கம் கண்டிருந்தன. ஒரு சிறு சாமானைக் கூடத் தூக்கும் வலிமை கைகளுக்குக் கிடையாது. தன்னுடைய நிர்க்கதியான நிலைமையைக்கூறி, ஆசிரமத்தில் வசிக்க அவன் அநுமதி கோரினான். காந்திஜியோ மறுத்துவிட்டார்.

அன்று மாலை வரையில் அவன் ஆசிரம வாசலை விட்டு நகரவில்லை. "வைத்திய உதவிகள் பயன்படவில்லை. உங்களுடைய

அருளினால்தான் நான் பிழைக்க வேண்டும்" என்று அவன் மன்றாடினான். கடைசியில் பாபுவின் மனம் இரங்கிற்று. அவனை ஆசிரமத்தில் அநுமதித்துத் 'தண்டச் சோறு' போடவும் அவர் விரும்பவில்லை. அவனுக்கு வேலை கொடுப்பதும் ஒரு பிரச்னையாக இருந்தது. அவனுடைய உடற் கூறையும், மனோ பாவத்தையும் பாபு கவனித்தார். அவன் சுறுசுறுப்பும் உற்சாகமும் நிறைந்தவன். நுண்ணறிவும், அடக்கமும் உள்ளவன். காந்திஜி அவனுக்கு மனஸ் தத்துவ ரீதிப்படி சில போதனைகள் செய்தார். முதலில் அவன் சமையலறையில் காய்கறிகளைக் கழுவிக் கொடுப்பதில் மனம் செலுத்தினான். காய்களைக் கையில் தூக்கும் போதே கைகள் நடுங்கும். மன உறுதியுடன் அவன் அவற்றை எடுப்பான். சிறுகச் சிறுகக் கை நடுக்கம் நின்றது. அவன் காய் கறிகளை நறுக்கவும், சிறு பாத்திரங்களைத் தூக்கவும் பழகினான். அவ்வப்போது அவனைக் கவனித்துக் காந்திஜி வேலைமாற்றம் செய்தார். சில தினங்களுக்குள் எல்லோரும் ஆச்சரியப் படும்படி அவன் குணமடைந்து விட்டான். தண்ணீர் சேந்துவது, சாமான்களைத் தூக்குவது போன்ற முரட்டு வேலைகளைச் செய்வதும் அவனுக்குச் சாத்தியமாயின.

மந்திரி பதவி வேண்டுமா?

(1937)

சென்னையில் நடக்க இருந்த அகில இந்திய ஹிந்தி சாகித்திய சம்மேளனத்துக்குத் தலைமை வகிக்கக் காந்திஜி வந்து கொண்டிருந்தபோது பெஜவாடாவில் சில பத்திரிகை நிருபர்கள் அவரைப் பேட்டி கண்டார்கள். அப்போது அரசாங்கத்தின் பொறுப்பைக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளுமா, ஏற்காதா என்ற பிரச்னையே பலமாக அடிபட்டுக் கொண்டிருந்தது. நிருபர்களில் ஒருவர், "பாபு, காங்கிரஸ் பதவி ஏற்பது பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டுவிட்டார்.

காந்திஜியின் பதில் தேசத்தின் எதிர்காலத்தை நிர்ணயித்து விடுமே! சிடுக்கு நிறைந்த அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவர் கேட்டார்: "நீங்கள் ஒரு மந்திரியாக வர ஆசைப்படுகிறீர்களா?"

அந்த நிருபர் என்ன பதில் சொல்லக்கூடும்? உடனிருந்தவர்கள் கொல்லென்று சிரித்தபோது அவரும் கலந்து கொண்டார். காந்திஜியும் வேறு திசையில் பேச்சை மாற்றிவிட்டார்.

தமிழ்ப் பெருமை
(1937)

சென்னையில் நடந்த பாரதீய சாகித்திய சம்மேளனத்துக்குக் காந்திஜி தலைமை வகித்தார். மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்தாம் வரவேற்புக் கழகத் தலைவர். ஐயரவர்கள், தமிழில் எழுதிய வரவேற்புரையை ஹிந்தியில் மொழிபெயர்த்துக் காந்திஜியிடம் அளித்ததுடன் மகாநாட்டிலும் விநியோகித்தார்கள். மகாநாடு துவங்குவதற்கு முன்பு ஐயரவர்கள், காந்திஜியைச் சந்திக்கச் சென்றார். ராஜாஜி அவர்களைப் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தார். காந்திஜி புன்சிரிப்புடன், "உட்காருங்கள் ஐயா" என்று அழுத்திக் கூறி வரவேற்றார். ஐயரவர்களுடைய அடக்கமும் பேச்சும் காந்திஜியைப் பெரிதும் வசீகரித்து விட்டன.

வரவேற்புரையில் ஐயரவர்கள், "காந்திஜியின் சமகாலத்தவர்களாக வாழ்வது பாக்கியம் என்று கருதுகிறேன். அவருக்கு அடுத்தபடியாக இருந்து ஒரு விழாவை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்வது மிக்வும் பெரிய பாக்கியம் என்று மகிழ்ச்சியுறுகிறேன்" என்று குறிப்பிட்டார்கள்.

காந்திஜியோ, "அர்த்த புஷ்டியும் இலக்கியச் சுவையும் நிரம்பிய ஐயரவர்களின் வரவேற்புரை என்னைப் பெரிதும் வயப்படுத்திவிட்டது. தமிழர்களுடன் பல வருஷகாலம் நான் நெருங்கிப் பழகி யிருக்கிறேன். இப்போது ஐயரவர்களுடன் அறிமுகம் ஏற்பட்ட பிறகு, அவருடைய அருகில் அமர்ந்து, அவரிடமே தமிழ்ப்பாடம் கற்க வேண்டும் என்ற ஆசை தோன்றுகிறது. இந்த ஆசைக்கு இடையூறாக வயதும், வேலையும் இல்லை; ஆனால் எங்கள் இருவருக்குமே போதுமான அவகாசம் இல்லையே என்றுதான் வருந்துகிறேன்" என்று தம்முடைய தலைமை உரையில் குறிப்பிட்டார்.

★

ஆண்டவன் சித்தம்

(1938)

டாக்டர் மாட் உலக சமாதானத்தில் பற்றுள்ள அமெரிக்கர். ஜனதிபதி உட்ரோ வில்சனின் அன்பும் ஆதரவும் பெற்றவர். சீனாவில் அமெரிக்க ஸ்தானீகர் பதவியும் பிரின்ஸ்டன் சர்வ கலாசாலையின் அத்தியக்ஷகர் பதவியும் கிடைத்தும் வேண்டாம் என்று மறுத்தவர். “தீனர்களுடைய சேவையில் நான் சந்தோஷ மடைகிறேன். சர்வதேச சமாதானத்துக்காக நாடு நாடாகச் சுற்றி என் பணியாற்றுவேன்'' என்று கூறி, தமக்குக் கிடைத்த பதவிகளை ஒதுக்கினர். அவர் 1938-ஆம் வருஷ இறுதியில் இந்தியாவுக்கு வந்தபோது காந்திஜியைச் சந்தித்தார். அன்பு, அஹிம்ஸை, ஆண்டவன் அருள், உலக சமாதானம் என்று பலப் பல பற்றி அவர்கள் விவாதித்தார்கள். அவர்களுடைய சம்பா ஷணையில் ஒரு பகுதி வருமாறு :

டாக்டர் மாட்: வாழ்க்கையில் உங்களுக்குத் திருப்தியும் நம்பிக்கையும் இருக்கின்றனவே, அதற்குக் காரணம் என்ன? அரசியல் பிரச்னைகளில் மனம் குழம்பித் தவிக்கும்போது நீங்கள் தெளிவு கண்டு வெற்றி பெறுகிறீர்களே, இதன் ரகசியம் என்ன?

காந்திஜி: ஆண்டவனிடமிருக்கும் திடமான பக்திதான்.

டாக்டர் மாட்: ஆண்டவன் அருளை நீங்கள் எப்படி அநுபவித்திருக்கிறீர்கள்? எப்படி ஏற்பட்டது?

காந்திஜி: அதை எப்படிச் சொல்ல முடியும்? நாம் எதிர்பாராமல் சில சம்பவங்கள் நிகழும். என்னுடைய வாழ்க்கையில் பசுமை மாருத சம்பவம் ஒன்று சொல்கிறேன். தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தொகுதி முறை வகுத்து ஹிந்து சமூகத்தைப் பிளந்து பிரித்துவிடப் பிரிட்டிஷ் அரசாங்கம் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தது. இந்த அநீதியை எப்படி எதிர்ப்பது என்று நான் பல நாட்கள் சிந்தித்தேன். மனசில் கலக்கமும் இருளும்தான் நிறைந்திருந்தன. ஒரு நாள் நிசிவேளை. தூக்கமின்றிச் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தேன். யாரோ என்னைத் தட்டி எழுப்பியதுபோல உணர்ச்சி ஏற்பட்டது. திகைத்துப்போய் விழித்துப் பார்த்தேன். எவருமில்லை. மீண்டும் கண்களை மூடிக்கொண்டேன். “நீ உபவாசம் ஏற்றுக்கொள்” என்று யாரோ கட்டளையிட்டது போல்

இருந்தது. எதிரே எவரும் இல்லை. மனசில் ஜனித்த எண்ணமோ, அல்லது அசரீரியோ சொல்ல முடியவில்லை. நானும் அந்தக் குர லுடன் பேச ஆரம்பித்துவிட்டேன். "உபவாசமா, எத்தனை நாட்களுக்கு?" என்று கேட்டேன். "இருபத்தொரு நாட்கள்" எனப் பதில் கிடைத்தது. "எப்போது துவங்கட்டும்?" எனக் கேட்டேன். "நாளையே ஆரம்பித்துவிடு" என்று பதில் கிடைத் தது. அந்தச் சம்பாஷணையின்போது நன்ருக விழித்துக்கொண் டிருந்தேனு அல்லது விழிப்பும் உறக்கமுமான மயக்க நிலையில் இருந்தேனு என்று சொல்ல முடியாது. சம்பாஷணை முடிந்து விட் டது. மேலே என்ன நடந்தது என்று தெரியவில்லை. நன்ருகத் தூங்கி விட்டேன். காலையில் எழுந்ததும் மனம் தெளிந்து இருந்தது. என்னை யறியாமல் உற்சாகமும் சுறுசுறுப்பும் இருந்தன. அன்று மௌன தினமாகையால் பிரார்த்தனை முடிந்ததும் உடனிருந்த நண்பர்களுக்குக் கடித மூலம் என்னுடைய தீர்மானத்தைத் தெரி வித்தேன். இது சம்பந்தமாக விவாதிக்க நான் தயாராக இல்லை என்றும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். ஆனலும் சிறிது நேரம் வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. டாக்டர்களோ, என் உடல் நிலை யைப் பரிசோதித்து விட்டு, அந்தச் சோதனையைத் தாங்க முடியுமா என்று சந்தேகித்தார்கள்.

"நானே எதைப் பற்றியும் சிந்திக்கவில்லை. என்னுடைய தீர்மானத்தைச் சர்க்காருக்குத் தெரிவித்துவிட்டு உபவாசத்தை ஆரம்பித்து விட்டேன். உபவாச காலத்தில் எனக்கு எவ்விதத் துன்பமும் இல்லை. வெற்றி நிச்சயம் என்ற எண்ணம் மனசில் ஏற்பட்டது. அதன்படியே வெற்றியும் கிடைத்தது. அந்தமாதிரி அநுபவம் எனக்கு அதற்கு முன்னும் இல்லை, பின்னும் ஏற்பட வில்லை."

மதமும் தர்மமும்
(1938)

பேராசிரியர் ஸர்வபள்ளி ராதாகிருஷ்ணனை* கீழ்த்திசை தத்துவ, வேதாந்த போதகராக, ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலை யில் பதவி ஏற்றுக்கொள்ளும்படி, சர்வ கலாசாலையார் அழைத் தார்கள். சில நிபந்தனைகளின் மீது ராதாகிருஷ்ணன் பதவி

* உதவி ஜனதிபதி

ஏற்றுக்கொள்ள இசைந்தார். இங்கிலாந்துக்குச் செல்லுமுன்பு அவர் காந்திஜியைச் சந்தித்தார்.

பேச்சுவாக்கில் ராதாகிருஷ்ணன் பின்வருமாறு சொன்னார்: " இதுவரையில் ஏசுநாதரின் போதனைகளை எடுத்துச் சொல்லப் பாதிரிமார்கள் கீழ்த்திசை நாடுகளுக்கு வந்தார்கள். இப்போது நம்முடைய மதத்தையும் வேதாந்தத்தையும் மேனுட்டாருக்கு எடுத்துச் சொல்ல நான் ஆக்ஸ்போர்டுக்குச் செல்கிறேன்."

" நல்லது, அவர்கள் ஆள்ச் சேர்க்கும் நோக்கத்துடன் மத போதனை செய்கிறார்கள். உங்களால் அப்படிச் செய்ய முடியாதே? நம்முடைய பண்பிலும் மார்க்கத்திலும் துவேஷத்துக்கு இடம் இல்லை. மதமாற்றம் செய்யும்படித் தூண்டுதலும் இல்லையே?" என்றார் காந்திஜி.

" ஆமாம். நம்முடைய மதமும் வேதாந்தமும் ஆழ்கடலுக்கு ஒப்பானவை. மேனுட்டாருக்குப் புரியும்படி எப்படி எடுத்துச் சொல்வேன் என்ற திகைப்பு எனக்கு உண்டு. நம்முடைய மதத்துக்கு ஆள்ச் சேர்க்கும் நோக்கம் இல்லை என்றாலும் அதன் உயர்வைப் பிறர் அறியச் செய்யவேண்டும். நம்முடைய மதத்துக்கு நிதரிசனமான உதாரணம் உங்களுடைய வாழ்க்கைதான். மதக் கோட்பாடுகளிலும், தார்மிகப் பண்புகளிலும் திடமான கொள்கையுடன் நீங்கள் வாழ்கிறீர்கள். ஆகவே நான் உங்களையும் உங்களுடைய வாழ்க்கையையும் உதாரணமாகக் காட்டி, நம்முடைய தர்மத்தை எடுத்துச் சொல்வேன்.

" மகாபாரதத்தில், திரௌபதியை மானபங்கம் செய்யும் கட்டத்தில் அவள் பின்வருமாறு அலறுவதாக ஒரு சுலோகம் இருக்கிறது: 'நல்ல குடியில், நல்ல வேளையில் நான் பிறந்தேன்; நற்குடியில் வாழ்க்கைப் பட்டேன். ஆனாலும், பகவானே, இன்று கூந்தலைப் பிடித்து இழுக்க, முன்றானை நழுவ, அவமானப் பட்டேன். இனி நான் உயிருடன் வாழ்வது எப்படி?' என்று அலறினாள். ஆனாலும் அவள் பகவானிடம் மனம் செலுத்தி நின்றாள். தன்னைச் சூழ்ந்திருப்பதை மறந்து பக்திவசப்பட்டாள். அருள் கிடைத்தது. அவள் காப்பாற்றப்பட்டாள். அதேபோல நாங்களும் திடச் சித்தத்துடன் ஆண்டவனிடம் பக்தியும் தர்மத்தில் நம்பிக்கையும் வைத்து வாழ்ந்தால் கரையேறிவிடுவோம் என்பதற்கு நீங்களே - உங்களுடைய வாழ்க்கையே - நிதரிசனமான

உதாரணம். தர்மத்தைக் கடைப்பிடிப்பதில் திடச் சித்தம் இருப்பதே பெரிய பாதுகாப்பாகும். சத்தியத்துக்காகவும், தர்மத்துக்காகவும் நீங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்து சேவை செய்வதுதான் என்னை வசீகரித்து விட்டது.

" 'ஊனக் கண்களால், வானத்திலுள்ள நட்சத்திரங்களை நாம் பார்ப்பது போல, ஆண்டவனை (தெய்வ சந்நிதானத்தை) சித்தர்களும் ரிஷிகளும் சதா தரிசித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று ரிக் வேதம் கூறுகிறது. தன்னம்பிக்கையும் தெய்விகப் பண்புமேதான் இந்த வாக்கியங்களில் தொனிக்கின்றன. ஆகவே, உங்களுடைய வாழ்க்கைதான் உத்தமமான ஹிந்து மார்க்கம் என்றும் வேதாந்தத்தின் சாரம் என்றும் எடுத்துக்காட்டிப் பிற நாட்டினருக்கு விளக்குவேன்."

"அச்சா, ஆனால், நம்முடைய மதத்துக்கு லாபம்தான் இல்லை. பாதிரிகளுக்குப் போட்டியாக ஓர் ஆளைக்கூட நம்முடைய மதத்துக்கு இழுக்க உங்களால் முடியாது" என்றார் காந்திஜி சிரித்துக்கொண்டே.

பண்டாவின் பரிவு
(1938)

காந்தி சேவா சங்கத்தின் வருடாந்தரக் கூட்டம் 1938-ஆம் வருஷம் ஒரிஸ்ஸாவிலுள்ள டிலாங் என்ற கிராமத்தில் நடந்தது. மகாநாட்டுக்கு வந்த மகாதேவ தேசாயின் மனைவி துர்கா பென்னும் கஸ்தூரிபாவும் வேறு சிலரும், பூரி ஜகந்நாதர் ஆலயத்துக்குச் சென்று தெய்வ வழிபாடு செய்தார்கள். மகாதேவ தேசாயின் மனைவியும், வேறு சிலரும் கர்ப்பக் கிருகத்தில் சென்று வணங்கினார்கள். மகாதேவின் மகன் நாராயணனும் கஸ்தூரிபாவும் மற்றவர்களும், எல்லாச் சாதியாரும் செல்லக்கூடிய துவஜஸ்தம்பத்தின் அருகிலேயே நின்று ஜகந்நாதரைத் தரிசித்தார்கள். இந்தச் செய்தியை அறிந்ததும் காந்திஜி வருந்தினார். மகாதேவைக் கூப்பிட்டுக் கடிந்து கொண்டார். "ஹரிஜனங்கள் நுழைய முடியாத கோவிலுக்குள் நாம் போவது தவறு என்று நான் பன்முறை சொல்லியிருக்கிறேனே; உன்னுடைய மனைவி மட்டும், உள்ளே சென்று ஜகந்நாதரைத் தரிசிக்கலாமா?" என்று வருத்தம் தோய்ந்த குரலில் கேட்டார். ஸ்வாமி தரிசனம் செய்யவேண்டும்

என்ற ஆர்வத்தில் அவர்கள் உள்ளே சென்றார்களே தவிர மகாத்மாவின் மனம் புண்படக்கூடும் என்பதை அவர்கள் எண்ணவே இல்லை. காந்திஜியிடம் மகாதேவும் மற்றவர்களும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

இதன் நடுவே, ஜகந்நாதர் கோவில் மகந்து காந்திஜியைப் பேட்டி காண வந்தார். காந்திஜி கோஷ்டியினர் கோவிலுக்கு விஜயம் செய்ததால் காந்திஜியும் வரக்கூடும் என்று எண்ணி, அவரை அழைத்துச் செல்லவே மகந்து டிலாங்கிற்கு வந்தார்.

பேட்டியின்போது ராஜேந்திர பாபுவின் சகோதரியாரும் உடனிருந்தார்.

" நீங்கள் வைஷ்ணவ சிரேஷ்டர். உங்களைப் போன்றவர்கள் தாம் ஜகந்நாதரைத் தரிசிக்கவேண்டும் " என்றார் மகந்து, பேச்சு வாக்கில்.

" ஆமாம். செய்லில் வரும்போதுதான் நிலைமை மாறி விடுகிறது. என்னுடைய சொல்லை மனிதரும் கேட்கவில்லை, தெய்வமும் கேட்கவில்லை" என்றார் காந்திஜி, வருத்தத்துடன். பிறகு அவர் ஜகந்நாதர் ஆலயத்தை ஹரிஜனங்களுக்குத் திறந்து விடுவது பற்றிப் பேசலானார். "தர்மம் கெட்டுவிடும் என்று நீங்கள் சொல்லக்கூடும். திருவிதாங்கூரில் ஹரிஜன ஆலயப் பிரவேசம் நடந்தது. அங்கு பிரளயம் வந்துவிடவில்லை. தர்மத்துக்கும் ஆபத்து நேர்ந்ததாகத் தெரியவில்லை" என்றார் காந்திஜி.

மகந்து சிரித்துக் கொண்டே சொன்னார்: "தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீங்கள் தொண்டு செய்கிறீர்கள். பகவானுக்குப் பிடித்தமான பெயரையும் அவர்களுக்குச் சூட்டி யிருக்கிறீர்கள். ஆலயப் பிரவேசத்தினால் மட்டும் அவர்கள் விசேஷ லாபம் பெற்றுவிட முடியாது. கோபுர தரிசனம்தான் மிகவும் விசேஷம் என்பது பெரியவர்களுடைய வாக்கு. அது ஹரிஜனங்களுக்கு மறுக்கப்படவில்லையே?"

"அவர்களும், மற்றவர்களைப்போல ஆண்டவனைக் கண் குளிரத் தரிசிக்க வேண்டாமா?" என்று கேட்டார் காந்திஜி.

"ஆண்டவன் அவர்களை எப்போதும் கடாட்சிக்கிறான். கௌரவத்துக்குரிய மனிதர்களை நாம் வாசலில் வந்து நின்று வரவேற்கவில்லையா? அதேபோலப் பிறருக்கு உழைக்கும் சேவகர்களை, அடிமைகளாகக் கருதாமல், பொதுஜன ஊழியர்களாக

மதித்து, தம்முடைய அன்புக்குப் பாத்திரமாக்கிக் கொண்ட பகவான் கோபுரத்தில் நின்றே சேவை சாதிக்கிருன். இதுவே மேலானது என்பது என்னுடைய அபிப்பிராயம்'' என்ருர் மகந்து. ''அச்சா, உங்களுடைய வாதத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் தீனர்களான ஹரிஜனங்களுக்கு இருக்கிறதா என்றுதான் சந்தேகிக்கிறேன். அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என்று நீங்கள் எண்ணிஞல், கோபுர வாசலிலேயே, நீங்கள் கைலாகு கொடுத்து அழைத்துச் சென்று அவர்களை ஆண்டவனுடைய சந்நிதானத்தில் நிறுத்த வேண்டும்'' என்ருர் பாபு.

மகந்து திகைத்துப் போனுர். சில நிமிஷங்களில் சமாளித்துக் கொண்டு அவர் சொன்னுர்: "எதையும் அவசரப்பட்டுச் செய்துவிட முடியாது, மகாத்மாஜி! சிறுகச் சிறுக முன்னேற வேண்டும். பெரிய மலையை ஒரே நிமிஷத்தில் அளந்துவிட முடியுமா?"

"சரி, உங்கள் இஷ்டம் போலச் செய்யுங்கள். ஹரிஜனங்களில் ஒருவன்தான் நானும். அவர்களுக்கு ஜகந்நாதனைத் தரிசிக்க உரிமை கிடைக்கும் வரையில் நானும் காத்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் நுழைய முடியாத கோவிலில் நான் அடியெடுத்து வைக்க முடியாது'' என்ருர் பாபு.

மகந்து வருத்தத்துடன் விடைபெற்றுக் கொண்டார்.

சமூக சேவை
(1939)

பர்டோலியில், ஜனவரி மாத இறுதியில் குஜராத் மாகாண நகரசபை, ஜில்லா போர்டுகளைச் சேர்ந்த காங்கிரஸ் அங்கத்தினர்கள் மகாநாடு நடந்தது. அப்போது காந்திஜி பர்டோலியில் தங்கி யிருந்தார். அவரும் மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று மகாநாட்டு நிர்வாகிகள் கேட்டுக் கொண்டார்கள். அப்போது அங்கத்தினர்களில் ஒருவர் காந்திஜியிடம் பின்வரும் கேள்வியைக் கேட்டார்: ''வரிப் பளுவைக் குறைப்பதாகக் காங்கிரஸ் மக்களுக்கு உறுதி கூறி இருக்கிறது. ஆனுல் காங்கிரஸ்காரர்களே, பதவி ஏற்றதும், தங்களுடைய திட்டங்களை நிறைவேற்ற, அதிகப் பணம் திரட்ட முயலுகிருர்கள். இதனுல் வரி உயர்வும், மக்களுடைய அதிருப்தியும்தான் ஏற்படுகின்றன. இதற்கு என்ன செய்வது?''

காந்திஜி கூறிய பதில் வருமாறு: "நான் வரி கொடுப்பவனுக இருந்தால் சல்லிக்காசுகூட உபரியாக வரி செலுத்த மாட்டேன்; மற்றவர்களையும் கொடுக்காமல் தடுத்து விடுவேன். கொடுக்கும் வரிக்கு நான்கு மடங்கு நன்மைகளைப் பெறவேண்டும் என்பதே என்னுடைய அபிப்பிராயம். நகர சபைகளிலும், ஜில்லா போர்டு களிலும் பதவி ஏற்பவர்கள், பெருமைக்காகவோ, லாப திருஷ்டி யுடனே செல்லக் கூடாது. சமூகத்துக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் அவர்கள் சேவை செய்ய வேண்டுமே தவிர, அதிகார மோகங் கொண்டு தங்களுக்குள் கட்சிப் பிரதி கட்சிகளை உண்டுபண்ணிக் கொள்ளவும் கூடாது. நம்முடைய நாடு ஏழை நாடு. சேவை மனப்பான்மையுடன் அங்கத்தினர்கள் வேலை செய்ய ஆரம்பித்தால், அவர்களே தோட்டிகளாகவும், ஆசிரியர்களாகவும், ரஸ்தாக்களைப் போடும் கூலிகளாகவும் மாறி, சரீர உழைப்பில் மற்றவர்களுக்கு வழி காட்டிகளாக இருக்க முடியும். காங்கிரஸில் சேராத மற்ற அங்கத் தினர்களையும் அவர்கள் அன்பினுலும், தங்களுடைய உழைப்பி னுலும் ஆகர்ஷித்துக் கொள்ள முடியும். அங்கத்தினர்கள் முழு நேர ஊழியர்களாக இருந்தால்தான் இம்மாதிரிச் சேவை சாத்திய மாகும். அடுத்தபடியாக, தங்களுடைய எல்லையில் வசிக்கும் வயது வந்தவர்களைப் பற்றிப் பட்டியல் தயாரித்துக் கொண்டு, இச்சா பூர்வமாக வேலை செய்யும் பட்டாளத்தைச் சிருஷ்டிக்கவும், அங்கத்தினர்கள் முயலவேண்டும். வரி கொடுக்க இயலாதவர்கள், சரீர உழைப்பினுல் தங்களுடைய பங்கைச் செலுத்திவிடத் தூண்டவேண்டும். நம்முடைய நாட்டில் நகரங்கள் அதிகமில்லை. ஏழு லட்சம் கிராமங்களையுடைய இந்த நாட்டில் நகராட்சி முறையே கிராமமக்களின் நலனுக்கு ஏற்றமுறையில் இருக்க வேண்டும். பணப் பிரதானமாக எந்த வேலையும் செய்ய முயன்ருல் திட்டத்தில் ஒரு பகுதி கூட நிறைவேற்ற முடியாது. நம்முடைய நாட்டில் மனித சக்தி அபரிமிதமாக இருக்கிறது. அதை நாம் உபயோகித்துக் கொள்வதால், வேலை இல்லாத் திண் டாட்டத்தைச் சமாளிப்பதுடன் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையவும் முடியும். நம்முடைய கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி, ரோடு வசதி, சுகாதார வசதி முதலியவற் றைக் கொடுக்க, பணத்தைவிட மனித உழைப்புத்தான் அதிகம்

வேண்டும் என்று நான் கருதுகிறேன். நம்முடைய உழைப்பினால் அதிக வசதிகளைச் செய்ய முடிந்தால், அதிக வரிகளைப் போட்டாலும், மக்கள் முணுமுணுக்காமல் கொடுத்து விடுவார்கள்.''

ஜம்புஸார் நகர சபையைச் சேர்ந்த ஓர் அங்கத்தினர் கேட்டார்: ''எங்களுடைய நகரசபையில் பதினேழு அங்கத்தினர்கள் இருக்கிறோம். காங்கிரஸ் அங்கத்தினர்கள் எட்டுப் பேர்தான் இருப்பதால், எங்களுடைய திட்டங்களை நிறைவேற்ற முடிவதே இல்லை. இதற்கு என்ன செய்வது?''

காந்திஜி சொன்னார்: ''நகர சபையில் பேச்சும் விவாதமும் தான் பிரதானம் என்று பலர் நினைக்கிறார்கள். நீங்கள் நகரசபைக் கூட்டத்துக்குச் செல்லுங்கள். விவாதத்தில் நேரத்தை வீணாக்காமல் ஒதுங்கியிருங்கள். வரி கொடுப்போருக்கு நன்மை செய்வதில் நீங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். சமயம் நேரும் போது சரீர உழைப்புக்கும் பின்வாங்கக்கூடாது. முதியவர் கல்வித் திட்டம், சுகாதாரம் போன்ற துறைகளில் நீங்கள் மனம் செலுத்தினால் மக்களுடன் நெருங்கிப் பழகமுடியும். இதனால் இரண்டு வித பலன் ஏற்படும். உங்களுடைய சேவையைப் பாராட்டி மற்ற அங்கத்தினர்களும் ஒத்துழைக்க முன்வருவார்கள்; அவர்கள் ஒதுங்கி யிருந்தாலும் வரி கொடுப்பவர்கள், தங்களுடைய நன்மையில் கருத்துக் கொண்ட ஊழியர்களைப் பாராட்டுவதுடன், அடுத்து வரும் தேர்தலில், உபயோகமற்ற மற்றவர்களுக்கு இடமில்லாமல் செய்து விடுவார்கள். மக்களுடன் நெருங்கிப் பழகி அவர்களுக்குத் தொண்டு செய்வதுதான் எதிர்க்கட்சியை அஹிம்ஸா வழியில் முறியடிக்கும் மார்க்கம். அதனால் கட்சிப் பிரதி கட்சிகளும் சச்சரவுகளும் மறைந்துவிடும்.

ஸ்ரீமதி மிருதுலா பென் ஸாராபாய், ''நீங்கள் பெண்களைச் சமூக ஊழியத்துக்கு இழுத்து விட்டீர்கள். நகரசபைகளிலும், வேறு பல பொதுப் பணிகளிலும் பெண்கள் ஊக்கமாகப் பங்கெடுத்துக் கொண்டு சேவை செய்கிறார்கள். இதனால் அவர்களில் பலருக்குக் குடும்பத்தைக் கவனிக்கக்கூட நேரம் இருப்பதில்லை. குழந்தை குட்டிகளை அலட்சியம் செய்துவிட்டு சமூக சேவை செய்வதை நீங்கள் விரும்புகிறீர்களா?'' என்று கேட்டார்.

''சமூக சேவை செய்வதால் கிடைக்கும் பெருமையையும் புகழையும் எண்ணிக் கொண்டு குடும்பத்தை அலட்சியம்

செய்வதை நான் விரும்பவில்லை. அதனால் தீமையே நேரும். நம்முடைய சமூகத்தில் ஆண்கள், பெண்களை உடைமைகளாகவும் ஊழியக்காரிகளாகவுமே எண்ணுகிறார்கள். எசமானனான கணவனைத் திருப்தி செய்வதுதான் தங்களுடைய வாழ்க்கை லட்சியம் என்று பெண்களும் கருதுகிறார்கள். பெண்களின் அடிமைத்தனம் அநாகரிகமானது என்றே நான் எண்ணுகிறேன். குடும்பத்தை நடத்துவதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான பொறுப்பு உண்டு. இருவரும் தோழர்களைப் போலப் பழகவேண்டும். சமையல்காரியாகவோ, ஊழியக்காரியாகவோ பெண்கள் உழைக்கும் நிலைமை மாறவேண்டும். நாள் முழுவதும் குடும்பப் பொறுப்பில் கழிப்பதைவிட, குடும்ப வேலைகளைக் கவனித்துவிட்டு, தீனர்களுக்கும் தேசத்துக்கும் சேவை செய்ய நேரம் ஒதுக்கிக் கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம்."

கொடி பறக்குது!
(1939)

பர்டோலி சத்தியாக்கிரக காலத்தில் பறிமுதல் செய்த நிலங்களைச் சுவான்தார்களுக்குத் திருப்பித்தர பம்பாய் சர்க்கார் முடிவு செய்தார்கள். காந்திஜியின் தலைமையில் பர்டோலியில் மாபெரும் மகாநாடு நடத்தி, சத்தியாக்கிரகிகளிடம் நிலங்களை ஒப்படைத்தார்கள். சத்தியாக்கிரகத்தில் வீடுவாசல்களை இழந்து, பரோடா சம்ஸ்தானத்தில் குடியேறி உடலுழைத்து ஜீவித்து வந்த விவசாயிகளின் தலைவர்களான தேபார், சித்தாபாய் முதலியவர்கள் பர்டோலிக்கு விஜயம் செய்து காந்திஜியின் ஆசிபெற்றார்கள். அந்த வைபவத்தில் கலந்து கொள்ளத் தமிழ் நாட்டிலிருந்து கோவிந்தராவ் என்பவரும் வேறு சிலரும் சென்றிருந்தார்கள்.

கொடி வணக்கத்துடன் விழா ஆரம்பமாயிற்று. கூட்டத்தில் பேச எழுந்தபோது காந்திஜி கடிகாரத்தைப் பார்த்தார். மாலை வண்டிக்கு, கோவிந்தராவையும் வேறு சில ஊழியர்களையும் தம் தம் ஊருக்குத் திரும்பவேண்டும் என்று அவர் கட்டளையிட்டிருந்தார். பிரசங்கம் முடியும் வரையில் அவர்கள் காத்திருக்க வேண்டாம் என்றும் கொடி வணக்கம் முடிந்ததும் நேராக ரெயிலடிக்குச் செல்லவேண்டும் என்றும் கூறி முன்னதாகவே பெட்டி படுக்கைகளை அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டார். ஊழியர்களுக்கோ, காந்தி

ஜியின் பிரசங்கத்தையும் கேட்டு விட்டு அன்று மாலைப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ள ஆசை. விடை கொடுத்து விட்டால் சில நிமிஷங்கள் காலதாமதம் செய்தாலும் காந்திஜி மனம் பொறுக்கமாட்டார். தங்களுடைய ஆசையை மகாதேவ தேசாயிடம் சொல்லி, காந்திஜியிடம் அநுமதி கோருமாறு அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

கடிகாரத்தைப் பார்த்து விட்டுக் காந்திஜி மேடையின் கீழே முன் வரிசையில் அமர்ந்திருந்த கோவிந்தராவைச் சைகை செய்து கூப்பிட்டார். திகைப்புடன் கோவிந்தராவ் எழுந்து வந்தபோது, காந்திஜி, "கொடியை வணங்கி விட்டுவா" என்றார்.

எதற்காகத் தன்னை மட்டும் கொடி வணக்கம் செய்யச் சொல்கிறார் என்று கோவிந்தராவுக்கு விளங்கவில்லை. அவர் கொடியை வணங்கி விட்டுக் காந்திஜியிடம் வந்தார். காந்திஜியோ, வேறு கட்டளையிடாமல் பிரசங்கத்தைத் துவங்கி விட்டார்.

காந்திஜியின் பிரசங்கத்தில் ஒரு பகுதி வருமாறு: "இப்போது ஓர் ஊழியர் தன்னந்தனியாக நின்று கொடி வணக்கம் செய்ததை நீங்கள் பார்த்தீர்கள். தளகர்த்தனுடைய ஆணையை நிறைவேற்றும் சிப்பாயைப் போல அவர் கட்டளையை நிறைவேற்றினார். எதற்காகக் கொடியை வணங்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டிருக்கவில்லை. சுதந்தரப் போரட்டத்தில் அஹிம்ஸா மார்க்கம் மதிக்கப்பட்டு விட்டதால், நான்தான் அதன் தளகர்த்தன். ரண களத்தில் நிற்கும்போதும், முகாமில் ஓய்வு எடுத்துக் கொள்ளும் போதும் ராணுவக் கட்டுப்பாட்டை மீறும் துணிவு சிப்பாய்க்கு ஏற்படாது. அதே போல, நம்முடைய நாட்டிலும், எப்போதும் என்னுடைய ஆணையை ஏற்று நடக்கும் வீரர்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள்.

"இந்தக் கொடியின் மகத்துவத்தைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. இதன்கீழ் அணிவகுத்து நின்று அற்புதமாகப் போராடி வெற்றிபெற்ற வீரர்கள் நீங்கள். பறந்து கொண்டிருக்கும் கொடியின் மானத்தை - கௌரவத்தை - உயிர் கொடுத்துக் காப்பாற்றுவேன் என்று உறுதி கூறித்தான் கொடி வணக்கம் செய்கிறோம். தம்முடைய பொறுப்பை உணர்ந்தே இந்த ஊழியர் கொடியை வணங்கினார் என்று நம்புகிறேன். தளகர்த்தனுடைய உத்தரவை நிறைவேற்றுவதைவிடப் பதின்

மடங்கு ஆர்வம் இந்தக் கொடியின் கௌரவத்தைக் காப்பதில் இருக்கவேண்டும். விருப்பு வெறுப்புக்கும், தன்னிச்சையான அபிப்பிராயத்துக்கும் இங்கு இடம் இல்லை.'' இப்படிச் சொல்லி விட்டுக் கருணை நிறைந்த பார்வையுடன் கோவிந்தராவ் நின்று கொண்டிருந்த பக்கம் திரும்பினார். கோவிந்தராவும் மற்றவர்களும் உணர்ச்சிவசப்பட்டு நின்றார்கள்.

சொல்லாமல் சொல்லிக் காட்டிய உத்தரவைச் சிரமேற் கொண்டு, கோவிந்தராவும் மற்றவர்களும், பிரசங்கம் முடிவதற்குள், காந்திஜியை வணங்கி மௌனமாக விடை பெற்றுக் கொண்டார்கள். பிரசங்கமோ, பிரார்த்தனையோ அவர்களைப் பிறகு வசீகரிக்கவில்லை.

ஞாபகம் இருக்கட்டும்
(1939)

சித்தாபாய் என்பவர் பர்டோலி சத்தியாக்கிரகத்தில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டவர். வீடுவாசலை இழக்க நேரிட்டதும், சொந்தக் கிராமமாகிய வராடிலிருந்து வெளியேறிப் பரோடா சம்ஸ்தானத்திலுள்ள பராப் என்ற கிராமத்தில் குடும்பத்துடன் தங்கி, உடலுழைத்து ஜீவித்து வந்தார். காங்கிரஸ் மந்திரி சபை சத்தியாக்கிரகிகளுடைய நிலங்களைத் திருப்பிக் கொடுக்க நிச்சயித்ததும் வராடிலுள்ள நண்பர்கள், சித்தாபாய் வசிப்பதற்காக ஒரு வீடு கட்டி அதில் வந்து வசிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். காந்திஜி வந்து ஆசிகூறுவதாக இருந்தால் தாம் வருவதாகச் சித்தாபாய் கூறவே, பர்டோலியில் நடந்த விழாவிற்கு மறுநாள் காந்திஜி வராட் கிராமத்துக்குச் சென்றார்.

காந்திஜி வீட்டுக்குள் நுழைந்து 'கிருஹப் பிரவேசம்' செய்தார். அப்போது சித்தாபாய் அவரிடம் 250 ரூபாய்களை நோட்டுக்களாகக் கொடுத்தார். "இது எதற்கு?" என்று காந்திஜி ஆச்சரியத்துடன் கேட்டபோது சித்தாபாய் சொன்னார்: "நான் நன்கொடை அளிக்கவில்லை, பாபு; கடனைத் திருப்பிக் கொடுக்கிறேன். இங்கிருந்து நான் வெளியேறிய பிறகு, நேரடியாகக் காங்கிரஸ் கமிட்டியிடமிருந்து பண உதவி பெறாவிட்டாலும், அவ்வப்போது நண்பர்கள் மூலம் சுமார் இருநூறு ரூபாய்கள் பெறுமான சாமான்களைப் பெற்றுக் கொண்டேன். அதற்கு வட்டி சேர்த்து இப்போது

உங்களிடம் கொடுத்து விட்டேன். இப்போதுதான் என்னுடைய மனம் நிம்மதியடைகிறது.''

காந்திஜி சந்தோஷத்துடன் அதை ஏற்றுக் கொண்டு, பின்வருமாறு பேசினார்: "இன்று மிகவும் புனிதமான நாள். என்றாவது ஒரு நாள் பறிமுதலான நிலங்களைத் திரும்பப் பெறுவோம் என்று பலதடவைகளில் நாங்கள் கூறியிருக்கிறோம். இன்று அந்த வாக்கு நிறைவேறிவிட்டது. ஆனால் வெற்றிக் குதூகலத்தில் நம்மை - நமது கடமையை - மறந்துவிடக் கூடாது. சத்தியத்திலும் அஹிம்ஸையிலும் நம்பிக்கை வைத்துப் போராடியதால், வெற்றிபெற ஆண்டவன் கருணை கூர்ந்தான். சித்தாபாயைப் போலப் பலர் சபதம் எடுத்துக் கொண்டு வீடுவாசலை விட்டு வெளியேறினார்கள். இந்த வெற்றி, நம்முடைய மகத்தான போராட்டத்துக்கு ஒரு சிறிய உதாரணமாகும். இதே மார்க்கத்தில் போராடி தேச விடுதலை பெற முடியும் என்ற நம்பிக்கையூட்டும் சம்பவமாகும். வெற்றிப் பெருமிதத்தில் - களியாட்டத்தில் - மனம் செலுத்த வேண்டாம். மகத்தான சோதனை ஒன்று எதிரே இருக்கிறது. அதிலும் வெற்றி பெறவேண்டும் என்ற உறுதியுடன் உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். நமக்குச் சக்தியும் தைரியமும் கொடுத்து வெற்றி மார்க்கத்துக்கு வழிகாட்ட ஆண்டவனைப் பிரார்த்தியுங்கள். மீண்டும் வீடு வாசலை இழக்க நேரிடும். தூக்கு மேடைக்குச் செல்லவும், போராட்டத் தீயில் குதித்துச் சகலத்தையும் தியாகம் செய்யவும் சந்தர்ப்பம் நேரிடக்கூடும். இன்முகத்துடனும் தைரியத்துடனும் நாம் எதிர்த்து நின்றால் தேச விடுதலை கிடைத்துவிடும். நாம் இன்று கிடைத்த வெற்றியை மறக்கக் கூடாது. அதற்காக நாம் போராட்டத்தையும் மறக்கக் கூடாது. மறந்தோமானால் நாம் தொலைந்தோம். சமயம் வந்தால் மீண்டும் தோள்தட்டி நிற்க நீங்கள் தயாராவீர்கள் என்றே நம்புகிறேன்.''

சத்தியாக்கிரக தர்மம்

(1939)

ராஜ்கோட்டில் தங்கியிருந்த போது காந்திஜி தினசரி பொது இடத்தில் மாலைப் பிரார்த்தனை நடத்தி வந்தார். 16-4-39 அன்று, பிரார்த்தனைக் கூட்டத்தில், காந்திஜியைக் கண்டிக்க, முஸ்லிம்களும் தாழ்த்தப் பட்டோரும் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம்

செய்யப் போவதாகக் காந்திஜிக்குத் தகவல் கிடைத்தது. சந்தர்ப்பம் வாய்த்தால் காந்திஜியிடம் செருப்புக்களைக் கோத்த மாலையை அளித்து அவமானப்படுத்தவும் அவர்கள் திட்டமிட்டிருப்பதாகத் தெரிந்தது. காந்திஜியோ மனம் கலங்கவில்லை. அதற்குப் பதிலாக, தம்மைப் பார்க்க வேண்டும் என்று யார் கோரினாலும், தடை செய்யாமல் உள்ளே அநுமதிக்கும்படி, உடனிருந்தவர்களிடம் கட்டளையிட்டார்.

வழக்கம்போல, ராஷ்ட்ரீயசாலை மைதானத்துக்கு அவர் மோட்டாரில் கிளம்பினார். வழியில் சுமார் அறுநூறு பேர்கொண்ட ஒரு கூட்டம் கறுப்புக் கொடிகளை வீசி, ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. பிரார்த்தனை மைதானத்தைச் சுற்றி, வேலிக்கு வெளியே நின்று கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் வசைமொழி கூறிக் கூச்சலிட்டார்கள். காந்திஜியோ, அவர்களை நோக்கி வணங்கிவிட்டு, பிரார்த்தனைக்கு அமர்ந்துவிட்டார். அமைதியாகப் பிரார்த்தனை நடக்க விடாமல் அவர்கள் கூச்சலிட்டுக் கொண்டே இருந்தார்கள். பிரார்த்தனை முடிந்ததும், ஆர்ப்பாட்டக்காரர்கள் காந்திஜி அமர்ந்திருந்த மேடையை நோக்கிப் பாய்ந்தார்கள். காரில் ஏறக்கூட முடியாமல் போகவே, காந்திஜி கீழே இறங்கி ஜனங்களை விலக்கிக் கொண்டு நடக்கலானார். அவருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து விடக்கூடுமோ என்று பயந்த தொண்டர்கள், சுற்றிக் கைகோத்து வளைந்து கொண்டு வரலானார்கள். "நீங்கள் விலகிச் செல்லுங்கள். நான் இங்கேயே உட்கார்ந்து விடுகிறேன், அல்லது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நடுவே புகுந்து செல்கிறேன். ஆண்டவன் அருள் என்னைக் காப்பாற்றும்" என்றார் காந்திஜி.

திடீரென்று அவருடைய இடுப்பில் வலி எடுத்து, இற்று விழுவது போலிருந்ததாம். மன அதிர்ச்சி ஏற்படக் கூடிய சம்பவம் நேரும் போது அவருக்கு இம்மாதிரி வலி வருவதுண்டு. அவர் கண்களை மூடிக் கொண்டு ராம ஸ்மரணை செய்தார். பக்கத்திலிருந்த தொண்டர்களின் காதில், மெல்லிய ஆனால் தெளிவான குரலில் அவர் உச்சரிக்கும் ராமநாமம் விழுந்தது. சட்டெனக் காந்திஜி மெய்சிலிர்த்துக் கண் விழித்தார். எதிரே நின்று கொண்டிருந்த 'பாயத்' ஒருவரைப் பார்த்து, "உங்களுடன் நான் வருகிறேன். போகலாம், வாருங்கள். என்னுடைய தொண்டர்களுடைய பாதுகாப்பில் இங்கிருந்து வெளியேற எனக்கு மனம்

இல்லை" என்றார். சுற்றி நின்றிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களின் தலைவர்கள் திகைத்துப் போனார்கள். அவர்களில் சிலர், கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னால் வந்தார்கள். "மகாத்மாஜி, வாருங்கள், போகலாம்" என்று அழைத்தார்கள். அவர்களில் ஒருவருடைய தோளைப் பிடித்துக்கொண்டு நடந்து காந்திஜி, கார் நிற்குமிடம் சென்றார்.

காரில் செல்லும்போது, பியாரிலாலிடம் காந்திஜி சொன்னார்: "இதுதான் சத்தியாக்கிரக மார்க்கம். எதிரியின் மடியில் தலை வைத்துப் படுத்துக்கொள்ள மனத் துணிவு வேண்டும். நம்முடன் எதிர்த்துப் போராட வேண்டுமா அல்லது, எதிர்க்காமல் நிற்கும் நம்மை ஒரே வீச்சில் தொலைத்து விடலாமா என்று யோசிக்கும் பிரச்னையை எதிரிக்கு விட்டுவிட வேண்டும். சென்ற ஐம்பது வருஷ காலமாக, நான் இந்த மார்க்கத்தைக் கையாண்டிருக்கிறேன். என்னுடைய வாழ்க்கையில் தோல்வி என்பதே நேரவில்லை."

காந்திஜி ஜாகைக்குச் சென்றதும் இரண்டு முஸ்லிம் தலைவர்கள் அவரைச் சந்திக்க வந்தார்கள். காந்திஜியைப் பார்த்ததும், "நீங்கள் அசட்டுத் துணிச்சலுடன் நடந்து கொண்டு விட்டீர்கள். வெறி பிடித்த கூட்டத்தினர் தர்மாதர்மத்தைப்பற்றி யோசிக்காமல் எதையும் செய்யத் துணிந்து விடுவார்களே!" என்றார்கள்.

"ஆனால் என்னுடைய தர்மமே வேறு. இந்த மாதிரி என்னுடைய உயிருக்கே உலை வைக்கக்கூடிய சில சம்பவங்கள் தென் ஆப்பிரிகாவிலும் இந்த நாட்டிலும் நடந்திருக்கின்றன. ஒவ்வொரு சம்பவத்திலும் எதிரியின் மனம் மாறியிருக்கிறது. என்னுடைய உயிரைக் குடிப்பதுதான் எதிரியின் நோக்கம் என்றால் நான் தடுப்பானேன்? சமூகத்துக்குச் சேவை செய்யவேண்டும் என்ற ஒரே நோக்கமுள்ள சத்தியாக்கிரகிக்கு, மனப்பூர்வமான பிரார்த்தனையுடன் எதிரியின் வசம் ஒப்புக் கொடுப்பதைவிட வேறு சிறந்த மார்க்கம் ஏது? சத்தியாக்கிரகியை உற்ற நண்பன் என்று அறிந்து கொள்ளாமல், வெறுப்பினாலும், மனப் பிராந்தியினாலும், வெறியினாலும் ஒருவன் விரோதியென்று எண்ணிக் கொண்டால் அவனுடைய மனம் மாறுவதற்கு, சத்தியாக்கிரகி உயிரைக் கொடுக்க வேண்டி நேரிட்டால் வெற்றிக்கு அதைவிடச் சிறந்த சந்தர்ப்பம் ஏது?" என்றார் காந்திஜி.

கதை சொல்லும் தாத்தா

(1939)

கஸ்தூரிபா ராஜ்கோட் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ள நிச்சயித்தபோது தம்முடனிருந்த ராம்தாஸ் காந்தியின் அஞ்சு வயதுக் குழந்தையையும் அழைத்துக்கொண்டு சென்றார். அப்போது ராம்தாஸ் சிம்லாவில் இருந்தார். ராஜ்கோட்டில், கஸ்தூரிபா காவலில் இருக்க நேர்ந்தபோது குழந்தையைப் பிரிய நேரிட்டது. முகாமலிருந்தவர்கள் எவ்வளவோ சமாதானம் செய்தும் குழந்தை பாட்டியிடம் செல்லவேண்டும் என்று பிடிவாதம் பிடித்து அழுதுகொண்டே யிருந்தது. காந்திஜியோ சிறிது கூட ஓய்வில்லாமலிருந்ததால், அவரிடம் குழந்தையின் பிடிவாதத்தைப்பற்றிச் சொல்ல மற்றவர்கள் தயங்கினார்கள். நிமிஷத்துக்கு நிமிஷம் குழந்தையின் பிடிவாதம் அதிகரிக்கவே, கடைசியில் காந்திஜியிடம் தெரிவித்தார்கள்.

காந்திஜி குழந்தையை அழைத்து மடியில் வைத்துக்கொண்டே வேலையில் கவனம் செலுத்தலானார். குழந்தையின் அழுகை ஓய்ந்தது என்றாலும், சிறிது நேரத்துக்கெல்லாம், அவன் பாட்டியைப்பற்றிக் கேள்விமேல் கேள்வி போட்டு நச்சரிக்க ஆரம்பித்தான். கடைசியில் காந்திஜி குழந்தைக்குக் கதை சொல்லலானார். துருவனுடைய கதையைக் காந்திஜி ஆரம்பித்ததும் அவன் சுவாரஸ்யமாகக் கேட்டான். துருவன் தவம் செய்தான் என்று பாபு சொல்லும்போது, "நானும் பகவானைப் பிரார்த்தனை செய்தால் பாட்டி வந்துவிடுவாள், இல்லையா?" என்று கேட்டான் சிறுவன்.

"கட்டாயம் வந்துவிடுவாள். துருவனைப்போல நீயும் கண்களை மூடிக்கொண்டு பிரார்த்திக்க வேண்டும். எவருடனும் பேசக்கூடாது" என்றார் காந்திஜி.

சிறுவன் தாத்தாவின் மடியிலிருந்து கீழே இறங்கி உட்கார்ந்து கொண்டு, கண்களை மூடிக்கொண்டு பலத்த குரலில் ராம நாமம் சொல்ல ஆரம்பித்தான்.

"சத்தம் போடாதே, மனசுக்குள் சொன்னால்தான் பகவானுக்குச் சீக்கிரம் காது கேட்கும்" என்றார் பாபு, சிரித்துக்கொண்டே. சிறுவன் மௌனமாக இருந்தான். காந்திஜி அலுவல்களைக் கவனிக்க ஆரம்பித்தார்.

காந்திஜி உணவருந்த எழுந்தபோது சிறுவனும் சென்றான். மீண்டும் கண்களை மூடிக்கொண்டு பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தான். சில மணி நேரத்திற்குப் பிறகு சிறுவன் காந்திஜியிடம் வந்து நின்றான். "என்ன அம்மா?" என்று கொஞ்சலாகக் கேட்டார் பாபு. ஆனால் தலை நிமிராமல் அலுவல் செய்துகொண்டு இருந்தார்.

"இன்னும் பாட்டி வரவில்லையே? பகவான் என்னை ஏமாற்றி விட்டாரா?" என்று கேட்டான் சிறுவன் துக்கம் ததும்பும் குரலில்.

"பகவான் குழந்தைகளை ஏமாற்றமாட்டார். உன்னுடைய பிரார்த்தனை அவருக்குச் சரியாகக் கேட்கவில்லை. நீ நன்றாகக் கண்களை மூடிக்கொண்டாயா?" ராம நாமத்தை மட்டும் சொன்னாயா?" என்று கேட்டார் காந்திஜி.

"ஓ! நன்றாக இறுக்கி மூடிக்கொண்டேன்."

"அப்படியானால் கட்டாயம் பகவான் காதில் விழும். அவர் பாட்டியை அழைத்து வந்துவிடுவார்" என்று சொல்லி விட்டு, "துருவன் எப்படித் தவம் செய்தான் தெரியுமா?" என்று மீண்டும் கதை சொல்ல ஆரம்பித்தார்.

சிறுவன் சந்தோஷத்துடன், "சரி, தாத்தா, இன்னும் ஒரு தடவை பிரார்த்தனை செய்கிறேன்" என்று கூறிக்கொண்டே எழுந்து ஓடினான்.

இதன் நடுவே, குழந்தையை ராம்தாஸிடம் அனுப்பக் காந்திஜி ஏற்பாடு செய்துவிட்டார்.

பிராயச்சித்தம்
(1939)

ராஜ்கோட் சத்தியாக்கிரகத்தில், இந்திய சமஷ்டி நீதிபதி மாரிஸ் குவையர் அளித்த தீர்ப்புத் தமக்குச் சாதகமாக இருந்துங் கூடக் காந்திஜி அதை நிராகரித்துவிட்டார். இதைக்கண்டு தேசமே திகைத்தது. "நான் தோல்வியுற்றேன்" என்றே காந்திஜி கூறினார். ராஜ்கோட்டிலிருந்த காந்திஜியின் வயது முதிர்ந்த சகோதரியும் கஸ்தூரிபாவும் வருந்தினார்கள். காந்திஜியின் போக்கைவிட காந்திஜியைப்பற்றி அரண்மனைச் சிப்பந்திகளும் மற்றவர்களும் வம்பு பேசுவதைக் கேட்டே அவர்கள் வருந்தினார்கள்.

ஒருநாள் கஸ்தூரிபா பின்வருமாறு காந்திஜியிடம் கேட்டார். "உங்களுடைய கௌரவத்தைப்பற்றி ஊரில் என்ன என்னவோ பேசிக் கொள்கிறார்களே? நீங்கள் தோற்று விட்டதாக அரண்மனைச் சிப்பந்திகள் பேசுவதாக அக்கா கூறி வருந்துகிறார்களே! நீங்கள் அவர்களுக்குச் சமாதானம் சொல்லக்கூடாதா?"

''நீதான் சமாதானம் சொல்லேன்'' என்றார் பாபு.

"சொல்லலாம். ஆனால் எனக்கே விளங்கவில்லை. வெளியில் வம்பு பேசுவது இருக்கட்டும். நீங்களே தோற்றுவிட்டதாகச் சொல்லவில்லையா?'

''ஆமாம், ஆனால் நீ நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் தென் ஆப்பிரிகாவில் இருந்தபோது நீ சாகக் கிடந்தாய் அல்லவா?''

"ஆமாம்."

''அப்போது நீ மாமிச ஆகாரம் சாப்பிட்டால்தான் பிழைப்பாய் என்று டாக்டர் கூறினாரே, ஞாபகம் இருக்கிறதா?''

"நன்றாக நினைவு இருக்கிறது.''

"உன் இஷ்டம்போல் செய் என்று நான் அநுமதித்தும் நீ என்ன செய்தாய்? பிராணன் போனாலும் போகட்டும், மாமிசத்தைத் தொடமாட்டேன் என்று கூறினாய் அல்லவா? ஆண்டவனிடம் நம்பிக்கை வைத்துத்தானே நீ அப்படிச் சொன்னாய்? விரத பங்கம் செய்ய நீ விரும்பவில்லையே?"

"ஆமாம்."

"அதேபோலத்தான் இந்தச் சம்பவமும். ஆண்டவனிடம் நம்பிக்கைகொண்டுதான் நான் உபவாசமிருந்தேன். தாகோர் சாகேபும், தர்பார் வீரவல்லாவும், மனம் மாறி, என்னிடம் சமரஸம் கோரும் வரையில் நான் உபவாசத்தை நீடித்திருக்க வேண்டும். இடையில் என்னுடைய புத்தி பேதலித்து விட்டது. தர்பார் வீரவல்லாவும், தாகோர் சாகேபும் என்னிடம் வந்து 'உபவாசத்தைப் பூர்த்தி செய்யுங்கள்; எங்களுடைய வாக்குறுதியை நிறைவேற்றுகிறோம்' என்று கேட்டிருக்கக் கூடும். ஆனால் நானோ, பிரிட்டிஷ் சர்க்கார் தலையிடாவிட்டால் நான் தோற்று விடுவேனோ, இறந்து விடுவேனோ என்று ஐயப்பட்டேன். இந்த ஐயப்பாடே என்னைத் தர்மத்திலிருந்து, போர்முறைச் சாகஸங்களிலிருந்து, தவறச் செய்துவிட்டது. குவையர் தீர்ப்பினால் சட்ட

பூர்வமாக நாம் வெற்றியடைந்து விட்டோம் என்பது உண்மை தான். ஆனால் அதற்குத் தார்மிக ஆதரவு இல்லையே! தாகோர் சாகேபும், தர்பார்வீரவல்லாவும் இருதயபூர்வமாக அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்லமுடியாது. அவர்களு டைய மனம் மாறினால்தான் என்னுடைய வெற்றி நிச்சயமாகும். நான் அவசரப்பட்டுத் தவறு செய்துவிட்டேன் என்று தோன்றிய தால் தான், கிடைத்த பலனை உதறிவிட்டு, மீண்டும் போராடி உரிமைபெற நிச்சயித்தேன்."

"உங்களுடைய உள்ளப்பாங்கைத் தர்பார் வீரவல்லாவும், தாகோர்சாகேபும் தெரிந்துகொள்ளவில்லையே? அவர்கள் இன்னும் சூழ்ச்சி செய்துகொண்டிருப்பதாகத்தானே தெரிகிறது. இல்லா விட்டால் குவையரின் தீர்ப்புப்படி எல்லாம் சுமுகமாக நடக்கும் அல்லவா?"

"உண்மைதான். நான் ஆரம்பத்திலேயே அவர்களை விரோதித்துக் கொண்டுவிட்டேன். ஆகவே இப்போது அவர்கள், தங்களுடைய கட்சியை ஸ்தாபிக்கச் சூழ்ச்சி செய்வதில் தவறு இல்லை. சத்தியாக்கிரக தர்மத்தில் பகைக்கும் குரோதத்துக்கும் இடம் இல்லை. ஆண்டவன் அவர்கள் மூலமாக என்னைச் சோதிக் கிறான். நான் செய்தது தவறு என்று தோன்றினபிறகு, என் னுடைய வழிப்படி, மீண்டும் போர் நடத்தவேண்டுமே தவிர, இடையில் கிடைத்த பலனை அநுபவிக்கத் துணியக்கூடாது. இப் போது ஆண்டவன் என் கண்களைத் திறந்துவிட்டான்."

"மாரிஸ் குவையர் தீர்ப்பினாலும் மாறுதல் ஏற்படவில்லையே? நாம் எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டோம். ஆனால் எதிரிகளோ, தங்களுடைய கொடுங்கோலாட்சியைப் பலப்படுத்திக் கொண்டு தானே இருக்கிறார்கள்?"

"ஆமாம். என்னுடைய அவசரத்தினால் அவர்களுடைய மனம் மாறும் தருணம் தவறிவிட்டதே! நான் செய்த பிசகுக்குத் தண்டனையை அநுபவித்துத்தானே தீரவேண்டும்? உண்மையில் நான் தோல்வி யடையவில்லை. சத்தியாக்கிரக தர்மத்தில் தோல் விக்கு இடமே கிடையாது. என்னுடைய உழைப்பினால் கிடைத்த பலனை அநுபவிக்க வேண்டுமே தவிர, இடையில், (சட்டரீதியாக) கிடைத்ததை ஏற்றுக்கொள்ளக் கூடாது. என்னுடைய முயற்சி யில் நேர்ந்த தவற்றைத்தான் தோல்வி என்றேன். தவற்றை ஒப்புக்

கொள்வதால், தார்மிக பலம் பெருகுகிறது. அப்படி ஒப்புக் கொள்வதே வெற்றியாகும். இதை நீயே அக்கா அவர்களிடம் எடுத்துச்சொல்'' என்றார் காந்திஜி.

பாம்பும் பயமும்

(1939)

''குவையர் தீர்ப்பை நீங்கள் நிராகரித்து விட்டதால் என்ன லாபம் கிடைத்தது?'' என்று முகாமில் இருந்த ஒரு சிறுவன் காந்திஜியிடம் கேட்டான்.

'' அந்தத் தீர்ப்பு ஒரு பாம்புபோல. நாம் பாம்பைக் கண் டால் என்ன செய்கிறோம்?'' என்று கேட்டார் காந்திஜி.

'' பயப்படுகிறோம், அடித்துக் கொல்லவும் முயலுகிறோம்.''

'' நானும் வீரவல்லாவும் இந்தத் தீர்ப்பைக் கண்டு பாம்பிட மிருந்து தப்பித்துக்கொள்ள முயலுவதுபோல ஒதுங்குகிறோம். பயந்துகொண்டிருப்பதால் பலனில்லை. அதனால், மெள்ள அந்தப் பாம்பை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டேன். இப்போது நாங்கள் இருவரும் பயமின்றி இருக்கலாம்.''

'' ஆனால் கிடைத்த லாபம்தான் என்ன ?''

''பாம்பைக் கண்டதும் பயந்து சாகாமல் அதை வீட்டை விட்டுத் துரத்துவது லாபமல்லவா? பாம்பைக்கண்டு வீரவல்லாவும் நானும் பயந்துகொண்டு மட்டும் இருக்கவில்லை; ஒருவரை யொருவர் பார்க்கமுடியாமல் வெவ்வேறு இடங்களில் பதுங்கிக் கொண்டிருந்தோம். இப்போது பாம்பு வீட்டைவிட்டு வெளியேறி விட்டது. நாங்களும் பயந்தெளிந்து நேருக்கு நேர் சந்திக்கமுடியும் அல்லவா ? இது லாபந்தானே?''

''வீரவல்லாவைக் குறிப்பிட்டுப் பேசுவதுதான் எனக்கு விளங்கவில்லை. அவருக்கு......''

''அவரும் உன்னைப் போலத்தானே! அரச குடும்பத்தார் எனக்கு வேண்டியவர்கள். அவர்களுக்காக வீரவல்லா பாடு படுகிறார். வீரவல்லாவும் மனிதர்தாமே! அவரிடம் நல்ல குணமும் இருக்கத்தானே இருக்கும்? உன்னுடைய உள்ளத்தைப் போல அவருக்கும் உள்ளம் உண்டு. உன்னை நான் அன்புடன் அணைத்துக் கொள்வதுபோல அவரிடமும் பழக முடியாதா ?

மனிதனிடமிருக்கும் நற்குணத்தை மட்டும் நாம் பெரிதாகக் கொண்டு பாராட்டினுல், அவனை வசப்படுத்த முடியும்."

"சரி, உங்களுடைய பாம்புக் கதையையே எடுத்துக் கொண்டாலும், இப்போது பாம்புடன் அது இருந்த வீடும் போய்விட்டதாக அல்லவா தோன்றுகிறது?"

" அப்படி அல்ல, சென்ற மூன்று மாதங்களாக நாம் போராடிய அநுபவம் இருக்கிறது. நம்முடைய மார்க்கம் தவறு என்று தெரிந்ததும் உத்தியை மாற்றிக் கொண்டோம். அஹிம்ஸையில் நம்முடைய பற்று எவ்வளவு இருக்கிறது என்று எடை போடக் கிடைத்த சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று. அன்பு வழியினுல் எதிரியின் மனத்தை மாற்றவேண்டும். இப்போதோ, நாம் அவர்களை விரோதித்துக் கொண்டோம். அதனுல் கிடைத்த பலன் வெற்றியாகாது. நம்முடைய போராட்டம் முடியவில்லை. நாம் அவர்களை அன்பினுல் வெல்ல வேண்டும். இப்போது இந்தத் தீர்ப்பை ஒதுக்குவதால், புது ஆயுதங்களைக் கொண்டு நேரடியாகப் போராடச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. எதிரி வசப்பட்டால் தான் போரில் வெற்றி கிடைக்கும்."

மௌன விரதம்

(1939)

காந்திஜி வாரத்தில் ஒருநாள் மௌன விரதம் அநுஷ்டிப்பதுண்டு. ஒரு சமயம் அவர் இரத்தக் கொதிப்பினுல் அவஸ்தைப் பட்டபோது ஓய்வை உத்தேசித்து மௌனவிரதம் ஏற்றுக் கொண்டார். மிகவும் அவசியமான கேள்விகளுக்குமட்டும் சுருக்கமாகப் பதில் சொல்வதை வழக்கமாக வைத்துக் கொண்டார். டாக்டர் ராஜன் அந்தச் சமயத்தில் காந்திஜியைப் பேட்டி காணச் சென்றிருந்தார். அவரிடம், "உடல்நலனைக் கருதி, இந்த விரதம் ஏற்றுக் கொண்டிருக்கிறேன்" என்று துண்டுக் கடிதத்தில் எழுதிக் காட்டினுர் காந்திஜி.

ஊருக்குத் திரும்பிய பிறகு, டாக்டர் ராஜனுக்கு மௌன விரதத்தின் பலனை அறியும் ஆவல் தோன்றியது. உடனே அவர் மகாதேவ தேசாய்க்குப் பின்வரும் கேள்விகள் கேட்டுக் கடிதம் எழுதினுர்: "பாபுவின் விரதத்தினுல் இரத்தக் கொதிப்பு அடங்கி

இருக்கிறதா? மனச் சோர்வு நீங்கி உற்சாகத்துடனும், சுறுசுறுப்பாகவும் இருக்கிறாரா? உடல் வலிவும் மன அமைதியும் கிடைத்தனவா ?"

இதற்குக் காந்திஜியே பின் வருமாறு பதில் எழுதி யிருக்கிறார்: "பொதுவாகவே நான் பேசுவதைக் குறைத்துக்கொண்டு விட்டேன். நோயாளிகளுடனும், தடுக்க முடியாத விருந்தாளிகளுடனும் மட்டும்தான் நான் பேசுவது தற்போதைய வழக்கம். ஆசிரமத்தல் அமைதியும் நிசப்தமும் இருக்கவேண்டும் என்பது என்னுடைய அவா. சில சமயங்களில் கட்டுமீறி ஊழியர்கள் நடந்து கொண்டால், நான் அவர்களைக் கடிந்து கொள்வது வழக்கம். இப்போது அபூர்வமாக ஆசிரமத்தில் இரைச்சல் ஏற்பட்டாலுங்கூட நான் மௌனவிரதம் அநுஷ்டிப்பதால், கோபத்தை வெளிக் காட்ட முடிவதில்லை. பொதுவாகக் கோபமே வருவதில்லை. அதனால் உடல் சோர்வும் ஏற்படாமல் தடுக்க முடிகிறது.

"டாக்டர்கள் என்னைப் பரிசோதித்ததில், இரத்தக் கொதிப்பு அடங்கி யிருப்பதாகக் கூறியதுடன், தொடர்ந்து சிலகாலம் மௌனவிரதம் அநுஷ்டிக்கும்படி யோசனை கூறினார்கள்.

"மௌனவிரதம் அநுஷ்டிப்பதால் மனம் எப்போதும் விழிப்படைந்திருக்கிறது. எல்லாருடனும் பேசிப் பழகிக் கொண்டிருக்கும்போது செய்யும் வேலையைவிட அதிகமாக இப்போது வேலை செய்ய முடிகிறது.

"எல்லாவற்றுக்கும் மேலாக மனத்தில் அமைதியும் சந்துஷ்டியும் இருக்கின்றன. உடலிலும் உள்ளத்திலும் உற்சாகம் இருக்கிறது. சில சமயம் நன்றாகத் தூங்கவும் முடிகிறது.

"சிறைவாச காலத்தில் கட்டாயத்தின் பேரில் கைதிகள் மௌனமாக இருக்க நேரிடுகிறது. அதனால் அவர்களுக்கு உள்ளச் சோர்வும் ஓரளவு சோம்பேறித்தனமும் ஏற்படுவதை நான் கவனித்திருக்கிறேன். ஆகவே மௌனவிரதம் அநுஷ்டிப்பதிலும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஓய்வுக்காக மௌனவிரதம் எடுத்துக்கொண்டாலும், அதை விரதமாக-தார்மிகப் பண்புள்ளதாக - ஆத்ம பலமூட்டும் ஔஷதமாக - ஏற்றுக்கோள்ளவேண்டும். இல்லாவிட்டால் கோரிய பலன் கிடைக்காது."

*

வாக்கு மகிமை

(1939)

பீஹாரிகளிடமும் ஒரியாக்காரர்களிடமும் காந்திஜிக்கு எப்போதுமே விசேஷ அநுதாபம் உண்டு. இந்த இரண்டு மாகாணங்களுந்தாம் தரித்திர நாராயணனுடைய க்ஷேத்திரம் என்று அவர் சொல்வார். பீஹாரைச் சேர்ந்த அநுக்கிரக நாராயண சின்ஹா வார்தாவுக்கு வந்தபோது, மக்களுடைய அறியாமையைப் போக்க, ஆதாரக் கல்வியைப் பரப்ப, விசேஷத் திட்டங்கள் போட்டிருப்பதாகச் சொன்னார். அப்போது காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜிநாமாச் செய்துவிட்டன.

"மிகவும் சந்தோஷம். இவர்கள் அறிவாளிகளாக மாறும் வரையில் நாம் சுதந்தரப் போராட்டம் நடத்தாமல் இருக்க முடியாதே?" என்றார் காந்திஜி.

"அது உங்களுடைய கையில் அல்லவா இருக்கிறது?" என்றார், சின்ஹா சிரித்துக்கொண்டு.

"நாம் இப்போது சத்தியாக்கிரகம் ஆரம்பித்தால் மக்கள் அதற்குத் தயாராக இருப்பார்களா?" என்று கேட்டார் பாபு.

"ஹேஷ்யங்களை வைத்துக் கொண்டு சொன்னால் தேசத்தில் பரபரப்பு இருப்பதாகத் தெரிகிறது. ஜனங்களுடன் நெருங்கிப் பழகும்போது—என் மாகாணத்தைப் பற்றிய வரையில்—அவ்வளவு உற்சாகம் இருப்பதாகத் தெரியவில்லை."

"அப்படியா? உங்களுடைய மாகாண மக்களுடைய பலம் தானே எனக்கு அவசியம்?"

"ஆமாம்...ஆனால்..." என்று தயங்கினார் சின்ஹா.

"ஆனால் என்ன?" என்று கேட்டார் காந்திஜி.

"ஒரு கதை சொல்வதுண்டு. ஒரு சமயம் பகவானைப் பார்க்க நாரதர் போயிருந்தார். அவரைப் பார்த்து, 'மகரிஷே, இன்று பூமண்டலத்தில் மழை பொழியுமோ?' என்று பகவான் கேட்டார். 'இராது' என்றார் நாரதர். சிறிது நேரம் கழித்து விடைபெற்றுக் கொண்டபோது, நாரதர், அங்கவஸ்திரத்தைப் பிரித்துப் போர்த்துக் கொண்டார். அப்போது பகவான், 'எதற்காக இப்படிச் செய்கிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு நாரதர், 'நான் இப்போது நேராகப் பூமண்டலத்துக்குச் செல்கிறேன். நாளும்

கோளும் பார்த்துக் கணக்கிட்டபோது இன்று மழை இல்லை என்று தெரிந்தது. ஆனால் உங்களுடைய சித்தம் எப்படியோ. யார் கண்டார்கள்? நீங்கள் மழை பொழியச்செய்துவிட்டால் என்ன செய்வது என்று முன் ஜாக்கிரதை செய்துகொண்டேன்' என்றார். அதேபோல் இப்போது மக்கள் தயாராக இல்லை என்று நான் ஊகித்துச் சொன்னேன். ஆனால் உங்களுடைய சித்தம் எப்படியோ? சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்று நீங்கள் முடிவு செய்து விட்டால் மக்கள் பேசாமல் உட்கார்ந்திருக்க முடியுமா ? தளகர்த்தனுடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிய, அவர்கள் மற்ற வேலைகளை விட்டுக் கிளம்ப மாட்டார்களா?''

''நொடிப் பொழுதில் என்னைப் பகவான் ஆகச் செய்து விட்டீர்களே? பேஷ்! ஆனால் ஒரே ஒரு வித்தியாசந்தான். நான் பகவான் அல்ல, பகவானுடைய ஆணையை ஏற்று நடப்பவன். அந்தராத்மா எப்படிக் கூறுகிறதோ அப்படி நடப்பவன்'' என்றார் காந்திஜி.

ஆத்ம பலம்
(1940)

காந்திஜி சாந்திநிகேதனத்திற்குப் போயிருந்தபோது டாக்டர் அமீயா சக்கரவர்த்தியும், குருதயாள் மல்லிக்கும் வேறு சில ஐரோப்பியர்களும் அஹிம்ஸா தத்துவம் பற்றிச் சில சந்தேகங்களைக் காந்திஜியிடம் கேட்டார்கள்.

''பலாத்காரத்தை எதிர்த்து நிற்க முடியாத நிர்க்கதியான நிலைமையில் தற்காப்புச் செய்துகொள்ள வேண்டும் என்ற ஆசையிலாவது, ஆயுதங்களை உபயோகிக்கலாமா?'' என்று ஒருவர் கேட்டார்.

''நிர்க்கதியான நிலைமை என்று சொல்லும்போதே ஆயுத பலமும் பயனற்றதாகிவிடுகிறது. இருதயபூர்வமாக அஹிம்ஸையில் நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் நிர்க்கதியான நிலைமை என்ற எண்ணமே தோன்றாது. பலாத்காரத்தை எதிர்க்கச் சக்தியற்று நிற்கிறோமே என்று எண்ணுவது கோழைத்தனமாகும். அஹிம்ஸை வீரர்களுடைய ஆயுதம், எதிரியை எதிர்த்து வெல்ல முடியும் என்ற ஆற்றலும் நம்பிக்கையும் இருக்கும்போது பலாத்

காரச் செயலால் எதிரியை அடிபணியச் செய்யாமல் அன்பினல் எதிரியை வெல்வதுதான் அஹிம்ஸை தர்மம்."

"யாராவது உங்களைத் தூஷித்துப் பேசுகிறார்கள், அல்லது அவமானப் படுத்துகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போதும் விநயமாக இருக்க வேண்டுமா அல்லது பொறுத்துக் கொண்டு பணிந்து போகவேண்டுமா?"

"விநயமும் பொறுமையும் இருப்பதுதான் பெருமை. அகங்காரம் என்பது மனித சுபாவம். தூஷணையைத் தாங்காமல் எதிர்ப்பதும் பலாத்காரத்தில் இறங்குவதும் இயல்பு. அஹிம்ஸையை வாழ்க்கை விரதமாக ஏற்றுக்கொண்டால், 'நான்' என்ற அகங்காரம் மடிந்துவிடும். கோபமும் கோழைத் தனமும் மாய்ந்துவிடும். உங்களுடைய விநயத்தைக் கண்டு எதிராளி சிறுமைப்பட்டு மன்னிப்புக் கேட்பான். அல்லது, தூஷணையையும் அவமானத்தையும் பொருட்படுத்தாத மனப் பக்குவம் உங்களுக்கு ஏற்பட்டுவிடும். இருவிதத்திலும் வெற்றி தான் கிடைக்கும்."

"ஒரு பைத்தியக்காரன் கொலை வெறிகொண்டு அலைகிறான்; அல்லது கட்டுமீறிய கலகக்காரர்களையோ, ஆத்திரங்கொண்டு கொலைத் தொழிலுக்கும் அஞ்சாத மத வெறியர்களையோ எதிர்க்க வேண்டியிருக்கிறது. ஆயுத பலத்தாலன்றி அவர்களை அடக்க முடியாது என்ற நிலைமை ஏற்படும்போது, துப்பாக்கியோ, புகைக் குண்டோ உபயோகிப்பது நியாயம் அல்லவா?"

"அஹிம்ஸா மார்க்கத்தில் ஆயுத பலத்துக்கு இடமே கிடையாது. ஆத்ம பலத்தினல்தான் அஹிம்ஸா தர்மத்தில் நம்பிக்கையும் உறுதி பெறுகிறது. அஹிம்ஸா மார்க்கத்தை அநுஷ்டிக்கும் ஒருவனைப் பார்க்கும்போதே வெறி கொண்ட பைத்தியக்காரனும், ஆத்திரமடைந்த கலகக்காரனும் அசக்தனுகி விடுவான். அஹிம்ஸை வழியினல் மனக் கட்டுப்பாடும் முகத்தில் தேஜஸும் எற்படும். அஹிம்ஸை என்பது ராஜதந்திர சாகஸ மல்ல. ஆறுதல்கூறும் நீதி சாஸ்திரமுமல்ல. அது அநுஷ்டான பலத்தினல் ஏற்படக்கூடிய சக்தி. மனத்தையும் உடலையும் கட்டுப் படுத்திவிடக் கூடிய சக்தி. 'நான் அஹிம்ஸாவாதி' என்று சொல்லிக்கொள்வதால் ஒருவன் அஹிம்ஸையைக் கடைப்பிடித்த வனாகமாட்டான். அஹிம்ஸையை அநுஷ்டிக்கும்போது வீரமும்

கருணையும் வளரும். தவறு செய்யும் ஒருவனைக் கடைக்கண் பாலித்தே, மௌனமாகவே, நல்வழிப்படுத்தக் கூடிய ஆற்றல் பெற்றுவிட முடியும்.

"துப்பாக்கியும், விஷவாயுக் குண்டும், அஹிம்ஸை மார்க்கத்தில் பயனற்றவை. ஆயுதப் பிரயோக மில்லாமல் மான பங்கத்துக்கு ஆளாகும் ஒரு பெண்ணைக் காப்பாற்றவோ, கலகக்காரர்களை அடக்கவோ என்னால் முடியவில்லை என்றால் நான் தர்மம் தவறினவனாவேன். ஆண்டவன் சந்நிதியில், நான் பதில்கூற வேண்டியவனாவேன். அஹிம்ஸைத்தத்துவமே இருதயபூர்வமானது. அதன் எதிரே பலாத்காரம் செயலற்றுவிடும். அஹிம்ஸை வழியில் நானும் வெற்றிபெற்றதாகச் சொல்ல முடியாது. 'பலாத்காரத்தை ஒவ்வோர் அம்சத்திலும் விலக்கவேண்டும் என்று கருதி விலக்க முயல்வதே என்னை வெற்றி மார்க்கத்தில் அழைத்துச் செல்கிறது. 'அஹிம்ஸையின் எதிரே ஹிம்ஸை மறைந்துவிடும்' என்ற பதஞ்சலிமுனிவரின் சூத்திர வாக்கியத்தில் எனக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது."

"அஹிம்ஸா வழியில் சர்க்காரை நிர்வகிக்க முடியுமா?"

"அந்தமாதிரியொரு பொற்காலத்தை நான் கனவு கண்டுகொண்டுதானிருக்கிறேன். பல்வேறு மனப்பாங்குள்ள மனிதர்கள் சேர்ந்த சமூகத்தில் அஹிம்ஸா பூர்வமாகச் சர்க்கார் நடத்துவது இயலாத காரியம். ஆனால் அஹிம்ஸைக்குப் பிராதான்யம் கொடுத்து, வாழ்க்கையை மேம்படச் செய்வது சாத்தியமே. அராஜகத்தை எதிர்க்கப் படைப்பலம் இருப்பதை நான் விரும்புகிறேன்."

குழந்தையின் சந்தேகம்
(1940)

கடுமையாக வேலை செய்யும்போதுகூட, இடையே சிறிது நேரம் குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடுவது காந்திஜியின் வழக்கம். 1940-ஆம் வருஷம் ஜூலை மாத ஆரம்பத்தில் அவர் வைசிராயைச் சந்திக்கப் புறப்பட்டுக்கொண்டிருந்தார். அவருடைய பேரக் குழந்தைகளில் ஒருவன் ஓடிவந்து, "பாபு, நீங்கள் டில்லிக்குச் செல்கிறீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாம், டில்லிக்கு அல்ல; சிம்லாவுக்குச் செல்கிறேன்."

"எதற்காக?"

"வைசிராயைப் பார்க்க."

"எப்போதும் நீங்களே வைசிராயைப் பார்க்கப் போகிறீர்களே? உங்களைப் பார்க்க அவர் ஏன் ஒரு தடவைகூட இங்கு வருவதில்லை?" என்று கேட்டான்.

காந்திஜி பதில் சொல்லவில்லை. மோஹனப் புன்னகை காட்டினர்.

தத்துவ விளக்கம்
(1940)

வைசிராயின் அழைப்பை ஏற்றுக்கொண்டு 1940-ஆம் ஆண்டு மத்தியில் அவரைச் சந்திக்கக் காந்திஜி சிம்லாவுக்குப் பிரயாணமானர். கால்காவிலிருந்து சிம்லாவுக்குக் காரில் சென்று கொண்டிருக்கும்போது பேச்சுவாக்கில் ஆசிரம ஊழியர் ஒருவரைப்பற்றி, பியாரிலால் காந்திஜியிடம் குற்றஞ் சாட்டிப் பேச வேண்டியதாயிற்று. அந்தக் குற்றச்சாட்டு ஆதார பூர்வமானதும் நியாயமானதுங்கூட.

அதைக் கேட்டுக் காந்திஜி சொன்னர் : "பொதுப்படையாக ஒருவரைப்பற்றிக் குற்றம் சாட்டிப் பேசுவது மன்னிக்க முடியாத தவருகும். எதுவும் ஆராய்ந்து பார்த்து முடிவுக்கு வரவேண்டும். தாம் எழுதிய 'இனவளர்ச்சி' என்ற நூலில் டார்வின் அடுக்கு அடுக்காக ஆதாரம் காட்டிக்கொண்டே போய், முடிவுரையாகத் தம்முடைய சித்தாந்தத்தை ஸ்தாபித்திருக்கிருர். தர்க்கத்துக்கும் எதிர்ப்புக்கும் இடமில்லாமல் அவர் வாதம் செய்து ஸ்தாபித்தாலும், பொதுப்படையாக அவர் கூறியுள்ள வாதங்களை நான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆயிரத்தில் ஒன்று தவறிவிட்டாலும், பெரும்பான்மையைக் கொண்டு முடிவு கட்டுவது, விஞ்ஞான ரீதியில் சரியல்ல. சிறிதுகூடச் சந்தேகத்துக்கு இடமில்லாத அம்சந்தான் உண்மையாகும். எந்த வாதமும், தர்க்கரீதியிலும் நியாயரீதியிலும் சத்திய அம்சத்தில் ஏகோபித்து இருந்தால்தான் ஏற்றுக்கொள்ள முடியும். அந்த நண்பரைப்பற்றி நீ பேசுவதற்கு ஆதாரம் இருக்கலாம். அது உண்மையாகவும் இருக்கலாம். ஆனல் அதைக் கொண்டு ஒரு தீர்மானம் செய்து விடுவது தவருகும்."

பியாரிலால் அதை ஏற்றுக்கொண்டார். ஆனுல் பதில் ஏதும் பேசவில்லை. காந்திஜியோ தொடர்ந்து பேசினுர்: "நிர்த்தாட்சிண்ணியமாக நீ பேசுகிருய். ஒருவருடைய பிறப்பு வளர்ப்பைக் கொண்டோ, சமய சந்தர்ப்பங்களைக் கொண்டோ, குணதோஷம் கற்பிக்கக்கூடாது. என்னைச் சார்ந்தவர்கள் ஒரு லட்சியத்துக்காகப் பாடுபடுகிறவர்கள். அவர்கள் அத்தனைபேரும் சத்திய சாதகர்கள்தாம். மனந் தளருவதும், கோபத்துக்கும் துவேஷத்துக்கும் ஆளாவதும் மனித இயற்கை. நாம் அவற்றைப் பாராட்டாமல் பெருந்தன்மையுடனும், அன்புடனும், பொறுமையுடனும் பழக வேண்டும்."

தம்மையே காந்திஜி திருப்பிக் கொண்டதும் பியாரிலாலுக்கு மனம் தாளவில்லை. பியாரிலால் சொன்னுர்: "சம்பந்தப்பட்ட நண்பர், என்னைப்பற்றி அவதூறு பேசுகிருர் என்பதை உங்களிடமே சொல்லியிருக்கிறேன். என்னிடம் அவர் துவேஷங் காட்டுவதும் உங்களுக்குத் தெரிந்த விஷயந்தான். ஆனுல் நான் பொறுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். பழிவாங்கும் குணம் என்னிடம் இல்லை. குற்றம் பாராட்டி உங்களிடம் சொல்லவும் இல்லை. அவருடன் சௌஜன்யமாகப் பழகிக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனுல்......"

"இவை எனக்குத் தெரியும்" என்று இடைமறித்துவிட்டுப் பாபு மேலும் சொன்னுர்: "உன்னுடைய துக்கம் நியாயமானது என்று தெரியும். நீ அவருடன் பழகுவதையும் நான் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். நீ அவருடன் பொறுமையாகப் பழகவில்லை என்று நான் குற்றஞ் சாட்டவில்லை. எதிரிகளிடமும் அன்பு காட்டுவதுதான் நம்முடைய - சத்தியாக்கிரக - தர்மம். நீ அந்த மாதிரி அன்பு காட்டவில்லை என்றுதான் சொல்கிறேன். உன்னுடைய கசப்பான அநுபவங்களை நீ சொல்கிருய். அதுவே அகங்காரந்தான். எதிரியைப் பழிப்பதே எதிர் நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்குச் சமம்தான். ஆத்ம சோதனை செய்தாயானுல் உண்மை விளங்கும். சந்தர்ப்பக் கோளாற்றினுல்தான் எதிரி தவறு இழைத்தான் என்பதும், உன்னுடைய எண்ணம் தவறு என்பதும் தெரியவரும். தன்னுடைய நிலைமையை உணர்ந்து எதிரி குற்றம் செய்யவில்லை. தம்மிடமுள்ள குறைபாடுகளை ஆய்ந்து பார்க்க அவர் முயலுவதும் எனக்குத் தெரியும்.

தவற்றையும் குறைபாடுகளையும்தெரிந்து கொண்டாலும், அவற்றை நீக்கி வெற்றி காண்பது சுலபமான காரியமல்ல; அதற்குச் சாதனை வேண்டும். தவறு செய்யும் எதிரியிடம் கோபம் கொள்வது தர்மம் அல்ல; அவனுடைய செய்கைக்கு அநுதாபங் காட்டவேண்டும். நம்முடைய நாட்டிலுள்ள சம்ஸ்தானாதிபதிகளையும் அவர்களுடைய செயல்களையும் நான் கண்டிப்பது உனக்குத் தெரியும். ஆனால் அவர்களுடைய நிலைமையும் எனக்குத் தெரியும். அதனால் அவர்கள் பால், அநுதாபமும் வருத்தமுந்தான் ஏற்படுகின்றன. தங்களுடைய உற்ற தோழன் நான்தான் என்று அவர்கள் என்னைக் கருதக்கூடும் என்று நினைக்கிறேன். நீ துவேஷத்தையும் அவதூறையும் குறிப்பிடுகிறாயே? அஹிம்சைத் தத்துவத்தில் உன்னுடைய மனம் ஒன்றியிருந்தால், துவேஷத்தை நீ பாராட்டமாட்டாய். மனத்தில் அன்பு சுரக்கும்போது தீய எண்ணங்களுக்கு இடம் ஏது? கண்டனம், வெறுப்பு, துவேஷம் என்று பாராட்டுவதே அஹிம்ஸா மார்க்கத்துக்கு விரோதமாகும்.''

காந்திஜியின் வாதத்தைப் பியாரிலால் ஏற்றுக் கொண்டார். நடைமுறையில் அவர் அதைக் கடைப்பிடித்து வருகிறார் என்றாலும் 'அடி பிசகி' விட்டது. "நான் மனம் சோரவில்லை. என்னுடைய மனத்திலும் துவேஷமில்லை. ஆனால், அவருடைய போக்கு வருத்தத்தைக் கொடுத்தது. வருத்தம் எல்லை மீறியபோது ஆத்திரமாகி விட்டது'' என்றார் அவர்.

"அதுதான் கூடாது. அபவாதத்துக்கும், துவேஷத்துக்கும் நாம் பயப்படக்கூடாது; ஆளாவதும் கூடாது. நாம் மனம் கலங்கினால், நம்முடைய அநுஷ்டானம்தான் தவறே ஒழியத் தத்துவம் தவறு அல்ல. அன்பும் பலவீனமும் ஒன்றாக வாழமுடியாது. வீரனிடம்தான் கருணை இருக்கும்'' என்றார் காந்திஜி.

தர்மம் தானா ?

(1940)

"அநீதியான மார்க்கத்திலும், ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சியும் ஒருவன் லட்சம் லட்சமாகச் சம்பாதித்து, தன்னுடைய செல்வத்தில் ஒரு பகுதியைத் தர்மச் செலவுக்காக மகாத்மாவான உங்களிடம் கொடுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? அதனால் அவனுக்குப் பாபவிமோசனம் கிடைத்துவிடுமா? கறைப்பட்ட

பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏழைகளுக்குச் செலவிடுவதால் உங்களையும் பாபம் சூழாதா? இந்த மாதிரி அநியாயங்களைத் தவிர்க்க அஹிம்ஸா வழி என்ன?" என்று ஒரு பணக்கார நண்பர் காந்திஜியிடம் கேட்டார்.

காந்திஜி சொன்னார்: "என்னை அசல் மகாத்மா என்று வைத்துக்கொண்டே நான் பேசுகிறேன். தவறான மார்க்கத்தில் சம்பாதித்த பணத்தைத் தானங் கொடுத்ததால் பாவம் குறைந்துவிடாது. அநீதியான வழியில் சம்பாதித்த பணத்தை வைத்துக் கொள்வது, அதிகப் பாவமாகும். தானம் செய்வதால், உபரியாகச் சேரும் பாவம் குறைந்துவிடும். என்னிடம் கொடுத்து, நான் நல்ல காரியங்களுக்காக, அந்தப் பணத்தைச் செலவிடுவதால், ஓரளவு பாவத்தின் வேகம் குறையக்கூடும். ஆனால், பாவமே மறைந்து விடாது. கறைப்பட்ட பணத்தை நான் ஏற்றுக் கொள்வதில் தவறு ஏதும் இல்லை. சாக்கடை நீர் சமுத்திரத்தில் கலக்கும்போது சமுத்திரம் நாறிவிடுவதில்லை. சமுத்திரத்தில் கலப்பதால், சாக்கடை நீர்தான் சுத்தப்படுகிறது. அதேபோல், தர்ம காரியங்களுக்குச் செலவிடும்போது, கறைப்பட்ட பணமும் தூய்மை பெற்று விடுகிறது. ஏழைகளைக் கொடுமைப்படுத்திச் செல்வ வந்தர்களாக மாறுகிறவர்களை, அழித்து விடுவதால், தீமையை மாற்றிவிட முடியாது. ஏழைகளின் அறியாமையை ஒழிக்கப் பாடுபடவேண்டும். சுரண்டல் பேர்வழிகளுடன் ஒத்துழைக்காமல், அவர்களைப் பகிஷ்கரிக்கும்படி ஏழைகளுக்குப் போதிக்க வேண்டும். ஏழைகளின் மன உறுதியைக் கண்டு, சுரண்டல் பேர்வழிகளும் திருந்திவிடுவார்கள். முதலும், முதலாளித்துவமும் கெடுதல்கள் அல்ல; மூலதனத்தை உபயோகப்படுத்தும் மார்க்கத்தில்தான் தவறு இருக்கிறது. தேச வளர்ச்சிக்கு - முன்னேற்றத்துக்கு - முதலீடு அவசியம். ஆனால் அதை உபயோகிக்கும் வழி தர்மத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும்."

அன்னையும் மகனும்

(1940)

ஏமிலி கின்னார்டு சீமாட்டி இந்தியச் சுதந்தரப் போராட்டத்தில் அநுதாபம் உள்ளவர். காந்திஜியின் 'ஹரிஜன்' பத்திரிகையைத் தவறாமல் படிப்பவர். 1940-ஆம் வருஷ மத்தியில் அவர் இந்தியா

வுக்கு விஜயம் செய்தபோது காந்திஜியைச் சந்திக்கச் சேவாக் கிராமத்துக்கு வந்தார். எண்பத்தாறு பிராயமுள்ள அந்தச் சீமாட்டி, காந்திஜியைத் தமது அபிமானப் புத்திரன் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வதுண்டு.

காந்திஜி, 'ஒவ்வோர் ஆங்கிலேயனுக்கும்' என்று மகுட மிட்டு, 'அஹிம்ஸா மார்க்கத்தினால் ஜர்மானியர்களை எதிர்த்து நில்லுங்கள்' என்று 6—7—40 'ஹரிஜன்' இதழில் எழுதி யிருந்த கட்டுரையைப் பற்றி எமிலி சீமாட்டி பேச்சைத் துவங்கினார். "ஆங்கிலேயருக்கு நீங்கள் கூறிய உபதேசத்தை டென்மார்க்கு மக்கள் பின்பற்றினார்களே; ஆனால் நீங்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லையே?" என்று கேட்டார் அவர்.

"டென்மார்க்கு மக்கள் எதிர்த்து நிற்கவில்லை. சரணடைந் தார்கள். அஹிம்ஸையைக் கடைப்பிடித்து எதிர்த்து நிற்கவே நான் கூறினேன்" என்றார் காந்திஜி.

"ஆக்கிரமிப்பாளர்களைத் தடுக்க வேண்டாம்; அவர்கள் உங்களுடைய நாட்டுக்குள் நுழையட்டும் என்று நீங்கள் ஆங்கிலே யர்களுக்குக் கூறினீர்களே, அதைத்தானே டென்மார்க் தேசத் தாரும் செய்தார்கள்? அவர்கள் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்க்க வில்லையே?"

"உண்மைதான். உங்களுடைய உயிரை (ஆத்மாவை) அடிமைப் படுத்தாதீர்கள் என்றும் கூறினேன். அதை நீங்கள் கவனிக்கவில்லையா? ஆனால் நிபந்தனையின்றிச் சரணடையச் சொல்லவில்லை. 'ஆயுதத்தைப் பிரயோகிக்காமல் மன உறுதி யுடனும் சாகஸத்துடனும் இருங்கள். உங்களுடைய சடலத்தின் மீது எதிரிகள் கால் வைத்து மிதித்துச் செல்லட்டும்' என்று கேட்டுக் கொண்டேன். டென்மார்க்கில் அப்படி நடக்க வில்லையே?"

"அதற்கெல்லாம் டென்மார்க் மக்களுக்கு அவகாசம் இல்லை. திடீர்த்தாக்குதல் ஏற்பட்டதால் எதிர்த்து நிற்பதற்குச் சக்தியற்றுச் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லாமல் போயிற்று."

"அந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில்தான் அஹிம்ஸா தத்துவப் பரீட்சை ஏற்படுகிறது. எதிர்த்து நிற்காமலிருந்தது புத்திசாலித் தனந்தான். ஆனால் புத்திசாலித்தனம் அஹிம்ஸையாகாது. பலாத்காரத்தினால் (ஆயுத பலத்தினால்) எதிர்த்து நிற்பதைவிட

அஹிம்ஸை வழியினால் எதிர்த்து நிற்க, மன உறுதியும் சாகஸமும் வேண்டும்; வெற்றிகரமான பலனும் கிடைக்கும். அதனால்தான் ஆயுத பலத்தில் நம்பிக்கை கொண்ட நாடுகளை அஹிம்ஸா மார்க்கத்தைக் கைக் கொள்ளும்படிக் கேட்டுக்கொண்டேன்.''

''அப்படிச் செய்திருந்தால் என்ன நன்மை ஏற்பட்டிருக்கும்?'' என்று சாந்தம் ததும்பும் குரலில் கேட்டார் எமிலி சீமாட்டி.

“ஏசுநாதர் உயிரைப் பணயம் வைத்தாரே, அதனால் என்ன நன்மை ஏற்பட்டது?'' என்று கேட்டார் காந்திஜி.

“ஓ! அது வேறு விஷயம். ஆண்டவனுடைய குமாரனை ஏசுநாதர் செய்ததுடன் இதை ஒப்பிடலாமா?'' என்றார் சீமாட்டி.

“நாமும் ஆண்டவனுடைய குழந்தைகள்தாமே?''

''அது எப்படி? ஏசுநாதர்தாம் பரமபிதாவின் ஒரே திருக்குமாரன்.''

“இங்குதான் தாயும் (சீமாட்டி) தனயனும் (காந்திஜி) அபிப்பிராய பேதம் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏசுநாதர், ஆண்டவனின் ஒரே திருக்குமாரன் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். அவர் உத்தமமான குமாரராக இருக்கலாம். ஆனால் அவரும் ஆண்டவனுடைய குமாரர்தாம், நாமும் அவருடைய குழந்தைகள் தாம் என்று நான் எண்ணுகிறேன். ஏசுவைப்போல, நாமும் தெய்விக அருள் பெற்றால், அதற்கு அருகதையானவர்களானால், அவரைப் போலவே உத்தமமான வாழ்க்கை நடத்த முடியும் என்று நம்புகிறேன்.''

“பார்த்தீர்களா, இங்குதான் தவறு இருக்கிறது. ஏசுநாதரின் போதனையை இருதயபூர்வமாக நீங்கள் ஏற்றுக்கொண்டு மக்களும் அதன்படியே நடக்கும்படிச் செய்தால், ஆச்சரியமான முறையிலும், இப்போது செய்வதைவிடத் தீவிரமாகவும் நீங்கள் மக்களுக்கு வழிகாட்ட முடியும் என்றே எண்ணுகிறேன். அவன் தான் மோக்ஷத்துக்கு வழிகாட்டி;. அவனுடைய உபதேசத்தை ஏற்று அருள் பெற்றால் தவிர நாம் உய்ய வழி இல்லை.''

“அப்படியானால் ஏசுநாதரை - அவருடைய மார்க்கத்தை - பின்பற்றுகிறவர்கள் எல்லோருமே காப்பாற்றப்படுகிறார்களா? அவருடைய மார்க்கத்தைக் கடைப்பிடித்தால் மட்டும் போதுமா? வேறு ஏதும் செய்ய வேண்டாமா?''

"நாம் பாபிகள். ஆண்டவனை நாம் மனமார நம்பினுலொழியக் காப்பாற்றப்படமாட்டோம்."

"நாம் பாபிகளாகவே இருக்கலாமோ?"

"நீங்கள் ஏன் பிடிவாதமாக இருக்கிறீர்கள் என்றுதான் ஆச்சரியப்படுகிறேன். ஏசுநாதருடைய போதனைகளை, நூற்றுக் கணக்கான பாஷைகளில் மொழி பெயர்த்து உலகம் முழுவதும் விநியோகித்திருக்கிறார்கள். தம் தம் பாஷையில், ஏசுவின் போதனையைத் தெரிந்துகொண்டு லக்ஷக்கணக்கான பாமரர்கள் அருள்பெற்று இருக்கிறார்கள். ஆண்டவனுடைய மார்க்கம் அது" என்றார் எமிலி சீமாட்டி.

"பல பாஷைகளில் மொழிபெயர்த்துவிட்டதால் ஏசுவின் பிரபாவம் அதிகரித்துவிடவில்லை. மேலும், ஏசுவின் பெருமையை அதிகரிக்க அது சான்றாகாது" என்றார் காந்திஜி.

"ஐம்பது வருஷங்களுக்கு முன்பு இந்தியாவில் சில நூறு கிறிஸ்துவர்கள்தாம் இருந்தார்கள். இப்போது லட்சக்கணக்கான கிறிஸ்துவர்கள் இருக்கிறார்களே?"

"இதனாலும் கிறிஸ்து தர்மம் உயர்வு என்று ருசுப்படுத்த முடியாது. மதமாற்றம் என்பது சாகஸம்."

எமிலி சீமாட்டி, தொடர்ந்து விவாதம் நடத்தினார். ஆனாலும் பரஸ்பரம் விட்டுக்கொடுக்காமலே இருவரும் பேசினார்கள். பிறகு அவர் காந்திஜியிடம் அன்புடன் விடைபெற்றுக்கொண்டார்.

தத்துவ விசாரம்

(1940)

மாரிஸ் ப்ரெட்மன் என்ற போலிஷ் எஞ்ஜினியர் பரதானந்தஜி என்ற பெயருடன் இந்தியாவைத் தாயகமாக ஏற்றுக் கொண்டவர். அவர்தாம் தநுஷ் தக்ளியைக் கண்டு பிடித்தார். அவர் சிலகாலம் வார்தாவில் தங்கியிருந்து கதர் உற்பத்தியிலும் கிராமக் கைத்தொழில்களிலும் ஆராய்ச்சிகள் நடத்தினார்.

ஒரு சமயம் காந்திஜியுடன் சம்பாஷிக்க நேர்ந்தபோது, "நீங்கள் போலந்து மக்களுடைய தீரத்தைப் பாராட்டினீர்கள், அவர்களுடைய மனத்தில் ஆக்கிரமிப்பாளர்களைப்பற்றிய வெறுப்புணர்ச்சிதான் மேலோங்கியிருக்கிறது. உங்களுடைய தத்துவப்

படி அவர்கள் பாராட்டுதலுக்கு அருகதையுள்ளவர்களா என்று சந்தேகிக்கிறேன்" என்றார்.

"எழுத்துக்கு எழுத்து வியாக்கியானம் செய்து பார்ப்பதில் பலன் இல்லை. ஆயுதபாணிகளான ஆயிரம் சிப்பாய்களை, நிராயுத பாணிகளாகப் பத்துப் பேர் எதிர்த்து நின்று மடிந்தால், அவர்களுடைய பரஸ்பர சக்தியை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. தன்னுடைய கற்பைக் காத்துக்கொள்ள ஒரு பெண் நகத்தையும் பல்லையும் உபயோகித்து எதிரியைத் தாக்க முயன்றால், அது ஹிம்ஸையாகாது. ஏனென்றால் அவள் எதிரியைத் தாக்கவேண்டும் என்று யோசித்து முன்னேற்பாடுகளைச் செய்யவில்லை. உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் பூனையுடன் ஓர் எலி போரிட்டால் அது ஹிம்ஸையாகாது. அதுபோலவேதான் இதுவும்."

"ஒரு ருஷ்யப் பெண்ணைச் சிப்பாய் ஒருவன் கற்பழிக்க முயன்றான். அவளோ அவனைக் கடித்தும், நகங்களால் கிழித்தும் கொன்றுவிட்டாள். முன்னேற்பாடான ஹிம்ஸையில்லை என்பதால் இது அஹிம்ஸையாகிவிடுமா? எதிர்க்கச் சக்தியற்றிருக்கும் போது பலாபலம் பார்க்கக்கூடாது என்று சொன்னீர்கள். ஆனால் இந்தப் பெண்ணோ எதிரியைக் கொன்று தன்னுடைய சக்தியைக் காட்டிவிட்டாள். இது பலாத்காரச் செயல் ஆகாதா?"

"பலாத்காரம் என்றும் எடுத்துக் கொள்ளலாம்."

"அப்படியானால் சித்தம்தானே சோதனைக்குள்ளாகிறது? கலகக்காரர்களை அடக்கிச் சமூகத்தைக் காப்பாற்ற, பலாத்கார வழிகளில் அதிகாரி ஒருவர் இறங்கினாலும், அவருடைய நல்லெண்ணத்தைக் கருதும்போது, அந்தச் செயலும் அஹிம்ஸை என்று எடுத்துக் கொள்ளலாம் அல்லவா ?"

"சித்தத்தைப் பற்றி ஆண்டவன்தான் தீர்ப்புக்கூறவேண்டும். செயலைப்பற்றித்தான் மனிதர்கள் நினைக்க முடியும், முடிவு கட்ட முடியும்."

"அப்படியானால் ஹிம்ஸை எது, அஹிம்ஸை எது என்று பாகுபாடு செய்யவும் கடவுளுக்குத்தான் தெரியும்."

"உண்மைதான். கடவுள்தான் தீர்ப்புக் கூற முடியும். நாம் அஹிம்ஸை என்று நினைப்பதை ஆண்டவன் ஹிம்ஸையாகக் கருதக்கூடும். ஆனால் நமக்குச் சில நியதிகள் உண்டு. தத்துவ பூர்வமாக அஹிம்ஸையைக் கடைப்பிடிப்பவர்களுக்குப் புத்தி

கூர்மையும் சதா விழித்திருக்கும் மனச்சாட்சியும் வேண்டும். அப்படி யிருப்பவர்கள் தவறு செய்வது அபூர்வம். போலந்து வாசிகளைப் பற்றியும், கற்பைக் காத்துக் கொள்ளத் துணிந்த பெண்ணைப் பற்றியும் நான் குறிப்பிட்டபோது, அவர்களுடைய மன உறுதியையும் துணிச்சலையுமே எண்ணிக் கூறினேன். மரணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிந்தும் அவர்கள் உறுதியுடன் எதிர்த்து நின்றார்கள். அதனால்தான் அவர்களுடைய போராட்டம் அஹிம்ஸை வழிப்பட்டது என்று குறிப்பிட்டேன்.''

''நல்லது பாபு, இந்த நாட்டில் நான் கேட்ட கதை ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு சமயம் சிவனும் பார்வதியும் பேசிக் கொண்டிருந்தபோது, சிவன் எழுந்து சென்றாராம். திரும்பி வந்த போது, 'எங்கே சென்றிருந்தீர்கள்?' என்று பார்வதி கேட்க, 'திருடனால் வழிமறிக்கப்பட்ட பக்தன் ஒருவனைக் காக்கச் சென்றேன். பக்தன் என்னைக் கூப்பிட்டான். நான் செல்வதற்குள் அவன் எதிரியைத் தாக்கி வீழ்த்திவிட்டான்; ஆகவே என்னுடைய பொறுப்புக் குறைந்துவிட்டது ; திரும்பி விட்டேன்' என்றார் சிவன். இந்தக் கதையை ஆதாரமாகக்கொண்டு பார்த்தால் என்ன முடிவு ஏற்படுகிறது? ஆண்டவன்தான் ஹிம்ஸை, அஹிம்ஸையைத் தீர்மானிக்க வேண்டும். அவனே அஹிம்ஸை வழி காட்டுகிறான். ஹிம்ஸைக்கும் அநுமதிக்கிறான். இது என்ன புதிர்?''

''புதிர் ஏதும் இல்லை. அஹிம்ஸையைத் தர்க்கரீதியில் ஸ்தாபிக்க முடியாது. அநுஷ்டான பலத்தினால் அடைய வேண்டிய பலம் இது. சித்த சுத்தி என்பதே அநுஷ்டானத்தினால் ஏற்பட வேண்டும்.''

''அஹிம்ஸை, நூற்பு வேள்வி, பிரம்மசரியம் இவை எல்லாம் சாதன மார்க்கம் என்றே நீங்கள் கூறுகிறீர்கள். எல்லாரும் இந்த மூன்று சாதனைகளையும் செய்யமுடியாது. சிலருக்குச் சில சாத்தியமாகும். ஆனால் நீங்கள் அஹிம்ஸையைத் தானே பிரதானமாகப் போதிக்கிறீர்கள்?''

''விஞ்ஞானி ஒருவன் தான் கண்ட வெற்றியைக் கடைப்பிடிக்கிறான், பிறருக்கு எடுத்துச் சொல்கிறான். தான் கண்டதே உண்மை என்று கூறுகிறான். 'பிண்டத்தைப் போல அண்டம்' என்று ஊகிக்கிறான். நானும் ஒரு விஞ்ஞானிதான்.''

"தீயவனுக்கும் தூயவனுக்கும் ஒன்ருகவே நீங்கள் சட்டம் வகுக்கிறீர்களே?"

"சட்டம் எல்லாருக்கும் பொதுத்தான். ஆனுல் தூயவனும் தீயவனும் அதை வெவ்வேறு கண்களுடன் நோக்குகிருர்கள் அல்லவா? லட்சியம் ஒன்றுதான். அதை அடையக் கையாளும் மார்க்கத்தில் தவறு இருந்தாலும் லட்சியசாதனை இருந்தால் போற்றத்தான் வேண்டும்."

"லட்சியத்தின் முன்னே நிதரிசன உண்மை இருப்பதை நீங்கள் மறந்து விடுகிறீர்களே?"

"அல்ல, நிதரிசனம் எப்போதும் இருக்கிறது. நான் லட்சியத்தை நோக்கிச் செல்ல முயலுகிறேன். யூக்லிட்டின் நேர்க் கோட்டுப் பிரமாணம் இருக்கிறதே, அதை நாம் கற்பனை செய்து பார்க்கிரும்; அதற்கு அநுசரணையாக ஒரு நேர்க் கோட்டை வரைய முயலுகிரும். அவ்வளவுதானே? லட்சியத்தை அப்படியே கடைப்பிடிக்கவும் முடியாது; தத்துவங்களை அப்படியே செயலாக்கிவிடவும் முடியாது. ஆனுல் லட்சியத்தை நாம் மறந்து விடவும் முடியாது. லட்சியத்தை அநுமானித்துக் கொண்டு நாம் முன்னேற வேண்டும். சபலம் ஏற்படும்போது நாசம்தான் மிஞ்சும்."

இரு தளகர்த்தர்கள்
(1942)

சியாங்-கே-ஷேக் தம்பதிகள் 1942–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது காந்திஜியைச் சந்திக்க விரும்பினுர்கள். டில்லியில் அவர்கள் வைசிராயின் விருந்தாளிகளாக இருந்ததால், காந்திஜியை டில்லியில் வரவேற்க அவர்கள் விரும்பவில்லை. ஜவாஹருடன் ஆலோசித்த பிறகு கல்கத்தாவில் காந்திஜியைச் சந்திக்க ஏற்பாடாயிற்று. கல்கத்தாவிலுள்ள பிர்லா பார்க்கில் காந்திஜி தங்கிச் சியாங் தம்பதிகளைச் சந்தித்தார்.

சியாங்-கே-ஷேக்கிற்கு ஆங்கிலம் தெரியாது. ஸ்ரீமதி சியாங்-கே-ஷேக் அமெரிக்காவில் கல்வி பயின்றதால் நன்ருக ஆங்கிலம் பேசினுர். துவிபாஷியின் உதவியினுல் காந்திஜியும் சியாங்கும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பேச்சின்

நடுவே காந்திஜி ஸ்ரீமதி சியாங்கிடம், "நாங்கள் அரசியல் விவகாரம் பேசவில்லையே, நட்புப் பேச்சுத்தானே? எங்களுடன் கலந்து கொண்டு நீங்களே எங்களுடைய சம்பாஷணையை மொழிபெயர்த்துச் சொல்லலாமே; ராஜாங்கத் துவிபாஷி எதற்கு?" என்று கேட்டார்.

"முடியாது, காந்திஜி. சிரிப்பின் மூலமே நீங்கள் பிறரை வசீகரித்து விடுகிறீர்கள். ஆனால் என்னுடைய புருஷனின் நிலைமை வேறு. அவர் பிடிவாதக்காரர். சமீப காலம் வரையில் நான்தான் அவருடைய துவிபாஷியாக இருந்தேன். என்னால் சமாளிக்க முடியவில்லை. மிகவும் சிக்கலான ராஜாங்கப் பிரச்னைகளை ஜனரலுக்கு (கணவருக்கு) எடுத்துச் சொல்ல நேரிடும்போது மட்டும் நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன். மற்ற நேரங்களில் ராஜாங்கத் துவிபாஷியே உதவி செய்கிறார்" என்றார் ஸ்ரீமதி சியாங்.

"அப்படி என்றால், நீங்கள் கடமை தவறிய, விசுவாசமற்ற மனைவி என்றுதான் உங்களைக் குற்றஞ் சாட்டுவேன்" என்றார் காந்திஜி சிரித்துக்கொண்டே.

"சொல்லுங்கள். அவர் துவிபாஷியை மணந்து கொள்ளவில்லை; ஒரு ஸ்திரீயைத்தான் மணந்து கொண்டார் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்" என்று படபடப்பான குரலில் சொன்னார் ஸ்ரீமதி சியாங்.

பரிசா, விலையா?

(1942)

காந்திஜி டில்லியில் பிர்லா மாளிகையில் தங்கியிருந்தபோது ஒரு தமிழ்நாட்டு வாலிபர் அவரிடம் கையெழுத்துக் கோரினார். "கையெழுத்துக்காக நான் பணம் வாங்குகிறேன். அதுதான் என்னுடைய சம்பாத்தியம். ஆனால் அதில் பைசாக்கூட என்னைச் சேரவில்லை. என்னுடைய குடும்பத்தாரை (ஹரிஜனங்களை) சேர்ந்தது. வருஷத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்தும் தேவையைச் சமாளிக்க முடியவில்லையே" என்றார் பாபு. அந்த வாலிபர் பத்து ரூபாய்களைக் கொடுத்து, "பாபு, உங்களுக்குத் தமிழ் தெரியுமே, தமிழில் கையெழுத்துப் போடுங்கள்" என்றார்.

காந்திஜி சிறிது நேரம் யோசித்தார். பிறகு, "தமிழ்க் கையெழுத்துக்கு அஞ்சு ரூபாய் அதிகம் விலை" என்றார்.

"நான் பத்து ரூபாய் கொடுத்திருக்கிறேன்" என்றார் அந்த வாலிபர். காந்திஜி மிகவும் நிதானமாக யோசித்துக்கொண்டே ஒவ்வோர் எழுத்தாக எழுதிவிட்டார். அந்த வாலிபர் சந்தோஷத்துடன் மீண்டும் ஒரு பத்து ரூபாய்களைக் கொடுத்து விட்டு, "சிறு பிசகுகூட இல்லை, பாபு. உங்களுடைய ஞாபக சக்தியைப் பாராட்டுகிறேன்" என்றார்.

"அப்படியா, அதற்காக நீங்கள் எனக்குப் பரிசு தரவில்லையே? சரியாக எழுதியதற்கு இந்தப் பத்து ரூபாய் சரியாகிவிட்டது. ஞாபக சக்திக்குப் பரிசு எங்கே?" என்று காந்திஜி சிரித்துக்கொண்டே கேட்டார்.

வாலிபர் மறுபடியும் ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தார்.

கொல்லாமை!

(1942)

அமெரிக்கப் பத்திரிகை நிருபரான லூயி பிஷர் வார்தாவில் சில தினங்கள் தங்கியிருந்தார். ஆசிரம வாசிகளுடன் அவர் கலந்து பழகி, ஆசிரம உணவையே சாப்பிட்டார். ஒருநாள் சாப்பிடும் போது காந்திஜி, "நீங்கள் சரியாகச் சாப்பிடவில்லையே,காய்கறிகள் பிடிக்கவில்லையா?" என்று பிஷரைக் கேட்டார்.

"இங்கு வந்த பிறகு இந்தக் கீரைக் கலவையை அடிக்கடி சாப்பிட்டு அலுத்துப் போய்விட்டேன். மற்றக் காய்கறிகளிலும் சிலவற்றின் ருசி எனக்குப் பிடிக்கவில்லை" என்றார் பிஷர்.

"வேண்டுமானால் கொஞ்சம் எலுமிச்சம் பழ ரசமும் உப்பும் சேர்த்துக் கொள்ளுங்கள், சுவையாக இருக்கும்."

"இப்போது இருக்கும் ருசியும் கெட்டு விட்டாலோ?"

"உப்பும் புளிப்பும் ஓரளவு சுவையூட்டும். ருசி சாகாது (கெட்டுவிடாது)."

"ஓகோ, நீங்கள் அஹிம்ஸாவாதியாயிற்றே! ருசியைக் கொல்லவும் விரும்பமாட்டீர்கள் ?"

"உண்மைதான். மனிதர்கள் இந்த ஒன்றைத்தான் கொல்வார்கள் என்றால் நான் பொருட்படுத்த மாட்டேன்" என்றார் காந்திஜி.

ஒத்துழையாமை
(1942)

"இப்போது நீங்கள் இயக்கம் நடத்த விரும்புகிறீர்களா? ஒத்துழையாமையைப்பற்றி யோசிக்கிறீர்களா? இயக்கம் ஆரம்பித்தால் மக்கள் என்ன செய்வார்கள்?" என்று ஒரு நாள் லூயி பிஷர் காந்திஜியிடம் கேட்டார். அப்போது ஜவாஹரும் அங்கு இருந்தார்.

"இயக்கம் ஆரம்பித்தால் விவசாயிகள் வரி செலுத்தமாட்டார்கள். சட்டபூர்வமான தடையை மீறி ஜனங்கள் உப்புக் காய்ச்சுவார்கள். சர்க்காரை ஸ்தம்பிக்கச் செய்யப் பல வழிகளைக் கையாளுவார்கள். சர்க்காருக்கு உதவியாக இருக்கும் பெரிய நிலச்சுவான்தார்களிடமிருந்து நிலங்களைக் கைப்பற்றவும் முயலுவார்கள்" என்றார் காந்திஜி.

"எப்படி? பலாத்காரமாகவா?" என்று கேட்டார் பிஷர்.

"பலாத்காரம் (ஹிம்ஸை) ஏற்படக்கூடும். ஆனால் அதற்கு மக்கள் பொறுப்பாக இருக்க மாட்டார்கள். பெரிய நிலச்சுவான்தார்களும் மக்களுடைய போராட்டத்தில் பங்கு எடுத்துக் கொள்ளக்கூடும்........."

"நீங்கள், எல்லாம் நன்மைக்கே என்று எண்ணக்கூடியவர்கள். தீயவர்களிடமும் நற்செய்கையை எதிர்பார்க்கும் குணம் உங்களுக்கு உண்டு" என்றார் பிஷர்.

அப்போது நேரு சொன்னார்: "நீங்கள் 'மனிதரும் அரசியலும்' என்ற புத்தகத்தில் ருஷ்யச் சிப்பாய்களைப்பற்றி ஒரு கிண்டல் குறிப்பு எழுதியிருக்கிறீர்களே, அதேபோல இந்த நாட்டிலுள்ள ஜமீன்தார்களும், பெரிய நிலச்சுவான்தார்களும், கிராமங்களைவிட்டே வெளியேறுவதன் மூலம், (தங்களுடைய நிலங்களைப் பறிமுதல் செய்யும் தீர்மானத்தை) ஆதரிப்பார்கள்."

மூவரும் சிரித்தார்கள்.

அப்போது பிஷர், "தங்களுடைய உடைமைகளைக் காப்பாற்றப் பலாத்கார வழிகளையும் அவர்கள் கையாளக்கூடும் அல்லவா?" என்று கேட்டார்.

"சாத்தியமே. ஆனால் இந்த நாட்டில் குழப்பம் ஏற்பட்டாலும் பதினைந்து தினங்களுக்கு மேல் நீடிக்காது" என்றார் காந்திஜி.

"பெரிய நிலச்சுவான்தார்களிடமிருந்து நஷ்டஈடு கொடுக்காமல், நிலங்களைப் பெறுவது சாத்தியம் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டார் பிஷர்.

"நிலத்தில் உரிமை கோருவதே தவறு. உழைப்பவனுக்குப் பூமிதேவி பலன் கொடுக்கிறாள். ஜமீன்தார்களுடைய உரிமைகளைப்பற்றி விவாதிப்பது ஒருபுறம் இருக்கட்டும்; நஷ்டஈடு கொடுப்பது பொருளாதார ரீதியில் சாத்தியமில்லாத விஷயமாகும்" என்றார் காந்திஜி.

மாணவி
(1942)

ஆகாகான் மாளிகையில் அடைபட்ட சில தினங்களுக்கெல்லாம் மகாதேவ தேசாய் மனமுடைந்து இறந்தார். அவருடைய மரணத்தினால் காந்திஜியும் மற்றவர்களும் ஆறாத் துயரடைந்தார்கள். சிறையிலுங்கூடக் காந்திஜிக்கு ஓயாது வேலை இருந்தது. மற்றவர்களுக்குத் துன்பநிலை மாற வழியில்லை. ஒரு நாள் காந்திஜி, "நாம் தினசரி ஏதாவது வேலை செய்ய வேண்டும். அன்றாடம் செய்த வேலையைப்பற்றிக் குறிப்பு எழுத வேண்டும். மனசுக்கு ஓயாது வேலை கொடுத்தால் துன்ப நினைவுகளால் சஞ்சலம் ஏற்படாது. அஹிம்ஸா சாதனைக்கும் அது ஓர் மார்க்கமாகும்" என்றார்.

ஒவ்வொருவருக்கும் வேலைத் திட்டம் ஏற்பட்டது. ஆனால் கஸ்தூரி பாவுக்கோ திட்டமான வேலை ஏதும் வகுக்கப்படவில்லை. ஆகவே அவருக்குத் தினசரி கல்விபோதிக்கக் காந்திஜி நிச்சயித்தார். கஸ்தூரிபாவுக்குக் குஜராத்தி மொழியில் சுமாராக எழுதப்படிக்கத் தெரியும். அதுவும் காந்திஜி கொடுத்த பயிற்சியினால் ஏற்பட்ட லாபம்தான். பலமுறைகள் முயன்றும் தாம் விரும்பியபடி கஸ்தூரிபாவுக்குக் கல்வி போதிக்கக் காந்திஜியினால் முடியவில்லை. இந்தத் தடவை, பாவுக்கு, சரித்திரமும் பூகோளமும் கற்றுத்தரக் காந்திஜி திட்டமிட்டார்.

வயோதிகத்தினால், கஸ்தூரிபாவுக்கு ஞாபக மறதி ஏற்பட்டு விடும். கற்ற பாடங்களில் கேள்வி கேட்கும்போது அவர் சில சமயங்களில் தவறான விடை கூறுவார். அல்லது சிறிது நேரம்

தயங்கி நிற்பார். 'வங்காளத்தின் தலைநகர் எது?' என்று கேட்டால் 'லாகூர்' என்று பதில் கூறுவார். காந்திஜி கேள்வியைத் திருப்பிக் கேட்டால், கஸ்தூரிபா தவற்றை உணர்ந்து கெண்டு வருந்துவார். "எனக்கு வயசாகிவிட்டது, மறதி வந்து விடுகிறது" என்று நொந்து கொள்ளுவார். ஆனாலும் காந்திஜி மனம் தளரவில்லை. உற்சாக மூட்டிக் கொண்டே கல்வி போதிக்கலானார். கஸ்தூரி பாவும் சிரத்தையுடன் படித்து வருவார். பிற்பகல் வேளையில் கிச்சிலிப் பழத்தைக் கையில் வைத்துக் கொண்டு, காந்திஜி, "பூமி உருண்டையாக இருக்கிறது. இது அட்சரேகை, இது கடக ரேகை" என்று கற்றுக் கொடுப்பார்.

ஒருசமயம் சிறைவாசிகளின் உபயோகத்துக்காக நோட் புத்தகங்கள் வரவழைத்தார்கள். கஸ்தூரிபா, தமக்கும் ஒன்று வேண்டும் என்று விரும்பினார். ஆனால் சுக்கான் செட்டியான காந்திஜியோ, "உனக்கு எழுத்து வேலை அதிகம் இல்லையே! மேலும் உன்னுடைய கையெழுத்தும் திருந்த வேண்டும். தனிக் காகிதத்தில் எழுதிப் பழகிக் கொள். நன்றாக எழுத வந்த பிறகு நோட் புத்தகம் வரவழைத்துத் தருகிறேன்" என்று சொன்னதுடன், ஐந்தாறு தாட்களைக் கஸ்தூரிபாவிடம் கொடுத்தார்.

கஸ்தூரிபாவின் மனம் புண்பட்டு விட்டது. தனக்குப் படிப்பில் சிரத்தை இல்லை என்று காந்திஜி சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறார் என்று மனம் நொந்தார். கஸ்தூரிபாவின் மனமாறுதலைக் காந்திஜியும் கவனித்தார். இதன் நடுவே சரோஜினி தேவி கஸ்தூரிபாவுக்காகச் சில நோட் புத்தகங்களை வரவழைத்து விட்டார். ஆனால் கஸ்தூரிபா அதை ஏற்றுக்கொள்ளவில்லை. 'இதுவே போதும்' என்று கூறிக் காந்திஜி கொடுத்த காகிதங் களில் எழுதிப் பழகலானார். சரோஜினி தேவி கொடுத்தவைகளைக் காந்திஜியின் புத்தகங்களுடன் சேர்த்து வைத்துவிட்டார். பிறகு காந்திஜியே வற்புறுத்தியுங்கூட அவர் நோட் புத்தகங்களை உபயோகிக்கவில்லை. வேண்டாம் என்று சிரித்து மழுப்பி விட்டார்.

★

நண்பர்கள்

(1946)

காந்திஜி 1946-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சென்னைக்கு விஜயம் செய்தபோது, உடல்நலமற்றிருந்த ஸ்ரீநிவாச சாஸ்திரி யாரைக் காணச் சென்றார். அப்போது சாஸ்திரியார் ஆஸ்பத்திரி யில் இருந்தார். காந்திஜியைக் கண்டதும் அவர் உணர்ச்சி வசப் பட்டு விட்டார். மிகவும் பலவீனமாக இருந்ததால் மூச்சுத் திணறிற்று. "சின்னக் குழந்தை, தன்னுடைய சகோதரனை அணைத்துக் கொள்ள ஆசைப் படுவதுபோல, உங்களைக் கட்டித் தழுவ வேண்டும்போல இருக்கிறது" என்றார் சாஸ் திரியார்.

காந்திஜி கட்டிலில் உட்கார்ந்து கொண்டு சாஸ்திரியாரின் கையைப் பிடித்துக் கொண்டார். "மனதை அடக்கிக் கொள் ளுங்கள். உணர்ச்சி வேகத்தினால் உடல் நலம் பாதிக்கக்கூடும்" என்றார் காந்திஜி அன்புடன்.

சாஸ்திரியார் திணறிக்கொண்டே பின்வருமாறு பேசலானார்: "உங்களிடம் ஒன்றே ஒன்று சொல்ல விரும்புகிறேன். உலக சமாதானம் ஏற்படக்கூடிய ஒரு சந்தர்ப்பம் மீண்டும் தவறி விட்டது. வல்லரசுகளின் பிரதிநிதிகள் இன்று சமாதானப் பேச்சு நடத்தக் கூடியிருக்கிறார்கள். ஆனால் மனிதவர்க்கத்தைப் பற்றி- சமுதாயத்தைப் பற்றி - லோக சமாதானத்தைப் பற்றி - உங்களைத் தவிர வேறு யாரால் பேச முடியும்? உங்களை இந்தியாவின் பிரதிநிதியாக அனுப்பத் தவறியது, இந்தியாவின் கடமை மறந்த செய்கை என்றே எண்ணுகிறேன். அழைப்பு இல்லாவிட்டாலும் அஹிம்சையும் சத்தியமும் வாழ்க்கை விரதமாக ஏற்றுக் கொண்ட நீங்கள் அங்கே செல்லவேண்டும் என்பதே என்னுடைய விருப்பம். உபசாரத்தையும் மரியாதையையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது."

சிறையிலிருந்து காந்திஜி வெளிவந்தது முதல், அவர் சர்வ தேச சமாதானத்தில் அக்கறை காட்டவேண்டும் என்றும், சான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் கலந்து கொள்ள முயலவேண்டும் என்றும் சாஸ்திரியார் காந்திஜிக்குக் கடிதத்தின் மேல் கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்.

''அஹிம்ஸையில் மக்களுக்குப் பற்றும் நம்பிக்கையும் இருந்தால் அரசியல்வாதிகளுடன் பேரம் பேச வேண்டிய அவசியம் இல்லையே? இருந்த இடத்தில் இருந்தவாறே என்னுடைய செய்தியை உலகுக்குக் கூறமுடியாதா?'' * என்றார் காந்திஜி.

சாஸ்திரியார் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு காந்திஜி விடை பெற்றுக் கொண்டார்.

ஒரு வாரத்துக்குப் பிறகு, ராஜாஜி, தக்கர்பாபா முதலியவர்களுடன் காந்திஜி, சாஸ்திரியாரைச் சந்திக்க ஆஸ்பத்திரிக்குச் சென்றார். அப்போது அங்கு சாஸ்திரியாரின் பேரக் குழந்தைகள் இருந்தார்கள். காந்திஜியைக் கண்டதும் முகமலர்ச்சியுடன் வரவேற்றுவிட்டு, ''இந்தக் குழந்தைகளுக்கு உங்களுடைய கடாட்சம் கிடைக்கட்டும். நீங்கள்தாம் புருஷோத்தமன். உங்களுடைய ஆசியினால் நானே தெம்புடன் இருக்கிறேன்'' என்றார் சாஸ்திரியார்.

''இது என்ன பைத்தியக்காரத்தனம்? மனசைத் தளர விடாதீர்கள், சாஸ்திரி'' என்றார் காந்திஜி.

---

* சான்பிரான்ஸிஸ்கோ மகாநாடு நடக்கும்போது காந்திஜியும் கலந்து கொள்ளவேண்டும் என்று பல அறிஞர்கள் காந்திஜிக்குக் கடிதம் எழுதினார்கள். ''அஹிம்ஸைத் தத்துவத்தைப்பற்றி அரசியல்வாதிகளோ, உலக மக்களோ அதிகம் அறியமாட்டார்கள். நேரில் சென்று எடுத்துச் சொல்லவேண்டும்'' என்று ஓர் ஆங்கில நண்பர் நேரில் கேட்டுக் கொண்டபோது காந்திஜி சொன்னார்; ''உலக சமாதானத்துக்காக - மனித சமூகத்துக்காக - நான் உருப்படியான வேலை செய்ய முடியும் என்று வல்லரசுகளின் தலைவர்கள் நினைத்தால் அவர்களே என்னை அழைக்கலாமே?''

''நீங்கள் அரசியல்வாதியல்ல; சமாதானத் தூதர்'' என்றார் நண்பர்.

''அஹிம்ஸை என்பது போதனை செய்யக்கூடியதல்ல. அநுஷ்டானத்தினால் ஏற்படும் மனமாறுதல். நான் அமெரிக்கா செல்லாமலே, அஹிம்ஸைத் தத்துவத்தை விளக்க முடியும். என்னுடைய சொல்தான் பிரதானமே தவிர, என்னுடைய சாந்நித்தியம் முக்கியமல்ல. என்னைப் பார்ப்பதால் அரசியல்வாதிகளோ, மற்றவர்களோ வசப்பட்டு என் வழி திரும்புவார்கள் என்று எண்ணுவது வீண் பிரமைதான். சத்தியத்தின் ஒளி எங்கிருந்தாலும் குன்றாது. கோடிக் கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் சூரியனிடமிருந்து வரும் ஒளிக் கதிரால் நாம் உய்யவில்லையா? அதேபோல, என்னுடைய கொள்கைக்கோ, வாக்குக்கோ, மகிமை இருந்தால் இங்கிருந்தவாறே, கோரும் பலனைப் பெற்றுவிடமுடியும். என்னுடைய தனிக் குரலுக்குப் பலன் கிடைக்கவில்லை என்றால் அது என்னுடைய பலவீனமே தவிர, அஹிம்ஸையில் தவறு என்று கொள்ளல் கூடாது. சத்தியத்திலும் அஹிம்ஸையிலும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு, எல்லாரும் ஓர் குலமாக வாழும் பொன்னுளை நான் கற்பனை செய்து களிக்கிறேன். ஆனால் அது வெகு காலத்துக்குப் பிறகு நனவாகக் கூடிய கனவு'' என்றார் காந்திஜி.

'ராமனைக் காணாதவர்களும், ராமனால் காணப்படாதவர்களும் மனிதவர்க்கத்தால் ஒதுக்கப்பட வேண்டியவர்கள்' என்று ஒரு சுலோகம் உண்டு. நீங்கள் ராமனுடைய அநுக்கிரகம் பெற்றவர்கள்......'' என்றார் சாஸ்திரியார்.

மேலே பேச முடியாமல் அவர் தயங்கினார்.

சிறிது நேரம் கழிந்துச் சாஸ்திரியார் சொன்னார்: ''நேற்றுப் பிற்பகலில் நான் 'அரைக் கண்ணும் விழிப்புமாக' இருந்தபோது, ராமாயணக் காட்சி யொன்று தோன்றி மறைந்தது. அதை ஒரு கட்டுரையாக எழுதவேண்டும் என்ற ஆவல் எனக்கு. சுருக்கமாக அதைச் சொல்கிறேன். நான் நலம் பெற்று வீடு சென்றதும் கட்டுரை எழுதி அனுப்புகிறேன். பியாரிலால் உங்களுக்குப் படித்துக் காட்டட்டும்.

''ராவணன் இறந்ததும் அநுமான் சீதாபிராட்டியிடம் சென்று, 'அன்னையே, உத்தரவு கொடுங்கள், உங்களை ஹிம்ஸித்த இந்த ராக்ஷஸிகளைத் தண்டிக்கிறேன்' என்று கேட்டார்.

''அதற்குப் பிராட்டியார், 'இந்த அபலைகள் என்ன செய்வார்கள்? வயிற்றுப் பிழைப்புக்காகத் தலைவனுடைய ஆணையை ஏற்று நடந்தார்கள். எதிரியை மன்னித்து விடுதல்தான் வாழ்க்கையின் சிறப்பு. கருணை காட்டுதல் தெய்விகப் பண்பு. மாசற்றவனாக இருப்பதும் அரிது; கருணைக்குப் பாத்திரமாவதும் இயற்கை' என்று பதிலிறுத்தார்.''

இப்படிச் சொல்லிவிட்டு, ''நீங்கள் சத்திய சாதகர். நமக்குள் அரசியல் பேதம் இருக்கிறது. நானும் உண்மை வழி நடக்கிறேன். ராமாயணத்தைப் படித்துத் திளைத்து, என் வாழ்வு உருவாயிற்று. ஆனாலும் அதன் பிரபாவத்தை மக்களுக்கு எடுத்துக் கூறித் தொண்டு செய்ய இயலாமற் போய்விட்டது'' என்றார் வருந்தும் குரலில்.

''ஆண்டவன் அருள் இருந்தால் எல்லாம் நடக்கும்'' என்றார் காந்திஜி.

''இதுதான் நம்முடைய கடைசிச் சந்திப்பாக இருக்கும். நான் விடை பெற்றுக் கொள்கிறேன்'' என்றார் சாஸ்திரியார். அவருடைய முகபாவம் மாறிற்று. உடனிருந்த டாக்டரோ பீதியடைந்து விட்டார்.

இதற்குள் காந்திஜி, "இது என்ன அசட்டுத்தனம்? நாம் மீண்டும் சந்திப்போம்" என்று கூறி விடை பெற்ருர்.

சில தினங்களுக்குப் பிறகு காந்திஜி அவரைச் சந்தித்துப் பேசிய பிறகே சென்னையை விட்டுக் கிளம்பினர். சின்னட்களில் சாஸ்திரியார் மறைந்தார்.

எல்லாரும் வாழ........
(1946)

கதர் உற்பத்தியில் ஈடுபாடுள்ள சில ஊழியர்கள் காந்திஜி கல்கத்தாவில் தங்கி இருக்கும்போது பின்வரும் கேள்வியைக் கேட்டார்கள்: "நிர்மாணத் திட்டத்தில் கதர் பிரதான ஸ்தானம் வகிக்கிறது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிருேம். ஆனல் அதன் புரட்சிகரமான முக்கியத்துவத்தை ; மாறுதலை - எப்படி வற்புறுத்துவது?"

காந்திஜி சொன்ஞர்: "முன்பு, இந்தியா ஜவுளி உற்பத்தியில் உந்நத ஸ்தானம் வகித்தது என்பதும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது என்பதும் சரித்திரம் கூறும் உண்மை. பருத்தியும், ஆடை உற்பத்தியுந்தான் நாட்டின் முன்னேற்றத்துக்கும் நாகரிகத்துக்கும் அளவு கோல் என்று ஓர் ஆங்கிலச் சரித்திர ஆசிரியர் கூறியிருக்கிருர். நாம் ஆடை மாத்திரமா உற்பத்தி செய்தோம்? கலைத்திறன் மிளிர அற்புதமான ஆடைகளைத் தயாரித்தோம். பருத்திக் கொட்டையை மாட்டுத் தீவனமாகக் கொடுத்துப் பசுக்களைப் போஷித்தோம். விவசாயம் பெருகிற்று; நாட்டில் செல்வம் கொழித்தது; அழகும் கலையும் வளர்ந்தன.

"இன்று நம்முடைய பாரத நாட்டில் தரித்திரம் தாண்டவமாடுகிறது. கலையும் கைத்திறனும் பேச்சளவில் அடங்கிவிட்டன. நமக்குப் புத்துயிரளிக்கச் சர்க்கா ஒன்ருல்தான் முடியும். 'கதர் உற்பத்தியே நஷ்டத்திலிருக்கும்போது, நாட்டுக்குச் சுதந்தரம் பெறும் நிலைக்குச் சர்க்கா எப்படி உதவமுடியும்?' என்று நீங்கள் கேட்கக் கூடும். சென்ற நாட்களில், சர்க்காவுக்குப் பொருளாதார மதிப்புத்தான் இருந்தது. சுதந்தரச் சின்னமாகவோ அஹிம்ஸையின் அடையாளமாகவோ அது கருதப்படவில்லை. முன்னேற்றத்துக்கும், செல்வச் சிறப்புக்கும், விடுதலைக்கும் சர்க்காதான் சிறந்த ஆயுதம்

என்று எவரும் கருதவில்லை. வெறுப்பும், துவேஷமும், அறியாமையும் நம்மை வீழ்த்திவிட்டன. நம்முடைய நிலைமையை உணர்ந்து, ஆய்ந்து பார்த்து, நாம் முன்னேற வேண்டும். வங்காளம் வறுமை நிறைந்த மாகாணம் என்று சர்க்கார் அறிக்கை விட்டால், மக்கள் அதை ஆமாம் என்று ஏற்றுக்கொள்கிறார்கள். ஆறு கோடி மக்களைக் கொண்ட ஒரு மாகாணம் வறுமையால் பிடித்து வாட முடியுமா? இது பொருளாதார வறுமையை மட்டும் குறிப்பிடவில்லை; அறிவுப் பஞ்சத்தைத்தான் பறைசாற்றுகிறது.

"சில தினங்களுக்கு முன்பு, ரேடியோவில் பேசிய கவர்னர் இந்த மாகாணத்திலுள்ள விவசாயி, வருஷத்தில் ஆறு மாதம் சோம்பேறியாகக் காலங் கழிக்க நேரிடுகிறது என்று குறிப்பிடவில்லையா? சாகுபடிக்கு வசதியாக, வருஷம் முழுவதும் தண்ணீர் கிடைக்கும்படி இயற்கை வசதிகளைக் கட்டுப்படுத்தினாலும் எல்லாரும் சுபிட்சத்துடன் வாழமுடியுமா? நம்மைப் பிடித்துள்ள வியாதி, வறுமையல்ல; சோம்பேறித்தனந்தான். உணர்ச்சியும் ஊக்கமும் இல்லாமல், செயலாற்றும் திறமையுமின்றி, தன்னம்பிக்கையிழந்து, மக்கள் நிர்க்கதியாக நிற்கிறார்கள். அணைகளும் வாய்க்காலும், நீர்ப்பாசன வசதியை அதிகரிக்கக்கூடும். தான்ய உற்பத்தியினால் மட்டும், நம்முடைய வறுமையையும் அடிமைத் தனத்தையும் நீக்கிவிட முடியாது. மன உறுதியும் தோள் வலிமையும் வேண்டும். மக்களுக்கு அறிவும், திறமையும், ஆற்றலும் செயலும் வேண்டும். இன்றுள்ள நிலைமையில் இந்த அற்புதத்தைச் செய்யச் சர்க்கா ஒன்றால்தான் முடியும்."

"கதர் உற்பத்தியில் நீங்கள் சிரத்தை காட்ட ஆரம்பித்து ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டனவே; சர்க்காவில்தான் சுயராஜ்யம் இருக்கிறது என்றால், அதன் சூசகங்கூடத் தென்படவில்லையே?"

"நம்முடைய அறிவும் செயலும் இழைந்து செல்லவில்லையே? சுடுகாட்டில் அமைதியைக் கண்டால் அங்கு சாவின் நடனத்தையும் காண்கிறோம்; மனத்தில் சாந்தி ஏற்பட்டால், தெய்விகச் சக்தி மிளிர்கிறது. கேவலம் உழைப்பு அடிமைத்தனத்தைக் காட்டுகிறது. அறிவும் உழைப்பும் சேரும்போது தொழிலபிவிருத்தி ஏற்படுகிறது. அது சுதந்தரத்தின் சின்னமாகும். கதர் உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கிறவர்கள் இதை உணர வேண்டும். சர்க்கா வெறும்

உற்பத்திச் சாதனமல்ல, உள்ளத்துக்கும் உணர்ச்சியூட்டும் சக்தி அதில் இருக்கிறது. அது ஒரு கலை.''

''நூற்புக் கலை என்று எதைச் சொல்கிறீர்கள்? சுதந்தர ஆர்வத்துடன் நூற்கும்போது தான் அது வளருகிறதா?''

''நான் ஒரு வேளை உணவை விடக்கூடும்; ஆனால் நூற்றலை விடமாட்டேன் என்று பல தடவைகளில் கூறியிருக்கிறேன். மனச் சாட்சியுடன் ஒரு 'கர்மா'வாகக் கருதி நான் தினசரி நூற்று வருகிறேன் என்று தைரியமாகக் கூறுவேன். சர்க்காவி னால் சுயராஜ்யமும் சமாதானமும் கிடைத்துவிடும் என்று நம்பிக் கொண்டு நூற்பதைவிட, சர்க்காவின் சக்தியைப்பற்றி ஆராய்ந்து கொண்டே, நூல் நூற்றால், மனம் தெளிவடையும். சிந்தனை வளரும்போது அறிவும் விசாலப்படும். நம்பிக்கையுடன் அநுபவ மும் ஏற்பட்டால்தான் பலன் கிடைக்கும். பிறருடைய ஆராய்ச்சி யின் விளைவாக, ஒரு முடிவும் நம்பிக்கையும் ஏற்படுகின்றன. அநுஷ்டான பலத்தினால் தான் அது ஊர்ஜிதமடைந்து பலன் கொடுக்கும். நம்பிக்கை, தத்துவ ரீதியில் நின்றுவிட்டால், ஏட்டுச் சுரைக்காயாகிவிடும்.

''சர்க்காவினால்தான் நம்முடைய நாடு விடுதலை பெறப் போகிறது என்று நான் எண்ணியபோது, எனக்குச் சர்க்காவுக்கும் கர்க்கா (கைத்தறி) வுக்கும் வித்தியாசம் தெரியாது. மனசில் தோன்றிய எண்ணம், உரம் பெற்று வளர்ந்தது. மகன்லாலின் உதவியினால் என்னுடைய கனவு நனவாயிற்று. கதர் வளர்ச்சியில் ஒவ்வொரு கட்டத்திலும் ஆராய்ச்சியும் அநுபவமும் உண்டு. 'கதிரை இரும்பினால் செய்யலாமா, பித்தளைக் கம்பியினால் செய்ய லாமா? கம்பி தடிமனாக இருக்க வேண்டுமா, மெல்லியதாக இருக்கலாமா?' என்று ஆராய்ந்தோம். ஆரம்பத்தில் ஆலைக் கதிர்களை உபயோகித்தோம்; பிறகு கம்பியினால் செய்தோம். கம்பிகள் வளைந்தபோது, வேறு மாற்றுப் பொருளைத் தேடினோம், கதிர் தாங்கி, தேய்ந்து நூல் அறுந்தது; கதிர் வளைந்தது. சிறுகச் சிறுக மாறுதல் செய்த பிறகே, சர்க்கா உருவாயிற்று. ஆராய்ச்சியினால் தான் இது சாத்தியமாயிற்று. இதே போல, நூற்கும்போதும், நூற்பவனுடைய மனம் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும். 'எதற்காக ராட்டையில் நூற்கிறோம்? ஆலையில் ஓடும் கதிர்கள் வேகமாகச் சுற்றி அதிகமாக உற்பத்தி செய்கின்றனவே,

அதை ஏன் உபயோகிக்கக்கூடாது?' என்று சிந்திக்க வேண்டும். ராட்டையினால் ஒவ்வொருவரும் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும். ஆனால் ஒவ்வொருவரும் ஆலையை நிர்வகிக்க முடியாது. ராட்டையில் பிறருடைய ஆதிக்கம் இல்லை. ஆலையின் நிர்வாகம் யாரிடம் இருக்கிறதோ, அவர் உற்பத்தியைக் கட்டுப் படுத்தியோ, விலையைக் கட்டுப்படுத்தியோ, பிறருக்குக் கஷ்ட நஷ்டம் உண்டு பண்ணி, சுய லாபம் பெறக் கூடும். யந்திர சாதன வளர்ச்சியினால் தனி மனிதனுடைய சுதந்தரம் பறிமுதலாகி விடுகிறது. லண்டன், நியூயார்க் போன்ற நகரங்களில், மின்சார வசதியையோ, ஜல வசதியையோ தாக்குவதன் மூலம், நகர வாசிகளை ஒரே நாளில், அடிபணியச் செய்துவிட முடியும். பரஸ்பர உறவும், தனி மனிதனுடைய சுதந்தரமுந்தான் சமூக வளர்ச்சிக்கு அவசியம். ராபின்ஸன் குரூஸோவைப்பற்றி நான் குறிப்பிடும்போது, அவனுடைய முரட்டுத்தனமான வாழ்க்கை யைக் குறிப்பிடவில்லை; தன்னம்பிக்கையும், சுதந்தரமும் நிறைந்த அவனுடைய வாழ்க்கையையே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 'எல்லாரும் இன்புற்று வாழ' நினைப்பதே மனிதத் தன்மை. சர்க்காவினால் சிந்தனை ஊறும், சமூக வளர்ச்சி ஏற்படும். அதன் தத்துவம் உணர்ந்து அநுஷ்டித்தால் இந்தியாமட்டுமன்றி, உலகமே, தீமையினின்று விடுதலை பெற்று, சுபிட்சமும் சுகமும் பெற்று உய்யும்.''

என்ன வேண்டும்?

(1946)

காந்திஜி உருளிகஞ்சனில் தங்கியிருந்தபோது, கிருபா ஆசிரமத்தின் தலைவர், அவரைத் தரிசிக்கச் சென்றார். கல்வித் துறையில் தாம் எடுத்துக்கொண்டிருக்கும் புது முயற்சிக்குக் காந்திஜியின் ஆசிபெறவேண்டும் என்பது அவருடைய விருப்பம். தம்முடைய ஆசையைக் காந்திஜிக்குக் கடிதமூலம் தெரிவித்து விட்டு, அவர் உருளிகஞ்சனுக்குப் புறப்பட்டுச் சென்றார். பாபுவைச் சந்தித்ததுமே, "உங்களிடமிருந்து பதிலை எதிர்பார்த்தேன். உங்களுடைய ஆசீர்வாத பலத்தினால்தான் என் முயற்சி வெற்றி பெறும் என்று நம்புகிறேன்" என்றார் அவர்.

"உன்னுடைய கடிதத்தைப் பார்த்தேன். பதிலும் கிடைத்து இருக்குமே" என்றார் பாபு.

"கிடைத்தது. என்னுடைய கடிதம் வரப்பெற்றது என்று ஸ்ரீமதி சுசீலாபென் பதில் எழுதி இருந்தார்கள். நான் உங்களுடைய ஆசியை அல்லவா எதிர்பார்த்தேன்?"

"ஆசீர்வாதம், ஆசீர்வாதம் என்று எதற்காகக் கோருகிறீர்கள்? நல்ல காரியங்களுக்கு என்னுடைய ஆசி எப்போதுமே உண்டு. ஆனால் இந்தமாதிரி ஆசி கோருவது—எழுத்து மூலமாகப் பெற முயலுவது—எனக்குப் பிடிக்கவில்லை" என்றார் பாபு.

நண்பர் விலவிலத்துப் போனார்.

காந்திஜி மேலும் சொன்னார்: "நல்லதோ, கெட்டதோ சேவை செய்வதுதான் நம்முடைய கடமை. அதன் விளைவுகளை எதிர்பார்க்கக் கூடாது. பலாபலன்களைப்பற்றிச் சங்கைப்படும் போதுதான் தன்னம்பிக்கை தளர்கிறது. பிறருடைய ஆசீர்வாத பலத்தினால் வெற்றிபெற வேண்டும் என்ற ஆசை பிறக்கிறது.

"ஆண்டவனுடைய அருள்தான் வேண்டும். மனிதப் பிரயத்தனத்தில் நம்பிக்கையிருக்கவேண்டும். பொதுக்காரியங்களைச் செய்யும்போது முயற்சியும் சேவையும் தான் பிரதானமே தவிர வெற்றி தோல்வி பெரிதல்ல. மனிதனுக்கு மனிதன் ஆசிகூறிக் கொண்டிருப்பதில் பலன் கிடையாது. மனிதன் சுயநல நோக்குள்ளவன். நிஷ்காம்யமாகச் சேவை செய்கிறவர்கள் ஆண்டவனிடம் பொறுப்பை ஒப்படைத்துவிடவேண்டும். சுயநல நோக்கமும் ஆசையும் உள்ளவன்தான் பிறருடைய தயவை நாடுவான்."

"எங்களுடைய தலைவன் என்ற முறையில் அணுகுவதாக வைத்துக்கொண்டாலோ?" என்று கேட்டார் நண்பர்.

"அப்போதும் ஆசி தேவையில்லை. தலைவனுடைய கட்டளையை நிறைவேற்றும் பணிவும் உறுதியும் இருந்தாலே போதும்" என்றார் காந்திஜி.

நீங்களே சொல்லுங்கள்
(1946)

"சுதந்தர இந்தியாவில் எங்களுடைய அந்தஸ்து எப்படி இருக்கும்?" என்று ஒரு ஜமீன்தார் காந்திஜியிடம் கேட்டார். அப்போது காந்திஜி டில்லியில் தங்கியிருந்தார்.

"மற்றவர்களைப் போல நீங்களும் சுதந்தரமாக வாழ்வீர்கள். ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியின்போது நீங்கள் அநுபவிக்கும் சலுகை களையும் போக பாக்கியங்களையும் தொடர்ந்து அநுபவிக்க முடியுமா என்பதைப்பற்றி நீங்கள்தாம் யோசிக்க முடியும்" என்றார் காந்திஜி.

"இந்தியத் தலைவர்களால்தான் இந்தியாவுக்கு 'விடிவு காலம்' கிட்டும் என்பதை நாங்கள் உணருகிறோம்."

"இந்தியப் பிரச்னைகளை இந்த நாட்டு மக்கள்தாம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று பிரிட்டிஷ் சர்க்காரே எண்ண ஆரம் பித்துவிட்டார்களே!"

"ஜமீன்தார்களும், நிலச்சுவான்தார்களும் 1802-ஆம் வரு ஷத்திய 'செட்டில்மெண்டு'படித் தங்களுடைய உரிமைகளை அநுபவித்து வருகிறார்கள். அப்போது பிரிட்டிஷ் சர்க்காருக்கும் ஜமீன்தார்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டதுபோல, சுதந்தர இந்தியா விலும், நாட்டின் தலைவர்களுடன் தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றி ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள ஜமீன்தார்கள் தயாராக இருக்கிறார்கள்."

"அஹிம்ஸைத் தத்துவப்படி ஒருவருடைய உரிமைகளைப் பறிமுதல் செய்வதுபற்றி நினைத்துப் பார்க்கவே முடியாது. ஆனால் பிறருடைய உரிமைகளைப் பறிமுதல் செய்தும், மக்களை ஹிம் ஸித்தும் பிரிட்டிஷ் ஆட்சி இந்த நாட்டில் நிலைத்துவிட ஜமீன்தார் கள் உதவி செய்ததற்கு வெகுமதியாகவே சில சலுகைகளைப் பெற்றார்கள். சுதந்தர இந்தியாவிலும் அவற்றை நீடிக்கச் செய் வது முடியாத காரியமே."

"ஆனால் பிரிட்டிஷ் ஆட்சி இங்கு வேரூன்றுவதற்குப் பல வருஷங்களுக்கு முன்பு இருந்தே, தலைமுறை தலைமுறையாக, நாட்டின் சில பகுதிகளை ஆண்டு அநுபவித்து வரும் ஜமீன்தார் களும் இருக்கிறார்களே! அவர்கள் நாட்டின் நலனில் கருத்துக் கொண்டு கல்வி ஸ்தாபனங்களுக்கும், சமூகசேவா சங்கங்களுக்கும் உதவி செய்கிறார்கள். அவர்களுடைய அந்தஸ்துப் பாதிக்கப் படாமல் காக்கவேண்டும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வில்லையா?"

"தர்மத்துக்கு இணங்கிய பழங்கால முறைகளை மதிக்கவேண் டியதுதான்; காப்பாற்றவும் வேண்டும். ஆனால் தர்மத்துக்கு

ஒவ்வாத ஒப்பந்தங்களும் சலுகைககளும் ஒழிய வேண்டியதுதான். நீண்ட காலமாக அநுஷ்டானத்தில் இருப்பதால் அநீதி நீதியாகி விடாது. உங்களுடைய ஜமீனிலுள்ள மக்கள் உங்களுடன் சமமாகப் பழகி, ஒரே குடும்பமாக வாழ்ந்தால், நீங்கள் எதிர் காலத்தைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்.''

''எல்லோருக்கும் சமமாக நீதி வழங்க வேண்டும் என்பதே எங்களுடைய கோரிக்கை. தனிப்பட்டவர்கள் அநுபவித்துவரும் அசாதாரண உரிமைகளையும் சலுகைகளையும் சுதந்தர இந்தியச் சர்க்கார் ஒழித்துக் கட்டுவதை, நாங்கள் ஆக்ஷேபிக்க மாட்டோம். ஆனால் ஜமீன்தாரிகளை மட்டும் ஒழிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாது. கால மாறுதலுக்கு ஏற்றபடி நாங்களும் அநுசரித்துக் கொண்டு வாழக்கூடிய முறையில் சமரஸ பாவத்துடன் இருக்கவேண்டுமே தவிர, ஜமீன்தார் என்ற வகுப்பையே அழித்துவிட முயலக்கூடாது'' என்றார் அந்த நண்பர்.

''சுதந்தர இந்தியா என்பது பூச்சாண்டியல்ல. நேர்மையும் நீதியுமுள்ள எவருமே அதைக் கண்டு பயப்படவேண்டியதில்லை. ஒவ்வொரு காங்கிரஸ்காரனும் தேவதூதன் என்றோ, காங்கிரசைச் சேராத மற்றவர்கள் பிடாரிகள் என்றோ சொல்ல முடியாது. சுதந்தரச் சர்க்காரில் தீயவர்களும் இருக்கலாம். தீயவர்களே அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகவும் இருக்கலாம். ஆனால், காங்கிரஸ் பதவி ஏற்றால், (மற்றவர்களைவிட) நேர்மையாகவும் நியாய புத்தியுடனும் தர்மத்துக்குக் கட்டுப்பட்டு நிர்வாகம் செய்யும் என்றே நம்புகிறேன். இல்லாவிட்டால், இதுவரையில் மகத்தான தியாகம் செய்து, தேசத்துக்குச் செய்துள்ள அத்தனை நற்பயனும் நொடிப் பொழுதில் வீணாகிவிடும்'' என்றார் காந்திஜி.

''அதேபோல ஜமீன்தார்களிடையும் அநியாயக்காரர்கள் இருக்கக்கூடும் என்பதை நான் மறுக்கவில்லை. எங்களைச் சீர் திருத்த உங்களால் முடியும். எங்களைக் கலந்து ஆலோசிக்காமல் எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்பதே எங்களுடைய வேண்டுகோள்.''

''நியாயமான கோரிக்கைதான்'' என்று கூறினார் காந்திஜி.

★

ஆசி தாருங்கள்
(1946)

மந்திரி சபைத் தூதுகோஷ்டி இந்தியாவுக்கு வந்தபோது தேசத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தப் பண்டித மாளவியாஜி டில்லிக்கு வந்தார். வயோதிகத்தினால் அவர் உடல் தளர்ந்திருந் தார். அவர் இறங்கியிருந்த இடத்துக்குக் காந்திஜி, சென்றார். மாளவியாஜியுடன் பேசிக்கொண்டிருக்கும்போது காந்திஜி, "எவ் வளவு காலம்தான் நீங்கள் தேசத்தின் நிலைமையைப் பற்றிக் கவலைப்படுவீர்கள்? உங்களுக்கோ வயதாகிவிட்டது. மன அமைதி வேண்டாமா?" என்று கேட்டார்.

"கவலை தீரும்வரையில்" என்றார் மாளவியாஜி.

"என்னைப் போன்ற யுவர்களிடம் பொறுப்புக்களை விட்டு விட்டு நிம்மதியாக இருங்கள். நானும் (இளைஞனைப்போல) சுறு சுறுப்பாக வேலை செய்வேன்" என்றார் பாபு.

"இந்த இளைஞன் இளமை பெற்றுப் பலகாலம் வாழ்வான்" என்று சொன்னார் மாளவியாஜி மலர்ந்த முகத்துடன்.

காந்திஜியோ விடாமல் மீண்டும் சொன்னார்: "உங்களுடைய மனப் பாரத்தை என்னிடம் சொல்லுங்கள். பொறுப்பை ஒப்புக் கொடுங்கள். உங்களைப்போலப் பலம்பெற்று நான் வெற்றிபெற வேண்டும் என்று ஆசிகூறிவிட்டு நீங்கள் மனச்சாந்தியுடன் இருக்கவேண்டும் என்பதே என் கோரிக்கை."

"பலமா? ஆண்டவனுடைய திருநாமந்தான் நமக்குப் பலம் தருகிறது" என்றார் மாளவியாஜி.

"உண்மைதான். நான் சதா ராமநாமத்தை மனனம்செய்து கொண்டிருக்கிறேன். ஆனாலும் உங்களுடைய சாத்திரஞானமும் ஆற்றலும் எங்கே, நான் எங்கே? நான் முகஸ்துதி செய்யவில்லை. உங்களைப்போல எனக்குப் பாண்டித்தியம் இல்லையே?"

"ஞானத்தின் ஊற்றான ஆண்டவன் திருநாமத்தினால் ஏற்படும் பலம் உங்களிடம் இருக்கிறதே?"

"இருக்கலாம். ஆனாலும் உங்களுடைய பாண்டித்தியத் தைக் கண்டு நான் பொறாமைப்படுகிறேன். நீங்கள் நீண்ட காலம் வாழ்ந்து உங்களுடைய ஞானத்தினால் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதே என் ஆசை."

"ஆண்டவன் சித்தம்" என்ருர் மாளவியாஜி. காந்திஜி விடை பெற்றுக்கொண்டு எழுந்தபோது மெல்லிய குரலில் பின்வரும் சுலோகத்தைச் சொன்னர் :

'உன்னே (உன்னுடைய கடமையை) மறக்காதே. சுகந்தத்தை வீசும் ரோஜா மலரைப் போல எங்கிருந்தாலும் நீ உன்னுடைய நற்குணங்களேப் பரிமளிக்கச் செய்.'

நான் சர்வாதிகாரியானல்....

(1946)

மந்திரி சபைத் தூதுகோஷ்டியைச் சந்தித்த பிறகு ஓய்வுக்காகக் காந்திஜி முஸோரியில் சில தினங்கள் தங்கியிருந்தார். ஒரு நாள் சில அயல்நாட்டு நிருபர்கள் அவரைப் பேட்டி கண்டார்கள். சம்பாஷணேயின் நடுவே ஒருவர், "உங்களே இந்தியாவின் சர்வாதிகாரியாக ஒரே ஒரு நாளுக்கு மட்டும் நியமித்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்.

"முதலாவதாக நான் அதை ஏற்றுக்கொள்ளமாட்டேன். ஏற்றுக்கொள்வதாகவே வைத்துக்கொண்டாலும் என்ன செய்வேன் தெரியுமா? டில்லியில் நரக வாழ்வு வாழும் ஹரிஜனங்கள் சுகாதார வசதிகளுடன் சுகமாக வாழ, வைசிராய் மாளிகையிலுள்ள குதிரை லாயத்தைக் காலி செய்து கொடுப்பேன். மனிதர்களுக்குக் கிடைக்கும் வசதிகளேவிடப் பன்மடங்கு அங்குள்ள குதிரைகள் அநுபவித்து வாழ்கின்றன என்பதை நாம் உணர வேண்டும். ராஜபோகங்கள் நிறைந்த வைசிராயின் மாளிகைக்கு அருகிலேயே தரித்திரமும் அசுத்தமும் நிறைந்த எலிவளேபோன்ற குடிசைகளில் ஹரிஜனங்கள் வசிப்பது அவமானத்துக்குரிய விஷயமாகும். ஆகவே, இவ்வளவு பெரிய வாசஸ்தலம் எனக்கு (சர்வாதிகாரிக்கு) வேண்டாம் என்று தீர்மானித்து அதை ஓர் ஆஸ்பத்திரியாக மாற்றிவிடுவேன். தென் ஆப்பிரிகாவில் ஜனதிபதி குருகர் மிகவும் சிறியதோர் வீட்டில்தான் வசித்துக்கொண்டிருந்தார். அது எனக்கு மிகவும் பிடித்தமாக இருந்தது."

"சரி, இரண்டாவது நாளும் நீங்கள் தொடர்ந்து சர்வாதிகாரியாக இருக்க நேரிட்டால், என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார் அந்த நிருபர்.

"இரண்டாவது நாளா? முதல்நாள் விட்டுப் போனதைத் தொடர்ந்து செய்வேன்" என்றார் பாபு சிரிப்புடன்.

"உங்களுடைய சர்வாதிகார ஆட்சியில் வெளிநாட்டு உறவு எப்படி இருக்கும்? குறிப்பாக, ருஷ்யா-இந்தியா உறவு எப்படி இருக்கும்? ருஷ்யா இந்தியாவைத் தாக்கினால் என்ன செய்வீர்கள்?"

"என்னுடைய ஆட்சியில் இந்தியாவின் அரசியல் நிலைமையே மாறி விடும். ஆகையால் ருஷ்யாவுக்கு இந்தியாவின் மீதுள்ள ஆசை செத்துவிடும். படை எடுத்து வந்தாலும் இந்தியாவை அடக்கி ஆளுவதில் லாபம் இருக்காது. ஆனாலும் இவை எல்லாம் ஒரே நாளில் நடக்க முடியாத மிகவும் பெரிய கனவுதானே?"

சத்தியமும் அஹிம்ஸையும்

(1946)

முஸோரிக்கு வந்த போது பிர்லா, காந்ஜிதியிடம் பின் வருமாறு கேட்டார்: "பாபு, சுதந்தர வாயிலில் எங்களை அழைத்து வந்துவிட்டீர்கள். அதற்கு நாங்கள் பாத்திரம் தானா என்று என்னால் சொல்ல முடியாது. அஹிம்ஸா பலத்தினால்தான் இது சாத்தியமாயிற்று என்று நீங்கள் சொல்லக்கூடும். ஆனால் அஹிம்ஸையைவிடச் சத்தியசாதனையினால்தான் வெற்றிப் பாதையில் நாம் முன்னேறிச் செல்வதாக நான் எண்ணுகிறேன்."

"நான் அஹிம்ஸைக்கு முதல் இடமும் சத்தியத்துக்கு அடுத்த ஸ்தானமும் கொடுப்பதாக எண்ணுவது தவறு. சத்திய சாதனையினால்தான் வெற்றிப்பாதையில் முன்னேறுவதாக எண்ணுவதும் தவறு. அஹிம்ஸா மார்க்கத்தைக் கடைப்பிடித்துச் சுதந்தரப் போராட்டத்தை நடத்தியதால்தான் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்று நான் எண்ணுகிறேன்."

"நேர்மையிலும் சத்தியத்திலும் நம்பிக்கை கொண்டுதான் மக்கள் போராடினார்களே தவிர உங்களுடைய அஹிம்ஸைத் தத்துவதைத் தேசம் புரிந்து கொள்ளவில்லை என்றே சொல்ல வருகிறேன்."

"அல்லவே அல்ல. தேசத்தில் பொய்யும் பித்தலாட்டமும் இருக்கத்தான் இருக்கின்றன. இதை எண்ணிப் பார்க்கும்போது, சில சமயங்களில் துக்கத்தினால் மூச்சுத்துடிப்பே நின்றுவிடும்போல்

இருக்கிறது. தத்துவ பூர்வமாக உணராமல், தவறு செய்த போதிலும், அஹிம்ஸை வழியில் சென்றதால்தான் இத்துணை நன்மை கிடைத்தது என்று நான் நம்புகிறேன். மேலும் நான் சத்தியத்துக்குத்தான் முதல் இடம் கொடுக்க விரும்புகிறேன். ஆண்டவனே நித்தியமான சத்திய வஸ்து என்று ஒரு சமயம் நான் சொல்லிக் கொண்டிருந்தேன். ஆனால் சத்தியமே கடவுள் என்று நான் எண்ண ஆரம்பித்துப் பல வருஷங்களாகி விட்டன."

"அஹிம்ஸையில் உங்களுக்குத் தீவிரமான பற்று இருக்கிறது. அதைப் பரப்புவதே உங்களுடைய வாழ்க்கை விரதமாக ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அதனால்......" என்று ஆரம்பித்தார் பிர்லா.

"என்னுடைய லட்சியம் அஹிம்ஸையல்ல. சத்தியம்தான் லட்சியப் பொருள். அதை அடைவதற்கு அஹிம்ஸா மார்க்கத்தைத் தவிர, மனித முயற்சியில் வேறு சிறந்த வழி கிடையாது. திடச் சித்தத்துடன் அஹிம்ஸையைக் கடைப்பிடித்தால் லட்சியம் கைகூடும். ஹிம்ஸை வழியில் இது சாத்தியமல்ல. அதனால் தான் நான் அஹிம்ஸையில் பற்றுதல் கொண்டேன். மேலும், சத்தியத்தில் ஆர்வமும் சாதனையும் இயற்கையாகவே என்னுள் எழுந்தன. போராட்ட அநுபவத்தினால் அஹிம்ஸையில் நம்பிக்கையும் பற்றுதலும் ஏற்பட்டன. லட்சியத்தையடைய அஹிம்ஸையைக் கடைப்பிடித்தல் அவசியமாகையால், நம்முடைய தினசரி வாழ்க்கையிலும், அஹிம்ஸை இடம் பெற்றுவிட வேண்டும் என்று நான் எண்ணுகிறேன். மக்களிடம் இதை வலியுறுத்த வேண்டும். கல்வியினால் ஞானமும், ஞானத்தினால் சத்தியமும், கிடைக்கும்."

ராமநாம மகிமை

(1946)

காந்திஜி, 1946-ஆம் வருஷம் ஜூன் மாதக் கடைசியில் புனாவுக்கு ஸ்பெஷல் ரெயிலில் சென்று கொண்டிருந்தார். நெரால் ஜங்க்ஷனுக்கும் கர்ஜாத் ஜங்க்ஷனுக்கும் இடையே நிர்மானுஷ்யமான இடத்தில், அவர் செல்லும் ரெயிலைக் கவிழ்க்கச் சதிசெய்து சிலர் தண்டவாளத்தின்மீது பெரிய கற்களைப் புரட்டி வைத்திருந்

தார்கள். விடியற்காலை நேரத்தில் வண்டி அங்கு வரும்போது, எஞ்ஜின் கற்களின்மீது மோதி, எழும்பிச் சென்றது. எஞ்ஜின் ஓட்டி மிகவும் சாகஸத்துடன் வண்டியை நிறுத்திவிட்டார். அவருடைய அஞ்சா நெஞ்சத்தினால் ரெயில் கவிழாமலிருந்ததுடன், உயிர்ச் சேதமும் தவிர்க்கப்பட்டது. பின்னாலிருந்த வண்டியின் மின்சார உற்பத்திக் கருவி சேதமடைந்தது. வேறு வண்டிகளில் சிறு சேதங்கள் ஏற்பட்டன. இரண்டு மணி நேரம் தாமதம் ஏற்பட்டாலும், பழுது பார்க்கப்பட்டு ரெயில் புறப்பட்டது. பிரயாணிகளின் கூச்சலும், கற்களை அப்புறப்படுத்தும் சப்தமும், சம்மட்டி யடித்து, சேதப்பட்ட பாகங்களைத் தகர்த்து விலக்கும் சப்தமும் காதில் விழாமல் காந்திஜி உறங்கிக் கொண்டிருந்தார். மறுநாட் காலையில், விபத்தைப் பற்றி அவரிடம் பியாரிலால் கூறிய போது, "எனக்குத் தெரிய வில்லையே!" என்று ஆச்சரியத் துடன் கூறினார் காந்திஜி.

அன்று மாலை புனாவில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி, ரெயில் விபத்தைப்பற்றிக் குறிப்பிட்டு, பின் வருமாறு பேசினார்: "என்னுடைய வாழ்க்கையில் நான் ஏழாவது முறையாக மரண ஆபத்திலிருந்து ஆண்டவன் அருளால் இன்று தப்பியிருக் கிறேன். நான் எவருக்கும் தீங்கு நினைத்ததில்லை; எவரிடமும் குரோதபாவம் கொண்டதில்லை. ஆகவே, மற்றவர்கள் என்னிடம் பகைகொண்டு என்னுடைய உயிரை மாய்க்க ஏன் முயலுகிறார்கள் என்று தெரியவில்லை. லோகரீதியில் பகைமையும் ஆத்திரமும் சகஜந்தான். ஆபத்துக்களுக்கும் பயங்கரச் செயல்களுக்கும் நடுவே வாழத்தான் மனிதன் பிறக்கிறான். மனித வாழ்வே, ஜீவமரணப் போராட்டந்தான். இருந்தாலும் என்னுடைய உறுதி தளரவில்லை. இந்த விபத்தினால் நான் 125 வருஷகாலம் வாழ முடியும் என்ற நம்பிக்கை உறுதிப் பட்டு விட்டது. எனக்குப் புகலிடமும், தெம்பூட்டுவதும் ராமநாமந்தான். அவனுடைய நாமத்தைப் பஜிப்பதில் நீங்களும் என்னுடன் சேரவேண்டும். நீண்ட காலம் நான் வாழ்ந்து உங்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், உங்களுடைய இருதயத்தில் ஆண்டவன் இடம் பெற வேண்டும். தவற்றைச் செய்து, ஆபத்தை விலக்கி, நமக்கு நல்வழிகாட்டுவதும் பாதுகாப்பதும் அவனுடைய செயலாகும்."

பழிவாங்கும் மனப்பான்மை

(1946)

காந்திஜி, 1946-ஆம் வருஷம் ஜூலை மாதத்தில் பஞ்சகனியில் தங்கியிருந்த போது லூயி பிஷர் அவரைப் பேட்டி கண்டார். சர்வதேசப் பிரச்னைகளைப் பற்றிச் சில கேள்விகள் கேட்டபிறகு, "இந்திய வாலிபர்கள் தீவிரமாகத் தேசப்பற்றுக்கொண்டு அலைகிறார்களே, அதாவது இந்தியப் பித்துக் கொண்டு அலைகிறார்களே, இது நியாயந்தானா?" என்று கேட்டார்.

"அதனால் தவறு ஒன்றும் இல்லை. நாங்கள் சர்வதேசரீதியில் சிந்திக்க முடியாது. பிறர் எங்களைச் சுரண்டி வாழும் போது, நாங்கள் அடிமைத் தளையில் சிக்கித் தவிக்கும் போது, எங்களுடைய நாட்டைப் பற்றியே தீவிரமாகச் சிந்திப்பது இயற்கைதானே?" என்றார் காந்திஜி.

"உண்மைதான். அதற்காகப் பிறநாட்டார்மீது துவேஷம் காட்டுவது விரும்பத்தக்கது அல்லவே. உதாரணமாக இப்போது வெள்ளையர்கள்மீது துவேஷம் காட்டுவது அதிகமாகிவிட்டது. பம்பாயிலுள்ள தாஜ் மகால் ஹோட்டலில், 'தென் ஆப்பிரிகா வெள்ளையர்கள் அநுமதிக்கப்படமாட்டார்கள்' என்று அறிக்கை எழுதி ஒட்டியிருக்கிறார்கள். இது எனக்குப் பிடிக்க வில்லை. எதிரியிடம் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதுதானே அஹிம்ஸைத் தத்துவம்?" என்று கேட்டார் பிஷர்.

"உண்மை தான். இன்று வெள்ளையராட்சிதான் இந்தியாவில் இருக்கிறது. அப்படி இருந்தும், தாஜ்மகால் ஹோட்டல் நிர்வாகிகள் துணிச்சலுடன் இந்த மாதிரி அறிக்கையை ஒட்டியிருப்பது பெருமைப்படக்கூடிய விஷயம்தான்."

"தேச பக்தியுள்ள ஒவ்வொருவரும் சொல்லும் வார்த்தைகளைத்தான் நீங்களும் சொல்கிறீர்கள். நான் உங்களிடமிருந்து நல்ல வார்த்தைகளை எதிர்பார்த்தேன்" என்றார் பிஷர் முகவாட்டத்துடன்.

"நான் தேசபக்தன் என்ற முறையிலேயே பேசுகிறேன். இந்தியர்களைச் சரிசமானமாக நடத்தாவிட்டால் இந்த நாட்டில் வாழும் உரிமையே அவர் (வெள்ளையர்)களுக்குக் கிடையாது" என்றார் பாபு, அழுத்தமான குரலில்.

"உரிமை கிடையாதுதான். ஆனால் உங்களுடைய தத்துவமே வேறு அல்லவா? வெள்ளையர்களை இங்கு அழைத்து உபசரிக்கும் மனப்பான்மை (இங்குள்ளவர்களுக்கு) வேண்டும்."

"நான் வைசிராயாக இருந்தால் அப்படிச் செய்வேன்."

"சுதந்தர நாட்டின் ஜனாதிபதியாக என்று சொல்லுங்கள்."

"வேண்டாம், தாற்காலிகமாக, சட்டபூர்வமான வைசிராய் பதவியே போதும். அப்போது நான் என்ன செய்வேன் தெரியுமா? வைசிராய் மாளிகையைக் காலி செய்து ஹரிஜனங் களுக்குக் குடியிருப்பு வசதி தருவேன். அதன் பிறகு, தென் ஆப்பிரிகாவிலுள்ள வெள்ளையர்களை என்னுடைய குடிசைக்கு விருந்தாளிகளாக அழைப்பேன். 'என்னுடைய நாட்டு மக்களை நீங்கள் காலால் தேய்த்து மிதித்து விட்டீர்கள். அவர்களுடைய உரிமைகளை மறுத்துக் கொடுமைப் படுத்தினீர்கள். ஆனால், நாங்கள் உங்களுடைய மார்க்கத்தைப் பின்பற்ற மாட்டோம். உங்களைப் பழிவாங்க மாட்டோம். உபசரிப்போம். உங்களைத் தூக்கிலிடமாட்டோம். கௌரவமான விருந்தாளிகளாக நடத்து வோம்' என்று கூறி அவர்களைத் தலைகுனியச் செய்து நல்வழிப் படுத்துவேன்."

"இனத் துவேஷம் அதிகமாகி விட்டதே என்று தான் வருந்து கிறேன்" என்றார் பிஷர்.

"ஆமாம், நானும் அதை எதிர்க்கிறேன். துவேஷத்தினால் எவருக்கும் லாபம் இல்லை" என்றார் பாபு.

"இன்று உலகமே இரண்டாகப் பிரிந்து நிற்கிறது. வெள்ளை யர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு போர் மூளக்கூடும்."

"கோழைத்தனத்தைவிட வெறிமூண்டு வெட்டி மாய்வது உயர்வுதான். அது ஹிம்ஸைதான். ஆனாலும் பரவாயில்லை. நான் தென் ஆப்பிரிகாவில் இருக்கும்போது நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன்: வெள்ளையர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு ரெயில் பெட்டியில் வாட்டசாட்டமான நீகிரோ பாதிரி ஒருவர் நுழைந்தார். உள்ளேயிருந்த வெள்ளையன் அவரைத் தூஷித்து விரட்டினான். 'மன்னிக்க வேண்டும், சகோதர' என்று சொல்லி விட்டு, கறுப்பர்களுக்காக ஒதுக்கப்பட்ட பெட்டியில் போய் ஏறினார் அந்தப் பாதிரி. இது அஹிம்ஸையல்ல; ஏசுவின் போதனை களை இழிப்பதாகும். கோழைத்தனமாகும்; இதற்குப் பதிலாக

அந்த வெள்ளையனை எதிர்த்து நின்றால் ஆண்மைத்தனமாகும். பலாத்காரத்தில் இறங்குவதைக்கூட வரவேற்கலாம்.''

''உங்களுடைய அநுபவத்தைக் கொண்டு இப்படிப் பேசுகிறீர்கள். அந்த நாட்டில் வெள்ளையனைத் தாக்கத் துணிச்சல் வேண்டும். இந்த நாட்டிலோ, விரல் விட்டு எண்ணும்படித்தான் வெள்ளையர்கள் இருக்கிறார்கள்.''

''உங்களுடைய ஊகம் தவறு. அவர்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருக்கலாம். ஆனால் அவர்களுடைய திமிரும் அதிகாரமும் சொல்லத் தரமன்று. ஒரு வெள்ளையனைக் கொன்றதற்காக, இந்த நாட்டில், ஒரு கிராமத்தையே சுட்டுப் பொசுக்கிப் பழி தீர்த்தார்கள். அந்த மாதிரிச் சம்பவங்களை எண்ணும் போதே மனம் பேதலிக்கிறது.''

எல்லாரும் சமம்தான்

(1946)

காந்திஜி ஓய்வுக்காகப் பஞ்சகனியில் தங்கியிருந்தபோதுங் கூட, அங்கும் சென்று பலர் பேட்டி கண்டு வந்தார்கள். ஒருநாள் கிருபா ஆசிரமத்தின் தலைவர், ஆசிரம நிர்வாகத்தைப் பற்றிக் காந்திஜியிடம் கூறச் சென்றிருந்தார். அவரைப் பார்த்ததுமே காந்திஜி, ''மிகவும் சுருக்கமாகப் பேசவேண்டும். பத்து நிமிஷம் தான் அவகாசம் கொடுப்பேன். மூன்று மணிக்கு வேறு ஒருவரைச் சந்திப்பதாகச் சொல்லி யிருக்கிறேன்'' என்றார்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே, காந்திஜியைப் பார்க்க, அவுந்த் சம்ஸ்தானாதிபதி ஸ்ரீ அப்பா சாஹேப் வந்திருப்பதாக ஒருவர் சொன்னார். காந்திஜி கடிகாரத்தைப் பார்த்து விட்டு, ''அவரை உட்காரச் சொல்லுங்கள். இவரை அனுப்பி விட்டு வருகிறேன்'' என்றார்.

இதற்குள் கனுகாந்தி உள்ளே நுழைந்து, ''பாபு, அப்பா சாஹேபை மூன்று மணிக்கு வரச் சொல்லி யிருக்கிறீர்களே'' என்றார். ''ஆமாம், மூன்று மணிக்கு இன்னும் ஏழு நிமிஷங்கள் இருக்கின்றன'' என்று சொல்லி விட்டு, காந்திஜி பேச ஆரம்பித்தார்.

சில நிமிஷங்களுக்குள் வேறு ஒருவர் வந்து, ''பாபு, அப்பா சாஹேப் வெகுநேரமாக வெளியில் காத்துக் கொண்டிருக்கிறாரே'' என்றார் கவலையுடன்.

"பரவாயில்லை. ஒரு நாற்காலியைப் போட்டு அவரை அமரச் சொல்லுங்கள். மூன்று அடிக்க இன்னும் இரண்டு நிமிஷங்கள் இருக்கின்றன. அதற்குள் இவருடைய காரியமும் முடிந்துவிடும். நான் கடிகாரப்படி வேலை செய்கிறேன் என்பதை ஏன் நீங்கள் மறந்து விட்டீர்கள்?" என்று கேட்டார்.

சரியாக மூன்று அடித்ததும் அந்த நண்பர் வெளியேறினர். வெளியே காத்துக்கொண்டிருந்த அப்பா ஸாஹேப் காந்திஜியின் அறையில் நுழைந்தார்.

ஆயுள் எதற்கு?

(1946)

"நீங்கள் ஏன் 125 ஆண்டு வாழ விரும்புகிறீர்கள்?" என்று ஓர் அமெரிக்க நிருபர் காந்திஜியைக் கேட்டார்.

"மக்களுக்குச் சேவை செய்யத்தான்" என்றார் காந்திஜி.

"வாழ்க்கையை நன்றாக அநுபவிக்கவே நீங்கள் நெடுங்காலம் வாழ விரும்புவதாக நான் நினைத்தேன்" என்றார் அவர், ஆச்சரியம் ததும்பும் குரலில்.

"பிறருக்குச் சேவை செய்வதே வாழ்க்கை இன்பம்தான்" என்றார் காந்திஜி.

நிருபருக்கு விளங்கவில்லை. "வாழ்க்கையின் ருசியை (ஆனந்தத்தை) நீங்கள் எப்போது அநுபவிக்க ஆரம்பித்தீர்கள்?" என்று கேட்டார்.

"பிறந்தபோதேதான்!"

"இது என்ன புதிர்?"

"இந்தியாவின் பண்பைத் தெரிந்து கொண்டவர்களுக்கு இது புதிர் அல்ல. 'தியாகத்தில்தான் வாழ்க்கையின் பிரகாசம் இருக்கிறது; சந்தோஷம் இருக்கிறது' என்று ஈசோபநிஷத் கூறுகிறது."

"பிறருக்குச் சேவை செய்வதில் ஆனந்தம் இருப்பதாகக் கூறுகிறீர்களே, அந்த அநுபவம் எப்போது ஆரம்பித்தது?"

"வாழ்க்கைத் தத்துவத்தை நான் புரிந்து கொண்டபோது."

"இது உங்களுடைய நாட்டின் விசேஷ குணமா, உங்களுடைய விசேஷ குணமா?"

''எங்களுடைய நாட்டின் விசேஷம் இப்போது ஒன்றே ஒன்று தான்; செல்வச் சிறப்பு அமெரிக்காவின் விசேஷம்போல இந்தியாவின் விசேஷம் நித்திய தரித்திரம்தான்.''

''இதற்கு மாற்று என்ன?''

''சுதந்தரம்.''

புத்திமதி

(1946)

''வாழ்க்கையைத் துவங்கும் வாலிபனுக்கு நீங்கள் தரும் உபதேசம் என்ன?'' என்று பிரிட்டிஷ் நிருபர் ஒருவர் காந்திஜியிடம் கேட்டார். அப்போது காந்திஜி டில்லியில் இருந்தார்.

''நாவை அடக்கு என்பேன்'' என்றார் காந்திஜி.

நிருபருக்கு விளங்கவில்லை.

காந்திஜி சொன்னார் : '' 'பிறருக்கு நீ செவிசாய், ஆனால் உன்னுடைய குரலை எவருக்கும் காட்டாதே' என்று ஷேக்ஸ்பியர் சொல்லவில்லையா? அதைத்தான் ஞாபகப்படுத்துவேன்.''

''உங்களுடைய வாழ்க்கையிலும் நீங்கள் இதைக் கடைப்பிடித்தீர்களோ?'' என்று கேட்டார் நிருபர்.

''என்னுடைய சிறுபிராயத்தில நான் மக்காகவே இருந்தேன். எவருடனும் கலந்து பழக முடியாமல் கூச்சப்படுவேன். அதனால் பிற்காலத்தில் எனக்கு நன்மையே ஏற்பட்டது. என்னுடைய வாழ்க்கையிலும் மாறுதல் ஏற்பட்டது. அதற்காக நான் ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகிறேன்'' என்றார் காந்திஜி.

பாசமும் கோபமும்

(1946)

காந்திஜி டில்லியில் தங்கியிருந்தபோது அவருடைய 78-ஆவது பிறந்த தினத்தை விமரிசையாகக் கொண்டாட உள்ளூர்க் காங்கிரஸ் வாதிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த ஆண்டில் நக்ஷத்திரப்படி காந்திஜியின் பிறந்த தினம் செப்டர் மாதம் 22-ஆம் தேதி வந்தது. காலையில் கொடி வணக்கமும், தொண்டர்களுக்கும் ஹரிஜனச் சிறுவர்களுக்கும் சிற்றுண்டி வழங்கவும் நிச்சயித்திருந்தார்கள். காந்திஜி, தமது பிறந்த தின விழாவை, 'சர்க்கா ஜயந்தி' என்றே குறிப்பிடுவது வழக்கம். ஆனால் அந்த விழாவில்

சர்க்காவையே விழா நிர்வாகிகள் மறந்து விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். விழாவில் கலந்துகொள்ளக் காந்திஜி வந்த போது, நிகழ்ச்சி நிரலைப் பார்த்து வருந்தினர். "நூற்பு வேள்வி இடையாதா? சர்க்காவை மறந்துவிட்டீர்களா? அதன் கீதத்தினல் கிடைக்கும் சாந்தியை மறந்துவிட்டீர்களா?" என்று கேட்டார்.

"பசியின் கொடுமை தெரியாதவர்களுக்குப் பழமும் சிற்றுண்டியும் கொடுத்து விழாக் கொண்டாடுகிறீர்களே! இது அவசியந்தானு? ஹரிஜனங்களுக்கு உதவி செய்ய விரும்பினல், அவர்களுடைய தேவையை அறிந்து உதவுங்கள். குடியிருப்பு வசதியும், மற்றவர்களுடன் சமமாகப் பழகும் சந்தர்ப்பமும் அளியுங்கள். கல்வி யறிவு கொடுங்கள்" என்ருர் காந்திஜி.

அன்று முழுவதும் அவர் மன அமைதியற்று இருந்தார். "என்னுடைய ஆகாரத்தில் ஆரஞ்சுப் பழ ரசம்கூட அவசியமல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. உணவின் மதிப்பை அறியாமல் நம்முடைய சகாக்களே துர்விநியோகம் செய்கிருர்களே! இன்று எலுமிச்சம் பழ ரசத்தில் வெல்லம் போட்டுக் கொடுங்கள். ஆரஞ்சுப்பழ ரசம் வேண்டாம்" என்று குறிப்பு எழுதி, பியாரிலாலிடம் கொடுத்தார்.

அன்றிரவு அவர் பின்வருமாறு நாட்க் குறிப்பு எழுதினர்: "ராட்டையின் தத்துவத்தை மக்கள் மறக்கத் துணிந்துவிட்டார்கள். நான் ஆத்திரங் கொண்டேன். இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் என்னுடைய க்டமை என்ன என்று சிந்திக்க வேண்டும். உள்ளும் புறமும் கொதிக்கும்போது பற்றற்ற நிலையில் மனத்தை வைத்துக் கொள்வது மிகவும் கடினம். ஆனலும் நான் சாதனையில் மனம் செலுத்த வேண்டும்."

நீண்ட ஆயுள் வேண்டேன்

(1946)

ஏறக்குறைய ஒரு மாதத்துக்குப் பிறகு பங்கி காலனியில் அமெரிக்க நிருபர் பிரெஸ்டன் க்ரோவர் காந்திஜியைப் பேட்டி கண்டார். பல பிரச்னைகளைப்பற்றிப் பேசும்போது காந்திஜி 125 ஆண்டுகள் வாழ விரும்புவதைப்பற்றிப் பிரெஸ்டன் க்ரோவர் கேட்டார். "நான் நீண்ட காலம் வாழ்வேன் என்ற நம்பிக்கை இப்போது தளர்ந்துவிட்டது" என்ருர் பாபு.

"ஏன்?" என்று திடுக்கிட்டுக் கேட்டார் நிருபர்.

"நீண்ட காலம் வாழ்வது ஒரு தபசு. நான் அதற்குரிய பரீட்சையில் தவறிவிட்டேன். தன்னடக்கத்தில் தவறிவிட்டேன். தன்னடக்கத்தினுல்தான் ஆயுளை விருத்தி செய்துகொள்ள முடியும். செயற்கை வசதிகளாலோ, மருந்துகளின் உதவியாலோ நான் நீண்ட காலம் வாழ விரும்பவில்லை. சென்ற மாதம் என்னுடைய பிறந்த தினத்தை ராஜேந்திர பிரசாதின் தலைமையில் விமரிசையாகக் கொண்டாடினுர்கள். கொடியேற்று விழா முடிந்ததும் தொண்டர்களுக்கும் ஹரிஜனச் சிறுவர்களுக்கும் வேர்க்கடலை, திராக்ஷை முதலிய தின்பண்டங்களை விநியோகிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்திய சர்க்காரின் உணவு மந்திரியான ராஜன் பாபுவின் தலைமையின் கீழ், தேவைப்படாதவர்களுக்கு உணவு விநியோகம் செய்யும் அநியாயத்தை என்னுல் சகிக்க முடியவில்லை. நிலை தவறிக் கடிந்துகொண்டேன். நாட்டில் பஞ்சம் தாண்டவமாடும்போது, நகரவாசிகளுக்கு உணவு வழங்கும் செயல் உணவுமந்திரியையே அவமதிப்பதாகும் என்று கூறினேன்.

"வெகு நேரம் சென்ற பிறகு மனம் அமைதி அடைந்தது. என்னுடைய ஆத்திரமும் கோபமும் நியாயந்தானு என்று சிந்தித்தேன். தன்னைமீறி நான் கோபம் கொண்டது அநாவசியம் என்றே தோன்றிற்று. ஆத்திரத்தினுல் ஆத்ம பலத்தை இழந்துவிட்டதாகத் தோன்றியது. மனசைக் கட்டுப்படுத்த முடியாதபோது தவம் சித்திக்காது. என்னுடைய ஆயுளில் பெரும் பகுதி அதனுல் இழந்து போயிற்று. மீண்டும் மன அடக்கம் பெற்று, இழந்த பலத்தைப் பெற வேண்டும்.

"உள்ளக் கொதிப்பை அடக்கி, பற்றற்று வாழ்வதே சிறந்தது. ஆத்ம பலத்தை இழந்துவிட்டதால்தான் என்னுடைய முயற்சிகளிலும் வெற்றி காண முடியாமல் தவிக்கிறேன் என்று எண்ணுகிறேன். பொறுமையும் நம்பிக்கையும் இருந்தால்தான் கதர் இயக்கம் வளரும். நாட்டின் செல்வ நிலைக்கும், ஆத்ம பலத்துக்கும் கதர் இயக்கம்தான் ஜீவநாடி. சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வமும், பற்றற்ற தன்மையும்தான் வெற்றி மார்க்கத்தின் திறவுகோல்.

"இந்தியா போன்ற பெரிய, பரந்த நாட்டில் உணவுப் பஞ்சம் என்ற கூக்குரல் கூடாது. கடல் கடந்து உணவுத்

தான்யங்களைக் கொண்டு வருவதும் தவறு. இங்குள்ள ஒவ்வொரு மணித் தான்யத்தையும் வீணாக்காமல் சேகரித்து, சீராக விநியோகித்தாலே பட்டினி என்ற கூக்குரல் அடங்கும். நாட்டை ஆளுகிறவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து நடந்தால் கள்ளச் சந்தையை ஒழித்துவிடலாம். கள்ளச் சந்தை ஒழிந்தாலே, பட்டினியின் வேகமும் அடங்கிவிடும்."

மதமும் சர்க்காரும்

(1946)

"சுதந்தர இந்தியாவில் மத சுதந்தரம் எப்படி இருக்கும் சர்க்கார் தலையிடுமா?" என்று ஒரு பாதிரியார், புதுடில்லியில் காந்திஜியைச் சந்தித்தபோது கேட்டார்.

"நான் சர்வாதிகாரியாக இருந்தால், சர்க்கார் மத விஷயங்களில் தலையிடாமல் இருக்கச் செய்வேன். மதப்பற்றற்று அரசியலும் சர்க்காரும் இயங்க முடியும். மதம் தனி மனிதனுடைய உரிமை. அதற்காக நான் போராடுவேன். மக்களின் தனி உரிமைகளைக் காக்கவும், சுகாதாரம், போக்குவரத்து, நாணயச் செலாவணி, வெளிநாட்டு உறவு போன்ற சமூக நலனுக்கான காரியங்களுக்காகவும் மட்டுமே சர்க்கார் கவனம் செலுத்தும். என்னுடைய மனப்பான்மையையும் மதாசாரத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், என்னுடைய பழக்க வழக்கங்களை நீங்கள் கூர்ந்து பார்க்கவேண்டும்."

"ஆனால், எல்லா நாட்டு மக்களுக்குமே மத விவகாரங்களைவிட அரசியல் துறையில்தானே பற்றும் ஆர்வமும் இருக்கின்றன? எதிர்காலத்தில் அரசியல், விஞ்ஞானம், மதம் இவற்றில் எது மக்களுடைய வாழ்க்கையில் முக்கியமாகப் பரிணமிக்கும்?"

"நிச்சயமாக மக்கள் மதப் பற்றுக்கொண்டு வாழ்வார்கள். இன்று மதத்தை வெறும் சடங்காகக் கருதுகிறார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் ஆண்டவனை நினைக்கச் சில நிமிஷ நேரத்தை ஒதுக்கி வைக்கிறார்கள். மதம் என்பதே வாழ்க்கைதான். மதம் தான் - ஆண்டவனிடம் உள்ள பற்றுத்தான் - மனிதனுடைய மூச்சுக் காற்று. ஒவ்வொரு கணமும் அவனை நினைத்து வாழுந் தருணம் வரும். அப்போதுதான் அன்பும் சுபிட்சமும் நிறைந்த உலகத்தை நாம் காண முடியும்" என்றார் காந்திஜி.

"மக்களுக்கு அரசியல் பற்றுத்தான் இப்போது அதிகமாக இருக்கிறது. தொழிலாளர்களுடைய செல்வாக்கு வளர்ந்து வருகிறது. தங்களுடைய கோரிக்கைகளைப் பெற அவர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் அது அசாதாரண நிலைமையை உண்டு பண்ணிவிட்டது. இந்த நாட்டிலும் வேலை நிறுத்தங்கள் சகஜமாகி விட்டன" என்றார் பாதிரியார்.

"உண்மைதான். ஆனால் அதன் அடிப்படைக் கோளாறு என்ன என்று சிந்தித்துப் பார்த்தீர்களா? மக்களுக்கு மதப் பற்றும் ஈசுவர பக்தியும் ஏற்பட்டாலும், பொருளாதார உரிமைகளைக் கோரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக் கூடும். சுரண்டலும், அதை எதிர்க்க வேலை நிறுத்தமும் இருக்கலாம். ஆனால் அஹிம்ஸா வழிகளில் ஏற்படும் வேலை நிறுத்தங்களின் அந்தஸ்தே வேறு விதமானது. அதனால் சம்பந்தம் இல்லாத மற்றவர்களுக்குத் தீங்கு நேராது. தென் ஆப்பிரிகாவில், அஹிம்ஸா வழியில் நான் போராட்டம் நடத்தியபோது ஜனரல் ஸ்மட்ஸ் மனம் மாறிச் சமரஸம் பேச நேர்ந்தது. இதற்கு நாங்கள் கையாண்ட மார்க்கம்தான் காரணம். இதேபோல அஹிம்ஸா வழியில் நடக்கும் வேலை நிறுத்தங்களும் வெற்றிபெறக்கூடும். ஜனரல் ஸ்மட்ஸ் என்னைச் சந்தித்தபோது சொன்னார்: 'ஓர் ஆங்கிலேயனுக்காவது உங்களால் இடைஞ்சல் ஏற்பட்டது என்று தெரிந்தால், உங்களைச் சுட்டுத் தள்ளி இருப்பேன். இந்தியர்களைக் கப்பலேற்றி நாடு கடத்தி இருப்பேன். ஆனால், எதிர்த்து நிற்காமல் ஆத்மத் தியாகம் செய்யும் மக்களை எத்தனை காலம்தான் சிறையில் அடைத்து வாட்ட முடியும்?'—ஆத்மத் தியாகம் என்பதே மதப் பண்புதான். அதற்கு மனப் பக்குவமும் பயிற்சியும் பக்தியும் அவசியம்."

அணுக்குண்டும் அஹிம்ஸையும்

(1946)

நியூயார்க் போஸ்டு என்ற அமெரிக்கப் பத்திரிகையின் நிருபரான ஆண்ட்ரூ பிரீமென் காந்திஜியுடன் சில தினங்கள் தங்கியிருந்தார். கைராட்டையும் கதர்த் தத்துவமும் அவரைப் பெரிதும் வசீகரித்துவிடவே, டில்லியில் கனு காந்தி நடத்திய

நூற்புப் பயிற்சி வகுப்பில் அவரும் சேர்ந்துகொண்டார். ஒரு நாள் அவர் காந்திஜியிடம், "கைராட்டையினால் அமெரிக்காவுக்கு ஏதாவது போதனை கிடைக்குமா? அணுக்குண்டை வெல்ல அது பயன்படுமா?" என்று கேட்டார்.

"அமெரிக்காவுக்கு மட்டும் என்ன? உலகமே உய்யக் கைராட்டை வழிகாட்டும் என்றே நான் நம்புகிறேன். முதலில், இந்தியா அதன் அற்புதச் சக்தியை அறிந்து வெற்றிபெற வேண்டும். பிறகுதான் உலகத்துக்கு எடுத்துக்காட்டமுடியும். ராட்டையின் சக்தியில் குறைபாடு கிடையாது. அநுஷ்டானத்தில் தான் குறைபாடு இருக்கிறது. ராட்டைத் தத்துவத்தில் இந்தியா பரிபூர்ண நம்பிக்கை வைத்தால்தான் அதன் அற்புதச் சக்தி பிறநாடுகளில் ஒளி வீசும். ராட்டையின் சக்தியில் எனக்குத் திடமான நம்பிக்கை உண்டு. இந்தியாவின் க்ஷேமத்துக்கும் லோக உத்தாரணத்துக்கும் ராட்டையே சிறந்த சாதனமாகும். அன்பின் அடிப்படையில் ராட்டையின் போதனை இருக்கிறது. யந்திர சாதனங்களுக்கு இந்தியா அடிமையாகிவிட்டால் பிறகு உலகம் உய்யக் கடவுள்தான் வழிகாட்டவேண்டும் என்றே சொல்வேன். மேலும் சர்வதேச உறவும் உலக சமாதானமும் ஏற்படுவதற்குப் பாடுபடுவதே இந்தியாவின் லட்சியமாகும். மகாநாடுகளால் சமாதானம் கைகூடி விடாது. மகாநாடுகள் நடக்கும்போதே, உலகின் வேறு ஒரு கோடியில் யுத்த முரசு ஒலிக்கும்" என்றார் காந்திஜி.

"இந்தியாவே குழப்பத்தில் சிக்கிக் கொண்டிருக்கும்போது பிற நாடுகளுக்கு வழிகாட்டும் என்று எண்ணுவது விசித்திரம் அல்லவா? இங்கு இனத் துவேஷமும் வேறு பிற்போக்குச் சக்திகளும் இருக்கின்றனவே? ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். உலக சமாதானம் கோரி இந்தியா பாடுபட்டால், பலன் கிட்டலாம். மற்ற நாடுகளைவிட இங்கு தார்மிக ஆதரவு இருக்கிறது. இந்தியா அந்த மகத்தான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறீர்களா?" என்று கேட்டார் பிரீமென்.

"உலக சமாதானத்துக்காக இந்தியா பாடுபட்டுக்கொண்டு தான் இருக்கிறது. ஆனால் அந்த முயற்சி மிகவும் மெதுவாகவே இருக்கிறது. கதரைப்பற்றிக் குறிப்பிடும்போது, அது 'சுதந்தரத்தின் சின்னம்' என்று ஜவாஹர் சொல்வண்டு. நான்

அப்படி எண்ணவில்லை. ராட்டைக்கு வாழ்க்கையில் முக்கிய ஸ்தானம் உண்டு என்றே கருதுகிறேன். இந்த நாட்டிலுள்ள ஏழை களுக்கும் (தேசப் பற்றுக் கொண்ட) பித்தர்களுக்கும் சாந்தியும் உணவும் அளிக்கும் வரையில் அது வெறும் சின்னமாக இருக்க முடியாது. மனித சக்திக்குப் புறம்பான சக்திகளும் உண்டு. ராட்டைக்குத் தெய்விக பலம் உண்டு என்றே எண்ணுகிறேன்."

"அப்படியானால் ராட்டையில் நம்பிக்கையுள்ளவர்கள் பித்தர் களல்ல என்று சொல்கிறீர்கள்?"

"வெளிநாட்டார்கள் அப்படிக் கூறக்கூடும் என்றே அந்த வார்த்தையை உபயோகித்தேன். நானும் ஒரு பித்தன்தான்."

"அமெரிக்க அறிஞர்கள் கதர்த் தத்துவத்தையும் நூற்பவர் களையும் அலட்சியம் செய்யமாட்டார்கள். ஆனால் அவர்களுக்கு அதன் உட்பொருள் விளங்கவேண்டும். அழிவின் பாதையை நோக்கிச் செல்லும் நாகரிகத்தையும் சமூகத்தையும் காப்பாற்ற வேண்டியது அவசியமாகும். வாழ்க்கையிலும் எளிமை காணுவது அவசியம். (இதற்கு உங்களுடைய கொள்கைகள் பயன்படுமா என்பது பரீட்சிக்க வேண்டிய விஷயமாகும்)."

"ரஸ்கின் எழுதிய (Unto this Last) 'ஸர்வோதயம்' என்ற நூல் என்னுடைய வாழ்க்கையில் ஒரு திருப்பத்தைச் செய்தது. எல்லாரும் சமமாக வாழச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். அப் போதுதான் தார்மிகப் பண்பு வளரும். அதற்கு ராட்டை ஒரு சாதனம் என்பதே என்னுடைய துணிவு."

"அப்படியானால் அமெரிக்கர்களும் ராட்டையில் நூற்றுப் பழகவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?"

"ஆமாம். உலக மக்கள் எல்லாருமே ராட்டையின் பலத்தை உணரவேண்டும். இந்தியாவில் அது நிரந்தர ஸ்தானம் பெறுமல் வெளிநாட்டாரை ஆகர்ஷிக்க முடியுமா என்பது சந்தேகம்தான். சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ள (அதாவது பொருளா தாரத் துறையில் மட்டுமாவது) இந்தியா ராட்டையை உபயோ கித்தால் உலக மக்களின் கவனத்தை இழுக்க முடியும். ஆனால் இன்று இந்தியா மேனாட்டு யந்திர சாதனங்களைக் கண்டு மயங்கிக் கிடக்கிறதே? அதனால் போட்டியும் குரோதமும்தான் வளரு கின்றன."

"இருந்தாலும் நீங்கள் நம்பிக்கை தளரவில்லை அல்லவா?"

"ஆண்டவனிடம் நம்பிக்கை இருக்குமட்டும் எனக்கு அஹிம்ஸையிலும் ராட்டையிலும் நம்பிக்கை இருக்கும். அது இருக்கட்டும், நான் ஒரு கேள்வி கேட்கிறேன். பணத் தேவதையை அமெரிக்கா வழிபடுகிறதே, அப்படி யிருந்தும் அந்த நாட்டில் வறுமை, லஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம், குரோதம் இவற்றை ஒழித்துவிட முடிந்ததோ?"

"நிச்சயமாகச் சொல்வதற்கில்லை" என்றார் பீரீமென்.

"இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் அப்படித்தானே? அங்குள்ள பொருளாதார, தார்மிகப் பிரச்னைகளைத் தீர்க்க முடியவில்லையே? மேனாட்டில் கிறிஸ்துவ மதம் பரவி யிருப்பதால் தார்மிக உயர்வு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அங்கு கிறிஸ்துவின் போதனையை எவருமே ஏற்று நடக்கவில்லை என்றே எண்ணுகிறேன். கிறிஸ்துவின் போதனையை ஏற்றுக் கொண் டிருந்தால் அங்கு யுத்தம் ஏற்படுவது சாத்தியம் இல்லை. இந்தியாவில் மூட நம்பிக்கையும் அறியாமையும் இருப்பதாகச் சொல்கிறார் கள். ஆனால் அவற்றின் நடுவே ஆண்டவனிடம் பக்தியும் நம்பிக்கையும் இருக்கின்றன. அதுதான் மதத்தின் மூளை என்பதை நாம் மறக்க முடியாது."

"உண்மைதான் என்று ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதே போல இஸ்லாம் மதத்தினரும் தர்மத்திலிருந்து வழுவி விட்டார் கள் என்று எண்ணுகிறேன். சமீபத்தில், எல்லைப்புறத்தில் நேரு வுக்குக் கிடைத்த சம்பவமும், கீழ் வங்காளத்தில் இப் போது நடக்கும் சம்பவங்களும் அதை வலியுறுத்துகின் றனவே?"

"நானே அதைப் பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறேனே! மகம்மது நபி உயிர் பெற்று இன்று இந்தியாவுக்கு வந்தால் இந்த நாட்டிலுள்ள பல முஸ்லிம்களைத் தம்முடைய சீடர்கள் அல்ல என்று ஒதுக்கிவிட்டு, என்னையே உண்மைச் சீடராக ஏற்றுக் கொள்வார் என்று ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறேன். அதேபோல ஏசுநாதரும் என்னையே உண்மையான கிறிஸ்துவனாக அங்கீகரிப்பார்."

"மக்களுக்குத் தெய்வ சிந்தனை ஊட்டுவது எப்படி? ஏசுநாதர், நபிகள் நாயகம் இவர்களுடைய போதனைகளை அறிவுறுத்துவது எப்படி?"

" 'ஆண்டவனே, ஆண்டவனே என்று புலம்பாதீர்; பரமண்டலத்திலிருக்கும் பிதாவின் கட்டளையை நிறைவேற்றுங்கள்' என்று ஏசுநாதர் தம்முடைய சீடர்களிடம் கூறினர். அவை உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் கூறிய வார்த்தைகள்தாம். ஆண்டவனிடம் நம்பிக்கை இருந்தால் அவனுடைய கட்டளையை நிறைவேற்றும் துணிவும் உண்டு. என்னுடைய பலவீனங்களும், குறைபாடுகளும் ஒருபுறமிருக்க, நாளுக்கு நாள் ஆண்டவன்பாலுள்ள நம்பிக்கை பெருகி, பக்தி சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது. இல்லாவிட்டால், முரடர்கள் கையில் சிக்கித் தவிக்கும் அபலைகள் கற்பைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதபோதும், வெளி உதவி கிடைக்காதபோதும், உயிரை மாய்த்துக்கொள்ளட்டும் என்று சொன்னேனே, அதே மார்க்கத்தை நானும் பின்பற்றுவேன்."

"சரி, இதற்கு எல்லாம் பரிகாரம் சர்க்கா என்றுதான் சொல்கிறீர்களா?"

"ஆமாம், சர்க்காவின் ரீங்காரத்தில் மன அமைதி கிடைப்பதாகப் பல அறிஞர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நூற்பதனல் மனம் ஒருநிலைப்படுகிறது. மன அடக்கம் ஏற்பட்டு விட்டால் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி விடலாம். வங்காளத்தில் பல ஆண்டுகள் சிறை அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றுள்ள ஓர் அதிகாரி, சர்க்காவின் ரீங்காரத்தினல் பைத்தியம் தெளியும் என்பதைத் தாம் அநுபவபூர்வமாகத் தெரிந்து கொண்டதாக என்னிடம் தெரிவித்துள்ளார்."

"ஆனல் நான் சர்க்காவை வரப்பிரசாதம் என்றே, சிந்தனையைக் கிளறும் சிறந்த சாதனம் என்றே குறிப்பிடலாம் அல்லவா? அவசரச் சுழலில் சிக்கித் தவிக்கும் அமெரிக்கர்களுடைய சிந்தனசக்தி மழுங்கிக்கொண்டே வருகிறது. அவர்களுடைய வாழ்க்கையைக் கடிகாரம்தான் ஆட்டி வைக்கிறது. அவர்கள் ராட்டையில் நூற்கப் பழகினல், (நேரத்தை வீணக்காமல் வேலை செய்கிறேம் என்ற திருப்தி ஒருபுறமிருக்க) சிந்திக்கும் பழக்கத்தையும் பெறுவார்கள். சிந்தை தெளிந்துவிட்டால், அணுக்குண்டு போன்ற நாச சாதனங்களின்மீதுள்ள பாசமும் மாறிவிடும்" என்றார் பிரீமென்.

★

உபவாச மகிமை

(1946)

டில்லியிலிருக்கும்போது, வங்காளத்தில் நடக்கும் கலகங் களைப் பற்றிக் கேள்விப்பட்டுக் காந்திஜி மனம் தவித்தார். "என் னுடைய வேலை இனிமேல் வங்காளத்தில்தான். டில்லியிலிருந்து நான் சேவாக்கிராமம் செல்லமாட்டேன். அல்லது இங்கிருந்தவாறே என்னுடைய தியாகத்தினல் மக்களைக் காப்பாற்ற முயலுவேன்" என்றார். அன்றே வங்காளத்திலிருந்து வந்திருந்த சில தலைவர் களைக் கூப்பிட்டு விசாரித்தார்.

"நாங்கள் சென்று அமைதியை நிலைநாட்ட முடியுமா என்று பார்க்கிறோம். பிறகு அவசியமிருந்தால் நீங்கள் வரலாம்" என்றார் கள் அவர்கள்.

காந்திஜி ஏற்றுக் கொண்டார். பேச்சுவாக்கில் அவர்களில் ஒருவர் கேட்டார், "இந்த வெறியையும் கலகத்தையும் அடக்க உபவாசம் இருக்கலாமா?" என்று.

"கூடாது. என்னுடைய அன்புக்குப் பாத்திரமான ஆமதா பாத் ஊழியர் ஒருவர், 'தேசத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பைச் சமாளிக்க ஆத்மத்தியாகம்தான் சிறந்தது என்று எண்ணுகிறேன். எங்களுக்கு அஹிம்ஸையில் நம்பிக்கையிருந்தாலும், அதைக் கடைப்பிடிக்கும் தெம்பு இல்லை. நீங்கள் வழி காட்டினல் சலனம் நீங்கித் துணிவுடன் தியாக வேள்வியில் குதிப்போம்' என்று எழுதி யிருந்தார். அவருடைய ஆசையும் தர்க்கமும் நியாயமானவையே. ஆனலும் நான் அவருக்கு அநுமதி கொடுக்கவில்லை. மதவெறியி னல் ஏற்படும் கலகங்களைச் சமாளிக்கும் வழி புலப்படவில்லை. அந்தராத்மாவின் கட்டளை கிடைத்ததும் நான் ஒரு நிமிஷம்கூட வீணுக்கமாட்டேன். ஆண்டவனுடைய கட்டளை கிடைத்துவிட்டால் மனிதப் பிரயத்தனத்தினல் ஏற்படும் தடைகளை மீறி நான் தியாகத் தீயில் குதித்துவிடுவேன்.

"உபவாசம் என்பது குடற் சுத்தம் அல்ல. எல்லாரும் அநுஷ்டிக்கக்கூடிய சாதாரணச் செய்கையும் அல்ல. விளை யாட்டாக அதைக் கையாள முடியாது. அது வேகமும் பலமும் நிறைந்த ஆயுதம். குரோதம் முதலிய தீய எண்ணங்களின்றி ஆத்ம சுத்தியுடன் இருப்பவர்கள்தாம் அந்த ஆயுத பலத்தை

நாடலாம். அந்தமாதிரி உள்ள ஒரே ஒருவரே ஆத்மத் தியாகம் செய்து உலகத்தையே மாற்றிவிட முடியும். ஏசுநாதரின் தியாகம் அத்தகையதுதான். எதிரிகளும் சுகமாக வாழவேண்டும் என்று எண்ணிச் சமூக நலனுக்காக, ஆத்ம சுத்தியுள்ளவர்கள் செய்யும் தியாக வேள்வி அது.

"ஏசுநாதருடைய தியாகத்தை உதாரணமாகக் கொண்டு தற்காலப் பிரச்னைகளையும் நாம் தீர்க்க முடியும். பம்பாயிலே சில தினங்களுக்கு முன்பு நடந்த வகுப்புக் கலகத்தின் போது, ரஜாம் அலியும் வசந்தராவ் ஹெகிஷ்டேயும் கைகோத்துக் கொண்டு கலகக்காரர்களின் நடுவே புகுந்து உயிரை மாய்த்துக் கொண்டார்கள். அதனால் கலகம் அடங்கிவிடவில்லையே என்று நீங்கள் கேட்கலாம். ஒரே நாளில் பலன் கிடைத்து விடாது. அவர்களுடைய தியாகம் வீண்போகாது. நாம் அநுஷ்டிக்கும் அஹிம்ஸை பரிபூரணமானதல்ல. எல்லாரும் சாதகர்கள் அல்ல என்பதையும் நாம் நினைத்துக் கொள்ள வேண்டும். இருந்தாலும் மெள்ளமெள்ள மக்களின் மனத்தில் பதிந்து வாழ்க்கையில் வேரூன்றி வருகிறது. வெறித்தனத்தை வெல்ல இது ஒன்றுதான் சிறந்த மார்க்கம் என்று நான் எண்ணுகிறேன்.

"நான் கூறியதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு கலகப் பிரதேசத்துக்குச் செல்லுங்கள். அஹிம்ஸையைக் கடைப்பிடித்து நீங்கள் உயிரை இழக்கக்கூடும். அப்படி நேர்ந்தால் நான் அழமாட்டேன்; ஆனந்தப்படுவேன்."

"அந்த மாதிரித் தியாக முடிவு கிடைத்தால் நாங்களும் மகிழ்ச்சியடைவோம்!" என்றார் அவர்களில் ஒருவர்.

"இச்சாபூர்வமாக நீங்கள் செல்கிறீர்கள். நான் கட்டளை இடவில்லை என்பது ஞாபகமிருக்கட்டும். கட்டுப்பாடுகளை மீற வேண்டாம். என்னுடைய ஆசி உங்களுக்கு" என்றார் பாபு.

அவர்கள் விடைபெற்றுக் கொண்டார்கள்.

ஏழை பங்காளன்

(1946)

காந்திஜியும் அவருடைய கோஷ்டியாரும் நவகாளிக்குச் செல்லும் போது சௌகரியமாகப் பிரயாணம் செய்வதற்காக, ரெயில்வே அதிகாரிகள் மூன்றாவது வகுப்புப் பெட்டியில் இரண்டு

அறைகளை ஒதுக்கிக் கொடுத்தார்கள். பாட்னாவை நெருங்கும் போது, தற்செயலாகக் காந்திஜி வெளியே எட்டிப் பார்த்தார். மூன்றாவது வகுப்பு வண்டிகளில், படிகளில் கூடப் பிரயாணிகள் தொத்திக் கொண்டு பிரயாணம் செய்து கொண்டிருப்பது தெரிந்தது. உடனே அவர் மனுகாந்தியை அழைத்து, "ஒரே அறை நமக்குப் போதும், மற்றதைக் காலி செய்துவிட்டு ரெயில்வே சிப்பந்திகளிடமும் தெரிவித்துவிடு" என்றார்.

"அது நமக்காக 'ரிஸர்வ்' செய்யப் பட்டிருக்கிறதே! நீங்கள் அமைதியாக வேலை செய்து கொண்டிருக்கும் போது, உணவு தயாரிக்கவும், வேறு வேலைகளைக் கவனிக்கவும் அந்தப் பகுதி சௌகரியமாக இருக்கிறது. அதைக் காலி செய்து விட்டால், இங்கு சாமான்களைக் கொண்டு வந்து பரத்திவைக்க நேரிடும். மேலும், அந்தக் 'கம்பார்ட்மெண்டு'க்கும் சேர்த்துப் பணம் கட்டி இருக்கிறோமே?" என்று கேட்டார் மனுகாந்தி.

"அதனால் என்ன? நாம் கொடுத்த பணம் மக்களுடையது தானே? இப்போது நாம் தீனர்களுக்குச் சேவை செய்யத்தானே செல்கிறோம்? இதோ பார், எத்தனை பேர் படிகளில் தொத்திக் கொண்டு பிரயாணம் செய்கிறார்கள்? அவர்கள் கஷ்டப்படும் போது நாம் சுகமாகப் பிரயாணம் செய்ய முடியுமா? இந்தக் காலத்தில் மூன்றும் வகுப்பில் சுகமாகப் பிரயாணம் செய்ய இடம் 'ரிஸர்வ்' செய்வது ஒரு குரூரமான வேடிக்கைதான். உடனே காலி செய்து விடு" என்றார் காந்திஜி.

அடுத்த நிலையத்தில் வண்டி நின்றதும், பெட்டியைக் காலி செய்து விட்ட செய்தி ஸ்டேஷன் மாஸ்டருக்குத் தெரிவிக்கப் பட்டது. அவர் காந்திஜியிடம் ஓடிவந்தார். "நீங்கள் சுகமாகத் தனி வண்டியில் பிரயாணம் செய்ய வேண்டியவர்கள். இந்த அற்ப வசதியைக்கூட மறுத்து விட்டீர்களே! நான் பிரயாணி களுக்காக இன்னும் ஒரு பெட்டியை இணைத்து விடுகிறேன். உங்களுடைய வசதிக்காக ஒதுக்கப் பட்ட பகுதி வேண்டாம்" என்றார்.

"இன்னும் ஒரு வண்டியும் சேருங்கள். அது அவசியம்தான். இந்தப் பெட்டியிலும் பத்துப் பேராவது உட்காரமுடியுமே! அவர் களுடைய வசதியை நான் பறிமுதல் செய்ய விரும்பவில்லை. எனக்கு ஒரு கம்பார்ட்மெண்டு போதும்" என்றார் காந்திஜி.

ஸ்டேஷன் மாஸ்டர் எவ்வளவோ வாதாடியும் காந்திஜி இணங்கவில்லை. வேறு ஒரு பெட்டியும் இணைக்கப்பட்டது என்று தெரிந்த பிறகுதான் காந்திஜி ஓய்வு எடுத்துக் கொள்ளச் சென்றார்.

என்ன பிரமாதம்?

(1946)

காந்திஜியைச் சந்திக்க ஜவாஹர் நவகாளிக்குச் சென்றார். அந்தப் பிரதேசத்தில் வாய்க்கால்கள் அதிகமாகையால், அவற்றைக் கடக்க ஆங்காங்கு மூங்கில் பாலங்கள் அமைக்கப்பட்டிருந்தன. நடக்கும்போது பாலம் அசைவதால், நிலைதவறிவிடக் கூடும், அல்லது கால் வழுக்கி விடக்கூடும். காந்திஜி உலாவக் கிளம்பிய போது ஜவாஹர் வந்ததால், அவரும் உடன் சென்றார். இடையே குறுக்கிட்ட பாலத்தின்மீது எப்படி நடக்க வேண்டும் என்று காந்திஜி எச்சரித்து விட்டு, கோலை ஊன்றிக்கொண்டு லாகவமாகக் கடந்து சென்றார். ஜவாஹரோ, ஒரே தாவில் குதித்து, வாய்க்காலைக் கடந்துவிட்டார்.

''அடடே!'' என்று சிரித்தார் பாபு.

"நெஞ்சில் பயத்துடன் அடி எடுத்து வைப்பதைவிட இப்படிச் செய்வது சுலபம் அல்லவா, பாபு?" என்றார் ஜவாஹர்.

''நீங்கள் இளைஞர். ஆனால் என்னால் அப்படித் தாண்ட முடியாதே. கஷ்டத்தில் குதித்து நீந்தி மறுகரை சேரத்தானே வேண்டும்?'' என்றார் பாபு.

"அது உங்களுடைய கொள்கை!" என்றார் ஜவாஹர்.

இருவரும் கலகலவென்று சிரித்தார்கள். அப்போது காந்திஜி சொன்னார்: ''கஷ்டத்தை ஒதுக்கிவிட்டு (தாண்டிச்) செல்வது சுலபம்; அதைச் சகித்துப் போராடி வெல்வதில்தான் ஆனந்தம் இருக்கிறது."

அன்பின் சின்னம்

(1946)

நவகாளி யாத்திரையின்போது காந்திஜி நாராயண்பூர் என்ற கிராமத்தில் தங்கியிருந்தார். அவருக்குத் துவிபாஷியாக நிர்மல் பாபுவும், சிசுருஷை செய்ய ஸ்ரீமதி மனு காந்தியும் மட்டுமே சென்றிருந்தார்கள். காந்திஜி உடம்பு தேய்த்துக் கொள்ள, ஒரு

செம்பூரான் கல்லை உபயோகித்து வந்தார். இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு, முதல் முதலாகக் காந்திஜியைச் சந்தித்த போது மீராபென் அன்புக் காணிக்கையாக அதைக் கொடுத்தார். நாராயண்பூரில் காந்திஜி ஸ்நானம் செய்யச் சென்ற போது, அந்தக் கல்லைக் காணோம். முதல் நாள் தங்கியிருந்த கிராமத்தில் விட்டு வந்ததாக மனு காந்திக்கு நினைப்பு வந்தது. "உடம்பு தேய்த்துக் கொள்ளும் கல் எங்கோ தவறிவிட்டது. நேற்று நாம் தங்கியிருந்த கைக்கோளர் வீட்டில் தங்கி விட்டது போலும்" என்றார் காந்திஜியிடம்.

"மறந்து போய்விட்டு வந்தாயா? சரி, நீயே தனியாகச் சென்று தேடி எடுத்துவா" என்றார் காந்திஜி அமைதியாக.

வகுப்புக் கலகத்தினால் சுடுகாடாக மாறி விட்ட அந்தப் பிரதேசத்தில் தன்னந்தனியாக ஒரு பெண் எப்படி வெளியே நடமாட முடியும்? காந்திஜியோ போட்ட உத்தரவை மாற்ற மாட்டார். கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே ஆசையில், ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு விட்டு மனு காந்தி நடந்து சென்றார். கைக்கோளர் வீட்டில் ஒரே ஒரு கிழவியிருந்தாள். அவளுக்குத் தெரியுமா அந்தக் கல்லின் மகிமை? மனு காந்தி சிரமத்துடன் அதைத் தேடிக் கண்டு பிடித்து எடுத்துத் திரும்பினார்! நாராயண்பூருக்குத் திரும்பச் சில மணி நேரம் ஆயிற்று. காந்திஜியிடம் கல்லைத் தரும்போது, மனுவின் கண்களில் நீர் துளும்பிற்று.

"சென்ற இருப்பத்தைந்து வருஷங்களாக இதை நான் உபயோகித்து வருகிறேன். இதே போல வேறு கல் கிடைக்கக் கூடும். ஆனால் இது அன்பளிப்பு. நான் இதை உபயோகித்து வருவதைக்கண்டு மீரா பெருமைப் படுகிறாள். இது தொலைந்து விட்டது என்று கேள்விப் பட்டால் அவளும் மனக் கஷ்டப் படுவாள்; நானும் வருந்துவேன். இப்போதுதான் என் மனம் அமைதி யடைந்தது" என்றார் காந்திஜி.

"மரங்களடர்ந்த அந்தத் தனிவழியே செல்லும்போது நான் நடுங்கினேன். ஆனால் ஆத்திரம் உந்திற்று. மனப்பூர்வமாக ராமஸ்மரணை செய்து கொண்டே வழி நடந்தேன்."

"ஆமாம். கஷ்டத்தில்தான் கடவுளின் ஞாபகம் 'வரும்" என்றார் காந்திஜி சிரிப்புடன்.

மூச்சுக் காற்று

(1947)

"இந்தியாவின் எதிர்காலம் எப்படி இருக்கும்? சோஷலிஸ சமுதாய அரசியல் இங்கு சாத்தியம்தானு?" என்று பிரெஞ்சுப் பாதிரியார் ஒருவர் காந்திஜியைக் கேட்டார்.

"இந்தியாவின் எதிர்கால சமுதாயம் அஹிம்ஸையில் பற்றுக் கொண்டதாகவே இருக்கும். இந்த நாட்டில் சோஷலிஸ தத்துவத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருப்பது அசாத்தியம். அஹிம்ஸா மார்க்கத்தைக் கடைப்பிடித்தாலே, சமூக வளர்ச்சியும், சமத்துவமான சமுதாயமும் ஏற்பட்டுவிடும்."

"இந்த நாட்டில் மதம் என்பது அரசியல் சர்ச்சையாகத்தானே இருக்கிறது? மதம் செத்து விடுமா?" என்று கேட்டார் பாதிரி.

"மதம் மறைந்துவிட்டால், இந்தியாவும் (இந்திய மக்களும்) செத்துவிடும். இன்று இந்த நாட்டிலுள்ள, ஹிந்துக்களும் முஸ்லிம்களும், தானியத்திலுள்ள மணியைக் கருதாமல், உமிக்காகப் போராடிக் கொண்டிருக்கிறுர்கள். அவர்களுடைய வெறி நிலைத்து நிற்காது. இரண்டு நதிகள் சங்கமமாகும்போது நீரோட்டம் மோதி, சுழல் தோன்றி, நுங்கும் நுரையும் மேலே மிதப்பது போல இன்றுள்ள நிலை இருக்கிறது. நதிகள் கலந்து சிறிது தூரம் செல்லும்போது, நுரை ஒதுங்கித் தெள்ளிய நீர் தென்படுவது போல, இங்கும் வெறி நீங்கியதும், தெளிவு காணமுடியும்" என்றுர் காந்திஜி.

இதே போலச் சில தினங்களுக்குப் பிறகு, காந்திஜியைச் சந்தித்த சீன தேசத்து ஸ்தானீகர் டாக்டர் லோ - சி - லுவனும் கேட்டார். "எதிர்காலத்தைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று அவர் கேட்டபோது காந்திஜி பின்வருமாறு சொன்னுர்: "நான் எல்லாம் நன்மைக்கே என்று எண்ணும் குணமுள்ளவன். ஆண்டவன்மீது அன்பு செலுத்தி, தர்மத்தைக் கடைப்பிடித்து, கஷ்டங்களை ஏற்று மகத்தான தியாகம் செய்து போரிட்டது இரத்த வெறியும், மிருகத்தனமும் காண்பதற்கல்ல. வங்காளத்திலும், பஞ்சாபிலும், பீஹாரிலும் இன்று மக்கள் காட்டுமிராண்டிகளைப்போல நடந்து கொள்வதைக் காண மனம் புழுங்குகிறது. கங்கையில் புது வெள்ளம் பெருகும்போது, குழம்ப

லாகவும், நுரையும் குப்பை செத்தைகளும் மிதந்து கொண்டும் காணப்படும். வெள்ளம் அடங்கியதும், நுரை மறைந்து, தெளிந்த நீர் ரம்மியமான தோற்றத்துடன் ஓடும். அதேபோல இப்போது நாட்டில் புது வெள்ளம் பாய்ந்திருக்கிறது. நல்ல காலத்தை - சுபிட்சமும் அமைதியும் சந்தோஷமும் நிறைந்த நாளை - காண்பேன் என்ற நம்பிக்கையுடன்தான் வாழ்கிறேன். பல வருஷங்களுக்கு முன்பு பட்லர் எழுதிய ஒரு நூலைப் படிக்க நேர்ந்தபோது, 'சென்ற காலச் செயல்களினுல் தான் எதிர்காலம் உருவாகிறது' என்று தெரிந்து கொண்டேன். இதையே நம்முடைய சாத்திர நூல்களும் வற்புறுத்துவதால் என் மனம் எதிர்காலத்தைப்பற்றி எண்ணும்போது சில சமயம் சலனப்படுவதுண்டு. எதிர்காலத்தை உருவாக்குவது நம்முடைய கையில்தான் இருக்கிறது. தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்.''

''சரித்திர சம்பவங்கள் சில சமயங்களில் மீண்டும் நேருவது உண்டு'' என்ருர் டாக்டர் லோ.

''ஆனுல் எப்போதும் அப்படி நிகழ்வதில்லை. அதில் ஓரளவு உண்மை இருக்கலாம். எதுவும் ஒரே நிலையில் இருப்பதில்லை. மனிதப் பண்பு உயர்வதும் தாழ்வதும் சகஜம். நம்முடைய பண்பு உயர்ந்து உலகுக்கே வழிகாட்ட வேண்டும் என்று எண்ணுகிறேன். நாம் வீழ்ச்சியுற்ருல், அதனுல் லோக சரித்திரத்திலே பெரிய மாறுதல் ஏற்படக்கூடும். இன்று ஆசியா நாட்டில், குறிப்பாகச் சீனுவில் இரத்த வெறியும் யுத்தமும்தான் இருக்கின்றன. இந்தியா அஹிம்ஸை வழியில் செல்ல முயலுவதைக் கண்டு மற்ற நாட்டினர் சந்தேக நோக்கத்துடன் பார்க்கிருர்கள். இது சாத்தியந்தானு என்று சிரிக்கிருர்கள். ஆனுல், சத்தியம் எப்போதும் தோற்று விடாது.''

தியானமும் வைத்தியமும்
(1947)

பல மாதங்களாக ஸ்ரீமதி மனுகாந்தி வயிற்று நோயினுல் வருந்திக் கொண்டிருந்தார். காந்திஜி இயற்கை வைத்திய முறையினுல் நோயைத் தீர்க்க ஆவலுற்று, பல வைத்தியர்களைக் கலந்து ஆலோசித்தார். இயற்கை வைத்தியர்கள் குடலில்

கோளாறு இல்லை என்று சொன்னார்களே தவிர, நோயைத் தீர்க்க வழி காணவில்லை. பாட்னாவைச் சேர்ந்த கர்னல் பார்க்கவா என்ற டாக்டர், மனுகாந்தி குடல் அநுபந்த நோயினால் கஷ்டப்படுவதாக வும், சத்திர சிகிச்சை செய்து, புண்ணாகி யிருக்கும் சதைக் கோளத்தை எடுத்துவிட வேண்டும் என்றும் கூறினார். தீர்க்கமாக ஆலோசித்துக் காந்திஜி அநுமதிக்கவே, சத்திர சிகிச்சை நடந்தது. மனுகாந்தி குணமடைந்து வரும்போது, தமது உணர்ச்சியைக் கொட்டி, காந்திஜி பல இயற்கை வைத்திய நண்பர்களுக்குக் கடிதம் எழுதினார்.

மனுகாந்தியின் நோயைப்பற்றி ஸ்ரீமதி சுசீலா நையாருக்கு எழுதும்போது, காந்திஜி, "என்னுடைய அகம்பாவம் வீழ்ச்சி அடைந்தது. மனுவுக்குச் சத்திர சிகிச்சை செய்ய அநுமதி கொடுத்து விட நேர்ந்தது. இயற்கை வைத்தியத்தில் எனக்கு இருக்கும் திட நம்பிக்கை சோதனைக்குள்ளாகி விட்டது. மேலும் எனக்குச் சோதனை கொடுக்காமல் ஆண்டவன் காப்பாற்றட்டும். பாசத்தை வெல்வது கடினம் என்பதற்கு இது ஒரு நிதரிசனமான உதாரணம்" என்று குறிப்பிட்டார்.

"நம் நாட்டிலுள்ள ஏழைகளுக்கு இயற்கை வைத்தியந்தான் சிறந்தது. ஆனாலும் அதற்குச் சில வரம்புகள் உண்டு. இயற்கை வைத்தியத்தில் எனக்குள்ள பற்றுத் தினே தினே அதிகரிக்கிறது. ஆனால் இயற்கை வைத்தியத்தினாலேயே எல்லா வியாதிகளையும் தீர்த்துவிட முடியும் என்று கூறும் வைத்தியர்கள் சிறிது நிதானிக்க வேண்டும்" என்றார் காந்திஜி ஒரு நண்பரிடம்.

வெளி நாட்டிலுள்ள இயற்கை வைத்திய நண்பர் ஒருவருக்குக் காந்திஜி கடிதம் எழுதும்போது, பின் வருமாறு குறிப்பிட்டு இருக் கிறார்: "இந்தியாவிலுள்ள லட்சக்கணக்கான ஏழை மக்களுக்குப் பயன்படும்படியான ஓர் இயற்கை வைத்திய முறையைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். மண், நீர், சூரிய வெளிச்சம், சுத்தமான காற்று, திறந்த வெளி இவற்றைக் கொண்டதுதானே இந்தப் பிரபஞ்சம்! இவற்றைக் கொண்டே உடம்பில் தோன் றும் ஊறுகளைத் தீர்க்க முடியாதா என்றே சிந்தித்து வருகிறேன். பஞ்ச பூதங்களின் செயற்கையே உடல் என்றால் அதை ஆட்டி வைக்கும் மனம் தூய்மை நிலையிலிருந்தால் உடலும் தூய்மைப் படத்தானே வேண்டும்! உடல் தூய்மைக்கு இயற்கை வசதிகளை

உபயோகிக்கலாம். உள்ளத் தூய்மைக்கு ராம நாமம் போதும். இருதய பூர்வமாக ராம நாமத்தை மனனம் செய்தால் பஞ்ச பூதங்களும் வசப்பட்டு விடும். இதை ஒவ்வொருவரும் தெரிந்துகொண்டு பாமரர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். உடல் தூய்மை ஏற்பட்டால் நோய் நீங்கும். வலிமையுள்ள உள்ளம் இருந்தால், நோய் அணுகாது. அதற்கு மருந்து ராம நாமம்தான் என்றே நான் கூறுவதை, நோய் அணுகிய பின்பு மனனம் செய்வதற்குப் பதிலாக, முன் எச்சரிக்கையாகவே, சதா தியானம் செய்தால், உள்ளம் உறுதிப்படும் ; மண்ணும், நீரும், ஆகாயமும், காற்றும் தான் நோயைக் கொடுக்கின்றன; தீர்க்கின்றன; உள்ளத் தூய்மையினுல் ஏற்படும் அக்கினி, உடலில் சேரும் அழுக்குகளைத் தீய்த்துவிடும்......"

முறைமை
(1947)

காந்திஜி 1947-ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் வாரத்தில் டில்லியிலிருந்து கல்கத்தாவுக்குச் சென்ருர். பாட்ஞ ரெயில் நிலையத்தில் பீஹார் மந்திரிகளில் சிலர் காந்திஜியைச் சந்தித்துப் பேசினுர்கள். வண்டி புறப்பட வேண்டிய தருணம் வந்தபோதும் மந்திரிகள் பேசிக் கொண்டிருந்ததால், ஸ்டேஷன் மாஸ்டர் பவ்யத்துடன் காந்திஜியிடம் வந்து, வண்டி புறப்பட வேண்டிய நேரம் கடந்துவிட்டது என்றும், அவர் விரும்பினுல் சில நிமிஷங்கள் வரையில் ரெயிலைத் தவக்கப்படுத்தி வைப்பதாகவும் கூறினுர்.

"என்னிடம் எதற்காகக் கேட்கிறீர்கள்? நேரமாகி விட்டால், வண்டி புறப்பட அநுமதி கொடுக்கும் பொறுப்பு உங்களைச் சார்ந்ததுதானே?" என்று கேட்டார் காந்திஜி.

"ஆமாம். நீங்கள் இந்த நாட்டின் தலைவர்; இந்த மாகாண மந்திரிகளுடன் அளவளாவிக்கொண்டு......" என்று ஆரம்பித்தார் ஸ்டேஷன் மாஸ்டர்.

"என்னைக் கலந்து ஆலோசிப்பதற்கும், என்னுடைய சௌகரியா சௌகரியங்களைத் தெரிந்து கொண்டு ரெயிலை ஓட்டுவதற்கும் உங்களைக் குறைகூறிப் பயனில்லை. கடமையை நீங்கள் செய்ய வேண்டுமே தவிர என்னைக் கேட்க நீங்கள் முன் வருவானேன்?

இதற்கு உங்களுக்குக் கொடுத்துள்ள பயிற்சிதான் காரணம். மற்றவர்களைப்போல நானும் ஒரு பிரயாணிதானே! ஒவ்வொரு பெட்டிக்கும் சென்று நீங்கள் பிரயாணிகளின் அநுமதி கோருகிறீர்களா? வண்டியைக் காலதாமதப்படுத்தி நிறுத்தவேண்டுமா என்று கேட்கிறீர்களா? இல்லையே! நான் உங்களுக்கு எஜமான் அல்லவே? மந்திரிகளும், நேரடியாக உங்களுக்கு அதிகாரிகள் அல்ல. அவர்கள் இங்கு தனிப்பட்ட முறையில் என்னைச் சந்திக்க வந்திருக்கிறார்கள். ஆகவே நீங்கள் தயக்கமில்லாமல் ரெயில் புறப்படச் சைகை காட்டுங்கள். முன்னதாகவே, உங்களுடைய (ரெயில்வே) அதிகாரிகள் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தால் தவிர, ஜனாதிபதியோ, நாட்டின் பிரதம மந்திரியோ பிரயாணம் செய்தாலும், நீங்கள் ரெயிலைத் தவக்கப்படுத்தக் கூடாது. ஜனாதிபதியும் பிரதம மந்திரியும் நாட்டின் தலைவர்களாக இருக்கலாம். ஆனால் உங்களுடைய கடமையைச் செய்யும்போது, மேலதிகாரிகளின் உத்தரவுக்குக் கீழ்ப்படிதல்தான் முதலாவதாகச் செய்ய வேண்டிய வேலை. மந்திரிகளுக்கும் மற்றவர்களுக்கும் இது படிப்பினையாக இருக்கட்டும். அதிகாரிகளைக் கண்டு நீங்கள் பயப்படக்கூடாது. அவர்கள் பொதுஜன ஊழியர்கள் என்றே தங்களைக் கருதவேண்டும்.

“நான் உங்களைக் குறை கூறுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. நாட்டிலுள்ள பழக்கத்தைக் கண்டிக்கவே நான் இவ்வாறு கூறுகிறேன். அன்புடனும், மரியாதையுடனும் என்னிடம் நீங்கள் பேசியதைப் பாராட்டுகிறேன்” என்றார் காந்திஜி.

ஸ்டேஷன் மாஸ்டர் நன்றியுடன் வணங்கிவிட்டு, “பாபுஜி, நீங்கள் தயாளு, எதிராளியை மதித்து நடக்கிறீர்கள். என்னுடைய நாற்பத்தைந்து பிராய காலத்தில், ஒழுக்கத்தை வற்புறுத்தும் ஓர் அதிகாரியைக் கூடச் சந்திக்கவில்லை. கடமையையும் கட்டுப்பாட்டையும் நிறைவேற்றும் ஊழியர்களைப் பாராட்டும் குணமுள்ள ஓர் அதிகாரியாவது ஒவ்வொரு இலாகாவிலும் இருந்தால், ஊழியர்களுடைய நேர்மையும், பயமற்றுச் செயலாற்றுந் திறமையும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்” என்றார்.

★

வேரும் கனியும்

(1947)

காந்திஜி பெலியகட்டாவில் தங்கி இருந்தபோது அவரைப் பேட்டி காண ஓர் ஆங்கிலேய நிருபர் வந்தார். "உங்களுடைய செயல்களை ஊன்றிக் கவனிக்கும்போது அத்தனைக்கும் மூல வேர் போல இருப்பது மோட்ச விருப்பம்தான் என்று எனக்குப் புலப் படுகிறது. ஆனால் இதை ஏன் நீங்கள் வற்புறுத்திக் கூறுவதில்லை?" என்று அவர் கேட்டார்.

"மோட்ச விருப்பம் இருக்கிறது உண்மைதான். ஆனால் பிறருக்கு அதில் சம்பந்தம் இல்லை. மோட்ச விருப்பம் என்பது தனிப்பட்டவனுடைய சொந்த விஷயம். உலகத்துக்கு வேரைப் பற்றிக் கவலையில்லை, கனியைப் பற்றியே கவலை. ஆனால் மரத்துக்கோ வேரைப் பற்றியே கவலை. கனியைப் பற்றி அது விசேஷ சிரத்தை அல்லது கவலை கொள்வதில்லை. தனி மனிதன் அந்தராத்மாவுடன் ஒன்றிப் போகவேண்டும். உழைப்பும், (இன்ப) துன்பங்களும் கொண்டு அதை ஊட்டி வளர்க்கவேண்டும். மோட்ச சாதனமான வேரைப் பற்றி அவன் கவலை கொள்ளும் போது, அவனுடைய சாதனையினால் நடக்கும் பலனை (கனியை)ப் பற்றிச் சமூகம் அக்கறை காட்டும். மனிதனின் செயலைக் கொண்டு தான் அவனைப்பற்றித் தீர்ப்புக் கூறப்படுகிறது. கனிகளைக் கொண்டுதானே மரத்தின் தன்மையை நிர்ணயிக்கிறோம்?" என்றார் காந்திஜி.

மரண தேவதை

(1948)

ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தைச் சேர்ந்த சங்கரன் என்பவருடைய புதல்வி சுலோசனை இறைவனடி சேர்ந்துவிட்டாள் என்ற செய்தி டில்லியிலிருந்த காந்திஜிக்குக் கிடைத்தது. அவர், 29—1—48 அன்று அதாவது, கோட்ஸேயின் குண்டுக்கு இரை யாவதற்கு முதல் நாள், சங்கரனுக்கு ஆறுதலாகப் பின்வரும் கடிதம் எழுதினார்:

"சகோதர, உன்னுடைய புதல்வி சுலோசனை இறைவனடி சேர்ந்துவிட்டதாக ஸ்ரீ கிஷோரிலால் எழுதி இருக்கிறார். உனக்கு

நான் எப்படி ஆறுதல் கூறக்கூடும் என்று தெரியவில்லை. மரணம் தான் மனிதனுடைய உற்ற தோழன். நம்முடைய அறியாமையே துயரமூட்டுகிறது. சுலோசனாவின் ஆத்மா நேற்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது; நாளையும் இருக்கும். அது அழிவற்றது. அதைத் தாங்கிக்கொண்டிருந்த உடல்தான் இன்று இற்றுவிழுந்து விட்டது. சுலோசனா, தன்னுடைய பாபங்களையும் பலவீனத்தையும் எடுத்துக்கொண்டு இனிய நினைப்பை விட்டுச் சென்றுவிட்டாள். அவளை நாம் மறக்க முடியாது. உன்னுடைய கடமையைச் செய்வதில் கருத்தாக இரு. சாந்தி கிடைக்கும். ஆசீர்வாதம். -பாபு."

ஜாதகத்தில் இருக்கிறது
(1948)

காந்திஜியின் மறைவைப்பற்றி எழுதும்போது ஆனந்த் ஹிங்ரோனி பின்வரும் சம்பவத்தைக்* குறிப்பிட்டிருக்கிறார் :

"ஹரிஜன சேவை செய்ய உரிமைகோரி, காந்திஜி உபவாசம் ஆரம்பித்தபோது, நான்கு ஐந்து தினங்களுக்குள் அவருடைய நிலைமை மோசமாகிவிடவே 23—8—1933-இல் நிபந்தனையின்றி அவரைச் சர்க்கார் விடுதலை செய்துவிட்டார்கள். காந்திஜி புனாவிலுள்ள லேடி தாக்கர்ஸேயின் 'பர்ணகுடி மாளிகை'யில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

"அப்போது நான் ஹரிஜன் பத்திரிகையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்ததால் அடிக்கடி காந்திஜியைச் சந்திக்க முடிந்தது. ஒருநாள் மாலை நான் பாபுவைப் பார்க்கச் சென்றபோது, மாளிகையின் மொட்டை மாடியில் சிந்தாக்கிரந்தராக உலாவிக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் சட்டென்று பாபு கேட்டார் : 'ஆனந்த், தற்போதுள்ள நிலையில் நான் என்ன செய்ய வேண்டும் என்று எண்ணுகிறாய்? நான் விடுதலை யடைவேன் என்று எதிர்பார்க்கவில்லை. உபவாச காலத்தில் இறந்துவிடக்கூடும் என்றே எண்ணினேன். உபவாச காலத்தில் நான் இறந்திருந்தால், ஜனங்கள் அதை எப்படி ஏற்றிருப்பார்கள் என்று தெரியாது...'

" 'அது போற்றக்கூடிய சாவுதான், பாபு.'

---

* ஹரிஜன் 22—2—48

" 'பைத்தியம்! பட்டினி கிடந்து சாவது போற்றக்கூடிய சாவு என்று நினைக்கிறாய்? நான் அப்படி எண்ணவில்லை. அதில் புகழக் கூடிய அம்சம் எங்கு இருக்கிறது? நான் வீர மரணம் எய்துவேன் என்று என் ஜாதகத்தின் மூலம் தெரிகிறது.'

" 'உபவாசமிருந்து சாவதும் வீர மரணந்தான், பாபு. அங்குலம் அங்குலமாகத் தேய்ந்து மாய்வது சுலபமான காரிய மல்லவே? அதற்கும் ஒப்புயர்வற்ற துணிச்சல் வேண்டும்.'

" 'நான் ஏற்றுக் கொள்ள முடியாது. ஒன்று தூக்கு மேடை; அல்லது துப்பாக்கிக் குண்டு—இவற்றில் ஒன்றால்தான் என் சாவு ஏற்படும். அதுதான் வீர மரணம் என்று நான் எண்ணுகிறேன்.'

" இதன் நடுவே மீரா பென் அங்கு வந்துவிடவே எங்களுடைய பேச்சுத் தடைப்பட்டது. (பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு) தாம் நினைத்தபடி அவர் வீர மரணம் எய்தியது நினைத்துப் பார்க்க முடியாத சம்பவம்.



அநுபந்தங்கள்

1. காந்திஜி—வாழ்க்கை

காந்திஜியின் இளமைப்பருவம் ராஜ்கோட்டில் கழிந்தது. சிறு பிராயத்தில், அவருக்கு ஜைன மதத்தாருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டதால், அஹிம்ஸை வழியில் பற்றுதல் ஏற்பட்டது.

பாரிஸ்டர் படிப்புக்காகக் காந்திஜி லண்டன் செல்ல நிச்சயித்த போது, அவருடைய அன்னை மனங் கலங்கினர். கண் காணுத தேசத்தில், கண்காணிப்பின்றி மகன் ஒழுக்கங் கெட்டுவிடக்கூடும் என்று பயந்தார். மது, மாமிசம், மாதர் இவற்றைத் தொடுவதில்லை என்று உறுதி கூறிக் காந்திஜி கப்பல் ஏறினர்.

இந்தியா திரும்பியதும், நண்பர்களுடைய யோசனைக்கு இணங்கி, காந்திஜி பம்பாயில் குடியேறித் தொழில் நடத்தத் தீர்மானித்தார். இயல்பாக அவருக்குள்ள கூச்சமும், எளிமையும் குறுக்கிடவே, அவரால் ஒரு வழக்குக்கூட எடுத்து வாதாட முடியவில்லை. இதன் நடுவே, தென் ஆப்பிரிகாவிலுள்ள ஓர் வியாபாரிக்கு, சட்ட ஆலோசகர் தேவையாக இருப்பதாக நண்பர் ஒருவர் அறிந்து காந்திஜியை டர்பானுக்கு அனுப்பினர்.

டர்பானில் காலை வைத்ததுமே அவர் நிறத் துவேஷத்துக்கு இலக்காக நேரிட்டது. காந்திஜியின் மனம் தொழிலில் ஈடுபடவில்லை. இந்தியர்களுடைய துயரந் தீர்ப்பதில்தான் சென்றது. இந்தியர்களை ஒழித்துக் கட்ட, டிரான்ஸ்வால், நேட்டால் சர்க்கார் சட்டம் செய்த போது, காந்திஜி மக்களை ஒன்றுதிரட்டிப் போராட்டம் நடத்தினர்.

சுமார் பத்து வருஷப் போராட்டத்துக்குப் பிறகு காந்தி-ஸ்மட்ஸ் ஒப்பந்தம் ஏற்பட்டது.

இந்தியர்களுடன் நெருங்கித் தொடர்பு கொள்ளவேண்டிய அவசியத்தை 1903-ஆம் ஆண்டிலேயே காந்திஜி உணர்ந்தார். அஹிம்ஸா மார்க்கத்தைப் போதிக்கவும், தம்முடைய அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்லவும் டர்பானில் 'இந்தியன் ஒப்பினியன்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார்.

காந்திஜி 1915-ஆம் ஆண்டில் இந்தியாவுக்குத் திரும்பி வந்து ஆமதாபாத்தில் குடியேறினர். சாபர்மதி நதிக்கரையில் அவர் ஆசிரமம் நிறுவினாலும், தேசம் முழுவதும் சுற்றும்படி ஒன்றன் பின் ஒன்ருகப் பல சம்பவங்கள் நிகழ்ந்தன. சம்பரான் சத்தியாக்கிரகம், விராம்கம் சுங்கச்சாவடி சத்தியாக்கிரகம், யுத்தத்துக்கு ஆள்திரட்டல், கெய்ரா சத்தியாக்கிரகம், ரௌலட் மசோதா எதிர்ப்பு என்று காந்திஜி ஈடுபட வேண்டியதாயிற்று.

ரௌலட் மசோதாவை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய அவர் நாடு முழுவதும் சுற்றினர். 30-3-1919 அன்று நாடு முழுவதும் ஹர்த்தால் செய்து, உபவாசம் இருக்கவேண்டும் என்று மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

நாடெங்கும் கிளர்ச்சி ஏற்பட்டது. அதிகாரிகள் வெகுண்டார்கள்; ஜனங்களும் ஆவேசம் கொண்டார்கள். சில இடங்களில் கைகலப்பு ஏற்பட்டது. இதன் நடுவே சர்க்கார் ரௌலட் மசோதாவைச் சட்டமாக்கி விட்டார்கள். அமிர்தசரஸில் ஜாலியன் வாலா பாக் என்னுமிடத்தில் சட்டத்தை எதிர்க்க மக்கள் கூடியபோது, ராணுவம் வளைத்துக் கொண்டு சுட்டது. ஓர் உயிர்கூட மிஞ்சாது அத்தனை பேரும் மாண்டார்கள். காந்திஜி மனங் கொதித்தார். சத்தியாக்கிரகம் செய்ய நாடு தயாராக இல்லை என்று இயக்கத்தை நிறுத்தினர்.

அந்நியத்துணி பகிஷ்காரம், சுதேசி விரதம், கதர் இயக்கம், கலாசாலை, நீதிஸ்தலம் இவற்றைப் பகிஷ்கரித்தல் என்று பல முனைப் போராட்டமான ஒத்துழையாமைத் திட்டத்தை 1920-இல் நடந்த நாகபுரி விசேஷக் காங்கிரஸில் சமர்ப்பித்துக் காங்கிரஸின் அங்கீகாரத்தையும் பெற்ருர். சில மாதங்களுக்குள் ஆயிரம் ஆயிரம் சத்தியாக்கிரகிகள் சிறைசென்ருர்கள். சௌரிசாரா என்ற ஊரில் மக்கள் கட்டுமீறிப் போலீஸ் ஸ்டேஷனில் நுழைந்து சூறையாடினர்கள்; கட்டடத்துக்கு நெருப்பு வைத்தார்கள். காந்திஜி மனம் வெதும்பி இயக்கத்தை நிறுத்தினர். சர்க்கார் மிரண்டு விட்டது. ஆனாலும் அவரை வெளியே விட்டுவைக்க மனம் இன்றி 1922-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ராஜத்துவேஷக் குற்றம் சாட்டி ஆறு வருடம் சிறைவாசத் தண்டனை விதித்தது.

சிறையிலிருந்து வெளிவந்த தலைவர்களோ, நாட்டிலிருந்த தேக்கத்தைக் கண்டு மனம் சலித்துப் போகவில்லை. சட்டசபை

களைக் கைப்பற்ற நிச்சயித்துச் சுயராஜ்யக் கட்சியைத் தோற்று வித்தார்கள்.

உடல் நலம் குன்றியதால் 1924-ஆம் ஆண்டு, தண்டனைக் காலம் முடிவதற்குள்ளேயே காந்திஜி விடுதலை யடைந்தார்.

இந்தியாவுக்கு அரசியல் உரிமை கொடுப்பது பற்றி ஆலோசிக்கப் பிரிட்டிஷ் சர்க்கார் 'சைமன்' என்பவர் தலைமையில் ஒரு கமிஷனை இந்தியாவுக்கு அனுப்ப நிச்சியித்தது. அந்தக் கமிஷனில் ஓர் இந்தியர் கூட இடம் பெருததால், காங்கிரஸ் அதைப் பகிஷ்கரிக்க நிச்சயித்தது.

லாகூரில் 1929-இல் காங்கிரஸ் கூடியபோது பரிபூர்ண சுதந்தரம் கோரித் தீர்மானம் நிறைவேற்றியது. அதைத் தொடர்ந்து, காந்திஜி உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தினர்.

இயக்கம் பிரமிக்கத்தக்க முறையில் பரவி, ஆயிரக்கணக்கான வாலிபர்களும், பெண்களும் சிறை சென்ருர்கள். அந்நியத் துணிப் பகிஷ்காரம் உச்ச நிலையை அடைந்ததால், வியாபாரிகள் நஷ்டமடைந்து திகைத்தார்கள். போலீஸாரின் அதிக்கிரமங்களையும் மக்கள் எதிர்த்து நின்ருர்கள். வைசிராய் இர்வின்பிரபு மலைத்துப் போனர். சிறையிலிருந்து காந்திஜியை விடுதலை செய்து சமரஸம் பேசினர். லண்டனில் நடக்கவிருக்கும் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ளக் கோரினர். காந்திஜி—இர்வின் ஒப்பந்தம் 5·3·31-இல் கையெழுத்தாயிற்று.

காங்கிரஸின் ஏகப் பிரதிநிதியாகக் காந்திஜி லண்டனுக்குப் பிரயாணமானர். காங்கிரஸின் கோரிக்கைகளைப் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. காந்திஜி ஏமாற்றத்துடன் நாடு திரும்பினர். பம்பாயில் தங்கிய சில தினங்களுக்கெல்லாம் காந்திஜி கைது செய்யப்பட்டார்.

ஹிந்துக்களின் ஒரு பகுதியான தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகை காட்டிப் பிரித்து விட்டால் சுதந்தரப் போராட்டத்தின் வேகம் குறைந்துவிடும் என்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் எண்ணினர்கள். அதன் விளைவுதான் வகுப்புத் தீர்ப்பு. காந்திஜியோ, சிறையிலிருந்தவாறே இதை எதிர்த்ததுடன், ஹிந்துக்களுக்குள் சமரஸம் ஏற்பட 1932-இல் உபவாசம் இருந்து வெற்றியும் பெற்ருர். எரவாடாவில் கூடிய தலைவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சில

சலுகைகளையும், சட்டசபைகளில் சில ஸ்தாபனங்களையும் ஒதுக்கி வைத்து ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்காக ஹரிஜன சேவா சங்கம் தோன்றியது.

காந்திஜி, 1933-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் விடுதலையடைந்தார். உடனே ஹரிஜன முன்னேற்றத்துக்காக நிதி திரட்டவும், ஸ்தாபனங்களை அமைக்கவும் இந்தியா முழுவதும் சுற்றினர். 1934-ஆம் ஆண்டில் காங்கிரஸிலிருந்து விலகி, நிர்மாணத் திட்டத்தில் மனம் செலுத்தலானர். கிராமக் கைத்தொழில் சங்கம் தோன்றியது. காங்கிரஸ் சட்டசபைப் பிரவேசத்தில் மனம் செலுத்தியதால், காந்திஜி ஒதுங்கி நின்ருர். ஆனலும், நெருக்கடி ஏற்படும்போது ஆலோசனை கூறிக்கொண்டுதானிருந்தார்.

சம்ஸ்தானங்களில் அரசியல் உரிமை கோரி மக்கள் கிளர்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். அது 1939-ஆம் ஆண்டில் உச்சநிலை அடைந்தது. ராஜ்கோட்டில் மக்கள் கிளர்ச்சிக்குச் சர்தார் வல்லபபாய் படேல் தலைமை வகித்தார். சர்க்கார்-சர்தார் சமரஸம் ஏற்பட்டது. சர்க்கார் வாக்குறுதி மீறவே காந்திஜி தலையிட்டு, உபவாசம் ஏற்ருர்.

இதன் நடுவே, ஐரோப்பாவில் யுத்தம் தொடங்கியது. யுத்தத்தில் பிரிட்டனுக்கு உதவி செய்ய வைசிராய் நிச்சயித்தார். இதனல் நெருக்கடி ஏற்பட்டுக் காங்கிரஸ் மந்திரிசபைகள் ராஜினமாச் செய்தன. இந்தியாவின் யுத்த நோக்கத்தைத் தெளிவுபடுத்த வைசிராய் விரும்பவில்லை. ஆகவே அதை எதிர்க்கவும், ஏகாதிபத்திய யுத்தத்தில் இந்திய மக்கள் கலந்துகொள்ள விரும்பவில்லை என்பதை உலகத்துக்கு எடுத்துக்காட்டவும் யுத்த எதிர்ப்புச் சத்தியாக்கிரகம் செய்யக் காந்திஜி தீர்மானித்தார். முதல் சத்தியாக்கிரகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விநோபா பாவே, 1940-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதியன்று யுத்த எதிர்ப்புக் கோஷம் செய்தார். உடனே கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்படாவிட்டால், சத்தியாக்கிரகிகள் கிராமம் கிராமமாக யுத்த எதிர்ப்புக் கோஷம் செய்துகொண்டே டில்லியை நோக்கிப் பிரயாணமாக வேண்டும் என்று காந்திஜி கட்டளையிட்டதால், நாடு முழுவதுமே எதிர்ப்புக் கோஷம் எழுந்தது. தார்மிகத் துறையில் சத்தியாக்கிரகம் அபரிமிதமான வெற்றியளித்தது என்றே சொல்ல வேண்டும்.

1942-ஆம் ஆண்டில் காங்கிரஸுடன் சமரசம்பேசப் பிரிட்டிஷ் சர்க்கார் ஸர். ஸ்டாபோர்டு கிரிப்ஸை இந்தியாவுக்கு அனுப்பினார்கள். கிரிப்ஸ் திட்டத்தைக் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. 'பின் தேதி போட்ட உண்டியல்' என்று காந்திஜி ஒதுக்கிவிட்டார். அதன் பிறகு காங்கிரஸை ஒடுக்கச் சர்க்கார் முஸ்தீபுச் செய்யலாயிற்று.

பம்பாயில் 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் வாரத்தில் எதிர்காலத்தைப்பற்றி நிர்ணயிக்க அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூடியபோது, ஒருவர் விடாமல், கூடியிருந்த பிரதிநிதிகளைச் சிறை செய்து சர்க்கார் மக்களுக்குச் சவால் விட்டது. தேசமே கொந்தளித்து எழுந்தது. அதுவே கடைசிப் போராட்டம் என்று எண்ணிப் பலர் ஆவேசத்துடன் போராடினார்கள். காங்கிரஸையும் காந்திஜியையும் இழித்துக் கூறி, சர்க்கார், அறிக்கைகளையும் பிரசுரங்களையும் வெளியிட்டது. இதை எதிர்த்துக் காந்திஜி சிறையிலேயே உபவாசம் இருந்தார்.

ஆகாகான் மாளிகையில் அடைபட்டுக் கிடந்த கஸ்தூரிபா 1944-ஆம் ஆண்டுத் துவக்கத்தில் நோய்வாய்ப்பட்டார். காந்திஜி விரும்பியபடி வைத்திய வசதிகூட அளிக்க முடியவில்லை. காலந்தாழ்ந்து உதவி கிடைத்தது. பிப்ரவரி மாதம் 28உ யன்று கஸ்தூரிபா சிறையில் உயிர் நீத்தார். சிறையிலேயே சவ அடக்கமும் நடந்தது. காந்திஜி மனம் தளர்ந்து, அடிக்கடி மலேரியாஜுரம் தாக்கி உடல் நலிவுற்றார். கடைசியில் 1944-ஆம் வருஷம் மே மாதம் நிபந்தனையின்றி விடுதலை பெற்றார்.

ஏறக்குறைய எட்டு வருஷகாலம் பதவியில் இருந்த லின்லித்கோ பிரபு விலகியதும், வேவல் பிரபு வைசிராயானார். பிரிட்டனிலும், சர்க்கார் கைமாறி, தொழிற்கட்சி அதிகாரத்துக்கு வரவே, நிலைமை சாதகமாயிற்று. அதிகார பூர்வமாகச் சமரஸம் பேச, இந்தியா மந்திரி பெதிக் லாரன்ஸ், அலெக்ஸாண்டர் பிரபு, ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் ஆகியவர்கள் அடங்கிய மந்திரி சபைக் கோஷ்டியைப் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவுக்கு அனுப்பினார்கள். காங்கிரஸின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மந்திரி சபைத் தூதுகோஷ்டி இணங்கிற்று. நாட்டிலுள்ள மற்ற அரசியல் கட்சிகளையும் கலந்துகொண்டு காங்கிரஸ் இடைக்கால மந்திரி சபையை அமைத்தது.

நாட்டைத் துண்டு போடாவிட்டால் பலாத்கார வழிகளில் இறங்குவோம் என்று ஜின்னு சாகேப் மிரட்டினர். மந்திரி சபையில், தம்முடைய சகாக்களுக்கு இடம் தேடிக் கொண்டிருக்கும் போதே, நேர் நடவடிக்கை தினம் கொண்டாடுமாறு முஸ்லிம் மக்களுக்குச் செய்தி விடுத்தார். நாட்டின் பல பாகங்களில் ஹிந்து முஸ்லிம் கலவரம் நடந்தது. முஸ்லிம்கள் பெரும்பான்மை யான நவகாளிப் பிரதேசத்தில் பெண்கள் கற்பிழந்து நின்றூர்கள்; குழந்தைகள் கொல்லப்பட்டன; ஹிந்துக்களை வெட்டி மாய்த்தார்கள். நவகாளியின் ஓலம் நாடெங்கும் கேட்டது. 1946-ஆம் ஆண்டு இறுதியில் காந்திஜி அங்கு ஓடினர்.

"வெறியர்கள் உடலை மாய்ப்பார்கள், அவர்களால் உள்ளத்தை மாய்க்க முடியாது. துவேஷம் காட்டுவோரிடம் அன்பு செலுத்துங்கள். கற்பைக் காத்துக்கொள்ள முடியாத பெண்கள் உயிரை இழக்கட்டும். சீதையும், நளாயினியும், திரௌபதியும் வாழ்ந்த நாட்டில் கோழைகளான பெண்களைப் பார்க்க நான் விரும்பவில்லை" என்றார் காந்திஜி.

இதன் நடுவெ, நாடு துண்டிக்கப்பட்டது. பாகிஸ்தானும் இந்தியாவும் சுதந்தரம் பெற்றன.

காந்திஜி, வகுப்பு ஒற்றுமைக்காகவே பாடுபடலானர். ராம நாமம் ஒன்றுதான் அவருக்குப் பற்றுக்கோலாக இருந்தது. 'ராம நாமத்தை நம்புங்கள்; உய்ய வழி காணலாம்' என்றே அவர் தினந் தினம் பிரார்த்தனைக் கூட்டத்தில் சொல்லலானர். வகுப்புத் துவேஷத்தை அடக்க அவர் ஆறு மாத காலத்துக்குள் இருமுறை உபவாசம் ஏற்றார்.

"எதிரிகளிடம் அன்பு செலுத்துங்கள். சர்க்காவில் நம்பிக்கை கொள்ளுங்கள். சர்வதேச சமாதானத்தில்தான் மனித சமூகம் சுகவாழ்வு காணமுடியும். அதற்கு வழிகாட்ட இந்தியாவினுல் தான் முடியும். ஆகவே, உங்களுடைய ஆத்ம பலத்தைப் பெருக்குங்கள்" என்றார் காந்திஜி.

அவருடைய பரந்த மனத்தையும் பெருந்தன்மையையும் உணராத ஒரு வெறியன் 30—1—48 அன்று அவர் பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் செல்லும்போது சுட்டுக் கொன்றான்.

காந்திஜி மறைந்தார். ஆனல் அவருடைய உபதேசங்கள், அவர் வகுத்த திட்டங்கள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றவே

அவருடைய அரசியல் வாரிசான நேருவும், தார்மிக வாரிசான ஆசார்ய விஞேபா பாவேயும் செயலாற்றுகிருர்கள்.

2. கஸ்தூரிபா

மகான்களுடைய மனைவியார் நிர்மூடர்களாகவோ, அறிவாளிகளாகவோ இருக்கலாம்; ஆனல் கணவனுடன் இணங்கி வாழ்வதில்லை என்பது சரித்திரம் கூறும் உண்மை. சாக்ரடீஸ் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கும்போது, அவருடைய மனைவி ஸாந்திபி வாளி நிரம்பத் தண்ணீர் எடுத்து வந்து தலை வழியே ஊற்றிஞராம். சாக்ரடீஸோ புன்சிரிப்புடன், 'இடிக்குப் பின் மழை பெய்வது இயற்கைதானே?' என்ருராம். வயோதிக காலத்தில், அமைதியை விரும்பி, ருஷ்ய ஞானி டால்ஸ்டாய், குடும்பத்திலிருந்து பிரிந்து தனித்து வாழ்ந்தார். ஜீஜாபாயிடம் துகாராம் பட்ட துயரங்கள் அனந்தம்.

ஆனல் கஸ்தூரி பாயோ, காந்திய வழிகளை எதிர்த்து நின்று மனம் திரும்பியவர். என்றுமே கணவனுடன் இணக்கமாக வாழ்ந்தவர். கஸ்தூரிபாயைத் தம்வழி திருப்ப, தாம் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப்பற்றிக் காந்திஜி தம் சுய சரிதத்தில் குறிப்பிட்டிருக்கிருர். போராட்ட காலங்களில், அதுவும் காந்திஜியிடமிருந்து பிரிந்திருக்க வேண்டிய சமயங்களில், கஸ்தூரிபா அற்புதமாகவும் சாகஸத்துடனும் தலைமை வகித்து நடந்திருக்கிருர்.

காந்திஜியும் கஸ்தூரிபாவும் ஏறக்குறையச் சம வயதினர்கள். போர்பந்தரில் கோகுல்தாஸ் மகான்ஜி என்ற வியாபாரியின் மகளாக 1869-இல் கஸ்தூரிபா பிறந்தார். மகான்ஜியும், காந்திஜியின் தகப்பஞரும், சம்ஸ்தான திவானுமான காபா காந்தியும், நண்பர்கள். தங்களுடைய நட்பு வலிமையுற அவர்கள் சம்பந்தம் செய்து கொண்டார்கள். குழந்தைகளின் எட்டாவது வயதில் நிச்சயதார்த்தம் நடந்தது; 1882-ஆம் ஆண்டில் கல்யாணம் நடந்தது. தம்முடைய பதினெட்டாவது ஆண்டில், காந்திஜி பாரிஸ்டர் படிப்புக்காக, லண்டனுக்குச் செல்லும்போது கஸ்தூரிபா ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டார்.

கஸ்தூரிபாவைப்பற்றிக் காந்திஜி பின் வருமாறு குறிப்பிட்டு இருக்கிருர். "கணவனே தெய்வம், கல்லாஞலும் கணவன் என்ற

ஹிந்துப் பெண்களுக்கே உரித்தான உயர்ந்த பண்பு நிறைந்தவள். தெரிந்தும் தெரியாமலும், விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கிவிட்டும், என்னைத் திருப்தி செய்வதும், என் வழி நடப்பதுமே தன்னுடைய கடமை என்று அவள் நினைக்கிறாள். அறிவிலும் குணத்திலும் எங்களுக்குள் வித்தியாசமிருந்தாலும் வாழ்க்கையில் திருப்தியும், சந்தோஷமும், முன்னேற்றமும், நிறைவும் இருக்கிறதாகவே நான் எப்போதுமே எண்ணுகிறேன். எங்களுக்குள் இருக்கும் உறவும் பாசமும் பிரிக்கமுடியாதவை. எங்களுக்குள் குறைபாடுகள் இருக்கலாம், மனவேற்றுமை இருக்கலாம், ஆனால் எங்களுடைய மனம் ஒன்றிவிட்டது.''

கஸ்தூரிபாவுக்கு மாதவதாஸ் கோகுல்தாஸ் என்று ஒரே ஒரு சகோதரர்தாம் உண்டு. கஸ்தூரிபா தென் ஆப்பிரிகாவுக்குக் கிளம்பும் வரையில் அடிக்கடி தாய் விட்டுக்குச் சென்றுவிடுவார். மனைவியைப் பிரியும்போது, காந்திஜிக்குத் துக்கமும் ஆத்திரமும் தான் வரும். "எங்களுடைய பிரிவு அவசியம் என்பதைப் பிற்காலத்தில்தான் உணர்ந்தேன். அதனால் அன்பும் ஆரோக்கியமும் பெருகின'' என்று காந்திஜி சுய சரிதத்தில் எழுதியிருக்கிறார்.

தென் ஆப்பிரிகாவில் சுகமாக வாழ்ந்தாலும், காந்திஜி பொது வாழ்வில் ஈடுபட்டு விட்டதால், பலருடன் பழகும் வாய்ப்பும், உபசரிப்பும், பொறுப்பும் கஸ்தூரிபாவுக்கு ஏற்பட்டன. அதுவே சமூகத் தொண்டு என்று அவர் எண்ணினார்.

தென் ஆப்பிரிகச் சத்தியாக்கிரகத்திலும் ஒத்துழையாமை இயக்கத்திலும் கஸ்தூரிபா காட்டிய தீரமும் சாகஸமும் பிரமிக்கத் தக்கவை. 1912-ஆம் ஆண்டில் காந்திஜி ஆறு வருஷம் சிறைத் தண்டனை ஏற்றபோது கஸ்தூரிபா தேச மக்களுக்கு விடுத்த அறிக்கை சரித்திரப் பிரசித்தமானது. "நம்மிடையே காந்திஜி இல்லை என்று ஏங்கி நிற்காதீர்கள். அவர் வகுத்துள்ள நிர்மாணத் திட்டத்தில் கவனம் செலுத்துங்கள். ஒவ்வொருவரும் அந்நியத் துணி பகிஷ்காரம் செய்யுங்கள். வீட்டுக்கு வீடு ராட்டை ரீங்காரம் செய்யட்டும். ஒவ்வொரு பெண்மணியும் பக்தி பூர்வமாக, நூல் நூற்கட்டும். அந்நியச் சாமான்களை விற்பதில்லை என்று வியாபாரிகள் சபதம் செய்யட்டும். பொருளாதார விடுதலையில்தான் அரசியல் விடுதலையும் இருக்கிறது''—கஸ்தூரிபாவின் அறிக்கையில் ஒரு பகுதி இது.

உப்புச் சத்தியாக்கிரகத்திலும், சட்ட மறுப்பு இயக்கத்திலும், ராஜ்கோட் சத்தியாக்கிரகத்திலும் கஸ்தூரிபா கலந்துகொண்டு சிறை சென்றார். உப்புப்போராட்டகாலத்தில் கிராமம் கிராமமாகச் சென்று மக்களை உற்சாகப்படுத்தினர். பர்டோலியில் தங்கி இருக்கும்போது அவருடைய உடல் நலம் குன்றிற்று. டாக்டர் ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி வற்புறுத்தினர். அவர் கேட்க வில்லை. "போர்க்களத்தில் நின்றுகொண்டு ஓய்வு எடுத்துக்கொள்ள முடியுமா?" என்று கஸ்தூரிபா டாக்டரிடம் கேட்டார். அதிகாரி களின் கொடுமை தாளாமல் பல இடங்களில் கிராமவாசிகள் இடம் பெயர்ந்தார்கள். ஆண்களும், பெண்களும் வயல் வெளிகளில் வண்டிகளை நிறுத்திக் கொண்டும் கூடாரமடித்துக்கொண்டும் வசித்தார்கள். சுகாதாரக் குறைவினல் காலரா பரவிற்று. கஸ்தூரிபா மக்களுக்கு உதவி செய்ய ஓடினர். ஒரு கிராமத்தில் மூன்று மாதக் குழந்தையை எடுத்துக்கொண்டு ஒரு விவசாயி கஸ்தூரிபாவிடம் வந்தான். "இந்தக் குழந்தையையும் என்னையும் தவிரக் குடும்பத்திலுள்ள எல்லாரும் காலராவினல் மடிந்துவிட் டார்கள். நானும் சுகவீனப்பட்டிருக்கிறேன்" என்று அழுதான்.

கஸ்தூரிபா குழந்தையை வாங்கிக்கொண்டார். "ஆண்டவன் கருணை நிரம்பியவன். சோதனைக்குப் பிறகு அருள் பாலிப்பான்" என்று அவனுக்கு ஆறுதல் மொழி கூறினர். அந்தக் குழந்தை யுடன் கிராமம் கிராமமாகச் சுற்றினர். பர்டோலி தாலுகாவில் அதிகாரிகளின் வெறியாட்டம் மிஞ்சியது. போலீஸார் பெண்களைத் தடிகொண்டடித்தார்கள். சத்தியாக்கிரக முகாம்களுக்குத் தீ வைத்தார்கள். அந்தாஜ் என்ற கிராமத்தில் பெண் சத்தியாக் கிரகிகளைத் துன்புறுத்துகிறர்கள் என்று கேள்வியுற்று, கஸ் தூரிபா அங்கு செல்லத் துணிந்தார். பல மைல்களுக்கு அப்பா லுள்ள அங்கு இந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு எப்படிச் செல்வது என்று அவர் தயங்கியபோது அந்த விவசாயி, முன் வந்து, "அன்னையே, நீங்கள் செல்லுங்கள். உங்களுடைய குடும்பமும் பொறுப்பும் பெரிது, குழந்தையை என்னிடம் கொடுங்கள்" என்றன். கஸ்தூரிபா அவனிடம் குழந்தையைக் கொடுத்து ஆசிகூறி விடைபெற்றுக் கொண்டார். பஸ் ஸ்டாண் டில் அவர் குழந்தையைத் தகப்பனிடம் ஒப்பித்த காட்சி ஒரு சோகச் சித்திரமே.

கஸ்தூரிபா சிறந்த மனைவி; சமூக ஊழியர்; வீராங்கனை விருந்தினரை உபசரிப்பதிலும், தீனர்களுக்கு உதவுவதிலும் அவருக்கு விசேஷப் பிரியம். பள்ளிப் படிப்பு இல்லாவிட்டாலும் கஸ்தூரிபா சிறந்த அறிவாளி. காந்திஜி, பசுவின் பால் சாப்பிடுவ தில்லை என்று விரதம் கொண்டிருந்தார். ஒரு சமயம் அவர் பால் அருந்த வேண்டியிருந்தது. டாக்டர்களோ, பால் அருந்த வேண் டிய அவசியத்தை வற்புறுத்தினார்கள். காந்திஜியோ பிடிவாதமாக, மறுத்தார். "பசுவின் பால் சாப்பிடுவதில்லை என்றுதான் நீங்கள் விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆட்டுப் பால் சாப்பிட லாம் அல்லவா?" என்றார் உடனிருந்த கஸ்தூரிபா. அன்றிருந்து ஆட்டுப் பால் காந்திஜியின் உணவில் இடம் பெற்றுவிட்டது.

மாளவியாஜி கஸ்தூரிபாவை, 'சௌபாக்கியவதி' என்று குறிப்பிட்டிருக்கிறார். சரோஜினி தேவியோ 'சதி கஸ்தூரிபா' என்றே குறிப்பிடுவதுண்டு. 1942-ஆம் ஆண்டில் காந்திஜியுடன் கஸ்தூரிபாவும் சிறை சென்றார். 1944-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், மகா சிவராத்திரியன்று, மகாத்மாவின் மடியில் தலை வைத்து உயிர் துறந்தார்.

3. சத்தியாக்கிரகம்

மனித உரிமைகளுக்காகக் காந்திஜி அஹிம்ஸைப் போராட் டம் நடத்தினார். சத்தியாக்கிரகத்துக்கு அறப்போர் என்று பொருள் கூறலாம். நேர்மை, தூய்மை, அன்பு, ரகசியமின்மை எளிமை, சாத்துவிக எதிர்ப்பு, ஆத்மத் தியாகம் இவைகளை உப அங்கங்களாகக் கொண்டதே சத்தியாக்கிரகம். ஒத்துழையாமை, சாத்துவிக எதிர்ப்பு, ஆத்மத் தியாகம் (உண்ணாவிரதம்) என்று அதில் மூன்று கட்டங்கள் உண்டு. முதல் இரண்டு கட்டங்களில் வெற்றி காண முடியாவிட்டால்தான் உபவாசத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நெஞ்சில் பயம் உள்ளவர்களும், மனத்திண்மை இல்லாத வர்களும், கோழைகளும், அசத்தியவாதிகளும் சத்தியாக்கிரகத் தைக் கையாள முடியாது. ஆண்டவனிடமும் சத்தியத்திலும் நம்பிக்கையும், எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்ற எண்ணமும், தீரமும், கருணையும் நிறைந்த வீரர்களே சத்தியாக்கிர

கத்தைக் கையாண்டு வெற்றிபெற முடியும். சத்தியாக்கிரகத்தில் தோல்வி என்பதே கிடையாது. சமுதாய உரிமைகளுக்காக, சத்திய வாழ்வுக்காகப் போராட்டம் நடத்தப்படுவதால், தனிப் பட்டவர்கள், தியாகம் செய்து மடிந்தாலும் இறுதியில் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

தினசரி வாழ்க்கையில் அஹிம்ஸையைக் கடைப் பிடித்துச் சத்திய சாதனை செய்யாதவர்களால், உபவாசம் போன்ற கடின மான திட்டங்களைக் கையாள முடியாது. அப்படிக் கையாளுதல் 'சண்டியாக்கிரக'மேயாகும். தேசம், காலம், நிலை, தார்மிக பலம், எதிரியின் பலம் இவற்றைக் கருதி உபவாசம் ஏற்கவேண்டும். "சதா மன விழிப்பும், புத்திக் கூர்மையும், ஆண்டவனிடம் நம்பிக் கையும் இருப்பவர்களால்தாம் சத்தியாக்கிரகத்தை அநுஷ்டிக்க முடியும்......சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு நானே தளகர்த் தன்......நானே வியாக்கியானகர்த்தன்" என்று காந்திஜி கூறி இருக்கிறார்.

"பலாத்காரத்தினால் சத்தியாக்கிரகியை அடிபணியச் செய்து விட முடியாது. உடலை மாய்க்க முடியுமே தவிர, ஆத்மாவை அடிமையாக்க முடியாது" என்று இரண்டாவது உலக யுத்தம் நடக்கும்போது காந்திஜி கூறினார்.

அந்நியத் துணி பகிஷ்காரம், சுதேசி விரதம் இவற்றால் பிரிட்டனின் பொருளாதார நிலை குலைந்தது. சட்ட மறுப்பினால் ஏகாதிபத்தியம் கலகலத்தது. வகுப்புத் தீர்ப்பை எதிர்த்துக் காந்திஜி சாகும் வரையில் உண்ணாவிரதம் ஏற்றபோது அடி பணிந்தது. சத்தியாக்கிரக நிலைகளைக் காந்திஜி நமக்குக் காட்டினார்.

4. காந்திஜி நடத்திய இயக்கங்கள்

(1) தென் ஆப்பிரிக சத்தியாக்கிரகம்: 1907. தென் ஆப்பிரிகாவில் இந்தியர்களைக் கொடுமைப் படுத்தும் பல சட்டங்களை எதிர்த்துக் காந்திஜி சத்தியாக்கிரக இயக்கம் ஒன்று நடத்தினார். இந்தப் பிரச்னை இன்றும் தீர்ந்தபாடில்லை. இங்கு தான் காந்திஜி சத்தியாக்கிரகத்தின் தத்துவத்தையும் நடைமுறை யையும் உருவாக்கிக் கொண்டார்.

(2) சம்பரான் சத்தியாக்கிரகம்: 1917-இல் பீஹாரில் நடந் தது. இது அவுரி விவசாயிகள் கொடுமைப்படுத்தப்பட்டதைக்

குறித்து எழுந்தது. இதனால் இரண்டு பலன்கள் ஏற்பட்டன. ஒன்று ஓரளவு நிவாரணம்; இரண்டு, பாபு ராஜேந்திர பிரசாத், ஆசார்ய கிபளானி போன்ற பலருடைய பயனுடைய தொடர்பு காந்திஜிக்கு ஏற்பட்டது.

(3) கெய்ரா : 1917-18-இல் வானம் பொய்த்துவிட்டதனால் வரிவஜா விஷயமாகக் குஜராத்தில் நடந்த போராட்டம். இதன் லாபங்கள் : (1) விவசாயிகள் ஒன்று சேர்ந்து கிளர்ச்சி செய்து ஓரளவுக்காவது வெல்ல முடியும் என்ற நம்பிக்கை. (2) சர்தார் படேல், மகாதேவ தேசாய், நரஹரி பரேக் போன்றவர்களின் தலைமை.

(4) ரௌலட் சட்ட எதிர்ப்பு : 1919. தேசீய இயக்கத்தை ஒடுக்குவதற்கான சட்டத்தின் எதிர்ப்பு. காந்திஜியின் தலைமையில் அகில இந்திய ரீதியில் கட்டுப்பாடான எதிர்ப்பு உருவாயிற்று.

(5) ஒத்துழையாமை இயக்கம் : 1920-22. காந்திஜியின் தலைமையில் சாத்துவிக முறையில் நடந்த முதல் சுதந்தரப் போராட்டம். சௌரி சௌரா என்ற இடத்தில் பலாத்காரம் தாண்டவமாடவே, காந்திஜி இயக்கத்தை நிறுத்திவிட்டார்.

(6) பர்தோலி வரிகொடா இயக்கம் : 1928. காந்திஜியின் ஆசியுடன் சர்தார்படேல் தலைமையில், குஜராத்திலுள்ள பர்தோலி தாலூகா விவசாயிகள் வெற்றிகரமாக நடத்திய வரிகொடா இயக்கம். இதனால், (1) மறு பைசலில் $33\frac{1}{3}\%$ உயர்ந்த நிலவரி $6\frac{1}{4}\%$ ஆகக் குறைந்தது. (2) விழுந்துபோன தேசீய உணர்ச்சி மீண்டும் எழுச்சி பெற்றது.

(7) உப்புச் சத்தியாக்கிரகம்: 1930-31. காந்திஜி நடத்திய இரண்டாவது இந்திய சுதந்தரப் போராட்டம். எல்லாவகைகளிலும் மேம்பட்ட இயக்கம் இதுதான். 5—3—31 காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது.

(8) சட்ட மறுப்பு இயக்கம் : 1932-34 மூன்றும் சுதந்தர இயக்கம். கஷ்டமான காலம்.

(9) தனிப்பட்ட சத்தியாக்கிரகம்: 1940-41-இல் நடந்த யுத்த எதிர்ப்பு இயக்கம். பொறுக்கப்பட்ட பலநபர்கள் சத்தியாக்கிரகம் செய்தனர்.

(10) ஆகஸ்டுப் போராட்டம் : 1942-45. கடுமையான கடைசிச் சுதந்தர இயக்கம்.

5. காந்திஜியின் சிறை வாசங்கள்

தென் ஆப்பிரிகாவில்

(1) 11-1-1908 முதல் 30-1-1908. இரண்டு மாதக் காவல் தண்டனை பெற்றும் சமரசம் ஏற்பட்டு விடுதலை அடைந்தார்.

(2) 10-10-1908 முதல் இரண்டு மாதம். வால்க்ரஸ்டுச் சிறை.

(3) உடனே மறுபடியும் 3 மாதம்.

(4) 14-11-1913 முதல் 3 மாதம்.

இந்தியாவில்

(1) 10-3-1922 முதல் ஆறு வருஷம். 1924-இல் உடல் நிலை காரணமாக விடுதலை அடைந்தார்.

(2) 4-5-1930 முதல் ஜனவரி 1931 வரையில்.

(3) 4-1-1932 முதல் 1933 மே வரையில்.

(4) 1-8-1933 முதல் 23-8-33.

(5) 8-8-42 முதல் 1944 வரையில்.

மொத்தம் தென் ஆப்பிரிகாச் சிறைகளில் 249 நாட்களும். இந்தியச் சிறைகளில் 2089 நாட்களும் கழித்திருக்கிருர்.

6. நீண்ட உபவாசங்கள்

(1) தென் ஆப்பிரிகாவில் போனிக்ஸ் ஆசிரமத்தில் 7 நாள்.

(2) ஷை 1911-இல் இரண்டு வாரம்.

இவை இரண்டும் சக ஊழியர்கள் நெறி தவறினமையால் ஏற்றுக் கொண்டவை.

(3) சாபர்மதி ஆசிரமம் ஏற்பட்ட புதிதில் 1916-இல் ஒருவாரம். சக ஊழியர்கள் ஹரிஜனக் குடும்பத்துடன் நடந்துகொண்ட விதத்துக்கு வருந்தி.

(4) 1917. ஆமதாபாத் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்துக்கு ஊக்கம் அளிக்க.

(5) 1921. பம்பாய் வகுப்புக் கலகத்துக்கு வருந்தி 5 நாட்கள்.

(6) 1924-இல் அக்டோபர் 6-ஆம் தேதி வரையில் டில்லியில் 3 வாரங்கள். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக.

(7) 20-9-1932-இல் ஹரிஜனங்கள் விஷயமாகப் பிரிட்டிஷ் சர்க்காரின் வகுப்புத் தீர்ப்பை மாற்றும் பொருட்டுச் சாகும் வரையில் உபவாசம் மேற்கொண்டார். எரவாடா ஒப்பந்தம் ஏற்பட்டது. 26-9-1932-இல் பாரணை செய்தார்.

(8) 8-5-33 முதல் 29–5-33 வரையில் 3 வாரங்கள் ஆத்ம சுத்திக்காக, பூனாவில்.

(9) 16-8-1933 முதல் 23-8-1933 வரையில், சிறையிலிருந்தே ஹரிஜன சேவை செய்யப் பிரிட்டிஷ் சர்க்கார் மறுத்ததால். 23-8-1933-இல் நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்பட்டார்.

(10) 1939-இல் ராஜ்கோட் மக்களின் உரிமைக்காகச் சாகும் வரையில் மேற்கொண்ட, உபவாசத்தைச் சீக்கிரமே நிறுத்த முடிந்தது.

(11) 10-2-1943 முதல் 2-3-43 வரையில், எரவாடா சிறையில் பிரிட்டிஷ் சர்க்காரின் துஷ்ப் பிரசாரத்தை ஆக்ஷேபித்து.

(12) 1-9-47 இரவு முதல் கல்கத்தா வகுப்பு வெறி அடங்குவதற்காக.

(13) 13-1-48 முதல் 5 நாட்களுக்கு வகுப்பு ஒற்றுமைக்காக டில்லியில் உபவாசம் ஏற்றார்.

7. காந்திஜியைக் கொல்ல நடந்த முயற்சிகள்

(1) 1897 ஜனவரியில் தென் ஆப்பிரிகாவிலுள்ள டர்பான் நகரத்து வெள்ளையர்கள் முயற்சி; ஒரு போலீஸ் அதிகாரியின் மனைவியினால் தோற்றது.

(2) இந்தியர்கள் தென்னாப்பிரிகாவில் இச்சா பூர்வமாகப் பெயர் பதிவு செய்து கொள்ளும்படிக் கூறியதுடன், தாமே முதல் முதலாகப் பதிவு செய்து கொள்ள 20-2-1908 அன்று காந்திஜி பதிவு இலாகாவுக்குச் செல்லும்போது மீர் ஆலம் என்ற பட்டாணியன் செய்த முயற்சி; சில ஐரோப்பியர்களால் தோற்றது.

(3) 1908-இல் தென்னாப்பிரிகாவில் சில வெள்ளையர்கள் காந்திஜியின் சத்தியாக்கிரக இயக்கத்தின் வேகத்தைக் கண்டு வெருண்டு அவரைக் கொல்லச் சதிசெய்தார்கள்.

(4) 1935-இல் பூனாவில் சனாதனிகளின் தூண்டுதலால் வாலிபன் ஒருவன் நாட்டு வெடி குண்டு ஒன்றைக் கார்மீது வீசினான். ஆனால் காந்திஜி வேறு காரில் இருந்ததால் உயிர் தப்பினார்.

(5) 1939-இல் ராஜ்கோட் சத்தியாக்கிரக சமயத்தில் பிரார்த்தனைக் கூட்டத்தில் ஆத்திரங்கொண்ட இரு வேறு கோஷ்டிகள் காந்திஜியின்மீது ஆத்திரங் கொண்டு தாக்க முயன்றன.

(6) 1946-இல் பூனா நோக்கி வரும் காந்திஜியின் ஸ்பெஷல் ரெயிலைக் கவிழ்க்க நடந்த சதியை டிரைவர் முறியடித்து விட்டார்.

(7) 31-8-47. கல்கத்தாவில் சுராவர்த்தியின் வீட்டில் சில முஸ்லிம் வெறியர்கள் புகுந்து காந்திஜியைத் தாக்க முயன்றார்கள். முயற்சி பலிக்கவில்லை.

(8) 20-1-48-இல் டில்லிப் பிரார்த்தனைக் கூட்டத்தில் மதன் லால் என்ற வாலிபனுடைய குண்டு வீச்சு முயற்சி.

(9) கடைசியாக 30-1-48-இல் கோட்ஸே பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் சென்றுகொண்டிருந்த தேசத் தந்தையைக் கொன்றே விட்டான்.

8. காந்திஜி நிறுவிய ஆசிரமங்கள்

1. தென் ஆப்பிரிகாவில் டர்பானுக்குஅருகிலுள்ள**போனிக்ஸ் காலனி.** ஸர்வோதய வாழ்வில் நம்பிக்கை கொண்டு நிறுவிய முதல் ஸ்தாபனம். காந்திஜி இந்தியா திரும்பியபோது, போனிக்ஸ் காலனியையும் அதிலுள்ள சொத்துக்களையும் தர்மஸ்தாபனமாகச் செய்துவிட்டார்.

2. சத்தியாக்கிரகிகளுடைய குடும்பங்களைப் பராமரிக்கவும், சாதிபேதமின்றி, இந்தியர் அனைவரும் ஒன்றாகப் பழகவும் ஜோகானஸ்பர்க்கிற்கு இருபதுமைல் தூரத்தில் **டால்ஸ்டாய் பண்ணையைக்** காந்திஜி நிறுவினார். சத்தியாக்கிரகம் முடிந்ததும் இந்த ஆசிரமமும் மூடப்பட்டது.

3. ஆமதாபாத்தில், 'கோச்ராப்' பங்களாவில் 1915-ஆம் ஆண்டில் **சத்தியாக்கிரக ஆசிரமம்** நிறுவப்பட்டது. பிறகு சாபர் மதி நதிக்கருகில் மாற்றப்பட்டது. 1930-ஆம்ஆண்டு உப்பு சத்தியாக்கிரகத்துக்குக் கிளம்பும் வரையில் காந்திஜி இங்கு இருந்தார். 1933-ஆம் ஆண்டில், நிலங்களுக்கு வரி கொடாமலிருந்ததற்காக, சர்க்

கார் நோட்டீஸ் கொடுக்கவே, காந்திஜி ஆசிரமத்தைக் கலைத்து விட்டார். அங்குள்ள சொத்துக்கள் ஹரிஜன சேவா சங்கத்திடம் ஒப்பிக்கப்பட்டன.

4. **சேவாக்கிராமம்:** ஜம்னுலால் பஜாஜின் அழைப்பை ஏற்றுக்கொண்டு 1934-இல் காந்திஜி வார்தாவைத் தலைமைக் காரியாலயமாக்கிக் கொண்டார். மகிளாசிரமம், மகன்வாடி ஆகிய இடங்களில் சிலகாலம் தங்கிய பிறகு வார்தாவுக்குச் சுமார் அஞ்சுமைல் தூரத்திலுள்ள **சேவாக்கிராமத்தில்** குடியேறினர். சேவாக்கிராம ஆசிரமத்தில் அகில இந்தியா தாலிமி சங்கம், சர்க்கா சங்கம் போன்ற ஸ்தாபனங்களின் தலைமைக் காரியாலயங்கள் இப்போது இருக்கின்றன.

9. ஆசிரம விதிகள்

சத்திய சாதகர்களான ஆசிரமவாசிகள், பின்கண்டவற்றைக் கடைப்பிடித்தல் அவசியம்: சத்தியம், அஹிம்ஸை, அன்பு, பிரம்மசரியம், நாவடக்கம், சுதேசி விரதம், திருடாமை, பேராசையின்மை, எளிமை (வறுமை) விரதம், உடல் உழைப்பு, பயமின்மை சகிப்புத் தன்மை, தீண்டாமை ஒழித்தல்.

பிறருடைய பொருள்களைக் கவர்தல் மட்டும் திருட்டு அன்று; தேவைக்கு அதிகமான பொருள்களைச் சேமித்து வைத்தலே திருட்டுத்தான். எல்லோருக்கும் சமமாக, அவரவர் தேவைக்கேற்ற பொருள்களை ஆண்டவன் தருகிறன்; ஒருவர் சேமிப்பதால் மற்றவருடைய தேவை பாதிக்கக்கூடும். பொன்னும் பொருளும் சேமிக்கும் ஆசையை விடுவது போல, உணவிலும், பேச்சிலும் எளிமையும் அடக்கமும் கட்டுப்பாடும் வேண்டும். அத்துடன் உடலுழைப்பும் இருந்தால்தான் பிரம்மசரிய விரதம் அநுஷ்டிப்பது சுலபமாகும். காமக் கருத்துக்களை விலக்கல், கேலிப் பேச்சுக்களை ஒதுக்கல் விருந்து முதலிய களியாட்டங்களில் கலவாது ஒதுங்கல் இவை பிரம்மசரிய விரதத்துக்கு அவசியம். புலன் அடக்கம் இல்லாவிட்டால் அன்பு மார்க்கத்தைச் சாதகம் செய்வது அசாத்தியம். பிறருக்குத் தீங்கு நினைக்காமல், துவேஷிப்பவர்களிடமும் அன்பு கொண்டு பழகுவதுதான் அஹிம்ஸைச் சாதனையாகும். சத்திய லட்சியத்துக்கும் அஹிம்ஸை தான் மார்க்கம்.

அநுஷ்டானம்: அஹிம்ஸா சாதகர்கள் பின்வருமாறு, தினசரி வேலைகளைத் திட்டப் படுத்திக்கொள்வது அவசியமாகும்.

1. **பிரார்த்தனை:** ஆத்மசுத்திக்கும், தன்னலமற்ற சேவைக்கும் பிரார்த்தனை அவசியம். தினந்தோறும் உஷத்காலத்தில் அரை மணி நேரமும் மாலையில் அரை மணி நேரமும் பிரார்த்தனை செய்யவேண்டும்.

2. **சுகாதாரம்:** உடல் தூய்மையாகவும், சுற்றுப்புறம் சுத்தமாகவும் இருந்தால்தான் உள்ளத் தூய்மை சித்திக்கும்.

3. **நூல்நூற்றல்: நெசவு: விவசாயம்:** உணவுக்கும் உடைக்கும் ஆசிரமவாசிகள் பிறருடைய கையை எதிர்பார்க்கக் கூடாது. உணவுக்கு வேண்டிய விளைபொருள்களையும் ஆடைக்கு வேண்டிய பருத்தியையும் ஆசிரமத்திலேயே பயிரிடுதல் வேண்டும்.

4. **கோசேவை:** விவசாயத்துக்கு மிகவும் அவசியமானவை கால் நடைகள். உரமும் உழைப்பும் பாலும் கொடுத்து அவை மனித சமூகத்துக்குச் சேவை செய்கின்றன. பசுவைக் 'காமதேனு' என்று நம்முடைய முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். பசுப் பாதுகாப்பு, தேசசேவையின் ஓர் அம்சமாகும். பால் பண்ணையும், இறந்த மாடுகளின் தோலைப் பதனிடும் சாலையும் ஆசிரமத்தின் பகுதிகளாக இருக்கவேண்டும்.

5. **தேசீயக் கல்வி:** மனிதனுக்கு அறிவும் ஒழுக்கமும் அவசியம். தார்மிக, ஆத்மிகப் பண்புகளுடன் சிறந்த வாழ்க்கை நடத்துவதே லட்சியமாக இருக்கவேண்டும். ஏழு லட்சம் கிராமங்களிலுள்ள மக்களை, அறிவாளிகளாக்குவதே தேசீயக் கல்வித் திட்டம். கல்வியினால் உழைப்பும், ஊதியமும், ஒழுக்கமும் உயர்வும் கிடைக்கவேண்டும். வறுமை நீங்கி, எல்லாரும் பசியாறச் சாப்பிட்டுச் சுகமாக வாழவேண்டும். சீலம், ஆரோக்கியம், தர்மம், தொழில் இவற்றைப் போதிக்கக்கூடியதே கல்வி. இந்த அடிப்படையில்தான் குஜராத் வித்யாபீடம் நிறுவப்பட்டது.

10. காந்திஜி நிறுவிய ஸ்தாபனங்கள்

1. **அகில பாரத சர்க்கா சங்கம்:** 1925 - இல் கதர் உற்பத்திக்காகத் தோற்றுவிக்கப்பட்ட ஸ்தாபனம். இதன் தலைமைக் காரியாலயம் பல வருஷங்கள் வரையில் சாபர்மதியில் இருந்தது. பிற்காலத்தில் வார்தாவுக்கு மாற்றப்பட்டது.

2. **கோ சேவா சங்கம்**: இந்தியாவுக்குத் திரும்பியது முதல் காந்திஜி பசு சம்ரக்ஷணையில் கவனம் செலுத்திக் கொண்டிருந் தார். 1923-ஆம் ஆண்டில் பசு சம்ரக்ஷண சங்கம் ஸ்தாபிக்கப்பட் டது. 1924 - இல் நடந்த பெல்காம் காங்கிரஸுக்குப் பிறகே, கோ சேவா சங்கம் என்று பெயர் மாற்றப்பட்டது. இதன் தலைவர் மகாத்மா காந்தி.

3. **காந்தி சேவா சங்கம்**: ஒத்துழையாமை இயக்கத்தில் காந்திஜி சிறை சென்ற போது, காந்தீயத் தத்துவத்தைப் பரப் பவும், காந்தீய வழியில் நிர்மாண வேலை செய்யவும், ஜம்னாலால் பஜாஜ் நிறுவிய ஸ்தாபனம். விடுதலை பெற்ற பிறகு, காந்திஜி ஸ்தா பனத்தின் போஷகராகவும், ஆலோசகராகவும் இருந்தார். டிலாங், ஹுட்லி, பிருந்தாவன் முதலிய கிராமங்களில் காந்தி சேவா சங்கத்தின் வருஷாந்தர மகாநாடுகள் தொடர்ந்து நடத்தப்பட்ட போது, காந்திஜி ஸ்தாபனத்தின் எளிமை மறைந்துவிட்டதைக் கண்டு கொண்டு 1939-ஆம் வருடத்தில் அதைக் குறிப்பிட்ட ஒரு சிறு குழுவினரிடம் ஒப்பித்துவிட்டு, சங்கத்தைக் கலைத்துவிட்டார்.

4. **ஹரிஜன சேவா சங்கம்**: தாழ்த்தப்பட்டோரின் முன் னேற்றத்துக்காக, ஹிந்துத் தலைவர்களால், பம்பாயில் 1932-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. காந்திஜி சிறைவாசம் முடிந்து வெளியே வந்ததும், அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக நலனுக்காக, குறிப்பாக, குடிதண்ணீர் வசதி, சுகாதாரம், கல்வி இந்தத் துறைகளில் சங்கம் வேலை செய்கிறது.

5. **அகில இந்தியக் கிராமக் கைத் தொழிற் சங்கம்**: பம்பாயில் 1934-ஆம் ஆண்டு காங்கிரஸ் கூடிய போது காந்திஜி காங்கிரஸிலிருந்து விலகி ஓய்வு பெற விரும்பினார். நிர்மாணத்திட் டத்தில் கிராமக் கைத் தொழில்கள் முக்கிய ஸ்தானம் வகிப்பதால், தனியாக ஒரு ஸ்தாபனம் இருக்கவேண்டும் என்று காந்திஜி விரும் பினார். பொருளாதார நிபுணரும், காந்தீய வழியில் பற்றுள்ளவரு மான ஜே. சி. குமரப்பா தான் இதன் முதல் காரியதரிசி.

6. **ஹிந்துஸ்தானி தாலிமி சங்கம்**: தொழிற்படிப்புத் தான் வாழ்க்கைக்குப் பயன்தரும் என்று உணர்ந்த காந்திஜி தம்முடைய நோக்கத்தைச் செயலாற்றும் பொறுப்பை 1936 - இல் அரியநாயகம் தம்பதிகளிடம் ஒப்படைத்தார். ஹிந்துஸ்தானி

தாலிமி சங்கம் தோன்றி, நாடு முழுவதும் ஆதாரக் கல்வி முறையைப் பரப்பப் பிரசாரம் செய்யலாயிற்று.

7. **ஹிந்திப் பிரசார சபை** : காந்திஜியின் ஆசியுடன் ஆரம்பித்த ஸ்தாபனங்களில் இதுவும் ஒன்று. தேசீய பாஷையான ஹிந்தியைத் தென்னுட்டில் பரப்புவதே இதன் நோக்கம். பல வருடங்கள் இதன் தலைவராகக் காந்திஜி பதவி வகித்திருக்கிறுர்.

8. **ஆமதாபாத் தொழிலாளர் சங்கம்**: காந்திஜியின் ஆசியும் ஆதரவும் பெற்ற இந்தச் சங்கம் தான் இந்தியாவில் தோன்றிய முதல் தொழிலாளர் ஸ்தாபனம்.

11. காந்திஜியின் பத்திரிகைகள்

1. தம்முடைய கொள்கைகளைப் பரப்பவும், பொது மக்களுடன் தொடர்பு கொள்ளவும், தென் ஆப்பிரிகாவில் இருக்கும் போது காந்திஜி, **'இந்தியன் ஒபினியன்'** என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். இப்போது, அதைக் காந்திஜியின் இரண்டாவது குமாரரான மணிலால் காந்தி நிர்வகித்து வருகிறுர்.

2. ரௌலட் சட்டம் உருவாகிக் கொண்டிருந்த சமயம் காந்திஜி, **'யங் இந்தியா'** என்ற ஆங்கிலப் பத்திரிகையையும், **'நவ ஜீவன்'** என்ற குஜராத்திப் பத்திரிகையையும் நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 'பம்பாய்க் கிரானிக'ளின் உபபத்திரிகையாக யங் இந்தியா பம்பாயிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது. காந்திஜி பொறுப்பு ஏற்றுக் கொண்டதும், இரண்டு பத்திரிகைகளும் வாராந்தரப் பத்திரிகைகளாக மாற்றப் பட்டு, ஆமதாபாத்திலிருந்து பிரசுரிக்கப்பட்டன.

3. **ஹரிஜன்** : ஹரிஜன சேவைக்காக, ஹரிஜன சேவா சங்கத்தால் 1933-ம் ஆண்டு துவக்கப்பட்ட வார இதழ். பிற்காலத்தில் காந்திஜியின் அபிப்பிராயப் பத்திரிகையாகவே மாறிவிட்டது.

ஹரிஜன் பத்திரிகையின் குஜராத்திப் பதிப்புத்தான் **ஹரிஜன பந்து.** ஹிந்திப் பதிப்புக்கு **ஹரிஜன் சேவக்** என்று பெயர். பிற்காலத்தில், மராத்தி, உருது, வங்காளி, தமிழ், பாஷைகளில் **ஹரிஜன்** பத்திரிகை வெளிவந்தது.

4. **கிராம உத்யோக் பத்திரிகா**: காந்திஜியின் ஆசி பெற்று, கிராமக் கைத்தொழில் சங்கத்தார் நடத்தும் பத்திரிகை.

12. நிர்மாணத் திட்டம்

1. கதர்
2. கிராமக் கைத்தொழில்கள்
3. வகுப்பு ஒற்றுமை
4. சுதேசி விரதம்
5. தீண்டாமை ஒழித்தல்
6. மது விலக்கு
7. கிராம சுகாதாரம் (பொது)
8. ஆரோக்கிய வாழ்க்கை
9. மூலக் கல்வி (ஆதாரக் கல்வி)
10. முதியவர் கல்வி
11. தாய் மொழி
12. தேசீய மொழி
13. பொருளாதாரச் சமத்துவம்
14. விவசாயிகள் முன்னேற்றம்
15. தொழிலாளர் முன்னேற்றம்
16. ஆதிவாசிகள் முன்னேற்றம்
17. குஷ்டரோக நிவாரணம்
18. மாதர் முன்னேற்றம்
19. மாணவர்களுக்குப் போதனை

13. இந்த நூலில் வரும் பெரியார்கள்

சர். பிரோஸ் ஷா மேத்தா: (1845-1915 - பம்பாய்) சென்ற நூற்றாண்டுக் கடைசியிலும் இந் நூற்றாண்டு முதலிலும் திகழ்ந்த பழுத்த அரசியல்வாதி. இந்திய அரசியல் வானில் தோன்றும் காந்திஜிக்குப் பல சந்தர்ப்பங்களில் புத்திமதி புகட்டிய பெருமான்.

கோபாலகிருஷ்ண கோகலே: (பூனா - 1866-1915) அறிவு மிக்க மிதவாத அரசியல் தலைவர். இந்திய ஊழியச் சங்கத்தின் ஸ்தாபகர். தம் அரசியல் குரு என்று காந்திஜியால் பூஜிக்கப் பட்டவர்.

பாலகங்காதர திலகர்: கோகலேயை வெற்றிகரமாக எதிர்த்த தீவிர அரசியல்வாதி. சிறை சென்றவர். 'சுயராஜ்யமே

நமது பிறப்புரிமை' என்ற தாரக மந்திரத்தை நாட்டுக்கு அளித்த வீரர். காந்திஜியிடம் இந்தியாவின் விதியை ஒப்படைத்து விட்டு நிம்மதியாக உயிர் துறந்தவர். தேச மக்களால் 'லோகமான்யர்' என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர்.

மதன் மோகன மாளவியா : (1861-1946). ஐக்கிய மாகாணம்(உத்தரப் பிரதேசம்). 1885-இல் காங்கிரஸ் ஆரம்பமான முதல் கடைசி வரையில் தொடர்ந்து ஸ்தாபனத்தில் இருந்த சிறந்த அரசியல்வாதி. ஹிந்து நாகரிகத்தின் பிழிந்தெடுத்த சாரம் எனத் தக்கவர். காசியிலுள்ள சர்வகலாசாலை நாட்டுக்கு இவர் அருளிய நிலையான நன்கொடையாகும்.

சித்தரஞ்சனதாஸ் : (1870-1925) வங்காளம். மிகச் சிறந்த வக்கீல். காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தில் பெரும் பங்கு கொண்ட மாபெரும் தலைவர். வங்கத்தின் முடிசூடா மன்னர் என்றும் தேசபந்து என்றும் புகழப்பட்டவர்.

சரோஜினிதேவி : (1879-1949). பிறந்தது வங்காளம்; கணவருடன் வாழ்ந்தது ஹைதராபாத்தில். இந்தியாவின் ஒப்பற்ற கவியும் அரசியல் தலைவியும் ஆவார். காந்திஜியின் இயக்கங்களில் எல்லாம் நெடுக உழைத்து வந்தவர். பெற்ற பெண் போல் காந்திஜியுடன் பழகி வந்தவர்.

தின்ஷா வாச்சா : (1844-1926 - பம்பாய்) மிதவாத அரசியல் தலைவர். 1896 - 1913 வரை காங்கிரசின் பொதுக் காரியதரிசி. இடையில் 1901-இல் அதன் தலைவர். காந்திஜியின் தீவிரவாதம் காங்கிரசில் ஓங்கவும் இவர் விலகிக் கொண்டுவிட்டார்.

அன்னிபெஸண்ட் : (1847 - 1933) ஐரிஷ்மாது. இந்தியாவைத் தாயகமாக ஏற்றுக்கொண்டு சுதந்தரக் கிளர்ச்சி செய்தவர். உலகப் பிரசித்திபெற்ற பிரம்மஞான சங்கத்தின் தலைவர். தீர்க்காயுளில், பல துறைகளில், அநேக யோக்கியதாம்சங்களுடன் சிறந்து விளங்கியவர். பல காரியங்களைச் சாதித்த பெருமாட்டி.

ரஸ்கின்: 19-ஆம் நூற்றூண்டில் வாழ்ந்த ஆங்கில எழுத்தாளர். சிறந்த கலைஞரும் நீதிமானும் ஆவார். 'அன்டு திஸ் லாஸ்ட்' என்ற இவருடைய புத்தகத்துக்குக் காந்திஜியின் வாழ்க்கையை உருவாக்கிய பெருமை உண்டு.

டால்ஸ்டாய் : பல சிறந்த ருஷ்ய நூல்களுக்கு ஆசிரியர். சிறந்த வேதாந்தி. காந்திஜியின் வாழ்க்கையை உருவாக்கிய

பெருமை இவருக்கும் உண்டு. இந்நூற்றுண்டின் ஆரம்பத்தில் நடந்த காந்திஜியின் தென்னுப்பிரிகச் சத்தியாக்கிரக இயக்கத்துக்குப் பேருக்கம் கொடுத்து வந்தவர்.

டி. எஸ். எஸ். ராஜன் : (திருச்சி, தமிழ் நாடு) ஆங்கில வைத்தியத்தில் நிபுணர். இந்நூற்றுண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் கல்வி கற்ற ஓர் இந்தியக் கோஷ்டி, பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டு ஆங்கிலேயரை எதிர்த்து வந்தது. அதில் டாக்டர் ராஜனும் ஒருவர். இவரைச் சத்தியாக்கிரக முறைக்கு இழுத்துக்கொண்ட பெருமை காந்திஜியைச் சாரும். 1937-39, 1947-50-இல் இவர் சென்னைக் காங்கிரஸ் மந்திரியாக இருந்திருக்கிருர்.

வ. வே. சு. ஐயர் : (1881-1925) திருநெல்வேலி, தமிழ்நாடு. இவர் டாக்டர் ராஜனைப் போலவே முதலில் இந்தியப் புரட்சிக் கோஷ்டியில் இருந்து பிறகு சாத்துவிக முறைக்குத் திரும்பியவர். பாரதியாருடன் புதுச்சேரியில் அஞ்ஞாத வாசம் இருந்தவர். திருநெல்வேலி ஜில்லாவில் சேரமாதேவியில் பாரத்துவாஜ ஆசிரமம் நடத்திய பேரறிஞர்.

ஜனரல் ஸ்மட்ஸ் : காந்திஜி தென்னுப்பிரிகாவில் சத்தியாக்கிரகம் செய்தபோது பிரதம மந்திரியாக இருந்தார். அப்போது காந்திஜியுடன் இவர் செய்துகொண்ட ஒப்பந்தம் 'ஸ்மட்ஸ்-காந்தி ஒப்பந்தம்' என்று சரித்திரப் பிரசித்தி பெற்றுவிட்டது.

ரவீந்திரநாத் தாகூர் : வங்காளம். இவர் இந்தியத் தாயின் சிறந்த கவிச் சிரேஷ்டர். நோபல் பரிசு பெற்று உலகப் புகழ் பெற்ருர். சாந்திநிகேதனில் **'விஸ்வ** பாரதி' என்ற சர்வகலாசாலையை நிறுவியுள்ளார். அடிமை நாட்டவர்களாலுைம், முன்பெல்லாம், 'காந்திஜியின் நாட்டவர்', 'தாகூர் நாட்டவர்' என்று வெளிநாடுகளில் இந்தியர்களுக்கு ஒரு தனி மதிப்பு இருந்தது.

காலேல்கர் : (குஜராத்) 1915 முதல் காந்திஜியின் உத்தமமான சீடர். மகா பண்டிதர். காந்தீயத்தை விளக்கியும் வாழ்ந்தும் காட்டும் ஒரு சிலருக்குள் ஒருவர்.

வித்தல்பாய் படேல் : (குஜராத்) காந்திஜியின் சீடர். சர்தார் படேலின் சகோதரர். சுதந்தரப் போர்வீரர். 1925-29-இல் இந்திய சட்டசபையின் தலைவராக இருந்து அந்தப் பதவிக்கே ஒரு கௌரவம் கொடுத்த பெரும் உழைப்பாளி.

தக்கர் பாபா : (குஜராத்) இந்திய ஊழியச் சங்கத்தைச் சேர்ந்தவர். மலைஜாதியினரிடையே இவர் செய்த வேலை அபார மானது. ஹரிஜன் சேவக சங்கம், கஸ்தூரிபா ஞாபகார்த்த நிதி என்ற நிர்மாண வேலைகளைத் திறம்பட நடத்தி வைப்பதில் காந்தி ஜியின் வலது கரம் எனத் தகுந்தவர்.

பாபு ராஜேந்திரப் பிரசாத்: பீஹாரில் சிறந்த வக்கீலாக இருந்து, சம்பரான் இயக்கத்தின்போது (1917-இல்) காந்திஜியின் சீடரானார். சுதந்தரப் போராட்டம் நெடுகக் காங்கிரஸ் தலைமை யினரில் ஒருவராக இருந்தவர். இந்தியக் குடியரசுச் சட்டம் இயற்றிய அரசியல் நிர்ணய சபைக்குத் தலைமை தாங்கினவர். இப்போது இந்திய ஜனாதிபதி.

ஜே. பி. கிருபளானி: சம்பரான் சத்தியாக்கிரகம் முதல் சுதந் தரம் கிடைக்கும் வரையில் நிர்மாண வேலையில் ஈடுபட்டார். மீரட் காங்கிரஸுக்குத் தலைமை வகித்தார். நெடுகக் காங்கிரஸ் தலைமையினரில் ஒருவராக இருந்து வந்தார். இப்போது தனியாக வேறு அரசியல் கட்சி அமைத்திருக்கிறார்.

நரஹரி பரேக் : (குஜராத்) காந்திஜியின் சிறந்த சீடரில் ஒருவர். நிர்மாண வேலை, காந்திஜியின் பத்திரிகைத் தயாரிப்பு இவைகளில் பங்கு கொண்டவர். இப்போது சாபர்மதி ஆசிரமத் தில் இருக்கிறார்.

மகாதேவ தேசாய்: (குஜராத்) 25 வருஷ காலம் காந்திஜி யின் தலைசிறந்த காரியதரிசியாக இருந்து 1942-இல் சிறையில் உயிர் துறந்தார்.

மகன்லால் காந்தி : (மரணம் 1928) காந்திஜியின் நெருங்கிய பந்துவும் சீடரும் ஆவர். தென்னாப்பிரிகாவிலும் இந்தியாவிலும் காந்திஜியின் தார்மிகப் போதனைகளைச் செயலிலே செய்து காட்டிய சாமர்த்தியசாலி.

வல்லபபாய் படேல் : (குஜராத் 1875-1950) இந்தியாவின் எஃகு மனிதன் எனப் பெயர் பெற்றவர். காந்திஜியின் வலது கரம் போன்றவர். 1928-இல் பர்தோலி தாலுகாவில் வெற்றிகர மாக வரிகொடா இயக்கத்தை நடத்திச் 'சர்தார்' என்று பட்டம் பெற்றார். 600-க்கு மேற்பட்ட சம்ஸ்தானங்களை இந்தியாவுடன் இணைத்துச் சுதந்தரத்துக்கு உரம் கொடுத்து விட்டார். உழைத் துக் கொண்டே இறந்த தீரர்.

டாக்டர் பிராண்ஜீவன் மேத்தா: இவர் காந்திஜியின் அத்தியந்த நண்பர். ரங்கூனில் பல வருஷ காலம் டாக்டராக இருந்தார். தென்னுப்பிரிகாவில் காந்திஜியின் போனிக்ஸ் குடியேற்றத்தினுடைய தர்மகர்த்தாக்களில் ஒருவர்.

மோதிலால் கோஷ்: வங்காளம். சிறந்த வங்கப் பத்திரிகை யான 'அமிர்த பஜார் பத்திரிகை'யின் ஸ்தாபகர்.

உமார் சோபானி: பம்பாய்: 'யங் இந்தியா' பத்திரிகையின் ஒரு பங்குதார். காந்திஜியிடம் பத்திரிகையை ஒப்பித்து, அவரு டைய கொள்கைகளை ஆதரித்த நெருங்கிய நண்பர். பிரபல ஆலை முதலாளி.

தீனபந்து ஸி. எப். ஆண்ட்ரூஸ்: இவர் ஆங்கிலேயர். காந்திஜியிடமும் தாகூரிடமும் மிகவும் ஈடுபாடு கொண்டவர். தேச, ஜாதி, நிறவேறுபாடுகள் இல்லாமல் மக்கள் எங்கெல்லாம் ஈன நிலையில் உள்ளனரோ அங்கு போய்ப் பரிகார வேலையில் ஈடு பட்ட பெரியார்.

ரோமன் ரோலந்து: (பிரெஞ்சு தேசம்.) மகா பண்டிதரும் வேதாந்தியும் ஆவர். இவர் காந்திஜியின் வாழ்க்கைச் சரிதத்தை எழுதி யிருக்கிறுர்.

புலுசு சாம்பமூர்த்தி: (ஆந்திரம்) காந்திஜியின் சத்தியாக் கிரக இயக்கங்களில் எல்லாம் பங்கு கொண்டவர். 1937-39-இல் சென்னை சட்ட சபையின் தலைவராக இருந்தார்.

பண்டித மோதிலால் நேரு: (1862-1931) ஐக்கிய மாகாணம் (உத்தரப் பிரதேசம்) அலகாபாத்தில் பெரும் வருவாயுள்ள வக்கீல். காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டவர்; அதன் பிறகு சாகும் வரையில் காங்கிரஸ் தலைமை யில் இருந்தார். 1925-29-இல் டில்லி சட்ட சபையில் எதிர்க்கட்சித் தலைவராகப் பெரும் புகழ் பெற்றவர். இந்தியப் பிரதமர் ஜவா ஹர்லால் நேருவின் தந்தை.

ஜவாஹர்லால் நேரு: (ஐ. மா.) இப்போதைய இந்தியப் பிரத மர். சிறந்த காங்கிரஸ் தலைவர். 'காந்திஜியின் அரசியல் வாரிசு' மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர். உலகப் புகழ் பெற்ற பல நூல்களை இயற்றியுள்ளார்.

ஜே. ஸி. குமரப்பா: இவர் காந்திஜியின் பொருளாதார நிபு ணர். கிராமக் கைத்தொழில் துறையில் பெரும்பணி ஆற்றியவர்.

ஸ்ரீ கிஷோரிலால் மஷ்ருவாலா : (மரணம் 1952) 1914-இல் காந்திஜி இந்தியாவுக்கு வந்தது முதலே அவர் வழிநின்றவர். தத்துவ வாதி. நிர்மாண ஊழியர். பத்திரிகைகளில் தத்துவக் கட்டுரைகள் எழுதி வந்தார். பிற்காலத்தில் ஹரிஜன் பத்திரிகையின் ஆசிரியர்.

ஜமுனுலால் பஜாஜ் : (மத்தியப் பிரதேசம்) பெரும் கோடீசு வரன், வள்ளல். காந்திஜியை அப்படியே பின்பற்றுபவர். 1923-இல் நாகபுரிக் கொடி சத்தியாக்கிரகம் நடத்தியவர். காந்தி ஜியை அழைத்து வந்து வார்தாவுக்கு உலகப் புகழ் தேடித் தந்தவர்.

ஸர். ஸி. வி. ராமன் : நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ் ஞானி. காந்திஜியிடம் ஈடுபாடு கொண்டவர்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் : 'தமிழ்த் தாத்தா' என்று தமிழ் மக்களால் அன்பாக அழைக்கப்பட்டவர். எண்பத்தாறு பிராயம் வாழ்ந்து எத்தனை எத்தனையோ தமிழ் நூல்களைத் தேடிப் பிடித்துப் பதித்து வெளியிட்ட பெருமான். சென்ற நூற்றாண் டுக்கும் இந்த நூற்றாண்டுக்கும் இணைப்பாக வாழ்ந்து, தமிழ் நாட்டில் வாழ்ந்த எத்தனையோ பெரியார்களைப்பற்றித் தீந்தமிழில் குறிப்புகள் எழுதியுள்ளார்.

சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் : இப்போது இந்தியாவின் உதவி ஜனாதிபதி. உலகப் பிரசித்தி பெற்ற தத்துவஞானி.

வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரி : ஆங்கிலேயர்களைவிட நன்றாக ஆங்கிலம் பேசும் தமிழ்ப் பேராசிரியர். இந்திய ஊழிய சங்கத் தலைவர். காங்கிரசில் சேராமல் ஒதுங்கி நின்றாலும் இந்தியப் பொது வாழ்வில் பலதிறப்பட்ட துறைகளில் பணியாற்றியவர். காந்திஜிக்கும் இவருக்கும் பரஸ்பரம் நன்மதிப்பு மிகவும் அதிகம்.

சுசீலா பென் : காந்திஜியுடன் வார்தாவில் தங்கி இருந்த தலை சிறந்த கிராம ஊழியர். பட்டம் பெற்ற டாக்டர்.

(BIBLIOGRAPHY)

1. My Experiments with Truth—M. K. Gandhi.
2. Satyagraha in South Africa
3. Satyagraha in Champaran—Babu Rajendra Prasad.
4. Mahatma Gandhi and Bihar.
5. Bardoli Satyagraha—M. D. Desai.
6. Epic Fast. ,,
7. Mahatma Gandhi—Louis Fischer.
8. This little man of the East.
9. Bapu—G. D. Birla.
10. Kasthurba—R. K. Prabhu.
11. Indian Opinion—Kasthurba Number.
12. Bapu—My mother—Manu Gandhi.
13. With Gandhiji in Ceylon—M. D. Desai.
14. Seven months with Gandhiji—Krishnadas.
15. Glimpses of Bapu—R. R. Diwakar.
16. Gandhi, Tagore and Nehru—K. R. Kriplani
17. Reminiscences of Gandhi—C. S. Shukla.
18. Gandhiji as we know him ,,
19. Naked Fakir.
20. Mahatma Gandhi—Romain Rolland.
21. Mahatma Gandhi—Birthday Number by Sarvapalli Radhakrishnan.
22. Gandhiji - Diamond Jubilee Number.
23. Gandhiji—Souvenir.

24. Stray Glimpses of Bapu—Kalelkar.
25. Pilgrimage with Bapu.
26. That Great Little Brown Man—Frederick Fischer.
27. Forum (weekly) Bombay.
28. Young India (weekly) Edited by M. K. Gandhi
29. Harijan (weekly) Edited by M. D. Desai & Pyarilal.
30. Amrit Bazaar Patrika—(Daily) Calcutta.
31. A Strange Pilgrim—Fullber.
32. A week with Gandhiji—Louis Fischer.
33. Gandhi—The world citizen—Miss Muriel Lester.
34. గాంధిజి ఆంధ్రదేశ ప్రయాణము—బాపినీడు.
35. आत्म कथा-डा० राजेन्द्र प्रसाद
36. हमारी बा - वनमाला परीख
37. கடல் கடந்த காந்தி—ஜி. டி. பிர்லா.
38. தமிழ் நாட்டில் காந்தி—டாக்டர் தி. சே. சௌ. ராஜன்.
39. நினைவு அலைகள்—டாக்டர் ராஜன்.
40. மல்லிகை மாலை—கி. வா. ஜகந்நாதன்.

★